இலக்கியத்தின் நோக்கமும் பயனும்

தொகுதி - 2

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

இலக்கியத்தின் நோக்கமும் பயனும்

தொகுதி - 2

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	**Ilakkiattin Nokkamum Payanum Part - 2**
Publication & Copyright	:	International Institute of Tamil Studies, C. I. T. Campus, Taramani, Madras-600113.
Publication No	:	221
Language	:	Tamil
Date of Publication	:	December 1995
Edition	:	First
Paper Used	:	60 GSM TNPL Creamwove
Size of the book	:	21 × 14 cms
Printing types	:	10, '10', 12, 14, 18, pts
No. of copies	:	1200
No. of pages	:	4 + 336
Price	:	Rs. 60/-
Printers	:	N. D. S. Printers, 42, Vellala Street, Aminjikarai, Madras-600 029.
Binding	:	Card Board
Artist	:	S. Sathiya
Subject	:	The aims and uses of Tamil Literature

---

* சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

---

* வெள்ளி விழா வெளியீடு.

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அணிந்துரை

4-4-84 முதல் 4-12-85 வரை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'இலக்கியத்தின் நோக்கமும் பயனும்' என்ற தலைப்பில் நடத்திய மாதக் கருத்தரங்குகளின் தொகுப்பு இந்நூல். இத்தொடர்க் கருத்தரங்கில் 21 கட்டுரைகள் வழங்கப்பட்டன. கட்டுரையாளர்கள் தாங்கள் தேர்ந்து எடுத்த இலக்கியம் எழுந்த நோக்கம், அவற்றின் பயன் என்பனவற்றை ஆழமாகவும், விரிவாகவும் வெளிப்படுத்தி யுள்ளனர். இக்கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வாளர்கட்கும், சமூகவியல் அறிஞர்கட்கும் சிறப்பாகப் பயன்படும் என்ற சிந்தனையின் அடிப்படையில் இவை வெள்ளிவிழா வெளியீடாக, இலக்கியத்தின் நோக்கமும் பயனும்-தொகுதி-1, தொகுதி-2 என இரண்டு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்து, தமிழரின் மேலான சிந்தனைகளை ஆய்வுலகிற்கு அறிவித்தல் வேண்டும் என்ற உயரியநோக்கில் இத்தொடர்க் கருத்தரங்கினைத் திங்கள் தோறும் நடத்தி வெற்றி பெற்ற முன்னாள் இயக்குநர் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் போற்றுதற் குரியவர்.

இக்கருத்தரங்கில் பங்குகொண்டு தங்கள் கட்டுரைகள் மூலம் அரிய கருத்துகளைச் சிறப்பாக வெளியிட்ட அறிஞர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துகள்.

நிறுவனச் செயல்பாடுகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த நன்றி, எங்கள் நிறுவனப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளருக்கும் எங்கள் நன்றி.

இந்நூல் (தொகுதி-2) அச்சிடும்போது மெய்ப்புத் திருத்தம் செய்து உதவிய முனைவர் ஆர். ஆளவந்தார் அவர்களுக்கு எங்கள் நன்றி.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு அளித்த என். டி. எஸ். அச்சகத்தினர்க்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

உள்ளே

தலபுராணம்

ச. சிவகாமி

உலகில் நிகழும் எந்த செயலும், அது உயர்வாயினும் அன்றி எளியதாயினும் ஏதேனும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில்தான் நிகழ்கிறது. அந்நோக்கமும் ஏதேனும் ஒன்று அல்லது பல பயன் களை எதிர்நோக்கி நிற்றலும் வெளிப்படை. வினை செயல் வகையாக வள்ளுவர் 'முடிவும் இடையூறும் முற்றி யாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல்' (676) என்று வேண்டியிருப்பதில் நோக்கமும், பயனும் தம்முள் தொடர்புற்றிருப்பதைச் சுட்டக் காணலாம். இந்நிலை இலக்கியப் படைப்பிற்கும் பொருந்தி நிற்றலை இக்கருத்தரங்கத் தொடரில் அமைந்த கட்டுரைகள் தெளிவாகக் காட்டுகின்றன.[1] அவ்வகையில் இங்குத் தல புரா்ணங்களின் நோக்கமும் பயனும் நோக்கப்படுகிறது. தல புராணங்களின் நோக்கமும் பயனும் யாவை என்பதை உணர்த்து முன் அவை பற்றியதொரு அறிமுகம் வேண்டப்படுகிறது. ஏனெனில் தலபுராணங்கள் வடமொழியிலிருந்து தமிழிற்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒன்றன் இயல்பும் அதன் நோக்கத்தையும், பயனையும் அறிதற்குத் துணை நிற்றலின் அதன் படைப்பியல்பு பற்றி முதற்கண் இங்குப் பேசப்படுகிறது.

தலபுராணம் - சொற்பொருள் விளக்கம்

தலம் + புராணம் என்பது தலபுராணமாகும். தலம் என்பதற்கு, பூமி, இடம், தலைமை நகரம், களம் என்பன முதலான பல பொருள்களுள்[2]. ஒவ்வொரு தலபுராணமும் குறிப்பிட்ட அத்தலம்தான் உலகின் முதன்மைச் சிறப்புடையது என்று போற்றுவதால் இங்குத் தலம் என்பதற்கு இறைவனின் தலைமை இடமாகச் சிறப்புறும் களம் எனக் கொள்ளலாம்.

பழமை, பழங்கதை என்று பொருள்படுவது புராணம்.[3] மரபு வழிப்பட்டதாக, தோன்றிய காலம் எது என்பதை உறுதிப்படுத்த இயலாத பழமையுடையதாக அமையும் பழங்கதைகளைப் புராணம் எனலாம். புராணம் ஐவகையாக அமைகிறது. 1. இறைவனைப் பற்றியது 2. இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் பற்றியது 3. இறையடியார் பற்றியது 4. இறைமைத் தொடர்புடை நதி, விரதம் போன்றவற்றைப் பற்றியது 5. குறிப்பிட்டதோர் இனத்தைப் பற்றியது என அவற்றைச் சுட்டலாம்.[4] இங்கு இரண்டாம் பிரிவுள் தலபுராணம் அமையக் காணலாம்.

எனவே சொல்லளவில் தலபுராணம் என்றால், இறைவன் உறையும் இடங்களுள் முதன்மைச் சிறப்புடைய தலம் பற்றி வழிவழியாக வழங்கப்படும் பழங்கதை எனலாம். தலபுராண இலக்கியங்களை நோக்கும்பொழுது இவ்விளக்கம் மேலும் விரிவடைகிறது. குறிப்பிட்ட தலத்தின் பெருமை, அங்கு வீற்றிருக்கும் இறைவன், தன்னை வந்து அடைக்கலம் புகும் தேவர், மானிடர், மாக்கள், பறவைகள் ஆகியோருக்கு அருள் புரிதல் வழிச் சிறப்பிக்கப்படுகின்றது. உடன் அங்கு விளங்கும் புனித நீர்த் துறையின் பெருமையும் நவிலப்படுகிறது. ஆகவே இலக்கிய நிலையில் தலபுராணம் என்பது தலம், இறைவன், புனித நீர் இவற்றின் சிறப்பினை அங்கு வந்து வழிபட்டுக்குறை தீர்ந்தோர் வழி உணர்த்துதல் என விளக்கலாம். தலம், இறைவன், புனித நீர் இம்மூன்றும் தலம் என்பதனுள் உள்ளடங்கிய நிலையில் தலபுராணம் எனப் பெயர் அமைகிறது.

தலபுராண மூலம்

தமிழ்த் தலபுராணங்கள் மிகுதியும் தம்மை வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு எனப் பகருகின்றன. இதன் உண்மை விரிந்த ஆய்வின் பாற்பட்டது. பிரம்மாண்ட புராணம், ஸ்கந்த புராணம், பத்ம புராணம் போன்ற வடமொழி நூல்கள் இவற்றிற்கு மூலமாகக் குறிக்கப்படுகின்றன.

எப்புராணமும் முன் சூதன் எழில்கொள் நேமியங்
கானத்தில்
ஒப்புரவுடைய மேலோர்க்கு ஓதல் என்றுரைக்கை
தொன்மை

அப்புகழ் இதற்கு முண்டு உண்டு ஆதியாம் காந்தம் தன்னுள்
செப்பும் நாகர கண்டத்தில் தெரிதரும் பாற்ற தாமே

(திருவாமாத்தூர்த் தலபுராணம், பாயிரம். 10)

என்று நூலாசிரியரே தம் நூலை மொழி பெயர்ப்பாகச் சுட்டி விடுகின்றனர்.

இங்குச் சில ஐய வினாக்கள் எழுகின்றன. 1. தமிழகத்தில் சிறப்புற்றிருக்கும் நூற்றிற்கும் மேற்பட்ட ஊர்கள் வடமொழிப் புராணங்களில் மிக விரிவாக; அவற்றைவிடச் சிறந்த தலம் ஏதும் தரணியில் இல்லை என்றளவிற்குப் போற்றியிருக்கையில் வட நாட்டுத் தலங்கள் ஏன் அந்த அளவிற்குப் பாராட்டப்படவில்லை? 2. தம்முடைய மொழியில் நூலியற்றும் பொழுது மிகத் தொலைவில் உள்ள (நூல் எழுந்த காலத்திற்கு) இடங்களை, பிற இனத்தவர் வாழும் இடங்களை, தமக்குரியனவற்றை விட உயர்ந்ததாகச் சிறப்பித்துப் போற்றல் இயலுமா? 3. வடநாட்டுப் பகுதிகளைவிடத் தென்னாட்டுத் தலங்கள்தான் இறைவனுக்கு உகந்த இடங்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறார்களா? அவ்வாறாயின் இன்றும் அம்மன நிலை தொடர்கின்றதா? 4. தலபுராணங்கள் தம் மூலமாகக் கொள்ளும் பத்மபுராணம், பிரமாண்ட புராணம் போன்றன திருமாலைச் சிறப்பிப்பதாக அமைகின்றன. ஆனால் அவை உரைக்கும் தலபுராணங்கள் சிவன் பெருமை நவில்வதாக அமைகின்றன. வைணவத் தலங்களைச் சிறப்பிக்கவில்லை - இது ஏன்?

இவை ஒருபுறம் நிற்க, தமிழ் இவற்றிற்கு மூலமாக ஏன் இருக்க முடியாது என்ற வினாவும் தமிழிலக்கியப் பரப்பையும், வரலாற்றையும் காணுங்கால் தோன்றுகிறது. அவற்றையும் இங்குக் காணலாம்.

குறிப்பிட்ட ஓர் இடத்தினைச் சிறப்பித்துரைத்தல் என்பது தமிழரிடம் தொன்று தொட்டு வழங்கி வருதலைக் காணலாம். 'ஆலூர்க்கிழார்' என்பது போன்று பெயர் கொள்ளலும் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பது போன்ற வழக்குகளும் இந்நிலை தமிழரின் இயல்பு வழக்கம் எனக் காட்டுகின்றன. சங்கப் பாக்களில் புலவரைச் சிறப்பிப் பதற்காகக் குறிப்பிட்ட இடத்தில் அவர் நிகழ்த்திய வீரச் செயல்கள் அல்லது பிற சிறப்பான பணிகள் போன்றவற்றைப் புகழ்ந்துரைத்தல் பரவலாகக் காணப்படுகிறது.[5] தலைவியரின்

நலனைப் பெருமைப்படுத்த குறிப்பிட்ட ஊரினை உவமையாகக் கூறலும் நோக்கத் தக்கது.[6] அறவிலக்கியங்களில் ஊர்ச் சிறப்பு இடம்பெறுதற்கு வாய்ப்பில்லை. காப்பியங்களில் தலைவன், தலைவியரின் இருப்பிடத்தைப் போற்றும் வகையில் நகர்வளம், நீர்வளம், பாடுதலும் மரபாக அமைகிறது. அரசனின் பத்து அங்கங்களுள் ஒன்றாக ஊரும் அமைதல் குறிப்பிடத் தக்கது.[7]

தமிழ் இலக்கிய வரலாற்றில், பரப்பில் பக்தியிலக்கியங்கள் பேரிடம் கொண்டுள்ளன. இறைவனைப் பாடுங்கால், அவன் எழுந்தருளியிருக்கும் தலம், அவன் சிறப்பு, அவன் அடியாருக்கு அருளிய தன்மை என்பன பொதுநிலையில் பாடுபொருளாக அமையக் காண்கிறோம்.[8] காரைக்காலம்மையார் தம் திரு வாலங்காட்டுத் திருப்பதிகத்தின் வழி இம்மரபினைத் தொடங்கி வைத்தார். தேவாரம் பாடிய மூவர் முதலிகள் சிறப்பாக அதனைப் போற்றி வளர்த்தனர். தலந்தோறும் சென்று அங்கு உறையும் இறைவனையும் அவன் அடியாருக்கு அங்கிருந்து அருளு வதையும் பாடிப் பக்தி நெறியைப் பரப்பினர். ஆழ்வார்களும் இதில் ஈடுபட்டனர். பதிகங்கள் தவிர ஏனைய மாலை, கோவை, அந்தாதி, பிள்ளைத் தமிழ், உலா போன்ற பிரபந்தங்களிலும் இப்பொருண்மையே அமைந்திருக்கக் காணலாம். திருப்பழனத் தந்தாதி, திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கழுக் குன்றத்து உலா, திருக்குற்றாலக் குறவஞ்சி என்றே அவை பெயர் பெற்றமைதலையும் சுட்டலாம். பக்தியிலக்கியத்தின் தோற்றுவாய்களுள் ஒன்றாக அமையும் திருமுருகாற்றுப்படை, பரிபாடலில் அமையும் செவ்வேள் பாடல்கள் திருமுருகனின் உறைவிடங்களையும் அடியவர் அவனருள் பெற்று உய்தலைக் காட்டுதலும் இங்கு நோக்கற்பாலது. புரவலரையும், வீரரையும் போற்றும் சங்க மரபு, இறைவனையும் அவன் அடியாரையும் போற்றும் மரபாகப் பக்தியிலக்கியத்துள் மாறுகின்றது. அங்கு மானுடம் பெற்ற செல்வாக்கினை இங்கு இறைமை பெறுகிறது.

பாட்டியல்கள் 'ஊரின்னிசை' 'ஊர்நேரிசை' எனும் பிரபந்த வகைகளைச் சுட்டுகின்றன. இவை பாட்டுடைத் தலைவனின் ஊரைச் சிறப்பித்தலாக அமைகின்றன. மற்றும் தலைவனோடு இணைக்காது தனித்து ஊர்ச் சிறப்பினை மொழியும் 'ஊர்வெண்பா' என ஒன்றையும் காட்டுகின்றன.[9]

தமிழர் 'நீரின்றியமையாது உலகு' என்பதனால் நீருக்கும் மிகுந்த சிறப்பளித்திருப்பதைக் காணமுடிகிறது. பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிக்கும்பொழுது அவன் நாட்டின் நீர் வளத்தையும் மேன்மைப் படுத்துகின்றனர் புலவர்கள்.[10] ஒரு

நாட்டின் வளமைக்கு அடிப்படை நீர்வளம் என்பதும் இதற்குக் காரணம். தமிழிலக்கியப் பரப்பினை முழுமையாகக் காண ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளில் நீராடுதலை மிக்க விருப்புடன் தமிழர் மேற்கொண்டிருத்தலையும் பரக்கக் காணலாம். வையையில் நீராடி வேண்டுதலைப் பரிபாடல் (11 : 134 - 140) தருகிறது. பல நீர்நிலைகளை வழிபாட்டிற்குரியதாகக் கொண்டிருத்தலையும், கண்ணகியின் தோழி தேவந்தியின் கணவன் தீர்த்தமாடிவருவன் எனப் பிரிந்து செல்லலையும் சிலம்பு காட்டுகிறது.

கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
சோம குண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதால் கணவரொடு
தாமின்புறுவர் உலகத்துத் தையலார்
(9 : 57 - 61)

என்றும் இளங்கோ காட்டுவார். நீர்த்துறைகளைப் புனிதமாக எண்ணி நீராடும் மரபினைப் பின் எழுந்த இலக்கியங்களிலும் காணலாம்.

பழங்கதைகளும் இலக்கிய ஏற்றம் பெற்றிருந்தமையைச் சங்கப்பாக்கள் முதல்காணலாம். இராமாயண (அகநானூறு 70 : 13 - 16) பாரத நிகழ்ச்சிகளாக (கலித்தொகை 25 : 1 - 5) அவை அமைகின்றன. பல்வகைப் பொருளும் இணைந்த நெடுங்கதைகளாகக் காப்பியம் அமைதலின் புராணக்கதைகள் அவற்றிலும் தொடர்கின்றன. (சிலம்பு. 14;46-56). பக்தியிலக்கியங்களில் புலவோர் இறைவன் தமக்கும், பிறருக்கும் அருள்புரிந்ததை இயம்புமுகமாகத் தலபுராணச் செய்திகள் மிகுதியாக இடம் பெறுகின்றன.

இவற்றை இணைத்து நோக்குங்கால் தலபுராணத்தின் தோற்றச் சூழல் தமிழகத்தில் திடீரென்று தோன்றாது படிப்படியாக வளர்ந்து உருவாகியமையை உணர முடிகிறது. சங்க காலத்தில் தலைவனுக்குப் புகழ்கூட்டும் நிலையில் அவன் ஊரைச் சிறப்பித்த நிலை, பிற்காலத்தில் காப்பியம் போன்றவற்றில் வேண்டப்படும் இலக்கிய மரபானது. பாட்டுடைத் தலைவனாக இறைவன் மாறியபொழுது உடன் பழங்கதைகளும் ஊர்ச் சிறப்பும் இணைதல் இயல்பாயிற்று. நீர்நிலைகளில் நீராடுதலை விருப்புடன் மேற்கொண்டமை அவற்றுள் சிலவற்றை வழி

பாட்டிற்குரியதாக்கிற்று. எனவே இம்மூன்றினையும் இணைத்து ஓர் புத்திலக்கியம் உருவாதல் எளிதாயிற்று. குறிப்பாகப் பதிகம் முதலான பிரபந்தங்கள் தலபுராணத்தைத் தோற்றுவிப்பதில் பொருண்மை நிலையில் பெரிதும் துணை நின்றன.

இலக்கியச் சூழல் மட்டுமன்றி, தமிழகத்தின் சூழலும் தல புராணங்களுக்கு மூலம் வடமொழிப் புராணங்கள் என்பதில் ஐயத்தைத் தருகின்றது. 1. இலக்கிய (உலகில் குறிப்பிட்ட இடத்தைப் பற்றிய புராணக் கதைகள் தலபுராணம் எனும்) வடிவில் இடம் பெற்றுள்ளன என்பதை அறியார் கூட, தமிழ்நாட்டில் வழங்கும் சிறந்த தலங்கள் பற்றிய புராணக் கதைகளை அதன் பழம்பெருமையை அறிந்திருப்பர். மற்றும் அதில் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண் டிருத்தல் கண்கூடு. 2. கார்த்திகைத் திங்கள் கார்த்திகை விண் மீன் அன்று திருவண்ணாமலை சோதி காணப் பல்லாயிரவர் கூட்டும், ஐப்பசித் திங்கள் சஷ்டி நாட்களில் திருச்செந்தூரில் எண்ணற்றவர் விரதம் மேற்கொள்ளலும், மனநோய் நீங்குதற் பொருட்டுச் சோளிங்கபுரம் சென்று தங்குதலும், கும்பகோண மாசிமக நீராடலும் என எண்ணற்ற நிகழ்ச்சிகள் தமிழர் வாழ் வியலோடு இணைந்துள்ளன. 3. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'; 'வேதாரண்யம் விளக்கழகு'; 'வைத் தீஸ்வரன் கோயிலுக்குப் போயும் வயிற்றுவலி தீரவில்லை' போன்ற பழமொழிகள் குறிப்பிட்ட இடத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தின் பெருமையில், அருளில் உள்ள நம்பிக்கையில் தோன்றியவையே. 4. இன்றும் தமிழரிடையே பரந்து இருக்கும் 'நேர்த்திக்கடன்' செலுத்தும் பழக்கத்தையும் இவண் இணைத்து நோக்கலாம். 5. மற்றும் ஒவ்வொரு தலங்களுக்கும் பயணம் சென்றுஅங்குறையும் இறைவனைவழிபட்டனர் என்பதை இப்பழ மொழிகள் சுட்டி நிற்க, இலக்கியப் பகுதிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சிலம்பின் மாங்காட்டு மறையோன் பல தலங் களுக்கும் சென்று இறைவழிபாடியற்றித் திரும்பும் பொழுது எதிர்ப்படும் கோவலன் கண்ணகியரிடம் அதுபற்றி மொழிவது[11] சிறந்த சான்றாகும். இவற்றால் தலப்பெருமை என்பது இலக்கியமாக மட்டுமின்றித் தமிழர் வாழ்விலும் இரண்டறக் கலந்துள்ளமை தெளிவு.

இவற்றை நோக்க, தலபுராணங்களின் வித்து அல்லது அதன் பிறப்பிடம் தமிழகமே என்பதில் ஐயமில்லை. பின் ஏன் வட மொழி மூலம் என்றுரைக்கப்பட்டது என்ற வினா எழலாம். அதற்கு விடை அக்காலச் சூழலே. இடைக்காலத்தே எழுந்த

பக்தி யியக்க காலத்தில் வடமொழி மிகுந்த செல்வாக்குற்றது[12]. ''தலமான்மியங்களைப் பதினெண் புராணங்களிலொன்றினோடு இயைத்துரைப்பது அவற்றின் பெருமையை மிகுத்துக் காட்ட வேண்டுமென்னும் கருத்தினாலாம்... யாதானும் ஒரு தமிழ்நூல் ஆரியத்தினின்று மொழி பெயர்க்கப்பட்டதனால் மட்டும் யாவரும் ஒத்துக்கொள்ள தக்க பெருமையுடையதாம். அதுவும் வேத ஆகம புராண இதிகாசங்களில் ஒன்றைச் சார்ந்த தாகவும் பின் நிகழப்போகிற வரலாறுகளை முன்னரே கூறி வைத்ததாகவும் இருக்க வேண்டும் என்னும் இத்தகைய போலிக் கொள்கைகள் பிறருடைய பழக்கங்காரணமாகவே சென்ற சில நூற்றாண்டுகளிலிருந்த மக்களிடையே தோன்றின''[13] என்பர். இக்காலத் தமிழ்ப்புலவர் வடமொழியிலும் புலமை பெற்றிருந்தனர். எனவே தமிழகத்தில் நிலவிய தமிழர் எண்ணங்களுக்கு வடமொழி நிறம் பூசி அவற்றை வடமொழி மூலம் என மக்களை நம்பச் செய்து தமிழ் நூல்களை அவற்றின் மொழிபெயர்ப்பாகக் கொண்டனர். இவற்றினின்றும் ஒரு சில விதிவிலக்குகள் உண்மையிலேயே வடமொழியாளரால் தோற்றுவிக்கப்பட்டதாக இருக்கலாம். அவற்றை நீக்கிய நிலையில் பொதுநிலை எண்ணமாகவே இக்கருத்து உரைக்கப் படுகிறது. இக்கருத்திற்கும் அறிஞர் சான்று தருவர்.[14]

இனித்தல புராணங்களின் நோக்கம், பயன் பற்றிக் காணலாம். ஒன்றன் எழுச்சிக்காரணம் நோக்கமாகவும், அந் நோக்க நிறைவேற்றம் பயனாகவும் அமைகின்றன. இப்பயன் புலவர் எதிர்பார்த்ததாக அமைய இவையின்றிப் பிறவும் அமைதலை எதிர்பாராததாகவும் கொள்ளலாம். தல புராணங்கள் பக்திப் பனுவல்களின் பாற்படுகின்றன. எனவே பக்தியிலக்கியங்களின் பொதுநோக்கம் தலபுராணங்களில் இடம்பெறல் இயல்பு. ஆதலால் பொது நோக்கம் எனும் வகையில் முதற்கண் அவை நோக்கப்படுகின்றன. தல புராணங்கள் தமக்கென கொண்டுள்ள சிறப்பு நோக்கம் அடுத்துத் தொடர்கிறது. நோக்க நிறைவேற்றம் பயன் என்ற தன்மையில் ஒவ்வொரு நோக்கத்தின் பின்னும் கொண்ட பயன் உணர்த்தப்படுகிறது. புலவர் எதிர்பாராத எஞ்சிய பயன்கள் இறுதியில் அமைகின்றன.

பொது நோக்கம்

தமிழ் இலக்கியப் பரப்பில் பக்தியிலக்கியங்களின் கரை காணல் அரிது. அகம், புறம், அறம் எனும் பொருண்மை

களைவிட பக்திப்பொருண்மை மிக நீண்ட வரலாறு உடையது. இறைவன் மீது கொண்ட நம்பிக்கையுணர்வும் அதன் வாயிலாகப் பிறக்கும் பற்றுணர்வும் உள்ளத்தினின்றும் சொற்களாக உருவெடுத்துப் பக்தியிலக்கியமாக மலருகின்றன, பக்தியிலக்கியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் தல புராணத்தின் பங்காகவும் இவற்றைக்கொள்ளலாம்.

(1) தமிழகத்தில் வைதிக சமயம் உயர்வு பெற்று மக்கள் சமயமாக மாறவேண்டும் என்பதே தலையாய நோக்கம். இதில் சைவசமயம் சார்பாகப் பெருமுயற்சி செய்து ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் வெற்றி கண்டனர். அதனைத் தொடரச் செய்து நிலைபெறச் செய்தலைத் தலபுராணங்கள் கொண்டுள்ளன. தலபுராணங்கள் மிகுதியும் சைவ சமயம் சார்ந்ததாகத் தந்திவனப் புராணம், திருப்பெருந்துறைப்புராணம் என அமைதல் இதனைக் காட்டும். இன்றும் தமிழகத்தில் பெரும்பான்மை மக்கள் சமயமாகச் சைவம் விளங்குதல் இவற்றின் பயன் எனக் கொள்ளலாம்.

(2) அரசன், வள்ளல் என இம்மையில் தமக்குத் துணை நிற்பாரைப் போற்றும் இயல்பினை இம்மை, மறுமை எனும் இரண்டிலும் துணை நிற்கும் இறைவனைப் போற்றுதலாக இலக்கியம் அமைய வேண்டும் என்பது பக்திப் புலவரின் மற்றொரு நோக்கமாக அமைகிறது. இதனைத் தலபுராணப் புலவரும் தம் நோக்கமாகக் கொள்வதை

அருள் வலி உணர்ந்து தோய்தற்கு ஆசையும் கொள்ள மாட்டா
இருள்கலிப் புலவரெல்லாம் யான் மகிழினர் அல்லாரே
தெருள் வடலூ ரனாதிச் சிலர் நிலை தெரிய மாட்டார்
பொருள் விழைந்தொருவர் முன்சொல் பொய் சொலிப் புழுங்குவாரே

(திருவாமாத்தூர், பாயிரம். 7)

என்பது போன்ற பாடல்களால் அறியலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஏனைய இலக்கியங்களைவிடப் பக்தியிலக்கியங்களே பெரும் பயிற்சி கொண்டமைவதை இலக்கிய வரலாறு சுட்டி, நோக்க நிறைவேற்றத்தைக் காட்டுகிறது,

(3) 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி'

(திருக்கோத்தும்பி : 4) என்பது போன்று இறையருள் பெற்ற பெரியோரைச் சிறப்பித்து பிறரும் அவரை நன்கு அறிந்து கொள்ளவேண்டும் பக்தியிலக்கிய நோக்கம், தலபுராணங்களில் உத்தி நிலையாக மாறிச் சிறந்துள்ளது. தலத்தில் உறையும் இறைவன் சிறப்பு அங்கு வந்து அருள் பெற்ற அடியார் வழி விரித்துரைக்கப்படுகிறது. நூலைக் கற்பார் தாமும் அது போன்று உய்தி பெறவேண்டும் என்ற உணர்வினைப் பெற்று அதற்கு முயலவேண்டும் என்பது இதன் மறு நோக்கமாக அமைகிறது எனவும் கொள்ளலாம். இறைவனுக்குச் செய்யும் சிறப்பினை இறையடியவர்க்கும் செய்தலை இதன் பயனாகக் கொள்ளலாம். மயிலையில் நிகழும் அறுபத்து மூவர் விழா, மதுரையில் நிகழும் புட்டுத் திருவிழா, பல கோயில்களில் இவர்களுக்கென உருவச் சிலைகளும் அமைந்திருத்தல் போன்றன சான்றாக அமைகின்றன. பெற்றோர் தம் பிள்ளைச் செல்வங் களுக்கு இவர்தம் பெயரிடல் வழக்கில் அமைதலையும் இணைத்துக் காணலாம்,

(4) சமயத்தினைத் தெளிவாகப் புரிந்து கொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் அதில் உள்ள பற்று உண்மை யானதாகவும், நிலைத்து நிற்பதாகவும் அமையும். மற்றும் ஒன்றைப் பின்பற்றும் பொழுது அதன் கொள்கைகளையும், நடைமுறைகளையும் அறிந்திருத்தல் இன்றியமையாதது. எனவே சமயக் கொள்கைகளை எளிய முறையில் தெளிவாக விளக்குதலையும் பக்தியிலக்கியங்கள் தம் நோக்கமாகக் கொண்டன. இக்கொள்கை தலபுராணங்களில் இருநிலைகளில் காணப்படுகிறது. கதை கூறி வருகையில் ஆங்காங்கே ஒவ் வொன்றாக விளக்கிச் செல்லல் ஒருநிலை. இவ்வுலக உயிர்கள் அனைத்தையும் படைத்தவன் இறைவன். எனவே உயிர்களின் இயல்புகளுக்கிடையே வேறுபாடிருப்பினும் பொதுநிலையில் இறைவன் முன் அனைத்தும் சமம் என்னும் கொள்கையைப் பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடற் புராணத்தில் தருவதைச் சான்றாக்கலாம்.

அகில வேதமு மாகம பேதமு நம்மைச்
சகல சீவதயா பரனென்றுரை சால்பால்
இகலில் சேதன மசேதனமாகிய இரண்டும்
புகலில் வேறல எமக்கவை பொதுமைய வதனால்

(பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் : 5)

என்பது அப்பாடல். வேதங்களை விரிவாக, தெளிவாக விளக்குதல் புராணங்களின் பண்பாகச் சுட்டப்படுதலும்[15]

இங்கு இணைத்து நோக்கத் தக்கது. மற்றொரு நிலையாகத் தனித்த படலங்களே தலபுராணங்களுள் சமயக் கொள்கையை - தத்துவத்தை விளக்க அமைகின்றன. தந்திவனப் புராணத்துள் அமையும் இறைவன் இறைவிக்கு உபதேசித்த 'ஞான உபதேசச் சருக்கம்' போன்றவற்றைச் சான்றாக்கலாம். இவை, தலபுராணங்களின் பன்முக நோக்கங்களுள் இன்றியமையாததாகக் கொள்கை விளக்கி நிற்றலைச் சுட்டுகின்றன. சமயக் கொள்கையை எளிய முறையில் அறிந்துகொள்ள விழைவோருக்கு இவை துணை நிற்கின்றன என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் நோக்கம் நிறைவேறிப் பயனுடையதாகின்றது. அறநூல்கள் கதைகளின் வழிச் சிறார்க்கு போதித்தல் போன்று தல புராணங்கள் கதைகளின் வழிப் பெரியோர்க்குச் சமயத் தத்து வங்களைஉணர்த்துகின்றன எனலாம். தலபுராணங்களைப் பழங் கதைகள் என ஒதுக்கிவிடாது, பக்திக்கு அப்பாற்பட்டுச் சமயத்தினை அறிந்து கொள்ளுதல் என்ற நிலையில் அணுகு வார்க்குத் துணைநிற்றலாகத் தலபுராணங்கள் பயன்படுவதை இத்தகு பகுதிகள் இயம்புகின்றன.

(5) இறைவனை அடைக்கலம் புகுந்து அவனருளைப் பெற அழைக்கும் அதேவேளையில் வாழ்வினை அறநெறியில் நடத்திச் செலுத்துதற்கு உதவும் வகையில் அறிவுரை பகர்தலும் சமய நூல்களின் நோக்கமாகும். வாழ்வில் தவறிழைத்தோரையும் அதனில் அவரடைந்த துன்பங்களையும் சுட்டிப் பிறரை அவற்றிலிருந்து நீங்கியிருக்கச் செய்கின்றன தலபுராணங்கள். தேவாரம் திருவாசகம் போன்றவற்றில் சுட்டப்படும் அறிவுரைகள் இங்கு விரிவாக விளக்கம் பெறுவதாகவும் கொள்ளலாம். உலகினர் தம் உயர்வினை மட்டுமின்றித் தம்மைச் சார்ந்தோர் உயர்வினையும் கருத்தில் கொண்டு, சான்றோராக வாழவேண்டும் என்பதை அறிவுறுத்த விரும்பிய பரஞ்சோதி முனிவர்,

> **இக்கரிக்குருவி தானோற் றெய்திய வரத்தைத் தன்போல்**
> **ஒக்கலு மெளிதா வெய்தப் பெற்றதா லுலகின் மேன்மை**
> **தக்கவ னொருவன் வாழத் தன்கிளை வாழ்வதென்ன**
> **மிக்கவ ரெடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற்றன்றே**
>
> (கரிக்குருவிக்குபதேசஞ் செய்த படலம்: 22)

என்று உணர்த்துகிறார். சாதாரண, பகுத்தறிவற்ற பறவையே தன் இனம் முழுமையும் மேன்மையடைய முயலும் பொழுது பகுத்தறிவுடைய மனிதன் அதில் எந்த அளவிற்கு முயற்சி

செய்யவேண்டும் என்பதனைச் சொல்லாமல் சொல்லுகிறார். ஆணவம் அழிவைத் தரும் என்பதனைப் பிரமன் வழி, திரு அம்பர்ப் புராணம் பிரமபுரிப் படலத்தில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அமைக்கிறார், உண்மை உடையாருக்கு இறைவன் துணை நிற்பானாதலின் உண்மை கடைப்பிடிக்க வேண்டு மென்பதைப் பரஞ்சோதி முனிவர் 'வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலத்தின்' வழி அறிவுறுத்துகிறார். இவ்வாறு அறிவுரைகளைக் கதைகளினிடையே உட்பொருளாய் அமைத்து இறையுணர்வை வளர்த்தலும் மிகுந்து காணப் படுகிறது. இவை கற்பார் தீயவற்றிற்கு அஞ்சி ஒதுங்கி நிற்றலுக்கும், எத்துணை இடர்ப்படினும் நல்லனவற்றை மேற்கொள்ளும்படித் தூண்டுதற்கும் காரணமாகிப் பயனாய்ப் பொருந்துகின்றன.

(6) தாம் பெற்ற இன்பத்தை உலகும் பெறச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் பக்திப் புலவர்கள். உலகத் துன்பங் களிலிருந்து அவர்களை விடுபடச் செய்து பேரின்பப் பெரு வெள்ளத்தில் மூழ்கி மீண்டும் பிறவாப் பேறினை அடையச் செய்தலைத் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இவ்வுலக மாயையிலிருந்து விடுபட்டு இறைவனின் திருவடிகளில் அடைக்கலம் புகுதற்குத் தடை நிற்கும் பற்றுகளை அறவே ஒழிக்க வழி காட்டுகின்றனர். இவ்வுலக இன்பங்களின் நிலையா மையை உணர்த்துதல் அதில் சிறப்பிடம் பெறுகிறது. உயிர்கள் முக்தியடைதல் ஒன்றை மட்டுமே தம் நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதில் முனைந்து நிற்கின்றனர். இறைவனிடம் கொள்ளும் உண்மை அன்பின் வழி மிக எளிதாக அதனைப் பெற இயலும் என வலியுறுத்துகின்றனர்.

தலபுராணங்கள் தம் இயல்பால் இக்கொள்கையினின்றும் சற்று வேறுபட்டு நிற்கக் காண்கிறோம். இறைவழிபாட்டின் மூலம் மறுமைப்பயன் மட்டுமின்றி, இம்மைப் பயனும் பெற்று வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்கலாம் என்பதாகக் கொள் கின்றனர். மறுமைப் பயனுடன் இம்மைப் பயனும் இணையும் பொழுது சமயம் பரப்புதல் - உலகினரை இறைவழிபாட்டில் திருப்புதல் எளிதாதலின் இதனை மேற்கொள்கின்றனர் எனலாம்.

பொருளுதவும் மனையுதவும் புத்திரப்பேறு
உதவும் மற்றைப் போகத்தோடு
தெருளுதவும் ஞானகலைச் சிறப்புதவும்
முக்தியு நற்சிறப்பின் மேவும்

அருளுதவும் எண்ணியவை எண்ணியாங்கே
உதவும் அனைத்தும் உய்ய
இருளுதவும் கண்டத்தார் இனிதமரும்
பிரமபுரி என்னும் தானம்

(திருஅம்பர்ப் புராணம் : 343)

என்று திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடியிருப்பதைச் சான்று காட்டலாம். இதற்கு விளக்கங்களாகவே அருள் பெறுவார் தம் கதைகள் அமைதலைத் தலபுராணங்கள் காட்டுகின்றன. திருவாமாத்தூர் தலபுராணத்தில் திருமாதையனிடம் சுந்தரமூர்த்தி நாயனார் பொன் பெற்றதும், திருஞானசம்பந்தர் அடியார் பலருடன் வேண்டிய உணவு வகைகள் பெற்றதும், திருவிளையாடற் புராணத்தில் மன்னவன் மகப்பேறு பெறலும் (10 : 2) போன்றன நிறுவுகின்றன. கற்பாரும் கேட்போரும் இவற்றால் அவ்விறைவன் மீது பற்றும் நம்பிக்கையும் கொள்ளல் அல்லது அதிகரித்தல் என்பன பயனாய் நிற்கின்றது.

(7) இறைவன் மீது கொண்டுள்ள பற்று மாறிவிடாது. அவன்பாலுள்ள நம்பிக்கை சிதையாது மேன்மேலும் வளரும் படிச் செய்தலையும் பக்திஇலக்கியங்களின் கொள்கையாகக் கொள்ளலாம். குலசேகராழ்வார்,

வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா !
ஆளாவுனதருளே பார்ப்பன் அடியேனே *(5 : 4)*

என்று பாடியிருப்பது போன்றமையும் பிறர் பாடல்களும், இறைவனின் சோதனைகளுக்குப் பின்பே அடியார்கள் முக்தி பெறுதலைப் பெரியபுராணம் போன்ற நூல்கள் காட்டுதலும் இவ்வெண்ணத்தைத் தருகின்றன. தலபுராணத்துள் வழங்கும் கதைகளும் இறைப்பற்றினை, நம்பிக்கையை மிகுவிப்பதாகக் காணப்படுகின்றன. எந்தகைய குற்றம் புரிந்தோரும் இறை வழிபாட்டால் அதற்குரிய தண்டனையிலிருந்து மீளல் (இயமனுக்குச் சிந்துபுரச் சிறப்பறிவித்தல் - திருச்செந்தூர்த் தலபுராணம்); உடலை வருத்தும் பிணியிலிந்து விடுபடல் (வாயு தீர்த்தச் சருக்கம் - திருப்பெருந்துறைப் புராணம்); வேண்டியன வேண்டியாங்கு பெறல் (அகத்தியச் சருக்கம் -

தந்திவனப் புராணம்), இழிந்த உயிரும் உய்தி பெறல் (நாரைக்கு முக்தி கொடுத்த படலம் - திருவிளையாடற் புராணம்) என்பனவாக அவை அமைந்து இறைவனை அடைக்கலம் புகுந்தால் பெறற்கரியது எதுவுமில்லை என்பதனை வலியுறுத்துகின்றன.

ஈசனடிக் கன்பில்லார் போலெளியா ரில்லை யாவர்க்கும்
ஈசனடிக்கன்புடையார் போல் வலியாரில்லை யாவர்க்கும்
ஈசனடிக்கன் பின்மையினா லெளிதாய்த் திரிந்த விக்கயவாய்
ஈசனடிக்கன் புடைமையினால் வலிதாயிற்றே யெவ்வுயிர்க்கும்

(கரிக்குருவிக்குபதேசஞ் செய்த படலம் : 23)

எனும் பரஞ்சோதியார் பாடல் இறை நம்பிக்கையை வலியுறுத்தக் காணலாம். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய தலபுராண இலக்கியம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மிக்கச் சிறப்புடன் திகழ்ந்தமை இந்நோக்க நிறை வேற்றத்தினை உணர்த்துகிறது. மற்றும் அடுக்கிய துன்பம் வரினும் அதனால் மனம் சலியாது, அவற்றையும் இறையருளாகக் கொண்டு எதிர்கொள்ளும் வலிமையையும் உலகியலை ஏற்றுக்கொள்ளும் துணிவையும் பெறற்கு வழி செய்கின்றன. இந்நிலையில் இறைவனுக்கு உண்மை அடியவராகவும் மிளிர்கின்றனர். இத்தன்மையைத் தருவது இறைவன்பால் உள்ள நம்பிக்கையே இதனால் 'யா மார்க்குங் குடியல்லோம்' என்ற நாவுக்கரசரின் துணிவினை அனைவரும் பெறலாம் என்பதும் உண்மை.

சிறப்பு நோக்கம்

பக்தி எனும் பொருண்மை நிலையில் பிறவற்றுடன் தல புராணங்கள் ஒன்றுபடுகின்றன. தமக்கெனவும் பல தனித்த நோக்கங்களை கொண்டுள்ளன. அவற்றைச் சிறப்பு நோக்கங் களாகக் கொண்டு இங்கு காணலாம்:

(1) தலபுராணம் எனும் பெயரமைதியிலும் நோக்கம் வெளிப்படுகின்றது. தலத்தின் சிறப்பினை உரைக்க வேண்டும். அங்குக் காலங்காலமாக வழங்கி வரும் பழங்கதைகளுக்கு இலக்கிய ஏற்றம் அளிக்க வேண்டும் என்ற உணர்வுகள் தல

புராணமாக வடிவெடுத்துள்ளன. கிட்டத்தட்ட 2000 தல புராணங்களின் எழுச்சி[16] இந்நோக்க நிறைவேற்றத்தைக் குறிக்கிறது.

(2) சமுதாயத் தேவையை நிறைவு செய்தலும் இத்தல புராணங்களின் எழுச்சி நோக்கமாக அமையக் காண்கிறோம். தம் ஊரைச் சிறப்பித்துப் பாடவேண்டும் எனக் கருதுதலும், அவ்வாறு பாடுதலில் பெருமை கொள்ளுதலும் ஊராரின் பொது இயல்பு. ''அட்சய வருஷம் வைகாசி மாதத்திற்கு மேல் (1806) பாண்டிய நாட்டின்கண் உள்ளனவாகிய சூரைக்குடி (சூரைமாநகர்) கண்டதேவி என்னும் இரண்டு ஸ்தலங்களின் புராணங்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துத் தமிழிற் செய்யுள் நடையாக இவராற் செய்யப் பட்டன. அவ்விரண்டு ஸ்தலங்களிலுமுள்ள செல்வர்களுக்கு இவருடைய பெருமையை எடுத்துக் கூறி இவரைக்கொண்டு புராணங்கள் செய்விக்கும்படித் தூண்டியவர் கோயிலூர்ச் சிதம்பர ஐயாவும் இவருடைய மாணாக்கராகிய நாராயண செட்டியாரும் ஆவர். இத்தலங்களுக்கும் முன் புராணஞ் செய்த கோயிலூர் என்னும் ஸ்தலத்திற்கும், பிற்காலத்துப் புராணஞ் செய்த வீரவனத்திற்கும், புறப்பட்டுப் போகுங் காலத்தில் பிரயாணச் செலவுகள் திருவாவடுதுறை ஆதீனத்தாராலும் அந்த ஸ்தலங்களில் இருக்குங் காலத்திலும் மீண்டு வருங்காலத்திலும் ஏற்படும் செலவிற்குரிய பொருள்கள் அப்புராணங்களை ஆக்குவிக்கும் தனவைசியப் பிரபுக்களாலும் கொடுக்கப்பட்டன'' எனும் கூற்றால்[17] இதனை நிறுவலாம். எனவே சமுதாயத் தூண்டல் நோக்க மாகவும், நூலாக்கம் பயனாகவும் இங்கமைகின்றன.

(3) அரசியல் சூழலும் இலக்கிய உருவாக்கத்தில் பங்கு கொள்ள முடியும் என்பதைத் தல புராணங்கள் காட்டுகின்றன. அன்றைய அதன் தேவையை அரசியல் உருவாக்க அதனை நிறைவேற்றுதல் நோக்கமாக இவற்றின் எழுச்சிகாணப் படுகின்றது. ''பல்லவர் காலச் சைவ, வைணவ எழுச்சியால் குன்றுதலுற்ற சமண பௌத்த மதங்கள், சோழப் பெருமன்னர் களின் பரந்த மனப்பான்மை காரணமாக மீளவும் தலையெடுக்க லுற்றன. அவற்றின் வளர்ச்சியைத் தடைசெய்து சைவம் பெற்றுவிட்ட வெற்றியை நிலை நிறுத்த வடஇந்தியாவில் முன்பு புராணங்கள் தோன்றியது போலத் தமிழ் நாட்டிலும் சோழர் காலத்திலே புராணங்கள் சில தோன்றின'' எனும் கருத்தும்[18] ''விசயநகர நாயக்கர் காலத்தில் தமிழிலே தல

புராணங்கள் பல தோன்றின. இஸ்லாமியர் படையெடுப்பினாலே, கோயில்கள் அழியும் நிலைதோன்றியதால், கோயில்களின் பெருமைகளை எடுத்துக்கூறிக் கோயில்களுக்கு ஆதரவாக மக்களைத் திரட்ட வேண்டிய தேவை அக்காலத்தில் நிலவியது. இறைவனடியார்களின் வரம்பு கடந்த கற்பனையில் தலபுராணக் கதைகள் தோன்றின'' என்பதும்[19] இவ்வெண்ணத்தை எழுப்புகின்றன. இவற்றால் பிற மதத்தினரின் தாக்குதல்களினின்றும் கோயில்களைப் பாதுகாக்கும் உணர்வினை மக்கள் மனதில் தூண்டி அதற்குரிய முயற்சியில் ஈடுபடுத்தியிருக்கலாம்.

(4) சமய எழுச்சியை, மறுமலர்ச்சியை நாயன்மார்களும் ஆழ்வார்களும் கோயில்களை முன்னிறுத்தியே நடத்தினர்.[20] அவர்கள் தலங்கள் தோறும் சென்று அங்கு உறையும் ஈசனைப் புகழ்ந்து இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களைப் போற்றிப் பரவினர்.

நீற்றினான் நிமிர் புன் சடையான் விடை
ஏற்றினான் நமை யாளுடையான் புலன்
மாற்றினான் மயிலாடுதுறை யென்று
போற்றுவார்க்கு முண்டோ புவிவாழ்க்கையே

எனும் நாவுக்கரசரின் பாடல் இதற்குச் சான்று. இக்கோயில் வழிபாட்டினைத் தொடர்ந்து நிலைபெறச் செய்யவும், அதில் நம்பிக்கையை வளர்க்கவும் தம் ஊர்க்கோயிலில் இடம் பெற்றிருக்கும் இறைவனின் பெருமையைத் தம் ஊரினதாக, தமதாகக் கொண்டு போற்றவும் புலவர் முனைந்தபோது தல புராணங்கள் கை கொடுத்தன. இறையருளைப் பெறுதற்குக் காசி, இராமேசுவரம் எனச்செல்ல வேண்டாம்; உள்ளூர் இறைவனை வணங்கியே அதனைப் பெறலாம் என்ற உணர்வினை அளித்தலும் ஒரு நோக்கமாகலாம். இதன் பயனாகவும் (தலபுராணங்கள் பெருகின எனக்கொள்ளலாம். கோயில்களின் பெருக்கத்தையும்) தல புராணங்களின் எழுச்சியையும் இணைத்துப் பேசுதலும்[21] இங்குச் சுட்டத் தக்கது.

(5) புதுமை பெருகி வரும்பொழுதுதான் அதில் சுவையிருக்கும். மக்களின் கவனத்தையும் தன்பால் ஈர்க்க முடியும். சைவசமய எழுச்சியை நாயன்மார் ஊக்கிவிட்டவுடன் அதனைத் தொடர்ந்து செயல்படச் செய்தல் பின்வந்தோர் பொறுப்பாயிற்று. அவர்களைப் போன்று பதிகங்களே பாடிக் கொண்டிருந்தால் சலிப்பு மக்களிடையில் ஏற்படல் இயல்பு. மற்றும் பிள்ளைத்தமிழ், உலா, கலம்பகம், தூது எனச்சிறு சிறு பிரபந்தங்

களின் மூலமாகவும் இறைவன் புகழ் பரப்பும் பணி தொடர்ந் தாயிற்று. இனி என் செய்யலாம் என்ற காலையில் முன் சுட்டிய படி, பின்புலங்கள் தலபுராண அமைப்பிற்கு வாய்ப்பாயின. மக்களும் ஏற்றுக்கொண்டனர். உத்தி நிலையிலும் இலக்கியங் களின் நோக்கமும் பயனும் அமைதல் கூடும் என்பதனை இது காட்டுகிறது.

(6) வடமொழிச் சார்புடையதாகப் புலவர் பாடியதன் நோக்கம் என்ன என்பதும் இங்கு ஆராயப்பட வேண்டியதே. முன் கூறியபடிக் காலச் சூழல் என்பது ஒருபுறமிருக்க வேறு சிலவும் மறுபுறமிருக்கலாம். புலவர் அதனைத் தமக்குப் பெருமையாகக் கருதுதலும், தம்முடைய ஊரினைப் பிறமொழி யினரும் புகழ்ந்துள்ளனர் என்பதால் மேலும் அதற்குப் பெருமை சேர்க்க எண்ணுதலும் என அவை அமையலாம். தம்மைப் பிறர் புகழ்கின்றனர் என்பதில் ஒருவித கவர்ச்சி தோன்றல் இயல்பு. இவ்வுளவியலைப் படைப்பாளர் பயன்படுத்திக் கொண்டனர் போலும். தலபுராணங்கள் தமக்குத் தோற்று வாயாக, நூல் எழுந்த வரலாறு கூறும்பொழுது நைமிசாரண் யத்தில் முனிவர் வேண்ட சூதமுனி மொழிந்ததாக அமைத்தல் மரபு. இம்மரபு வடநூலாரின் புராண மரபு என்றும் அதனையே தமிழ்த் தலபுராணங்களும் கொண்டுள்ளன என்றும் ஆகவே இது ஒரு நூனெறி மரபேயன்றி வாய்மையன்று என்று கருது தலும்[22] இணைத்து நோக்கத்தக்கது,

(7) இறைவன் புகழைப் பாமரருக்கும் கொண்டு சேர்க்கும் முயற்சியில், சமயம் பரப்புதல் சமுதாயத்தின் எல்லா பகுதி யினருக்கும் சென்றடைய வேண்டும் என்ற உணர்விலும் தலபுராணப் படைப்பாளரின் நோக்கம் அமைந்திருக்குமோ என்றும் தோன்றுகிறது. கோயில்களில் புராணச் சொற்பொழிவு கள் நிகழுதல் இடைக்காலத்தில் தோன்றியமையைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. அப்புராணங்களுள் தலபுரா. ணங்களும் இருக்கலாம் என்ற கருதுசோளும் காணப்படுகிறது[23] மேலும் சமயப் பின்பற்றுதலின் ஒரு நிலையாகப் புராணங் கேட்டல் அமைகின்றது[24]. தலபுராணங்களும் தம் நூற்பயன் உரைக்கும் பொழுது,

விரும்புறுநைமிச வனத்து முனிவர் கேட்க
வேதநெறி சூதமுனி விளம்பு மார்க்கம்
தரும்பொருளும் சொல்லும் அடைவினில் விரித்துத்
தந்திவனப் புராணத்தைச் சாற்றுவோரும்

அரும்பொருள் கேட்டுகப்போரும் செம்பு நாதன்
அருளினால் வல்வினைகள் அனைத்தும் நீங்கிப்
பெரும் புவியின் மிகு புகழும் குன்றா வாழ்வும்
பெரும்பொருளும் பரகதியும் பெற்று வாழ்வார்

(தந்திவனப் புராணம்: 1 : 43)

என்பது போன்று அமைந்திருப்பதும், திருப்பெருந்துறைப் புராணம் அப்புராணத்தை உரைக்கும் இடங்களாகத் தெய்வால யங்கள், நான்மறையோர்கள் சேரும் தவ நந்தவனம் மற்றும் உய் வாகிய நல்லிடம் (1944) என்று மொழிந்திருப்பதும் இவ்வெண் ணத்தை வலுப்படுத்துகின்றன. தலபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தமையை[25] நோக்க நிறைவேற்றமாகக் கொள்ளலாம்.

(8) எல்லாத் தலபுராணங்களும் அங்கு உறையும் இறைவனை வழிபடுமுறை, கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள், வழிபாட்டிற்குரிய சிறந்த நாட்கள் அவ்வாறு வழிபடுவதால் பெறும் பயன் என்பன போன்றவற்றை மிக விரிவாகவும், தெளிவாகவும் உணர்த்துகின்றன. இவற்றை நோக்கும்பொழுது முறைப்படி இறைவனை வழிபடு முறையை அனைவருக்கும் உணர்த்தும் நோக்கத்தையும் இவை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பரஞ்சோதியார் இந்திரன் முடிமேல் வளை யெறிந்த படலத்தில் மிக விரிவாகச் சிவனுக்குகந்த சோம வார விரதம் பற்றிக் கூறியிருப்பதைக் காணலாம். மற்றும் அவ்வவ் தலங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்கள் பற்றியும் அவற்றின் சிறப்பு பற்றியும் மொழிதல் காணப் படுகிறது. உமாபதி சிவாச்சாரியரின் கோயிற் புராணத்தின் திருவிழாச் சருக்கத்தில் சிதம்பரம் கோயிலில் நிகழும் ஐப்பசிப் பூரம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசப்பாவாடை, ஆனித் திருநாள் இரதோற்சவம், மாசிமகம் போன்ற விழாக்கள் மிக விரிவாக விளக்கம் பெற்றுள்ளன. திருப்பெருந்துறைப் புராணம்,

பிரதோ டத்திற் றெசிப்போர்
பெரும் பாவங்கள் மிகச் செயினும்
புறமாம் ஆத்ம நாதரருள்
புரிந்து காப்பா ரவர்மாலை

நறுநெய் விளக்குச் சிறந்த வில்வார்ச்
சனையந் நாளில் நயந்தளித்துள்
உறுநன் நேயத் தொடும் பணிவோர்
உமைகோன் கணத்தோ டுறைகுவரே (1937)

என்றமைப்பது போன்று ஒவ்வொரு தலபுராணத்திலும் இக்கூற்றினைப் புலவர் பொருந்த அமைத்துள்ளனர். நூல் நெறிப்படி வழிபாடியற்ற விரும்பும் சமயநெறி நிற்போர்க்கு இப்பகுதிகள் பெருந்துணை நிற்கின்றன. குறிப்பிட்ட சிறப்பு நாளுக்கென்று குறிப்பிட்ட பொருள்களால் இறைவழிபாடியற்றல் வழக்கில் காணுதலை இதன் பயனாகக் கொள்ளலாம்.

(9) புனித நீராடலை ஊக்குவித்தலும் இவற்றின் நோக்கமாகக் கொள்ளலாம். பொதுநிலையில் தலங்களில் உள்ள புனித நீர்நிலைகளைச் சிறப்பிப்பது தலபுராணங்களின் ஒரு கூறாக அமைகிறது. தந்திவனப்புராணத்துள் அமையும் நவதீர்த்தச் சருக்கம், கமலாலயச் சிறப்பு எனும் திருவாரூர்த் தலபுராணத்துள் அமையும் தேவதீர்த்தச் சருக்கம், சரசுவதித் தீர்த்தச் சருக்கம், கயாதீர்த்தச் சுருக்கம் என்பனவற்றைச் சான்று காட்டலாம், இதுபோன்றே அனைத்துத் தலபுராணங் களும் கொண்டுள்ளன. மற்றும் தலத்திற்கு வந்து வழிபட்டோர் புனித நீரில் நீராடிய பின்பே இறைவனை வழிபடுதல் முறையாகக் காணப்படுகிறது. அப்புனித நீர்த்துறைகளைக் குறிப்பிடும்பொழுது அவற்றின் தோற்றம், நீராட வேண்டிய சிறந்த நாட்கள், அதன் பயன் போன்றனவும் தெளிவாக உணர்த்தப் படுகின்றன. பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடற் புராணத்துள் இதன் சிறப்பினை,

திருத்தயாத் திரையதிகம் அவற்றதிகம் சிவனுருவரந்
திருத்தமாங் கங்கை முதற் றிருநதிகள் தனித்தனி போய்த்
திருத்தமா டுவதரிதத் திருநதிகள் தனித்தனிபோய்த்
திருத்தமாய் நிறைதலினால் அவற்றதிகந் திரைமுந்நீர்

(எழுகடலழைத்த படலம்: 9)

என்று வலியுறுத்தியுள்ளார்.

இன்றும் திருத்தலப் பயணம் மேற்கொள்வோரும், நேர்த்திக் கடன் முதலியன செலுத்தச் செல்வோரும்

அங்குள்ள புனித நீரில் நீராடியபின் வழிபாடு மேற்கொள்ளு தலும், குறிப்பிட்ட சில தலங்களினின்று நீர் கொணர்தலும் தல புராணப் புலவரின் நோக்க நிறைவேற்றத்தைக் காட்டு கின்றன எனலாம்.

(10) தலப்பெருமைகளைச் சுட்டி மக்களைப் புனிதப் பயணங்கள் மேற்கொண்டு பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபடத் தூண்டும் ஆற்றுப்படை நோக்கும் தலபுராணங்கள் கொண்டுள்ளதாக இருக்கிறது. இத்தலம் இத்தகு சிறப்புடையது. எனவே இங்கு வாருங்கள், வந்து இறையருள் பெறுங்கள் என அழைப்பதாகவும் இவற்றைக் கொள்ளலாம். தம் ஊர்ப் பெருமையினை மக்கள் உணர்ந்து கொண்டு சிறப்பிப்பதற்கும் ஒரு வழியாக இது அமைகிறது. இன்றும் திருத்தலங்களுக்குரிய திருவிழா நாட்களிலும் பிற சிறப்பு நாட்களிலும் அங்கு உறைவோர் முக்கிய பங்கேற்று, சிறப்பு வழிபாடு நிகழ்த்தக் காணலாம். ஊரில் வேறு ஏதேனும் சிறப்பு நிகழ்ந்தால் கூட அதனை 'ஊரே திருவிழாக் கோலம் பூண்டது' என்று விமர்சித்தலையும் இங்கு நினைவு கூரலாம்.

''தலங்களாக விளங்குபவை மண்வகை தட்பவெட்பச் சார்பினால் அங்குச் சென்றவர்களின் பருவுடலின் பஞ்சபூதக் கூறுகளையும் வாத பித்த சிலேஷ்மங்களையும் மாறுபடுத்தும். தலவிருட்சங்களின் காற்றும் நிழலும் இலை தழை காய் கனிகளும் தீர்த்தங்களின் நீரும் பருவுடலின் நோய்களையும் பிணிகளையும் பற்றி மாறுபடுத்தும். இவ்வாறு கால சூக்கும காரண உடம்பு மூன்றும் செம்மையுறுதலினால் ஆன்றோர்கள் தல யாத்திரையினையும் வழிபாட்டினையும் சமயச் சார்பாக வைத்து வற்புறுத்துவாராயினர்'' என்ற கருத்தும்[26] குறிப் பிடத்தக்கது.

தமிழர் வாழ்வில் இத்தகு பயணங்கள் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுள்ளமை வெளிப்படை. இவற்றிற்குப் பொருளாதாரம் ஒரு தடையாக அமையாது எப்பாகுபாடு மின்றி அனைவரும் இடம் பெறலும் காணப்படுகிறது. இத்தகு பயணங்களும் பெரும்பாலும் அவ்வவ்விடங்களின் சிறப்பு நாட்கள் அல்லது திருவிழா நாட்களிலுமாக அமைதல் சுட்டத்தக்கது. இவற்றை நோக்கும்பொழுது தலபுராணங்கள் இலக்கிய உலகைவிட சமுதாயத்தில்தான் மிகுந்த ஏற்றம் பெற்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

முன்பே சுட்டியபடி தலபுராணங்களின் இந்நோக்க நிறை வேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைவது அவை குறிப்பிடும் இம்மை உலகப் பயன்களே. உலகத் துன்பங் களிடையே உழலும் மானிடருக்கு அவை மாமருந்தாகப் பயன் படுகின்றன. நம்பிக்கை ஒளியூட்டி இறையருளைப் பெறத் தூண்டுகின்றன. பெரும்பாலும் அனைத்துத் தலபுராணங்களுமே தவறாது தம் நூற்பயன் மொழிகின்றன.

(11) வைதிக சமய எழுச்சிக்காகச் சைவரும், வைணவரும் கொள்ளும் முயற்சியில் சைவர் மட்டுமே தலபுராணங்களுக்குச் சிறப்பளித்துள்ளனர். வைணவர் ஒரு சிலவற்றுடன் நிறுத்திக் கொண்டு தலபுராணப் படைப்பில் தம் ஈடுபாட்டின்மையைப் புலப்படுத்தியுள்ளனர். சைவப்புலவரின் தலபுராண ஈடுபாட் டிற்கு ஏதேனும் தனித்த நோக்கம் உண்டோ என்ற எண்ணம் இதனால் எழுகின்றது. வைணவர் திருமாலின் அவதாரங்களில் மிகுந்த ஈடுபாடுடையவராகக் காணப்படுகின்றனர். சிவன் பிறவா யாக்கைப் பெரியோன் ஆதலின் அவனுக்குச் சிறப் பளிப்பன அவனது திருவிளையாடல்களே. திருமால் தம் அவதாரங்களின் மூலம் உலகை உய்விக்கின்றான். சிவன் தேவை ஏற்படும் பொழுதெல்லாம் தன் அடியவருக்குக் காட்சி யளித்து வேண்டுவன தருவான் என்பதனை உறுதிப்படுத்த, தல புராணங்களைத் தம் வாயில்களாகக் கொண்டனரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. இவ்வூகம் உண்மையாயின் இதனையும் தலபுராணங்களின் நோக்கமாகக் கொள்ளலாம்.

(12) எல்லாத் தலபுராணங்களும் தான் எந்தத் தலத்தின் மீது பாடப்பட்டிருக்கிறதோ அதுவே உலகில் முதன்மைச்சிறப்பு வாய்ந்தது; இறைவன் வீற்றிருக்கும் பிற தலங்கள் கூட இதற்குப் பிற்பட்டதே என்று நவில்கின்றன. (திருவிளையாடற் புராணம் - கரிக்குருவிக்குபதேசஞ் செய்த படலம் 6,7) குறிப்பிட்ட புராணத்திற்கும், தலத்திற்கும் பெருமைசேர்க்கவேண்டும் மற்றும் அத்தலத்திற்குப் பிறரையும் ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாக இருத்தல்கூடும். மற்றும் தேவர்கள் வந்து வழிபட்டுத் தம் குறை நீங்கியதாகப் பாடுதல் சிவனே எல்லா தெய்வங் களுக்கும் முதன்மையானவன் என்பதை வலியுறுத்தற்காம். அரசர்கள் பேறு பெறுதல் உலகில் மிக்க வலிமையுடை யோராய்த்திகழினும் இறைவன் முன் அவர்களும் சாதாரண இயல்புடையோரே எனக்காட்டுதற்கும், தனிமனித வழிபாட் டிற்குரியராகச் சிறப்புற்றிருந்த அவர்கள் நிலையும் இத்தகை

யதுதான் எனவே இறைவழிபாடே உயர்ந்தது என்பதை வலியுறுத்தற்கும் எனக்கொள்ளலாம். அந்தணர், வேளாளர் எனப்பல இனத்தவராகப் பிறமானிடர்களைக் குறிப்பிடுதல் இறைவன் முன் இன வேறுபாடுமில்லை; எக்குலத்தில் பிறந் தோருக்கும் அவன் அருள்புரிவான் என்ற நம்பிக்கையைச் சிறப்பிப்பதற்கு எனலாம். எவ்வகைக் குற்றங்களாயினும் இறைவனை உண்மையாக வழிபடுங்காலையில் அவற்றிலிருந்து விடுபடமுடியும் என்பதனையும் இவை காட்டுகின்றன. மற்றும் பறவைகள், விலங்குகள் முதலியனவும் உய்திபெறுதலாகக் காட்டுதல் எவ்வுயிரும் இறைவனுக்கு ஒன்று; அறியாமை இருளில் மூழ்கியிருப்பினும் இறைவன் அதனை அகற்றித் தன்னருள் அளிப்பான் என்பதனை உறுதிப்படுத்தற்கு எனக் கொள்ளலாம். எனவே பொதுநிலையில், அமையும் கதைகளைக் கொண்டு நோக்கும்பொழுது எந்த இனத்தைச் சார்ந்தவரா யினும், எத்தனை கொடிய பாவங்களைப் புரிந்திருந்தோரா யினும் இவ்வுலகத் துன்பங்கள் எதனாலும் துன்புறினும் இறைவனை அடைக்கலம் புகுந்து வழிபடும்பொழுது யாவருக்கும் வேண்டுவன அருளித் துணை நிற்பான் எனும் நம்பிக்கையை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்கின்றன எனலாம். மற்றும் தவறுகள் செய்யும்பொழுது தண்டனை பெறுதலும் உண்டாதலின் அத்தவறுகளைத் தம் வாழ்வில் மேற்கொள்ளாதிருக்கச் செய்யும் அறிவுரையாகவும் அமை கின்றன எனலாம். இவ்வாறு பலநிலைகளில் தம் கருத்தினை இவை உறுதி செய்கின்றன.

(13) எல்லாத் தலபுராணங்களிலும்,

எண்ணிய வெண்ணியாங்கே முடித்தரு ளிறைவ போற்றி
கண்ணிய பகையொன் றில்லாக் கற்பகத்தருவே போற்றி
புண்ணிய மலர்ப்பூங் கொம்பர் வதியொரு புறத்தாய்
போற்றி
பண்ணிய தவத்தினார்க்கே பயன்படும் பகவ போற்றி

(திரு அம்பர்ப்புராணம், 486)

என்பதுபோன்று துதிப்பாடல்கள் அமைகின்றன. இவற்றை நோக்கும்பொழுது தேவார, திருவாசகப் பாடல்கள் போன்று தம் பாடல்களும் நாள் வழிபாட்டிற்குரிய பக்திப் பாடல்களாக, பாராயணம் செய்வதற்குரியதாக அமைய வேண்டும் என்ற நோக்கமாக இருக்கலாம்.

இதுகாறும் கண்டன தலபுராணங்களின் பொது நோக்கங் களாகும். இது போன்றே ஒவ்வொரு புலவரும் தமக்கென தனித்த நோக்கங்களுடனும் நூலை இயற்றியிருத்தல் இயல்பு. ஒவ்வொருவரையும் அவ்வகையில் நோக்கும்பொழுது மற்றும் பல நோக்கங்கள் வெளிப்படலாம். சான்றாக, தணிகைப் புராணம் பாடிய கச்சியப்பருக்கு, மறைஞான சம்பந்த நாயனாரின் 'சிவதருமோத்தரம்' நூலை எளிமைப்படுத்தி யுரைத்தல் நோக்கமாயிருந்தமையைக் காணமுடிகிறது. அந் நூலின் பொருள் முழுமையையும் தணிகைப் புராணத்தின் அகத்தியன் அருள்பெறு படலத்தில் இயம்பியுள்ளார். பெரும் பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம் இருக்கப் பரஞ்சோதி முனிவர் மீண்டும் தாமொரு திருவிளையாடற் புராணம் பாடியதன் நோக்கம் இப்பிறப்பில்உறுதிபெறல் என மொழிந்திருப்பதும் (பாயிரம், 26) அவர் படைப்பு நோக்கமாக அமைகிறது.

மேற்கண்டன தவிர மேலும் காணப்படும் பயன்களை இங்குக் காணலாம். அவற்றை இலக்கியத்துறை பெற்ற பயன் எனவும் பிற துறைகள் பெற்ற பயன் எனவும் இருவகைப் படுத்தலாம்.

இலக்கியத்துறை பயன்

(1) எண்ணற்ற தலபுராணங்கள் எழுந்ததன் மூலம் அவ்விலக்கிய வகை சிறப்புப்பெற்றதுடன் தமிழிலக்கியப் பரப்பும் விரிவுகொண்டது. இன்று இவற்றின் சிறப்பு குன்றியுள்ள பொழுதிலும் கி. பி. 13ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டுவரை சுமார் 600 ஆண்டுகள் இவை இலக்கிய உலகில் ஆட்சி செலுத்தியமை குறிப்பிடற்பாலது.

(2) இவற்றினின்றும் வேறு நூல்கள் எழுதற்கும் இவை வாய்ப்பளித்துள்ளன. சான்றாக இன்று கிடைப்பனவற்றுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடற்புராணத்தை அடியொற்றி, திருவிளையாடற் பயகர மாலை, கடம்பவன புராணம், திருவு சாத்தான நான்மணிமாலை போன்ற நூல்கள் எழுந்துள்ளன.

(3) தலபுராணங்கள் அவ்வகையில் மட்டுமின்றி, பிற இலக்கிய வடிவங்களையும் மேற்கொண்டு இலக்கியத் துறையை வளம்படுத்தியுள்ளது. சான்றுகளாகச் சுப்பிரமணிய ஐயரின்

திருமெய்யம் ஈசுவரன் கோயில் தலபுராணக் கீர்த்தனை, காஞ்சி சிதம்பர முனிவரின் க்ஷேத்திரக் கோவை பிள்ளைத் தமிழ், க்ஷேத்திர வெண்பா போன்றவற்றைத் தரலாம்.

(4) சங்கஇலக்கியம் கற்றோர் அவையை முன்னிறுத்திப் பாடியதாகத் தெரிகிறது. அறவிலக்கியம் பாமரர் அவைக்குச் சான்றோர் வழங்கியதாக அமைகிறது. ஆயின் தலபுராணம் உள்ளிட்ட பக்தியிலக்கியம் இப்பாகுபாடின்றிக் கற்றோர், பாமரர் என்ற பகுப்பின்றி அனைவருக்கும் ஏற்றதாக நிற்பது இதன் சிறப்பு எனக்கொள்ளலாம்,

(5) இலக்கிய வரலாறு காண்பதற்கும் சில தல புராணங்கள் உதவுதல் குறிப்பிடற்பாலது. பக்திப்பனுவல் படைத்தோர் பெற்ற இறையருள் வாழ்வு தலபுராணங்களில் ஏற்றம் பெறும்பொழுது அவர்தம் படைப்புகள் எழுந்த சூழல்கள் உணர்த்தப்படுகின்றன. திருவாமாத்தூர் தலபுராணத்துள் அதன் ஆசிரியர் தண்டபாணிசுவாமிகள் சுந்தரர், சம்பந்தர், நாவுக்கரசர் போன்றோர் திருவாமாத்தூர் வந்து இறையருள் பெற்றமையைத் தனித்தனிப்படலங்களில் தருகிறார். இடையே அவர் பதிகங்களின் தோற்றச் சூழல் சுட்டப்படுகிறது,

சொல்லி உருக்கரந் திடலும் இன்பதுன்பம் இரண்டும்
துய்ப்பவராய்ச் சுந்தரனார் தொல்வழியே மீண்டு
வல்லியமர் பாகத்தார் ஆமாத்தூர்க் கோயில்
வயினடைந்தார், அங்கும் வந்த வண்ணமே கண்டு
கொல்லியெனும் பண்ணெடுத்துக் காண்டனன்
காண்டனென்
குறிப்பினால் ஒளித்தமையும் குலவிடவே பாடி,
நல்லிரட்டு மொழியடுக்கே கவிதோறும் காட்டி
ஞாங்கர்விழிச் சங்கிலி தோள் நயந்தொற்றியூரில்

(2 : 4 : 9)

என்பதுபோன்று அவை அமைகின்றன. திருப்பெருந்துறைப் புராணம் 'திருவாசகச் சிறப்பு' என்றே தனிப்பகுதி அமைத்திருத்தல் சுட்டத்தக்கது.

(6) உத்திகள் பயன்பாட்டிலும் ஒருவளர்ச்சி நிலையை இத்தல புராணங்களில் பலவும் காட்டுகின்றன. கனவுகள் காப்பியத் திருப்பு மையங்களை உணர்த்துவதாக அமைய, இங்கு இறைவனின் திருக்காட்சிகள் பலவும், அவன்

இறையடியார்க்கு உணர்த்துவனவும் அவர்தம் கனவுகளில் நிகழ்கின்றமையைக் காண முடிகிறது.

அன்று பத்திரன் கனவில் வந்தாட லேற் றழகர்
இன்று பத்திர விசைவ லானிடை விறகாளாய்ச்
சென்று பத்திர னடிமையா மென்று பாண் செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டு கோளென்றார்

(விறகு விற்ற படலம், 51)

என்று பரஞ்சோதியார் பாடுவதைச் சான்றாக்கலாம்.

(7) தமிழிலக்கிய மரபுத் தொடர்ச்சியையும் இவை காட்டுகின்றன. தணிகைப் புராணத்தின் களவுப்படலம் அகப் பொருளையும், சீபரிபூரணப் படலம் புறப்பொருளையும் பொருளிலக்கண வழி கூறுகின்றன. கேசாதிபாதத்தைத் திருஅம்பர்ப்புராண அம்பர் படலத்தில் காணலாம். காப்பியப் பண்பிலமைந்து அம்மரபு காத்ததாகவும் கொள்ளலாம்.

(8) தலபுராணங்கள் இன்று மறு உரு எடுத்து மீண்டும் தன் சிறப்பினைக் காட்டி நிற்கின்றன. ஆனந்தவிகடன், இதயம் பேசுகிறது, மங்கை போன்ற பல இதழ்கள் புனிதப் பயணங்கள், திருத்தலப் பெருமை என்றவாறாக ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோயில்கள், அங்குள்ள புனித நீர்த்துறைகள், இறைவன் புரிந்த அருட்செயல்கள், வழங்கும் பழங்கதைகள் போன்றவற்றைத் தருகின்றன. எனவே இவற்றைத் தலபுராணங் களின் மாற்று வடிவங்கள் எனக் கொள்வதில் தவறில்லை, தலபுராணங்களிடையே தமிழருக்கு இன்றும் உள்ள பற்றினை இவை காட்டுகின்றன. காலச் சூழலுக்கு ஏற்ப அன்று செய்யுளில் அமைந்த தலபுராணம் இன்று உரைநடை வடிவம் கொண்டுள்ளது எனவும் கருதலாம். இன்று அவ்விறைவன் அருள் பெற்றோரின் கருத்துகளையும் இவை இணைத்துத் தரல் சுட்டற்பாலது,

தனியார் குறிப்பிட்ட தலங்களைப் புகழ்ந்துரைத்து நூல் வெளியிடுவது போன்று (தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ந. சுப்பு ரெட்டியார்) கோயில்களும் வெளியிடுகின்றன (குன்றக்குடித் தல வரலாறு - பிரான்மலை வகை ஐந்து கோவில்கள் - குன்றக்குடி). கோயில்களுக்குத் திருப்பணி செய் தோர் போன்ற வரலாற்றுச் செய்திகளும் அவற்றுள் இடம்

பெறக் காணலாம். பயண வழிகாட்டிகளாகவும் அவை அமைதல் குறிப்பிடத்தக்கது.

பிறதுறைப் பயன்கள்

(1) பழங்கதைகளே தலபுராணங்களில் சிறப்பிடம் பெறினும் வரலாற்றுக்குத் துணைநிற்றலையும் ஆங்காங்கே அறிய முடிகிறது. திருவிளையாடற் புராணத்துள் பாண்டியர் வரலாறு பற்றி ஓரளவு அறிய முடிகிறது.

வாகுவலத்தான் சகநாத வழுதி வேந்தன் மகன் வீர
வாகு வவன்சேய் விக்கிரமவாகு அவன்சேய் பராக்கிரம
வாகு வனையான் மகன் சுரபிமாறனனையான் றிருமைந்தன்
வாகு வலத்தான் மறங்கடிந்து மண்ணாளுங் குங்குமத்
தென்னன்

(பாண்டியன் சுரந்தீர்த்த படலம், 2)

அரசர், புலவர் போன்றோர் வாழ்க்கை வரலாறுகளை அறிதற்கும் துணை நிற்கின்றது. மாணிக்கவாசகர், சம்பந்தர், சோழன் கோச்செங்கணான் போன்றோர் வரலாறுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தலபுராணங்களில் காணப்படுகின்றன. அவை அனைத்தையும் இணைத்து ஆழ்ந்து ஆய்வு செய்தால் அவர் தம் வரலாற்றின் உண்மை வடிவினைக் காண இயலும்.

''புராணங்களில் மிகைபடக் கூறப்பட்டதாகக் கருதப் படுபவைகளும், பொருளற்றவைகளாகத் தோன்றுபவைகளும் புராண இலக்கண முறைப்படி ஓர்ந்து சிந்தித்து வேண்டு மென்றே எழுதப்பட்டுள்ளன என்பதும் குறித்த ஒரு பயன் கருதியே அவ்வாறு அவைகள் எழுதப்பட்டுள்ளன என்பதும் அறிதற்பாலன. எனவே அவ்விலக்கண முறைப்படி பொருள் காணுங்கால் புராணங்கள் உண்மை வரலாறுகளே என்பது புலனாம். மாந்தாதா - கி.மு. 3459 ;இராமர் - கி.மு. 2124; கிருஷ்ணன் கி.மு. 1458 ; குருக்ஷேத்திரம் - கி.மு. 1416 ; அஜாத சத்துரு கி.மு. 527 ; மகாப்தமநந்தன் - கி.மு. 401 ; சந்திரகுப்தன் - கி.மு. 320 - இந்தத் தேதிகள் புராணங்களைக் கொண்டே இந்திய பஞ்சாங்கக் கணக்குப்படி குறிக்கப்பட்டன வாகும். சந்திரகுப்தன் காலத்தையும் மற்ற மன்னர்கள் சிலர் காலத்தையும் வேறு ஆதாரங்களைக் கொண்டு கணக்கிட் டுள்ளார்கள். அம்முடிபுக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை வியக்கத் தக்கதாம்'' எனும் கூற்றும்[27] இங்குச் சிந்திக்கத்தக்கது.

(2) மாவிடவியலார் ஆய்விற்கும் தலபுராணங்கள் துணை நிற்கின்றன. தமிழரின் பண்பாட்டுச் செய்திகளும், நம்பிக்கைகளும் இவற்றிடையே பலவாகக் காணப்படுகின்றன. ஒரு செயலின் தொடக்கத்தில் மகளிர் குரவையாடுதல் (வலை வீசின படலம், 27) ; முதல் மனைவி உயிருடன் இருக்கும் பொழுதே இரண்டாம் மனைவியையும் ஏற்றுக் கொள்ளுதல் ஏற்புடைத்தாதல் (வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம், 3) போன்றவற்றைச் சான்றாகக் குறிப்பிடலாம். மற்றும் கோயில்களில் நடக்கும் திருவிழாக்களையும் அவற்றின் நடைமுறைகளையும் விளக்குதல் ; வழிபடு முறையைத் தருதல் போன்றனவும் அவர்தம் பழக்கவழக்கங்கள் பற்றிய கல்விக்குத் துணை நிற்கின்றன.

இன்புறு செம்புநாதன் எனும் திருநாமம் தன்னை
அன்புறு புதல்வர்க்கு இட்டே அழைத்திடப் பெறுவர் ஆகில்
முன்பொடு பின்பும் ஆகும் மூவெழு மரபின் உள்ளோர்
துன்புறு வினைகள் நீங்கிச் சுரர் தொழ வாழ்வர்
என்றான் (342)

என்று தந்திவனப் புராணத்தில் கமலை ஞானப்பிரகாசர் நவில்வது அன்றே குழந்தைகளுக்குத் தம் விருப்ப தெய்வத்தின் பெயரை இடும் வழக்கமும் அதில் நம்பிக்கையும் இருந்தமையைக் காட்டுகிறது.

(3) அரசர் கதைகளும் இடம்பெறுதலின் அரசியல் தொடர்பான செய்திகளும் கிடைக்கின்றன. நில வருவாயில் அரசர்க்கு ஆறில் ஒரு பங்கு அளிக்கப்பட்டது (திருநாட்டுச் சிறப்பு : 28) என்பதையும், பொதுப்பணியினைப் பொது மக்கள் மேற்கொண்டு நிறைவு செய்தல்,

வெறித்தடக்கை மதயானை மந்திரிகள் வேறு வேறு பல குடிகளுங்
குறித்தெடுத்தெழுதி யெல்லையிட்டளவு கோல்கிடத்தி வரை கீறியே

அறுத்துவிட்டு நகரெங்கணும் பறையறைந்தழைத்து
விடுமாளெலாஞ்
செறிந்து விட்டவ ரவர்க் களந்தபடி செய்மி னென்று
வருவித்தனர்

(மண் சுமந்த படலம் : 3)

என ஆணையிடப்பட்டதையும் திருவிளையாடற் புராணம் பகருகிறது. பஞ்சத்தின் பிடியினின்றும் மக்களைக் காப்பாற்றுதல் அரசன் கடமை என்பதைத் திருஅம்பர்ப் புராணம், நந்தன் வழிபடு படலம் வழி உணர்த்துகிறது.

(4) தமிழரின் பிற துறை அறிவை அறிதற்கும் இவை பயன்படுகின்றன. சான்றாகத் திருவிளையாடற் புராணத்தின் மூலமாக அங்க இலக்கணம் (உக்கிரம பாண்டியன் திருவவதாரப் படலம்) ; உயர் கற்களின் இயல்பு (மாணிக்கம் விற்ற படலம்) ; இரசவாதம் (இரசவாதஞ் செய்த படலம்) ; இசை (இசைவாது வென்ற படலம்) போன்றவற்றைத் தமிழர் அறிந்திருந்தமையை உணர முடிகிறது.

இன்று வளர்ந்து கொண்டிருக்கும் ஊர்ப்பெயர் ஆய்விற்கும் தலபுராணங்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஒரு தலத்திற்கு வழங்கும் பெயர்களும், அப்பெயர்கள் வழங்கக் காரணமும் இங்கு நவிலப்படுகின்றன.

பிரமனருச்சனை செயலாற் பிரமபுரி யம்பரப்போர் பெற்ற
தோன்றல்
திரமுறமே வலினம்பர் மாநகர மாகாளி சேர்ந்த
மாண்பால்
உரனமைமா காளிபுர மாகாளன் பூசனை நன்கு
ஏற்று மாற்றால்
கரவரிய மகாளபுரம் புன்னையாற் புன்னாகவன மாதோ
(354)

நந்தனளித் தலினந்த ராசபுரம்
யாவோரு நயக்கு மாறன்
வந்த திரு வருட் பேற்றான் மாறபுரி
சண்பகமா வனம்சேர் மாண்பால்
கந்தமலி சண்பகா ரணிய மிவை
முதற்பலவாங் கரையு நாமம்

அந்தமிலத் தலப்பெருமை யாவரறிந்
துரைக்க வலாரளக் கொணாதே (355)

என்று மீனாட்சி சுந்தரம்பிள்ளை திருஅம்பர்ப் புராணத்துள் அம்பர் தலத்திற்குரிய பிற பெயர்களையும் அதன் காரணங் களைக் குறிப்பிட்டிருப்பதனையும் சுட்டலாம்.

முடிவுரை

காலச்சூழலும், தேவையும் இலக்கியத் தோற்றத்தில் சிறப்பான இடம் கொள்கின்றன. பிறமொழிகளுக்குத் தேவைக்கு மேற் சிறப்பு நல்கும்பொழுது ஏற்படும் விளைவு களைத் தலபுராணங்கள் உணர்த்துகின்றன. இவை செம்மை யிலக்கியங்களைப் பொது மக்களுக்காக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளன. 'தலபுராணம்' எனப் பொதுநிலையில் ஒரு இலக்கிய வகையின் நோக்கமும் பயனும் மட்டுமே இங்கு நோக்கப்பட்டுள்ளன. தனிப்புலவர் பற்றிய ஆய்வு மேற் கொள்ளப்படவில்லை. பொருள், வடிவம், வெளியீட்டு உத்திகள் முதலானவற்றிலும் நோக்கங்களைக் காண இயலும். நாயன்மார் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றுதலைச் சிறப்பு நோக்கமாகக் கொண்ட இத்தலபுராணங்கள் இன்று தம் பயிற்சியில் குன்றினும் சென்ற சில நூற்றாண்டுகளில் பேரிடம் கொண்டு, தம் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளன என்பதில் மிகையில்லை. தமிழகத்தில் சைவ சமயம் நிலை பெற்றுள்ளமையும் கோயில் வழிபாடு சிறந்துள்ளமையும் இதனை நிறுவுகின்றன.

குறிப்புகள்

1. அன்னிதாமசு, இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - புறப்பொருள் ; தமிழ் இலக்கியக் கொள்கை கருத் தரங்கு - 115, 4-4-1984, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, தட்டச்சுப் பிரதி.

   கே. பகவதி, நோக்கமும் பயனும் - தேவாரம் ; தமிழ் இலக்கியக் கொள்கை கருத்தரங்கு - 118 ; 4-7-'84, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, தட்டச்சுப் பிரதி.

2. Tamil Lexicon, University of Madras, Madras, 1929. p. 1774.

3. Tamil Lexicon, Vol. III, University of Madras, Madras, 1932, p. 2772.

4. 1. கந்தபுராணம், 2. தணிகை புராணம், 3. பெரிய புராணம், 4. பிணாகி என்னும் பெண்ணை நதி புராணம், கந்தர்சட்டிப் புராணம், 5. தேவாங்க புராணம்.

5. கால் என்னக் கடிது உராஅய்,
நாடு கெட எரி பரப்பி,
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமர் உழக்கி,
முரசு கொண்டு களம் வேட்ட
அடுதிறல் உயர் புகழ் வேந்தே !

(மதுரைக்காஞ்சி - 125-130)

6. பகல் கொள் விளக்கொடு இராநாள் அறியா
வெல்போர்ச் **சோழர் ஆமூர்** அன்ன இவள்
நலம் பெறும் சுடர்நுதல் (ஐங்குறுநூறு - 56 :2-4)

7. புல்லும் மலை யாறு நாடு ஊர் புனை தார் மா
கொல்லும் களிறு கொடி முரசம் — வல்லகோல்
என்று இவை நஞ்செழுத்தோடு ஏலா வகை உரைப்ப
நின்ற தசாங்கம் என நேர்

(வெண்பா பாட்டியல், செய்யுளியல் - 19).

8. சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம் பொலிக்கே
ஆராத வாசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடம்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ

(திருவாசகம், திருப்பூவல்லி - 19)

9. ச.வே. சுப்பிரமணியன், இலக்கணத்தொகை - யாப்பு - பாட்டியல் ; தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978, பக். 460—463.

10. சாலி நெல்லின், சிறைகொள்வேலி,
ஆயிரம் விளையுட்டு ஆக,
காவிரி புரக்கும் நாடு கிழவோனே

(பொருநராற்றுப்படை - 246—248).

11. விரிதிரைக் காவிரி வியன் பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்கு நீரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத்துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்
என் கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட்டுள்ளேன்

(சிலம்பு - 11 : 39-53).

12. இக்காலத்தே வாழ்ந்த வேந்தர்களும், வேதியர்களும், மடத்தலைவர்களும் சமயப் பணியாளரும் பிற செல்வர்களும் வடமொழி நமது நாட்டில் வளம்பெற பரவுதற்கு முயன்றுள்ளனரே அன்றி நாட்டுமொழி வளம் பெறுதற்கு முயற்சி செய்தாரல்லர்... தமிழ் நாட்டில் தமிழ்மொழி செல்வாக்கிழந்து சிறப்புக் குன்றிய காலம் இந்தக் காலமாகும்.

—ஔவை சு, துரைசாமிப்பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு (கி,பி. 7 முதல் 10-ஆம் நூற்றாண்டுவரை), அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அண்ணாமலை நகர், இ.ப. 1978, ப. 32.

13. ந. மு. வேங்கடசாமி நாட்டார், பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடலும், செந்தமிழ்ச்செல்வி, தொகுதி-5, 1927-28, ப. 16.

14. ந. மு. வேங்கடசாமி நாட்டார், மேற்படி, ப. 17.

15. The real function of the puranas is to explain, illustrate and amplify the vedas.

—K.S. Ramaswami Sastri, The Puranas, The Cultural Heritage of India, Vol. 5 (The Language and Literature), Ed. Sunit Kumar Chatterji, The Ramakrishna Mission Institute of Culture, Calcutta, II Ed 1978, p. 65.

16. Kirusnacami, who has prepared much the best bibliography of these works available lists 581 items ; but his list is far from complete. Zvelebil has estimated that there may be nearly 2000 Tamil Puranas.

—David Dean Shulman, Tamil Temple Myths, Princeton University Press, Princeton, 1980, p. 34.

17. உ. வே, சாமிநாதையர், ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், கேஸரி அச்சுக்கூடம், சென்னை, 1933, ப. 280.

18. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ல. ராமகிருஷ்ணன், சென்னை, 1969, ப. 90.

19. மேற்படி, ப. 136.

20. ப, அருணாசலம், பக்தியிலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, மு. ப. அக். 1973, பக். 72-76.

21; எங்கும் கோயில்கள் நிர்மாணிக்கப்பெற்றன. அவற்றிற்கு நிவந்தங்கள் ஏற்படுத்தப்பட்டமைக்கு எண்ணிறந்த சாசனங்கள் சான்று பகருகின்றன. இக்கோயில்களிலே நித்திய நைமித்திக பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. எனினும் இவற்றின் மகத்துவத்தை மிகுதிப்படுத்துவதற்கு, இக்கோயில்களை அமைத்துள்ள ஸ்தலங்களைப் பற்றிய புண்ணிய

கதைகள் வேண்டும் அவசியமிருந்தது. இதனால் ஸ்தலபுராணங்கள் மிகுதியாகத் தோன்றத் தொடங்கின.

—எஸ், வையாபுரிப்பிள்ளை, காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மு.ப. சன. 1957, ப. 318.

22. பொ. வே. சோமசுந்தரனார், ஆராய்ச்சி முன்னுரை, தணிகைப் புராணம், கழகம், சென்னை, மு. ப. மே. 1965, ப. 12.

23. புள்ளலூர், திருத்தங்கால்... முதலிய கோயில்களில் புராணங்கள் படிக்கப்பட்டன... அம்மன் கன்னிகை யாக இருந்து பாதிரிவனத்தில் சிவனை வழிபட்ட வரலாறும், அப்பர் வரலாறும் கூறுவதாக இருக்கக் கூடிய கன்னிவன புராணம் அவ்வூர்க் கோவிலிலும் வேறு சிலகோவில்களிலும் படிக்கப்பட்டிருக்கலாம்.

—மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை, இ. ப. மே. 1972, பக். 200-201.

24. சிந்தித்து மீன நோக்கி தலைவனை மூன்று போதும்
வந்தித்து மீசன் பூசை மரபுளி முடித்தும் வேதம்
அந்தித்து மறியான் செய்த **திருவிளையாடல்** கேட்டும்
சிந்தித்து மன்பர் பூசை செய்து நாள் கழிப்பர்

பல்லோர்

—திருவிளையாடற்புராணம், திருநகரச் சிறப்பு, 106.

25. உ. வே. சாமிநாதையர், திருவிளையாடற் பிரசங்கம், என் சரித்திரம், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, இ. ப. 1982, பக். 361-367.

26. ச. பாலசுந்தரம், பதிப்புரை, திருப்பெருந்துறைப் புராணம், சுந்தரலிங்க முனிவர், சரஸ்வதி மகால், தஞ்சை, 1976, ப. XX

27. ஜி. போஸ், புராணங்கள் உண்மை வரலாறுகளா? செந்தமிழ்ச் செல்வி தொகுதி-12, 1933-34, பக். 479 - 481.

பயன்பட்டவை

1. ஈழத்துத்தமிழ் நூல்வரலாறு, எஃப்.எக்.ஸி. நடராஜா, அரசுவெளியீடு, கொழும்பு. மு.ப. சூலை, 1970.

2. காவிய காலம், எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மு. ப. 1957.

3. கோயிற்புராணம், உமாபதி சிவாசாரியார், திருவாவடுதுறை ஆதீனம், 1965.

4. சைவ இலக்கிய வரலாறு (கி. பி. 7 முதல் 10-ஆம் நூற்றாண்டுவரை), ஔவை சு. துரைசாமி பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், இ. ப. 1978.

5. சைவ சமய வளர்ச்சி, மா. இராசமாணிக்கனார், பா. நிலையம், இ. ப. மே. 1972.

6. தணிகைப் புராணம், விளக்கவுரையுடன், கச்சியப்பர், கழகம், சென்னை, மு. ப. மே 1965.

7. தந்திவனப் புராணம், கமலை ஞானப்பிரகாசர் (பதிப்பு), தா. வே. வீராசாமி, உலகத் தமிராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

8. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஆ. வேலுப் பிள்ளை, ல. ராமகிருஷ்ணன், சென்னை, மு.ப. 1969

9. தமிழில் தலபுராண இலக்கியம், வே. கிருஷ்ணசாமி, அ. வேலு கோனார், முத்துசாமிபுரம், நெல்லை மாவட்டம், மு. ப 1974.

10. திரு அம்பர்ப் புராணம், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1965.

11. திருச்செந்தூர்த் தலபுராணம், வென்றிமாலைக் கவிராயர், குகஸ்ரீரஸபதி (உரை), திருச்செந்தூர் தேவஸ்தானம், 1963.

12. திருப்பெருந்துறைப் புராணம், சுந்தரலிங்க முனிவர், தஞ்சை சரஸ்வதி மகால், தஞ்சை, 1976.

13. திருவாமாத்தூர் தலபுராணம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் நூல்வெளியீடு, திருவாமாத்தூர், 1965.

14. திருவிளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவர், கழகம், சென்னை, மறு. ப. 1979.

15. திருவேங்கட ஸ்தலபுராணம், வீரராகஸ்வாமி, ஸ்ரீநிகேதன அச்சுக் கூடம், சென்னை, 1887.

16. பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், ப. அருணாசலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மு. ப. அக். 1973.

17, Tamil Temple Myths, David Dean Shulman, Princeton University Press, Priuceton, 1980.

18. The Cultnrai Heritage of India, Vol. V (Language and Literatura), (Ed.) Suniti Kumar Chatterji, The Ramakrishna Mission Institute of Culture, Calcutta, II Ed. 1978.

திருப்புகழ்

வி. சி. சசிவல்லி

ஓர் இலக்கியத்தின் பயன் என்றும் நிலைபேறுடையதாக இருக்கவேண்டுமானால், மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்தக்கூடிய அறநெறி கருத்துக்களும், அனுபவ உண்மை களும் அதில் இடம்பெறல் வேண்டும். அத்தகைய இலக்கியம் என்றும் வாழும் இலக்கியமாகத் திகழும்.

பழங்காலம் முதற்கொண்டு முருகக் கடவுளை வழிபட்டுப் பேறுபெற்ற பெரியவர்கள் பலர். முருகனைத் தமிழ்க் கடவுள் என்று போற்றுவது மரபு முருகன் எழுந்தருளியிருக்கும் தலங்களும் அவன் புகழ் போற்றும் நூல்களும் தமிழ்நாட்டில் தான் மிகுதி, சங்க காலம் முதல் அவனைப் போற்றிப் பரவிய புலவர்கள் பலர். முருகனை வழிபட்ட வகைகளைப் பரக்கக் காணலாம். பரிபாடல் என்ற நூலில் மதுரை நகர் மக்கள் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமா னிடத்தில் பேரன்பு வைத்து வழிபட்டுத் தத்தமக்கு வேண்டிய நலங்களைப் பெற்றார்கள் என்று தெரிய வருகிறது. பிற்காலத்திலும் முருகனை வழிபட்ட அடியார்கள் பலர் இந்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் பாடிய பாடல்கள் பல, அவர்களுள் முருகனின் திருவருளில் ஈடுபட்டு மிகப் பெரிய 'திருப்புகழ்' என்ற பாக்கடலை வழங்கியவர் அருணகிரி நாதராவர்.

அருணகிரியார் வாழ்க்கைக் குறிப்பு

திருக்கைவேல் முருகனைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டுப் பேறுபெற்ற தவராஜ யோகி அருணகிரிநாதர். இவர் நினைக்க முக்தி தரும் தலமாகிய திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். கி.பி. 1450-ஆம் ஆண்டில் இருந்த பிரபுட தேவமாராயர் காலத்தவர்[1]. இவர் முருகபிரானது

வழியடிமை[2]. இவர் இளமையிலேயே திருமுருகாற்றுப்படை, திருக்குறள், தேவாரம், திருமந்திரம், காரிகை ஆகியவற்றைக் கற்றவர். உலா, கலம்பகம், கோவை, சிந்து, தூது, பரணி, மடல், மாலை எனப்படும் இலக்கியங்களில் பயிற்சியும் காம சாஸ்திர நூல்களை ஆய்ந்தும் கவிபாடும் திறமும் உடைய வராய் இருந்தார்[3]. இவை தவிர இவரது பெற்றோர் பிறந்த குலம், இவரது இளமைப் பருவ நிகழ்ச்சிகள் இவை எனக் கூறததக்க தெளிவான சான்றுகள் இல்லை. இவரது வரலாறு கர்ணபரம்பரையாகப் பல்வேறு வகையாகக் கூறப்படுகிறது. இவரது உண்மை வரலாறு இதுதான் என்று உறுதியாக உரைக்க இவை இடந்தரவில்லை எனலாம். எனவே வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் அருணகிரிநாதர் துதிப்பாடல் பாயிரத்தில்,

உன்சரிதந் தனைப்பலவா றுலகத்தார்
பகர்வதுகேட் டுளம்பொ றாமல்
முன்சரிதந் தனைக்கூட்டிச் சொலப்புகுந்தேன்
அவையாவும் முறையிற் றந்தாள்[4]

என்று பாடியதை நினைவிற்கொண்டு அவரது வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்காமல் அவர் அருளிய நூல்களின் பெருமையையும் அதனால் உலகத்தார் அடையும் பேறுகளைக் குறித்தும் ஈண்டும் காண்போம்.

பாடியருளிய நூல்கள்

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் அடி எடுத்துக் கொடுத்ததுபோல அருணகிரியாருக்கு முருகக் கடவுள் 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என வண்ணப்பாவாகவே அடியெடுத்துக் கொடுத்து அருளினர் எனப்படும். இறையருளால் அருண கிரியார் பலவிதப் பேறுகளைப் பெற்றார். அறிவு நெறியிற் சேரப்பெற்றார். ஞானத்தையும் வித்தைகளையும் இமைப் பொழுதில் அறியப் பெத்றார்[5]. சுகஞானக் கடலில் மூழ்கப் பெற்றார்[6]. யோகாநுபூதியையும்[7] மோனநிலையும் பெற்றார். மனோலயம் பெற்றார்[8]. கர்ணாமிதப் பதத்தைப் பெற்றார்[9]. அடியேனது பாமாலையையும் இறைவன் ஏற்றுக் கொண் டனரே என மகிழ்ந்தார்[10]. இவர் இசையோடு தாளமும் ததும்பிப் பொலிய ஆசுகவியாக சந்தப்பாவால் பாடுவதைக் கேட்டுத் திருவண்ணாமலை வாழ்மக்களும், சுற்றி உள்ள ஊர்களில் உள்ளவர்களும் இவரிடத்து வியப்பும், பக்தியும்,

அன்பும் கொண்டனர். ஊரிலுள்ள அறிஞர்கள் யாவரும் இவர் பாடும் சந்தப்பாக்களை இவருடன் கூடித் தாமும் ஓதி மகிழ்ந்தார்கள்[11]. இங்ஙனம் முருகப் பெருமானுடைய திருவருளைப் பெற்று அந்த வன்மையால் அற்புதப் புலமையைப் பெற்றார். 'வாக்குக்கு அருணகிரி' எனப் பாராட்டப்படும் அளவிற்கு உயர்நிலை அடைந்தார். இவர் பாடியருளிய நூல்கள் :

1. திருப்புகழ்
2. கந்தரந்தாதி
3. கந்தரலங்காரம்
4. திருவெழுகூற்றிருக்கை
5. வேல், மயில், சேவல் விருத்தம்
6. கந்தரநுபூதி
7. திருவகுப்பு

என்பனவாகும்.

திருப்புகழ்

'எம் அருணகிரிநாதர் ஓது பதினாறாயிரம் திருப்புகழ் அமுதமே, என்னும் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் வாக்கின்படி, 'திருப்புகழ் என்பது அருணகிரிநாதர் பாடிய தென்பதும், மொத்தம் 16,000 பாக்களாக அமைந்திருந்தன என்பதும் தெளிவாக விளங்கும். எனினும் இன்று நமக்குக் கிடைக்கும் பாடல்கள் 1330 ஆகும், திருப்புகழ் என்ற சொல்லாட்சி அருணகிரியாரின் காலத்திற்கு முன்னரே சுந்தர மூர்த்தி தேவாரத்திலும், குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழியிலும் விரவிவரக் காணலாம்[12]. அருணகிரியாரின் பாக்களுக்குத் 'திருப்புகழ்' எனப் பெயர் சூட்டியவர் வயலூர் பொய்யாக் கணபதி என்பதை அருணகிரியாரின் வாக்காகிய 'செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக்கருள்கை மறவேனே'' என்பதிலிருந்து அறியலாம். இறைவனிடம் வாக்கு வரம்பெற்ற அருணகிரியாரும் நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என உலகுக்குத் திருப் புகழாம் அமுதத்தை வாக்கின் பல்வகைத் திறனும் விளங்கப் பாடியளித்துள்ளார்.

அமைப்பு

திருப்புகழ் பாடல்களின் பெரும்பாலானவற்றின் பிற்பகுதிகள் முருகன் வள்ளியின் பொருட்டுச் செய்த லீலைகளும், சூரசங்காரம் ஆகிய முருகன் திறலையும், சிவபிரான், திருமால், தேவி ஆகிய கடவுளரின் சிறப்பையும் எடுத்துக் கூற முற்பகுதிகள் ஆசிரியரின் குறை, குற்றங்களைக் கூறி இத்தகைய புல்லனையும் ஆண்டருள்க என்றும், ஆண்டருளினையே என்றும் எடுத்துரைக்கும்.

நோக்கம்

திருப்புகழ்ப் பாக்களின் நோக்கம் என்ற முறையில் இப்பாடல்களை அணுகுகையில் வேண்டுகோள் நோக்கமும், உலகுக்கு உபதேசிக்கும் நோக்கமுமே பெருமளவில் காணப் படுகின்றன. ஒருசில பாடல்கள் இறைவன் தனக்கு அருளியதை நினைந்து நன்றியறிதல் நோக்கில் பாடப்பட்டுள்ளன.

1. அருணகிரியார் வேண்டுகோள்கள்

இறைவனை உணரவும் காணவும் துணியுமுன்-முனையுமுன் தன் குறையை உணரவேண்டும். உணர்ந்து திருந்தவும் வேண்டும். அதன் பின்னரே எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருளை உணரவும் முடியும். அடையவும் முடியும். இதனையுணர்ந்தே அருணகிரிநாதர் தம் திருப்புகழ்ப் பாக்களில் முற்பகுதிகளில் தம் குறைகளைக் கூறி அதனை நீக்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு முருகனை இரந்து வேண்டுகின்றார். இந்த உலகியல் வாழ்க்கையில் துன்பமுற்று, வருந்திய தன்மையை அருணகிரியார் தம் பாடல்களில் சொல்லும்பொழுது நம்மை எண்ணித்தான் அவர் அவ்வாறு பாடியிருக்கின்றாரோ என்று தோன்றும். அவரது பாடல்களில் அவர் கூறியிருக்கின்ற குற்றங்கள் எல்லாவற்றையும் தம் வாழ்நாளில் செய்தார் என்றால் அதனை முழுமையாக ஏற்க இயலாது. எனினும் அவற்றை எல்லாம் தம்வாழ்வில் தாமே செய்தது போல அவர் கூறியுள்ளனரே எனின் அப்படிச் சொல்வது பெரியோர்களின் வழக்கம். அத்தகைய பெரியோர் தம்மை மாத்திரம் நினைந்து பாடுவதில்லை. உலகம் முழுவதும் வாழும் மக்கள் செய்கின்ற பாவங்களை, அவர்களது துன்பங்களைத் தாமே செய்தவை போலவும், தாமே அனுபவிப்பன போலவும் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வது அவர்களுடைய இயல்பு.

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே

என்பது தாயுமானவர் கூற்று. ஒருவர் இறைவனிடம் கேட்கும் வேண்டுகோள்களிலிருந்தே அவரது குணநிலை பக்திநிலை புலப்படும். முருகக் கடவுளிடம் அருணகிரியார் வேண்டிய வற்றுள் சிலவற்றைக் காண்போம்.

1. தலங்கள்தோறும் சென்றுபாட விரும்பியது

திருவண்ணாமலையில் இறையருள் பெற்று பல அற்புத சந்தப் பாக்களை பாடிய அருணகிரியார், ஞால நின் புகழே மிக வேண்டும் என்னும் நோக்கத்தில் முருகன் திருப்புகழைப் பரப்ப விரும்பி சமயக் குரவர்களைப் போலத் தாமும் தல யாத்திரை செய்து முருகன் பெருமையைப் பாடி மகிழ்ந்தனர். சுமார் 200 முருகன் எழுந்தருளியிருக்கும் தலங்களுக்குச் சென்று பாடினர். இதனையே,

பதிபாடுங்-குறித்த நற்றிருப்புகழ்ப் பிரபுத்துவக்
கவித்துவக்
குருத்துவத் தெனைப் பணித் தருள்வானே
(திருப். 958

என மகிழ்ந்து கூறினார். இதனால் இவரே திருப்புகழ்ச் சந்தப்பாவுக்கு வழி காட்டியாய், ஆதிகர்த்தாவாய் குருமூர்த்தி யாய் விளங்கினர் என்பதுமாம்.

2. ஆணவம் அகல

அருணகிரியார் சிறந்த கவிபாடும் வல்லமையடைந்தும் அவர்காலத்து வாழ்ந்த புலவர்களது ஆடம்பரங்களைக் கண்டோ, அவர்களது ஆணவத்தைக் கண்டோ மிக அஞ்சி அத்தகைய ஆணவ அழுக்குத் தம்மைப் பற்றாதிருக்க வேண்டும் எனத் திருச்செந்தூர் முருகனிடம் வேண்டுகின்றார்.

சங்க பாடல் திருவளுவதேவர் வாய்மை என்கிற
பழமொழியை ஓதியே உணர்ந்துபல் சந்தமாலை
மடல் பரணி கோவையார் கலம்பகம்
முதலுளது கோடி கோள் ப்ரபந்தமும்
வகை வகையினால் ஆசுசேர் பெருங்கவி — சண்டவாயு

மதுரகவி ராஜனா னென் வெண்குடை
விருது கோடி தாள மேள தண்டிகை
வரிசையோடு உலாவுமால் அகந்தை - தவிர்த்திடாதோ
செந்திலில்—உரிய அடியேனையாள வந்தருள் தம்பிரானே
(திருப். 80)

3. மறவாமை வேண்டல்

சோமீச்சரம் எனுந் தலத்தில் — முருகா நான் எந்த நிலையில் இருந்தாலும் உனது இளமை, அழகு, பன்னிருதோள், திருவடி இவைதமை ஓதும் ஞானம் மாத்திரம் நழுவாதிருக்க வரந்தந்தருளுக என வேண்டினர்.

இரவினிடை துயிலுகிலும் யாரொடு பேசினும்
இளமையும் உன் அழகுபுனை ஈராறு தோள்நிரையும்
இருபதமும் அறுமுகமும் யானோத ஞானமதை
அருள்வாயே (874)

4. தமிழால் வழிபட வேண்டல்

திருவிடைமருதூர் முருகனிடம் குருநாதனே! நான் உன் மீது மதுரகவி பாடவேண்டும், பேரின்பம் தரும் அறிவைப் பெறவேண்டும். அரிய தமிழோசை ததும்பும் ஒளி வசனம் என் வாக்கினின்றும் வருகின்ற வழிபாட்டில் நான் பயிலுதல் வேண்டும் இங்ஙனம் அருள்வீர் எனப் பொருள்படும்படி,

மதுரகவி யடைவு பாடி வீடறிவு
முதிர அரிய தமி ழோசை யாக ஒளி
வசன முடைய வழிபாடு சேரும் அருள் தந்திடாதோ
(863)

எனப் பாடிப் பணிந்தார்.

5, ஆண்டில் ஒரு நாளாவது முறைப்படி வழிபட வேண்டல்

அவசியமுன் வேண்டிப் பலகாலும்
அறிவினுணர்ந் தாண்டுக் கொருநாளில்
தவசெபமுந் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும் பூண்டற் கருள்வாயே ... (946)

6. இறையை அன்பொடு நினைக்க

உனது பொற்சரணம் எப்பொழுதும்
நட்பொடு நினைந்திட அருள் தருவாயே (672)

7. அடியார் கூட்டத்தில் சேர

நின்னை உணர்ந்து உருகிப் பத்மக் கழல்
சேர்வார்தம்
குழாத்தினில் என்னையும் அன்பொடு
வைக்கச் சற்று கருதாதோ (492)

8. அடியார்க்குத் தொண்டு செய்ய

உனக்கடிமை படுமவர் தொண்டு புரிவேனோ (245)

9. வாழ்நாள் பயன்பட

உன்புகழே பாடி நானினி அன்புடன் ஆசார
பூசை செய்து
உய்ந்திட வீணாள் படாதருள் புரிவாயே... (66)

10. நோய் வருத்தாதிருக்க

நோய்கள் பிறவிகள்தோறும் எனை
நலியாதபடி உனதாள்கள் அருள்வாயே (260)

11. எமபயம் நீங்க

அந்தகனும் எனையடர்ந்து வருகையினில்
அஞ்சல் எனவலிய மயில்மேல்நீ - அந்த மறலியொடு
உகந்த மனிதன் நமதன்பன் எனமொழிய வருவாயே
(70)

12. மோகம் அற

மோகாந்த காரந் தீர்க்க வேதாந்த தீபங்காட்டி
அருள்வாயே (1257)

13. யான் எனது அற

யானெனதற் றிடுபோதம் யான்அறிதற்கு அருள்வாயே
(1291)

14. இறுதிக் காலத்தில் இறைநினைவு வர

காலன்... எனதாவி தனையே குறுகி வருபோது
ஆதிமுரு காதிமுரு காதிமுரு காஎனவும்
ஆதிமுரு காநினைவு தருவாயே (1242)

15. பிறவியற "இனிப் பிறவாது நீயருள் புரிவாயே" (1204)

16. 'ஒருவரை' என்னும் அருமைப் பாடலில்,

சகலதுக் கமுமறச் சகல சற்குணம்வரத்
தரணியில் புகழ்பெற, தகைமை பெற் றுனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைந்திட அருள்
தருவாயே

எனும் அருமையான வேண்டுகோளை அமைத்தார்.

இவ்வாறாக ஒவ்வொரு தலத்திற்கும் சென்று முருகன் பெருமைகளைக் கூறிப்பாடி மகிழ்வதோடு இறைவனிடம் தம் பிறவிப் பயனடைய அருள் செய்யுமாறு வேண்டுவதும் அருணகிரியாரின் நோக்கமாய் அமைந்தது என்பதை மேற்கூறிய சான்றுகளினின்றும் அறியலாம்.

II உபதேச நோக்கம்

அருணகிரிநாதர் தமது பாடல்களில் எங்ஙனம் முருகனின் பெருமையைக் கூறித் தமது வேண்டுகோள்களையும் விடுத்தனரோ அங்ஙனமே உலக மக்களையும் மறவாமல் சில எளிய அறிவுரைகளை இடையிடையே புகுத்திப் பாடுவதையும் தமது நோக்கமாய்க் கொண்டிருத்தல் வேண்டும், அவ்வாறு அவர் மக்கட் சமுதாயத்திற்குக் கூறிச் சென்ற அறிவுரைகளுள்

1. காலையில் எழுந்ததும் இறைவன் திருநாமத்தைக்கூற வேண்டும் என்பதை,

காலையில் எழுந்துன் நாமமே மொழிந்து
காதலுமை மைந்த எனவோதி (871)

2. ஈதற் சிறப்பினைக் கூறல்: திருப்புகழில் பல பாடல் களில் ஈதலின் சிறப்பினைக் கூறிச் சிறிதேனும் ஈதலை மேற் கொள்ளுங்கள் என வலியுறுத்துகிறார். உண்மையான பசி யோடு வருகின்றவர்களுக்கு ஒருபிடி அளவேனும் உணவு இடுங்கள் என ''மெய்ப்பசியில் வருமவர்க்கு அசனம் ஒரு பிடி படை'' எனவும்; எம்முடைய பொருள் என்னும் பற்று இல்லாமல் ஒருகுண்டுமணியின் பிளவளவு, தினையளவு கூடப் பங்கிட்டு உண்பதற்குச் சோர்வுபட்ட பெரும்பழி நீங்க, இன்றைக்கு ஆகட்டும் நாளைக்காகட்டும் என எண்ணாமல் உடனே இடுவாயாக எனும் பொருளில்,

எமதுபொருள் எனுமருளை இன்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையுமுது வசைதவிர இன்றைக் கன்றைக் கெனநாடாது
இடுக... (17)

என்றும் கூறினர்.

3, பொருள் செருக்கால் எளியோரை வாட்டுவதைக் கடவுள் தண்டிப்பர் எனல் :

(அபகடம்) வஞ்சகப் பேச்சைப் பேசி, (அத்தம்) பொருட் செல்வம் நிரம்ப உடையராய் உலகிலே எளியோரைப் பயமுறுத்தி மயக்கி பூமியில் பிழைக்க எண்ணுகிற மூடர்களின் மனதைக் கலக்கியும், துணித்தும் நெருக்கும் என,

அபகடமு ரைத்தத்த மெத்தப்ப டைத்துலகில்
எளியரைம ருட்டிச் செகத்திற்பி ழைக்கவெணும்
அசடர்தம் மனத்தைக் கலக்கித் துணித்து அடரும்
அதிசூரா (879)

என்கிறார்.

4. தவிர்க்க வேண்டிய தீயகுணங்கள்

கோடைநகர் திருப்புகழில் இன்னின்ன தீய குணங்கள் உள்ளோர் நரகக்குழியில் விழுவார்கள் என்று கூறுவதன் மூலம் உலகத்தவரே இத்தகைய தீய குணங்களைக் கொள்ளாதீர்கள் என அருணகிரியார் கூறியுள்ளார். அவர் குறிப்பிடும் தீய குணங்கள்: 1. நண்பருக்கு வஞ்சனை செய்தல், 2. போதித்த

நன்னெறியை மறத்தல், 3. வேண்டிய விரதங்களை விலக்குதல் 4. பெயரியோரை நிந்தித்தல், 5. ஒருவர் ஈதலைப் பார்த்துத் தடை செய்தல், 6. பொய் சொல்லல், 7. எப் பொழுதும் அழிதலின்றி தாமே வாழ நினைந்து அதற்காக வருந்துதல், 8. நீதியும் தருமமும் கைவிடல், 9. குற்றமும் ஆணவமும் மிகுதல், 10. உலக மாயையின் வலைப்படுதல், 11. கடவுள் சொத்தை அபகரித்தல் ஆகியவை நரகக் குழியில் யில் சேர்க்கும்.

தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள்க டிந்த குண்டர்கள் பெரியோரைத்
தூஷண நிந்தைப கர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளற வெண்பதோ ழிந்த குண்டர்கள் தொலையாமல்
வாழநி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானவ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே (711)

5. மக்களுக்குப் பொருட் பெண்டிரை நாடுவதால் வரும் துன்பங்களைக் கூறி நெறிப்படுத்தல்

பெண்ணாசையே நீக்கரிய ஆசை ஆதலின் அதை ஒழித் தாலின்றி நாம் கரையேறுவது முடியாத காரியமாதலின் அதை நாம் ஒழித்துக் கரையேற வேண்டும் எனும் பெருங்கருணை காரணமாகவே அருணகிரியார் வேசையர் இன்பத்தின் தீமை களை மிக விரிவாகவும் அழுத்தமாகவும் பல பாடல்களில் விளக்கிக் கூறுகிறார்.

சுவாமிமலை—திருப்புகழில் — 'அரிதில் தேடிய பொருளை நல்வழியில் செலவு செய்யாமல், பொருட் பெண்டிற்கு அளவின்றித் தந்து, அவர்கள் விரும்பிய ஆபரணங்களை எல்லாம் அணிவித்தற்குப் பதிலாக அவர்கள் இவர்களுக்கு அண்டவாதம், பட்சவாதம் முதலிய வாதநோய்களையும், சூலைநோய், கண்டமாலை, குலையெரிச்சல், சந்துமாவலி வியாதி, குன்மம், சுவாசகாசம், வாயுநோய், படை நோய்கள்,

பீனசம், பின்னுமுள நோய்களும் விலைமாதர் தரும் ஆபரணங்களாகும். இந்த நோய்களுடன் பாவமிகுதியால் வரும் தொழுநோய் தொடர்ந்து புண்களுற்றுப் பாயும் படுக்கையுமாகி இடைவிடாமல் கிடந்து வலி குன்றி இருந்து, பாவமாகிய கள்ளைக் குடித்து அறிவு மயங்கி ஈனமிகுந்த பொருட் பெண்டிர் வசமாகி பெருமையிழந்து உலகினர் மூடன் என்று இகழும் வகையில் வாழவேண்டாம்[13] எனக் கூறுகின்றார். பொது மகளிர் சேர்க்கையால் உடம்பு குலைந்தோர் உள்ளமும் குலைவர் என்பதையும் கூறுகிறார். உலகோர் இம்மாயை வலைப்பட்டு அழிகிறார்களே. இறைவன் திருவடிகளைத் தியானித்துப் பிறவிக்கடலைக் கடக்கக் கூடாதா? அசத்தான உரைகளை மறந்து சத்தான உன்னை உணர்ந்து உருகி உன்னைப் பாடினால் இழிவாகுமோ என வருந்திக் கூறுகிறார்.

கலவியின்பம் விற்பார்கள் அவயவங்களைப் பாடு... சிலர்
உளநெகிழ்ந்து,
அசத்தான உரை மறந்து சத்தான உனையுணர்ந்து,
அபயம் என்றுஉனைப்பாடி, உருகி நெஞ்சு சற்றோதில்
இழிவாமோ (1230)

III. நன்றியறிதல் நோக்கம்

அருணகிரியார் நன்றியறிவு மிக்குடையவர். இறையருளால் நாம் வேண்டியவை கிடைக்கப் பெற்றமை குறித்து நினைந்துருகி நன்றிகூறும் வகையில் அவர் பாடிய பாடல்கள் சில உள. சான்றாக ஒன்று :

முருகன் அருள்பெற்ற அருணகிரியார். தலங்கள்தோறுஞ் சென்று அவனது பெருமையைப் பாடிப்பரவ அருள் தருவாய் என வேண்டினர். அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று. அவர் அருளிய திருப்புகழ்ப் பாக்கள் மக்களால் போற்றப்பட்டது. நாற்றிசையிலும் உள்ளவர்கள் இவரிடத்தும் இவர் அருளிய திருப்புகழ்ப் பாக்களிலும் பெருமதிப்பு வைத்தனர். அத்தகு சிறப்பினை அளித்த நினை நின் கருணையை மறவேன் என,

பூர்வ — பச்சிம தட்சிண உத்தர திக்குள
பக்தர்கள் அற்புதம் எனவோதும்
சித்ரக வித்துவ சத்தமிகுத்த திருப்புகழைச்
சிறிது அடியேனும்

செப்பென வைத்துலகில் பரவத் தெரிசித்த
அநுக்ரக...மறவேனே (384)

என்றார்.

திருப்புகழில் பயன்

பயன்

வாக்கினால் உண்டாகின்ற குற்றங்கள் நால்வகை என்போம். அவை இன்னா கூறுதல், பொய் பேசுதல், புறங்கூறுதல், பயனில சொல்லுதல் என்பன. இந்த நான்கு குற்றங்களையும் நீக்கி நாம் பேசவேண்டும். மனிதன் மற்ற உயிரினங்களுக்குக் கிடைக்காத வாக்கைப் பெற்றிருக்கிறான். உள்ளத்தில் நினைத்ததைச் சொல்லிலே சொல்லும் ஆற்றல்பெற்றிருக்கிறான். அருமையாகக் கிடைத்த ஆற்றலை நல்லபயனுள்ள காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். நாம் தினமும் பேசுகின்ற பேச்சே இப்படி இருக்க வேண்டும் என்பது ஆன்றோரின் எண்ணம். பலகாலத்திற்கும் நின்று நிலைக்கின்ற சொற்களைப் பேசிய பெரியவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பேசியவற்றை நாம் நல்லுபதேசங்களாகவும், நல்லுரைகளாகவும் கொள்கிறோம். பெரியவர்கள் பாடிய பாடல்களைத் திருவாக்கு என்கிறோம். இத்தகையவை பலகாலம் நிற்கும் தன்மை உடையனவாகவும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்குக் காலம் கடந்து, இடம்கடந்து பயன் தருவனவாகவும் அமையக்கூடும். அந்தப் பயன் இன்னது என்று அநுபவித்தவர்கள் தாம் உணர்வார்கள. ஆனாலும் இதனால் இன்ன பயன் என்று தெரிந்து கொள்வதற்குச் சில குறிப்புகளை ஆசிரியர்களே கூறுவதும் உண்டு. பொதுவாக நூற்பயன் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பெறுதல் என்று சொல்வர். ஆனாலும் அந்தப் பயனுக்கு வகையான சிலபயன்கள் உள்ளன. இசைநூல் கற்றவனுக்கு இசையறிவு பெறுவதுபயன். மருத்துவம் படித்தவனுக்கு மருத்துவ அறிவு பயன். இவைபோல இறைவனைப் பற்றிய அருள் நூல்களைப் படிக்கின்றவர்களுக்குப் பக்தி உண்டாதல் பயன். இவ்வாறு அந்தந்த நூல்களுக்கு ஏற்ற பயன் உண்டு. தேவாரப்பதிகங்களில் இன்ன பதிகத்தைப் பாடினால் இன்னபயன் உண்டாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. எல்லா நூல்களிலும் இதைப் போல் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் அது குறிப்பாகப் பெறப்படும்.

நற்பயன்

'அறம் பொருள் இன்பம் வீட்டைதல் நூற்பயனே' எனப் படும். இந்த நான்கினில் வீடு உயிர் அடையும் இன்பம். இந்தப்

பிறவியிலேயே வீட்டின்பம் பெறமுடியுமா? என நினைப்போம் இந்த உடல் இருக்கும் பொழுதே, இந்த வாழ்விலேயே நாம் பெற வேண்டிய முழு இன்பத்தையும் அடையலாம் என்பதை இந்நாட்டிலுள்ள ஆன்றோர் வலியுறுத்தியுள்ளனர். இந்த உலகத்தில் வாழும் பொழுது முக்தி இன்பத்தை நுகர்கிறவர்கள் சீவன் முக்தர்கள் எனப்பட்டனர். சங்க காலத்திலேயே இப்படி ஒரு வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை மக்களுக்கு இருந்தது என்பது,

தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான

(பொருநராற்றுப் படை 91-92).

எனவரும் அடிகளால் உணராம். அதாவது தவம் செய்கின்ற பெரியார் தம்முடைய உடலை விட்டு விட்டு இறப்பதற்கு முன்னாலே தவத்தின் பயனாகிய சீவன் முத்த நிலையை அடைந்தது போல என்பதாகும். இதன் மூலம் இந்த உடம்பு இருக்கும் பொழுதே இறையருள் இன்பத்தைப் பெறலாம் என்ற உண்மை பழங்காலத்திலிருந்தே மக்கள் உணர்ந்திருந்தனர் என்பதை அறியலாம். அவ்வாறு அடைந்தவர்கள் தம்முடைய அனுபவத்தைக் கூறியுள்ளனர். அப்படி அடைந்தவர்களில் ஒருவர் அருணகிரிநாதர். அவரின் உபதேச மொழிகள் நாற்பொருளையும் நன்கு விளக்குவன்.

முதலாவது அறம்

ஈதல் அறம் என உலகத்தார்க்கு வலியுறுத்திச் சொல்வதே அருணகிரியாரின் நோக்கம். ஈதலின் இன்றியமையாமையைப் பல பாடல்களில் கூறி இதுவே வினைதொலையும் வழியும் ஆகும் என்றார்.

பொருள்

உண்மைப் பொருள் எது? எப்பொருளை நாம் அடைந்தால், மூன்றாவதாகிய இன்பங் கிடைக்கும் என்பதையுங் கூறியுள்ளார். 'அறிவை அறிவது பொருள்' (509) அவ்வறிவே இறைவன் திருமேனி என்பதும் விளங்க, 'அறநூலும் அகலிய புராணமும்... கடந்த அறிவு திருமேனி என்றுணர்ந்து உன் அருண சரணார விந்தம் அடைவேனோ! (1019) எனத் தெளிவுபடக் கூறினர்.

கலைகொடு கருத அரியதை விழிபுனல்வர மொழிகுழறா
அன்பு உருகி உனது அருள் பரவுகைவரில், விரகொழியில்
உலகியல் பிணைவிடில், உரை, செயல், உணர்வுகெடில்
உயிர்புணர் இருவினை அளறது போக உதறில்
எனது எனும் மலமறில், அறிவினில் எளிதுபெறல்
என மறை பறை அறைவதோர் உதய மரணமில் பொருள்!

எனத் திருப்புகழில் (511) விளக்கியுள்ளார்.

இவ்வாறு அருமையாகக் கிடைத்த பொருளே மூன்றாவ தாகிய நித்திய இன்பத்துக்குக் காரணமாகும். இந்த இன்பத்தை,

அபரிமித சுருதியும் அடக்குத் தனிப் பொருளை
எப்பொருகும்
ஆய அறிவை அறிபவர் அறியும் இன்பம் (1127)

என்றனர். இந்த இன்பந்தான் உண்மை இன்பம்.

இந்தப் பரமானந்த வெள்ளமாகிய இன்பம் கிடைக்கப் பெறின் நான்காவதான வீடு, மெய்வீடு கூடும் என்றனர். இப்பரம ஞானவீடு,

அஞ்சுவித பூதமும், கரண நாலும், அந்தி பகல் யாது
மறியாத அந்தம்
நடு ஆதி ஒன்றும் இலதான அந்த ஒரு வீடு (758)

என்றார்.

இவ்வுலக மாயையுட்பட்டு வருந்தும் ஆன்மாக்கள் நன்னெறியைக் கடைப்பிடித்து ஈடேற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் உலகத்துள்ளீர்! ஈதல் எனும் அறத்தைக் கரவாது செய்யுங்கள். அப்பொழுது உண்மைப் பொருள் தானே விளங்கும். அப்பொருள் விளக்கமுற அதனின்றும் உண்மை இன்பம் புலப்படும். அவ்வின்பம் பெருகப் பெருக இருவினை, மும்மலம் ஆகியவை ஒடுங்கி மெய்வீடு கிடைக்கும் என அருணகிரியார் திருப்புகழில் விளக்கிக் காட்டியுள்ளனர்.

பிற பயன்கள்

1. *திருப்புகழை நியமமுடன் ஓதுவார்க்கு அட்டமாசித்திகளும் உண்டாகும்.*

''அனுதினமுன் திருப்புகழைக் கற்பார்க்குச் சித்தி
யெட்டும் எளிதாமே''

2. திருப்புகழை விருப்பமுடன் படிப்பவர்க்குத் துன்பம் நீங்கும்.

''இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை யறுத்திடும்''

திருப்புகழ்ப் பாடல்களைக் கூறி விரி உரை செய்பவர்களுக்கும், படிப்பவர்களுக்கும் வறுமையும் பகையும் நீங்கும்,

''திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்
பகை செயித்தருளும்'' (63)

3. கணக்கிலாப் பிறப்பெடுக்கும் தொல்லையைக் கூறி, ஒருமுறை முருகா என்ற போதிலும் உயர்கதி வரும் எனும் உண்மையை,

''முருகா எனவோர் தரமோ தடியார் முடிமேல்
இணைதாள் அருள்வோனே'' (1132)

என்றார்.

4. வேதாகமங்களிலுள்ள அரிய நுண்மாண் பொருள்களும், திருக்குறள், தேவாரம், திருமந்திரம் போன்றவற்றின் நூற்கருத்துகளுக்கும், புராணங்களிலுள்ள அறநெறிகளும் திருப்புகழில் ஒருசேரக் குவிந்திருக்கின்றன. அதனால் திருப்புகழைப் கற்பார்க்கு வேதம் முதலிய எல்லா நூல்களையும் கற்ற பயன் உண்டாகும்

5. சத்துவ குணம் அடைய வழி ; மனிதனுக்குக் குணங்கள் மூன்று ; முக்குணங்களும் உணவினாலேயே அமைகின்றன. அவல், பொரி, அப்பம், பால், பழம், தேன் முதலிய உணவுகள் சத்துவ குணத்தை வளர்க்கும். சாந்தம், அன்பு, அடக்கம், பொறுமை, கருணை முதலியன சத்துவ குணத்தால் வருவன, சத்துவ குணத்தால் தூய அறிவு தோன்றும். அறிவின் சொரூபம் விநாயகர். அவருக்குச் சத்துவ

குணப் பொருட்களை நிவேதிப்பதால் சாந்தமும் நல்லறிவும் நமக்கு உண்டாகும்[14].

6. நம்பிக்கையின் அடிப்படையில் நோய் நீங்க :

(அ) திருத்தணிகைக்குரிய 'இருமலுரோக' (260) எனத் தொடங்கும் திருப்புகழ்ப் பாடல் எவ்வித நோயும் நம்மை வருத்தாதிருக்கவும், வினைப் பயனால் நோய் வந்தாலும் அந்நோயின் கொடுமையைத் தணிப்பதற்கும் சிறந்த மந்திரத் திருப்புகழாம்[15].

(ஆ) நினைத்த காரியம் அநுலமாகி, வெற்றிபெற வேண்டுமென்று விரும்பினால் 'நினைத்தவர் - முடிக்கும்' (263) என்று தொடங்கும் பாடல் திருப்புகழின் பேராற்றலை விளக்குவதாகும். இப்பாடலைப் பாராயணஞ் செய்து பயன் பெறலாம்.

(இ) வசனமிகு வேற்றி (191) என்ற பாடல் சுகவாழ்வு பெறவும் பயன்படும்.

(ஈ) நீலங்கொள் (1295) என்ற பாடல் திருமணம் நடைபெற பயன்படும்.

7. இசைத்துறைக்கு : திருப்புகழில் 1000-க்கும் மேற்பட்ட சந்தங்கள் அருணகிரியாரால் கையாளப்பட்டன. திருப்புகழ் முழுதுமே தமிழிலக்கியச் சுவையும், சந்த இலக்கண அழகும், தாளக்கட்டுகளின் ஓசையும், இசை இன்பம் அனுபவித்தற்குரிய ஒலிக்குறிப்புகளும், பல்வகை வாத்தியங்களின் முழங்கொலிகளை வழங்குகின்ற தன்மையும் யாவும் ஒருசேர அமையப் பெற்றிருக்கிற ஒரு தனித்தெய்வக் கருவூலம் எனலாம். சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் வழங்கி வந்த ராகங்களும் தாளங்களும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. ''தாளங்களைப் பொறுத்தவரையில் அறியப்பட்டவையும் அறியப்படாதவையுமான எண்ணற்ற தாளங்களுக்குக் கருவூலமாக விளங்குவது திருப்புகழ் ஒன்றே ஆகும்[16].'' இசைத்துறையினர் இதில் ஆர்வங் கொண்டால் மேலும் பல இராக தாளங்கள் அறிய வாய்ப்பிருக்கும்.

8. திருப்புகழ் காலத்தில் இருந்த பழக்கவழக்கங்களை அறிவதற்கும், முருகன் தலங்களின் சிறப்புக்களை அறிவதற்கும், பல்வேறு நோய்கள் பற்றி குறிப்பு களையும் (49, 260, 626, 628) அறிவதற்கும் துணைசெய்வன, பொதுவாக,

> **"அருணகிரி நாதர் பதினாறா யிரமென்**
> **றுரைசெய் திருப்புகழை ஓதீர் - பரகதிக்கு**
> **ஏணி; அருட்கடலுக் கேற்றம்; மனத்தளர்ச்சிக்**
> **காணி; பிறவிக் கரம்"**[17]

கந்தரந்தாதி

அருணகிரிநாதரால் பாடப்பெற்ற இந்நூல் 100 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது. இந்நூல் சிறந்த ஒரு தமிழ்ப் புலவருடன் வாதிட்டுப் பாட வேண்டிய காரணத்தாலும், நூல் யமக அந்தாதி ஆதலாலும் நூலின் பொருள் எளிதில் விளங்காது. அதனால், 'கந்தர் அந்தாதியைப் பாராதே; கழுக்குன்றத்து மாலையை நினையாதே' என்னும் பழமொழி வழங்கலாயிற்று.

இது பல நல்லுபதேசங்களைக் கொண்டுள்ள நூலாகும். ஆறு திருப்பதிகளைப் புகழுங்கள், திருச்செந்தூர்த் தியானமே போதும் என நற்கதிக்குச் சுலபமான வழியைக் காட்டியும்; முருகனை நினைக்கக் கோள்களால் வரும் தடுமாற்றம் வராது எனப் புலப்படுத்தியும், முருகன் திருவருள் கூடுவதால் பொறுமை பிறக்கும், பொறுமையால் வெகுளி முதலிய தீயகுணங்கள் இறக்கும் என்னும் உண்மையைத் தெரிவித்தும்; தேவசேனையைத் தியானிப்பதால் வறுமை ஒழியும்' வேலைத் தியானிப்பதால் கூற்று அகலும் பிறவி வராது; சேவல் அஞ்சல் என ஆண்டருளும் என்றும்; தும்மும்போது குமர சரணம் எனச் சொல்லுங்கள் உய்வீர்கள் ('தும்மிக் குமர சரணம் என்னீர் — உய்வீர் (97), என்னும் இந்நூலில் சில எளிமையான வழிகளை நமக்குக் கூறி அதன் மூலம் இன்ன பயன்பெறுவீர் என்றும் கூறியுள்ளார்.

கந்தர் அனுபூதி

இந்நூல் 51 கலிவிருத்தப் பாக்களால் ஆனது, எளிய இனிய தமிழ் நடையில் அமைந்தது. தமது குறைகளை

எடுத்துக் கூறியும், தாம் பெற்ற பேற்றினை எடுத்து ஓதியும், தாம் அடைந்த மௌன நிலையின் பெருஞ் சிறப்பை எடுத்துக் கூறியும் தான் பெற்ற இன்பத்தை நீங்களும் வழிபட்டால் பெற்று உய்யலாம் என்று உபதேசித்தும் அருணகிரியார் உலகை உய்விக்கும் நூல் கந்தரனுபதி. படிப்பதற்கு எளிதாய்த் தோன்றினும் இவ்வநுபூதி நூலின் பொருட் சிறப்பு மிகப் பெரிதாம். அச்சிறப்பை உணர்ந்த தாயுமான சுவாமிகள்,

''கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தையருள் நாடி யிருக்குநாள் எந்நாளோ!''

என வியந்து போற்றினர். இந்நூலில் மந்திர வாசகங்கள் விரவி வருவதால் இதை ஒரு மந்திர நூல் என்றும் இதைத் தினமும் பாடிக் கொண்டே வந்தால் கந்தனநுபவம் தானே கைவரும் என்பது ஆன்றோர்களின் அசையாத நம்பிக்கை.

மயில் விருத்தம்

இந்நூல் பத்து ஆசிரிய விருத்தப் பாக்களால் ஆனது. இதில் நூற்பயன் கூறும் பாடலும் அமைந்துள்ளது. மயில் முருகனின் ஊர்தியாய் மட்டும் இல்லாமல், ஆணவத்தை ஆண்டவன் அடக்கி ஆள்கிறான் என்ற தத்துவத்தை உணர்த்தும் நோக்கில் அருணகிரிநாதரால் பாடப்பட்டது.

இம்மயில் விருத்தத்தைப் படிப்பவர்கள் எல்லாவிதப் பேறுகளையும், அழியா இன்பத்தையும் பெறுவர்.

''அமுதா சனம்பெ றுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம்பெ றுவரே'' (பா, 11)

சேவல் விருத்தம்

இதில் 11 பாடல்கள் உள்ளன. இந்நூலில் முருகவேளின் சேவற் கொடியானது சரீர அமைப்பினாலும், சிறகுகளின் அசைவின் ஆற்றலினாலும், அலகின் திறத்தாலும், குரல் ஒலியாலும், செய்கின்ற செயல்கள் சிலவற்றைத் திறம்பட அருணகிரியார் விவரித்துள்ளார். அதோடுமட்டுமல்லாமல் பேய், பில்லி, சூன்யம், பிசாசு முதலானவற்றை விரட்டி ஓட்டும் ஆற்றல் உடையது சேவல் என்றும், உடல் நோய்

களோடு உள்ள நோய்களையும் தீர்க்கவல்லது சேவல் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

சான்று :

''கலகமிடும் அலகைகுறள் மிகுபணிகள் வலிமையொடு
கடினமுற வரில் அவைகளைக்
கண்ணைப் பிடிங்கியுடல் தன்னைப்பிளந்துசிற
கைக்கொட்டி நின்றா டுமாம்'' (பா. 1)

என்றும்,

''எரியனைய வியன்நவிரம் உளகழது பலபிரம
ராட்சதர்கள் மிண்டுகள் செயும்
ஏவற் பசாசுநனி பேயிற் பசாசுகொலை
ஈனப் பசாசு களையும்
கரிமுருடு பெரியமலை பணையெனவும் முனையின் உயர்
ககனமுற நிமிரும் வெங்கட்
கடிகளையும் மடமடென மறுகி அலறிட உகிர்க்
கரத்தடர்த் துக் கொத்துமாம்
திமிரதின கரமுருக சரவண பவன்குகன்
சேவற் திருத்து வசமே'' (பா, 2)

இவ்வாறு ஒவ்வொரு பாடலிலும் முருகனது சேவற்கொடி எத்தகைய பேய் பிசாசுகளையும் வெருட்டி ஓட்டிவிடும் என்ற கருத்தமைந்துள்ளது. ஆதலின் பூத பிசாசுகளை ஓட்டி விலக்க இப்பாடலைத் தியானம் செய்தல் பயன்தரும் எனபது தெளிவு.

கந்தர் அலங்காரம்

மிக இனிமையான நூல். 108 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது. இந்நூலில் அருணை முநிவர் தாம் பெற்ற பேற்றைக் கூறித் தமது ஆனந்தத்தைத் தெரிவிக்கும் பாடல்களின் இடையே தமது குறைகளைக் கூறி அருள் வேண்டுகின்றார். உலகோர்க்கும் எழுத்துப் பிழையற அன்புடன் முருகன் துதிப்பாக்களைக் கற்பீர்களாக. மனத்தை ஒருநிலைப் படுத்துங்கள், வெகுளியை விடுங்கள். தானஞ் செய்யுங்கள்;

ஆணவம் தவிர்ப்பீர், முருகனை மறவாது போற்றுங்கள் என உபதேசிக்கின்றார்.

கந்தரலங்காரம் நூற்றெட்டு என எண் அமைப்பிலே அமைந்திருப்பதினாலேயே இந்நூற் பாராயணம் முருகக் கடவுளின் 108 நாமங்களை ஜபம் செய்த பயன் எளிதில் தரும் என்பது கூலாமலே விளங்கும். பொதுவாக இந்நூலைப் படிப்பதால் நமக்கு உண்டாகும் பயன் முருகப் பெருமானிடத்தில் பக்தி உண்டாகி, உள்ளம் சோர்வு நீங்கி உறுதிப்பாடு பெறல், தமிழ் இன்பம் நுகர்தல் முதலியன என்று சொல்லலாம். ஆனால் இவற்றிற்கும் மேலே அருணகிரியார் வேறு சில பயன்களைக் கூறுகிறார். அதிலும் இந்நூல் முழுமையும் படிக்க வேண்டுமென்பதில்லை. ஒரு பாடலை உளம் ஒன்றிப் படித்தாலே இன்ன இன்ன பயன் உண்டாகும் என்றும் அவரே ஒரு பாடலில் கூறுகிறார். கந்தரலங்காரம் பாடியதன் உண்மையான பயன்படிக்கின்ற நமக்குக் கிடைக்கும் நன்மைதான் மக்கள் இறைவனைத் தெரிந்துகொள்வதற்கும், அவன் அருள் பெறுவதற்கும் ஏற்ற வகையில் இறைவனுடைய பெருமையை உணர்த்தி, மக்களுடைய குறைகளையும் எடுத்துச் சொல்லி அவனிடத்தில் எப்படி அணுகி விண்ணப்பம் செய்வது என்பதையும் காட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் பெருங்கருணை வள்ளலாகிய அருணகிரிநாதப் பெருமான் இந்த நூலைப் பாடினர் எனலாம்.

வாழ்க்கையில் துணை

இந்த வாழ்க்கையில் துணையாக நாம் யார் யாரை நம்பிக் கொண்டிருக்கிறோமா அவர்கள் ஒரு வரையறைக்குட்பட்டவர்கள். இங்குள்ள ஒன்றுமே உண்மையில் உயிருக்குத் துணையாக வருவதில்லை. நம்முடன் எப்பொழுதும் உடன் வருபவை இரண்டு. புண்ணியம் பாவம் என்னும் இரண்டுமே நம்முடன் தொடர்ந்து வருவன. இந்த இரு வினைகளும் நாம் செய்யும் செயல்களால் வருகின்றன. செயல்களைச் செய்யும் காரணங்கள் மூன்றும் நம்மிடம் உள்ளனவே அவை மனம்வாக்கு காயம் என்பன இம்மூன்றினாலும் செயல்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்வன எல்லாம் புண்ணிய, பாவத்திற்குக் காரணமாக அமைவன. இவற்றினின்றும் விடுபட நமக்குத் துணையாக இருக்கத் தக்கவன் இறைவன் ஒருவனே. அவன் துணையை நாம் எப்படிப் பெறுவது ?

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு
செய்த

பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமே
(70, கந். அலங்.)

வேலும் மயிலும் நினைந்தவர் தந்துயர்தீர அருள்தரு
கந்த (திருப். 920)

இந்தப் பாடலில் மூன்று காலத்தினுடைய வினைப் பயன்களையும், அந்தப் பயன்களை மாற்றிக் கொள்வதற்கு வழிகளையும் சொல்லியுள்ளார் அருணகிரியார். நிகழ் காலத்தின் தீய விளைவுகளிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு விழிக்கும், மொழிக்கும் துணையாகத் திருவடியையும், முருகா என்னும் நாமங்களையும் சொன்னார். இறந்தகாலத்தின் தீய விளைவுகளுக்கு மாற்றாகப் பன்னிரு தோள்களின் தியானத்தைச் சொன்னார். வருங்காலத்தின் தீங்கை மாற்றுவதற்கு வேலையும் மயிலையும் துணையாகச் சொன்னார், என்றும் வேலும் மயிலும் துணை என்பது பல அடியார்களின் நாவில் மந்திரம் போல் உதவுவது. இறைவன் திருநாமத்தைச் சொல்வதும், அவனுடைய தியானமும் நம்முடைய மூன்றுகாலத் துன்பங்களையும் நீக்கி என்றும் மாறாத இன்பத்தைப் பயக்கும் என்பதை உணரலாம்.

எமபயம் நீங்க

பொதுவாக வாழ்நாளில் எல்லோருமே அஞ்சுவதற்குரிய நிகழ்ச்சி ஒன்று உண்டு. அதுதான் மரணம். இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள் மிகத் திண்மையான நெஞ்சினராய் இருப்பர். அத்தகையவருக்கு மரண பயம்கூடப் போய்விடும். எமன் வருவதற்கு முன்பே அவனை எண்ணிச் சாவதில் பயனில்லை. இறைவன் திருவருள் நம்மைக் காக்கும் என்ற மனவுறுதியோடு எமனை அறைகூவி அழைக்கும் பாடல்களையும் பயின்று வந்தால் நம்மனம் திண்மைபெறும் என்பதில் ஐயமில்லை. அருணகிரியார் நமக்குத் தந்த வரம் இத்தகைய பாடல்களே. சான்றாக,

சூலம் பிடித்துஎம பாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கு ஒருகாலும்அஞ்
சேன், கடல் மீதுஎழுந்த
ஆலம் குடித்த பெருமான்
குமாரன் ஆறுமுகவன்
வேலும் திருக்கை உண்டே
நமக்குஒரு மெய்த்துணையே (கந். அலங். 107)

மரணப்ர மாத நமக்கில்லை யாம்என்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண்டே...

(கந். அலங். 21)

முருகக் கடவுளது வேலையும், மயிலையும், அபயகரத்தையும் தியானம் பண்ணப் பண்ண நம்மனத்திலிருந்து அச்சம் போய் விடும். காலனுக்கும் அஞ்சாத மனத்திண்மை உண்டாகும். இவ்விடத்தில் 'பாவனையினால் நலம் பெறலாம்' என்ற உளவியலறிஞர் ஒருவரின் கூற்றினை நோக்கலாம். 'நான் அறிந்த சிறந்த மருந்து' என்ற தலைப்பில் அந்தக் கட்டுரையை எழுதியுள்ளார். அவர் ஐந்து விதமான மனப்பயிற்சிகளை சொல்கிறார்: ''1. உன்னுள் மறைந்திருக்கும் சக்தியை உண்மையாகக் கருதி நம்பிக்கை வை, 2. அதனிடம் புகலடை வதற்கு விருப்பங்கொள், 3. பிரார்த்தனை செய், 4. அமைதியும் மௌனமும் பயில், 5. நன்மை உண்டாகும் என்று பாவனை செய்'' [18] என்பன. இந்நாளில் உளவியல் அறிஞர்கள் உள்ளத்தின் இயல்புகளை எவ்வளவு நுட்பமாக அறிந்து கூறுகிறார்களோ அதைவிட நுட்பமாக அநுபூதிமான் தெரிந்து கூறியுள்ளனர். நம்முன்னோர் நமக்கு உறுதிப்பாடு உண்டாவதற்காகப் பாடிய பாடல்கள் இத்தகைய பயிற்சியைச் செய்ய உதவுகின்றன.

ஈட்டுதலும், இடுதலும்-பயனும்

இறைவனை நம்பி வாழ்ந்தால் நமக்கு உண்ண உணவாயினும் கிடைக்குமா? என்று நினைப்போம். இறைவன் திருவருளைப் பெறவேண்டுமானால் நம்மை நாமே வருத்திக்கொள்ள வேண்டும் என்பதன்று. மிகவும் சாதாரண நிலையில் இருக்கும் நமக்கு உபதேசம் செய்ய வருகிற அருணகிரியார், 'நன்றாக இருமடங்கு சம்பாதி, சாப்பிட்டுச் சுகமாக வாழ்ந்து கொண்டிரு' என்றுதான் உபதேசம் செய்கிறார். ஆனால் பொருள் ஈட்டுவது உண்பது என்ற இரண்டுக்கும் நடுவில் ஒன்று இருக்க வேண்டும். அதுதான் ஆண்டவனின் நினைப்பு. இதற்குக் காரணம் ஆண்டவனை மறந்தவர்கள் பொருள் ஈட்ட வேண்டும் என்ற பெயரில் வெறியில் தவறான வழியிலும் சென்று பொருள் ஈட்டு வார்கள். ஈட்டியபொருளைக் காக்க வேண்டும் என்ற அச்சத் தினால் எப்போதும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பர். ஆனால் ஆண்டவனுடைய நினைப்பு உடையவர்கள் மறநெறியில்

பொருளை ஈட்டமாட்டார்கள். ஈட்டிய பொருளைப் பாதுகாக்க வேண்டுமே என்று அஞ்சவும் மாட்டார்கள். ஆகவே, நீங்கள் ஒரு பங்குக்கு இரண்டு பங்காக இறைவனை நினைந்து பொருளை ஈட்டுங்கள். இறைவனை நினைந்து உண்ணுங்கள். இந்த இரண்டுக்கும் இடையில் இறைவனை நினைந்து கொடுக்கவும் கொடுங்கள். நன்றாக இறைவனை நினைந்து ஈட்டி, இறைவனை நினைந்து கொடுத்து, இறைவனை நினைந்து சுகமாக வாழுங்கள் என்பது அவரது அறிவுரை.

''பொருபிடி யும்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
வருபிடி காதல சண்முக வாளனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறுகொண்டு இட்டு உண்டு இரும்...''

(கந். அலங். 57)

என்று இறைவன் திருவருளும் அதனால் பேரின்பமும் கிடைப் பதற்குரிய எளிய வழியைச் சொல்லித் தருகிறார் அருணகிரியார்.

எங்காயினும் வரும் பயன்

நாம் செய்யும் செயல் ஒவ்வொன்றும் நமக்குப் பயன் படும்படி செய்ய வேண்டும் என்றுதான் விரும்புவோம். நம்முடைய உடம்பு நிலையானது அன்று என்று நமக்குத் தெரியும். எனவே நம்முடைய கைப்பொருளை யாசிப்பவர் களுக்கு இட்டால் அது நமக்குப் பின்னால் பயன் அளிக்கும் என்று சொல்கிறார் அருணகிரியார்.

பொங்கார வேலையில் வேலைவிட் டோன்அருள்
போலுதவ
எங்கா யினும்வரும் ஏற்பவர்க் கிட்டது...

(கந். அலங். 59)

நீ உன்பால் வந்து இரப்பவர்களுக்கு உன்னுடைய பொருளை இட்டால் அதனால் என்ன பயன் என்று நினைக் காதே. முருகன் திருவருள்போல யாசித்தவர்களுக்குச் செய்த உதவி, பிரதிபலனாக எந்தச் சமயத்திலாவது வந்து உதவி செய்யும் என்கிறார். வேலையில் வேலை விட்டோன் அருள் எங்காயினும் வரும். அப்படியே அறம் செய்தால் அந்த அறப் பயனும் வரும் என்பது அவர் கருத்து.

''மிக்க அறமே வழித்துணை யாவது
தானஞ் செய்யென...வான்பொருள் காட்டி''
(மணிமேகலை 22-140)

இவ்வாறு உலகத்தார் மேற்கொள்ளக்கூடிய எளிய வழிகளையும் அவற்றைக் கடைப்பிடிப்பதால் வரும் பயன்களையும் ஒவ்வொரு பாடலில் கூறிவந்த அருணகிரியார், கந்தர் அலங்காரம் என்ற இந்நூலைப் படிக்கின்றவர்கள் இன்ன பயனைப் பெறுவார்கள் என்று பயன்கூறும் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். அப்பாடலில் அவர் கூறுவன:

குடிமக்களுடைய உள்ளத்தில் இருக்கும் அச்சங்களுள் பெரிய அச்சம் வேந்தருக்கு அஞ்சும் அச்சம். கந்தர் அலங்காரத்தைப் படிப்பவர்கள் 'தமக்குள்ளே கோபித்துப் பொருகின்ற வேந்தர்களுக்கும் மற்றவர்க்கும் அஞ்ச மாட்டார்கள் என்று அப்பாடலைத்தொடங்குகின்றார்.

''சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்''

இறைவனுடைய திருவருளை நம்பி அவனைத் துதித்து வாழ்கின்றவர்கள் உள்ளம் சாந்தி பெற்றிருக்கும். ஆதலின் அவர்களுக்கு இத்தகைய அச்சம் வராது. அடுத்து இம்மையின் முடிவாகிய மரணபயம் இருக்காது என்ற பொருளில்,

''யமன் சண்டைக்கு அஞ்சார்''

என்றார். அடுத்து மறுமையில் உண்டாகும் அச்சத்தைச் சொல்ல வருகையில், மறுமையாகிய சொர்க்கமும் நரகமும் முறையே புண்ணிய பாவத்தினால் கிடைப்பன என்பர். மறுமையில் கிடைப்பது நரகமாயின் அச்சம் உண்டாகும். இந்த உடம்பைவிட்டு நீங்கினால் எந்த நரகத்திற்குப் போவோமோ என்று துன்பம் அலங்காரம் படிப்பவர்க்கு இல்லையாம். இறையருளால் தம்முடைய மனத்தை அமைதி பெறச்செய்து, எண்ணங்களில் நன்மையும், வாக்கில் நேர்மையும், செயலில் தீங்கு இல்லாத் தன்மையும் பெற்றவர்களுக்கு இம்மை கடந்த மறுமையில் துன்பமே இல்லை.

''துலங்கா நரகக்குழி அணுகார்''
என்றார்.

இந்தவாழ்வில் எத்தனையோ துன்பங்கள் வருகின்றன. அவை பிற உயிர்களால் வருந்துன்பம்; உயிரல்லாத பொருள்

களால் வருவது; இயற்கையாக வருவது. இந்தத் துன்பங்கள் அற்ற வாழ்வு நமக்குக் கிடைக்கும். நாம் வாழும்பொழுது நமக்குத் தேவை செல்வம், நோயற்ற வாழ்வு. அருணகிரி நாதர் திருப்புகழில்,

> ''தருண மிதையா மிகுத்த கனமகது நீள்சவுக்கிய
> சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு''

என்று சொல்கிறார். மனிதனுக்கு நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வமாகும். ஆகையினால் நோயினால் வருகின்ற அச்சம் கந்தர் அலங்காரம் படிப்பவர்க்கு வராது என்று 'துட்ட நோய் அணுகார்' என்றார்.

இதையடுத்து, மக்களாலன்றி விலங்கினங்களாலும் கந்தரங்காரம் படிப்பவர்க்குத் துன்பம் இல்லையாம் என,

> ''கலங்கார் புலிக்கும், கரடிக்கும், யானைக்கும்''

என்று கூறுகிறார்.

கந்தர் அலங்காரம் முழுமையும் கற்று, நன்குணர்ந்து, மனதை அடக்கி, இறையருள் பெற்றவர்க்கே இந்தப் பயன் வரும் என்று சொல்லவில்லை. இந்நூற்பாக்களில் ஒன்றை நன்குக் கற்று அறிந்தவருங்கூட இந்தப் பயன் பெறலாம் என்று கூறுகிறார்.

> கந்தன் நன்னூல், அலங்காரம் நூற்றுள் ஒரு கவிதான்
> கற்று அறிந்தவரே''

நன்றாகத் தழைத்து வளர்ந்த பழமரத்தின் பயனாகக் கனி கனிந்து விளங்குவதைப் போல இந்த அருள் நூலின் முடிவின் நம்முடைய அச்சத்தைப் போக்குவதாகிய இப்பயன்தரும் பாடல் அடைந்திருக்கிறது.

நூற்பயன்

> ''சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன்
> சண்டைக்கஞ்சார்
> துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்

கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவி தான்கற்று அறிந்தவரே''

(கந். அலங். 101)

ஒரு கவிக்கே இத்துணை ஆற்றல் உளதாயின் அலங்கார நூறும் வல்லவர்க்குக் கிடைக்கும் இம்மை மறுமைப் பேறுகள் சொல்லும தகையவோ.

திருவகுப்பு

திருப்புகழ் போலச் சந்தாப்பாவால் அமைந்த இந்நூல் முருகக் கடவுளின் சீர்பாதப் பெருமை, அடியார் பெருமை, வேலின் பெருமை, உபதேசப் பெருமை, பிரசாதப் பெருமை, திருப்புகழ்ப் பெருமை, கடைக்கண் நோக்கப் பெருமை, திருக் கரங்களின் சிறப்பு ஆகிய இவைதமை வகுத்து எடுத்து ஓதுவதால் இந்நூலுக்குத் திருவகுப்பு என்றும் பெயர் அமைந்தது. திருப்புகழ், அலங்காரம் பாடும்பொழுது இருந்த நிலையிலும் மேம்பட்ட ஞான நிலையில் இருந்து பாடினது திருவகுப்பு எனலாம். இதனுண்மை திருப்புகழின் முக்கிய கருத்தாக உள்ள பெண்ணாசை அறுதலைப் பற்றியும், எம பயம் நீக்கிக் காத்தருளவேண்டும் எனத் திருப்புகழில் வேண்டின வாறு வேண்டாமையும், வகுப்பில் பெரும்பான்மையை முருகன் பெருமையையே கூறி உலகத்தார்க்கு உபதேசங்களை எடுத்தோதும் உயர்நிலைப் பாடல்களாக அமைந்துள்ள காரணத்தாலும் நன்கு பெறப்படும்.

வகுப்புக்களின் ஆற்றல்

1. சீர்பாத வகுப்பு — இது ஞானத்தை அளித்து, யம பயத்தை நீக்கி, அருள்நெறி யிற் சேர்த்து வினைப்பகையை அழித்தொழிக்கும்.

2. தேவேந்திர சங்க வகுப்பு — இது பூதம், பிசாசு ஆகிய துஷ்டப் பகைகளையும் யமனையும் வெருட்ட வல்லது.

3. வேல் வகுப்பு — எவ்வித ஆபத்தையும் நீக்கி உயிர்துணையாய் நிற்பது.

(இம்மூன்றும் மணி, மந்திர, ஒளஷத வகுப்புகள் எனப்படும்).

4. வேல் வாங்கு வகுப்பு — போர், பூகம்பம், வெள்ளம், தீ போன்ற பெரிய ஆபத்துக் களிலிருந்து காக்க வல்லது.

5. கடைக்கணியல் வகுப்பு — உலகோரை முருகனிடத்தே ஆற்றுப்படுத்தி உய்யும்வழியை எடுத்துரைக்கும் பெருங் கருணை வகுப்பு இந்நூல்.

அருணகிரியார் இந்தக் கடைக் கணியல் வகுப்பில் பெருத்த இப்பூவுலகில் வாழ்பவர்களே! முருகக் கடவுளின் மயிலையும், வேலையும் அவன் கடைக்கண் திருவருள் வழங்கும் தன்மையை யும் நினைத்திருக்க வாருங்கள். அங்ஙனம் நினைந்திருப்பீர்க ளானால் உங்களுக்குக் கிடைக்கும் பேறுகளைக் கூறு கின்றேன் கேளுங்கள்:

1. நீங்கள் ஏழுலகங்களையும் காக்கும் அரசாக எக் காலமும் வாழலாம்

2. குபேரன், இந்திரன் இவர்கள் இருவருக்கும் மேலான நிலையில் அறம் செலுத்தி ஆளலாம்

3. முத்தி, செந்தமிழ் அறிவு இவைதமைப் பெறலாம்

4. எத்தகைய சண்டையிலும் வெற்றி பெறலாம்

5. குபேரனது புட்பக விமானத்திலும், இந்திரன் வெள்ளையானை மீதும் நீங்கள் ஏறலாம்

6. எங்கிருந்தாலும் ஒப்பற்ற தனிஞானி இவன் எனப் பிறர் பாராட்டும்படியான ஞான உணர்ச்சியைப் பெறலாம்

7. யமனை வெற்றி பெறலாம்

8. இவை மட்டும் அல்ல. ஒழிப்பதற்கரிய பிறவியையும் நீங்கள் ஒழிக்கலாம்

''அலைகடல் வளைந் துடுத்து எழுபுவி புரிந்திருக்கும்
அரசென நிரந்தரிக்க வாழலாம்

....

....

இவை ஒழிய வும்ப லிப்ப த்கலவிடும் உங்கள் வித்தை

யினைஇனி விடும் பெருத்த பாருளீர்;

மயிலையும் அவன்திருக்கை அயிலையும் அவன்கடைக்

கண்

இயலையு நினைந்திருக்க வாருமே''

(கடைக்கண்ணியல் வகுப்பு 1-8, 16)

ஆகவே மக்களே நீங்கள் வாருங்கள். மேற்சொன்ன உபதேசப்படி நடப்பீர்களாக, திருவகுப்பு என்ற நூலிலடங்கிய ஒவ்வொரு வகுப்பும் மக்கள் வாழ்விற்குப் பயன்படும் வகையில் அமைந்த மந்திர நூலாகும். முருகனடியார்கள் இல்லங்களில் நம்பிக்கையின் அடிப்படையில் துன்பங்கள் வரும்போது சந்தர்ப் பத்திற்கு ஏற்ற வகையில் இவ்வகுப்பு நூல்கள் பாராயணம் செய்யப் படுவதைக் காணலாம்.

பிறபயன்

திருவகுப்பு மக்கள் வாழ்விற்கு அருமருந்தாய் அமைவ தோடல்லாமல் நாம் அறிந்துகொள்ளக் கூடிய, பயன்தரும் செய்திகள் பலவற்றைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அவற்றுள் ஒரு சில சான்றுகளைக் காண்போம்.

இசை உலகிற்கு:- திருவகுப்பில் ஒரு பகுதி பூத வேதாள வகுப்பு என்பது. அதில் முருகவேள் வேல் ஏந்திச் சூரனுடன் பொருத போர்க்களத்தில் கூடிக்களித்த பல்வேறு பூத வேதாளங்களின் செயல்களைப் பாடியுள்ளார். சில நடனம் புரிந்தன, சில சிதறிக் கிடந்த இரத்தினங்களைக் கொண்டு விளையாடின. திருமணம் நடத்தின சில. இரத்த ஆற்றில் விளையாடின சில என்றெல்லாம் வருணித்து வருகையில் சில பூதவேதாளங்கள் பஞ்சதாள பேதங்களைக் கைத்தாளமிட்டுக் காட்டின சில என்றார். அதை,

கைச்சதியி னாமுறைவி தித்தவாம் உற்கடிதம்

சச்சபுடம் சாசபுடம் சட்பிதா புத்திரிகம்

கண்டச் சம்பதிப் பேதமாம்பல

கஞ்சப் பஞ்சகத் தாள மாம்படி

(பூ.வே.வ, 63, 64)

எனப் பஞ்சதாள இலட்சணங்களை விவரித்துள்ளார்.

சில பூதவேதாளங்கள் அருமையான இராகங்களைப் பாடின.

காலமா றாத வராளிசி கண்டிகை
பாலசீ காமர மாணவி பஞ்சிகை
கவுட பயிரவி லளிதை கபிசிகை
கவுளி மலகரி பவுளி இசைவன

குறிப்பிட்ட காலத்தில், பாட வேண்டிய வராளி, பாலையாழ்த் திறன் வகையைச் சார்ந்த சிகண்டி, சீகாமரம் (மருதயாழ்த் திறம்) குறிஞ்சியைச் சார்ந்த பெருமை வாய்ந்த விபஞ்சியையும், பயிரவி, இலளிதை, கபிசிகை, கௌளி, மலகரி, பவுளி என்ற இராகத்தையும் பாடுவன.

கனவ் ராடிய கும்பட மஞ்சரி
தன தனாசிவி தம்படு பஞ்சமி (72)

பாலையைச் சார்ந்த கனவராடி, படமஞ்சரி, தனாசி, பாலையாழ்த்திறம், குறிஞ்சி யாழ்த்திறம் இரண்டிலும் பேதப் பட்டு வரும் பஞ்சமம் என்னும் இராகத்தையும் கையாற் சுழற்றிக் காட்டப்படும் கோலின் வழியே விதித்த இலக்கணப் படியே மிக உயர்ந்த தொனியில் இசையின் தன்மையை எழுப்பி மேலே எட்டவல்ல திறத்தன சில பூதவேதாளங்கள் என்று கூறும் பகுதியில் பல்வேறு இராகங்களின் பெயர்கள் அவற்றிற்கு உரிய அடைமொழிகளுடன் இவ்வகுப்பு நூலில் வந்துள்ளதைக் காணலாம். இதுவல்லாம், கஞ்சக் கஞ்சம், யாழ், உடுக்கை, இடக்கை, களப்பறை, மத்தளி (பறைவகை), கொட்டியம், சந்திர வளையம், முரசு, திமில், தடாரி, குடம் போன்ற பஞ்சமுக வாத்தியம், கரடிகை போன்ற அளவற்ற கருவிகள் போர்க்களத்தில் முழக்கப்பட்டன என வருமிடத்தில் பல்வேறு இயங்கள் கூறப்பட்டுள்ளதையும் காணலாம்.

மூலிகையும் மருந்தும்

திருவகுப்பில் 'சித்து வகுப்பு' என்பதில் அருகிரிநாதர் பல சித்திகளைப் பெறும் வழியைக் கூறி, முருகன் திருப்புகழைக் கற்றவரே சித்தருக்குள் மேலான சித்தர் என்கிறார். பயனற்ற அவ்வாசையை ஒழிக்கவும், உண்மைப் பெருநிலையைத் தருதற்கு உற்றவழி முருகன் திருப்புகழைக் கற்பதே என உலகர்க்குக் கற்பிக்கவும் எழுந்த உபதேச வகுப்பு இது. அரிய உபதேச மந்திரம் இவ்வகுப்பில் இருப்பதால் 'அடல்புனைந்த வேலு மயிலும் என்றும் வாழி'' என்னும் திருமந்திரத்துடன் தொடங்கு

கிறது. இந்நூலில் பயன்படக்கூடிய பச்சிலை மூலிகைகள், மருந்து வகைகள் பல

அவுஷதம் உளசில கிலுகி லுப்பைகள்
அரசிலை நறுவிலி கரிய கக்கரி

....

....

விடுவில் சீரக பலமயி ரோசனை
கடுகு ரோகணி சிவதை மனோசிலை

(சித்து வகுப்பு 6-28)

எனவரும் பகுதியில் 1. கிலுகிலுப்பை 2. அரசிலை, 3. நறுவிலி எனும் மரவகை, 4. முள்வெள்ளரி, 5. அத்தி மரத்து இலை, வேர், 6. செம்பை, 7. ராகி, 8. முள்காவெளை என்னும் பூடு, 9. துத்திக்கீரை, 10. சங்கஞ்செடி, 11. ஓர் இதழ்த் தாமரை, 12. நீலிச்செடி, 13. கற்றாழை, 14. குறிஞ்சிலி, 15. சிவிறி, 16. கத்தரி, 17. பொடுதலை, 18. சண்பகமரம், 19. ஆரைகீரை, 20. ஒருவை, 21. கடுங்கொடி வேலி, 22. எட்டி மரம், 23. வீரை, 24. வேலமரம், 25. வெட்டிவேர், 26. பேரீச்சமரத்தின் இலை, 27. அமுக்கினாங்கிழங்கு, 28. எருக்கஞ்செடி இலை, 29. முருக்கிதழ், 30. செருப்படை (படர் கொடிவகை), 31. பலாமரத்தின் இலை, 32. அகத்திக் கீரை, 33. தமரத்தை, 34. பொன்னூமத்தை, 35. சாதிமல்லிகை 36. ஆலமரம், 37. ஆத்திப்பூச்செடி, 38. கழற்சிக் காய்க்கொடி, 39. கொன்றை, 40. இலந்தை, 41, தேட்கடை ஒரு மருந்துப் பூவகை, 42. நெய்க்கொடை, 43. பூவந்திமரம், 44. வக்கணை (மலைப்புன்கு), 45, அகில், 46. வன்னிமரம், 47. காரை, 48. துடிரி (செடி), 49. தும்பை, 50. சூரை, 51. அலரி, 52. சம்புநாவல், 53. கருநாவல், 54. மருது, 55. நொச்சி, 56. அறுகு, 57. மா, 58. பாலை, 59. புன்கமரம், 60. பூவரசு, 61. வாதமடக்கி, 62. பழபாகல், 63. பூலா (செடி), 64. அழிஞ்சில், 65. மதகரி வேம்பு, 66. ஆவரை, 67. இத்தி மரம், 68. இரும்பிலி, 69. பாதிரி, 70. செங்கொடி வேலி, 71. மகிருகம் (பூமியில் விளையும் கிழங்குகள்), 72. அதிமதுரம், 73. தகரம், 74. சிறுபாலாடை, 75, வெந்தயம், 76. மோதக வல்லி, 77. கிச்சிலிக் கிழங்கு, 78. வெட்பாலை, 79. நெல்லி, 80. ஏலம், 81. வேப்பிலை, 82. சதகுப்பி, 83. கொத்தமல்லி, 84. திப்பிலி, 85. ஆலிகோட்டம் (வேர்), 86. எலிப்புகை இலை, 87. சச்சு இலை, 88. நீலி 89. நிலப்பனை, 90. கற்பிசின்,

91. மடல் சிவந்த தாழை, 92. வசும்பு, 93. கருங்குவளை, 94. கரும்பை, 95. வெண்காந்தள், 96. மரிசி, 97. வசுவாசி, 98. விளா, 99. மஞ்சள், 190. மகிழம்பூவின் விதை, 101. புளிய மரம் 102. வாதுமை, 103. சணவு, 104. பெருங்குமிழ், 105. சீரகம், 106. சாதிக்காய், 107. கடுகுரோகிணி, 108. சிவதைப்பூண்டு என நூற்றுக்கும் மேற்பட்டவை சொல்லப் பட்டுள்ளன.

முடிவுரை

தெய்வத் தன்மை நிறைந்த பெரியவர்களுடைய திருவாக்கில் சொல்லுக்குக் காணுகின்ற பொருளைவிட அனுபவத்தில் காணுகிற பொருள்தான் சிறந்தது. மற்றவர்களின் பாடல்கள் எல்லாச் சொல்லுக்குரிய பொருளோடு அமைந்துவிடும். இன்னும் சிறிது சிறப்பாக நின்றால் சற்று உணர்ச்சியைத் தரும். மேலும் வாழ்க்கையில் சிரிய பயனைக் கொடுக்க வேண்டுமென்றால் அந்தச் சொல் மிகச் சிறப்பாக இருக்க வேண்டும். அப்போது அதை மந்திரம் என்போம். பாரதியும் 'மந்திரம் போல், வேண்டுமடா சொல்லின்பம்' என்றார். மந்திரம் என்ற சொல்லுக்குத் தன்னை நினைப்பாருடைய துன்பத்தைப் போக்குவது என்பது பொருள். இலக்கிய இன்பத்தோடு மாத்திரம் நில்லாது, பக்தி உணர்வைத் தூண்டுவதோடு மட்டு மல்லாமல் சீரும் சிறப்பும் அமைந்த வாழ்க்கையையும் அருளாளர் களுடைய அருட்பாடல்கள் நமக்குக் கொடுக்கும் என்பதைத் திருமுறைகளை, திவ்வியப் பிரபந்தங்களை உளம் ஒன்றிப் பாராயணம் செய்யும் மக்கள் உணர்வார்கள். அத்தெய்வீக நூல்களைப் போலவே அருணகிரியாரின் அருள்நூல்களும் சொல் கடந்து, உணர்ச்சி கடந்து வாழ்க்கையில் நற்பயனைத் தருவ தாக அமைவன.

குறிப்புகள்

1. உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜன்
   உளமு மாட வாழ்தேவர் பெருமாளே (திருப். 1056)

   (மு. இராகவையங்கார், சதாசிவ பண்டாரத்தார், கோபிநாதராவ் ஆகியோர் 15-ஆம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாம் புரபுட தேவமாராயரையே குறிக் கும் என்பர்.)

2. பழைய நினது வழியடிமை, திருப். 1127,358.

3. உலா முதலிய நூல்கள் பற்றிய குறிப்பு, திருப். 75, 80, 90, காம சாத்திர வாய்பா டேணிகள், திருப். 924.

4. அருணகிரிநாத அடிகள் புராணம், கழக வெளியீடு, சென்னை—1, 1976.

5. அறிவும் அறிதத்துதமும் அபரிமித வித்தைகளும் அறியெயிமைப் பொழுதில் வாழ்வித்த வேதியனும்—வேடிச்சி காவலன் வகுப்பு.

6. சுக ஞானக் கடல் மூழ்கத் தந்து, திருப். 633.

7. எனை மனம் உருக்கி யோக அநுபூதி அவித்த பாத, திருப். 392.

8. மாயாதீத மனோலயந்தரு நாதா, திருப். 705.

9. எனக்குநல் கர்ணாமிதப் பதந் தந்த கோவே திருப். 908

10. நாயெனுக்கும் உறவாகி நின்று கவிதையைப் புனை வோனே, திருப். 540.

11. அறிவுடைத் தாருமற் றுடன் உனைப் பாடலுற்று அருணையிற் கோபுரத் துறைவோனே, திருப். 519

12. திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன் படுதுயர் களையாய், சுந். தேவாரம்.

குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி-பெருமாள் திருமொழி.

13. திருப். 217.

14. திருப். 3, வாரியார் உரை.

15. திருப். 149-ஆம் பாட்டு — தலைவலி மருத்தீடு—என்பதும் நோய் அகற்றவல்ல பாடல்.

16. ப. 14, டி.எஸ். பார்த்தசாரதி, 'அருணகிரிநாதரும் திருப்புகழும்'

17. அபியுக்தர் பாடல், ப.4, முருகவேள் பன்னிரு திருமுறை தொகுதி-1.

பயன்பட்டவை

1. அருணகிரிநாத அடிகள் புராணம், வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள், சென்னை-1, 1976.

2. அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும், வ.சு. செங் கல்வராய பிள்ளை, சென்னை, 1975.

3. திருப்புகழ், த. சுப்ரமணியபிள்ளை பதிப்பு, சென்னை, 1931.

4. திருப்புகழ் விரிவுரை — வானதிபதிப்பகம், சென்னை-17, 1978.

5. அநுபூதி விளக்கம், கி.வ. ஜகந்நாதன், அமுத நிலையம், சென்னை—18, 1978.

6. தனிவெளி, -,,- -,,- 1962.

7. உள்ளங்-குளிர்ந்தது -,,- -,,- 1971.

8. காலையும் மாலையும் -,,- -,,- 1971,

9. ஓங்கார ஒளி -,,- -,,- 1970.

10 இரு விலங்கு -,,- -, - 1962.

11 St. Arunagirinathar 6th Birth Centenary Celebration, Karnataka Rdgion, 1975.

தூது இலக்கியம்

ச. வே. சுப்பிரமணியன்

சொல் : பொருள்

தூது எனும் சொல், கூழாங்கல், இராச தூதர் தன்மை, தூதுமொழி, தூது செல்வோன், காமக் கூட்டத்துக் காதலரை இணக்கும் செயல், செய்தி, பாணன் முதலிய உயர்திணைப் பொருளையேனும் கிள்ளை முதலிய அஃறிணைப் பொருளை யேனும் ஊடனீக்கும் வாயிலாகக் காதலர்பால் விடுத்தலைக் கலி வெண்பாவாற் கூறும் பிரபந்தம், தூதுவளை எனப் பல பொருள்படுகின்றது.[1] இச்சொல், தொல்காப்பியம் முதலே பயில்கின்றது.[2]

தொல்காப்பியம் அகத்திணையிலும், அகமெய்ப்பாடு கூறு மிடத்து மெய்ப்பாட்டியலிலும் 'தூது' என்பதைச் சுட்டிய போதும், புறத் தூதிற்கே இடமிகுதியளித்துள்ளது. அகத்தின் தலைவனின் பாலைப் பிரிவிற்குரிய காரணங்கள் அல்லது சூழல் களிலொன்றாகத் தூது அமைவது புறத்தூதாகின்றது. அகத் அகத்தூதிற்குத் 'தூது முனிவின்மை' எதும் மெய்ப்பாட்டு நிலையும்,

> **காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்**
> **தாமே தூதுவ ராகலும் உரித்தே**
>
> (தொல். பொருள். 117)

என்பதுவும் இடம்தருகின்றது. இக்காமக் கூட்டம் வேண்டிய ''தன்தூது'' நிலையின் விரிவே பின்பு பல்நிலைக் களவு-கற்புத் தூதுகட்கு இடமளித்து விரிந்திருக்க வேண்டும்; தாமேயன்றிப் பிறரையும் பிறவற்றையும் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

தூதிலக்கியம் - தோற்றமும் தொடக்கமும்

தூது, தனியிலக்கிய வகையாகப் 14-ஆம் நூற்றாண்டளவில் உமாபதி சிவாசாரியரின் - நெஞ்சுவிடு தூதில் உருவாகிய

போதும், இவ்வகத் தூதின் தோற்றமும், புறத்தூது போலவே தொல்காப்பியம் முதலே கணிக்கப்படுகின்றது;[3] 'வாயில்' என்பதிலும் 'காம மிக்க கழிபடர் கிளவி' பற்றிய எண்ணத்திலும் இதனைக் காண முயல்வது வழக்கம். ஆயின் இவை ஒருபுடையொப்புமை காட்டுகின்றனவேயன்றி முழுமையான கருநிலை காட்டின என்பதற்கில்லை. தூதில், தூதுப் பொருளை நோக்கி 'வேண்டுதல்' கூறல் இன்றியமையாதது; ஆயின் 'வாயில்' என்பதில் இவ்வேண்டுதலமைவதைத் தொல்காப்பியம் கூறாகவேனும்காட்டவில்லை. ஒருவர் கூற இன்னொருவர் பேசுவதாக அன்றி, ஒருவர் தானாகப் பேசுதலாக இது அமைகின்றது.[4] தலைவியின் மாண்பினை வாயிலாக அமைவோர் உரைப்பர் எனவும், தோழி முதலியோர் (பன்னிருவர்) வாயிலர்வரெனவும் தொல்காப்பியம் கூறும்.

கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலுஞ் சுற்றம்--ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமயிற் கிழவோர்க் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய

(தொல். பொருள். 150)

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப (,, ,, 191)

தொல்காப்பியம் கற்பியலில் கூறிய இவ்வாயில்களுள், விறலி மட்டுமே கற்புத் தூதில், தலைவன் கூற அவனுக்காகத் தலைவியிடம் பேசும் நிலையில் உருவாகி அமைகின்றாள் (விறலிவிடு தூது). களவில் தலைவனுக்குப் பாங்கனும் தலைவிக்குப் பாங்கியும் அன்றி வாயில்கள் தொல்காப்பியத்தில் சுட்டப்படவில்லை.[5] ஆயின் களவுத் தூதில் தூதனுப்பப்பட்ட பொருட்கள் மிக்குப் பெருகியதைப் பாட்டியல் முதலிய இலக்கணமும் இலக்கியங்களும் காட்டுதல் வேறுபாடாம்.

இறையனார் களவியலில் உருவாகிய 'காமமிக்க கழிபடர் கிளவி,[6] எனும் தொடர் தொல்காப்பியத்தில் இல்லாதபோதும்,

நெய்தலின் 'இரங்கல்' உரிப்பொருளினும், தலைவி போன்ற அகமாந்தர், தம் உணர்வு வெளிப்பாடாக அஃறிணையான கேட்காதனவற்றுடனும் பேசாதனவற்றுடனும் கழறுவதிலும் இதன் தொன்மை யமைதலைத் தொல்காப்பியம் புலப்படுத்தும். உணர்வுவெளிப்பாடேயன்றி, இதன்கண் 'தூது சொல்லிவா' எனும் வேண்டுதல் அமையவில்லை. 'நெஞ்சம்' இவ்வாறு கருதப்படல் முதனிலையாகின்றது.

நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சோடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற் றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்சியும்......

(தொல். பொருள். 194)

தமிழின் முதல்தனித்தூது நெஞ்சுவிடுதூதாக அமைதல் இங்குச் சுட்டத் தக்கது. அன்றியும், இச்சூத்திர உரையில், இளம்பூரணர், 'செல்லா மரபின ஆவன - புள்ளும், மாவும், மரனும், கடலும், காணலும் முதலாயின. செய்யா மர-பாவன -**தூதாச்** சேரலும் வருதலும் உளபோலக் கூறும் அவை போல்வன பிறவும்' எனவும் 'தூதி'னை இணைப்பதும் கருதத் தக்கது. இங்கு நெஞ்சை மட்டும் கூறிய தொல்காப்பியம் செய்யுளியலில் பிற பலவற்றையும் பட்டியல் செய்கின்றது.

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவு நுதலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்

(தொல். பொருள், 501)

இவற்றை நோக்கத் தூதிலக்கியம், தொல்காப்பியத் திலேயே விதையைக் கொண்டிருந்தது என்பது புலனாகும். புறத்தூதாகத் தொல்காப்பியம் மனிதனைக் குறித்தது; அகத் தூதாகத் தலைவன் தலைவியே (தாமே) அமைந்தனர்.

வாயிலாக உயர்திணை மாந்தர் அமைந்தனர்; உணர்வு வடிகாலில் முன்னிலையாக அஃறிணையும் அமைந்தன.

தனித் தூதிலக்கியம் உருவாகு முன், சங்க இலக்கியம் முதலே அகத்தூதில் உயர்திணைப் பாணன் முதல், புள் போன்ற அஃறிணையுயிர் வரை இடம் பெறுதல் இலக்கண நிலைக்கும் இலக்கிய நிலைக்குமுள்ள கால இடைவெளியையும், கருத்து வேறுபாட்டையும் உணர்த்தலாம்.

தண்ணந் துறைவன் தூதொடும் வந்த
பயன்தெரி பனுவற் பைதீர் பாண... (நற். 167)
நமக்கு ஒன்று உரையார் ஆயினும் தமக்கு ஒள்று
இன்னா இரவின் இன்துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்பு அரும் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாயித் தூதே (குறு. 266)

இவ்வாறு 'தூது'ச் சொற்றொடர்பு இன்றியும் அஃறிணை, உயர்திணையை முன்னிலைப் படுத்திச் 'செய்தி' கூறச் சொல்லலும் பிறிதொரு படிநிலை வளர்ச்சி காட்டியது.

காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
இறைகே ழெல்வளை நீங்கிய நிலையே (ஐங். 140

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
அஞ்ச லோம்பி யார்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை யென்குறை
செய்தல் வேண்டுமால் கைதொழு திரப்பல்
பல்கோட் பலவின் சார லவர்நாட்டு
நின்கிளை மருங்கிற் சேறி யாயின்
அம்மலை கிழவோர்க் குரைமதி யிம்மலைக்
கானக் குறவர் மடமகள்
ஏனல் காவ லாயின ளெனவே. (நற். 102)

காமமிக்க கழிபடர்கிளவி, இவ்வாறு செய்தி கூறி விடுக்கும் தூதாக உருவாகியதைச் சங்க இலக்கியம் காட்டும். தொடர்ந்த கால இலக்கியங்களும் இவ் இணைவைக் கொண்டு

சென்றமைக்கு பக்தி இலக்கியத்தின் 'நாயகன் - நாயகி பாவம்' மிகுந்த இடமளித்துள்ளது. 'காமப் பகுதி கடவுளும் வரையார்' (தொல். பொருள். 81) என்பதை யொட்டி அமையும் இவ் அகஞ்சார் அருளியல் பாடல்கள், அஃறிணைப் பொருட்கள் பல[7] தூதாக அமைவதைக் காட்டும். அன்பின் ஐந்திணையின் தூதும், வாயிலும், காமமிக்க கழிபடர்கிளவியும், ஒருதலையான கைக்கிளைக் காமத்திற்காகுதல் மாறுபாடாகும்.

நோக்கமும் பயனும் - பொதுமை

தூதின் நோக்கமும் பயனும் என்பதும், தூதிலக்கியத்தின் நோக்கமும் பயனும் என்பதும் ஒன்றாகவோ, வேறாகவோ அமையலாம். உணர்ச்சி வடிகாலாகவும், எண்ண வெளிப் பாடாகவும் 'மொழி'யமைகின்றமை இவ் இரண்டிலும் பொருந்தலாம். ஒருவர் கருத்தை மற்றொருவருக்குப் புலப் படுத்தல் அதன் வழி, சில செயல்களை - முடிவுகளை எதிர் பார்த்தல் என இது முதலுக்கும் முடிவுக்கும் இடைவெளி நிறைக்கும் பாலமாக அமையலாம். புறத் தூதின் நோக்கமாகச் 'சந்தி விக்கிரகம்' என்பன அமைதலைப் பரிமேலழகர் உரையும் (குறள். தூது 69-ஆம் அதிகாரம்), 'பிரித்தலும் பேணிக் கொளலும்' எனும் குறளும் (633, உரையும்) உணர்த்தும். இறையனார் களவியல், காமமிக்க கழிபடர் கிளவியின் முப்பயன் சுட்டுவது அகத் தூதிற்கு இணைத்துக் கருதலாம்; தலைவி ஒரு பயனும் சிந்தித்துச் சொல்லாது ''தன்கட் பொறை தணிப்பனவாகச் சிந்தித்துச் சொல்லுவது'' என நோக்கமும் தரப்படுகின்றது.

இதனைத் தலைமகன் கேளா வருமே யெனின்,

'இங்ஙனம்

வந்தொழுக இவள் ஆற்றாளாம்' என்று ஒருவகையான்
முற்பட்டுப் பிற்றை ஞான்று வரைவொடு புகுவானாம்;
தோழி கேட்குமே யெனின், தலைமகனை முன்னின்று
வரைவு கடாவுவாளாம்; யாருங் கேட்பாரில்லையெனின்,
ஆற்றுதலைப் பயக்கும். என்னை, மூடி வேவா

நின்றதோர்

கலத்தை மூய் திறந்தவிடத்து அகத்து நின்ற

வெப்பங் குறைபடும்;

அது போல இவட்கும் அயர்வுயிர்ப்பாம், அச் சொற்கள்

புறப்படுதலான் என்பது. இம் மூன்றனுள் ஒன்றாகாமை யில்லை யென்பது; தலைமகன் கேட்பின்
இன்னதொன்றாம்,
தோழி கேட்பின் இன்னதொன்றாம், யாருங்
கேட்பாரில்லை
யாயின் இன்னதொன்றாம் என்று ஒரு பயன் சிந்தித்துச் சொல்லுமோ எனிற், சொல்லாள்; குழவி அழுதாற்போல வேட்கை மிகுதியாற் சொல்லினவிடத்து
அப்பயன் நிகழும்.[8]

காமமிக்க கழிபடர்கிளவியோடு அண்மி வைத்து நினைக்கப் படும் அஃறிணைத் தூதில்', ஆற்றுதலைப் பயக்கும்' எனும் மூன்றாம் பயன் இயைவுறுகிறது.

காலத்திற்கேற்ப, இலக்கியத்திற்கேற்ப தூது வேறுபட்டு அமைவதால், தூதின் நோக்கமும் பயனும் அவ்வாறே வேறு படக் கூடும் என எதிர்பார்க்கலாம். புறநானூறு தரும் ஔவையின் தூதும் (95), பகையரசன் ஏணியும் சீப்பும் மாற்றிய பார்ப்பனத் தூதும் (305) உண்மைத் தூதுகள்; இங்கு நோக்கமும், பொருளும் தூதே; ஆயின், சிற்றிலக்கியத் தூதுகள் பெரும்பாலும் புனைவாக அமையும் 'போலித் தூது'களாம்; இவற்றில் நோக்கம் தலைவன் புகழ் போன்ற ஏதேனும் ஒன்றாகி, 'தூது' வெறும் உத்தியாகி முதன்மை யற்றமைந்தது எனலாம். பெயராலும், கூறும் முறை அல்லது வெளியீட்டாலும் இவை தூதேயன்றி நோக்கு, பயனால் விலகுகின்றன.

இந்நிலையில் இலக்கிய நோக்கும் பயனும், தூதின் நோக்கும் பயனும், தூதிலக்கிய நோக்கும் பயனும் எனும் மும்முனைச் சிந்தனை தேவைப்படுகின்றது. அன்றியும், சிற்றிலக்கியம் எனும் பிரபந்த வகையாகுதலால் அந்நிலையிலும் தூது பற்றிக் கருதல் வேண்டும். இலக்கியப் பொது நோக்கம், சிற்றிலக்கியப் பொது நோக்கம் தூதுக்கும் உண்டா? தூதிலக் கியப் பொது நோக்கம், தூதிலக்கியச் சிறப்பு நோக்கம் என வேறுபடுத்திக் கருதலாமா? அகம், புறம் ஆகிய தூதில் அடிப்படை மாறுவதால் நோக்கம், பயனில் என்னென்ன வேறுபாடு அமையலாம்; அகமாயினும் தூது நூற்பொருள் வேறுபட்டால் இவ்வாறு நோக்கும் பயனும் மாறுமா? தூது விடப்படும் பொருள் ஒன்றேயாக இருந்தால் (சான்றாக, விறலி)

அந்நூல்களனைத்திற்கும் ஒரே அல்லது ஒத்த நோக்கமும் பயனுமா? தூது விடப்படும் பொருள் வேறுபடுவதால் மிக வேறுபட்ட நோக்கும் பயனும் அமையக் கூடுமா? ஒரே ஆசிரியன் அல்லது வெவ்வேறு தலைவர் என்பதால் ஒத்த அல்லது வேறு பட்ட நோக்கமும் பயனும் பொருந்துமா?

தோன்றிய காலத்துடன் அழிந்து விடாது, ஏட்டிலும் எழுத்திலும் பதிக்கப் பெற்ற நிலையில், தூதிலக்கியமும் 'இலக்கு' உடையது; குறிக்கோளுடையது. அக் குறிக்கோள் நோக்கமாகவும் பயனாகவும் வெளிப்படுகின்றது. படைப்போர் நோக்கத்துடன், படைப்பின் பயன் இணைந்து செல்வதாக இருப்பினும், தலைவனாக அமைந்து கேட்போனும், தற்காலம் வரைப் படிப்போனும் (கலைஞன்) அதே நோக்கமும் பயனும் கொள்ள வேண்டு மென்பதில்லை. புலவருக்குத் தான் விரும்பிய பொருண்மையைப் பாடுதல் நோக்கமாகவும், அக் கவி யொழுக்கால் பெற்ற மனநிறைவெனும் விளைவே பயனாகவும் அமைந்து விடலாம்: அல்லது பாடல் தலைவ னிடம், அப்பாடல் பற்றிப் பெற்ற பரிசு — சிறப்பு — பயனா கலாம். உண்மைத் தூதாக இருப்பின் தலைவன் தலைவியை இணைதல் நோக்கும் பயனுமாகலாம். அவ்வாறன்றிப் புனைவாக இருந்தால், பாடல் தலைவனுக்குத் தன்புகழ் எழுத்துருப் பெற்று நிலைபெறுதல் பயனாகும்.

தூது இலக்கியங்களை 'ஒரு பொருண்மை' பற்றியவை, அல்லது ஒரு பொருளைக் கூறுபவை என்று சொல்ல முடிய வில்லை.[9] அகமோ, புறமோ ஆன தனிப்பாடல்கள் ஒரு பொருளையும், காப்பியம் போன்றன ஒரு பொருளை மையங் கொண்டபோதும் பல பொருளையும் கூறியது பெரும்பான்மை போன்று, தூதும் 'பல்பொருள்' நுவலும் நிலையினது எனலாம். இப்பண்பு தூதுக்கு மட்டுமின்றி பல சிற்றிலக்கியங் கட்கும் பொருந்தலாம். இப்பொருள் விரவலால், பல்பொருள்விரி வால், நோக்கமும்,அது போலவே பயனும் ஒன்றாகவன்றிப் பல வாகப் பல்கக்கூடும் என்பது வெளிப்படை. இப்பன்மை, ஆசிரிய னின் எண்ணம், அறிவு, திறன், சூழல் போன்ற பலவற்றிற்கேற்ப மிக்கும், குறைந்தும் அமையலாம், இதனால் ஒரு பரிமாணம் (dimension) காட்டும் தூதிலக்கியத்தைவிடப் பல்பரிமாணம் உடைய தூதிலக்கியமே மிகுதியாக அமைகின்றன. தூதிலக்கியம் கலிவெண்பா எனும் அமைப்பால் ஒன்றாயினும், கண்ணிகளின் எண்ணிக்கையால் பலவானது போல், 'தூத'ால் ஒருமை

யுறினும், உள்ளமையும் செய்திகளால் பலவாகின்றது எனக் கூறலாம்.

தூதாக விடப்படும் பொருளின் தேர்ச்சியே அடிப்படை நோக்கங்களைக் கொண்டதாக அமைகின்றது எனலாம். கவிஞர், தான் படைக்கின்ற தூதின் நோக்கத்திற்கேற்ப அத் தூதுவிடு பொருளையும் தேர்ந்து கொள்கிறார், உயர் திணையும், அஃறிணையும், இயங்கு பொருளும் இயங்காப் பொருளும், உயிருடையதும் உயிரற்றதும், தாவரமும் விலங்கும், இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளுமாகத் தூதுவிடு பொருட்கள் பல்கிப் பெருகியமை இச்சிந்தனையை வழங்குகின்றது.

தூதிலக்கிய இலக்கணம் கூறும் நூல்களுள் பிரபந்தத் திரட்டு தூதுவிடு பொருட் பட்டியல் வழங்குகிறது.

> **எகினமயில் கிள்ளை யெழிலியொடு பூவை**
> **சகிகுயினெஞ் சார்தென்றல் வண்டு - தொகைபத்தை**
> **வேறுவே றாய்ப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டன்**
> **பூறிவா வென்ற தூது** (30)

அன்னம், மயில், கிள்ளை, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்ற பத்து எனும் இவ்வரையறை தூதிலக்கியத்தின் எல்லை நீங்கியது. வெளியானதும், சுவடி யிலிருப்பதும், பெயரளவில் அறியப்படுவதுமான 56 தூது நூல்களையும், 73 தூது நூல்களையும், 100 தூது நூல்களை யும் ஆய்வறிஞர் குறிப்பர்;[10] இவற்றிலிருந்தும், இக்கட்டுரை யில் ஆய்வுக்குக் கொள்ளப்பட்ட இலக்கியங்களிலிருந்தும் தூதுவிடு பொருட்கள் சுமார் ஐம்பதாகப் பல்கியது தெரிகிறது.[11]

அகத் தூதும் புறத் தூதும், வாழ்த்துத் தூதும் வசைத் தூதும், இணைப்புத் தூதும் பகைத் தூதும் தம் நுவல்பொருள் நோக்குக் கேற்ப நல்ல-தீய, பொருத்தமான அல்லது சார்புடைய பொருட்களைத் தூது விடுவதாக அமைக்கின்றன. தத்துவ, சமயச் சார்பு நோக்கம் இறைவன் அல்லது குருவின் பால் நெஞ்சைத் தூதுவிடச் செய்கின்றது. இறைவனைச் சார்ந்த ஊர்தி தூதுவிடு பொருளாவதை மயில் விடுதூது (முருகன்), கருடன் விடு தூது (திருமால்) போன்றன காட்டு கின்றன. இறைவர்க் குகந்த பொருள் தூதுக்குத் தேர்ந்து கொள்ளப்படல் கொன்றை விடுதூதில் (சிவன்) பொருந்தும்.

புலவரைக் கவர்ந்து நெஞ்சில் நீங்கா இடம் பெற்று இனிமை தந்ததால் தமிழும், நன்னூலும் தூதுவிடுக்கப் பெற்றன. கற்பில், பரத்தையிற் பிரிதலால் ஏற்பட்ட தலைவி ஊடலைத் தணிக்கும் ஏற்புடைய வாயிலதாகத் தலைவனுக்கு விறலி அமைந்து தூது செல்கின்றாள். நெல்லையப்பர் கோயிலில், இறைவன் திருக்கலியாண விழாவில் தட்டேந்தி நின்ற குங்குமப் பூங்கோதை எனும் தேவரடியாளைத் தாம் பெற வாய்ப்பாகக் கவிஞர் ஏற்புடைய பணத்தைத் தூதுவிடுதல் அமைகின்றது.

ஐய நீ
தூதுசென்றால் வந்தெனது சோகந் தணிப்பளந்த
மாதுதன்னைப் போயழைத்து வா. (372)

உலகைக் காக்கும் இயல்புடையது என்று பொருள்படுவதால், 'அண்டங்காக்கை'யைத் தூதுப் பொருளாக்குகின்றார் 'வெண்கோழி'; அன்றியும் அதன் 'கா, கா' எனும் குரல் 'தமிழ் மொழியைக் காப்பாற்று' என்னும் உண்மையை வெளிப்படுத்தி வலியுறுத்துவதால், 'இந்தி மொழிக் கட்டாயம் ஒழிக' எனும் தம் கருத்திற்கு வாய்ப்பாக அதனைத் தூதாக்கிப் பயன் கொள்கிறார் 'காக்கை விடுதூ'தின் ஆசிரியர்.

ஒவ்வொரு கவிஞரும் தாம் தூதுக்குத் தேர்ந்து கொண்ட பொருள் பிற பொருளிலும் அச்செயற்கு ஏற்புடையது எனும் எண்ணத்தினர்; இதனால் ஒருவரால் ஏற்றி மொழியப்படும் பொருள் பிறிதொருவரால் தாழ்த்தி மொழியப்படவும், ஒருவரால் குறைத்துக் கூறப்படும் பொருள் பிறிதொருவரால் போற்றிக் கூறப்படவும் இடனமைகின்றது; தருக்க ரீதியான கூறு முறையால் இது பொருத்தப் பெறுகிறது எனினும் அதுவே முடிந்த முடிவு என்பது ஏற்புடைத்தன்று. தமிழ்விடு தூது நூல்கள் 'தமிழை ஏற்றிக்கூற, புலவர் விடுதூது, தமிழை விட அதனையுடைய புலவரே இச்சூழலில் ஏற்புடையவர் என்கிறது.

தித்திக்கும் செந்தமிழைத் தேரின் உணர்வரோ
புத்திக்குள் விந்தைபுகாங் பூஞ்செல்வர்...
... மயக்கறுத்தோர்
செல்வக் கடுமனத்தைச் சீர்ப்படுத்து மாற்றலுக்கு
வல்லதெது யாதுளது வண்டமிழின் - தொல்லறிவு

கண்ட புலவரலால் காணுலகில் வேறிலராய்க்
கண்டே புலவரினைக் கண்ணுற்று - விண்டிட்டேன்
(79,85-87)

இவ்வாறே அன்புவிடு தூது, 'நெஞ்சு, தென்றல், கிளி, அன்னம், மயில், வண்டு, பூவை, குயில், மான், மேகம் மற்றெவை சென்றாலும் உன்னைத் துணையாகக் கொண்டே செல்வதால், அவையை விடுத்து, உன்னையே தூதாக்கினேன் என்கிறது.

பகைத்தூது, செருப்பு, மறலி என்னும் தூதுவிடு பொருளாலேயே நம் நோக்கினை உணர்த்துவதும் இங்குச் சுட்டத்தக்கது.

நோக்கங்கள்

(1) அகப்புற இணைப்பு நோக்கம்

பெரும்பான்மையான தூதிலக்கியங்கள் 'அக' மான போதும் சுட்டியொருவர் பெயர் கூறி அப்பாட்டுடைத் தலைவன் புகழ்பாடும் நோக்குடையனவாகையால் புறமுமாகின்றன. அகமும் புறமும் ஓரிலக்கியத்தில் இணையும்—இணைக்கும் நோக்கு இங்கு வெளிப்படுகின்றது. சிற்றிலக்கியங்கள் பலவற்றிற்கும் இவ் அகப் புறப் பொருளிணைப்பு நோக்கு அமையக் கூடும் (உலா, குறவஞ்சி, கோவை, பரணி... எனச் சான்று பல்கும்).

(2) தூதுப் பொருட் புகழ் நோக்கம்

தொண்ணூற்றாறு பிரபந்தம் எனும் வரையறைப் பட்டியலிலிருந்து முன்னூறுக்கும் மேற்பட்டனவாகப் பிரபந்தங்கள் பல்கியபோதும்,[12] பெரும்பான்மையின 'தலைவன் புகழை'யே மானிட - (ஆண்/பெண்), இறைப் புகழையே - நோக்கமாகக் கொண்டு பொதுமை காட்டியபோது, ஒரு சிலவே ஒரு பொருளைப் (thing) பற்றி. ஏற்றிப் போற்றிப் பேசும் நோக்கம் சுட்டின. இதனை வேனில் மாலை (பெரும்பொழுது), வசந்த மாலை (தென்றல் காற்று), ஆ(வா) தோரண மஞ்சரி (யானை)— போன்ற வகைகள் உணர்த்தக் காணலாம். இவ்விரு நிலையை நோக்க, 'தூது' முன்வகையின் பாற்படும் எனப்பொதுவாகக் கூற முடியுமெனினும் தூதிலக்கியம் ஒரு

பொருளைச் சிறப்பித்துக் கூறும் நோக்கமுடையனவாக அமைதல் சிறப்பாக, பரவலாக வெளிப்படுகின்றது.

தலைவனைவிடப் 'பொருளை'ப் போற்றுவதே தூதிலக்கிய முதன்மை நோக்கமாக அமைந்தமை முற்காலத்தை விடப் பிற்கால நூல்களில் மிகுதி எனல் தரும். புகையிலைவிடு தூது) இதற்கோரெடுத்துக்காட்டு.

> **இது 59 கண்ணிகளை உடையது. இத் தூதில் புகையிலையின் பெருமைகளே முதல் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூது விடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளிற் சுருக்கமாக அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டுமென்று தெரிகிறது.**[13]

இது ஒரு நூலினியல்பாகவன்றிப் பலநூல் பண்பாகவும் அமைகின்றது. 132 கண்ணியுடைய சுமுகியின் பொடிவிடு தூதின் முதல் 86 கண்ணியும் பொடியை 'முன்னிலைப் பரவலாக'த் தருகின்றன. 372 கண்ணிகளுடைய ஆசிரியர் பெயரறியா 'பணவிடு தூது' 113 முதல் 340 கண்ணிகளில் பணத்தையழைத்துப் பெருமைப் படுத்துகிறது. அமிர்தம் சுந்தரம் பிள்ளை, ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள் மேற் பாடிய பொன்விடு தூதும் இந்நிலையினதே. அதில்,

> **தேவர் தமக்கெல்லாந் தேவாகி நின்றொளிரும்**
> **மூலர் தமக்கு முதலாவான்** (4)

எனப் 'படர்க்கைப் பர'வலில் பொன் தேவர்க்கு தேவனாகின்றது;

> **பேராரும்**
> **என்னூனே என்னுயிரே என்னுயிர்க்கு மோருயிரே**
> **என்னூனோ டின்பா யியைந்திருக்கு - மன்னூ**
> **நல்லுயிரி னல்லுணர்வே நல்வாழ்வே நாயகமே**
> **சொல்லரிய பொன்னே சுடர்த் திருவே - தொல்லுலகில்**
> **பொன்னென்ன யாருமே போற்றி செயும் புண்ணியமே**
> **மன்னுந் திறலே மகிழ்வேயிங் - குன்னையலால்**
> **ஓதும் பெருந்தெய்வ மொன்றுண்டோ...** (137-141)

எனக் கடவுளாகப் பரவப்படுகிறது. இதன் காரணமாக, இத்தூதிலக்கியத்தில் 'தலைவன்' ஒருவனிப்பினும் அவனுக்குரிய இடம் முதன்மை யிழக்கின்றது; சுட்டிச் செல்லல் அல்லது சில கண்ணிகளில் பேசல் எனச் சிறுமையுறுகின்றது; 'தூது விடல்' எனும் 'பொது' நோக்கமே குறைப்பட்டு-குன்றி வெறும் 'மரபுக் கூறு' ஆகின்றது-எனலாம்.

இவற்றிற்கு நேர் மாறாகத தூதுப் பொருளைப் புகழும் நோக்கம் சிறிதுமின்மையுமுண்டு. விறலிவிடு தூநின் பொது இயல்பு என ஓரளவு இதனைக் கூறலாம். செண்டலங்காரன் விறலிவிடுதூது 566-இல் 10 கண்ணியளவே விறலிச் செய்தியை இணைத்தது; அங்கும் சுட்டலுண்டே யொழியப் புகழ்ச்சியில்லை; சிதம்பரேசுரர் விறலிவிடு தூது 'விறலிப் புகழ்ச்சி'யுடன் தொடங்கிய போதும் 1182 கண்ணியில் வெறும் 15 கண்ணியையே அதற்கு ஒதுக்கியது. இவற்றின் நோக்கம் வேறு என்பதனை இச் செய்தியே உணர்த்தும்.

தலைவனோடு ஒத்த நிலைக்குத் தூதுப் பொருள் உயர்த்தப்படுதல் பிறவிடத்தும் விளங்கும். பணவிடுதூது இயற்றிய சொக்கநாதக் கவிராயர், தலைவனையேற்றி மொழிதற்குரிய அரச தசாங்கங்களைப் பணத்திற்குத் தருகின்றார். [14]

பாலா, மதியார் பசுந்தங்க மால்வரையாம் சாம்பு
நதியா விளங்கியபொன் னாடா - மதிவிலங்கை
மாநகரா பொன்னி மாலையா சூழ்ந்தநெடுங்
கோநகரா செங்கைக் குதிரையா - ஊன
மணிதிரை வாட்டியதேரர் வல்லிலங்கா வாரும்
குனிதர வெல்லுங் கொடியா - முனியும்
முரசா கடந்து முனிவருஞ்சொல் லாத
உரைசாலு மாணை யொருத்தா - அரசநீ... (55-59)

(3) தலைவன் புகழ் நோக்கம்

ஏற்கனவே சுட்டியவண்ணம், பாட்டுடைத் தலைவனைப் புகழும் நோக்கம் ஓரளவு எல்லாத் தூதிலும் வெளிப் படுகின்றது. இறைத் தலைவனாகவோ மனிதத்தலைவனா கவோ அமைவது இயல்பும் பொதுமையுமாகும். தலைவர் இவ்வாறு ஆடவராக அமையும் பொதுமைக்கு மாறாக,

இறைவி தலைமை வகிப்பதை அங்கயற்கண்ணி ஆனை விடுதூது காட்டுகின்றது.

எல்லாத் தூதிலும் பாட்டுடைத் தலைவன் ஒரே நிலையில் தரப்படலோ அணுகப்படலோ இல்லை. பேரின்பத் தூதாயினும், சிற்றின்பத் தூதாயினும், பெண் (தலைவி) விடுவதாக அமையும் தூதுகளில் காதல் தலைவனே பாடல் தலைவனாகவும் அமைகின்றான்; அவ்வாறன்றிக் களவுத் தூதாயினும், கற்புத் தூதாயினும் ஆடவன் விடுக்கும் தூதில் அவனுக்கு அருள் - பொருள் உதவியவனாகத் தலைவன் அமைந்து புகழப்படுகின்றான். முன்னதற்குத் திருமாலிருஞ் சோலை மலை அழகர் கிள்ளை விடு தூதையும், பின்னதற்கு வெள்ளையராசேந்திரன் துகில்விடு தூதையும் சான்றாகக் காட்டலாம்.

தலைவன் புகழுடன் நூல் தொடங்கல் ஒரு நிலையாகவும், நூலிடையில் தலைவனைப் புகழுதல் பிறிதொரு நிலையாகவும் அமையும். கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூது, முன்னதற்குச்-சான்றாகவும், ஸ்ரீ பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது பின்னதற்குச் சான்றாகவும் காட்டத் தக்கன.

தூதுப் பொருளிடம் தலைவனைப் பற்றிய செய்திகளைக் கூறுமுகமாக அமைக்கப்படலால் படர்க்கைப் பரவலாகத் தலைவன் பெருமையைப் புகழலே ஏற்புடையது. இது பல்வகையாக அமைக்கப்படுவதுண்டு. தலைவன் இத்தகையவன் இன்னின்ன பண்பினன் எனப்'பாடாணா'க அமைத்தல் பொதுமையாக, தசாங்கம் கூறிச் சிறப்பித்தல், கேசாதிபாதம் கூறல் என்பன சிறப்புப் பண்பினவாக அமைகின்றன. முத்து வீரப்ப பிள்ளை மான்விடு தூது, மணவை திருவேங்கடமுடையான் மேகவிடு தூது, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது ...எனப்பல—பெரும்பான்மை நூல்கள் தசாங்கத்திற்கு இடமளிக்கின்றன. கேசாதிபாதம் / பாதாதிகேசம் இத்துணைப் பரவலாக இடம்பெறவில்லை. தேதிய கவி சுப்பிரமணிய பாரதியார் நன்னூல் விடுதூது (43-54) (திரு) முடிமுதல் (திரு) அடிவரைப் பன்னிரு உறுப்புகளைப் பாடி, யதன் வாயிலாகத் தலைவன் பெருமை உணர்த்தியது—

ஈகை இளவரசன் யான்விரும்பக் கட்டியநல்
பாகை பதித்திட்ட பாமுடியும் - ஏகாமல்
நாதக் குயிலுரைத்த நல்லமுதத் தேன்கீதம்
காதலெனக் கேட்ட கவின்செவியும்...
அட்டிற் குளதாம் அரிசியைச்சிட் டிற்களித்துப்
பட்டினிதான் ஏற்ற பசிவயிறும்...
கண்ணற்ற வேற்றான் கடிந்து விரட்டியதால்
தண்புதுவை சென்ற தவிரடியும்... (34-44.51,54)

தலைவிக் காதல் தூதுகளில் பெரும்பாலும் இறை - மானிடத் தலைவன் உலா கைக்கிளைக் காதல் சூழல் தருவதால், உலா அமைப்பின் வழியாகவும் தலைவன் புகழ்ச்சி நோக்கம் நிறைவேறுகிறது (சான்று - பழனியாண்டவர் மயில்விடு தூது), இதற்கு மாறாக ஆடவனின் காதல் தூதிலும் பாடல் தலைவனின் உலா அமைந்தது புகழ் நோக்கம் பற்றியே என்பது வெளிப்படை. வெள்ளைய ராசேந்திரன் துகில்விடு தூது இந்நிலையினது. பவனிச் சிறப்பும் (157 - 182), கண்டு மகளிர் கருத்தழிதலும் (183 - 194) என இது விரிகின்றது.

(4) இணைத் தலைமை

சில தூதிலக்கியம் தூதுப் பொருளைத் தலைமைப்படுத்தின; இன்னும் சில பாட்டுடைத் தலைவனை முதன்மைப்படுத்தின. இவ்வாறு ஒருபால் கோடாது, தலைவனுக்கும் தூதுப் பொருட்கும் ஒத்த முதன்மை யளித்துத் தலைமையில் இணை நிலை கொண்டு, அப்பாங்கைத் தம் நோக்கமாக உணரச் செய்யும் தூது நூல்களும் உள. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது இதற்குச் சிறந்ததோர் சான்று; தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் நன்னூல் விடு தூது மற்றுமோர் சான்று. ஆசிரியனின் இறைப் பற்றும் தமிழ்ப் பற்றும் முன்னதிலும் நன்னூற்பற்றும் பாரதிப் பற்றும் பின்னதிலும் ஈரிழை யாகிப் பின்னிப் பிணைகின்றன. இரண்டு கூறுகளையும் ஏற்றிப் புகழும் நோக்கம் இணைகின்றது.

(5) இரட்டைத் தலைவர்

தூதிலக்கியம் சிலவற்றில் இரு புறத்தலைவர் அமைவது தனித்த நோக்குக் காட்டுகின்றது. பாடல் தலைவன் அல்லது

பாட்டுடைத் தலைவனாகி, தூது நூலின் தலைப்பிலும் (பெயர்) இடம் பெற்று அமைபவனைப் புகழும் நோக்கம் நியாயமானது - நேரடியானது - எதிர்பார்க்கப்படுவது. அத்துடனமைந்துவிடாது பிறிதொருவனையும் புகழும் ஆசிரியன் நிலை, காலச் சூழல் காட்டும் போலும். வள்ளல் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாக்கிப் பாடும் போது, அவன் மேல் அதிகாரமுடைய ஆட்சியாளனை - மன்னனைப் - பாடுவது பலவகையிலும் ஒரு கட்டாயத் தேவையாகவோ அல்லது ஆசிரியன் விருப்பாகவோ அமைந்திருக்கலாம்.

நாகம கூளேந்திரன் எனவும் பெரிய நாயகன் எனவும் அழைக்கப்பட்ட கூளப்ப நாயக்கனைத் தலைவனாகக் கொண்டு எழுந்த 'புகழ்' வாய்ந்த, சுப்ரதீபக் கவிராயரின் கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது இந்நிலையில் சுட்டத்தக்கது. இதில் 34 முதல் 96 வரையிலான கண்ணிகளில் மன்னன் விஜயரங்க சொக்க நாகேந்திர துரை ராஜன் புகழ் பேசப்படுகிறது. அவனுக்கே தசாங்கம் (36 - 51), பாதாதி கேசம் (52-63), உலா (65-) என்பன அமைந்தன. கூளப்ப நாயக்கனின் குடும்ப சரித்திரம் முழுமையும், தந்தை - சகோதரர் பெயர்கள் முதலியவற்றுடன் நூலின் பிறவிடத்து இடம் பெறுகின்றது. கவிஞர், தம் நாட்டு வரலாறு கூறும்போது மன்னனையும், தான் பரத்தை யுறவால் பொருளனைத்தையும் இழந்த பின்பு தன் அட்டாவதானத் திறனால் கூளப்பனிடம் பரிசு பெற்ற சூழலை விரிக்கும் போது அவ் வள்ளலையும் பாடி இரட்டைத் தலைவர் புகழ் அமைக்கின்றார் எனல் தகும்.

(6) தத்துவம் கூறும் நோக்கும்

சாத்திரக் கருத்துகளை, இறைத் தத்துவத்தைக் கூறும் நோக்கில் தூதிலக்கியம் முகிழ்த்ததை, உமாபதி சிவாச்சாரியரின் நெஞ்சு விடு தூது காட்டும். பேரின்பத் தூதாகவும், ஞானாசிரியர் மீது மாணவர் - சீடர் பாடிய தூதாகவும் அமையும் இது குருவும் சிவனும் ஒன்றெனக் கண்டு காட்டுகிறது. நூலின் முற்பகுதி சிவபெருமானின் பரம்பொருள் உண்மையைக் கூறி, சைவ சித்தாந்தக் கருத்துகளை மிக எளிமையாகவும் அழகாகவும் கூறுகின்றது. இறுதியிலமையும் தூதுப் பகுதி புறச் சமயவாதிகளின் கொள்கையை விளக்கி மறுபபதும் சுட்டத் தக்கது. இதனைப் பின்பற்றிப் பிற சில நெஞ்சு விடு தூது நூல்களும் தத்துவ நோக்குக் கொள்கின்றன என்பதைச் சிவப் பிரகாசரின் சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது,

தத்துவராயரின் (சொரூபானந்தர்) நெஞ்சுவிடு தூது போன்றன காட்டுகின்றன. இங்கும் சிவஞானியின் சிறப்புப் பேசலில் தத்துவச் சாயல் மண்டிக் கிடக்கிறது; புறச் சமய மறுப்புப் பொருந்துகிறது.

(7) சமயப் பிரச்சாரம்

இறைவன் தலைவாக அமையும் தூதிலக்கிய நிலை சமயச் சார்பு புலப்படுத்தி, சமயப் பிரச்சார நோக்கை உட்பொதிந்து அமைதல் கூடும். ரூ. தாமஸ் என்பாரியற்றிய 'பேரின்பத் தூதுப் பாடல்கள்' கிளித் தூதாக, தலைவி தலைவன்பால் விடுத்த தூதாக அமைவது[15], கிறித்தவ சமயப் பிரச்சார நோக்கம் கொண்டிருக்கக் கூடும்.

ஒரு குறிப்பிட்ட சமயப் பரப்புதல் இல்லெனினும், ஒரு தலம் - அங்கெழுந்தருளிய இறைவன் - இறைவி என்போரைப் பாடுதல் - பரவுதல் அமைவதும் இங்குக் கருதப்படலாம். இறைவர் உயர்வு கூறும் நோக்கம், கோயிற் பெருமை வகுக்கும் நோக்கம், தலச் சிறப்பு வலியுறுத்தும் நோக்கம் என இது விரியலாம். கோயில் வழிபாட்டு நிலை - விழா போன்றன இறை உலாவினையும், தலைவன் - தலைவி கண்டு கைக்கிளைக் காதல் கொள்ளும் சூழலையும் அமைத்தளித்துப் பொருந்தி யிணைவதுண்டு. ஒன்றிலொன்றுஇ ன்றியமையாமை பெறுவதும் ஒன்றாலொன்று நிறைவு பெறுவதுமாக (Complementary) இவற்றைக் கூறலாம்.

ஆனைவிடு தூது கூடற்கோயிலையும் சொக்கேசரையும் மீனாட்சியையும் வருணிக்கிறது. திருநறையூர் நம்பி மேகவிடு தூது பாற்கடலில் பரமன் பெருமையும் நிலையும், மாலோடிணைந்த புராணச் செய்திகள் பல (59 - 107) கூறிப் பின் திருக்காவிரி வளனும் திருநறையூர் சிறப்பும் (108 - 116). நம்பியின் சிறப்பு (117 - 128), நம்பி திருவிழாக் கோலம் - மண்டபத்து அமர்தல் தேவர் பணிதல் (129 - 151) எனப் பிறவற்றையும் விரிக்கின்றது.

காரை காளத்தி விநாயகர் கிள்ளை விடு தூது இவ்வாறே பரவலாக 'தலபுராண நோக்கு'[16] வெளிப்படுத்தியமைறது. காளத்தி விநாயகரை வழிபடுவோர் அடையுப் பேறு (109-119) கோயில் வளன் (120-122) நந்தவனச் சிறப்பு (123), காரை வளன் (124-138), திருவிழாக் காலச் சிறப்பு (139-141), கோடை வசந்தத் திருநாள் சூழல் (142-157), கோயில் நித்ய

படித்தர நியமம் (158-164) என்பன கூறிக் 'கோயில்' வரலாறு கூறும் நோக்கும்' கொள்கின்றது போலும்.

பழனியாண்டவர் மயில்விடு தூதும் முருகனின் பரத்துவம் (1-9), பல்பெயர்க் காரணம் (10-21), அறுபடை வீடு (22-28), பழனி யியற்கை (36-48), சாதுசாமி நந்தியாச்ரமச் சிறப்பு (59-73), இறைவன் அபிடேகம் கொள்ளும் மாண்பு (134-137), பதினாறு (சோடச) உபசாரம் (148-155) எனக் கோயில் - வழிபாடுகளைக் கண்முன் காட்சிப்படுத்தும் நோக்கம் கொள்கிறது.

இறைத்தலங்களைப் பட்டியல் செய்தும், களவித் தலைவன் அவ்விடங்களில் பயணப்பட்டதாகவும் தரும் விறலிவிடு தூதுச் செய்திகளும் சமயச் சார்பு நோக்கம் கொண்டு, 'புனித யாத்திரை நோக்க' இணைவைத் தருவதாகக் கொள்ளலாம். கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது (121-145) அட்டாவதானி சென்ற தலங்களைப் பட்டியல் செய்யும். சிதம்பரேசுரர் விறலி-விடு தூது, மனைவியிடம் ஊடல் கொண்ட அவதானியின் சிவத்தல யாத்திரையையும் (76-96), பரத்தையிடம் பொருளிழந்தபின் சிதம்பரச் சிற்றம்பலத்துள் புக்கு நடராசரை தரித்து முறையிட்டமையையும் (1097-1148) தருகின்றது. சில தூதுகள் மனைவியிடம் ஊடல் கொண்ட தலைவன் யாத்திரையில் தலங்களைக் கூற, பிற சில பரத்தையரிடம் பொருளிழந்த பின்பு இதனைத் தருகின்றன. செண்டலங்காரன் விறலிவிடு தூது இவ்விரண்டாம் வகைக்குச் சான்றாகும் (514-531); சங்கரமூர்த்தி ஐயரவர்கள் விறலி விடுதூது நூறு சிவத்தலங்கட்குச் சென்றதைத் தந்து (116-163) முன்வகைக்குச் சான்றமைக்கிறது

(8) சமய மறுப்பு நோக்கம்

மிக அருகியே, சமய மறுப்பே முதல் நோக்கமாகத் தூது இலக்கியம் எழுந்துள்ளது எனலாம். தத்துவ நோக்குடைய நெஞ்சுவிடு தூதுகள் புறச்சமயங்களை விலக்குதலைத் துணை நோக்கமாகக் கொண்டன என ஓரளவு கூறலாம். ஆயின், (ஆசிரியர் பெயரறியப்படாத) திருப்போரூர் கிள்ளைவிடு தூது ஏசுசமய மறுப்பு நோக்கினதாகப் புலப்படுகின்றது. இந்நூலின் முடிவுப்பகுதி கிடைக்காத போதும், 593 கண்ணிகளின் பெரும்பான்மைப் பகுதியும் விவிலியச் செய்திகளை விரித்தும், பழைய ஏற்பாட்டின் பல வரலாறுகளை எடுத்தியம்பியும்,

கிறித்துவ சமயத்தை மொழிந்தும் முன் பின் இடையில், கடிந்தும் கூறுவது சுட்டத் தக்கது.

வில்லியநூற் கொள்கை மிகுத்தலா லான்றோர்
நவிலிய நூலொன்று நவிலேன்... (56)

எனவும்,

சிற்றறிவா
லேசுமதம் பெரிதென் றிச்சைவைத்தே னானாலுந்
தேசுவிடத் ததிலே சேர்ந்ததிலை... *(61-62)*

எனவும் 'தற்சார்புடன்' கூறுவதாக அமையும் பகுதியுடன்,

நீயுரைத்த வேசுமத நீனிலத்தி லுற்புத்தி
யாயவிதஞ் சற்றே யறையக்கேள்... *(195)*

எனத் தொடங்கி,

யேசுகதை சீடரெழுது நிருபக்கதை வீண்
வாசகங்களும் வேத மாயினவே... *(394)*

எனக் கொண்டு சென்று 405 கண்ணிவரை யமைப்பது காணப்படுகின்றது. ந. வீ. செயராமன் அவர்கள்,

> ''கந்தசாமி முதலியாரின் திருப்பேரூர் முருகன் கிள்ளைவிடு தூதில் கிறித்துவ சமயக் கொள்கைகள் கண்டனம் செய்யப்பட்டிருந்ததை அடுத்து அதற்கு மறுப்பாகப் **பிள்ளைவிடுதூது** என்னும் இந்நூல் வெளிவந்தது என்பர். ஆயினும் பிள்ளைவிடு தூதிற்கு மறுப்பாக, 'சிசு ளெத்திய திரண சண்ட மாருதம்', 'பிள்ளை விடுதூது ஆபாச விளக்கம்' ஆகிய இரு நூல்களும் வெளிவந்தன என்றும் தெரிகிறது''[17]

என்பர். சமய மறுப்பு நோக்கமும், சமய மறுப்புக் கண்டன நோக்கமும் பற்றியும் தூது நூல்கள் எழுந்தமை இதில் விளங்கும்.

(9) வரலாற்று நோக்கம்

வரலாற்றாளராக (historions) தூதிலக்கிய ஆசிரியர் அமையாத போதும், வரலாற்றுச் செய்திகளைக் கருதத்

தக்க சிலவற்றையும் அவர்கள் கூறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனரோ எனத் தோன்றுகின்றது.

'வாழ்க்கை வரலாறு' எனவோ 'அரசியல் வரலாறு' எனவோ விதந்து ஓத முடியாத போதும் இத்தகு செய்திகள் அமைவது இவ் எண்ணத்தை எழுப்புகின்றது.

ஆசிரியன் தன் வரலாறு கூறல், உடன் கால வரலாறு கூறல், ஓர் இன வரலாறு கூறல், பாட்டுடைத் தலைவன் வரலாறு கூறல் என இது பல்கிப் பெருகும். ஒவ்வொரு நூல்களில் இவை நோக்கக் கூறாகவன்றி இயல்புக் கூறாகவும் பொருந்தியிருக்கலாம்.

ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக ஞான சம்பந்த சுவாமிகள் மீது அழகிய திருச்சிற்றம்பல சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கிளிவிடு தூது' மாணவர் ஞானாசிரியர் மீது பாடியதாக அமைகின்றது! இதற்கு வித்வான் டி. சுந்தரேசன் அளர்கள் முன்னுரை எதும்போது,

> ''இந்நூலாசிரியர், தம் ஞானாசிரியர்மீது தம்மை ஆட்கொண்ட வரலாற்றைக் கிளி வாயிலாகச் சொல்லுவதன் மூலம் தமது வரலாற்றையும் அவர் பிரதாபத்தையும் நன்கு எடுத்துரைத்துள்ளார்''
>
> (ப. vii)

எனக் கூறுவதில் 'தன் வரலாற்று' நோக்கம் வலியுறுத்தப் பெறுகின்றது. ஆயின் உடல் வாழ்வன்றி ஆன்மீக அல்லது மனவாழ்வு நிலையே அமைவது.

ஊளார்ந்து
வீடாப் புலப்புனத்தை வெட்டியருள் வித்திட்டுத்
தேடா விளைந்ததொரு தெய்வீகம் - காடார்
கருங்கற் பிசைந்து கனியாக்கல் போலென்
னிரும்பைக் குழைத்தவிள வேனில் - கரும்பான
வன்னைதனி லும்மினிய வையர்தா ருண்ணினைந்து
தன்னை மறக்கவந்த சையோக - மென்னறிவால்
தாழாமற் றாழ்ந்து தலைகொடுத்து நின்றேற்கு
வாழாமல் வாழவந்த மாநிதியம்... (86-90)

ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள்மேற் பாடிய பொன்விடு தூதில், ஆசிரியர் அமிர்தம். சுந்தரம்பிள்ளை தன் வரலாற்றிற்கு

நூலின் பிற்பகுதியில் (278 முதல்) ஓரளவு இடமளிப்பார் (தன்னைப் பற்றிய உண்மைகள் (278-84) கூறி, தரிசித்த பல் சிவத்தலங்கள் சுட்டி, இறுதியில் மதுரை இறைவியைத் தரிசித் ததும் (815-20) கூறி, மீண்டும் இவ் இறைக் காட்சி விரும்பி, தலைவனான அம்பலவாண தேசிகர் பரிசிலாகத தந்த பொன்னையே தூதாக்குகிறார்.)

உடன்கால வரலாறு கூறும் நோக்கம் கவிஞர் நெல்லை. ஆ. கணபதியின் ஆனைவிடு தூதில் தெள்ளெனப் புலப்படு கின்றது.

> காவியம் படைத்த காலத்தில் வாழ்ந்த நாடாள்
> வோர் வரலாற்றையும் இணைப்பது மரபு எனவே
> தமிழக அமைச்சர்கள் பெயர்கள் சிலேடையாக(த்)

தரப்பெறுவதாக 41-ஆம் கண்ணி முன்னுரை அமைகின்றது. பத்துக் கண்ணிகள் (41-50) இதனை நிறைவு செய்கின்றன. தன் கவிதைக்குப் பரிசாகப் பொற்கிழியைப் பெற்று வரும்படி ஆனையிடம் கூறும் இப்புறத் தூது போலவே, முருகனைக் காமுற்ற தலைவி பாடும் 'அன்பு விடு தூது' எனும் பி. என். இராஜமாணிக்கம் பிள்ளையின் அகத் தூதும் உடன்கால வரலாற்றிற்குச் சிறிது இடமளித்தது.

> திருமயில ஆதீனத்துத் தற்போது எழுந்தருளியிருக்கும்
> 18-ஆம் பட்டத்துச் சிவஞான பாலய தேசிகர் கிறப்பு

என ஒரு பகுதி இதில் அமைகின்றது.

> **தண்டமிழ்க்குத் தொண்டால் தமிழிளைஞர் முன்னேறக்**
> **கண்டோ ரதிசயிக்கக் கல்லூரி - கண்டோன்** (92)

என்பது போன்று இது அமையும்.

'செங்குந்தர் துகில்விடு தூது' பெயர் நிலையாலேயே செங்குந்தர் இன வரலாற்றைக் கூறும் நோக்குச் சுட்டுகின்றது. இதன் ஆசிரியன் பரமானந்த நாவலன், தன் வரலாற்றை நூலிடையில் கூறி (135-138), தம் இன வரலாற்றுடன் நூலை ஆரம்பிக்கிறார். 'தேடுந் தமிழ்க் குதவும் செங்குந்தர் மீது புகழ் சூடும் துகில் விடு தூது' எனக் காப்புச் செய்யுளும் இந்நோக்கை உரைக்கின்றது.

தலைவன் புகழ்நோக்கு அமைவதால், தலைவன் வரலாறு கூறுவதும் இணைதல் இயல்பு. மானிடத் தலைவனுக்கு அரசனாயினும் வள்ளலாயினும், பெரியோனாயினும், இப்பாங்கு பொருந்துதல் பெரும்பான்மை. திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது, மானிடத் தலைவனைப் 'பூவைநிலை' (புறம்.8 துறையால்) கடவுளாகவே காட்டியபோதும், வரலாறும் கூறுகின்றது. கொலுவிருக்கை முதலியனவற்றைக் கூறியதுடன் கொடிவழியையும், உடன் பிறப்பையும், உறவினரையும் மற்றும் பெயர் சுட்டி விரிக்கின்றது (42-59). கைக்கிளைத் தலைவியால் காமுறப் படுபவனாக இவனமைய, பாட்டுடைத் தலைவனாக மட்டுமமைபவனும் இத்தகு வரலாற்றுச் செய்தி யிணைவு பெறுவதுண்டு. கூளப்ப நாயக்கன் சரித்திரத்தை அவ்விறலிவிடு தூது போல, செண்டலங்காரன் வரலாற்றை அவனைப் பற்றிய விறலிவிடு தூது தருகின்றது. தாதை, தந்தை, சுற்றம், நட்பு (58-82) என இது விரிகின்றது.

வஞ்சியர்க்கு
முத்தா மழகிரிக்கு முந்துமுத்துக் கிருஷ்ணனுக்கும்
அத்தா னெனுஞ்செண் டலங்காரன் - நித்தியனாங்
கண்ணன் திருவேங் கடனாத பூபனையும்
பண்ணுந்தும் ராசகோ பாலனையும் - நண்ணுபுகழ்ச்
சத்திய வாசகனுந் தம்பிநல்ல தம்பியையு
மைத்துன மாரென்ன மகிழுவோன் (76-79)

வெள்ளைய ராசேந்திரனுக்கு இத்தகைய சுற்றத்தினர் சிறப்பையும், மாற்றரசர் கப்பம் செலுத்தியதையும், அரசாண்ட சிறப்பையும் போர்க்களச் சிறப்பையும், பிறவற்றையும் (95-140) துகில் விடு தூது தருகின்றது.

(10) நன்றி பாராட்டும் நோக்கம்

ஒருவர் பால் பெற்ற பல்வகை நன்மைகளை நெஞ்சுருக நினைத்துப் போற்றும் நல்லுள்ளம் கொண்ட புலவர்க்கு அதனைப் பாராட்டுதற்குத் தூதும் ஒரு சிறப்பு கருவியாயிற்று எனலாம். கம்பன் சடையப்ப வள்ளலை உவமை முதலியவற்றில் வைத்துப்பாடி, இந்நோக்கத்தை இலக்கியத்தில் நிறைவேற்ற, தூதுப் புலவர் பலர் அவ்வள்ளலை — பெரியோரைத் தலைவராக்கி நன்றி பாராட்டினர்.

அண்மைக் காலத்தெழுந்த தமிழ்விடு தூது எனும் நூல்,

> சீமான் இரத்தினம் பிள்ளை யெனும் உபகாரி தமக் காற்றிய நன்றி பலவும் பாராட்டுதல் காரணமாய் இயற்றப்பட்டது.

எனும் முன்னுரைக் குறிப்புத் தருவது இவ் எண்ணத்தை வலி யுறுத்தும். தூதுச் சிறப்பும் (1-278), தூதாளி வரலாறும் (277 முதல்) மட்டும் கூறும் இந்நூல் 'இரத்தினம்' என்ற சொல்லைப் பல்பொருளில், பல் நிலையில் நூலில் பலவிடத்தில் ஆண்டது. தூதின் முடிவிலும் நன்றி பாராட்டல் ஒலிக்கிறது.

> **இன்னும் பலபிறப்பில் யாக்கை யெடுத்திடினுந்**
> **துன்னிநீ நங்கேண்மை தோண்மை கொண்டு-பின்னிவந்த**
> **காதல் கழலாமற் கைகோத்து வாழியென**
> **வோதியரு ணீதூ துவந்து** *(469-70)*

செண்டலங்காரன் விறலிவிடு தூதின் முன்னுரையிலும் இந் நன்றி பாராட்டலைப் பதிப்பாசிரியர் குறிப்பர்.

> செண்டலங்காரன் என்னும் பெயருடைய வள்ளல் மீது தாம் வைத்த மதிப்பினை, நன்றியறிதலாகப் புகழ்ந்து நிலைநிறுத்தும் விருப்புடன் ஆசிரியர் இந் நூலினைச் செய்துள்ளார். (ப. ii)

இந்நோக்கம் பிற பல தூதுகளிலும் இழையாகி யிணைந்தமைந் திருக்கக் கூடும்.

(11) பரத்தையர் இழிவு கூறல்

பரத்தை யுறவால் மனைவி ஊடல் கொள்ளும் 'மருத' நிலை விறலிவிடு தூதின் கருவாகின்றது; பரத்தையோடுள்ள உறவும், உறவு கொண்டான் எனும் ஐயமும் தலைவியின் ஊடலுக்குக் காரணமாகி அவனைப் பிரியச் செய்து, ஆடல் வல்லுநளான பரத்தை யொருத்தியின் வலையிலகப்பட்டு இழிய-இழிவுறச் செய்கின்றது. இவ் இழிவு பிறருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற நல்லுணர்வால், பரத்தையரியல்பும் அவர் பாலகப்பட்டோர் துன்பமும் விரிவாக விளக்கப்படும் நிலை விறலிவிடுதூதி லமைந்துள்ளது. அறிவுறுத்தும் நோக்கம், சமுதாய அறம் கூறும் நோகம் என இதனைப் பொருத்தலாம்.

பரத்தையின் பணம் பறிக்கும் 'வண்டு' இயல்பும், அவளைச் சார்ந்தோர் பணம் ஒன்றே குறியாக இருத்தலும், தலைவனை அகற்ற மாயம்-மருந்து எனப் போடும் பாங்கும், அவளிடம் அகப்பட்ட தலைவன் பல நோய்கட்கு ஆளாகுதலும், வழக் குரைத்தும் நீதிமன்றங்களவனுக்கு உதவவியலா அவல நிலையும் பரவலாகப் பேசப்படுகின்றன.

(12) காம இன்பமும் கலவிச் செய்தியும் கூறும் நோக்கம்

விறலிவிடு தூது நூல்கள் பரத்தை நிலை கூறும் போதே, அவள் கொக்கோகக் கல்லி பற்றிக் கலவின்பச் செய்திகளையும் மிகுத்துக் கூறி 'முரண்' நோக்குக் கொள்கின்றன. இச்சிற்றின்பம் 'இனிப்பான விஷமாக'க் காட்டப்பட்ட போதும் அதைக் கூறுவதும் ஆசிரியர் நோக்கம் போலும் என எண்ணத் தோன்று கிறது. பேரின்பக் காதலின் நெஞ்சுவிடு தூது நூல்களுக்கு நேர்மாறாக இச் சிற்றின்ப றவிலிவிடு தூதுகள் இணை கின்றன.

மருதத் தலைவனின் நேரடி - அனுபவமாக இவை தரப்படு வது ஒரு பாலாக, விறலித் தூதில்லா நூல்கள் சிலவும் இதனைக் 'கனவுக் கலவி' யாகத் தருவதும் இந்நோக்கம் பற்றியே யாகலாம். தலைவன் விடுப்பதாக வரும் வெள்ளைய ராசேந்திரன் துகில்விடு தூது, 'தலைவன் இன்பக் கனாக் காணுதல்' (234—80) என இதனை அமைக்க, தலைவி தூதாக அமையும் திருவேங்கடநாதன் வண்டு விடு தூது அவள் கனவனு பவமாக (226-248) இதனைத் தரும். எஸ். முத்தையாபிள்ளை, துகில்விடு தூதின் முன்னுரையில்,

> கற்போர் வயதிற்கும் தகுதிக்கும் தக்கபடி இச் சிறு காவியங்கள் அவர்கட்கு **உலக நடையினையும்** செந்தமிழ்ச் சுவையினையும் ஊட்டி ஒருங்கே அறிவைப் பெருக்குவன.

எனக் கூறுவது, இந்நோக்கம் ஏற்புடையதா, விலக்க வேண்டியதா எனும் எண்ணத்தை எழுப்பும்.

—ஒருவேளை யாரை ஏற்றிப் பாடினாரோ அவனையும், கேட்டவரையும் நிறைவுற — கிளச்சியுறச் செய்ய இச்செய்தி களைத் தந்திருக்கலாம்.

(13) தன் புலமை வெளிப்படுதல்

கவிஞன் தன்னை வெளிப்படுத்தத் தன் படைப்பைக் களனாக்குகிறான். ஆ. சிவலிங்கனார்.

> தம் புலமை நலத்தையும் வருணனை யாற்றலையும் புலப்படுத்தவே சிற்றிலக்கியங்களைக் கைக் கொண்டனரோ புலவர் எனக் கருதவும் இடம் உண்டு... தமிழின் சிறப்பு முழுதும் அமைத்துத் தமிழ் நூல்களையும் குறிப்பிட்டுச் சிறந்பிக்கப் பிற இலக்கிய வகைகளிலும் தூது வகையே சிறக்கும் எனக் கொண்டு தமிழை ஓர் அரசனாக உருவகித்துப் பாடப்பட்ட 'தமிழ் தூது' என்னும் நூலில் வருணனை சிலேடைகளோடு ஒன்பான் சுவையும் அடங்கக் கூறியிருத்தல் இங்குக் கருதலாம்[18]

எனக் கூறுவர். சிலேடை தூதிலக்கியத்தில் பரவலாகப் பயின்று புலவர் புலமையைக் காட்டும். தூதுப் பொருள் தலைவனுக்குச் சிலேடையாதல் பெரும்பான்மை. அத்துடன் அப்பொருளின் பல் பெயராட்சியும் புலமை வெளிப்பாடாகலாம், மயிலை,

> **சிகாவளமே யாண்மை சிதையாச் சிகண்டி**
> **சுகம்பரமா மினிய தோகாய் - ஒகரமே** *(250)*

எனப் பழனியாண்டவர் மயில்விடு தூது கூறுவது ஒரு சிறு சான்று மட்டுமே. கவியரங்கக் கவிதைகள் போன்று சொல் வன்மையால், கூறுந் திறத்தால் கவரும் புலமை வெளிப்பாடும் உண்டு. அன்பு விடு தூது,

> **தனித்த பெயர்போலத் தானிருந்தேன் காதல்**
> **தொனித் தெழுவா யாகச் சுழன்றேன் - இனித்த**
> **ககரத்தைக் கண்ட ஙகரம் போன் மாறி**
> **ஙகரம்போ லேதனித்தேன்...** *(120-21)*

என 'இலக்கண உவமை' தருவது கவிநிலை வெளிப்பாடாகும். இவ்வாறே வண்டு, விறலி விடு தூதுகள் தரும் இசைச் செய்திகள் விறலி விடு தூது தரும் மருந்து, வசியச் செய்திகள், போன்றன புலவரின் பல்துறைப் புலமை புலப்படுத்தும் நோக்கம் பற்றி

யாகலாம். இதனால், புலவன். தன்னிறைவு பெற (Self satisfaction) விரும்புகிறான் எனலாம்.

(14) பல்பிரபந்தக் கூறு இணைவு நோக்கம்

தூது என்பது 'ஒரு' பிரபந்தமாக இருப்பினும் முன் கூட்டியதுபோல; பல்பொருளிணைவுக்கு அது இடமளிப்பது, புலவனின் 'பல்பிரபந்தக் கூறு இணைவு' நோக்கம் பற்றியு மாகலாம், தொடக்க காலத் தூதும், தூதுப் பாடல்களும், தூதிலக்கியமும் இப்பிரபந்த விரவலை நோக்காகக் கொண்டில, உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூதுகூட, காதல் சூழலின் உலாவைச் சுட்டுதலுடன் அமைந்துவிட்டது,

மட்டவிழ்தார்
வானோன் பவனி வரக்கண்டு வல்வினையேன்
ஏனோரும் ஏத்துதல்கண் டேத்தினேன் - தான் என்னைப்
பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லாம்
நீத்தான் நினைவுவே றாக்கினான்... (58.60)

ஆயின், பின்னுள்ள தூதுகள் சில, பல சிறு கூறுகளில், வெவ்வேறு பிரபந்தத்தை நினைப்பூட்டுவனவாகவும், தருவன வாகவும் அமைகின்றன. இது தூதாசிரியரின் நோக்கம் பற்றி போலும்.

உலா, தசாங்கம், கேசாதிபாதம் அல்லது பாதாதிகேசம், அங்கமாலை, அனுராகமாலை, விரகமாலை, கைக்கிளை, காதல் உற்பவமாலை, மெய்க்கீர்த்தி, தாலாட்டு, (தூதுக்குள்) தூது, குறிகேட்டல் (குறம்), ஆற்றுப்படை எனப் பல கூறுகள் குறைந்தும், பெருகியும் தூதிலக்சியத்தில் காணப் படுகின்றன,

தலைவன் உலா பரவலாக, பெரும்பான்மைத் தூதிலக் கியத்தில் உண்டு (கச்சியானந்த ருத்திரேசர் வண்டு விடுதூது). தசாங்கமும் அவ்வாறே. தலைவனுக்கும் (மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சுவிடு தூது), தூதுப் பொருளுக்கும் (பண விடு தூது) தசாங்கம் கூறல் அமையும். தலைவனின் சில அங்கங்களைப் போற்று நிலையில் அங்க மாலையும் (திருவேங்கடநாதன் வண்டுவிடு நூது), தலைமுதல் அடிவரைப் பேசுநிலையில் கேசாதிபாதமும் (மகாகவி சுப்பிரமணிய

பாரதியார் நன்னூல் விடுதூது) பொருந்துகின்றன. கனவில் பெண்ணைக் கண்டு மருவிய அனுராக மாலை அருகியும் (வெள்ளைய இராசேந்திரன் துகில்விடு தூது), தலைவி தான் காமுற்ற நிலையுரைக்கும் விரக மாலை பெருகியும் (மான்விடு தூது) தூதிலக்கியத்தில் வந்தது. கைக்கிளையும், காதலும் அகத்தூ திலக்கிய மனைத்தின் பொது வியல்பெனலாம். நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடு தூது, பரத்தை தான் பெற்ற பெண்மகளைத் **தாலாட்டலைத்** *தர,*

(மேடேறச் செம்பொன் விளைவேறத் தங்கள்குடி
யீடேற வென்றுதொட்டி லேற்றினாள் - நாடிவந்து
தாரார் தவறாதார் தந்துதந்து நின்சமுகங்
காரார் தவறார் கைகழரார் - போரார
ஏரார வும்பகலும் ஆசைகொண்டு சேராரார்
ராராரா வென்றுதொட்டி லாட்டினாள் - சீரான
கண்ணே மணியே கருவூல மேயினிய
பெண்ணே யமுதே பசுந்தேனே - பெண்ணரசே
வாழ்வே யெனதுயிரே மானே யினியெனக்குத்
தாழ்வே தெனவே தயவாக - நாகுமொரு... *(253-57)*

தலைவன் பரத்தையிடம் அவள் தோழியைத் **தூதாக்கலையும்** *(269-294), விருச்சி (நற்சொல்குறி) கேட்ட பரத்தை வேதவாசிரியரைக் குறி கேட்டலையும் (344-54) சங்கர மூர்த்தி ஐயரவர்கள் விறலிவிடு தூது தருகின்றது.*

தலைவன் புகழ் கூறும் பகுதியை மெய்க்கீர்த்தியுடன் இணைத்து வைத்து எண்ணக் கூடும். திருமாலின் தசாவதாரங் களைக் கூறும் 'உற்பவமாலை', திருமாலைப் பாடிய தூதில் இணைய வாய்ப்புண்டு. மணவை, திருவேங்கடமுடையான் மேகவிடு தூது.

கடற் றலையின்
மீனமாய்க் கூர்மமாய் மேதினியைக் கீண்டகோட்டு
ஏனமா யாளரியா யீன்றாருந் - தானிகனாம்
வாமனமாய் வில்லுமழு வும்வலமுங் கைக்கொண்டி
ராமவுரு மூன்றா யிகல்புரியுங் - கோமளஞ்சேர்

கண்ணர் பிரானுமாய்க் கல்கியுமாய் மேனாளில்
வண்ண மெடுக்கும் வடிவினான்... (64-67)

என இதனைத் தருகின்றது.

தூதுப் பொருளை, 'காலமும் இடமுங் கருதி, இன்னின்னாரைச் சாராது இவ்விவ்வாறு போ' எனக் கூறுவதில் 'ஆற்றுப்படை'க் கூறினைக் கருதலாமா என்பது ஐயம். வடமொழி மரபின் தூதுகளும் (சந்தேசம்/தூதம்) அதனைப் பின்பற்றிய பிற திராவிட மொழித் தூதுகளும், தூதுப் பொருள் கடந்து செல்லும் வழியை விவரிப்பதில் ஆற்றுப் படைக் கூறு தெளிகின்ற அளவு[19] தமிழில் அமைந்தது என்பதற்கில்லை.

(15) முன்னோர் மொழி போற்றல்

தூதிலக்கியச் சிறப்பியல்பாக வன்றி, எல்லா இலக்கியப் பொதுவியல்பாக இது அமைகின்றது. எனினும் குறள் போன்ற அறநூல்கள் எடுத்தாளப்பட்டு இவற்றின் அற நோக்கத்தையும் காட்டுகின்றன எனலாம்:

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாய்ச் சூழ்ந்து விடுமென்று (மான்விடு தூது, 40)

எனக் குறள் (451) வருகின்றது. குறளை எடுத்தாளாத தூதே இல்லையெனுமளவிற்கு இது பெருகிப் பயின்றது.

அஞ்சன வண்ண னடிக்கமல மல்லாதென்
நெஞ்சமு மொன்றை நினையற்க - நெஞ்சுணங்கோ
டிங்கெழுந்த கொக்கை யெழுபிறப்பு மெம்பெருமான்
கொங்கணைந்த தோளல்லாற் கூடற்க...

(மேகவிடு தூது, 197-98)

என்பதுபோன்று பழைய பக்திப் பாடல் மரபு போற்றப் படலுமுண்டு.

ஒன்றுக்கு மேற்பட்ட தூது நூல்களின் அடிப்படையில் அவற்றின் நோக்கமென்ன என்பதை மேற்கண்டவாறு கூறலாமெனினும், இவையே நோக்கமெனவோ, இவை மட்டுமே நோக்கமெனவோ வரையறுக்க முடியாது. ஒவ்வொரு நூலுக்கும், எழுந்த நோக்கமும் இயன்ற நோக்கமும்,

அமையலாம். கலித்தாழிசையிலமையும் தத்தை விடு தூது உண்மையான மானிடக் காதல் தூதாக இயன்றிருக்கலாம்.

கெங்கலர்பூஞ் சோலைவளர் மாங்கிளியே கோதையிடம்
நங்காய்நிற் காதலித்தே நலிவான் மெலிவானால்
தங்கா துயிரென்றான் தானின் சரணென்றான்
நங்கா யிரங்கெனவே நவில்வாய் பசுங்கிளியே
நாரியர்பா லென்னிலையே நவில்வாய் பசுங்கிளியே (33)

மகாத்மா காந்தி நெஞ்சுவிடு தூதோ தேசப்பற்றையும் விடுதலையியக்க - வுணர்வையும் ஊட்டி, காந்தியக் கொள்கைப் பிரச்சாரம் செய்தலை எழுச்சி நோக்கமாகக் கொண்டிருக் கலாம். இவ்வாறு பிறவும் அணுகத் தக்கன. தமிழ் மொழியைப் போற்றுக எனும் கருத்தை உணர்த்தும் காக்கை விடுதூதின் புலப்படு நோக்கமும், இறையனுபவம் மீண்டும் பெற விழையும் பொன்விடுதூதின் கூற்றுநோக்கமும், உண்மை நோக்கங்களாகலாம்; பிறபல தூதின் 'தார் கேட்கும்' காதல் நோக்கம் புனைவு நோக்கமாகலாம். அவ்வாறே 'அவனை அழைத்துவா' என்பதும் அமையலாம். ஆடவன் தூதின், 'அவளை இணைத்து வை', 'தலைவியின் காதலைப் பெற்று வா' என்பன ஒரு வேளை வேறுபடலாம்.

பயன்

இலக்கியத்தின் நோக்கங்கள் பயனை நோக்கியன. தூதின் பயன் 'சந்தி' அல்லது 'விக்கிரகம்' என அமையினும் தூதிலக்கிய நோக்கமும் அதுவே எனல் ஆகாது. 'காதல் தூது' இணைவுப் பயனும், காக்கைத் தூது பகைப்பயனும் கொள்ளு வதாகத் தோன்றினும், இலக்கியமானதால் உடனடிப் பயன். உடன் காலப் பயன் என்பதுடனமைந்துவிடாது, தொடர்ந்த கால, இக்காலப் பயன்களும் கருத இடமளிக்கும் எனலாம்.

தூதிலக்கிய உடன்காலப் பயன் சில அமையலாம். பாட லாசிரியனுக்கு, இறைத்தூதாயின் பக்தியிலக்கிய மாக்கியமை பற்றித் தன்னிறைவு கிடைப்பது பயனாகலாம்; மானிடத் தலைவனைப் பாடும்போது, ஏற்கனவே சுட்டிய வண்ணம் அவனளிக்கும் பரிசு, சிறப்பு, பாராட்டு மகிழ்வுப் பயனிறை வளிக்கலாம். போட்டியாகவோ, புலமை வெளிப்படுத்தவோ, கருத்து மறுப்புக்கோ பாடப்பட்டதாயின் அந்நிறைவே

பயனாம். பாடல் தலைவனுக்கு, தான்—தன் -புகழ், பெருமை பாடப்படல் பயனாம். இவை பிற இலக்கியங்கட்கும் ஏற்புடையனவாகலாம். கேட்போன் (அவை) பெறும் இலக்கிய இன்பச் சுவையும், செய்திகள் அறிதலும், கதை கேட்டல் போன்ற பொழுதுபோக்குப் பயனும் கூட இந்நிலையினதே.

எனினும் சமயப் பயன், சமுதாயப் பயன், வரலாற்றுப் பயன், கலைப் பயன், இலக்கியப்பயன், மொழிப்பயன் என எல்லா இலக்கியத்திற்கும் பொதுவாக நோக்கக் கூடிய இயல்பின் பயன்கள் இங்கும் நோக்கப்படலாம். இவை உடன் காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் உரியதாகக் கண்டு காட்டக் கூடும்.

தொடக்க காலத் தூதுகள், பிற்காலத் தூதுகளுக்கு வழி காட்டியாக இருந்த பயனைப் பெறுகின்றன. இடைக்காலத்து எழுத்து விழுந்துவிட்டவகையாகத் தூதிலக்கியம் அமையாது இருபதாம் நூற்றாண்டிலும் - இன்றுவரை உயிரோட்டமுடன் தொடர்ந்து நிலைத்த பயன் - பயன்பாடு காட்டியது. கீர்த்தனையில் வள்ளலாரும், பாரதியும், கிளி, தோழித் தூதுகள் தந்தனர். இறைவனுக்கு விடப்பட்ட நெஞ்சத்தூது, இந்திய தேசத் தந்தைக்கும் உரியதாயிற்று; சொக்கேசருக் கனைந்த 'தமிழ்த் தூது' சீமான் இரத்தினம்பிள்ளைக்கு மாயிற்று.

பிரபந்த நிலையில் மட்டுமன்றி புதினம், திரைப்படத் துறையிலும்தூது பரவிற்று. ஓரிதழில் இருநாவல் தரும் 'மோனோ' (15-1-85, பொங்கல் சிறப்பிதழ்) பட்டுக்கோட்டை பிரபாகரின் 'துப்பாக்கிவிடு தூதி னை'த்தருகின்றது; 'ஓடும் மேகங்க'ளைத் தூதாக்கிய பாடல் நிலை, திரையுலகில், 'மேகத்தைத் தூது விட்டால் திசைமாறிப் போகுமென்று, தாகமுள்ள மச்சானுக்குத் தண்ணீரைத் தூதுவிடும்' பாங்குவரை வந்துள்ளது. இவை தூதின் தற்காலப் பயனென்பதுடன் தூதிலக்கியத் தாக்கம் விளைந்த பயனெனவும் கூறலாம்.

தூதின் பயனை ஆய்வாளரொருவர் கீழ்வருமாறு விளக்குகின்றார்:

> தூது என்னும் அரிய துறை தொடக்கக் காலத்திலிருந்தே அரசியலில் பெரும் பங்கு வகித்து வருகின்றது... அன்றியும் இத்துறை பகைவர், நண்பர், தலைவன், தலைவி முதலியோர்களாலும்

> போற்றப்பட்டு வருவதைக் காணலாம்... அது மக்கள்தம் நல்வாழ்விற்குத் துணை நிற்பது...கலை (வாழ்க்கை) இரண்டிற்கும் உரியது என்றும் நடுநிலை முடிவு பகரும் பெருமை படைத்தது தூது இலக்கியமே... இஃது ஒரு புறம் மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு மறுபுறம் இலக்கியத்தைக் கற்று இன்பம் துய்க்க விழையும் இலக்கிய ஆசிரியர்களையும் நிறைவு செய்கின்றது.[20]

இலக்கியச் சுவைப்பயனும், சமுதாய அறப்பயனும் இவ்வுரையில் சுட்டப் படுகின்றன. புலவர் சி. கோவிந்தராசனார், செண்டலங்காரன் விறலிவிடு தூதுக்கு முன்னுரை எழுதும் போது 'பயன்'பற்றிக் கூறும் கருத்துகள் பன்முனைப் பார்வை காட்டுகின்றன—

> ...பழமையான இத்தகைய சிற்றிலக்கியங்களை வெளியிடுதலாலுண்டாகும் பயன் என்னவென்று சிலர் எண்ணக் கூடும்.
>
> ஒரு பழைய தமிழ் இலக்கியத்தினால், அதனை இயற்றிய புலவரின் மொழியறிவும், அவரால் மதிக்கப்பெற்ற செல்வர்கள், மன்னர்கள் ஆகியோருடைய இயல்பும், அவர்கள் வாழ்ந்த காலப் போக்கும், அக்காலத்திலிருந்த தெய்வ வழிபாடு, ஆட்சிமுறை முதலியனவும் அக்கால மக்களின் ஒழுக்க பழக்க வழக்கங்கள், செயற்கரிய செயல்கள் ஆகிய வரலாற்றுப் பகுதிகளாகும் சான்றுகள் பலவும் கிடைக்கின்றன. (ப. iii)

ஒரு குறிப்பிட்ட காலத்திலும், இடத்திலும் எழுந்ததால் இவ் இலக்கியவகை அவற்றின் பிரதிபலிப்புகளைத் தரும் என்பது ஏற்புடையதாகலாம். 17ஆம் 18ஆம் நூற்றாண்டின் மன்னார் குடி (தஞ்சை) இவ்விறலிவிடுதூதால் விளக்கப்பெறும். அன்றியும், பிறவகைத் தூதிலக்கியங்களிலும், விறலிவிடு தூது, தனித்த — வேறுபட்ட, பயனும் கொள்வதும் மேற்படி முன்னுரையில் விளக்க முறுகின்றது—

> விறலிவிடு தூதாகும் இந்நூலில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஒன்று பரத்தை மகளாகிய சித்திர வல்லியை விரும்பிச் சென்ற வாகுபட்ட

> னெனும் அந்தணன் அவர்களின் பொய் முயக்கத்தில் சிக்கிப் பொன்னிழந்து நிலை தளர்ந்து நாடோடியாக வெளியேற்றப்பட்டுத் திரிந்ததனை உருக்கமாக விளக்கிக் கூறுதலின், **இதனைப் போன்ற நூல்களைப் பயின்றார், இத்தகைய அறிவுரையாகும் அனுபவங்களைக் கண்டு, வாழ்வில் திருத்தமடைந்து நல்வழிப்படுதலும்** இதனாலுண்டாகும் பயனாகுமன்றோ. (ப. iii)

இடைக்காலத்தில் பிற சில பிரபந்த வகைகள் தூதைத் தம் உறுப்பாகக் கொண்டு பயன்கொண்டன. கலம்பகத்தில் தூது உறுப்பாகியது காலப் பழமையுடையது; குறவஞ்சி உலாக்கண்டு காமுற்ற தலைவி தோழியைத் தூதனுப்புவதை இன்றியமையா உறுப்பாகக் கண்டது. அகச்சார்புடைய சிற்றிலக்கியங்கள் பலவற்றிலும், அகக் கருத்துகள் கூறப்பட்ட பிற பிரபந்தப் பாடலிலும் இது இடம்பெற்றது.

சில பயன்களைக் கருத்தில் கொண்டே தூது நூல்கள் எழுகின்றன. 'இறைவன் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தமை' கூறும் தூது இலக்கியம், 'அகத்துறை வாயிலாகக் கடவுள் தத்துவம் விளக்குவன. எனப்படலால், கடவுள் தத்துவத்தை விளக்கும் பயன்பெறுகின்றன. அதே வேளை, அகத் தூதுகள் அத்துணைப் பயனுடைவையல்ல எனும் கருத்தும் உண்டு —

> இடைக்காலத்தில்... தூது... இலக்கியங்கள் பெரும்பாலும் பாலுணர்ச்சியையே தூண்டுவனவாக அமைந்தன. அதனால் நிலைத்த பயன் விளையாது போயிற்று.

என மா. சி. தசரதன், புலவர் விடு தூது முன்னுரையில் கூறுவார். எனவே, பழைய தூதுகளுக்கு மாறாக இதுபோன்ற படைப்பு, 'தனிமனிதனின் இச்சைகளை விட நாட்டின் நலன் பேசி'ப் பரந்த — பொதுப் பயன் விளைவை நாடுகிறது. ஆசிரியர் அரங்கசாமி, புலவர் விடு தூதின் தொடக்கத்தில் இயக்கம் உருவாகும் பயன், சீர்திருத்தப் பயன் என்பதைக் கருத்தில் கொள்கிறார் —

> இடையில் தோன்றி நம்மிடை நிலவும் சாதி, மதம், சமயம், கட்சி இவைகளில் கலந்துள்ள, அறிவுத் துறை - நட்புத் துறை - அரசியல் துறை - வாழ்க்

> கைத் துறை முதலியவற்றை மட்டும் போற்றி, அவற்றால் வளர்ந்துள்ள பிளவு எண்ணங்களை அறவே நீக்க வேண்டும். அந் நிலையை உணர்த்தும் இலக்கியங்கள் பல உடனடியாகத் தோன்ற வேண்டும். அதில் ஒன்றே இப்புலவர் விடு தூது...

ஓலை, சீட்டுக்கவி போன்ற எழுத்து நிலையன்றி, வாய்மொழியாகத் தொடக்கத்தில் அமைந்த தூது, இலக்கியமாகி எழுதப்பட்ட நிலையில் பல்பயன் வேறுபாடும் கொண்டது எனலாம்.

(1) மொழி வரலாற்றுப்பயன்

மொழியாய்வுக்கு மக்களின் பேச்சான வாய்மொழி பயன்படுவதுடன் எழுத்து மொழியும் பயன்படுகின்றது. ஒரு காலத்தின்—ஒரு இடத்தின்—மொழி நிலையைச் செப்பேடும், கல்வெட்டும் உணர்த்துவது போல இலக்கியமும் காட்டும். தூதில் பெரும்பான்மை, இலக்கிய மொழி தரினும், விறலிவிடு தூது சில, இழி வழக்கும் கொச்சை மொழி நிலையும் தருவது பாடுபொருளின் தன்மை பற்றியாகலாம்; அவை, ஆக்கியோன் நிலையும் காரணமாகலாம்.

பிற மொழிக் கலப்பு ஒவ்வொரு காலத்தும் வெவ்வேறு பட்டடமையலாம் என்பதையும் தூதிலக்கியம் வாயிலாகத் தெரிய முடிகிறது. தூதிலக்கிய தொடக்க நிலையில் வடமொழிக் கலப்பமைய, பின்பு பிற வேற்று மொழிச் சொல்லமைதலும் காணப்படுகிறது. இதுவும் காலம் மட்டுமின்றி, இட ஆக்கியோன் சார்பு (கல்வி) காட்டவல்லது.

அமிர்தம் சுந்தரநாத பிள்ளை Dheque, Bomb, orpedo போன்ற ஆங்கிலச் சொற்களுக்கு இடம் தருவார் (பொன்விடு தூது).

> **உண்டியலுஞ் செக்கும் உயர்நோட்டும்...**
> **காணா வகையாற் கரந்துநீ ருட்செல்லும்**
> **மாணாரும் டார்பிடோ மாண்படகும்...**
> **வீழச்செய் விந்தை வியன்பாம் துப்பாக்கிகளும்**
>
> *(172,210,214)*

சென்டலங்காரன் விறலிவிடு தூது, சலாம் (301), ஹாட்டி (466) போன்ற பிற மொழிச் சொற்களைத் தந்தது.

அருளு
மனக னதுல னசல னதிக
சனக-விதுர சதுரன்-மனதி
னெறியு நியம நிலையு முரிமை
யறிவு முடைய வழகன்... *(15-16)*

என வடமொழித் தமிழ் இணைச் செலவு திருவேங்கட நாதன் வண்டுவிடு தூதில் அமையும்.

ஏற்கெனவே சுட்டியபடி, தூதுவிடு பொருள் அதன் பல பெயர்களால் சுட்டப்படல் இங்குப் பயின்றது. நிகண்டு, மொழியறிவை இது புலப்படுத்தியறிவிக்கிறது. அன்றியும் அப் பொருட் சார்புடைய பல்வேறு சொற் களஞ்சியமும் அமைவதைப் பொன், பணம், துகில்... விடு தூதுகள் தெளிவாக்கும். சிலேடையால், ஒரு சொல் பல்பொருள் நிலைக்கும் 'இலக்கியம்' அமைகின்றது.

(2) இலக்கிய வரலாற்றுப் பயன்

தமிழிலக்கியப் பெருக்கின் துளிகள் என்ற நிலையில் ஒவ்வொரு தூதிலக்கியமும் தனித்தனியே கருதுதற்குரியது; எனினும் தமிழைப் பற்றிப் பாராட்டிப் பேசியெழுந்த தமிழ்நாடு தூது, தமிழிலக்கிய வரலாற்றை அறியும் வாய்ப்பை அளிப்பது தனித் தன்மை. நன்னூல் விடு தூதிலும், கவிஞர், முதல் 13 கண்ணி களில் தமிழ் நூல் வரலாற்றைக் கோடிட்டுக் காட்டு கின்றார்.

(3) சமய வரலாற்றுப் பயன்

தமிழின் சமய வரலாறு எனும் பக்தி இலக்கிய வரலாறு பற்றி யறியும் பயனும் தமிழ் விடு தூது வழிக் கிடைக்கின்றது. சிவப்பிரகாசரின் நெஞ்சுவிடு தூதும், சுந்தரர் முதல் (143) நாவுக்கரசு, இயற்பகையார். சிறுத்தொண்டர் எனத் தொடர்ந்து பல சிவனடியாரைச் சுட்டி நினைவூட்டுகின்றது. இந்நூலில் வேதம் - தமிழ் பற்றிய வாதமிருந்தது சமய வரலாறறிதல் பயனைத் தருவதும் சுட்டத்தக்கது.[21]

புறச் சமயங்கள் எவையென்பது நெஞ்சுவிடு தூதுகளா லும், ஏக சமயம் பற்றிக் கிள்ளைவிடு தூதினாலும் அறிதல் இவ்வகைப் பயனாம்.

(4) இசைக் கலைப் பயன்

தமிழை முத்தமிழாக்கிய கூறுகளி லொன்றான இசை பற்றிய செய்திகள் சிலவும் தூதில் பொருந்துகின்றன. வண்டு விடு தூது இதனைச் சிறந்த உத்தியாகப் பயன்கொண்டு வண்டின் முரற்சியில் இணைத்து இனிக்கச் செய்கின்றது. காந்தாரம் முதல் குறிஞ்சி வரையிலான பண்களை (438-55) சிலேடையுடன் தருகின்றது.

காந்தாரம் பாடு கனலிற் றழல்கின்ற
காந்தாரங் கொங்கை கலைப்பிப்பார்...
நைவளம் பாடு நனிதேவ நாயகரென்
நைவளம் பார்த்து நலந் தருவார்...
குறிஞ்சி யனைத்துங் குழைந்து பல்காலோது
குறிஞ்சி யுரிப்பொரு ளுட்கொள்வார் *(435,47,55)*

நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி... விறலிவிடு தூது, விறலியின் இசைவண்மை சுட்டுமிடத்து (20-37) கலியாணி, சுருட்டி, மாஞ்சி. ஆரபி, குறிஞ்சி, ஆகிரி, காம்போதி, மணிரங்கு, அடாணா, நாகவராளி, வர்ணம், நாட்டை, வயிரவி. மோகனம். தோடி, கனடா, சுரமண்டலி (இராகமாலிகை). சாரங்கி முதலிய இராகம் தரப்படுவது. முன் சுட்டிய பண்களுக்கு மாறாக, மற்றொரு இசை மரபைச் சுட்டுகின்றது போலும்.

குழந்தைக் கவிராயரியற்றிய மான்விடு தூது பல இசைக் கருவிகளின் பெயரைத் தருவதும் (236-240) பயனுடையது, நகரா, பேரி, தகுணி, இரட்டைச் சங்கு, தொண்டகப்பறை. சல்லரி, துந்துமி. மத்தளம், தாளம். கிடுபிடி, நாகசுரம், வாங்கா, கானா, கொம்பு. தம்புரு, வீணை, சுரமண்டலம் என இவை விரிகின்றன.

விறலிவிடு தூதுகள் தேவரடியாளின் பல்கலை வன்மையைச் சுட்டுமுகத்தால் ஆடற்கலை யரங்கேற்றம் முதலியன தருவது கலைச் செய்தி அறிதற்கு வழிவகுக்கும்.

(5) ஊர்ப் பெயரறியும் வாய்ப்பு

பயண இலக்கியம் தருவது போன்று, தூது நூல்களின் தல யாத்திரை, இடப் பெயர்கள் பலவற்றைத் தருகின்றது. விறலி

விடு தூதுகளிதற்கு இடமளிப்பது ஏற்கெனவே சுட்டப்பெற்றது. அன்றியும் சமயச் சார்புத் தூதுகளும் பல் தலங்களைத் தரும் போது ஊர்ப் பெயரறியும் வாய்ப்பு அமைகின்றது. வண்டுவிடு தூது, காஞ்சியின் பல தலங்களைப் பட்டியல் செய்கிறது (58-77). மானிடக் காதல் தூதும் இதற்கு இடமளிப்பதைச் செங்குந்தர் துகில்விடு தூது தருகின்றது (90-107).

முந்தியசெங் குந்தர் முதலிமா ரன்புபெற்றுச்
செந்திருவா ரூர்நாகை தில்லைநகர் - பந்தர்வளர்
காழிமா யூரங் கடலூர்வே தாரணியம்
ஏழிசைசேர் வேளூ ரிடைமருதம் - சோழவள *(95-96)*

இத்தகைய ஊர்ப் பெயர்கள் பல, பணம் வழங்கும் தலங்கள் பலவற்றையும் பற்றிப் பேசி வரும்போது, சொக்கநாதக் கவிராயர் பாடிய பணவிடு தூதில் அமைகின்றன.

கொங்கு மதுரை கொழும்புதிரு வாங்கோடு
தங்குதிரு நெல்வேலி தஞ்சாவூர் - பொங்குதிரு
வையாறு செஞ்சியுடை யார்பா ளையமுழுந்தூர்
செய்யா றரியலூர் தென்காசி - வெய்ய
கொடியதொரு காற்றுக் குடிகொண்ட தூற்றுக்
குடிதுறை யூர்கண்டிக் கோட்டை.... *(91-93)*

என இது விரியும். சிவஞானியி னிடங்களைச் சிவப்பிரகாசரின் நெஞ்சுவிடு தூது கூறும்-

(6) பணம் பற்றிய செய்தி அறிதல்

ஒரு காலத்தில் ஓரிடத்தில் வழங்கிய நாணய வகைகள் பற்றிய தனித்துறைக் கல்விக்கும் (Numismatics) தூதிலக்கியம் உதவுவதைப் பணவிடு தூது காட்டும், இரு பணவிடு தூது நூல்களும் இவ்வகையில் பயனுறும். பணத்தைக் குறிக்கும் 36 சொற்கள் சொக்கநாதக் கவிராயரின் பணவிடு தூதில் அமைவதைப் பதிப்பாசிரியர் குறிப்பர் (ப. 44). நாணயப் பெயர்கள் வேடிக்கையாக உள்ளன -

நாணயமுங் கோழி விழுங்கலு நண்டுக்கா
லூனையமு மைக்காட்டி லுள்ளாலும் - காணயமாய்க்
கொண்டகீ ழாநெல்லிக் கொட்டையு மெங்கும்போய்ச்
சண்டையிடுஞ் சில்லறையுந் தன்வலுவும்... *(100-101)*

பிறிதொரு பணவிடுதூதும், ஏறத்தாழப் பணத்தின் அறுபது மரபுப் பெயர்களைத் தருவதாகவும், அவை காசு, வராகன், வெட்டு, திரு, செப்பாடல், பணம், மின்னல், சக்கரம் என்னும் சொல் முடிவு பெறுவனவாகவும் தெரிகின்றது.

உன்மரபு சொல்ல வொரு கோடிநாள் செல்லும்
என்மனதில் வந்த தியம்புவேன் - நன்மைதரும்
பல்லங்கிக்காசு பழைய சம்பங்கிக் காசு
புல்லவட்டக் காசு பலக் காசும்... *(113-114)*
செந்தீக்
குருகு பவளக் காட்டிலுள்ள வராகன்
வரு பிரதி புண்ய வராகன்... *(116)*
கொங்குமுளை யென்றுங் குணுங்கலூர் வெட்டென்றும்
வெங்க ணழகாத்ரி வெட்டென்றும்... *(132)*
திருச்சிராப் பள்ளி சிறுசக்கிர மென்றும்
வரிசையாய்ப் பாரில் வழங்கி *(146)*

(7) மருந்துச் செய்திகள்

தலைவனை வசியம் செய்வது பற்றிய குறிப்புகள் வரும் போது விறலிவிடு தூது மருந்துச் செய்திகளைத் தருகின்றது. மூலிகை மருந்து முதலியனவும் (603-614), கடை மருந்து முதலியனவும் (615-23) பிராணிகளின் உறுப்புகள் வசிய மருந்திற்குப் பயன்படுமாறும் (624-36) கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூதில் தரப்படுகின்றமை சான்றாகும்.

கொன்றை மலர் பல நோய்க்கு மருந்தாகுதலை அருட்கவி சனகிநாதனின் திருமந்திரநகர் அருள்மிகு சங்கர ராமேஸ்வரர் கொன்றைவிடு தூது தருகின்றது.

வெம்மூல நோயை விரட்டுவதில் நீயென்றும்
எம்மூல நாதனுக் கீடாவாய் - வம்மூலக்
கோளை அகற்றுநல் கூத்தனைப் போன்றிங்கே
கோழை அகற்றும் குணம்பெற்றாய் - பீழை
வழங்கு மலப்புழுவை வாங்கா யகற்றத்
துளங்கு பரமனுன் நேராம்... *(19-21)*

(8) வரலாறு அறிதல்

நாட்டின் நடப்புகளின் பாதிப்பும் பிரதிபலிப்பும், மக்கள் வாழ்வின் செயல்கள் செய்திகளும் நோக்கத்துடனும், இயல்பாகவும் தூதிலக்கியத்திலுமமைதல் வரலாறறியும் பயனுக்கு வழி வகுக்கின்றது. ஏற்கெனவே சுட்டிய கி. வேங்கடசாமி ரெட்டியாரின் மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சுவிடு தூது, இந்திய தேசப் பிதாவின் வாழ்வையும் இந்திய வரலாற்றையும் ஒருங்கு தருகின்றது. 'அடிகளது சரித்திரச் சுருக்கம்' (49-110) எனும் பகுதி இதனைச் செவ்வையாகச் செய்கின்றது.

பிரிட்டிஷ் அரசன் ஐந்தாம் ஜார்ஜ் பற்றியதும், இந்தியாவை வெளிநாட்டாராண்ட பகுதி பற்றியதுமான செய்திகளை அமிர்தம் பிள்ளையின் பொன்விடுதூது தருவதும் சுட்டத்தக்கது.

காக்கை விடு தூது தமிழக வரலாற்றை, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து ஆண்ட காலத்தையொட்டி அமைந்து, அவரது கோட்பாடுகளையும், மக்கள் எதிர்ப்பையும் அமைப்பதும் இத்தகையதாம்.

(9) இலக்கியச் சுவைப்பயன்

இது தனியானதும், சிறப்புடையதும், பல்வகை நிலையில் விரியக் கூடியதும், அவை. தனிச் சுவைகுனைப் பற்றிப் பல்குவது மாகும். இதுவும் எல்லா இலக்கியத்துக்கும் உரியதாகும். பொருட்கூறுகள் தரும் சுவையும், வெளியீட்டுக் கூறுகள் அளிக்கும் சுவையும் தூதிலக்கியத்தில் பலவாம்; சொற்சுவையும் செய்திச் சுவையும் உள.

இவை தவிர, ஏற்கெனவே சுட்டிய நோக்கங்களின் நிறைவும் பயனாகும்.

தொகையுரை

பாடாணை அடிப்படை நோக்கமாகவும் பயனாகவும் கொண்டெழுந்த பெரும்பான்மைப் பிரபந்தங்களிடையே தூது 'எதிர்ப்புத் தெரிவித்தலை'யும் நோக்மமும் பயனுமாகக் கொண்டு வேறுபடுதல், அருகியேனும், தென்படுகிறது.

மானிட, இறைத் தலைவர் தலைவியரைப் பெருமைப் படுத்திப் பாடும் நோக்கும் பயனுங்கொண்ட பெரும்பான் மைச் சிற்றிலக்கியங்கட்கிடையே தூது, பொருளையும் பெரிதுபடுத்தி - பெருமைப்படுத்திப் பேசும் பாங்கு கொள் கின்றது.

பல்பிரபந்தக் கூறுகளை இணைக்கும் நோக்கு தூது இலக்கி யத்தில் பரவலாக வெளிப்பட்டது போல் பிற பிரபந்தங்களில் அமைந்ததாகத் தெரியவில்லை.

அகப்புறப் பொருண்மை விரவுதல் அத்தகு பிற பிரபந்தங் களிலும் தூதில் பின்னிப் பிணைப்புண்டது.

இணைப் பொருண்மையும். இரட்டைத் தலைமையும் பிற பிரபந்தங்களை நோக்கத் தூதில் சிறப்பாக வெளிப்படுகின்றது.

சமுதாயச் சீர்திருத்த நோக்கம் அற இலக்கியங்களில் நேரடி யாகவும், சமய அறிவுறுத்தல் நோக்கம் சாத்திர நூல்களில் நேரடியாகவும் தரப்பட, தூது அவற்றை இனிப்புப் பூச்சுட னும், இன்பக் கலப்புடனும் அமைக்கின்றது.

சிற்றிலக்கிய நோக்கமும் பயனும் பற்றிய பொதுமைக் கல்வி எத்துணைப் பயனுடையதோ, அத்துணை தனித்தனி இலக்கிய வகை பற்றிய ஆய்வும் பயனுடையது என்பது தூதை நோக்கத் தெரிகின்றது. இவ்வாறே சதகம், கலம்பகம்போன்ற பல, எல்லாப் பிரபந்தமும் காணப்படும்போது பொதுப் பாங்குகளும் தனித் தன்மைகளும் நோக்கப் பயன் பார்வையில் புலப்படும் என்பது திண்ணம்.

குறிப்புகள்

1. தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982, தொகுதி-4, ப. 2016.

2. துதூ-தொல். பொருள். 27.1, 28.1, 44.15, தூதுவர்-தொல்பொருள். 117-2.
Index des mots dela lalitterature tamoulle ancienna Institut Francais 'D' Indologie, Pondichery, 1968, Vol. II, P. 784.

3. தூதுபற்றிய ஆய்வுகள் (பட்டியல் - 1) காண்க.

4. தொல்காப்பியம். 'வாயில்' எனக் கூறுமிடம் காண்க.

5. தொல். பொருள். 99.9; 109. 10, 11.

6. இறையனார் அகப்பொருள், 30.1.

7. இவற்றுள் அன்னம், அன்றில், குருகு, குயில், கிளி, நாரை, பூவை, வண்டு, வாரணம், பறவை, தென்றல், சேவல், கொண்டல் ஆகிய அஃறிணைப் பொருள்கள் தூது சென்று வருமாறு வேண்டப்பட்டுள்ளன.
—ந. வீ. செயராமன், தூது இலக்கியங்கள், மணி வாசகர் நூலகம், சிதம்பரம், 1965, ப 34.

8. இறையனார் அகப்பொருள், 30 உரை.
களவியல் என்ற இறையனார் அகப்பொருள், நக்கீர னார் உரை, கழகம், 1969, ப. 144.

9. இக்கட்டுரைக்கு அடிப்படையாக அமைந்த தூதிலக் கியங்கள் இவ் எண்ணத்திற்கு அடிகோலுகின்றன (பட்டியல் - 2).

10. (அ) ந.வீ. செயராமன், தூது இலக்கியங்கள், பக். 198—202,

(ஆ) இரா. நிர்மலாதேவி, பணவிடு தூது, பக். 104—107.

(இ) வீ. சொக்கலிங்கம், நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயக் அம்மன் பேரில் விறலி விடு தூது, பக். 3—8.

11. 1, அன்பு, 2. அன்னம், 3, ஆனை, 4. கமலம்/வனசம், 5. கருடன், 6. கழுதை, 7. காக்கை, 8, காதல்/காதல் மாலை, 9, கிள்ளை/கிளி/தத்தை, 10. குயில், 11. கொன்றை, 12, சவ்வாது, 13. செருப்பு, 14. தசம் (பத்துப் பொருட்கள்), 15. தமிழ், 16. தாதி/சின்னத்தாதி, 17. துகில் ; 18. தென்றல், 19. நங்கை/மாது/நவீனமாது, 20. நன்னூல், 21. நாச்சியார் பிரபந்தம், 22. நெஞ்சு, 23. நெல், 24. பஞ்சவர்ணம், 25. படுக்கை, 26. பணம், 27. பழையது, 28. பள்ளியறை, 29. பாக்கு, 30. பாங்கி. 31. பாவை, 32. பிள்ளை, 33. புகையிலை, 34. புலவர், 35. பூவை, 36. பொடி, 37. பொன், 38. பொன்னி, 39. மயில், 40 மலர், 41. மறலி, 42. மான், 43. மேகம்/மாரி, 44, மோகனவல்லி, 45. வண்டு, 46. வானவன், 47. விறலி/மதங்கி, 48. வெண்ணிலா, 49. வெற்றிலை ('விடு' எனும் சொல் தலைப்பில் இல்லாமையால், இவற்றில் சில நூதுவிடு பொருளாக அமையாதும் போகக் கூடும். சான்று — நவீனமாது தூது, நாச்சியார் பிரபந்தத் தூது, பஞ்சவர்ணத் தூது, பள்ளியறைத் தூது, மோகனவல்லித் தூது, வெண்ணிலாத் தூது.)

12. தமிழிலக்கிய வகையும் வடிவும், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், 1984, ப. 294.

13. சீனிச்சக்கரைப் புலவர் இயற்றிய புகையிலைவிடு தூது, உ. வே. சா. பதிப்பு, 1956, ப. iv.

14. இரா. நிர்மலாதேவி, பணவிடு தூது, நூலாராய்ச்சி, ப. 42.

15. இக்காலக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், இர. ஆரோக்கியசாமி, கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1983, ப. 58 (தூது).

16. தலபுராணம் மூர்த்தி, தல, தீர்த்த வரலாறு கூறும் நோக்கமுடையது என்ற நிலையில் கடவுட் தூதுகள் பலவும் அப்பார்வையுடன் இணைத்துக் காணத்தக்கன. ஸ்ரீ பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது முன்னுரையில் உ. வே. சா,

"...இத்தலத்திலுள்ள சிவபெருமான் திருநாமம் ஸ்ரீ பத்மகிரிநாதர் என்பது. அம்பிகையின் திரு நாமம் அபிராமவல்லி என்பது. இத்தலத்தில் பதும தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன.

ஆசிரியர் இந்நூலுள் இத்தல வரலாறுகளையும் அமைத்திருக்கின்றார்"

(ப. V) எனக் கூறுவது இணைத்துக் காணத்தக்கது.

17. தூது இலக்கியங்கள், ப. 194.

18. தமிழிலக்கியக் கொள்கை கருத்தரங்கு-121 (3. 10. 84) நோக்கமும் பயனும் - சிற்றிலக்கியம், ஆ. சிவலிங்கனார், பக். 6-7.

19. அ. A History of Sanskrit Literature, Arthur A. Macdonell, Motilal Bacapsidas, Delhi, 1976, P. 282 - 83 (Kalidasa's Meghaduta),

ஆ. மலையாள இலக்கிய வரலாறு, பி. கே. பரமேச்வரன் நாயர், (மொழி,) இராம. கோபிநாதன், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1968, பக். 35-38.

"(உண்ணு நீலி சந்தேசத்தில்) திருவனந்தபுரம் முதல் கடுத்துருத்தி வரை உள்ள பயணத்தில் தூது செல்வோன் காணக்கூடிய அழகுக் காட்சிகளில் முக்கியமான ஒன்றையுமே கவிஞன் விட்டு விடவில்லை", (ப. 37).

20. சிற்றிலக்கியச் சிந்தனைகள், கு. முத்துராசன், ப. 134 (தூது: பயன்).

21. பார்க்க : ஆ. சிவலிங்கனார், நோக்கமும் பயனும் சிற்றிலக்கியம், ப. 11.

பின்னிணைப்பு

பட்டியல்-1

தூது பற்றிய ஆய்வுகள் முதலியன

1. இலக்கணத் தொகை-யாப்பு பாட்டியல், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978, ப. 472 (தூது).

2. கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை 1959, தொகுதி 6, பக். 124-125 (தூது-ம. ரா. போ. குருசாமி).

3. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும், முத்துச் சண்முகன், நிர்மலா மோகன், முத்துப் பதிப்பகம், மதுரை, 1979.

4. சிற்றிலக்கியச் சிந்தனைகள், கு. முத்தரசன், தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1980, பக். 134-146 (அழகர் கிள்ளைவிடு தூது).

5. சிற்றிலக்கியச் செல்வங்கள், ந. வீ. செயராமன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967, பக். 137-150 (தூது இலக்கியம்).

6. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, 1971, முதலாவது மாநாடு - பக். 389-429 (தமிழ்விடு தூதும் வண்டுவிடு தூதும் - சொ. சிங்காரவேலனார்).

7. சிற்றிலக்கிய வளர்ச்சி, மு. சண்முகம்பிள்ளை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981.

8. தமில் இலக்கிய வகையும், வடிவும், ச.வே.சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984, பக். 366-370.

9. திராவிட மொழி இலக்கியங்கள், ச. வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983, பக். 204-206.

10. தூதின் தூய்மை, எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், செந்தமிழ்ச் செல்வி-28, பக். 435-39.

11. தூது இலக்கியங்கள், ந. வீ. செயராமன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1965.

12. பாட்டியலும் இலக்கிய வகைகளும், ந. வீ. செயராமன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981, பக். 364-368 (தூது).

3. பட்டியல் 2-இல் குறிப்பிட்டுள்ள பல தூது நூல்களின் முன்னுரைகளும், பின் இணைப்புகளும்.

பட்டியல்-2

இக்கட்ரைக்காகப் பார்க்கப்பட்டடு தூது (அச்சு) நூல்கள்

1. **அன்பு** - 1. அன்புவிடு தூது, பி. என். இராஜமாணிக்கம் பிள்ளை, 185 கண்ணி, (1வெ), புதுவை, 1942

2. **ஆனை** - 2. அங்கையற்கண்ணி ஆனைவிடு தூது, நெல்லை ஆ. கணபதி, 61. கண்ணி, (1வெ), ஆண்டாள் பதிப்பகம், 1976.

3. **கருடன்** - 3. திருமிட்டம் பூவராகப் பெருமான் கருடன் விடு தூது, க. இரா. கு. தமிழேந்தியார், 174 கண்ணி (1 வெ), மெய்கண்டார் கழகம், திருமுட்டம், 1955.

4. **காக்கை** - 4. சென்னை மாநில முதலமைச்சர் ச. இராசகோபாலாச்சாரியாரவர்களிடமிருந்து வெண்கோழி யுய்ந்த காக்கை விடு தூது (வெள்ளை வாரணம்), 119 கண்ணி, (வெளியீடு இல்லை, ஆண்டு இல்லை),

5. (அ) **கிள்ளை** 5. திருமாலிருஞ்சோலைமலை அழகர் கிள்ளைவிடு தூது, பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை, 239 கண்ணி, (1 வெ), உ.வே.ச., 2-ஆம், 1941, கழகம், 1960, 1973.

6. காரைக் காளத்தி விநாயகர் கிள்ளைவிடு தூது, வீரை. கவி. ந. நெல்லையப்பன் செட்டியார், 226 கண்ணி, (1 வெ), மீரனியா எழுத்தகம், 1944.

7. திருப்பேரூர் கிள்ளைவிடு தூது, 593 கண்ணி (முடிவு இல்லை) (1 வெ), ? ?

(ஆ) **கிளி** 8. அழகிய திருச்சிற்றம்பல தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் மீது கிளி விடு தூது, அழகிய திருச்சிற்றம்பல சுவாமிகள், 158 கண்ணி, (1 வெ ; 1 வெ), தருமபுர ஆதீனம், 1938.

(இ) **தத்தை** 9. தத்தை விடு தூது, 7, 33, **கலித்தாழிசை**, ரிப்பன் பிரஸ், மதராஸ், 7.

6. **கொன்றை** - 10. திருமந்திரநகர் அருள்மிகு சங்கர ராமேஸ்வரர் கொன்றைவிடு தூது, அருட்கவி சானகிநாதன், 163 கண்ணி, (1 வெ ; 2 வி), தூத்துக்குடி, 1979.

7, **தமிழ்** - 11. மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது, 7, 268 கண்ணி, உ.வே.சா. சென்னை 1930, 1966 ; மின்னொளி பதிப்பகம், சென்னை, 1960 ; கழகம், சென்னை 1972.

12. தமிழ்விடு தூது, (திருச்சி அமிர்தம் பிள்ளை), 470 கண்ணி, (1 வெ), ? ?

8, **துகில்** - 13. துகில்விடு தூது, ? 305 கண்ணி (1 வெ; 1 வெ), எஸ். முத்தையா பிள்ளை, நெல்லை, 1927, வெள்ளைய ராசேந்திரன் துகில்விடு தூது, ?, 304 கண்ணி (1 வெ ; 1 வெ) தூதுத் திரட்டு, சென்னை யரசுக் கீழ்த்திசை சுவடிகள் நூலகம், 1957.

14, செங்குந்தர் துகில்விடு தூது, பரமானந்த நாவலன், 271, கண்ணி, (1 + 1 வெ), தூதுத் திரட்டு, மேற்படி.

9. **தென்றல்** - 15. ஸ்ரீ பத்மகிரி நாதர் தென்றல்விடு தூது, பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை, 123 கண்ணி, (1 வெ), உ.வே.சா., 1952.

10. **நன்னூல்**-16. தேசிய கவி சுப்பிரமணியபாரதியார் நன்னூல் விடு தூது, அரங்க சுப்பையா 100 கண்ணி, ? (1973).

11. நெஞ்சு -17. நெஞ்சுவிடு தூது, உமாபதி சிவாச்சாரியார், 129 கண்ணி, மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, இரண்டாம் பகுதி (பக். 31-39) கழகம், 1969.

18. ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது, சிவப்பிரகாச சுவாமிகள், 255 கண்ணி (1 வெ ; 1 வெ), மாணிக்கம் பிள்ளை, ஈசுர வருடம், தை மாதம், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, 1966, சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, கழகம், 1972, பக். 272-288.

19. நெஞ்சுவிடு தூது, தத்துவராயர், 184, கண்ணி, (1 வெ), (தத்துவராயர் பிரபந்தங்கள்), 14-வது, ?, பக், 276-293.

20. நெஞ்சுவிடு தூது, சிதம்பர சுவாமிகள், 185 கண்ணி, (1 வெ ; 1 வெ), பி. ஆறுமுக முதலி, மநோன்மணி விலாசம் அச்சியந்திர சாலை, 2-வது, 1898.

21. ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, 311 கண்ணி, (1 வெ), திருவாவடுதுறை ஆதீனம், 1960.

22. மகாத்மா காந்தி அடிகள்மீது நெஞ்சுவிடு தூது, கி. வேங்கடசாமி ரெட்டியார், 253 கண்ணி, (வெ 1+1 ; வெ 1), புதுவை வநஜாம்பிகா பிரஸ், 1934.

12. பணம் - 23. பணவிடு தூது, ?, 372 கண்ணி, (1 வெ), கல்வி விளக்க அச்சுக்கூடம், விளம்பி வருடம், தை மாதம் (1838?) மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், அச்சுயந்திரச் சாலை, 1908.

24. பணவிடு தூது, பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர், 369 கண்ணி (1 வெ), இரா. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1980.

13. புகையிலை- 25. புகையிலைவிடு தூது, சீனி சக்கரைப் புலவர், 59 சண்ணி, உ.வே.சா., 1956.

14. புலவர் - 26. புலவர் விடு தூது, அரங்கசாமி, 666 கண்ணி, (2 வெ), திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம், 1960.

15. பொடி - 27. குன்றக் குமரன் பொடிவிடு தூது, சுமுகி 132 கண்ணி (5+3), பவிசு நிலையம், மதுரை 1974.

16. பொன் - 28 ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் மேற்பாடிய பொன்விடு தூது, அமிர்தம் சுந்தரநாத பிள்ளை, 351 கண்ணி, (1 வெ, 1 வி ; 1 வெ), Wednesday Review press.Trichi, 1970.

17. மயில் - 29. திருப்பணி நயினார் மயில்விடு தூது, ஸ்ரீ திருமலைசாமி அய்யங்கார், 111 கண்ணி (வெ. 2), முதல் 1922, 4-ஆம், 1959.

30. பழனியாண்டவர் மயில்விடு தூது, கு. நடேச கவுண்டர், 397 கண்ணி (வெ 3 ; வெ 2), ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி, 1949, 53, 54.

18. மான் - 31. மான்விடு தூது, குழந்தைக் கவிராயர், 301 கண்ணி (வெ 1 ; ககது 1), உ,வே,சா., 1956.

32. பெரிய தம்பி பிள்ளை பேரில் மான்விடு தூது மங்கை பாகக் கவிராயர், 61 கண்ணி (வெ.), **தூதுத்திரட்டு**, முன் சுட்டியது.

33. சேக்கிப்பட்டி முத்து வீரப்ப பிள்ளை பேரில் மான்விடு தூது, ?, 199 கண்ணி (1+1), **தூதுத்திரட்டு**, மேற்படி,

19. மேகம் - 34. மணவை திருவேங்கடமுடையான் மேகவிடு தூது, ?, (**தொடக்கம் இல்லை**), 87 கண்ணி (வெ 1), **தூதுத்திரட்டு**, மேற்படி.

35. திருநரையூர் நம்பி மேகவிடு தூது, மணவாளன் (பிள்ளைப் பெருமா ளையங்கார்), 200 கண்ணி, (1+1 வெ), செந்தமிழ்ப் பிரசுரம், 1921, ?, 1927.

20. **வண்டு** - 36. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது, கச்சியப்ப முனிவர், 504 கண்ணி (வெ 2), உ. வே.சா. 1931 ; கழகம், 1966,

37. திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது, ?, 327 கண்ணீ, (வெ 1), தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1981.

21. **விறலி** - 38. நாகம கூளப்ப நாயகன் விறலிவிடு தூது, சுப்ரதீபக் கவிராயர், 1095 கண்ணி (வெ 1), சரவணப் பெருமாளையர், மதராஸ், 1927; மதராஸ் 1939 ; ராய. சொக்கலிங்கம், **காந்தி ஆண்டு 80** ; துர்முகி வருடம் ; மார்கழி மாதம் (1836) - 1145 கண்ணி ; பிரபாகர அச்சுக்கூடம், சித்தார்த்தி வருடம், கார்த்திகை மாதம் (1859), **1144** கணிணி.

39. செண்டலங்காரன் விறலிவிடு தூது, ?. 569 கண்ணி, (1 வெ ; 1 வெ), தஞ்சை ஸரஸ்வதி மஹால், 1969.

40. சிதம்பரேசர் விறலிவிடுதூது, தில்லை விடங்கன் மஹா வித்வான் மாரிமுத்துப் பிள்ளை, 1182 கண்ணி, (வெ 1), வானதி, 1973.

41. சங்கர மூர்த்தி பேரில் விறலிவிடு தூது, சுப்பையர், 809 கண்ணி, (3 வி), **தூதுத் திரட்டு**, முன் சுட்டியது.

42. நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடு தூது, வரத பாரதீ முத்தையர் (?), 954 கண்ணி, (வெ 1), (முடிவு இல்லை), வீ. சொக்கலிங்கம், தஞ்சை, சரசுவதி மகால், 1969.

22. **பிறநூல்கள்** - 43. உத்தவர் தூது, அ.பா. சுப்ரமண்யம், 50 பக்கம், (சுமார் 50 விருத்தம், கீர்த்தனை முதலியன),

44. ஸ்ரீகிருஷ்ணசாமி தூது, வில்லிப்புத்தூராழ்வார், 264 விருத்தம் (4 வி), சி, முனுசாமி முதலியார், வித்யாரத்நாகர அச்சுக்கூடம், 1900,

45. திருப்போரூரின்னிசைப்பா - நெஞ்சுவிடு தூது, சிங்காரவேலு முதலியார், அறுசீர் விருத்தம்10,

46. திருப்போரூர் சந்நிதிமுறை - வண்டுவிடு தூது, சிதம்பர சுவாமிகள், அறுசிர் விருத்தம், 10'

47. திருசெந்தில் முருகன் சந்நிதி முறை-வெண்ணிலாத் தூது, முருகைய பங்கஜாக்ஷி, ஓரடிச் சிந்து 16, 1963.

48. பைங்கிளிக் கண்ணி, தாயுமானவர், 58 கண்ணி திருப்பாற் பாடற்றிரட்டு, பி. இரத்தின நாயகர் ஸன்ஸ், பக். 356-353.

** தூது நூல்கள் பல தந்துதவிய மறைமலையடிகள் நூலகத்தார்க்கு மிக்க நன்றி.

தேவாரம்

கு பகவதி

இலக்கியக் கொள்கை பற்றிய கல்வி, ஒரு இலக்கியத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதற்குச் சிறப்பாக உதவுகிறது. தன் இலக்கிய நோக்கத்தில் வெற்றிபெற, தான் கருதிய பொருளை உலகுக்கு உணர்த்த, எத்தகைய உத்திகளை ஆசிரியன் கையாள்கின்றான் என்ற நிலையில் நோக்க அவனது இலக்கியக் கொள்கைகள் பொருள், வடிவம் வெளியீடு என்ற முந்நிலைகளிலும் வெளிப்படுகின்றன. இலக்கியம் பற்றிய பொதுவான எண்ணங்களும் இங்கு வெளிப் படலாம். இக்கல்வியில் சமுதாயம், சூழல் என்பன ஒரு கூறாக இணைகின்றன. ஆயின் இலக்கியத்தின் நோக்கமும் பயனும் பற்றிய ஆய்வு என்னும்போது இலக்கியம் தோன்றிய சூழல், சமுதாய நிலை முதன்மையிடம் பெறுகின்றன. மட்டுமன்றி, பயன் நோக்கில் தொடர்ந்த கால சமுதாயமும், தற்கால நிலை யும் நோக்கப்படும் தேவை அமைகிறது. எனவே இலக்கியத்துடன் சமுதாயத்தையும் முழுமையாகப் புரிந்துகொள்ள இக்கல்வி துணையாகின்றது எனலாம். இந்நிலையில் இலக்கியக் கொள்கை பற்றிய கல்வி இலக்கிய நிலையில் அமைய, நோக்கமும் பயனும் பற்றிய கல்வி சமுதாயப் பார்வையில் விரிந்த பரப்பு கொள்கிறது என்பதைக் காண்கின்றோம். இந்நோக்கில் ஆய்வு செய்யும்போது மனித வாழ்விலிருந்து முளைத்தெழுந்த இலக்கியங்கள் அவர்களது வாழ்வியல் மாற்றங்கட்கு ஏற்பவும், அதன் காரணமாக உண்டாகும் உளவியல் மாற்றங்கட்கு ஏற்பவும் மாறுபட்டு அமைவதைக் காணலாம். இவ்வாறு தமிழர் வாழ்வில் கிளைத்தெழுந்த ஒரு இலக்கிய வகையே பக்தி இலக்கியம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் நீண்ட கால வரலாறு உடையது பக்தி இலத்கிய காலமே, தமிழரின் பக்தியுணர்வின் தோற்றம், அது இலக்கிய வெளியீடாக மலர்ந்த நிலை, தொடர்ந்து இலக்கியங்களில் செல்வாக்கு பெற்ற நிலை, இன்றைய நிலை போன்ற அனைத்தையும் தமிழ் இலக்கிய

வரலாற்று ஆய்வில் நாம் பெறலாம், பக்தி இலக்கியங்கள் அனைத்தும் இறைப்புகழ் பாடுவன எனினும், 'தேவாரம்' என தெய்வத்திற்கு அணியப்பட்ட மாலை என்ற பெயர் கொண்டு சிறப்பன தேவாரப்பாக்களேயாம். தேவாரம் நோக்கமும் பயனும் என்ற பொருளை நாம் முந்நிலைகளாகப் பகுத்துக்காணலாம்.

1. தேவாரப் பாக்களின் தோற்றமும், நோக்கமும்
2. நோக்கம் நிறைவேற மூவரும் இலக்கியத்தில் முயன்ற நிலை
3. பயன் அன்று—தொடர்ந்து—இன்று

1. தேவாரம் - தோற்றம் - நோக்கம்

தொல்காப்பியத்திற்கு முன்னதாகத் தமிழரின் இறைப் பற்று பற்றிய எண்ணங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. தொல்காப்பியர் சில குறிப்பிட்ட இடங்களில் இறைவன் பற்றிய எண்ணம் தம் கால மக்களுக்கு இருந்தது என்பதனைத் தருகின்றார்.[1] எனினும் சைவம் அல்லது சிவன் பற்றிய எண்ணங்கள் இல்லை.

அடுத்த நிலையில் கிடைக்கும் இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் எனப்படும் பாட்டும் தொகையும். இங்குச் சிவ பிரானின் தோற்றம் — முக்கண் உடையவன் (புறம் 6) நீலகண்டன் (91) திங்கட்கண்/டையவன்/ ணியு (கலித்-150) எனச் சுட்டப்படுகிறது. மேலும் புறநானூறு கடவுள் வாழ்த்துப் பாடல், மிகச் சிறப்பாக அவன் தோற்றத்தைக் காட்சி படுத்துகிறது.[2]

இந்நிலையில் சிவன் சிறப்புகள் மட்டுமல்லாது திருமாலும் முருகனும் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளனர் என்பதனை இலக்கிச் சான்றுகள் தருகின்றன. திருமுருகாற்றுப்படையிலும்[3] பரிபாடலிலும் இவர்கள் சிறப்புகள் தெளிவாக அமைகின்றன. இம்மூவருள்ளும் முருகனே சிறப்பாக வழிபடப் பட்டுள்ளான் தொடக்கத்தில் என்பது அவனுக்குரிய படைவீடுகளைப் பற்றிய எண்ணம் தரும் நிலை. மிகுதியான பாடல்களும் முருகனுக்கே அமைகின்றன. எனவே முருகன் பற்றிய எண்ணம் சங்க கால மக்களிடம் மிகுந்திருந்தது என்பதையுணர இயலுகிறது. மேலும் இக்கால மக்கள் 'வீடு பேறு' பற்றி உணர்ந்தார்கள் என்பதையும் இங்கு சுட்டவேண்டும். தொல்காப்பியர்

காமம் சான்ற கடைக் கோட்காலை
-ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறத்ததன் பயனே

கற்பியல்—51

னக் கூறி இதனைச் சொல்லும், நிலையும், முருகாற்றுப்படை பொருளைச் சுட்டி ஆற்றுப்படுத்தாது இறைவன் அருள் நோக்கி ஆற்றுப்படுத்தும் தன்மையும் இவ்வுணர்வில் கிளைத்த எண்ணங்களே ஆகும்.

சிலப்பதிகாரக் காப்பியம் உணர்த்தும் நிலையில், சிவன், திருமால், முருகன் மூவர் சிறப்புகளும் கோயில்களும் பேசப் படுகின்றன. பிறவாயாக்கைப் பெரியோன் கோயில், ஊர்க் கோட்டம், நுதல்விழி நாட்டத் திறையோன் கோயில் என்பன சிவன் கோயில், வேங்கடம் திருவரங்கம் ஆடகமாடம், மணி வண்ணன் கோட்டம் என்பன திருமாலின் கோயிலாகவும் திகழ்ந்தமையினைக் காண்கின்றோம். மேலும் இவர்களின் தோற்றம், வீரச் செயல்களும் இங்கு விளம்பப்படுகின்றன.[4] இக்காப்பியத்தில் சமணமதம் புகழப்பட்டாலும் சமண மதக் கருத்துக்களைப் பரப்ப முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் பட்டாலும், தமிழகத்தில் சைவ வைணவ மதங்களும் போற்றப்பட்டன என்ற எண்ணம் தெளிவாக அமைகிறது. மேலும் முற்காலத்தை விட வளர்ச்சி அடைந்த நிலையையும் காண்கின்றோம். அடுத்து, மணிமேகலை பௌத்த மதக் கருத்துகளைப்போதிக்க, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வழி அறக்கருத்துகள் சமண முனிவர்களால் போதிக்கப் பட்டதைக் காண்கின்றோம். இதனை அடுத்து கி. பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காரைக்கால் அம்மையார், திருமூலர் காலத்தில் திரும்பவும் சைவ மதம் பற்றியும் சிவன் பற்றியும் தெரியவருகிறோம். இவ்விடைக் காலத்தில் இம்மதங் களின் இவ்விறைகளின் நிலை என்ன? என்று நோக்கும் போது சமணமும் பௌத்தமும் மிகச் சிறப்பானதொரு நிலையை அடைந்திருக்க வேண்டும் என்பது பிற்கால பக்தி உணர்ச்சி எழுச்சி காரணமாகத் தோற்றம் பெறுகிறது. சங்க இலக்கியம் போன்றோ காப்பியம் போன்றோ தமிழரிடம் எந்த வித இலக்கிய வளர்ச்சியையும் காணக்கிடைக்காமை, பிற சமயச் செல்வாக்கு காரணத்தாலேயே எனல் பொருந்தும்.

சமணசமயம் பரவி, செல்வாக்கு பெற்றமைக்குக் காரணம் கூறப்புகும் மயிலை சீனி வேங்கடசாமி, பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாது நோக்கிய தன்மை பலவித அறங்களைச் செய்தமை, மருத்துவ, கல்வி, உதவி செய்தல், தவிர தாய் மொழியாகிய தமிழில் ஊர் ஊராகச் சென்று மதப்பிரச்சாரம் செய்தல் என்பனவற்றைத் தருகின்றார்.[5] சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் தம் மதம் பற்றியியம்பும் தன்மையை இவண் எண்ணலாம். எனவே வீடுபேறு பற்றிய உணர்வுடன் தங்களது காதலையும், வீரத்தையும் கொண்ட வாழ்வில் சலிப்பும் தோற்றம் பெற, மக்கள் இறையை நாடும்போது, சைவ, வைணவ மதங்களை விட, சமண பௌத்த மதக் கொள்கைகளும், அவர்களது செயல்களும், தமிழரைக் கவர்ந் திருக்க வேண்டும். எனவேதான் பெரும்பாலான தமிழர்கள் சமணம், பௌத்தம் சாரத் தொடங்கியிருக்க வேண்டும் எனக் கூறல் பொருத்தமாக இருக்கும் எனத் தோன்றுகிறது.

எனினும் பிற சமய வளர்ச்சியிலும் சைவ வைணவச் சார்புடன், பற்றுடன் தமிழர் சிலர் இருந்திருக்கின்றனர். என்பதே பின்னர் இம்மதங்கள் மறுமலர்ச்சி பெற்றமைக்குரிய காரணமாக அமைகிறது. இம்மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் களாக வெளிப்படையாகத் தெரிகின்றவர்கள் காரைக்கால் அம்மையார், திருமூலர் சோழன் கோச்செங்கணான் ஆவார். எனினும் பலரும் இம்மறுமலர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டவர் என்பதனையே திருத்தொண்டர் தொகை தருகிறது. சுந்தரர் பாடும் நாயன்மார்கள் அவர் காலத்திற்கு முன்னவரே. எனவே கி, பி. 8-ஆம் நூற்றாண்டிற்கு முன்னமே பல அடியவர்கள். இப்பக்தி இயக்கத்திற்குத் துணை புரிந்தார்கள் என்பது தெரிகிறது. சமண மதத்தில் எவ்வாறு மன்னர்கள் இணைந்து இருத்தனரோ அதைப் போன்று சாதாரண மக்களைத் தவிர, வேந்தர்களும், சிற்றரசர்களும் கூட, இவ் வியக்கத்தில் பங்கு கொண்டனர் என்பதையே,

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன் 39-3

ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன் 39-5

பொழிற் கருவூர்த்துஞ்சிய புகழ்ச் சோழற் கடியேன் 39-7

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்றபெருமான்

காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் 39-9

தஞ்சை மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன் 39-9

என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகை குறிப்புகள் தரு கின்றன. தவிர திருஞான சம்பந்தர், அப்பர் சென்று இறையைக் கண்டு பாடிய கோயில்கள் அனைத்தும் அவர்க்கு முன்னரேயே எழுந்தன என்பது தெரிகிறது. காரைக்கால் அம்மையார் கோயில்களுக்குச் சென்று வழி பட்டமை, கோச்செங்கணான் கோயில் எடுத்த வரலாறு என்பனவும், பல கோயில்கள் எழுப்பி மக்கள் வழிபட்ட நிலையைத் தெரிவிக்கும் வாயிலாக அமை கின்றன. இந்நிலையில், சமண பௌத்த வளர்ச்சி ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் சைவ சமய வளர்ச்சியும் தொடங்கிவிட்ட சூழலைத் திருஞான சம்பந்தர் கால நிலை யாகக் காண்கின்றோம். எனினும், சைவ சமயப் பற்றுக் கொண்ட தமிழர்கள் பிற சமய வளர்ச்சியை விரும்பவில்லை. தவிர பிற சமயங்களே செல்வாக்குப் பெற்ற சமயங்களாக இருந்திருக்க வேண்டும். எனவே பிற சமயம் அழிதல் தேவை என்பதையுணர்கின்றனர். இந்நிலையில் சம்பந்தர் பாடல்கள் பிற சமய எதிர்ப்பாகக் கிளம்புகின்றன.

பொதுவாகக் கருத்துப் பரப்பல் வெற்றி பெற இரண்டு அடிப்படை நிலைகள் தேவைப்படுகின்றன. ஒன்று சொல் வல்லனாக இருத்தல். இரண்டு மக்கள் மனநிலையையுணர்ந்து அதற்கேற்ப செயல்படுதல்.

தமிழர் மனநிலை அன்று எவ்வாறு இருந்தது என்பதை நோக்க, சில எண்ணங்கள் தெளிவுபடுகின்றன. சம்பந்தருக்கு முன்னரேயே சைவ மதம் மக்கள் பார்வையில்படத் தொடங்கி யிருக்கிறது என்பதனையே முன் சுட்டிய எண்ணங்கள் கூறின. இதற்குரிய காரணம் என்ன? காதலையும் வீரத்தையும் முழு வாழ்க்கைக் கொள்கைகளாகக் கொண்டு திகழ்ந்த பண்டைய மக்கள் மனதில் இறையுணர்வு தோன்றத் தொடங்கிய நிலையில், அவர்கட்குச் சிறப்பாகத் தோன்றிய மதமாகச் சமண பௌத்தம் அமைந்தது. அவர்களது மதத்தின் நன்மைகளை எண்ணி இணைந்த அவர்கள், பின்னரேயே கட்டுப்பாடுகளை உணரத் தொடங்கியிருக்க வேண்டும்.

அக்கட்டுப்பாடுகள் தமிழர் மனத்தில் வெறுப்பேற்றத் தொடங்கிய நிலையே, தமிழர்கள் சைவம் சாரத் தொடங்கி யமைக்குரிய காரணமாகும். இவை எவையாக இருக்க முடியும் என்று பார்க்கும்போது சிலவற்றை எண்ணலாம். இயற்கை யுணர்வுகட்கு மதிப்பளிக்காத சமயங்கள் சமணம் பௌத்தம். இயற்கை வாழ்வான இல்வாழ்வை வெறுத்தல், இயல்பாக மக்கள் விரும்பும் மக்களைக் கவரும் கலைகளை வெறுத்துப் பேசுதல், பெண்களுக்கு மதிப்பில்லாத நிலை, கடுந்துறவுக் கோலங்கள் மக்கள் மனதில் வெறுப்பு உண்டாக்குகின்றன, காதலையும் வீரத்தையும் போற்றி வாழ்ந்த மரபுக்கு இத்தகைய கடும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை எனத்தோன்று கிறது

இந்நிலையில் சைவம் நோக்கித் திசை திரும்பத் தொடங்கி யிருந்த மக்களிடம் ஞானசம்பந்தரின் தேவாரம் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தி விட்டது என்பதைக் காண்கிறோம். தொடர்ந்து அப்பர், சுந்தரர் தம் பாடல்களும் இணைய சைவ மதம் பெரும் செல்வாக்குப் பெறத் தொடங்குகிறது எனக் கூறலாம். இவ்வாறு தங்கள் சொற்களால் மக்களைத் தம் வசத்தில் திருப்பிய இவர்கள் அவர்களது மன நிலையையும் தெரிந்துகொண்டு, தம் சமயப் பணியைத் துவக்கினர்:

1. கடுந்துறவைக் கண்டு வெறுப்புற்ற மக்களிடம், பக்தி ஒன்றினாலேயே அவனை அடையலாம் என்றும் (உ. ம். பதிகப் பயன் கூறுதல்) இறைவனை இல்வாழ்க்கையில் இருந்து கொண்டே வழிபடலாம் என்றும் அவன் வினைகளை எல்லாம் ஒழிப்பவன் அவனை அடையின் வினைகள் ஒழியும் என்றும் கூறி சிவன் பெருமையை இயம்பினர்.

2. கலைகளுக்கு எதிராகச் சமண மதத்தினர் அமைய இசைப் பாடல்கள் மூலமே மக்கள் இயற்கையுணர்வைத் தட்டி எழுப்பி, தங்கள் மதப் பெருமைகளைக் கூறினர், இசை மக்களை எளிதில் கவரவல்லது என்பதை யுணர்ந்து செயல் பட்டனர்.

3. ஊர் ஊராகச் சென்று அங்குள்ள இறைப் பெருமையை யுணர்த்தினர். தன் ஊர், தன் மக்கள் என்ற மனிதர்க்குரிய இயற்கை பற்றுணர்வுக்கு ஏற்ப, ஊரில் உள்ள கோயில், இறைவனைப் பற்றித் தாய் மொழியிலேயே பாடப்பெற்ற தன்மையில் மக்கள் உள்ளம் கவர்ந்தனர்.

இவ்வாறு சைவத்தின் மேன்மையையியம்பி அம்மதத்தைப் பரப்பவும், பிற சமய செல்வாக்கை ஒழிக்கவும், தேவாரப் பாக்களைப் பாடத் தொடங்கியமை இவ்விலக்கிய நோக்காக அமைகிறது.

2. நோக்கம் நிறைவேற இலக்கியத்தில் மூவரும் முயன்ற நிலை :

தேவாரம் பக்தியைப் பரப்பவும், பிற சமயத்தை ஒழிக்கவும் எழுந்த நிலையில், இறைப்புகழ் பாடுதல் முதனிலை பெறுகிறது. இறைவனுடைய தோற்றம், அவனுடைய வீரச் செயல்கள் இவற்றை மக்கள் மனதில் இருத்தி, சிவன் பற்றிய ஒரு தோற்றத்தை மக்கள் உணரச்செய்ய வேண்டும் என்பதே இதற்கு அடிப்படையாகலாம்.

தோடுடை செவியன் விடையேறி ஓர்தூ வெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்
கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேலிய பெம்மான் இவனன்றே

பதி. 1-1

என சம்பந்தரும்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்குமின்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன் மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்பாதமும் காணப்
பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே

பதி. 81-4

என திருநாவுக்கரசரும்

பித்தா பிறைசூடிபெருமானே அருளாளா *பதி. 1-1*

என சுந்தரரும் இறைவன் தோற்றத்தையியம்புகின்றனர்.

இறைவனுடைய தோற்றம் பற்றிய பாடல்கள் அமையினும், பெரும்பான்மையான பாடல்கள், அவனது வீரச் செயல்களைப் பாடும் வண்ணமே அமையக் காண்கின்றோம்.

மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்பல்கண நின்று பணியச்
சாவமதாகிய மால்வகை கொண்டு தண்மதின்மூன்று
மெரித்த
தேவர்கடேவ ரெம்பெருமானார் தீதில் பெருந்துறையாரே

என முப்புரம் எரித்தமையினைப் பாடுகின்றார் சம்பந்தர்.

பாலனுக்காயன்று பாற்கடலீந்து பணைத் தெழுந்த
ஆலினிற் கீழிருந்து காரணமோதி யருமுனிக்காயச்
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்தடர்ந்தோடி வந்த
காலனைக் காய்ந்த பிரான் கடலூருறை உத்தமனே

என திருநாவுக்கரசர் இறைப்புகழ் பாடுகின்றார்.

இறைவன் தோற்றத்தையும் இறைவனது வீரச்செயல் களையும் பலவாறு புகழும் நிலையில், சிவன் முழு முதற் கடவுள் என்ற எண்ணம் உருவாக்க முனைகின்ற தன்மைகளைக் காண் கின்றோம். அடுத்த நிலையில் அமைவது தங்கள் அனுபவங்கள் வாயிலாகச் சிவன் பெருமை பேசும் நிலை அனுபவங்கள் மாறுபடும் நிலையில், அவர்கள் பாடும் நிலையும் மாறுபடக் காண்கின்றோம்.

ஞானசம்பந்தர், ஞானப்பால் பெற்றவர் என்பதை அவரது பாடல்

போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லா தெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமலநகர்ப்
பேதையாள வளொடுப் பெருந்தகையிருந்ததே

பதி. 282-2

காட்டுகிறது. இவ்வாறு தன்னை அருள்கொண்ட நிலையுடன் மேலும் தான் ஆட்கொள்ளப்பட்ட நிலையை தன் செயல்கள் பலவற்றாலும் விளக்குகின்றார். ஆவடுதுறையில் வேள்வி

செய்ய பசும்பொன்கிழி பெற்றமை, வாசிதீர காசு பெறுதல் (62) திருமருகலில் அரவு விடத்தைத் தீர்த்து வணிகனைக் காப்பாற்றுதல் / பாண்டியன் வெப்பு நோயைத் திருநீற்றினால் நீக்கல் (பதி 202) அனல்வாதம் புனல்வாதம் செய்து சமணர் தாமே கழுவில் ஏறும்படி செய்தல், திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண்பனையாக மாற்றல் (பதி 54) எலும்பைப் பெண்ணாக்குதல் (பதி - 183) போன்ற பல அருட்செயல்கள் இவரது பாடல்களில் தெரிய வருகின்றன. / (பதி 154) ஞானசம்பந்தர் வாழ்வு இளம் வயதிலேயே இறையருள் பெற்றமை அதன் காரணமாக உலகத் துன்பங்கள், பிற அனுபவங்கள் இவரிடம் இல்லாத நிலையில், இறைவனைப் பாடுதல் - குடிகொண்ட ஊரின் சிறப்புப் பாடுதல் என்பனவே மிக்கோங்கி நிற்கின்ற தன்மையைக் காண்கின்றோம். இவ்வாறு பாடும் நிலையில் இயற்கையையும் இறைவனையும் இணைத்தே பாடும் தன்மையும் இவரிடம் அமைகிறது.

கோடுதேன் சொரி குன்றிடைப் பூகமும் கூந்தலின் குலைவாரி
ஓடுநீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைநம்பன்
வாடினார் தலையிற்பலி கொள்பவன் வானவர் மகிழ்ந்தேத்தும்
கேடிலா மணியைத் தொழவல்லது கெழுமுதல் அறியோமே
(246-3)

என்பது திருமாந்துறை இறைவன் பற்றிய பாடல். இதனைப் பற்றி ஆராயும்போது டாக்டர் ப. அருணாசலம் "இவ்வாறு இயற்கை இறைச் சிறப்பு இரு தன்மைகளையும் பாடாது, ஊர்ச்சிறப்பு மட்டுமே பாடும் பாடலையும் காட்டி, இயற்கையில் உள்ளம் ஈடுபட்ட போது சம்பந்தர் இறையீடுபாட்டில் பெறும் அனுபவத்தையே பெறுகிறார். இயற்கை திருக்கோயிலாகக் காட்சியளிக்கிறது என இயற்கையில் கோயிலைக் காணும் நிலையில் தம் பக்தியுணர்வை வெளிக் கொணர்கின்றார்"[6] என்பர்.

இவ்வாறு தான் உணர்ந்த அனுபவங்களையும், தமக்கு அருள்புரிந்த தன்மையினால் தான் செய்த அருட் செயல்களையும் கூறும் சம்பந்தர், பிறர் வரலாறுகளையும் காட்டி இறைச் சிறப்பை இயம்பக் காண்கின்றோம். கண்ணப்ப நாயனார்

அன்பின் மேன்மை (பதி 327-4) கோச்செங்கணார் திருப்பணி யின் சிறப்பு (பதி, 277-2) போன்றவற்றைச் சுட்டுகின்றார்.

அப்பருடைய வாழ்க்கை நிலை என்று காணும்போது இளமையிலேயே நிலைமையையுணர்ந்து சமணம் சார்ந்து பின், சைவத்தின் பெருமையைத் திலகவதியாரால் உணர்ந்து அதில் சார்ந்தவர். எனவே இவரது பாடல்களில் தன் இரக்க நிலையை சிறப்பாகக் காணலாம். பக்தியுணர்வு இவரை உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கச் செய்துவிட்ட நிலையையும், இவரது பாடல்கள் காட்டுகின்றன. சம்பந்தர் பாடலில் உள்ள அமைதியை இவரது பாடல்களில் காண முடியவில்லை. ஒரு வேகம், இதுவரை இளமைக் காலத்தில் இறைவனை, எண்ணாது இருந்து விட்டோமே என்ற எண்ண வேகம் இவரது பாடல்களில் தெரிகிறது.

தனது கடந்த கால நிலையை எண்ணி வருந்தும் நிலையை

உறுகயிறூசல் போல ஒன்று விட்டொன்று பற்றி
மறுகயிறூசல் போல் வந்து வந்துலவு நெஞ்சம்
பெறுகயிறூசல் போலப்பிறை புல்கு சடையாய்பாதத்
தறுகயிறூசல் ஆனேன் அதிகை வீரட்டனீரே (26-6)

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாருக்கே நீரிறைத்தேன்
311-8

இனி என்ன செய்வோம் என்று திகைக்கும் நிலையை,

திகைத்திட்டேன் செய்வ தென்னே திருப்புகலூரனீரே
(54-1)

செறிவிலேன் செய்வ தென்னே திருப்புகலூரனீரே(54-14)

என்ற பாடல்கள் இயம்புகின்றன,

நாமார்க்கும் குடியல்லோம் நமனைஅஞ்சோம்

இறைவன் அருளை பெற்று விட்டேன் என்ற பெருமிதத்தில் திளைத்தது. முழுமையாக அருள் கிடைக்கவில்லை என்ற உணர்வில் அருள் செய்ய வேண்டுதல்,

நாயினும் கடைப்பட்டோனை நன்னெறி காட்டியாண்டாய்
ஆயிரம் அரவ மார்த்த அமுதனே யமுதம் ஒத்து
நீயுமென் நெஞ்சினுள்ளே நிலாவினாய் நிலாவி நிற்க
நோயவை சாருமாகின் நோக்கி நீ அருள் செய்யாயே
(76-6)

போன்ற பல பாடல்கள், அன்பு மேம்பாடு காரணமாக அவரிடம் எழுந்த மனப் போராட்டங்களைத் தருகின்யன.

துறக்கப்படாத உடலைத்துறந்து வெந்து துவரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும்பு ஏறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைடம்பிஞ்ஞு கன்பேர்/
மறப்பன் கொலோ வென்றென்னுள்ளம் கிடந்து மறுகிடுமே *(114-8)*

இவரது உள்ளப் போரட்டத்திற்கு மேலும் ஒரு சான்று இது.

இவற்றைத் தவிர சம்பந்தர் போன்று தனக்கு இறைவன் அருள் செய்த நிலையையும் தம்பாடல்களில் உணர்த்துகின்றார். இவரது அருள் பெற்ற இறையனுபவத்தைப் பாடும் நிலையில் மிகச் சிறப்பாக அமைவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும்
வீங்கிள வேனிலும் மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நிழலே (பதி. *11-1)*

என்ற பாடல். மேலும் கல்லில் கட்டிக் கடலில் விட்டது. சூலை நோய் தீரப்பெற்றது (பதி. 5-3) போன்ற அனுபவங்கள் இவரால் இயம்பப்படுகின்றன. பிற தொண்டர் வரலாறுகளும் சில இடங்களில் சுட்டப்படுகின்றன, (98-6,7)

இயற்கைக் காட்சியில் இறைவனைக் காண்பதும் இவரிடம் காணப்படும் நிலை, எனினும் சம்பந்தர் போன்று மிகுதி இல்லை,

பிறருக்கு அறிவுரை கூறித் திருத்தும் நிலையை இவரது

ஊனையே கழிக்க வேண்டின் உணர்மின்கள்
உள்ளத்துள்ளே (25-3)

பொள்ளத்தக் காயமாயப் பொருளிளைப் போகமாதர்
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில் விரும்புமின் விளக்குத்
தூபம்
உள்ளத்த திரியொன் றேற்றி யுணருமாறு ணரவல்லார்
கள்ளத்தைக் கழிப்பர் போலும் கடலூர் வீரட்டனாரே
(31-1)

போன்ற பாடல்கள் சுட்டுகின்றன.

'பத்தியார் ஏத்தி நின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்
(25-5)

எனவும் காலையும் மாலையும் கைதொழுவார் மனம்
ஆலயமாருரார்
அறநெறியார்க்கே (17-8) எனவும் இறைவன் பக்தர்கள்
மனத்துள்
இருப்பவன் என்கின்றார். 'ஊனினுள் உயிரைவாட்டி
உணர்வினார்க் கெளியாராகி
வானினுள் வானவர்க்கு அறியாகாவஞ்சர்' (2-91)

என்கின்ற நிலை பக்தியின் மகிமையுணத்துகிறது.

சுந்தரர் நிலை இருவரிடமும் இருந்து மாறுபட்ட ஒன்று. இல்லற வாழ்க்கையில் வாழ்ந்துகொண்டே இறைப்பெருமை உணர்த்தியவர் இவர். இல்லற வாழ்க்கைக்கு இறைவனையே துணையாகக் கொண்டார். உலகியல் வாழ்விற்குரிய பொருட்களை இறைவனிடம் கேட்டுப் பெறும் நிலை இவரது பாடல்களால் தெரியவருகிறது.

காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
(46-2)

எனவே இவரது இறையனுபவ நிலை வேறாக அமைவதை இவர் பாடல்கள் தருகின்றன. தன்னை அருள்கொண்ட இறைவனைப் பாடும் நிலையில்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக்காளாயினி யல்லேன் எனலாமே (1-1)

என்ற பாடல் அமைகிறது.

குற்றமிக் செய்யினும் குணமெனக் கொள்ளும் அவனை
இதுவரைத் தான் நினைக்காத நிலையை

உணர்ந்து

நாயேன் பல நாளு நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்துய்ந்தேன் பெறலாகா அருள் பெற்றேன்.

எனப்பாடும் நிலை உண்டு. இறைவனைத் தவிர பிறரைப் பாடாதீர் என்ற அறிவுரையும் இவரிடம் அமைகிறது.

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே யெந்தை
புகலூர்ப்பாடு மின் புலவீர்கள் (34-1.)

இவர்பெற்ற அருள் உணர்வுகளாகத் தம்மை ஆட்கொண்டமை தவிர, முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தது (பதி-92-4) கண் பெற்றமை (பதி-61) போன்ற பல அமைகின்றன. தவிர மூத்த இருவர் போன்று தொண்டர் புகழ் பேசும் நிலையில் இவரது நிலை முன்னிற்கிறது. திருத்தொண்டர் தொகைச் சிறப்பு தெளிவானதொன்று.

இவ்வாறு தன் அனுபவம், பிறர் அனுபவம் வாயிலாக இவர்கள் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய எண்ணம் யாது என்று நோக்கும்போது, தமக்கு அருள்புரிந்த செயல்கள் மக்களை எளிதில் கவரும் என்ற எண்ணமும் இதே போன்று பல தொண்டர்கள் அருள் பெற்றனர் எனக்காட்டி, நீங்களும் அருள்பெறலாம் என்றும் காட்டி மக்கள மனத்தைச் சைவத்தின் பாற்படுத்துவதுமேயாகும் எனத் தோன்றுகிறது.

உலகியல் நிலையை எடுத்தியம்பியும் மக்கள் மனத்தைப் பக்தியின் பாற்செலுத்தும் உணர்வை இவர்களது நிலையாண்மை பற்றிய எண்ணங்கள் காட்டுகின்றன.

இன்றுளார் நாளையில்லை எனும்பொருள்
ஒன்றுமோராது உழிதரும் ஊமர்காள்
அன்று வானவர்க்காக விடமுண்ட
கண்டனார் காட்டுப்பள்ளி கண்டுய்மினே 198-9

பெண்டிர் மக்கள் பெருந்துணை நன்னிதி
உண்டின்றே யென்று உகவன்மின் ஏழைகாள்
கண்டுகொண்மினீர் கானூர் முளையினைப்
புண்டரீகப் பொதும்பில் ஒதுங்கியே 190-2

என்பன அப்பர் பாடல்கள்,

மணமென மகிழ்வர் முன்னே மக்கடாய் தந்தை சுற்றம்
பணமெனச் சுடுவர் -8-5

பொய்த்தன்மைத்தமைத்தாய மாயப்போர்வையை மெய்
யென்றெண்ணும்
வித்தகத்தாய வாழ்வு -8-9

இவ்வாறு இறைவனின் சிறப்பு, அவனது வீரச் செயல்கள், தாங்கள் பெற்ற அருள், பிற தொண்டர்கள் சிவனை வழிபட்டு அடைந்த நற்பயன் இவற்றை விளக்கியும், உலகியலில் உள்ள நிலையாமை எண்ணங்களைச் சொல்லியும் மக்கள் மனதில் சைவப்பெருமையை உணர்த்த விழைந்த இவர்கள் பிற சமய இழிவு பற்றி அதனை அழிக்க வேண்டும் என்ற உணர்வும் கொண்டு திகழ்ந்தனர் என்பதை அறிகின்றோம். பௌத்த மதம் பற்றிய கருத்துகள் மிகுதியாக அமையவில்லை எனினும், 'சமணம்' பற்றி மிகுதியாக அமைகின்றன. இவ்விழிவினைச் சுட்டும் நிலையில் முன்னிற்பவர் சம்பந்தரே 'நீதி அறியாத அமணகையர்' (1-16-10) 'மூவர் துவராடை கலந்து மெய் போர்க்கும் வழுவாச் சமண்சாக்கியர் வாக்கவை கெ: (1-32-10) பிச்சக்குடை நீழற் சமணர் சாக்கியர் (1-86-10) சிந்தையில் சமணரொடு தேரர்(1-110-10)கையிலுண்டுழல்வார் (2-142-11) மெய்யின்மாசினர் (2-146-10) புத்தர் புன் சமணாதர் பொய்யுரைப் பித்தர் (2-165-10) எனப்பலாறு உரைப்பர் சம்பந்தர். அப்பர், கல்லினால் எறிந்து கஞ்சி தாமுணும்

சாக்கியனார் (49-6) குண்டனாய்ச் சமணரோடே (39-1) பீலிகையிடுக்கி (39-2) தட்டிடு சமணர் (39-3) பாசிப்பன்மாசு மெய்யர் பலமிலாச் சமணம் (39-4) பல்லுரைச் சமணர் (39-7) வெற்றரைச் சமணர் (68-9) குண்டரே சமணர் பௌத்தர் குறியறியாது நின்று கண்டதே கருதுவார்கள் (42-9) சுந்தரர்.

> **நமண நந்தியும் கருமவீரனும் தருமசேனனும் என்றிவர்**
> **குமண மாமலைக்குன்று போனின்று தங்கள் கூறையொன்றின்றியே**
> **ஞமண ஞாண ஞாண ஞோண மென்றோதியாரையு நாணிலா**
> **சமணர் (33-9)** என்கிறார்.

இவ்வாறு, தோற்றம், புறத்தூய்மை போன்றவற்றில் தமிழர்போன்று அமையாத சமணர், கொள்கைகளும் தமிழர் மரபுக்கு மாறுபட்டன என்பதையும் இவர்கள் தமிழர்களுக்கு உணர்த்தினர். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் சம்பந்தர், பதிகம் படித்தோர், வினைப்பயன் கெட்டு, நற்பயன் அடைவர் என்பதை யியம்புகின்றார். சுந்தரரும் இதனை உரைக்கின்றார்.[7]

அப்பர் பாடல்களிலும் இறைவனை அடையின் வினைகளைப் போக்கி விடலாம் என்ற நம்பிக்கையூட்டுகின்ற நிலை அமைகிறது.[8] இது சமணரின் கொள்கைக்கு மாறுபாடானது. வினையை அனுபவித்தே தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர்கட்குரியது. இதனைப் போன்றன பிற கருத்துக்களும். உதாரணமாக மகளிர் வீடுபேறு அடையமுடியாது போன்றவற்றைச் சுட்டலாம். எனவே எல்லாவித நிலையிலும் புற நிலையிலும் கொள்கை நிலையிலும் வேறுபட்ட சமணமதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பது இவர்களின் விருப்பமாக அமைந்து பாடலின் பக்தி இயக்கத்தின் ஒரு கூறாக இணைகிறது. சம்பந்தரே இதில் முன்னிற்பது அவர்காலச் சூழல் எனவும் அவருடைய மனவேகம் எனவும் கருத இயலுகிறது. சமணர் பௌத்தரின் ஆதிக்கம் மிகுந்திருந்த காலம் ஆகையாலும், அவர்களை அழிக்கவேண்டும், சைவத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்ற அவாவும் அவருடைய பல இடக் குறிப்புகட்கு அமைதி காட்டுவனவாகலாம். தாம் அவர்களிடம் பட்ட துன்பினைக் குறிப்பிட்டே அப்பர் அவர்களின் கொடுஞ் செயல்களை மக்களிடம் கூறி, அதன் இழிவை உணர்த்துகின்றார். சுந்தரர்

காலத்தில் சிறிது இம்மதங்கள் தங்கள் ஆதிக்க நிலையை இழக்க தொடங்கியிருக்க வேண்டும் என்பதையே சம்பந்தர் போன்று மிகுதியாக இதனைச் சுட்டாத தன்மை காட்டுகிறது,

சமணமதம் பௌத்த மதம் பற்றிய எண்ணங்கள் இவ்வாறு அமைய, வைணவ மதமும் வளர்ந்துவந்த சூழல் அங்கு அமைகின்றது. எனவே வைணவத்தை விடவும், சைவம் சிறப்புடையது. என்பதையுணர்த்த விழைந்த நோக்கமே, திருமால் அயன் காண இயலாத சிவன் பெருமை பேசும் பல இடங்கள், எனவே சிவனை முழுமுதற் கடவுளாக மக்கள் ஏற்க வேண்டும் என்ற எண்ண விழைவை இங்கு நாம் சிறப்பாக உணர முடிகிறது.

விளைவார் கனி படநூறிய கடல் வண்ணனும் வேதக்
கிளர் தாரை மலர் மேலுறை கேடில் புகழோனும்
அளவாவன மழலாகிய அண்ணாமலை யண்ணல்
துளரா முலையுநுவல் உமைதலைவன் அடிசரணே 1-10-9

மண்ணுண்ட மாலவனும்மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
23-10

பண்ணடையமால் பிரமன் பறந்தும் கிடந்தும் அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல் காண்பரிதாயபிரான்
7-20-9

சொல்லிச் செல்லும் கருத்துக்கள் இறைச்சிறப்பு உணர்த்தும் நிலையிலும், பிற சமய இழிவு கூறும் நிலையிலும், தன்னை முன்னே வைத்து நோக்கச் செய்தலும், கேட்போருக்கு அறிவுரைக் கூறும் நிலையிலும் அமைய, சொல்லிச் செல்லும் முறைகளிலும் சில எண்ணங்களை இம்மூவரிடமும் காண்கின்றோம்.

இறைவனை இயல்பாகப் புகழும் நிலை; கோயில் சிறப்பு பாடும் நிலை; எல்லாவற்றையும் இசையுடன் கலந்து தரும் நிலை; தன்னைச் சுட்டியும், பிறரைச் சுட்டியும் சொல்லும் நிலை; தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் எண்ணி அகப்பொருள் சுவைபட பாடும் நிலை[9] போன்றவற்றை இங்கே காட்டலாம்.

சமய நிலையில் மட்டுமல்லாது மொழி பற்றிய எண்ணத்தையும் இவர்கள் கொண்டு இருந்தனர். பிற மொழிகளின் கலப்பு மிகுதியாகிவிடக் கூடாது என்ற எண்ணமே, இவர்கள் தமிழ் பற்றிப் பல பேசும் நிலைக்குரிய காரணமாக இருக்கலாம். சம்பந்தர் தம் பாடல்களை இறைவனுக்கு அணிவிக்கும் மாலையொன்ற நிலையில் 'தமிழ் மாலை' என்றுரைக்கின்றார். (2-11) திருநெறிய தமிழ் என்பதும் அவரது கூற்று (1-1!). அப்பர், 'சலம்பூவொடு தூப மறந்தறியேன்; தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று தமிழின் பெருமையியம்புகின்றார் (1-6) தமிழை இறைவனாகவே எண்ணியம்பிய நிலையும் இங்கே சுட்டத்தக்கது.

முத்தமிழும் நான்மறையுமாக இருக்கின்றான் எனவும் (6—237—9) பண்டைத் தமிழாக இருக்கின்றான் எனவும் (7—29—6) சுந்தரர் பாடுகின்றனர்.

ஞானசம்பந்தரின் உலகியல் அனுபவம் மிகுதியில்லாத நிலை அவரது இறைப்பற்று, பிற சமய எதிர்ப்பு இவ்வுணர்வுகள் அவரது பாடல்களில் மிஞ்சி நிற்கக் காண்கின்றோம். ஆயின் அப்பர் பாடல்களில் தம் அனுபவம்,தான் செய்த பிழையை எண்ணி வருந்தும் நிலை, பிறருக்கும் அருள் புரிய இறைவனிடம் வேண்டுதல், எவ்வாறு மக்கள் இருத்தல் வேண்டும் என்ற நிலையில் சமுதாய நலன் கருதும் நிலை இன்னொரு முறையாக அமைகிறது. சுந்தரர் இவ்வுலக இயல்பில் வாழ்ந்து கொண்டே இறைவனை அடைய முயன்றாலும், பல இடங்களில் இறைவன் அருள்தான் நிலையானது என்றியம்பும் நிலை அவரது மனத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. எனவே மூவர் நோக்கமும் சைவ மத மேம்பாடு என்பதை நோக்கியே அமைகின்றது என்பதை நாம் உணர இயலுகிறது.

3. பயன்

இவ்வாறு தம் பாக்களின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட பக்தியுணர்வு என்னும் சைவ சமய உணர்வு இறை நம்பிக்கையை மக்களிடம் உருவாக்கி வெற்றி பெற்றது என்பது மிக்க தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் காலத்தில் முழுப் பயன் கிடைக்கவில்லை. எனினும் சைவ சமயத்தின் வளர்ச்சி இன்று வரை நிலைப்பெற்றிருக்கும் நிலைக்கு அடித்தளமிட்டன தேவாரப் பாக்கள் என்பதில் ஐயமில்லை.

இயல், இசை, நாடகம் என மூன்றாக நிலவியத் தமிழ், இன்னிசையையும், இயலையும் இணைத்து நோக்கினர். எனவே பல்வேறுபட்ட இசை பற்றிய அறிவினையும் பின்னுள்ளோர் அறிய வழி செய்தனர்.

கோயில்களுக்குத் தனிச்சிறப்பு உண்டானது இவர்களால் என்பது ஐயத்திற்கிடனில்லாத ஒன்று. இசைப்பாடல் கொண்டு வழிபடும் முறையும் சிறப்பு பெற்றது.

சங்க இலக்கியம் மகளிர் பூவும் நெல்லும் கொண்டு வழிபாடு செய்தமையினைக் காட்டும். திழிமந்திரத்தில் திருமூலர். 'யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை' என இறைவனுக்குப் பூவிட்டு வழிபாடு செய்தலைக் கூறுகிறார். ஆயின் பொது நிலையில் எல்லோரும் மனமொழி மெய்களால் பூசனை செய்ய வேண்டும். உண்மையான பக்தி ஒன்றே இறைவனை அடையும் வழி என்பதை யுணர்த்துகின்றனர் தேவார மூவர்கள். எனவே இறைவன் எண்ணமே முக்தி தரவல்லது என்ற உணர்வு சிறப்பாக அமைகிறது.

சமய நிலையில் இவ்வாறு அமைய அக்கால இலக்கிய நிலையிலும் பல புதிய வளர்ச்சிகளைக் காண்கின்றோம்

பதிற்றுப்பத்து, காரைக்கால் அம்மையாரின் திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம் 'பதிகம்' என்ற இலக்கிய வகையைத் தோற்றுவித்தாலும்,ஊருக்கொரு பதிகமாக ஊர்ச் சிறப்புப் பதிகமாக அமைத்த பெருமை இவர்களிடம் அமைகிறது. தாண்டகம். அங்கமாலை போன்ற புதிய இலக்கிய வகைகள் தோற்றம் பெற்றன. சுந்தரரின் திருத்தொண்டத் தொகை, நம்பியாரூரர் திருத்தொண்டர் திருவந்தாதி பாடவும், சேக்கிழார் பெரிய புராணம் பாடவும் வழி வகுத்தது. சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலைபோன்ற பல நூல்கள் இவர்கள் சிறப்புகளைக் கூற எழுந்தன. இன்று மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் தேவாரம் மொழி பெயர்க்கப்பட்டு இருப்பதும், இதன் சிறப்பைக் காட்டவல்லது.

மானிடக் காதல் மட்டுமல்லாது தெய்வீகமும் காதல் அடிப்படையிலானதே என்ற உணர்வையே இவர்கள் அக உணர்வு ததும்பும் நிலையில் பாடும் இறைப் பாடல்கள் சுட்டுகின்றன

நாயகன் நாயகி பாவத்தில் பின்னர் பல இலக்கியப்பாக்கள் தோற்றம் பெற இவை காரணம் எனலாம்.

வள்ளல்களையும் மன்னர்களையும் பாடிப் பரிசில் பெற்று வந்த மனநிலை மாற்றம் பெற, நிலையான பொருள் பெற இறைவனைத்தான் நாடவேண்டும் என்ற உணர்வு காரணமாக, 'இறையைப் பாடவேண்டும்.' என்ற எண்ணம் சிறப்புபெற்றது. சுந்தரர் பிறரைப் பாடாதீர்கள் என்று கேட்டுப்பாடும் நிலையிலும் இவ்வெண்ணம் அமைகிறது.

தேவாரத்தின் தொடர்ந்த காலப்பயன் என்று நோக்கவும் சில எண்ணங்கள் தெளிவுபடுகின்றன. பக்தியுணர்வு மக்களிடம் மேம்பட்டு விளங்கத் தொடங்கிய காரணத்தால் மன்னர்களின் ஆதரவும் கிடைக்க, சிறந்ததொரு இறையுணர்வு ஓங்கத் தொடங்கியது. இதன் காரணமாக எழுந்த இலக்கியங்கள் அவற்றின் வகைகள் மிகுந்தன. மன்னர்களின் கோயிற் திருப் பணிகள் எண்ணி வந்தனவற்றைக் கல்வெட்டுகள் இயம்பு கின்றன. பிற சமயங்கள் அழிந்த நிலையும் இவண் சுட்டப் படத்தக்கது.

இன்றைய பயன் தேவாரம் இன்றைய அறிவியல் உலக முன்னேற்றத்தில் நிற்குமா? எந்த நிலையில் இவை பயன் தருகின்றன எனின், அதன் நோக்க நிறைவேற்றமாகிய அன்றைய சூழலில் எதிர்பார்க்கப்பட்ட பக்தி நோக்கம் அன்று நிறைவேறியது. ஆயின் 'இன்று அந்த அளவிற்குப் பலனளிக்காது இருப்பினும் ஓரளவிற்கு. இறைப் பற்றுடையோருக்கு வேத மாக அமைகின்ற நிலை கண்கூடு. சமய நிலையில் இவ்வாறு அமையும் தேவாரம், தமிழர் வரலாற்றை அறிந்து கொள்ளப் பெருந்துணை செய்கின்றது என்பதில் மறுப்பு ஏதுமில்லை. சமய வரலாற்றைச் சுட்டி, அன்றைய சமய நிலையையுணர்த்தும் நிலையில் மட்டுமல்லாது, பிற பல வரலாறுகளையும் எடுத்தியம்பு கின்றது. இசை வரலாறு பற்றிய எண்ணங்களை தருகின்றது. பல்வகைப்பட்ட இலக்கியம் எழ அடிப்படையான வரலாற்றைத் தருகிறது. மகளிரும் சமய வாழ்வில் ஈடுபாடு கொண்டு முன்னேற்றம் கருதியுழைத்தனர் என்பது தெரிகிறது. காரைக் கால் அம்மையார் முதனிலையில் அமைய, திலகவதியார் மங்கை யர்க்கரசியார் போன்ற மகளிர் நிலை தெரிகிறது மட்டுமல்லாது சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றில் பல மகளிரின் பக்தி மேம்பாடு தெரியவருகிறது. மக்களின் வாழ்வியல், உளவியல் பற்றிய எண்ணங்களைத் தருகிறது. காலச் சூழல் பொதுவாக

வரலாறுகளின் மாற்றத்திற்கு இடனளிப்பதைச் சிறப்பாகக் காண இயலுகிறது. ஊர்ப் பெயர்கள், ஊர் சிறப்புகள், குடியேற்றப் பகுதிகளைப் புரிந்து கொள்ளல் இயலுகிறது. அன்று வழங்கிய பழமொழிகள் பல தெரிய வருகின்றன. 'மதம்' என்பது மக்களின் வாழ்வு முன்னேற்றமடையவும், அவர்களது இயற்கையான வாழ்வியலுக்கு ஏற்பவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாத்து கொள்ளவும் அமைய வேண்டுமே தவிர, அவை எத்தகைய சிறந்த கொள்கைகளை எடுத்தியம்பினாலும் வெற்றி பெறாது. என்ற எண்ணத்தை மிகச் சிறப்பாக விளக்குவது தேவாரம் பற்றிய ஆய்வு.

அடுத்து இன்றைய தேவை கருதிய நிலையிலும் நாம் ஒன்றை இங்கு நினைக்கலாம். கோயிற் சிறப்பையும், இசைப்பாடல் கொண்டு இறை போற்றும் வழிபாட்டையும் தோற்றம் பெறச் செய்த தேவாரப் பாக்கள் இன்று கோயில் வழிபாட்டில் இடம் பெறாது, பிற மொழி செல்வாக்கு பெற்றிருப்பதைக் காண்கின்றோம். அரசாங்க நிலையில் அல்லது சமூதாய நிலையில் கோயிலில் இப்பாக்களை வழிபாட்டில் இடம்பெறச் செய்யின் தமிழ் மொழிச் செல்வாக்கு மேலோங்கவும், தமிழ் மொழி வளர்ச்சி பெறவும் வாய்ப்பமையும் என்பது உறுதி.

குறிப்புகள்

1. மாயோன் மேய காடுறை உலகமும்
   சேயோன் மேய மைவரை உலகமும்
   வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
   வருணன் மேய பெருமணல் உலகமும்
   முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
   சொல்லிய முறையான் சொல்லவும்படுமே'

   தொல்-அகம்-5

   கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
   வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
   கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே

   தொல்-புறம்-27

2. கண்ணி கார் நறுங்கொன்றை; காமர்
வண்ணமார்பின் தாரும் கொன்றை
ஊர்தி வால் வெள் ஏறே. சிறந்த
சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப;
கறைமிடறு அணியலும் அணிந்தன்று; அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே
பெண் உரு ஒரு திறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்
பிறைநுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீர் அறவு அறியாக் கரகத்து
தாழ்சடைப் பொலிந்த, அருந்தவத்தோற்கே
-புறம்-கடவுள் வாழ்த்து-1

3. திருமுருகாற்றுப்படை பிற ஆற்றுப்படை நூல்களில் பிந்தியது. காரணம் தொல்காப்பியரின் ஆற்றுப்படை பற்றிய குறிப்பு. கடவுள் ஆற்றுப்படை இருந்திருப்பின் குறித்திருப்பர். எனவே இவ்வகை அன்று இல்லை. பக்தி காலத்தில் எழுந்த நூல்கள் பல. அனைத்தும் சிவன் திருமால் பற்றியனவே. இங்கு முருகன் பற்றிய நூல்கள் இல்லை. இந்நிலையில் இரண்டுக்கும் இடைப் பட்ட காலமே திருமுருகாற்றுப் படையின் காலம் எனத் துணிய வாய்ப்பு அமைகிறது.

4. பக்திஇலக்கியம்-ப.அருணாசலம்-பக். 25-27

5. சமணமும் தமிழும்-பக். 41, 44, 45

6. பக்தி இலக்கியம் - பக். 218

7. காமரு வார்பொழில் சூழுங் கற்குடிமாமலையாரை
நாமரு வண்புகழ்க் காழி நலந்திகழ் ஞானசம்பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாடவல்லார்கள்
பூமலி வானவரோடும் பொன்னுலகிற் பொலிவாரே
1-44-11

பூவிற் தோன்றும் புத்தேளோடு மாலவன் தானும்
மேவிப்பரவு மரசே யென்னு'வினைபேசமே 1-102-9

கூடலர் மன்னன் குலநாவலூர்க் கோனலத்தமிழைப்
....

பாடவல்லார் பரலோகத்திலிருப்பது பண்டமன்றே
7-18-10

ஆரூர் உரைத்தன பத்திவை வல்லார்
சீரூர் சிவலோகத் திருப்பவர் தாமே 7-32-10.

8. சிந்தித்தெழு மனமே நினையாமுன் கருமலத்தைப்
பந்திந்த வல்வினைத் / தீர்க்கவல்லானை / நீர் -83-5

அல்லல் என் செயும் அருவினை என் செயும்
தொல்லை வல்வினைத் தொண்டன் தானென் செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்
கெல்லையில்லாதோர் அடிமை பூண்டனுக்கே 115-4

சிட்டனார் திருவேட்களம் கைதொழப்
பட்டவல்வினையாயின பாறுமே -156-6

வெம்பு நோயு மிடரும் வெறுமையும்
துன்பமும் துயரும் எனும் சூழ்வினை
கொம்பனார் பயில் கொண்டீச்சுரனை
எம்பிரான் என வல்லவர்க்கில்லையே 184-6

9. துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி
முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ் வாரிடமும் பலி
தேர்வர்
அணிவளர் கோல மெலாம் செய்து பாச்சிலாச்சிராமத்
துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல் செய்வதோ
இவர்
மாண்பே 1-44-1

முன்னமவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத் தான் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்.
தலைப்பட்டாள் மங்கை தலைவன் தாளே 6-239-7

பயன்பட்டவை

1. அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் கு. நடேச கவுண்டர், கழக வெளியீடு, சென்னை—1972

2. ஞானசம்பந்தர் ஓர் ஆய்வு—முதற் பகுதி—வை. இரத்தின சபாபதி—டாக்டர். எல். இராதாகிருஷ்ணன், மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம் சென்னைப் பல்கலைக் கழகம்—1982.

3. சமணமும் தமிழும்—மயிலை சீனிவேங்கடசாமி கழக வெளியீடு சென்னை 1970

4. சைவ இலக்கிய வரலாறு. கி.பி. 7 முதல் 10 வரை ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்பலைக் கழகம், 1928.

5. தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு, வி. சுப்பிரமணிய அய்யர், அமுத நிலையம் சென்னை—1971.

6. தமிழ் இலக்கியக் கொள்கை—டாக்டர் வே. சுப்பிர மணியன். டாக்டர் தா.வே. வீராசாமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை—600 113,—1975.

7. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்—டாக்டர் ஆர். வேலுப்பிள்ளை தமிழ்ப்புத்தகாலயம், சென்னை—1969

8. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் 1,2,3, கழக வெளியீடு, சென்னை, 1973

9. திருஞனசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், சொ. சிங்காரவேலன், கழக வெளியீடு 1969.

10. திருநாவுக்கரசர், சுந்தரர் பதிகங்கள் 4,5,6,7 கழக வெளியீடு, சென்னை 1974.

11. பக்தி இலக்கியம்—டாக்டர் ப. அருணாசலம், தமிழ் புத்த காலயம், சென்னை—1973.

பதினெண் கீழ்க்கணக்கு

தி. இரா. சின்னப்பன்

அறிமுகம்

''ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் வனதேவதைத் கதைப் போன்றது. இக்கதை இறைவன் திருக்கையால் எழுதப் பெற்றது.''[1] ''இத்தகு வாழ்வில் முதற் பகுதியாக அமைந்த நாற்பது ஆண்டுகளில் நாம் நம் வாழ்வேட்டினை படைக்கின்றோம். அடுத்தமையும் முப்பது ஆண்டுகளில் அவற்றைப் பற்றிய விமர்சனத்தை செய்து கொண்டிருக்கிறோம்''[2] எனவே தான் நம் வாழ்வினை ஒருபணி என்றும், அப்பணியில் செய்யப் படும் ஒவ்வொன்றும் மிகுந்த அனுபவ முதிர்ச்சியை நமக்கு நல்குகிறது என்றும் கூறுவர்.[3] இத்தகு அனுபவமிக்க ஆன்ற விந்தடங்கியக் கொள்கைச் சான்றோர் கருவில் திருவுடையராகத் திகழ்ந்து வழித்தோன்றலுக்கென விட்டுச் சென்ற பலவற்றுள் முதன்மைப் பெற்றது இலக்கியம் எனலாம். நிறைமொழி மாந்தர் தம் பெருமைகளை அவ் இலக்கியங்கள் இன்றும் என்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். இத்தகு இலக்கியங்கள் அமரத்துவம் வாய்ந்த சான்றோர் பேச்சுகள்[4] என்றும், இஃது வாழ்விற்குப் பேருதவி புரியும் ஊன்றுகோல் என்றும் கூறுவர். ஆயினும் இஃது வருத்தம் தரும் ஒருவகை ஊன்றுகோலாகத் தென்படுகிறது என்றும் கூறுவர்.[5] இவ்வாறு உருவாகும் எல்லா இலக்கியங்களும் தகுதிவாய்ந்த உண்மை தொடர்பான வினாக்களை தக்க முறையில் வெளிப்படுத்தி அதற்கான விடைகளையும் கண்டறிய உதவுகின்றன.[6]

பேரிலக்கியங்கள் எளிமை வாய்ந்த சொற்களால் இயன்ற அளவிற்கு நற்பொருளை நல்குதல் வேண்டும்.[7] இலக்கியம் எனப் படுகின்ற மிகப் பெரிய இசை நிகழ்ச்சியில் ஒவ்வொரு நாடும் தனக்கேயுரிய குரல் அமைதியுடன் பங்கு கொள்கிறது. அல்லது பங்கு கொள்ள வேண்டும்.[8] (இலக்கியம் வாழ்விற்குப் பிரதிநிதித்துவமாகும்.) மொழியைச் செயற்

கருவியாகக் கொண்ட சமூகப் படைப்பே இலக்கியம், இஃது ஒரு சமூக நிறுவனம்[9] எனவே, இதனை சமுதாயத்தின் வெளிப் பாடு என்றும், வாழ்க்கையின் கண்ணாடி என்றும் கூறுவர். ''இலக்கியம் ஒரு காலத்திற்குரிய சிறப்புப்பண்புகளனைத்தையும் உள்ளவாறே பதிவு செய்கிறது. அவ்வக்காலப் பழக்க வழக்கங் களை ஓவியம்போல் சித்திரித்துத் திறம்பட வெளியிடுகிறது.

இலக்கியம்,

''வாழ்வின் உண்மையான சித்திரத்தைப் பிற்காலத்தவருக்கு வழங்குகிறது'' என்பர் தாமஸ் வார்ட்டன். ஹென்றி மார்லி, ஆங்கில இலக்கியத்தைக் குறிப்பிடும்பொழுது, இலக்கியத்தைத் தேசத்தின் வரலாறு அல்லது ஆங்கில உள்ளத்தின் கதை என்று கூறுவர். இத்தகு இலக்கியம் இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. அவைகளாவன :—

1) அறிவு இலக்கியம்

2) ஆற்றல் இலக்கியம்

அறிவு இலக்கியம் கட்டமைந்த ஒழுக்கத்துக் கண்ணுமை என்று தொல்காப்பியம் கூறுவதுபோல அறத்தாறினை நன்கு புலப்படுத்தும் ''அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' என்ற தொல்காப்பியம் கூறுவதைப் போலவும், ''யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்று'' என்ற பரிபாடல் கூறுவதைப்/போலவும் தன்னகத்தே நெறிப்படுத்திக் காட்டவல்ல சிறந்த இலக்கியங் களையே அறிவு இலக்கியம் என்பர். மாத்யூ ஆர்னால்டு என்ப வர், ''இலக்கியம் என்பது வாழ்க்கையின் ஆராய்ச்சி'' என்று கூறுவதும் அறிவு இலக்கியத்தையே.

அறிவை வளர்ப்பதோடு பொதுமக்களுக்குப் பற்று விளை வித்து அவர்களை இன்புறுத்தும் நோக்கத்தோடு இயற்றியதே இலக்கியமாகும்.[10] என்று வையாபுரிப் பிள்ளை கூறுவதைக் காணலாம். நம் குறிக்கோள்களையும் கொள்கைகளையும் இயம்புவது, விளக்குவது இலக்கியம் என்று கொள்ளலாம்.[11] வாழ்ந்து காட்டுக் வாழ்க்கையைச் சொற்களால் கூறுவதே இலக்கியம்.[12] பல நூற்றாண்டுகளாக இலக்கியக் கல்வி மனிதனுக்கு இன்றியமையாத முக்கிய குறிக்கோள்களையும், மதிப்பீடுகளையும் அளித்து வந்திருக்கிறது. உலகினைப் பற்றியும்

வாழ்க்கையைப் பற்றியும் விளக்கத்தை உண்டாக்குகிறது.[13] இலக்கியம் வாழ்க்கை முறையைப் புலப்படுத்துவதோடு வாழ்க்கையை உயர்த்துவதாயும் இருக்க வேண்டும்.[14] மொழித்திறன், இன்பச்சுவை, வாழ்க்கை விளக்கம் மூன்றனையும் இலக்கியத்தின் இயல்புகளாக-கைலாசபதி கூறுவர்.[15] இத்தகு பல்வகைத் தனித் தன்மைகளையும் சிறப்பியல்புகளையும் தன்னகத்தே பெற்று விளங்குவது சங்க இலக்கியமாகும். அவற்றைப் பத்துப்பாட்டு என்றும் எட்டுத் தொகை என்றும் தொகுத்துக் காண்கிறோம். அதற்குக் காரணம் ஒன்று உண்டு. (நோக்கினை மனதிற் கொண்டு அதனால் எழும் பயன் வெளிப்பாட்டை உணர்ந்தே இத்தொகை முறை தோன்றியிருக்கிறது. இதற்குப் பிறகு இத் தொகைநிலையை பதினெண் கீழ்கணக்கு நூல்களின் வாயிலாகக் காணமுடிகிறது. இரண்டிற்கும் வேறுபாடும் உண்டு; ஒருமைப் பாடும் உண்டு. சங்க இலக்கியம் ஆற்றல் இலக்கியமாகும்; பதினெண் கீழ்கணக்கு அறிவிலக்கியமாகும்) இஃது மிகுதியான விழுக்காட்டுத் தன்மை கொண்டு கூறப்படுகிறது. இரண்டும் நூற்றொகை நூலாகும். பற்பல ஆசிரியர்களால் இயற்றப் பெற்ற பற்பல பாக்கள் தொகுக்கப் பெற்ற நூல்களின் தொகை நிலையும் காணப்படுகிறது. ஒரே ஆசிரியரால் இயற்றப்பெற்ற நூலின் தொகுப்பையும் காணமுடிகிறது. இந்நிலை பதினெண் கீழ்க்கணக்கில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. நாலடியார் மட்டும் சங்க நூல்களைப் போல பலர் எழுதிய பாக்களின் தொகுப்பாகக் காணப்படுகிறது. ''சங்க நூல்களுக்குப் பின் அறவிலக்கியங்கள் தலைமை பூணும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைக் காணும்போது நூல் நுவல் பொருளில்—பகுப்பில் வீடுபேறு விதந்து ஓதப்படுவதைக் காணுகிறோம். இந்நூல்கள் அறிவுறுத்தும் போக்கினை அடிப்படையாகக் கொண்டே மரபினை அடியொற்றிச் செல்கின்றன.''[16]

''வாழ்விலிருந்து பிறப்பது இலக்கியம். அது குறிப்பிட்ட காலத்தில் தோன்றுகிறது. கால வெள்ளத்திற்கேற்பப் பல மாற்றங்களை அடைகிறது. சில சமயங்களில் மூழ்கி மறைந்து விடுகிறது. சில இலக்கியங்கள் அழியாமல் நிலைத்து நிற்கின்றன. அவை நிலைபெற்ற வளர்ச்சி நிலைக்கு நாம் விளக்கம் காண இயலும். அவ்விலக்கியம் பற்றிப் பலரும் தம் கருத்தைக் காலப் போக்கில் இணைத்துக் கணிப்பர். அவற்றை யும் அவ்விலக்கியத்தின் வளர்ச்சி நிலையாக அறிவோம். இலக் கியத்தில் ஆழ்ந்த ஆர்வம் ஏற்படின் அது நன்மை விளைவிக்கும். மாறாக உணர்வின் பிடியிலே சிக்கிப் பரப்பளவில் மட்டும் கருத்துச் செலுத்தினால் அது தீமையையே விளைவிக்கும். ஓர்

இலக்கியத்தை ஆழ்ந்து கற்றால் அது உறுதியாக நற்பயனை நல்கும்.[17] 'இத்தகு நற்பயனை நல்குவதே இலக்கியத்தின் நோக்கமாக அமையவேண்டும். சங்க இலக்கியம் உருவான பல்வகை நோக்கில் அறிவுறுத்தலும் ஒன்று என்பதை நாம் மறந்து விட முடியாது. எனவேதான் ஔவையார்

> நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே [18]

என்று பாடி அப்பணியைத் தோற்றுவித்தனர் போலும். அதன் வளர்ச்சி நிலையைப் பதினெண்கீழ்கணக்கில் காணமுடிகிறது. ''யார் நீ கற்போனா? என் பாக்களைக் கற்பாய். தொடர்ந்து பல நூற்றாண்டுகளாகக் கற்று வருவாய். உம் உள்ளத்தில் எழும் மகிழ்ச்சியை நன்கு உணர முடியும். அம்மகிழ்ச்சி நிலைத்த மகிழ்ச்சி. அத்தகு மகிழ்ச்சிக்காகவே ஒரு வசந்தகால காலையில் இப்பாக்கள் படைக்கப்பட்டன. இவ்வின்பம் தொடர்ந்து பல நூறாண்டு காலமாக பரவிக்கொண்டே யிருக்கும்'' என்ற இரவீந்திரநாத தாகூரின் கீதாஞ்சலி கருத்தை இவ்விலக்கிய நூற்றொகைக்குப் பொருத்திப் பார்க்கலாம். மனிதனுக்கு நிரந்தரமாக மகிழ்ச்சிதரக் கூடியவை எவை? நம் சான்றோர் அதனை அறம்—பொருள்—இன்பம் எனப் பெயரிட்டழைத்தனர். தொல்காப்பியர்.[19] இம்மூன்றையும் நன்கு வலியுறுத்திக் கூறுவது போலவே, பிற்காலத்தவர்களும் கூறியுள்ளனர். இம்மூன்றினையும் சிறப்பாகக் கொண்டு படைக்கப் பட்டவையே பதினெண்கீழ்கணக்கு நூல்கள். அகம்—புறம் பற்றிக் கூறும் சங்கப் பாடல்களுக்குப் பின் இஃது தோன்றிப் பிரபலமடைந்திருக்கிறது. காப்பியம் எனத் தனித்து ஆய்வதற்கு முன்னதாகவே பதினெண்கீழ்கணக்கு தனித்து ஆராயப் பட்டிருக்கிறதெனலாம் எனவேதான் அதனைத் தொகுத்திருக்கும் பணியையும், அதற்கு இலக்கணம் வகுக்கும் பணியையும் பன்னிருபாட்டியல் காலத்திலேயே மேற்கொண்டுள்ளனர், உரையாசிரியர்கள் அனைவரும் அம்மை என்னும் வனப்பிற்கு இவற்றைச் சான்று காட்டிச் சென்றிருக்கின்றனர். சங்க இலக்கியங்களுக்கும் பக்தி இலக்கியங்களுக்கும் இடைப்பட்டதொரு தொகை நூலாகக் கருதவும் இடம் ஏற்படுகிறது.

ஒப்பிலக்கியக் கொள்கையில் தாக்கக் கொள்கையும் ஏற்றல் கொள்கையும் (The Theory of influence and reception) சிறப்பிடம் பெறுகிறது. சங்கம் மருவிய காலத்தில் அறநூல்கள் முகுதியாகத் தோன்ற இக்கொள்கையை காரணம் காட்டலாம். சமண, பௌத்த மதத் தாக்கம், பழைய மரபுகள் மறைந்து புதிய மரபுகள் ஏற்கும் சூழ்நிலைக்கு வழிவகுத்திருக்கலாம்.

புதிய மதங்களைப் போலவே, புதிய மொழிகளும் இதற்கு உதவியிருக்கக் கூடும். வடமொழி, பிராகிருதம், பாலி மொழிகள் இதற்குத் துணை நின்றிருக்கக் கூடும். தொல்காப்பியர் வாயுறை வாழ்த்து செவியறிவுறூஉ[20] எனக் கூறுவதும் அறம், பொருள், இன்பம் எனச் சுட்டுவதும், புறப்பொருளில் காஞ்சித் திணையைப் பற்றி விரிவாகப் பேசுவதும் இதற்கு வழிகாட்டியாக அமைந்திருக்கலாம். எனவே தான் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பழைய தமிழர்க்கே உரித்தான தனிப் பட்ட மரபுகளையும் காணமுடிகிறது. தமிழகத்தில் வந்து நுழைந்த பல புதிய மரபுகளையும் காண முடிகிறது. இதன் காரணமாக இந்நூற்றொகையை பழைய - புதிய மரபின் சங்கமத் தளம் என்றும் கூறலாம்.

உணர்வுக்கும் கற்பனைக்கும் முதலிடம் தந்து அமைவன இலக்கியங்கள். சிந்தனைக்கும் அறிவுக்கும் முதலிடம் தந்து அமைவன நீதி நூல்களும் அறிவியல் நூல்களும், சமூகத்தில் வாழும் மாந்தனுக்குரிய சமுதாய ஒழுகலாறுகளையும் தனிமனித ஒழுகலாறுகளையும் விரித்தும் விளக்கியும் வகுத்தும் தொகுத்தும் கூறுவனவே நீதி நூல்கள் அல்லது அற நூல்கள் என வழங்கப்படுகின்றன.[21] இந்நீதி நூல்கள் சான்றோர் சிந்தையாலும் தோன்றலாம்; சமூகத்தின் நன்மைக்கெனத் தோன்றிய பழக்க வழக்கங்களின் உருவமாகவும் அமையலாம். இப்பழக்க வழக்கங்கள் ஏதாவது ஒரு வகையில் வாய்மொழியாகவும் வழங்கி வரலாம். அந்நிலையில் அவை பழமொழிகள் எனவோ மூதுரைகள் எனவோ மக்களிடையே வழங்கலாம். இவைகள் இலக்கிய வளம் பெற்ற காலத்தில் நீதி நூல்களாக யாக்கப் படுகின்றன.[22] தொல்காப்பியம் குறிப்பிடும் ஏழு புறத்திணை களுள் காஞ்சி, பாடாண் என்னும் திணைகள் நீதிகளையே போதிக்கின்றன எனலாம். முதுகாஞ்சி, முதுமொழிக் காஞ்சி, பெருங்காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி என்னும் புறப்பொருள் துறைகள் எல்லாம் அறமே எடுத்துரைப்பன.

பதினெண்கீழ்க்கணக்கு இலக்கணம்கூறும் பன்னிருபாட்டியல் குறிப்பிடும் அறம், பொருள், இன்பம் எனப்படும் முப்பொருள்

சங்க நூல்களிலே காணப்படுகின்றன. கலித்தொகை, புறநானூறு, தொல்காப்பியம் முதலான நூல்களில் காணக் கிடக்கின்றன.[23] இதற்குக் காரணமும் உண்டு. ஒருகால் அகமும் புறமும் இலக்கியப் பாகுபாடாகக் அமைய அறம், பொருள் இன்பம் வாழ்க்கைப் பாகுபாடாக கொள்ளப்பட்டிருக்கலாம்.[24] பொருளும், இன்பத்திற்கும் அறமே வழிகாட்டும். எனவேதான் அது முதலிடம் பெறுகிறது. மேலும் பொருளும் இன்பமும் அறவழியில் வந்தால்தான் உலகம் ஏற்கும் என்பதைச் சுட்டவே அறம் முதலில் வைக்கப்பட்டது எனலாம். எனவேதான்,

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல (புறம் 31)

எனப் புறநானூற்றுப் புலவர் கூறினார். சங்க காலத்திற்கு அடுத்து நாற்பொருள் மரபு தோன்றலாயிற்று. அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நாற்பால் மரபு சமய ஆட்சி மிக்க இடைக்காலத்தில் மிகுதியாகப் பேசப்படுகிறது. இந்நாற்பால் கருத்துகள், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்கள் ஆகிய இலக்கியங்களில் பேசப்படவில்லை.[25] தேவார திவ்வியப் பிரபந்தங்கள் ஆகிய பக்தி இலக்கியங்களில் இந்நாற்பால் கருத்துகள் பரவலாகப் பேசப்படுகின்றன.[26] இவை வைதீக சமயத்தார் வழக்குக்குக் கொண்டு வந்து போற்றினர் என்பதைக் காட்டுகின்றன. நாற்பால் கோட்பாட்டை வற்புறுத்தும் வைதீக சமயத்தினர் வீட்டினைக் குறிக்கோளாக்கி அறம் பொருள் இன்பங்களைக் கருவியாக்கி உள்ளனர். இவற்றுள் அறம் இம்மைப்பயன், மறுமைப்பயன், வீடு என்னும் மூன்றையும், பொருள் இம்மைப்பயன், மறுமைப்பயன் என்ற இரண்டையும், இன்பம் இம்மைப்பயன் ஒன்றையும் தருவதாம் எனவும், அறம் பொருள் இன்பங்கள் கருவி, வீடு குறிக்கோள் எனவும் வைதீக சமயம் வற்புறுத்திப் பேசுகிறது.[27]

2. பாகுபாடு

சங்ககாலத்துத் தொகை நூல்களை அடுத்து மிகப் பிரசித்தமாய் வழங்குவது 'பதினெண்கீழ்க்கணக்கு' என்னும் நூல் தொகுதியேயாகும். பதினெண்கீழ்க்கணக்கு என்னும் இவ்வழக்கு மயிலை நாதராலும் (நன். உரை. 387),

பேராசிரியராலும் (தொல். பொருள். செய். 470, 547 உரை) குறிக்கப்பட்டுள்ளது. எனவே கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டளவில் இவ்வழக்குப் பிரசித்தமாயிருந்தமை புலனாகும்.[28] பன்னிரு பாட்டியல் என்னும் நூல் இதற்குரிய இலக்கணத்தை மேற்கோள் சூத்திரத்தோடு விளக்குகிறது. இந்நூல் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றியதென்றும், பாட்டியல் நூல்களுள் பன்னிரு பாட்டியலே காலத்தால் முற்பட்டது என்றும் அரவிந்தன் கூறுவார்.[29] மயிலைநாதர் நன்னூலுக்கு உரை எழுதியதால் நன்னூல் காலத்திற்குப் பிற்பட்டவர். பேராசிரியர் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர். பெரும்பாலும் பன்னிருபாட்டியல் நூற்கருத்தை ஏற்றுக் கொண்டே இவர்கள் இத்தொடரைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. பிறகு பாட்டியல் நூற்கள் இதனைக் குறிப்பிடாததால் இக்கருத்து பன்னிருபாட்டியல் ஆசிரியர்களுக்கே உரியதெனலாம். பிற பாட்டியலார் இதை விரும்பாது ஏற்க மறுத்திருக்கலாம். அதனால் தங்கள் நூலில் குறிப்பிடாமல் இருந்திருக்கலாம். ஆயினும் இவ்வழக்கு பிற அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டு, போற்றப்பட்டு நிலைத்துவிட்டது. எனவே, பிற்கால சோழர் காலத்தில் இவ்வாறு குறிப்பிடும் வழக்கம் தோன்றியிருக்கக் கூடும் என்று நினைக்க இடமிருக்கிறது. இக்காலத்தில் தான் நம்பியாண்டார் நம்பி பதினொரு திருமுறைகளைத் தொகுத்தார். இதுபோலவே இந்த கீழ்க்கணக்கு, மேற்கணக்கு முறை தோன்றியிருக்கக்கூடும் என நினைக்க இடம் இருக்கிறது.

பன்னிருபாட்டியல் கூறும் மற்றொரு கருத்தை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. கணக்கு என்னும் தலைப்பில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கணக்கு பற்றி இலக்கணம் கூறும்பொழுது ஆசிரியப்பா, கலிப்பா பரிபாடல் எனப்படும் பாக்களால் ஐம்பது முதலாக ஐந்நூறு இறுதியாக அடிகள் பெற்று வரும் பாக்களைப் பெற்ற நூல்களைத் தொகுத்துக் கூறவேண்டும் என்பர். வெண்பாக்களின் தொகுதியும், அடியளவிற் குறைந்தும் உள்ள பாக்களைப் பெற்ற நூல்களைத் தொகுத்து கீழ்க்கணக்கு எனக்கூறவேண்டும் எனக் கூறுவர். அவற்றுள் மேற்கணக்கு நூற்களுக்கு உதாரணமாக எட்டுத் தொகை நூல்களைக் குறிப்பிட்டுள்ளார். கீழ்க்கணக்கு நூல்களுக்கு உதாரணமாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூற்களைக் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதிக்கு உரை எழுதிய கோவிந்தராசு முதலியார் மற்றொரு குறிப்பைக் குறித்துள்ளார் ''பத்துப்பாட்டையும் மேற்கணக்கு நூலென்ப

வாயினும் இந்நூலின்கண் பத்துப்பாட்டிற்குத் தனியாக இலக்கணம் கூறப்பட்டிருத்தலின், அதனையும் மேற்கணக்கெனக் கோடல் இந்நூலின் கருத்தன்றாம், என்பதறிக''[30] என்று குறிப் பிட்டுள்ளார், எனவே மேற்கணக்கு எனப்படுவது எட்டுத் தொகையை மட்டுமே குறிப்பிடக் கூடியதாகும். பத்துப் பாட்டைக் குறிக்காது. பத்துப்பாட்டிற்கு தனியே இலக்கணம் கூறப்பட்டுள்ளது. பாட்டு என்னும் தலைப்பில் இரண்டுநூற்பாக் களில் இலக்கண கூறப்பட்டுள்ளது.[31] அதில் ''ஈரைம் பாட்டுத் தொடுப்பது பத்துப் பாட்டெனப்படுமே'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்கணக்கு எனப்படுவது எட்டுத் தொகை மட்டுமே. கீழ்க்கணக்கு எனப்படுவது பதினெண் கீழ்க் கணக்கேயாம். இதில் பதினெட்டு இருப்பது போல அதிலும் பதினெட்டு இருத்தல் வேண்டுமென்ற விருப்புடையார் எவரோ பத்துப்பாட்டையும் சேர்த்து பதினெண்கீழ்க்கணக்கு எனக் கூறியுள்ளார். அது காலப்போக்கில் நிலைத்து விட்டது. பிற பாட்டியல் நூல்கள் எவையும் இதற்கு இலக்கணம் கூறாத தால் பன்னிரு பாட்டியல் கருத்தே ஏற்புடைத்தெனலாம். பன்னிருபாட்டியலும் உரையாசிரியர்களும் கீழ்க்கணக்கு என்றே குறித்துள்ளனர். எனவே மேற்கணக்கு என்றே குறித்திருக்க வேண்டும். பதினெட்டு என்னும் எண்ணைக் குறித்துக் கூறியது பிற்காலத்து வழக்காய் இருத்தல் வேண்டும்.

ஒரு கீழ்க்கணக்குப் பழைய ஏட்டில்,

மாப்புலவ ரெல்லாம் மாக்கடற் கண்ணிருந்து
பார்படுத்த தென்றமிழின் பாநான்கின் - வாய்ப்புடைத்தாய்ப்
பண்பாய்ந் துரைத்த பதினெட்டுக் கீழ்க்கணக்கும்
வெண்பாவின் பாலுரைத்தார் மிக்கு

என்று வரும் வெண்பாவொன்று காணப்படுகின்றதென ரா. ராகவையங்கார் அவர்கள் கூறுகிறார்கள்.[32] இதுவே கீழ்க் கணக்கு 18 என வரையறை செய்துள்ளமையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. வேறு சான்று இருப்பதாகத் தெரியவில்லை. மேற்கணக்கு என்னும் தொடர் பன்னிருப்பாட்டியலைத் தவிர வேறு நூல்களில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. எனவே கீழ்க்கணக்கு எனும் தொடரைக் கொண்டு புதுவதாகப் படைத்துக் கொள்ளப்பட்ட ஒன்று எனத் துணிந்து கூறலாம். ''கீழ்க்கணக்கு'' எனும் தொடர் நாவுக்கரசரால்[33] குறிக்கப் பட்டிருப்பது போல மேற்கணக்கு யாராலும் குறிப்பிடப் படவில்லை என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியிருக்

கிறது. கணக்கு என்ற சொல்லிற்குத் தேவநேய பாவாணர் கூறும் விளக்கம் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.[34] ''கணக்கு என்பது முதலில் கூட்டல் கணக்கை மட்டும் குறித்து பின்பு நால்வகைக் கணக்கிற்கும் பொதுப் பெயராயிற்று'' என அவர் கூறும் கருத்தை இத்துடன் நினைத்துப் பார்க்கும்பொழுது பல சான்றுகளின் கூடுதல் அல்லது பல நூல்கள் கூடிய தொகை - அளவு என்னும் பொருளில் கையாளப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அதனை நிலைநாட்ட பதினெட்டு என்னும் எண்ணும் பெயர் துணை செய்கிறது. பதினெட்டு நூல்கள் கூடிய தொகையே பதினென் கீழ்க்கணக்கு எனப்பட்டது என்று கூறலாம். இனி, மேல்-கீழ் என்னும் தொடர் இடம்பெற வேண்டிய நிலை யாது என ஆராயின் சில உண்மை புலப் படுகிறது. தமிழில் மேல் வாயிலக்கம் என்னும் பண்டைய மரபு இருக்கிறது. அதன் அடிப்படையில் தோன்றியிருக்கக் கூடும். என எண்ண இடமேற்படுகிறது. கடந்த காலத்தைக் குறிப்பிட 'மேனாள்' என்னும் தொடர் கையாளப் பட்டிருக் கிறது. காலத்தால் முந்தியதைக் குறிக்க இவ்வாறு மேற்கணக்கு எனக் குறிப்பிட்டிருக்கலாம். கணக்கு என்னும் சொல் நூலைக் குறிக்கும்.[35] இதனடிப்படையில் கடந்த கால நூல் எனக் குறிக்க மேற்கணக்கு எனவும், காலத்தால் பிந்தியது எனக் குறிக்க கீழ்க்கணக்கு எனவும் குறிப்பிட்டிருக்கலாம். வேறுவகையிலும் இதனை ஆய்ந்து நோக்கலாம். ''கீழ்'' எனப்படுவது அடிப்படையாக அமையக் கூடியது. கீழ்நிலை, கீழ்வாய் முதலிய சொற்கள் தொடக்க நிலையையும் அடிப் படையையும் குறித்து நிற்பதைக் காணலாம். மனித வாழ்விற்கு அடிப்படையாக —தொடக்க நிலையாகக் கற்பிக்க வேண்டிய நூல் எனும் பொருளில் கீழ்க்கணக்கு எனப் பெயரிட்டிருக்கலாம். அறமும் நீதியும் இளமையிலேயே கற்பிக்கப்படவேண்டியவை. அதன் காரணமாக இவை அடிப்படை நூல்களாக இளமையில் கற்பிக்கப்பட்டு வரவேண்டும் என்ற நோக்கில் இப்பெயர் இட்டு அழைத்திருக்கலாம். இதனைக் கற்றபிறகே வாழ்விற்குத் தேவைப்படும் அகம்-புறம் பற்றிய கல்வி புகட்டப் பட வேண்டும். அதனைக் கூறும் இலக்கியத் தொகை நூல்கள் மேற்கணக்கு எனப்பெயரிட்டு அழைக்கப்பட்டிருக்கலாம். இக் கருத்தை நிலைநாட்ட க.த. திருநாவுக்கரசு அவர்களின் கூற்றுப் பெருந்துணை புரிகிறது.[36] ஆனால் பன்னிரு பாட்டியலுக்கு உரை வகுத்த கோவிந்தராச முதலியார் அவர்கள், ''ஈண்டு மேல், கீழ் என்பன அடிகளின் மிகுதியையும், குறைவையும் உணர்த்துதற்கு வந்தனவேயன்றி உயர்வு, தாழ்வு என்னும் பொருளை உணர்த்துதற்கு வந்தனவல்ல என்பதறிக''[37] என்று குறிப்பிடுவர். எனவே மேல்-கீழ் என்னும் சொல் அமைந்தற் கான காரணத்தை உறுதிப்படுத்திக் கூறமுடியவில்லை.

கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தால் பிந்தியவை. வையாபுரிப் பிள்ளை 600 முதல் 850 வரை கணக்கிடுவர். இதில் குறிப் பிடும் திருக்குறள் மட்டும் காலத்தால் முந்தியது. ஏனையவை ஓரளவு வையாபுரிப்பிள்ளை கூறும் காலவரையை ஏற்றுக் கொள்ள சான்றுகள் உள, வடமொழித் தாக்கத்திற்குப் பிறகு எழுந்தவை பல, எனவே காலத்தால் பிந்தியவை பல உள.

இத்தகு பெருமை வாய்ந்த கீழ்க்கணக்கு நூல்கள் எந்த நோக்கில் எழுந்தன என்பதையும், என்னென்ன பயன்களை நல்கி வருகின்றன என்பதையும் கண்டறிய இத்தொகுப்பில் இடம்பெற்ற ஒவ்வொரு நூல்களையும் தனித்தனியாக உற்று நோக்க வேண்டும். கீழ்க்கணக்கின் பொதுவான நோக்கம் அறத்தை - நீதியை - தருமத்தைப் புகட்டுவதேயாகும். அதன் பொதுப்பயன் அறம், பொருள், இன்பம் பற்றி செய்திகளை அறநெறியில் அறிவித்து நல்வாழ்விற்கு வழிகாட்டியாக அமைவதேயாகும்.

3. கீழ்க்கணக்கு நூல்கள் - நோக்கு - பயன்

கீழ்க்கணக்கு நூல்களில் 11 அறம் பற்றியது. 6 அகம் பற்றியது. ஒன்று புறம் பற்றியது. அறம் பற்றிய நூல்களின் நோக்கும் பயனும் எவையெவை என அறிய அவற்றை முதலில் காண்போம்.

(1) **திருக்குறள்:-** ஆயிரத்து முந்நூற்று முப்பத்து அருங் குறளையும் பாயிரத்தோடு, பகர்ந்தவர் திருவள்ளுவர். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளையுடையது. வையத்துள் வாழ்வாங்கு வாழத் தேவைப்படும் அறக்கருத்து களை முழுமையாக எடுத்துக் கூறுவது. இது உலகப்பொது மறை. மனுநீதி நூல், அர்த்த சாத்திரம், சுக்ரநீதி போன்ற பிறமொழி நூல்களைக்காட்டிலும பெருமையாகப் பேசப்பட்டு வருவது. டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர்[38] கூறும் குறள் பற்றிய கருத்து இந்நூலின் மாண்பை நன்கு அறிய வழி வகுக் கிறது. மாக்ஸிம் கார்க்கி[39] இலக்கியம் பற்றிக் கூறிய கருத்து இந்நூலுக்கு முழுமையும் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

இந்நூலின் தலையாய நோக்கம் தனிப்பட்ட மனிதனின் ஒழுக்கம் நன்கு அமையவேண்டுமென்பதை வலியுறுத்துவதே யாம், இதனைச் சிறப்பாக அறத்துப்பாலில் காணலாம். சமூகப் பொறுப்பினை ஏற்றாரிடம் நல்லொழுக்கத்துடன் பொறுப்

புணர்ச்சியும் இருக்க வேண்டுமென்பதைப் பொருட்பாலில் வெளிப்படுத்துகிறார். இன்பத்துப்பாலில் இல்லறம் சிறக்கத் தலைவன்—தலைவி பெறவேண்டிய தூய அன்பும் தூய இன்பமும் பற்றிய கருத்தைக் கூறுவது நோக்கமாக அமைந்துள்ளது. அறம், பொருள், இன்பம் பற்றி அறிந்து வாழ்வதும், அதனால் எழும் இன்பங்களைத் துய்ப்பதும் நல்லனவற்றைப் போற்றுவதும் இந்நூலினால் எழும் பயனாகும். தனி மனிதனை பற்றியும் சமூகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளவும் நெறிப் படுத்தி அழைத்து செல்லவும் தேவைப்படும் அறிவை நல்குவதும் இந்நூலின் பயனாகும்.

(2) **நாலடியார்**:- பல சமண முனிவர்களால் இயற்றப் பெற்ற நானூறு பாடல்களைப் பெற்றது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பிரிவாக வகுக்கப் பட்டுள்ளது. அறத்துப்பால் துறவறவியல், இல்லறவியல் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. துறவறவியலில் ஏழு அதிகாரங்கள் உள்ளன. இல்லறவியலில் ஆறு அதிகாரங்கள் உள்ளன. பொருட்பால் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகைவியல், பல்நெறிவியல் என ஏழு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இன்பத்துப்பாலில் இன்ப துன்ப இயல், இன்ப இயல், என இரண்டு இயலாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெயரிட்டு அதிகாரம் வகுத்தவர் பதுமனார் என்றும், உரைகண்டவர் தருமர் என்றும் கூறுவர். ஆடூஉ முன்னிலை மிகுதியாகவும், மகடூஉ முன்னிலை மிகக்குறை வாகவும் இடம்பெற்றுள்ளன. இந்நூலை ஜி. யு. போப் மிகச் சிறப்பாகப் பாராட்டியுள்ளார்.[40] சமண நூலாகக் கருதப் பட்டாலும் இந்துமதக் கடவுள்களும் குறிப்பிடப் பட்டுள்ளனர்.[41] இந்நூன் தொடக்கத்தில் அமைந்த இயலும் அதிகாரங்களும் இந்நூலின் நோக்கத்தை நன்கு தெளிவு படுத்துகின்றன. தொடக்கத்தில் துறவறவியல் அமைந்து செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்னும் அதிகாரங்கள் நிலையாமையைப் பற்றி விளக்கி, சமணர்களின் நிலையாமைக் கொள்கையை நன்கு வலியுறுத்துகின்றன. திருக்குறளைப் போல இந்நூல் அமைந்திருந்தாலும் பல மாறுபட்ட கருத்துகளை எடுத்துக் கூறுவதையும் காணலாம்[42] முந்து நூற் கருத்துக்கள் மறுக்கப்பட்டிருப்பதையும் காண முடிகிறது.[43]

தமிழக மரபையொட்டிச் சமண மதத்தின் கொள்கைகளைப் பரப்புவதே இதன் நோக்கமாக அமைந்திருப்பதைப்

பாடல்களின் வாயிலாகக் காணமுடிகிறது. வாழ்விற்கு உதவும் அறக்கருத்துளைப் புதிய போக்கில் கூறுவதால் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே நாம் எளிதாக உதாரணங்களின் வாயிலாக நல்ல பல வாழ்வியற் கருத்துக்களை அறிந்து கொள்வது இதன் பயனாக அமையும் எனலாம்.[44] திருக்குறளுக்கு அடுத்துப் போற்றப்படுவதால் இந்நூலின் நன்னோக்கும், நற்பயனும் நன்கு விளங்கும்.

(3) **பழமொழி** :- ஏது நுதலிய முதுமொழி எனத் தொல்காப்பியர் கூறும் பழமொழிகளைக் கொண்டு முன்றுறையறையனார் இந்நூலை யாத்துள்ளார். இவர் சமண மன்னர் எனக்கருதுவார். மக்கள் அடிக்கடி வாழ்க்கையில் பயன்படுத்திய பலநூறு பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. நானூறு பாடல்களிலும் கூறப்பட்ட கருத்துகள் பழமொழிக் கருத்தை நிலை நாட்டக் கூறப்பட்டவையாகும். எனவே, இந்நூல் தோன்ற மக்கள் வாய்மொழிப் பழமொழியே காரணமாயிற்றெனலாம். முதல் இரண்டடிகளிலும் விளக்கம் இடம்பெறும். மூன்றாவது அடியில் ஆடூஉ, மகடூஉ முன்னிலைத் தொடர்களில் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. இறுதியில் பழமொழி அமைந்துள்ளது. பல பழமொழிகள் புதுமையாகவும், வேடிக்கையாகவும் அமைந்துள்ளன.[45]

பழமொழிகளை அடிப்படையாகக் கொண்டு அறக்கருத்துகளை வெளிப்படுத்துவதே இந்நூலின் நோக்கமாக அமைந்திருக்கிறது. பழமொழிகளை உணர்ந்து அதன் வழியாக அறவழிகளை அறிந்து கொள்வது இதன் பயனாகும்.

(5—6—7.) **திரிகடுகம் சிறுபஞ்சமூலம் ஏலாதி** :- நோய் நீக்கும் மருந்துப் பொருள்களின் பெயரைப் பெற்ற அறநூல்கள் மூன்று இத்தொகையில் இடம் பெற்றுள்ளன. அவையே திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகும். சுடுகம் என்பது உறைப்பு, கார்ப்பு, என்று பொருள்படும். கடுக்கும் பொருளாகிய சுக்கு, மிளகு' திப்பிலி ஆகிய மூன்றும் சேர்த்துத் தயாரிக்கும் பொருளுக்குத் திடுக்கிடும் என்று பெயர். அதுபோல மும்மூன்று ஒழுக்க முறைகளை ஒன்று சேர்த்து ஒவ்வொரு வெண்பாவில் அமைத்து நூறு பாடல்கள் பாடப்பட்ட நூலே திரிகடுகமாகும். இதன் ஆசிரியர் நல்லாதனார். இந்நூலின் முதல் நூற்பா,

அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய
தொல்குடியில் மாண்டார் தொடர்ச்சியும்-சொல்லின்
அரிலகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து

என அமைந்துள்ளது. ஆசிரியரே திரிகடுகம் மருந்தாகும் எனக் குறிப்பிட்டு, இம்மூன்று நல்லொழுக்கங்களும் வாழ்விற்கு மருந்துபோல் அமையும் எனக் கூறியுள்ளார். பெரும்பாலும் முன்னோர் கூறிய அறக் கருத்துகளே இடம்பெற்றுள்ளன. ஒரு சில புதிய கருத்துகளும் உள.[47]

மூலம் என்பது வேர் ஆகும். 'பஞ்ச' என்னும் சொல் ஐந்தைக் குறிக்கும். சின்னஞ்சிறிய ஐந்து வேர்களால் ஆன மருந்து என்பதே சிறுபஞ்ச மூலம். இதுபோல ஐந்து நற்கருத்து கள் ஒவ்வொரு பாடலிலும் இடம் பெற்றதால் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் காரியாசான். இவர் சமண சமயத்தவர். உடல் நோயை தீர்ப்பதுபோல உளநோயைத் தீர்க்க இவை உதவும் என்னும் கருத்தில் இப்பெயர் சூட்டப் பட்டுள்ளது. 102 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாசிரி யரும் தம் நூற்பெயரை ஒரு பாடலில் கையாண்டுள்ளார்.

ஒத்த ஒழுக்கம் கொலைபொய் புலால்களவொடு
ஒத்த இவையல ஓர்நாலிட்டு - ஒத்த
உறுபஞ்ச மூலம்தீர் மாரிபோல் கூறீர்
சிறுபஞ்ச மூலம் சிறந்து

என்பது பாடலாகும். ஆனால் இதனைச் சிலர் சிறப்புப் பாயிரம் என்று கூறுவர். சமண மதக் கருத்துகளோடு வாழ்விற் குரிய அறக் கருத்துகளும் இதில் கூறப்படுகின்றன.[48] நான்கு வரிகளில் ஐந்து அறநெறிக் கருத்துக்களை வைத்துப் பாடும் திறம் போற்றற்குரியது.

ஏலாதி என்பது ஏலத்தை ஆதியாகக் கொண்டு செய்த பல பொருள்களின் கூட்டு மருந்து ஆகும். இது போல பல அறக் கருத்துக்களின் கூட்டாக அமைந்த நூலே ஏலாதியாகும். இதன் ஆசிரியர் கணிமேதையார். இவர் சமண சமயத்தவர். சோதிட நூற் புலமையுடையவர். ஏலாதி மருந்து ஐந்திற்கு மேற்பட்ட மருந்தும் பொருளின் கலவையாகும். சிலர் எட்டு

என்றும், சிலர் பதினொன்று என்றும் கூறுவர். ஆசிரியர் தம் நூலில் இடம்பெற்ற 80 பாடல்களிலும் ஆறாறு கருத்துக்களை வைத்துப் பாடியுள்ளார். இந்நூற் கருத்து பெரிதும் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், நூற் கருத்துகளைப் போலவே அமைந் துள்ளன[49].

ஏனைய அறநூல்களைப் போல அறம், பொருள், இன்பம் பற்றிக் கூறுவதோடு, இம்மூன்றும் வீடுபற்றிய கருத்துகளையும் கூறியுள்ளன. எனவே, இவை நாற்பொருள் கூறும் நோக்கத் தோடு இயற்றப்பட்டதென்பர். மருந்துகளைப் போல அறக் கருத்துகள் மனநோய்களைத் தீர்க்க வல்லன என்பதைச் சுட்டு வதற்காகவே இவ்வாறு சிறந்த நோக்கோடும் பயனோடும் பெயரிடப்பட்டதெனவும் கூறலாம்.

(8—9.) **ஆசாரக் கோவை — முதுமொழிக் காஞ்சி** ஆசாரக் கோவை என்னும் தொடர் நல்லொழுக்கங்களின் தொகுதி என்று பொருள் தரும். மக்கள் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை விளக்கிக் கூறுகிறது. ஆசிரியர் கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார் ஆவார். நூறுவெண்பாக்களை உடையது. வடமொழி ஸ்மிருதிக் கருத்துகள் இதில் இடம் பெற்றிருப்பதாகக் கூறுவர். தமிழர் மரபுக்கு ஒவ்வாத பல கருத்துகள் இதில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.[50] பிறமொழிக் கருத்தைத் தமிழின் அறக் கருத்தோடு இணைத்துக் கூறுவது இந்நூலின் நோக்கமாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது. கற்பார் புதிய மரபை அறிந்து கொள்வதே இதன் பயனாகும்.

புறப்பொருள் வெண்பாமாலையில் முதுமொழிக் காஞ்சி என்ற ஒரு துறை உள்ளது. அதன் அடிப்படையில் இந்நூலுக்குப் பெயர் வைத்திருக்கலாம் எனக் கருதுவர்.[51] காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் ஒரு வகை அணிகலக் கோவை என்று கூறி, அதன் அடிப்படையில் அறிவுரைக் கோவை என்னும் பொருளில் இவ்வாறு பெயரிடப்பட்டது எனவும் கூறுவர். இதன் ஆசிரியர் மதுரைக் கூடலூர் கிழார் ஆவார். இந்நூலின் அமைப்பு முறை வேறுபடுகிறது. பத்து முதுமொழிகளைக் கொண்ட பத்து பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் இடம்பெற்றுள்ளது. அப்பெயரின் இறுதியில் பத்து என்ற எண்ணுப் பெயரும் இடம் பெற்றுள்ளது.[52] ஒவ்வொரு பிரிவின் முதலடி ''ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்'' என்றே தொடங்குகிறது. பிற்காலத்து எழுந்த ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் முதலான அறநூல்கள் தோன்றுவதற்கு

இந்நூல் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது என்பதை நூலமைப்பைக் கொண்டு அறியமுடிகிறது. மிகச் சுருக்கமாக ஒரே அடியில் ஓர் அறக்கருத்தைத் தெளிவாகக் கூறவேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாக அமைந்திருக்கிறது. மனதில் எளிதாக நினைவுபடுத்திக் கூறுதற்கும் மேற்கொள்வதற்கும் நற்பயிற்சி நல்குவது இந்நூலின் பயனாகக் கொள்ளலாம்.

(10-11) **இன்னா நாற்பது—இனியவை நாற்பது:-** மக்களுக்குத் துன்பம் பயக்கும் செயல்களைக் குறித்துக் கூறுவது இன்னா நாற்பது ஆகும். ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் கபிலதேவர். 40 பாடல்களில் கூறப்படும் கருத்துகளில் பெரும் பகுதி பிற நூல்களில் கூறப் பட்டவையே ஆகும்.

பார்ப்பார் இல் கோழியும் நாயும் புகல் இன்னா
மாரிநாள் கூவும் குயிலின் குரல் இன்னா
இன்னா ஒத்திலாப் பார்ப்பான் உரை
தேன் நெய் புளிப்பின் சுவை இன்னா
காமம் முதிரின் உயிர்க்கு இன்னா

போன்ற சில புதிய கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. மனித வாழ்விற்குரிய இன்னாதவற்றைத் தொகுத்துக் கூறுவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது. நாம் நமக்குரிய இன்னாதவற்றை இதன் துணைகொண்டு அறிவது பயனாகும்.

மக்களுக்கு இன்பம் பயக்கும் செயல்களைக் குறித்துக் கூறுவது இனியவை நாற்பதாகும். நாற்பது பாடல்களில் நந்நான்கு இனிய கருத்துகள் கூறப் பட்டுள்ளன. ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார். பெரிதும் திரிகடுகத்தை ஒத்துஅமைந்துள்ளன. மனித வாழ்விற்குரிய இனியவற்றைத் தொகுத்துக் கூறுவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது. இனியவற்றை இதன் துணைகொண்டு அறிவது பயனாகும்.

(12-13-14-15-16-17.) **அகப்பொருள் நூற்கள் ஆறு:-** கீழ்க் கணக்கில் திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, கார் நாற்பது என்னும் பெயர்களைப் பெற்ற ஆறு நூல்களும் அகப் பொருள் நூல்களாக அமைந்துள்ளன. கார் நாற்பது முதற் பொருளில் இடம்பெற்ற பெரும்பொழுதை அடிப்படையாகக்

கொண்டு இயற்றப்பட்டது. பிற நூல்களில் ஐந்திணை ஒழுக்கம் பற்றிய கருத்துகள் கூறப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஒன்று போலவே காணப்படுகின்றன. சிறப்பாக உள்ளுறை இறைச்சி இடம்பெற்றுள்ளன. திணைப்பெயர் அமைப்பு நூலுக்கு நூல் வேறுபட்டு அமைந்துள்ளன. சங்க கால அகவிலக்கியச் சாயல் களைக் காண முடிகிறது. இந்த ஆறு நூல்களின் நோக்கமும் பயனும் ஒன்றுபோலக் காணப்படுகிறது. ஆயினும் கார் நாற்பது குறிப்பிட்ட ஒரு திணையொழுக்கத்தை மட்டும் கூறுவதையே சிறப்பு நோக்கமாகக் கொண்டு விளங்குகிறது. சங்க காலம் போற்றிய அகப்பொருள் மாண்பை எடுத்துரைப்பதை இந்நூல் கள் நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டிருப்பதால் காதல் இன்பத்தை நம்முன்னோர் எவ்வாறு போற்றிவந்தனர் என்பதை அறிவதற்கு இவை உதவுகின்றன. அகப்பொருள் இன்பத்தை இந்நூல்கள் நல்குகின்றன. அதனைப் பயனாகக் கருதலாம்.

(18) களவழி நாற்பது:- இது புறப் பொருளைச் சார்ந்த ஒரே நூலாகும். இதன் ஆசிரியர் பொய்கையார். இவர் இந் நூலைப் பாடிச் சேரனை சிறையிலிருந்து விடுவித்தார் என்றே கலிங்கத்துப்பரணி, மூவருலா, தமிழ்விடுதூது முதலிய நூல்கள் அறிவிக்கின்றன.[53] போர்க்களத்தில் நடைபெற்ற போர்ச் செயல் இந்நூலில் மிகச் சிறப்பாக குறிக்கப்பட்டுள்ளது. சேரனுக்கும் தனக்கும் உள்ளநட்பின் ஆழத்தையும், அன்பின் திறத்தையும், பொய்கையார் விளக்குகிறார். புறப்பாடல்களின் வரலாற்றிலே 'களவழி நாற்பது' இரண்டாவது பருவம். சங்க காலப் புறப்பாடல்கள் எல்லாம் வெவ்வேறு அரசர்களைப் பற்றிப் பாடும் தனித்தனிப் பாடல்கள். ஒரே கருத்து ஊடுருவிச் செல்லும் பல பாடல்கள் அப்போது கிடையாது. களவழி நாற்பதோ ஒரே அரசனைப் பற்றிய ஒரே கருத்தை — அஃதா வது அவன் போர்க்கள வெற்றியை — நாற்பது செய்யுட்களில் விரித்துக் கூறுகின்றது. இவ்வழக்கம் விரிந்து, பெருகிப் பிற் காலத்தில் பரணியாக மலர்ந்தது. புறத்தைப் பற்றிய சங்கப் பாடல்களின் அரும்பாகி, களவழியில் போதாகி பரணியில் மலர்ந்தது எனவே, சங்கப் பாடல்களின் அடிப் படையில் வளர்ந்து, பரணி தோன்றுவதற்குக் கால் கோள் இட்டது களவழி என்பது பொருந்தும்.[54] சோழன் செங்கணான் போர் செய்த போர்க்களத்தின் வருணனையைப் புலவர் பொய்கையார் இலக்கியச் சுவையுடன் நயமாக வருணிக்கிறார். வெட்டப்பட்ட கால்கள் கீழே ஓடிக் கொண்டிருக்கும் இரத்த வெள்ளத்திலே வீழ்ந்து கருஞ்சுறா

மீன் போல் காட்சி தருகின்றன.[55] கருங்குன்று போன்ற யானை செங்குன்றாக மாறிற்று.[56] சோழனின் அம்பாலும், வேலாலும் திறக்கப்பட்ட மாற்றார் மேனியிலிருந்து வடியும் இரத்தத்தினை உண்டு, அதன்மேல் படிந்து விளையாடிய காரணத்தால் கருங்காகம் செங்காகம் ஆயிற்று. வீரர்களின் மார்பில் அம்பு பட்டு வடிந்து கொண்டிருக்கும் இரத்தம் கார்த்திகை விளக்குபோல இருந்தது.[57] மன்னன் ஒருவனின் விடுதலைக்காகப் புலவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் விடுதலை வாங்கித் தந்த தமிழ்க் கவிதையின் திறத்தினையும் நாம் களவழி மூலம் அறிகிறோம்.[58]

பொய்கையார் தம் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கவும், செய்ந்நன்றியை வெளிப்படுத்தவும் இந்நூலைப் பாடியதால் இதன் நோக்கு நமக்குப் புலனாகிறது. சங்ககாலப் போர்க்களக் காட்சியை இலக்கியத்தில் கற்று இன்புறுவதற்கு வழி வகுத்ததே இதன் பயனாகும்.

அறியலாகும் பொதுச் செய்திகள்

இலக்கியம் அளிக்கும் இன்பம் நிலைபேறுடையதாக இருக்க வேண்டுமானால், மனித வாழ்க்கையை மேம்பாடுடைய தாக்கும் அறநெறிக் கருத்துக்களும், அனுபவ உண்மைகளும் அதில் இடம்பெற்றுத்தானாக வேண்டும். அப்பொழுதுதான் அது வாழும் இலக்கியமாக விளங்க முடியும் என்பது டி. எஸ். எலியட்டின் கருத்தாகும்.[59] பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கு இக்கருத்து முழுமையாகப் பொருந்தும். நன்கு வரையறுக்கப்பட்ட நோக்கங்களோடு நீதி நூல்கள் இயற்றப்படுகின்றன. குறிப்பிட்ட சில உண்மைகளையோ, கருத்துகளையோ அறிந்து மனித இனம் நல்வாழ்வு வாழவேண்டும் என்று கருதுகின்ற சான்றோர்கள், அவற்றை முறைப்படுத்தித் தெளிவுறுத்துகின்றனர். அவ்வாறு அவற்றை எடுத்துரைக்கும் பொழுது, கற்போர் உள்ளத்தில் அவ்விழுமிய கருத்துகள் நன்கு பதிய வேண்டும் என்பதற்காகச் சில இலக்கியத் திறன்களை அவர்கள் கையாளுகின்றனர்.[60] இக்கொள்கை பதினெண் கீழ்கணக்கு இலக்கியத்திற்கும் பெரிதும் பொருந்தும். (அற நூல்கள் கூறிவந்த பல நெறிமுறைகளும் விதிமுறைகளும் காலப் போக்கில் நாட்டின் சட்டங்களாக மாறின என்பதற்கு இந்திய வரலாற்று நூல் பற்பல சான்றுகள் தந்துள்ளன. பழங்கால நூல்கள் கூறுவனவற்றுள் சிலவற்றையே இன்றைய சட்டம் அப்படியே அங்கீகரித்து ஏற்றுக்கொண்டுள்ளது; சிலவற்றிற்குத் திருத்தங்கள் தந்துள்ளது. இன்னும் சிலவற்றைக் காலத்திற்கு ஒவ்வாதது என்று கருதியதால் ஏற்றுக்கொள்ளாமல் புறக்

கணித்து விட்டது.[61] அந்நாளில் அறநூல்களும் தொன்று தொட்ட நெறிகளும் முறை செய்வதற்கு உதவியாக அமைந்தன. தரும சாத்திரங்களின் அடிப்படையில் நீதி வழங்கப்பட்டு வந்தது.[62] பழைய அற உரைகளில் தர்மத்தைச் செயல் படுத்துவதற்கான நடைமுறைச் சட்ட விதிகளும் நிலைமுறை சட்ட விதிகளும் காணப்படுகின்றன.[63] அரசன் விழிப்பு மிக்க மனத்தையுடையனாய், அறநூல்களைத் தழுவி அறநூல் முறையை மேற்கொண்டு அவ்வழியே வழக்கு களை ஆராய்ந்து முறை செயல் வேண்டும் என்று சுக்ரநீதி கூறுகின்றது.[64] ஸ்மிருதிகளை நன்கு புரிந்துகொள்ள பற்பல உரைகள் எழுதப்பட்டன. அவற்றுள் மிதாக்ஷரம் என்ற உரை மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதை எழுதியவர் விஞ் ஞானேஸ்வர் ஆவார். இதில் 4 முறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று திராவிட முறையாகும்.[65] இம்முறை நாம் போற்றிவரும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றி ருப்பதைக் காணலாம். நன்மையும் தீமையும் ஒருங்கிணைந்து அறமும் மறமும் அடுத்தடுத்து, நல்லவையும் அல்லவையும் உடன்சேர்ந்து உருக் கொண்டதோ என ஐயுறும் வகையில் அமைகின்றான் மனிதன். நன்மை பெருகித் தீது அருகும்போது அல்லவை தேய்ந்து அறம்பெருகும் போது மனிதன் மாண்புடைய வனாக உருப்பெறுகின்றான். தீது முழுவதும் மறையும்போது தீயிடைத் தூசுபோல் அழியும்போது இறை நிலைக்கு உயர் கிறான்.[66] இதற்கு வழிவகுப்பதே கீழ்க்கணகு இலக்கியங் களின் நோக்கமாகும். அறத்தால் உயரும் மனிதன் வானுறை யும் தெய்வமாகப்போற்றப்படும் நிலையைத் தருவதே இந் நூல்களின் பயனாகும்.

முடிவுரை

நூல் எழுந்த சூழலுக்கேற்ப அதன் இயல்பும், பயனும் வேறுபட்டு அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகை மிகுதியாக எழுவதற்கும், ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையில் ஒரு குறிப்பிட்ட பொருண்மை அளவிகந்து பயில்வதற்கும் இச்சூழல் காரணமாக அமைகின்றது. எனவே, சூழலையுணர்ந்து இலக்கிய இயல்பை விளங்கிக் கொள்வது தேவையாகின்றது. இலக்கியத்தை உள்ளும் புறமும் முழுமையாகப் புரிந்துகொள்ள இவ்அணுகு முறை உதவு கின்றது[67] இதனை நாம் அடிப்படைக் கொள்கையாக அமைத்துக் கொண்டு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை ஆராய்ந்து அவற்றின் நோக்கத்தையும் பயனையும் ஆராயும்

பொழுது மேலே கண்டறிந்த உண்மைகள் புலனாகும். காதலையும் வீரத்தையும் உயிர்நாடியாகக் கொண்டிருந்த சங்க காலத் தமிழன் அறநெறியை-நீதியை - தர்மத்தை அவற்றினும் மேலாகக் கருதத் தொடங்கினான் என்பதைக் கீழ்க்கணக்கு நூல்கள் நமக்கு அறிவிக்கின்றன. முன்பு இவ் அறத்தை அவற்றோடு இணைத்துப் பார்த்த தமிழன் அவற்றைத் தனித்துப் பிரித்துப் போற்றும் நிலைக்கு உயர்ந்து வளர்ந்தான் என்பதைக் கீழ்க் கணக்கு நூல்கள் பகர்கின்றன. தொடர்ந்து அப்பணி பாரதியார் காலம்வரை நற்பணியாற்றி புதிய ஆத்திச் சூடி என்னும் வடிவம் பெற்றது. இன்று அந்நெறி-நன்னெறி-நீதி நெறி-தர்மநெறி சட்டத்தாலும் பாதுகாக்க முடியாத அளவிற்குத் தடம் புரண்டு கிடக்கிறது என்று பலர் கூறினாலும் அறவாழ்வும் அறநெறியும் தொடர்ந்து போற்றப்பட்டுதான் வருகிறதென்பதை இன்றுள்ள பல சான்றோர்களின் வாழ்வில் கண்டு மகிழலாம். அத்தகு அறவழிகளைக் காட்டும் கீழ்க் கணக்கு நூல்களைத் தொடர்ந்து போற்றி அவை கூறும் வழியைப் பின்பற்றி வாழ்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் எதிர்பார்க்கும் பயன் கிட்டுவதோடு நல்லின்பமும் வந்து சேரும்.

குறிப்புகள்

1. Hans Christian Anderson -
   "Every man's life is a fairy tale, written by God's fingers."

2. Arthur Schopenhaucer-
   The first forty years of life give us the text, the next thirty supply the commentary.

3. Henry Ford -
   Life is work and everything you do is so much more experience.

4. A. W. V. Schelegee -
   Literature is the immortality of speech.

5. Sir Walter Scoott -
   Literature is a great staff, but a sorry crutch.

6. Lional Triling -
All literature tends to be concerned with the question of reality.

7. Ezra Loome's pound -
Great Literature is simply language charged with meaning to the utmost possible degree.

8. Rene Wellek, Discriminations (New Delhi 1920), p. 28

9. Rene Wellek, Theory Literature, p. 94.

10. வையாபுரிப்பிள்ளை, இலக்கிய விளக்கம், ப. 110

11. ச. வே. சுப்பிரமணியன், தா. வே. வீராசாமி தமிழ் இலக்கியக் கொள்கை-1, ப.4.

12. அ. ச. ஞானசம்பந்தன் — இலக்கியக்கலை, ப.18.

13. கைலாசபதி, இலக்கியமும் திறனாய்வும், ப. 17.

14. அந்தனிஜான், இலக்கியத்திறனில் ஒரு பார்வை, ப.14

15. கைலாசபதி, இலக்கியமும் திறனாய்வும், ப. 20

16. ச. வே. சுப்பிரமணியன் - தா. வே. வீராசாமி, தமிழ் இலக்கியக் கொள்கை-1, ப.10.

17. மேற்படி, ப. 7.

18. புறநானூறு, பாடல். 187.

19. தொல்காப்பியம்—(அறம் பொருளின்பம் எனக் கூறும் நூற்பா).

1) அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப (தொல். 1363)

2) இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
(தொல். 1038).

3) மூன்றன் பத்தியும் மண்டிலத் தருமையும் (தொல்.987)

20. தொல்காப்பியம்—செய்யுளியல், நூற்பா, 112;113;114.

21. முருகரத்தினம்—உலகத் தமிழ்—ப. 13.

22. மேற்படி 1, ப.19

23. 1) அறம்பொருள் இன்பமென்று அம்மூன்றின் (கலி. 141)

2) அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமதின் செல்வம் (புறம். 28)

3) அந்நிலை மருங்கின் அறன்முத லாகிய
மும்முதற் பொருட்கும் உரியவென்ப
(தொல். பொருள். செய். 411)

24. முருகரத்தினம் — உலகத் தமிழ் — ப. 17.

25. மேற்படி, ப. 19.

26. 1) .... ஆலதன்கீழ்
நால்வர்க்கு அறம்பொருள் வீடின்பம் ஆறங்கவேதம்
தெரிந்தானை (தேவாரம் 6905).

2) ... ... அம்மறைதான்
மன்னும் அறம்பொருள் இன்பவீடு என்றுலகில்
நன்னெறிமேம் பட்டன நான்கன்றே
(நாலாயிரம் 2784).

27. முருகரத்தினம் — உலகத் தமிழ் — ப. 20

28. வையாபுரிப்பிள்ளை, இலக்கிய மணிமாலை, ப.75

29. அரவிந்தன் - உரையாசிரியர்கள் - ப. 517

30. கோவிந்தராச முதலியார்: பன்னிருபாட்டியல், ப. 152,

31. மேற்படி, ப. 157.

32. ஆசிரியர் குழு - பதினெண் கீழ்கணக்கு மூலம், ப. 9.

33. திருநாவுக்கரசு தேவாரம் - 21-8.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்ப ரீசனே.

34. தேவநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும், பண்பாடும், ப. 185

35. க. த. திருநாவுக்கரசு, இலக்கியக் கொள்கை—1, ப. 68.

36. மேற்படி, ப. 68.

37. கோவிந்தராச முதலியார், பன்னிருபாட்டியல், ப. 151.

38. க. த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், துணை வேந்தரின் அணிந்துரை, ப. 5.
காலஞ் சென்ற டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் உலகப் பெருந்தொண்டர்களில் ஒருவர், மாந்தர் தொண்டிற்குத் தம் வாழ்வைப் படைத்த நல்லார்; நுண்மாண் நுழைபுலமிக்க அறிஞர்; சிறந்த சிந்தனையாளர். அப்பெரியார்,

ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை மிகுந்த உறுதியோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்த நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை என்று சொல்லலாம்'' என்று போற்றியுள்ளமை இங்குக் கருதத் தக்கது.

39. திருக்குறள் நீதி இலக்கியம், க.த. திருநாவுக்கரசு, ப. 85.
இலக்கியம் மனிதன் தன்னைத்தான் அறிந்து கொள்ளத் துணை செய்வது; தன்னம்பிக்கையை ஊட்டி வளர்ப்பது; வலுப்படுத்துவது; உண்மையைக் காண்பதற்கான முயற்சிக்கு ஆதரவு அளிப்பது; மக்களிடத்தில் உள்ள

நல்லனவற்றைக் காண வகை செய்வது; இழிந்தவற்றைக் களைந்தெறிய வழி காட்டுவது; மக்களின் இதயங்களில் வெட்கம் கடுஞ் சீற்றம், வீரம் ஆகிய உணர்ச்சிகளைத் தூண்டுவது; வாழ்வின் மேலான இலட்சியத்திற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வலிமையூட்டுவது. மனிதனைத் தூய்மைப் படுத்துவது; வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்யப் பயன்படுவது.

— மாக்ஸிம் கார்க்கி.

40. ச. வே. சுப்பிரமணியன் & என். கடிகாசலம், Literary Heritage of the Tamils, p. 46.

41. பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், ப.144

42. பதினெண் கீழ்க்கணக்கு—மூலம், ப.147, ப. 128

1) பல்லான்ற கேள்விப் பயலுணர்வார் பாடழிந்து
அல்லல் உழப்பது அறிதிரேல் — தொல் சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து (பாடல். 252)

2) பல்லான்ற கேள்விப் பயலுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வது அறிதிரேல் — கல்லாதார்
சேதனம் என்னும்அச் சேறகத்து இன்மையால்
கோதென்று கொள்ளாதாம் கூற்று (பாடல் 106)

43. பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள் பக்.165-166

எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
எந்நாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னால்தான் ஆகும் மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர் (பாடல் 243).

44. பார்க்க - நாலடியார் பாடல்கள் — 70; 86; 125; 127; 135;140;172;195;213;253;270;282;மற்றும் பல உள.

45. சான்றிற்குச் சில பழமொழிகள் :—
நாய்மேல் தவிசு இடுமாறு (பாடல் 75)
குறுநரிக்கு நல்ல நாராயம் கொளல் (பா. 80)
பார்ப்பாரும் தின்பர் உடும்பு (பா. 87)
வெந்நீரில் தண்ணீர் தெளித்து (பா. 90)

கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு (பா. 114)
முயல்விட்டுக் காக்கை தினல் (பா. 141)
புழுப்பெய்து புண் பொதியுமாறு (பா. 142)
கணையிலும் கூரியவாம் கண் (பா. 174)
அறிவினை ஊழே அடும் (பா. 203)
உள்ளிருந்து அச்சாணிதாம் கழிக்குமாறு (பா. 276)
மச்சு ஏற்றி ஏணி களைவு (பா. 291)
வெண்ணெய்மேல் வைத்து மயில் கொள்ளுமாறு (325)
அறிமடமும் சான்றோர்க் கணி (பா. 361)
கல்தேயும் தேயாது சொல் (பா. 394)

46. நான்மணிக்கடிகை பாக்களைக் காண்க:-
எண். 4, 10, 38, 46, 75, 79, 93.

47. திரிகடுகம் பாடல்:-7,22,29,32,35,35, 48, 90,96, 98.

48. சிறுபஞ்சமூலம் பாடல்:- 4,6,10,18,28,69,74,83,102.

49. ஏலாதி பாடல் :- 5, 7, 9, 21, 23, 24. 26, 32, 41, 59, 74, 76, 77.

50. ஆசாரக் கோவைப்பாடல் :- 3,5,15,18,20,30,45,61.

51. பதினென்கீழ்க்கணக்கு மூலம் - ப 317.

52. முதுமொழிக் காஞ்சி :-
(1) சிறந்த பத்து, (2) அறிவுப் பத்து,
(3) பழியாப்பத்து, (4) துவ்வாப் பத்து,
(5) அல்லபத்து, (6) இல்லைப்பத்து,
(7) பொய்ப்பத்து, (8) எளியபத்து,
(9) நல்கூர்ந்தபத்து (10) கண்டாப்பத்து.

53. பதினெண்கீழ்க்கணக்கு மூலம், ப. 406

54. பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிகள், ப. 262.

55. களவழி நாற்பது பாடல்-9 :-

மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
கால்ஆசோடு அற்ற கழற்கால் இருங்கடலுள்
நீலச்சுறாப் பிறழ்வ போன்ற புனல்நாடன்
நேராரை அட்ட களத்து

56. களவழி நாற்பது, பாடல் 7:-

அஞ்சனக் குன்று ஏய்க்கும் யானை அமருழக்கி
இங்குலிகக் குன்றேபோல் தோன்றுமே

57. களவழி நாற்பது பாடல்கள் 5, 17.

58. பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், ப. 264.

59. க. த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப. 69.

60. மேற்படி, ப. 70.

61. ச. செந்தில்நாதன், இந்துச் சட்டம், ப. 2.

62. மா. சண்முகசுப்பியமணியம், குற்றவியல் சட்டம் - ப. 5.

63. ச. செந்தில்நாதன், இந்துச்சட்டம், ப. 2.

64. மா. சண்முகசுப்பிரமணியம், குற்றவியல் சட்டம், ப. 5.

65. மேற்படி, ப. 7.

66. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், ஒன்று, நன்று, ப. 1.

67. மேற்படி, தமிழ் இலக்கியக் கொள்கை, பாகம்-5, ப. 5.

பரணி இலக்கியம்

— இராதா செயலக்குமி

சொல்லும் பொருளும்

பரணி என்னும் சொல், இரண்டாம் நட்சத்திரம், பிரபந்த வகை, இரவின் பதினைந்து முகூர்த்தங்களில் ஆறாவதான இராக்கதம், அடுப்பு, செப்பு, சாடி, சிலந்திக்கூடு, ஏரிமதகு, கூத்து. காவல்மேடை, மேல்தட்டு ஆகிய பலவற்றைக் குறிக்கும்.[1] இச்சொல் முதன் முதல் நட்சத்திரம் என்னும் பொருளில் சிந்தாமணியில் பயில்கிறது.[2] பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் இலக்கியவகை என்ற பொருண்மை ஏற்பட்டது.

பரணி-இலக்கியம் — பெயராய்வு

போர்க்களத்தின் பல யானைகளை வென்றவன் மீது பாடப் படுவது பரணி. இப்பெயர்.

1. புலவன் பரண் மீது அமர்ந்து பாடுவதால் வந்தது. 2. பரண் மீதிருந்து கிளி கடிதல் போல் யானை மீதிருந்து பகையை விரட்டுதலால் ஏற்பட்டது. 3. பரண் போன்ற உயர்ந்த நீதி பீடத்தில் இருந்து பாடுவதால் தோன்றியது. 4. அணிகலன் நிறைந்த செப்புப் போல் அணிச்சுவையுடைமையால் உருவானது (பரணி-செப்பு) 5. யானைப்போர் வெற்றியைப் பாடுவதால் அமைந்தது. 6. பேய்கள் கூத்தாடும் நிகழ்ச்சியைப் பாடுதலால் உண்டாயிற்று. (பரணி—கூத்து), 7. பேய்கள் கூழ் சமைக்கப் பயன்படும் அடுப்பு பற்றி வந்தது (பரணி-அடுப்பு) 8. இது தேவபாணியால் ஆன நூல். பரணி என்பது ஏடெழுவோர் பிழையால் பரணி ஆயிற்று. 9. பரணி என்னும் நாள் பற்றி வந்தது என்று பல்வேறு கருத்துக்கள் உள்ளன.[3]

பரணியில்பிறந்தவன் பெருவீரன் ஆதலாலும்,பேய்கள்பரணி நாளில் காளிக்குக் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடும்

வழக்கு[4] பற்றியும், பரணி நாளோடு தொடர்புடைய பூதம், பெருஞ்சோறு, அடுப்பு, காளி[5] முதலியவை பரணியில் இடம் பெறுவதாலும், நாள் பற்றி வந்த பெயரே ஏற்புடைத தென்பர் அறிஞர். [6]

ஆயினும் பரணி நூல்களில் பாட்டுடைத் தலைவன் பரணி நாளில் பிறந்ததாகவோ, பரணி நாளில் போர் கொடுத்த தாகவோ, பேய்கள் பரணி நாளில் கூழட்டதாகவோ அகச் சான்று இல்லை. இரணியவதைப் பரணி தவிர ஏனையவற்றில் காளிதேவிக்குக் கூழ் படைத்ததாகச் சான்றில்லை.

கலிங்கத்துப் பரணியில் பரணிக்கூழ் [7] எனவரும் இடங்களில் பரணி நாளில் அட்ட கூழ் என்று பொருள் உரைக்கப்படுகிறது. போர்க்களத்தில் சமைத்த கூழ் எனில் தவறாகாது.

'வருகூழ்ப் பரணிக்களம்' [8] என்னும் தொடரைப் 'பரணி வரு கூழ் என மாற்றி, பரணி நாளில் சமைத்த கூழ் என்று பொருள் கூறப்படுகின்றது. பரணிக்களம் — போர்க்களம், வெற்றிக் களம் என்றே பொருள் சொல்லலாம்.

'கலிங்கத்துப் பரணி சூட்டிய தோன்றல்' [9] என்னுமிடத்தில் கலிங்கத்துப் பரணியாகிய நூல் என்ற பொருள் சொல்லப் படுகின்றது. கலிங்க வெற்றியைச் சூட்டிய-என்று பொருள் வெற்றிகொள்வது பொருந்தும்.

சூரன்வதைப் பரணி ஏட்டில் திருச்செந்தூர்ப்பரணி என்று காணப்படுதல் பொருந்தாது தோற்றவர்களை ஒட்டியே பெயர் அமைய வேண்டும் என்பர் அறிஞர், [10] தக்கயாகப் பரணி ஏட்டிலும் வீரபத்திரப்பரணி என்று பெயர் இருப்பதைக் காண வெற்றி எனப் பொருள் கொள்ளின் வீரபத்திரரின் வெற்றி, திருச்செந்தூரில் பெற்ற வெற்றி எனப் பொருள் பொருந்துவதை காணலாம்.

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி [11]

என்னும் இலக்கணமும் பேய்கள் பரணி பாடின என்னும் தொடர்களும் 12 இக்கருத்துக்கு அரண் செய்கின்றன.

''தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானைவெங் களத்தில்
குருதிப் பேராறு பெருகும் செங்களத்து
ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே''

(ப. பா. நூ. 240)

''ஆனை சாய்த்த அடுகளத்து அல்லது
யாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே''

(ப.பா.நூ.242)

என்பதிலிருந்து போர்க்களத்தில் பாடப்படுவது பரணி எனத் தெரிகிறது. தொடக்கத்தில் போர்க்களத்தில் பாடிய நிலை பின்னர் வெற்றியை மட்டும் பாடிய நிலையாக மாறியிருக்கலாம்.

எனவே பரணி என்னும் பெயர் வெற்றி என்னும் பொருள் அடிப்படையில் எழுந்தது என்பதே பொருந்தும்.

பரணி இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் :

தொல்காப்பியத்தில் காணப்படும் வஞ்சி, உழிஞை, வாகை, பாடாண்திணை சார்ந்த சில துறைகளின் வளர்ச்சியே பரணி இலக்கியம். இத்துறைகள் புறநானூறு பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல்களில் தனித்தனிப் பாடல்களாக[13] உள்ளன. களவழி என்னும் துறை களவழி நாற்பது என்னும் தனி நூலாயிற்று. பிற்காலத்தில் அரசனின் வெற்றிபாட அந்த புலவர்கள் இத்துறைகளைக் காடு பாடுதல், பேய் பாடுதல், காளிக்குக் கூளி கூறுதல் என்னும் உத்திகளோடு இணைத்துப் பரணி என்னும் புதிய இலக்கியம் படைத்தனர்.

நமக்கு முழுமையாகக் கிடைக்கும் பரணி இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது. செயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணி. இது முதற் குலோத்துங்கனின் கலிங்க வெற்றியைப் பாடுவது. காலம் 11 ஆம் நூற்றாண்டு.

இதற்கு முன்பே பரணி நூல்கள் இருந்தன என்பதை

தமிட் பரணி கொண்டு ஒன்னார் வென்ற
கோவி ராசகேசரி பன்மராஜ உடையார் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்
(எஸ்.ஐ.ஐ.) என்னும் கல்வெட்டாலும்,

பப்பத் தொருபசிப்பேய் பற்ற ஒருபரணி
கொப்பத் தொருகளிற்றால் கொண்டகோன்

(இராசராசன் உலா வரி 47-48)
— கூடலார்

சங்கமத்துக் கொள்ளும் தனிப்பரணிக்கு எண்ணிறந்த
துங்க மதயானை துணித்தோனும்

(விக்கிரமசோழன் உலா வரி 42—44)

என்னும் உலாவரிகளாலும், அடியார்க்கு நல்லார் உரையிலும் பேராசிரியர் உரையிலும் காட்டப்பட்டுள்ள பரணித் தாழிசை களாலும் [14] அறியலாம். இவை யாவும் அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை.

கலிங்கத்துப் பரணியைத் தொடர்ந்து அதன் வளர்ச்சியாக அதே நூற்றாண்டில் தக்கயாகப் பரணியும் அடுத்த நூற்றாண் டில் இரணியவதைப் பரணியும் எழுந்தன.

15, 17, ஆம் நூற்றாண்டுகளில் அஞ்ஞவதை, மோகவதை பாசவதைப் பரணிகள் எழுந்தன.

18—ஆம் நூற்றாண்டில் சூரன்வதைப் பரணியும், 20—ஆம் நூற்றாண்டில் இலங்கைப் பரணி, சூரசங்காரப்பரணி, வங்கத்துப் பரணி, சீனத்துப் பரணி, போர்ப்பரணி, தமிழ்காத்த போர்ப் பரணி, ஆகியவையும் எழுந்துள்ளன.

இவை தலைமை, பொருள், உறுப்பு ஆகியவற்றில் பற்பல மாறுபாடுகளுடன் வளர்ச்சி பெற்றுள்ளன.

பரணி இலக்கியத்தின் நோக்கம் :

முதன்மை நோக்கம் :-

பரணி இலக்கியங்களைப் பார்க்கும்போது அவை தலைமை, பொருள், உறுப்பு ஆகியவற்றில் வேறுபட்டிருப் பினும், போரையும் வெற்றியையும் பாடுதல் என்னும் அடிப் படை நோக்கினும், தாழிசையால் பாடுதல் என்னும் யாப்பு வடிவிலும் வேறுபடவில்லை.

எனவே இவ்விலக்கியத்தின் முதன்மை நோக்கம் வெற்றியைத் தாழிசையாற் பாடுவது என்பது பெறப்படு கின்றது.

மெய்க் கீர்த்திகளும் அரசனது வெற்றி, புகழ் கூறுவன ஆயினும் அரசனின் இத்தனையாவது ஆண்டில் இன்ன பொருள் தானமளிக்கப்பட்டது என்று எழுதும்போது அவனுடைய புகழ் வெற்றிகளை வரிசைப்படுத்திக் கூறுதலே அவற்றின் நோக்கம். சில மெய்க்கீர்த்திகள் முன்னோர் புகழையும் சேர்த்துக் கூறும். அவ்வளவே,

இவற்றின் மூலம் அரசனின் ஆட்சியாண்டு, அவன் இந்த ஆண்டுக்கு முன் இந்த வெற்றியயைப் பெற்றான் என்றும் இன்றியமையா வரலாற்றுப் பயன் கிட்டுகின்றது.

ஆயின் பரணி இலக்கியமோ குறிப்பிட்ட ஒரு பெரும் வெற்றியைக் காடு பாடுதல் முதலிய உறுப்புக்களோடு அணி நயம், கற்பனை நயம், ஒன்பான் சுவை பொருந்தப்பாடுவது.

தொடக்கத்தில் வெற்றியைப் பாடுதலை மட்டும் நோக்க மாகக் கொண்டிருந்த பரணிகள் காலம் செல்லச் செல்ல வேறு சிறப்பு நோக்கங்களையும் துணை நோக்கங்களையும் பெற்றன.

சில சிறப்புநோக்கங்களும் துணை நோக்கங்களும்:

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணிபாடியது பற்றி வீரசிங்காதன் புராணத்தில் ஒரு வரலாறு கூறப்படுகிறது.[15] பிட்சைக்கு வந்த கும்பகோணம் வீர சைவ மடத்து அடியவர் ஒருவரைக் கூத்தர் கசையால் அடிக்க அவர் இறந்துவிட்டார். மற்ற அடியவர்கள் கூத்தரைக் கொல்ல அழைத்துச் செல்லும்போது கூத்தர் சிவ பூசை செய்ய வேண்டும் என்று ஒதுங்கிச் சென்று அங்கிருந்த முளைச்சாளம்மன் என்னும் காளிகோயிலில் நுழைந்து கதவைத் தாளிட்டுக் காளியிடம் தன்னைக் காக்க வேண்டினார். காளியின் கட்டளைப்படி வீரபத்திரரின் வெற்றியைப் பரணியாகப் பாடிக் காலையில் கதவுத் துளை வழியே நீட்ட அடியவர்கள் மகிழ்ந்து கூத்தரை மன்னித்தனர் என்பது அவ்வரலாறு.

இவ்வரலாறு உண்மையாயின் உயிர் பிழைக்க வேண்டும் என்பதே இவர்பரணி பாடியதன் சிறப்பு நோக்கமாயிருக்கவேண்டும். அரசனைப் பாடுவதிலிருந்து இறைவனைப் பாடும் நிலைக்கு மாறியதன் காரணமும் இதுவாகவே இருக்கலாம்.

கூத்தர் இப்பரணியில் தன் துணைநோக்கங்களான தன்னை ஆதரித்த அரசனை வாழ்த்துதல், ஞான சம்பந்தருக்கும் சைவத்துக்கும் சிறப்புச் செய்தல், தன் இஷ்ட தெய்வமான நாமகளைச் சிறப்பித்தல் ஆகியவற்றையும் நிறைவேற்றிக் கொள்கிறார்.

சான்று கடவுள் வாழ்த்தில் இராசராசன் வாழ இறைவனை வேண்டுதல், இறதியில் பேய்கள் இராசராசனை வாழ்த்தல், காளி தேவிக்கு நாமகள் ஞானசம்பந்தர் வாலாறு கூறுதல், மற்ற புராணங்களில் வீரபத்திரர் போரில நாமகள் மூக்கரிபட இங்கு மட்டும் சிறப்பாக வீற்றிருத்தல் ஆகியவை.

இரணியவதைப் பரணியின் சிறப்பு நோக்கம் அறத்தை நிலை நாட்டுதல். நரசிம்மம் இரணியனை அழித்த வெற்றியைப் பாடுகிறது இது. இதனுடைய மற்றொரு நோக்கம் போரை விரிவாகப் பாடுதல். கம்ப இராமாயணத்தில் இரணியன்வதைப் படலத்தில் 15 பாடல்களில் இடம் பெற்ற இரணியன் நரசிம்மம் போரை 132 பாடல்களில் விரித்துரைக்கிறது. இது புராணத்தில் சில புதிய செய்திகளைச் சொல்வதும் இவ்வாசிரியரின் நோக்கம்போலும், பிரகலாதனிடம் நரசிம்மன் மன்னிப்பு வேண்டுதல். இரணியன் மனைவி பெயர் சுகந்தமாலை என்றும் (இ. வ. ப. 264) ஆகியவை இதற்குச் சான்று (பாகவத்தில் இவன் பெயர் கயாது)

தத்துவராயரின் அஞ்ஞவதை, மோகவதைப் பரணிகளுக்குக் குருபக்தியும் தத்துவ உணர்வும் சிறப்பு நோக்கங்களாகின்றன. இவற்றுள் தம் குருவான சொரூபானத்தரையே முழுமுதற் கடவுளாக்கி, ஞானம், விவேகங்களை அவருடைய படைத் தலைவனாக உருவகம் செய்து அஞ்ஞானம் மோகங்களை அழித்து வெற்றி பெறுவதாக பாடுகிறார். குருவுக்குச் செய்த அபசாரத்தால் அவரைப் பிரிந்து கடலில் விழுந்து இறக்கக் கருதி விழுமுன் அவர்மீது இருபது நூல்கள் பாடினார். அவற்றைச் சேர்ந்தவை இப்பரணிகள். குரு அழைக்க மீண்டும் சேர்ந்தார். 16

இலங்கைப் பரணி முன்னுரையில் கனகராச ஐயர் ''பரணி நூல் அருகிவிட்டது என்றும்,

இலங்கை எறிந்த கருணாகரன் தன்
இகல்வெம் சிலையின் வலி கேட்டீர் (க.ப.64)

என்று செயங்கொண்டார் பாடியதன் மூலம் இலங்கைப் போர் பரணிபாடச் சிறப்பான தகுதிபெற்றது என்று அறியலாம் என்றும், இராமநாமம் முக்தி தருவது என்றும் கூறி அதனால் பரணி பாடுகிறேன் என்றும் கூறுகிறார். பரணி இலக்கியம் அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்னும் இவருடைய நோக்கம் இதனால் புலப்படுகின்றது.

போர்ப்பரணி வீரர்களுக்கு ஊக்கம் ஊட்டும் நோக்குடன் எழுதப்பட்டது என்பதை ஆசிரியர் பசுபதி முன்னுரையில் சுட்டுகிறார். அமைப்பும் அதனை வலியுறுத்துகிறது.

வங்கத்துப் பரணி ஆசிரியர் வங்க விடுதலைக்காக உயிர் விட்ட உரோசனாரா பேகம் என்னும் பெண்ணின் வீரச் செயல் தம்மைக் கவர்ந்ததால் அவளைக் காவியத்தில் நுழைக்க வேண்டும் பழைய கவிதை மரபு இலக்கண மரபு வளர வேண்டும் என்ற நோக்கங்களை முன்னுரையில் அறிவிக்கிறார்.

தலைமை மாறுபாடு - நோக்கம்:

பரணியின் பாட்டுடைத் தலைவர் அரசன், பின்பு இறைவன், பின்பு ஆசிரியர் என ஒருவராக இருந்த நிலை மாறிப் பின் நாட்டுத்தலைவர்கள், முப்படைத் தலைவர்கள், வீரர்கள், தொண்டர்கள் எனப் பலராக மாறுவதைப் பார்க்கிறோம்.

இவ்வாறு தலைமை மாறுபடுவதற்குக் காலச் சூழலும் உணர்வும் காரணமாக இருக்கின்றன. உணர்வு மாறுபடவே நோக்கமும் மாறுபடுகிறது.

செயங்கொண்டார் தம்மை ஆதரித்த அரசனைப் புகழ்தல் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் நோக்கத்தால் எனலாம். அரசன் கவின் கூத்தைவென்று நானும் செயங்கொண்டான் ஆனேன் என்றதும், செயங்கொண்டானைச் செயங்கொண்டான்

பாடுகிறேன் என்றதாகக் கூறப்படும் செய்தியால் இதனை அறியலாம்.

தக்கயாகப் பரணி, இரணியவதைப்பரணி, சூரன் வதைப் பரணி ஆகியவற்றின் தலைவன் இறைவன். பக்தி நோக்கமும் சமயநோக்கமும் இதன் காரணங்களாகலாம்.

மோகவதை, அஞ்ஞவதை, பாசவதைப் பரணிகளுக்குத் தலைவர் ஆசிரியர். மக்கள் மாயை நீங்கி ஞானம் பெறல் வேண்டும் என்ற நன்னோக்குடன் எழுந்தவை. எனவே ஞானாசிரியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டன.

இலங்கைப் பரணி, சூரசங்காரப் பரணி ஆகியவை மக்கள் பிறவிப் பிணி நீங்கி முத்தி பெறவேண்டும் என்னும் எண்ணத் துடன் எழுதப்பட்டவை. மற்ற பரணிகளில் பேய்கள் பேய் களாகவே இருக்க இராமர் முடிசூட்டு விழாக்கண்ட பேய்கள் முக்தி அடைந்தன என்று பாடுவது இதற்குச் சான்று. இவை களும் இறைவனைத் தலைவனாகக் கொண்டு பக்தி நோக்கில் தோற்றுவிக்கப் பட்டவையே.

வங்கத்துப் பரணியில் இந்திய நாடே தலைமைப் பொருள். நாட்டுப் பற்றுணர்வால் நாடு நலம்பெற்றுப் பகையை வென்று வாழவேண்டும் என்ற நோக்கத்துடன் கடவுள் வாழ்த்தில் பாரதம் வாழ இறைவனை வேண்டுகிறார் ஆசிரியர்.

போர்ப்பரணி, சீனத்துப் பரணி, தமிழ் காத்த போர்ப் பரணி ஆகியவற்றில் இந்தியத் தலைவர்கள் வீரர்கள், தொண்டர்கள் அனைவரும் பாட்டுடைத் தலைவர்கள். மன்னர் ஆட்சியில் மன்னன் ஒருவனே தலைவன் என்ற நிலை மாறி மக்கள் ஆட்சியில் போரில் பங்குகொண்ட அனைவரை யும் புகழவேண்டும் என்ற நோக்கத்தை இங்கு காண்கிறோம்.

பொருள் மாறுபாடு நோக்கம் :

அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பரணி களில் வரலாற்றுப் பொருண்மையும், இறைவனைத் தலைனாகக் கொண்ட பரணிகளின் புராணப் பொருண்மையும், குருவைத் தலைவனாகக் கொண்ட பரணிகளின் தத்துவப்பொருண்மையும்

வங்கத்துப் பரணி, சீனத்துப் பரணி, போர்ப் பரணிகளில் தற்கால நிகழ்ச்சிகளாகிய பொருண்மைகளும் இடம் பெறுகின்றன.

பொருண்மைக் கேற்பவும் சில நோக்கங்கள் மாறுபடுகின்றன வரலாற்றுச் செய்திகளை உணர்த்துதல். புராணக் கதைகளைப் பரப்புதல், ஞான நெறிகளை வலியுறுத்துதல், நாட்டுப் பற்றையும் வீர உணர்வையும் ஊட்டுதல், தமிழ்ப்பற்றை மிகுத்தல் மூடக் கொள்கைகளை மறுத்தல் ஆகிய நோக்கங்கள் அறியப் படுகின்றன.

சாதி பேசும் மூடர்களைச்
சாய்த்து வெற்றி கொள்ளுவோம்
முன் நடந்தோர் சென்ற பாதை
மூடர் பாதை ஆகையால்
பின்னவர்கள் புதிய பாதை
தென்னகத்தே ஆக்குவோம்

(த. கா. போ. ப. பக் 32—32)

என்னும் வரிகள் மூடக்கொள்கைகளை மறுக்கும் நோக்கத்தைக் காட்டுகின்றன.

உறுப்பு மாறுபாடு நோக்கம் :

தேவர் வாழ்த்து, கடைநிலை, பாலை, காளிகோயில் கன்னியை ஏத்தல், அலகை விநோதம், கனாநிலை, நிமித்தம் பசி, உவகை, வாகை, மறக்களம் காண்டல், கூழ் அட்டு வார்த்தல் ஆகியவை பரணியின் உறுப்புக்கள் (ப. பா. 241)

இவ்வுறுப்புக்கள் சில பரணியில் கூடியும், சிலவற்றில் குறைந்தும், சிலவற்றில் மாறுபட்டும் காணப்படுகின்றன. இம்மாறுபாடுகளுக்கும் சில நோக்கங்கள் உண்டு.

கலிங்கத்துப் பரணியில் அவதாரம் என்ற தனிப் பகுதியும், இந்திரசாலம் இராசபாரம்பரியம் என்னும் பகுதிகளும் உள்ளன.

குலோத்துங்கன் திருமாலின் அவதாரம் என்று செயங்கொண்டார் பல இடங்களில் சொல்கிறார். அச்சிறப்பு நோக்கி அவதாரம் என்னும் பகுதியைச் சேர்ந்திருக்கலாம். இராச

பாரம்பரியக் குலோத்துங்கன் பரம்பரை புராண அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் சுட்டப்படும் நோக்கத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

தக்கயாகப் பரணியிலும், அஞ்ஞவதை, மோகவதை, பாசவதைப் பரணிகளிலும், தேவி, கோயில், பேய் பாடும் உறுப்புக்கள் மாறி மாறி வந்துள்ளன.

தக்கயாகப் பரணியில் தேவியை முன்னர் கூறுதல் தேவிக்குச் சிறப்புச் செய்யும் பொருட்டே. கலிங்கத்துப் பரணியில் கோயில் கட்டட அமைப்பில் சொல்லப்பட இங்கு கீழேழு உலகம் மேலேழு உலகம் அடிப்படையும் விதானமுமாக தீர்த்தம் ஏழு கடலாக மதில் சக்கர வாளமாகக் கூறப்படுகிறது.

அஞ்ஞவதை, பாசவதை, மோகவதைப் பரணிகளில் உட்சோலை, உவமை, ஆல், படைச்செருக்கு, படையெழுச்சி போன்ற உறுப்புக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன எனினும் அவை உட்பிரிவுகளே,

இலங்கைப் பரணியில் பேய் விளையாட்டு என்னும் உறுப்பு உள்ளது. இதில் ஆசிரியர் பேய்கள் இராவணன் போலும், மண்டோதரி போலும், இந்திரசித்து போலும் வேடமிட்டு நடிப்பதாகக் கூறுகிறார். அவதாரம் பகுதியில் மச்ச, கூர்ம, தன்வந்திரி, மோகினி, வராக, நரசிம்ம, வாமன அவதாரங்களைக் கூறுகிறார். இராம காதையிலுள்ள ஈடுபாடே இதன் காரணம்.

சீனத்துப் பரணி போர் பற்றிய நிகழ்ச்சிகளை மட்டும் பல தலைப்புக்களில் கூறுகிறது. கடைதிறப்பு, காடு, கோயில், தேவி, பேய், கூழ் எதுவும் இல்லை.

இதில் கற்பனையை விடுத்து உண்மையை மட்டும் சொல்லும் நோக்கத்தைக் காண்கிறோம். போர்ப் பரணியும் இது போன்றதே. ஆயினும் உறுப்புக்கள் மிகக் குறைவு. தமிழ் காத்த போர்ப் பரணி வாழ்த்து துயிலெழுப்புதல், துயிலெழுந்து வரவேற்றல், வீரர்கள் இல்லத்தாருடன் மகிழ்ந்து பின் கதை சொல்லுதல், காடு பாடியது. ஆணவப் பேய் பாடியது, அறிவு பாடியது, படைச்சிறப்பு, பின்தேர்க்குறவை, முன்தேர்க்குறவை செய்வன கூறிக் குரவையாடுதல் என்ற உறுப்புக்களைப் பெற்றுள்ளது.

காடு பாடியதில் வறுமையைப் பாடி, அரசியலாரை ஆணவப் பேயாகக் கூறி இனி என்ன செய்ய வேண்டும் என்ற தீர்வையும் கூறுகிறார் ஆசிரியர். இதில் இவருடைய சீர்திருத்த நோக்கு உணரப்படுகிறது.

இவை மூன்றையும் புதுமைப் பரணி என்று சொல்லலாம்.

இலக்கியத்துள் இலக்கியம்

கலம்பக இலக்கியத்தில் தூது, குறம் போன்ற பல இலக்கியக் கூறுகள் கலந்து காணப்படும். அவ்வாறு பல இலக்கியம் பரணியுள் இல்லை யெனினும், இரணியவதைப்பரணி, சூரசங்காரப் பரணி, இலங்கைப்பரணிகளில் வள்ளைப்பாட்டும், மோகவதைப் பரணியில் சசிவன்ன போதமும் இலக்கியத்துள் இலக்கியமாகக் காணப்படுகின்றன.

சசிவன்ன போதம் சாதாரண மக்களுக்காகப் பாடப்பட்டதாகக் குறிப்புள்ளது. எவ்வளவு தீமை செய்தவரும் தத்துவப் பொருளை உணர்ந்து ஈடேறலாம் என்பதைக் காட்டும் நோக்கத்துடன் இது இணைக்கப்பட்டுள்ளது.

நெல் குற்றும்போது உலக்கைப் பாட்டு பாடும் வழக்கைக் காட்டுவது உலக்கைப் பாட்டின் நோக்கமாயிருக்கலாம். இரணிய வதைப் பரணி, அஞ்சு மோகவதைப் பரணிகள், சும்மேலோ சும்முலக்காய் என்பதோடு அமைய இலங்கைப்பரணி, சூரசங்காரப் பரணி பாடேலோர்/பரணி இலக்கியம் நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. இதன் நோக்கம் படிப்போர் நேரில் காண்பது போல் நிகழ்ச்சிகளை உணர வேண்டும் என்பதாக இருக்கலாம். பாடுலக்காய் இடியேலோர் இடியுலக்காய் என்றும் பாடுகின்றன.

பயன்கள் :

ஒரு இலக்கியம் என்ன நோக்கத்துடன் ஆக்கப்படுகிறதோ அந்நோக்கம் நிறைவேறுவது அவ்விலக்கியத்தின் பயன். இப்பயன் இலக்கியம் எழுந்த காலத்தில் ஏற்படும் பயன்கள் பிற்காலத்தில் ஏற்படும் பயன்கள் என இருவகைப்படும்.

அரசனைப் பற்றிய பரணிகளில் அரசனும் மற்றோரும் நூலைக் கேட்டு மகிழ்தலாகிய பயனும், புலவன் சிறப்பும்

பெருமையும் அடைதலாகிய பயனும் இலக்கியம் எழுந்த காலப் பயன்.

தக்கயாகப் பரணியின் பயன் உயிர் போகாமல் கூத்தர் காக்கப்பட்டமை, அஞ்ஞவதை மோகவதைப் பரணிகளின் பயன் குருவருள்.

இலங்கைப் பரணி, சூரசங்காரப் பரணியின் பயன் பரணி இலக்கிய வளர்ச்சி.

வங்கத்துப் பரணியின் பயன் மரபுக் கவிதை வளர்ச்சி.

சீனத்துப்பரணி, போர்ப்பரணி, தமிழ்காத்த போர்ப்பரணி களின் பயன் புதுமை ஆக்கம். நாட்டுப்பற்று, தமிழுணர்வு பரவல்.

இவை யன்றிப் பிற்காலத்தில் நூலைப் படிப்பவர்களால் அறியப்படும் செய்திகள் சமுதாயத்துக்கும் மொழிக்கும் பயன் தருவனவாக உள்ளன. இலக்கியம் காலக் கண்ணாடி ஆதலால் காலச் சூழ்நிலையைப் படம்பிடித்துக்காட்ட அது பயன்படுகிறது

பரணி நூல்களால் அறியப்படும் செய்திகள்

வரலாறு:-

குலோத்துங்கனின் முன்னோர் வழி முறை, அவன் மனைவியர், படைத்தலைவர்கள் அவன் பெற்ற வெற்றிகள் (இராசபாரம்பரியம், 255, 286, 363, 64, 65, 381, 82, 83,)

இரண்டாம் இராசராசன் தில்லையில் செய்த திருப்பணிகள் (த.யா.ப. நூலாய்வு)

இந்திய சீன எல்லை, (சீ. ப. 13), சீனப் போரின் போது இந்திய சீனத் தலைவர்கள், வியட்நாம், கொரியப் போர்கள் போன்று எண்ணற்ற வரலாற்றுச் செய்திகள்/ (வ.ப.12,13.)

புராணச் செய்திகள் / (சீ. ப. பக். 30, 32) / அறியப்படு கின்றன. தேவர்களைப் பத்துப் பிரமர் மீண்டும் மீண்டும் படைத்தல், (த. யா. ப. 591) திருமால் தக்கயாகத்தில் மும்

மூர்த்தியாய் வந்து மும்முறை தலை இழத்தல் (சு.யா.ப. 46) சந்திரன் குருத் துரோகத்தால் ஒளியிழத்தல் (பா. வ. ப. 389) போன்ற பல புராணச் செய்திகள் புலனாகின்றன.

கலைகள்

தவிசின் கால்களாகக் குறும்புதர் வடிவை யானைத் தந்தத்தால் அமைத்தல் (இ. வ. ப.157) சிற்பக்கலை வளர்ச்சியையும்.

சித்திரமணியம் அமைத்தல் (க. ப. 315) பாண்டியர் மலைக் குகையில் நுழைந்த வடிவு இது என யானையின் வயிற்றில் பேய் நுழைவது போல் துகில் கொடிகளில் வரைந்தமை (க. ப. 583) ஆகிய செய்திகள் ஓவியக்கலையையும்,

கோயில் பாடியதில் அடித்தளம் இடுதல், உத்தரம், தூண் முகடு மதில் அமைத்தல் ஆகியவை கட்டடக் கலையையும் காட்டும் சான்றுகள்.

பெயர்கள்

தக்கயாகப் பரணியில் சிவனின் பெயராக அறுபது பெயர்களும் தேவியின் பெயராக ஐம்பத்தைந்து பெயர்களும், சம்பந்தர் பெயராகப் பதினைந்து பெயர்களும் சுட்டப்படுகின்றன. (நூலாய்வு)

இராசராசபுரி, மதுரை, வஞ்சி, உறையூர் போன்ற ஊர்கள் குறிக்கப் பெறுகின்றன.

இவை பெயராய்வு செய்வோருக்குப் பயன்படும் சான்றாக இராசராசபுரி என்பது எந்த ஊரின் பழைய பெயர், அது எவ்வாறு இன்றைய நிலைக்கு மாறுபாடு அடைந்தது என்பன போன்ற ஆராய்ச்சிகளுக்கு உதவும்.

அரசர்கள்

தென்னவர் வில்லவர் முதலான நாற்பத்தி இரண்டு அரச மரபினர் கலிங்கத்துப்பரணியால் அறியப்படுகின்றனர். (க. ப. 329-32)

மலைகள்

உதயமலை அத்தனமலை ஏமகூடம் ஓமகூடம் கயிலை கனக கூடம் கிரவுஞ்சம் சக்கரவாளம் சித்திரகூடம் நேரி பொதியில் மந்தரமலை மேரு விந்தம் வெள்ளிமலை ஆகிய மலைகள் அறியப் படுகின்றன. (த. யா. ப. நூலாய்வு)

ஆறுகள்

அரிசில், கங்கை, காவிரி, குசைத்தலை, குமரி, கொல்லி, கோதாவரி, கோதமை, துங்கபத்திரை, பாலாறு, பகீரதி, பெண்ணை, பொருநை, பொன்முகரி, யமுனை ஆகிய ஆறுகள் அறியப்படுகின்றன. (த. யா. ப. 31. க. ப. 367, 69)

பாலை நிலை மரங்கள்

இண்டு, ஈகை ஓமை, கள்ளி, காரை, கூகை, சுள்ளி, சூரை, நெல்லி, பாலை, புன்கு, வள்ளி, வாகை, விடத்தேரு, வெட் பாலை, வேல் ஆகிய மரங்கள் பாலை நில மரங்களாக அறியப் படுகின்றன. (இ. வ. ப. காடு பாடியது. க. ப. காடு பாடியது பாடல் 2, 3, 4)

அணிகள்

கழல், உதரபந்தம், முடி, நெற்றிப்பட்டம், குண்டலம், கேயூரம், ஆழி, வீரசங்கிலி, மணிவடம், கவிகை, சாமரை, பதாகை, (பா.வ.ப. 307) ஏகவடம், ஐம்படைத்தாலி, கலாபம், காஞ்சி, குதம்பை, குழை, சிலம்பு, சூடகம், பட்டம் பரிபுரம், பாடகம், பொன்மாலை, மேகலை, வன்னசரம் முதலிய அணிகலன்கள் அறியப்படுகின்றன. (க. ப. 334, 149 275, 63, 132, 32, 58, 510, 335, 23, 510, 286, 53, 514,

போர்க் கருவிகள்:

அம்பு (க.ப.500) உலக்கை (க. ப. 527)கப்பணம் (இ. வ. ப. 360), கவசம் (க. ப. 33) குந்தம் (க. ப. 499) கேடகம் (க. ப. 430, குலிசம் (இ. வ. ப. 360) சங்கு (இ. வ. ப. 360) சக்கரம் (க. ப. 247) சவளம் (க. ப. 437) சுரிகை (க.ப. 99)

செண்டு (க. ப. 178) தண்டு (க. ப. 240), (இ. வ. ப. 360) பரிசை (இ. வ. ப. 360) பாசம் (இ. வ. ப. 360) பாரவளை (இ. வ. ப. 360, க. ப. 511) (க. ப. 431) வாள் (க. ப. 95) வில், வேல் (க. ப. 464) ஆகிய போர்க் கருவிகள் அறியப் படுகின்றன.

இசைக் கருவிகள்

காளம் (க. ப. 324) குழல், தண்ணுமை (323,) தமருகம் (114) தாளம் (384) துடி (21) பணிலம் (240) முரசு (223) முழவு (119) யாழ் (323), வயிர் (344) வலம்புரி (283) வீணை (323) ஆகிய இசைக்கருவிகள் அறியப்படுகின்றன.

சமயச் செய்திகள்

அமணர் தலை மழித்து நிர்வாணமாய் இருப்பர், ஒரு பொழுதே உணர்பர், கூறைத் துணியால் வடித்து உண்பர், அந்தணர் முந்நூல் அணிந்து கங்கை நீராடுவர், அரசரும் முந்நூல் அணிவர். அஃது இரண்டாம் பிறப்பு. பௌத்தர். தலைமழித்துக் காவி உடை அணிவர் என்பனவும் (க. ப. 466, 468) இந்திரர் பலர், கற்பக மரம் பத்து, இருபத்து நான்கு தீர்த்தங்கரர் என்னும் சமணர் கொள்கைகளும், பரணியால் அறியவரும் சமயச் செய்திகள்.

நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் :

பரணிகளின் மூலம் பல சமுதாய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களையும் அறியலாம்.

> **வரத்தினுக்குத் தக்கதாகப் பலியாக**
> **உறுப்பரிந்து தருதும்''** (க. ப. 109)
>
> **''அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவர் ஆலோ**
> **அரிந்த சிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ**
> **கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ**
> **குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ** (க.ப.111)
>
> **பகடு இடந்து கொள் பசுங்குருதி பலிகொள்** (க.ப. 114)

என்ற அடிகள் வீரர்கள் காளிக்குப் பலியிடும் வழக்கத்தைக் காட்டுகின்றன.

சமையல் கூடத்தை மெழுகிக் கோலமிட்டுப் பின் பானையை அடுப்பில் ஏற்றும் பழக்கம். (க. ப. 517), வாந்தி வரும்போது தலைமயிரை முகரும் பழக்கம் (க. ப. 584) நெல் குற்றும்போது பாடும் வழக்கம் போன்று பல வழக்கங்கள் அறியப்படுகின்றன.

சகுனத்தில் நம்பிக்கை கொண்டிருத்தல் அன்று முதல் இன்று வரை உள்ள பழக்கம்.

ஆண் யானைதந்தம் ஒடிய மதம் புலருதல், பெண்யானைக்கு மருப்பு எழ மதம் தோன்றுதல், விளக்கு கறுத்தெரிதல், மேகம் இரத்தமழை பொழிதல், முரசு யாரும் அடிக்காமல் அதிர்தல், இரவில் இந்திரவில் தோன்றுதல், ஓமனரி, ஈமஎரி போல் கமழ்தல் (க. ப. 222, 223) மகளிர் கூந்தல் தீப்பட்டாற்போல் நாறுதல், (இ. வ. ப. 21.8) பகலில் நட்சத்திரம் வீழ்தல் (இ. வ. ப. 215) இவை அக்காலத்தில் தீச்சகுனமாகக் கருதப் பட்டன என்பதை அறிகிறோம்.

காலச் சூழ்நிலையை அறிதல்

இலக்கியம் காலக் கண்ணாடி என்பர். அவ்வகையில் பரணி இலக்கியமும் அவ்வக்காலச் சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

வங்கத்துப் பரணியில் காட்டப்படும் நாட்டைச் சுரண்டும் நாசப் பேய், கள்ளக் கணக்கெழுதும் கயமைப்பேய், கோயில் சொத்தை வாயில் போடும் பேய், ஆகியவை, தற்காலச் சமுதாயச் சூழலை வெளிப்படுத்துகின்றன. பேய் பாடுதல் 17, 18. 200. துப்பாக்கியாகிய துலாக்கட்டை, உடைந்த போர் விமானமாகிய உத்தரம், இரும்புத் தொப்பியாகிய கூரை, கவச வண்டியாகிய மதில், (கோயில் பாடுதல் 5-10) சல்லடையாகப் பயன்படும் விமான இறக்கை, துடுப்பாகப் பயன்படும் பீரங்கிக் குழாய், பாராசூட்டாகிய துணி, தோசைக்கல்லாகப் பயன்படும் கப்பல் தகடு ஆகியவை (கூழ் அடுதல் 21,24,29-32) போர்க் கருவிகள் தற்காலத்தில் மாறிவிட்ட நிலையைக் காட்டுகின்றன.

இராக்கெட் எரிபொருளுக்குப் பாலை நிலத்தின் ஒரு மணல் போதும். பாலை வெப்பத்தால் வெப்பமானி ஆற்றாது உடைந்து போகும் (காடு பாடுதல் 11) என்னும் கருத்துக்கள் விஞ்ஞான முன்னேற்றத்தை விளக்குகின்றன.

மொழிப் பயன்

மொழிக்கு இன்றியமையாத இலக்கண விதிகள் சில வங்கத்துப் பரணியில் உவமையாகக் கூறப்படுகின்றன. அவை குறில் அளபெடுக்காது, வெண்பாவில் காய்ச்சீர் முன் நிரை வராது. பகுதியின்றி விகுதி பொருள் தராது. கட்டளைக்கலியில் ஒற்று எண்ணப்படாது. இரட்டைக்கிளவி ஒன்றை விட்டு ஒன்று எழுத்துப் புணர்ச்சியில் பொருள் தராது. உயிர்வரின் குற்றிய லுகரம் மெய்விட்டுப் போகும் என்பன அவை. (வ.ப.78-88) பல புதிய சொல் ஆக்கங்களும் அரிய சொல்லாட்சிகளும் பரணி யில் காணப்படுகின்றன.

அங்குனி-துதிக்கை, அடுக்களை-சமையற்கட்டு, ஆலதி குலதி—மிக்க நடுக்கம்; ஈச்சோப்பி-ஈஓட்டும் கருவி; உவட்டல்-பெருகல்-இலைப்பவரை தடவல்-சிறிதிடம் விடாமல் தேடுதல்; ஔவை-தாய், காளயம்-ஒப்பற்ற வீரர்கள் கூட்டம்; சல்லவட்டம் சுளகு-முறம், சின்னம்-தட்டு; தூசி-குதிரை; பதம்-அறுகம்புல்; பாரிபோகம்-சீதனப் பொருள்; புளகம்-சோறு; புனிதம்-இறைச்சி, விடவா-மரம். அ-பிரமா அட்டம், பக்கம் அழுக்கு-உடம்பு, உமுறுதல்-உருக்காட்டுதல்; கச்சை-யானைக் கழுத்திலிடும் மெத்தை; கான்-செவி; சிற்றல்- சம்மதித்தல்; குறங்கு-மலை யடிவாரம்; ஞாணி-யுத்தம்; தகனம்-அணு; தாழி-வைகுண்டம், துளப்பு-வயிறு; தொட்டி-அம்பாரி; மாயிரம்-புறமானமுகம். முகரம் - ஆரவாரம்; மூகை-படைக்கூட்டம். மேல்-வித்தை; வடவு-மெலிவு; வாள்-வார்த்தை; விதைத்தல்-எய்தல்; விலங்கு தல்-எறிதல்,

குணலை-வீராவேசத்தோடு கைகொட்டி ஆடும் கூத்து; (இ.வ.ப. 288) துணங்கை-இருகையும் கூப்பிப் படை ஒத்து ஆடும் கூத்து (இ.வ.ப, 692) தாரை-குதிரை நடை; (251) பவுரி-வட்ட மாகச்சுற்றும் குதிரை நடை; (251) பவுரி-வட்டமாகச் சுற்றும் குதிரை நடை; (252) வாளி-குதிரை வட்டமாய் ஓடுதல்; (இ.வ.ப.255) விலாழி-குதிரையின் வாய்நுரை (இ.வ.ப. 256)

செண்டு வெளி-குதிரை ஓட்டம் பயிலும் இடம்; கடகழி-ஊர்ப்புறம்; (349) பூதவண்டு-தேன் அன்றி வேறு உண்ணாத தால் தூய வண்டு (588) ஈறீச்சு-உறிஞ்சும்போது உண்டாகும் ஒலி; (675) சதகண்டம்-உருண்டை வடிவமான உலகம் (283) பதாகினி காலாட் படை.

தக்கயாகப் பரணியில் பல வடசொற்கள் பல்வேறு விதங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளன. வடமொழியை அப்படியே வழங்கல் (திரிசூலம், நிரூபதீபன்) திரித்து வழங்கல் (ஆவுதி, உகம்) தமிழ், வடமொழி இரண்டையும் இணைத்தல் (தச நூறு).

சில வடமொழிச் சொற்களுக்குப் புதிய தமிழ்ச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. பகற்சுடர்-சூரியன், பொன்னெயில் வட்டம்-சொர்க்கலோகம்; உலகக் கவிப்பு- பரமாகாசம் (நூலாய்வு) இவை அனைத்தும் மொழி ஆய்வுக்குப் பயன் தருவன.

தத்துவக் கருத்துக்கள்

மோகவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, பாசவதைப் பரணிகள், தத்துவக் கருத்துக்களையே பெரும்பாலும் பேசுகின்றன.

அவத்தை, தத்வமசி, துவிதம், துரியநிலை, சுழுத்தி நிலை, துரியாதீதம் இவற்றை விளக்குகின்றன. அஞ்ஞனின் இருப்பிடம் யான் எனது என்னும் மதில்கள், மாதா, பிதா, மதலை, மனைவி, என்னும் அகழிகள், அவா அழுக்காறு என்னும் காவற் காடு சூழ்ந்த கோட்டை என்று கூறப்படுகிறது. (பா.வ.ப. 272, 73, 74) காடு பாடியது பகுதியில், காடு, 'நெஞ்சத்து ஒத்தது உணராது உண்டு உடுத்து வாழும் உயிரோடும் பிணம் பயில் காடு' என்று சுட்டப்படுகிறது. (அ.வ.ப.காடு பாடியது 10)

பேய்கள் பிறவி நீக்கும் உபாயமறியாத பேய், உள்ளிருக்கும் இறைவனை உணராது அடிமை செய்யும் பேய், குரவனருள் விரும்பாது தம்மை மதித்துத் திரியும் பேய் என்று குறிக்கப்படுகின்றன (பா. வ. ப. 736, அ.வ.ப.-பேய் பாடியது)

வறியவுரை கேட்டுச் செவிடாயின, வம்பு பேசவாய் உண்டு. இறைவன் அடி போற்றி உரைக்க வெனில் ஊமை என்று மேலும் அவற்றின் இயல்பு விரிக்கப்படுகிறது. (அ.வ.ப.பேய் பாடியது)

அவை முறையிடும்பேது கூட மற்ற பரணிகளைப் போல் பசி பசி என்று பறக்கவில்லை. நால்வருக்கும் சடகோபருக்கும் அமுது அளித்து எங்களுக்கு அமுதளிக்காமல் மெலிய வைத்து விட்டாயே என்று தான் குரலெழுப்புகின்றன. (அ.வ.ப. பேய் முறைப்பாடு)

தற்குறியாகக் காயம் அழிவது போலவும், குருவை நாடுவது போலவும், கனவு காண்கின்றன.

அஞ்ஞனின் படை வீரர்களாக அதமன், அசமன், அசுபம், கருரன், கபடன் போன்ற இருநூற்றைம்பது பேர்கள் குறிக்கப் படுகின்றனர்.

போரில் கபாடிகன் குபாடிதனையும், அபாடிதன் வெகுப்பிர லாபனையும், சுபிரபுத்தின் அபிரபுத்தனையும் வெல்லுவதாகக் காட்டப்படுகின்றன. (மோ.வ.ப. 43.44).

இருவினையாகிய விறகு வைத்துக் கூழடுவதாகக் கூறப்படு கிறது.

இலக்கிய இன்பம் பெறுதல்

இந்திரன் வீரபத்திரரிடம் தோற்று ஓடும்போது மயில் வடிவம் எடுத்துச் சென்றால் தோகையில் உள்ள ஆயிரம் கண்கள் தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்று குயில் வடிவம் எடுத்துப் போனான். (த.யா.ப.44)

உலோபனுக்குத் தாய், தந்தை, சேய், தான், உடை, உண்டி எதுவும் இல்லை, (பா.வ.ப. 406, 407).

இரு விழியும் கூடினால் என் விளையுமோ என இடையே வைத்த தடையே மூக்கு (வ. ப. கடைதிறப்பு 1)

அங்க நாடியர் (அங்கம் நாடுபவர்), மகத நாடியர் (உளமெல்லாம் அகதம் நாடுபவர்),கொல்ல நாடியர் (பகையாவை யும் கொல்ல நாடுபவர்) நம் சோனக நாடியர் (நஞ்சோன் அகம் நாடியர்) நம் சாவக நாடியர் (நஞ்சா அகம் நாடியர்) (பா.வ.ப. 20, 21, 22)

உள்ளே உள்ள மும்மலம் கழுவாது உடல் கழுவுதல், மண் குடத்தில் உள்ளே மலம் வைத்து வெளியே துடைப்பதை ஒக்கும் (மோ.வ.ப. உவமை. 13)

பாலை நிலத்தில் மூங்கில் வெடித்து உதிரும் முத்தம் அம்மூங்கில் இரங்கிச் சொரியும் கண்ணீர், தரையில் விழுந்த முத்துக்கள் தரையின் வியர்ப்புள்ளிகள் அல்லது கொப்பளங்கள் போன்ற சொற் சிலம்பங்களும் (க.ப. 93) அணிகளும் படிப் போர்க்கு இன்பச் சுவை நல்குவன.

பிறபயன்கள்

அஞ்ஞவதை மோக வதை பாச வதைப் பரணிகளைத் தோய்ந்து படிப்பதால் ஞானம் பெறுதலாகிய பயனும், இலங் கைப் பரணி, இரணியவதைப் பரணி, சூரசங்காரப் பரணிகளைப் பக்தியோடு படிப்பதால் பிறவி நீக்கமாகிய பயனும் கிடைக்க லாம்.

சிவஞான சுவாமிகள் மடம் உள்ள இடங்களுக்கு அகச் சான்று கிடைக்கிறது. காஞ்சி, மயிலை, செங்கை, பொம்மை ஆகிய இடங்கள் சுட்டப்படுகின்றன. (பா.வ.ப. 737) இவ்வாறு பரணி இலக்கியம் பல பயன்களை அளிக்கின்றது.

தொகுப்புரை

தொல்காப்பியத்தில் சில துறைகளின் வளர்ச்சி பரணி இலக்கியம் ஆகிறது. இது வெற்றி அடிப்படையில் பெயர் பெற்றது. வெற்றி கூறுதலே முதல் நோக்கமாயினும் ஒவ்வொரு பரணிக்கும் சில சிறப்பு நோக்கங்களும் உண்டு.

தலைமை, உணர்வு, உறுப்புக்கள் ஆகியவை காலத்துக்குக் காலம் மாறுபடுகின்றன.

அவற்றுக்கேற்ப நோக்கமும் வேறுபடுகின்றது. பரணிகளால் பல வரலாற்றுச் செய்திகள், புராணச் செய்திகள் அறிவதுடன், அக்கால ஆறுகள், மலைகள், அணிகள், கலைகள், கருவிகளை அறிவதும், இலக்கியச்சுவை பெறுவதும், நாட்டுப் பற்று மொழிப் பற்று உணர்வுகளைப் பெறுவதும் பயனாக அமைகின்றன.

பரணி இலக்கிய அட்டவணை

எண்.	நூற்பெயர்	ஆசிரியர்	காலம்	பாடல்	பொருள்	வகை
1.	தமிழ்ப் பரணி (தமிழால் பாடிய பரணி என்றபொருளில் வந்திருக்க வேண்டும்)	——	கி.பி.1048		இராசாதிராசன் கிருஷ்ணை ஆற்றங்கரையில் உள்ள பூண்டூரில் மேலைச் சாளுக்கியரை யரை வென்றமை.	உண்மைப் போர் நன்றி உணர்வு
2.	கொப்பத்து பரணி*	——	கி.பி.1054	——	இரண்டாம்இராந்திரன்மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவ மல்லனுடன் கொப்பம் என்ற ஊரில் பொருதுபெற்ற வெற்றி.	,,
3.	கூடல சங்கமத்துப்பரணி*	——	கி.பி.1063	——	வீரராசேந்திரன் ஆகவமல்லனுடன் கூடல சங்கமம் என்னும் ஊரில் பொருது பெற்ற வெற்றி.	,,
4.	கலிங்கத்துப் பரணி*	ஒட்டக்கூத்தர் (வேறு ஆசிரியராகவும் இருக்கலாம்)	கி.பி. 1096	——	விக்கிரமச்சோழன் இளவரசராயிருந்தபோது தென் கலிங்கரோடு போரிட்டுப் பெற்ற வெற்றி.	,,

எண்.	நூற்பெயர்	ஆசிரியர்	காலம்	பாடல்	பொருள்	வகை
5.	கலிங்கத்துப்பரணி	சயங்கொண்டார்	கி.பி.1112	599	முதற் குலோத்துங்கன் வடகலிங்க வேந்தன் அனந்தபதிமனை வென்றமை.	,,
6.	தக்கயாகப்பரணி	ஒட்டக்கூத்தர்	கி.பி.1155	814	தக்கயாகத்தை வீரபத்திரர் அழித்தல்.	புராணம் பக்தி
7.	இரண்யவதை பரணி	——	1210	693	இரண்யனை நரசிம்மம் அழித்தல்	புராணம் பக்தி
8.	அஞ்சுவதைப் பரணி	தத்துவராயர்	1450	493	ஞானம் அஞ்ஞானத்தை வதைத்தல்	தத்துவம் ஞானம்
9.	மோகவதைப்பரணி	,,	,,	349	விவேகன் மோகனை வெல்லுதல்	,, ,,
10.	பாசவதைப் பரணி	வைத்தியநாத தேசிகராயிருக்கலாம்	1640	737	பாசத்தை ஞானம் வெல்லுதல்	,,
11.	திருச்செந்தூர்ப்பரணி அல்லது சூரன்வதை பரணி	சீனிப் புலவர்	18ஆம் நூற்றாண்டு	17 டி	சூரனை முருகன் வென்றமை	புராணம் பக்தி
12.	கஞ்சவதைப்பரணி	——	—	—	கம்சனை கண்ணன் வென்றமை	,,

எண்.	நூற்பெயர்	ஆசிரியர்	காலம்	பாடல்	பொருள்	வகை
13.	இலங்கைப் பரணி ஸ்ரீ	கனகராச ஐயர்	1943	2856	இராமன் இராவணனை வென்றமை	இதிகாசம் பக்தி
14.	சூரசங்கார பரணி ஸ்ரீ	,,	1944	1940	முருகன் சூரனை வென்றமை	புராணம் பக்தி
15.	சீனத்துப் பரணி	பாசுமணியன் மு. பி.	1965	156	இந்தியா சீனாவை வென்றமை	நாட்டுப் பற்று
16.	போர்ப்பரணி	பசுபதி மா. வே.	—	78	இந்தியா பாகிஸ்தானை வென்றமை	தமிழ்ப் பற்று
17.	தமிழ்க் காத்த போர்ப் பரணி	இராமச் சந்திரன் பா.	1969	241	இந்தி எதிர்ப்புப் போராட்டம்	தமிழ்ப் பற்று உண்மை நிகழ்ச்சி
18.	வங்கத்துப் பரணி	அரங்க சீனிவாசன்	1972	510	இந்தியா பாகிஸ்தானை வென்று வங்கத்துக்கு உதவியமை	உண்மை நிகழ்ச்சி நாட்டுப் பற்று

* இவை இப்போது கிடைத்தில, ¬ முழுப் பகுதி கிடைக்கவில்லை. ൭ சுவாமிநாதையர் குறிப்பில் மட்டுமே உள்ளது. ஸ்ரீ இவை கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் கையெழுத்துப்படியாக உள்ளன. ஆர். எண். 7825, 7826 பரணிஎன்னும்நூல் பரணி இலக்கியம் அல்ல என்கின்றனர் அறிஞர். தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலைசைக் சிதம்பரேசர்

குறிப்புகள்

1. தமிழிலக்கிய வகையும் வடிவும், சுப்பிரமணியன். ச.வே. ப: 378

2. சிந்தாமணி (பாடல் 1813)

3. பரணி இலக்கியம் இளவரசு, சோ. ம.பக். 23-24

4. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் 140 நூற்பா

5. திவாகரம்

6. பரணி இலக்கியம் ப. 26 தக்கயாகப் பரணி முன்னுரை (உ. வே. சா.)

7. களப்பரணிக் கூழ் பொங்கி (க. ப. 548)
 பண்டு மிகுமோ பரணிக்கூழ் (க. ப.555)
 மணலூரில் கீழ்நாளட்ட பரணிக்கூழ் (க. ப. 564)

8. வருகூழ்ப் பரணிக் களம் கண்டு
 வந்த பேயை முன்னூட்டி
 ஒரு கூழ்ப்பரணி நாமிருக்கும்
 ஊர்க்கண் பேய்க்கு வாரீரே (க. ப. 575)

9. காட்டிய வேழ அணி வாரிக்
 கலிங்கப் பரணி நம் காவலன் மேல்
 சூட்டிய தோன்றலைப் பாடீரே
 தொண்டையர் வேந்தனைப் பாடீரே (க.ப.535)

10. பரணி இலக்கியம் இளவரசு சோம. ப. 27

11. இலக்கண விளக்கம் 838

12. இலங்கைப் பரணி 2727
 வங்கத்துப் பரணி 26

13. படையியங்கு அரவம் புறம் 31
பரிபரந்தெடுத்தல் புறம் 16
அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம்—புறம் 93
பெருஞ்சோற்று நிலை பதிற்றுப் பத்து 30
வென்றோர் விளக்கம் —பதிற்றுப்பத்து 71
தோற்றோர் தேய்வு '' 80
கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்-புறம் 42
ஏரோர் களவழி புறம் 62
முனி தேர்க் குரவை புறம் 371
கொற்றவள்ளை புறம் 57
மாணார்ச் சுட்டிய மாவாள் மங்கலம் புறம் 332

14. சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை (இந்திரவிழ வூரெடுத்த காதை வரி 76—78)
மோடி முன் தலையை... மிறைப்பரே''
இவை ஒட்டக் கூத்தரின் கலிங்கத்துப்பரணித் தாழிசையாய் இருக்கலாம் என்பர் உ. வே. சா.
பேராசிரியர் உரை (தொல், செய். 149 உரை)
''உளையாழி... பரவுதுமே'' என்னும் தாழிசை.

15. வீரசிங்காதன புராணம் (வசனம் பக். 68-75)

16. தத்துவராயர் பிரபந்தத் திரட்டு—ஆசிரியர் வரலாறு

குருக்க விளக்கக் குறிப்பு

ப. பா — பன்னிரு பாட்டியல்
இ. வி. — இலக்கண விளக்கம்
க. ப. — கலிங்கத்துப்பரணி
த. யா.—ப. தக்கயாகப் பரணி
இ. வ. ப. — இரணியவதைப் பரணி
அ. வ. ப. — அஞ்ஞவதைப்பரணி
மோ. வ. ப. — மோகவதைப் பரணி
பா. வ. ப. — பாசவதைப் பரணி
வ. ப. — வங்கத்துப்பரணி
த. கா. போ. ப. — தமிழ்காத்த போர்ப் பரணி
சீ. ப. — சீனத்துப் பரணி.

பயன்பட்டவை

1. அரவிந்தன் மு. வை. பரணிக்கோர் செயங்கொண்டான். முத்து பதிப்பகம் வளவனூர் 1977

2. அருணாசலம் மு. தமிழ் இலக்கிய வரலாறு பதினோராம் நூற்றாண்டு. திருச்சிற்றம்பலம் 1971

3. அருணாசலம் மு. தமிழ் இலக்கிய வரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டு முதற்பகுதி. திருச்சிற்றம்பலம் 1973

4. அறவாணன், க. ப. கலிங்கத்துப்பரணி ஒரு மதிப்பீடு சென்னை 1976

5. இராமச்சந்திரன் பா. தமிழ்காத்த போர்ப் பரணி நெல்லை.1969

6. இளவரசு. சோம. பரணி இலக்கியம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 1978

7. சங்குப்புலவர் தி. (உ. ஆ.) கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவர் உலா, கழகம். 1971

8. சாமிநாத ஐயர் உ.வே. தக்கயாகப் பரணி, சென்னை 1960 மூன்றாம் பதிப்பு

9. சாமிநாத ஐயர் பாசவதைப் பரணி (குறிப்புரையுடன் சென்னை. 1933

10. சிவஞானம் ம. பொ. கலிங்கத்துப்பரணி திறனாய்வு பூங்கொடி பதிப்பகம்—சென்னை. 1975

11. சீனிவாசன் அரங்க—வங்கத்துப் பரணி, கழகம்—1972

12. சுப்பிரமணியன் ச. வே. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், தமிழ்ப் பதிப்பகம், சென்னை. 1984

13. சுப்புரெட்டியார். ந. பரணிப் பொழிவுகள், வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் 1972

14. சுப்புரெட்டியார் ந.கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி,செல்வி பதிப்பகம். காரைக்குடி 1957.

15. பசுபதி மா. வே. போர்ப்பரணி, சென்னை.

16. பரஞ்சோதி சுவாமிகள் (ப. ஆ) ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய அடங்கன் முறைப் பிரபந்தம், சிதம்பரம் 1926

17. பழனிவேல் பிள்ளை (உ.ஆ) கலிங்கத்துப்பரணி, கழகம் 1671 ஏழாம் பதிப்பு.

18. பாசுமணியன் மு. பி. சீனத்துப் பரணி, முத்து நிலையம், நெல்லை. 1965

19. வரதராஜு நாயுடு, நா. (ப. ஆ) இரணியன் வதைப்பரணி மூலமும்-குறிப்புரையும். சாந்திடிரஸ்ட் பொள்ளாச்சி 1974

20. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (மூன்றாவது மாநாடு) கழகப் பதிப்பு 1967 இரண்டாம் பதிப்பு

கையெழுத்துப் பிரதிகள்

ஆர். எண். 7825 இலங்கைப் பரணி
7826 சூரசங்காரப் பரணி } கனகராச ஐயர். கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.

பிள்ளைத் தமிழ் இலக்கியம்

-தி. லலிதா

முன்னுரை

தமிழில் தொல்காப்பிய காலத்திற்கும் முன்பிருந்தே இலக்கிய வகைகள் பல கிளைத்தெழுந்துள்ளன. அவற்றுள் இன்றுவரை நீடித்து, குறிப்பிடத்தக்க, இடத்தைப் பெறுவன பிள்ளைக் கவிகளாகும் 'பிள்ளைத் தமிழ்' எனச் சிறப்புடன் போற்றப்பெறும் இவ்விலக்கிய வகை இடைக்காலத்தில் மிக்க வளர்ச்சி பெற்று, இன்னும் வளர்ந்து வருகின்றது. இத்தகு சிறப்புமிகு பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் நோக்கமும் பயனும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிள்ளை

'பிள்ளை' எனும் சொல்லிலுள்ள 'பிள்' என்னும் பகுதி 'பின்மையழகு' என பொருள் தருகின்றது 'பிள்ளை' என்ற சொல் குழந்தை, மகன், இளைஞன். மகள், இளமை, சிறுமை, கோட்டில் வாழ் விலங்கின் இளமை. நாயொழிந்த விலங்கின் இளமை, பறப்பன தவழ்வனவற்றினிளமை, நெல்லும் புல்லும் ஒழிந்த ஓரறிவுயிரின் இளமைப் பெயர் என பலபொருள் தருகின்றது.[1] எனவே இவற்றை நோக்க உலகில் காணும் உயிருள்ள பொருட்களில் இளமையும், அழகும் ஒருங்கே கொண்ட பொருளே 'பிள்ளை' என அழைக்கப்படுதலை அறியலாம்.

உலகில் தோன்றி வளரும் பொருட்களின் இளமை அழகு அனைவர் உள்ளத்தையும் கவர்வதை நாம் அன்றாட வாழ்வில் காணலாம். பசுமை மாறா இளம்பயிர்களும், கொல்லும் இயல்புடைய கொடிய விலங்குகளும், பாடித்திரியும் இளம் பறவைகளும் கூட இளம் பருவத்தில் அனைவரின் உள்ளத்தையும் ஈர்ப்பதை அறிவோம்.

இந்நிலையில்தான் கடவுளைக் குழந்தையாகவும், குழந்தையைக் கடவுளாகவும் போற்றி வந்திருக்கின்றனர். முருகனையும், கண்ணனையும் குழந்தையாக வழிபடுவதும் இதை அடியொற்றியதே ஆகும். கள்ளமில்லாப் பருவம் என்பதும் அக்குழந்தைப் பருவமே. எனவேதான் பொய்யாமொழிப் புலவரும் மக்கட் செல்வமே செல்வத்துள் செல்வமாகக் கருது கிறார். இது எல்லா இன மக்களுக்கும் ஏற்றதே. மனிதனா யினும், கடவுளாயினும் அவர்தம் குழந்தைப் பருவம் நன்கு போற்றப்படுவதை அனைத்துச் சமயங்களிலும் காணலாம்,

பிள்ளைத்தமிழ்-பொருள் - பெயர்க் காரணம்

'பிள்ளைத் தமிழ்' என்பது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்பட்டு, பிள்ளையின் பல பருவங்களைப் பற்றிக் கூறும் பிரபந்த வகை.[2] என்றும் தாங்கள் போற்றவிரும்புபவரைக் குழந்தையாக வைத்து காப்பு முதலிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடுவது[3] என்றும் கடவுளர்களையோ மக்களுள் மாண்புற்றார்களையோ பிள்ளைமைப்பருவத்தினராக்கி அவ்விளம் பருவ நிலைகளைச் சுவைபடப் புகழ்ந்து பாடப் பெறுவது[4] என்றும் இதற்கு பலர் விளக்கம் தருகின்றனர். இதனை, பிள்ளைக்கவி என வெண்பாப் பாட்டியலும் பிள்ளப்பாட்டு என பன்னிரு பாட்டிய லும் அழைக்கின்றது. முதன் முதலில் 'பிள்ளைத் தமிழ்' என்ற சொல்லாட்சி ஓட்டக்கூத்தரின் குலோத்துங்கச் சோழனின் பிள்ளைத் தமிழில்தான் அமைகிறது.[5] பிள்ளைமை யின்பம், அம்புலிப்பருவ தியானமாலை என்ற பெயர்களிலும் இவ்விலக்கியம் எழுதப்பட்டுள்ளது.

தோற்றம் - வளர்ச்சி

மக்கள் வாழ்நாள் முழுமையிலும் பிளைள்ளைப் பருவம் என்பது எத்துணை இனிமையானதோ, அத்துணை இனிமை யானதே. ஏனைத் தமிழ்ப்பாட்டுக்களிலும் பிள்ளைத் தமிழ்ப் பாட்டு என்பது.

கடவுளரையோ, மக்களிர் சிறந்தோரையோ குழவிப்பருவத் தினராக்கிப் பாடும் மரபு தொல்காப்பியர் காலத்திலேயே உண்டு என்பதை,

'குழவிமருங்கிலும் கிழவதாகும்'[6]

எனும் தொல்காப்பியர் கூற்றினாலும், பிற்காலத்தில் தெய்வங்களையும் குழவிப் பருவத்தினராக்கி, பிள்ளைக் கவிபாடிய வளர்ச்சி நிலையை 'மக்கள் குழவியாகிய ஒரு மருங்கே கொள்க. தெய்வக்குழவியின்மையின்' என்ற நச்சர் உரையினாலும்[7] அறியலாம்.

தொல்காப்பியம் புறத்திணைப் பாடாண்பாட்டு உணர்த்தும் இச்செய்தியோடு புறப்பொருள் வெண்பா மாலையிலும்,

'இளமைந்தர் நலம் வேட்ட
வளமங்கையர் வகையுறுத்தன்று[8]

என்ற பகுதியில் குழந்தையும் தலைவனாகப் பாடப்படும் நிலையைக் காட்டுகின்றது.

இதனையொட்டியே இறைவனைக் குழந்தையாக்கிப் பாடும் பக்தி மரபை கி. பி. 8-ம் நூற்றாண்டளவில் பெரியாழ்வாரிடமே முதலில் காணலாம். கண்ணனைக் குழந்தையாக்கிப் பாடும் மரபில் முதன்மையான அவர் கண்ணனின் சிறுபருவச் செயல்களையும், பிள்ளைத்தன்மையையும், பெருமைகளையும் கொண்டே பாடியுள்ளார். இதனையடுத்து நீண்ட இடைவெளிக்குப்பின் கி.பி. 12-ம் நூற்றாண்டில்தான் ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்கச் சோழனை பிள்ளையாக்கி குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ் படைத்தார். இரண்டாம் குலோத்துங்கச் சோழனுக்கு ஆசிரியராகவும் அவைக்களப் புலவராகவும் விளங்கிய அவர் தன்னை ஆதரித்த அம்மன்னன் மீது பாடிய பிள்ளைக்கவியே முதல் பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும். சோழ மன்னனின் வீரச்செயல்களும் அவனின் பண்பு நலன்களும் இந்நூலில் பாராட்டப்பெறுகின்றன. இதனை அடியொற்றியே இப்பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தமிழ் இலக்கிய உலகில் அன்றிலிருந்து இன்றுவரை நல்ல வளர்ச்சி பெற்று வருகின்றது. இதுவரை சுமார் 140 பிள்ளைத்தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளதாகத் தெரிகிறது.[9] அச்சேராச் சுவடி நிலையிலும் பிள்ளைத் தமிழ் நூல்கள் சில உள்ளமையும் தெரிகிறது. இரண்டுமன்றி பெயரளவில் மட்டும் நூல்கள் இருப்பதாகவும் தெரிகிறது. குமரகுருபரரின் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் அருணாசல தேசிகர் பதிப்பு (ப. 122, 1836, 0. 50) நூலே பழைய அச்சு நூலாகத் தெரிகிறது.

சிறப்புக் கூறுகள்

உலகில் சிறப்பு மிகு இளமையும், இனிமையும், எவருக்கும் வேறுபாடின்றி இன்பம் பயக்கும் தன்மை கொண்டதால் ஆண், பெண் எவராயினும் அவர்தம் வயதைக் குறைத்து இளம் பிள்ளையாக்கிக் காட்டும்பொழுது மனமகிழ்ச்சி கொள்கின்றனர். இது எவருக்கும், எவ்விடத்திற்கும், எக்காலத்திற்கும் பொருந்தும் தன்மையானது. இவற்றின் அடிப்படையினாலும் இன்று வரை அனைத்து இலக்கியங்களிலும் பிள்ளைத்தமிழ் இலக்கியமே பெரும்புலவர்களை ஈர்க்கும் தன்மை யனவாய் இருக்கக் கூடும்.

தான் போற்ற வந்த தலைவனையோ தலைவியையோ குழந்தையாக்கிக் கொண்டு, அக்குழந்தையின் மூன்றாந்திங்கள் தொடங்கி இருபத்தோராம் திங்கள் வரை இரண்டு திங்களுக்கு ஒன்றாகப் பருவத்தைப் பகுத்துக் கொள்வதும், அவ்வப் பருவத்தில் குழந்தையின் இயல்பான செயல், தன்மை, நிலை போன்றவைகளை அமைத்துப் பாடுவதும் பிள்ளைக்கவி மரபாக உள்ளது.[10]

முதல் 7 பருவங்கள் ஆண், பெண் பிள்ளைத் தமிழுக்கு பொதுவாகவும், பின்வரும் 3 பருவங்களில் ஆண்பாற் காயின் சிற்றில் சிறுபறை, சிறுதேர் எனவும் பெண்பாற்காயின் நீராடல், அம்மானை, ஊசல் எனவும் பருவங்கள் அமைத்துப் பாடப்பெறுகின்றன. பொது நிலையில் இப்பத்துப் பருவங்களே அமையப் பாடப் பெறுதல் மரபு. இருப்பினும் இவற்றில் ஒரு சில தம்முள் முறைமாறி அமைதலும் உண்டு. பதினோரு பருவம் கொண்டதாக ஆண்டாள் பிள்ளைத் தமிழும், பன்னிரண்டு பருவம் கொண்டதாக தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழும் அமைந்திருக்கின்றன. புதுமை வேட்கும் பெரியார்மேல் பாடிய பிள்ளைத் தமிழில் ஒரு புதுமையாக சிறுவர்களின் குழந்தைத் தன்மை நீங்கிப் பள்ளிக்குச் சென்று படிக்கும் தன்மை பெறும்வரை பிள்ளைமை நீங்காததால் மேற்கொண்டு கூர்ந்துணர்பருவம், வினாவுறு பருவம், கதை கேள் பருவம் என மூன்றினைச்சேர்த்து, பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி' 13 பருவங்களாகப் பாடும் முறையைக் காணலாம்,

புதியன புகுதலும் வழுவல் கால வகையினானே' என்ற விதியால் இவை எழுதப்பட்டிருக்கின்றன.[11]

'பிள்ளைப் பாட்டே தெள்ளிதில் கிளப்பின்
மூன்றுமுதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்கள் அறைகுவர் நிலையே'[12]

என்பது பன்னிரு பாட்டியல், இருப்பினும் பிறப்பு முதல் 16 ஆண்டுவரை ஆணுக்கும், பூப்பு நிகழ்வு வரைப் பெண்ணுக்கும் பருவங்கள் பாடப்படுதல் உண்டு என்பது இந்திரகாளிய நெறி. முடிசூட்டுவரையே அரசன் பாடப் படலாம் என்பது நவநீதப் பாட்டியல். பிரபந்த மரபியல் முதலியன இம்மாதங்களில் ஒற்றைப்படை எண்களுள்ளனவே கொள்ளப்படும் என நவில் கின்றன. பிரபந்த தீபம், ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய மாத, ஆண்டு வயது நிலையை வரையறுப்பது புதுமை[13] இவ்வாறு பாட்டியல் நூல்களில் பல இவ்விலக்கிய வகையின் இலக்கணத்தை விரிவாகக் கூறுகின்றனர்.

பருவங்கள் இவ்வாறமைய தலைமக்களுக்குத் தக பாடல் எண்ணிக்கையில் வேறுபாடு அமையும் என பிரபந்த மரபியல் கூறுகின்றது. பருவத்திற்கு 10 பாடல்களாக அமைந்தவையே மிகுதி. இருப்பினும் சிவத்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழ் பருவத்திற்கு 7 பாடல்களும், கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் பருவத்திற்கு 5 பாடல்களும், பழநி பிள்ளைத் தமிழ் பருவத்திற்கு 3 பாடல்களும், திரு ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ் நூல்கள் பருவத்திற்கு 1 பாடலும் அமைந்திருக்கக் காணலாம்.

பாடு பொருள்

தான் வழிபடும் இறைவனைப் பாடுதல் (திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்), இறைவியைப் பாடுதல் (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்), தனது ஞானகுருவைப் பாடுதல் (சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத் தமிழ்), வள்ளலைப் பாடுதல் (திருவேங்கடநாதம் பிள்ளைத் தமிழ்), மக்களுள் மாண்புற் றோரைப் பாடுதல் (திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், காந்தி பிள்ளைத் தமிழ்) என பிள்ளைத் தமிழின் பாடுபொருட்கள் அமையக் காணலாம்.

திருமலைக் காப்பாக அமைத்து பாடும் மரபு பல நூல்களில் காணலாம். காப்புக் கடவுளாதலால் காப்புப் பருவத்து அவரையே முதற்கடவுளாகக் கொள்ள வேண்டுமென்ற வரையறை இருந்தும், பல நூலாசிரியர்கள் தங்கள் மனம்

விரும்பியபடி பாட்டுடைத் தலைவர்களின் தொடர்புக்கும், சூழ் நிலைக்கும் ஏற்ப முறைமை மாற்றியும் பாடியுள்ளனர்.

பிறவாயாக்கைப் பெருமான் ஆகிய சிவ பெருமானுக்கு பிறப்பிறப்பு இன்மையால் பிள்ளைத்தமிழ் பாடுகின்ற மரபு இருந்ததாகத் தெரியவில்லை

சமய அடிப்படையில் இடைக்காலத்தில் அதிகப்படியான பிள்ளைத் தமிழ் நூல்கள் தோன்றினாலும் முதலில் மானிடத் தலைவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் நூல் பாடப்பெற்றது குறிப்பிடத் தக்கது. பக்தி இயக்க காலத்தில் சமயத்தை பரப்புவதற்கு இவ்விலக் கியம் பேருதவி அளித்தமை இடைக்காலத்தில் எழுந்த பல பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் காட்டுகினறன.

உண்மையாக பிள்ளையின் பருவச்செயல்களையே வைத்துப்பாடியுள்ளார் நாரா. நாச்சியப்பன் அவர்கள்.

ஒரு தலம் அல்லது இறைவனைச் சார்ந்து எழும் பிரபந்தத் தொகைகளும், ஆயிரங்களும் பிள்ளைத் தமிழையும் தம் கூறாகக் கொண்டுள்ளமை, தண்டபாணி சுவாமிகளின் பழனித் திருவாயிரத்தில் காணலாம்.[14]

பேரிலக்கிய உறுப்பாகவும் இப்பிள்ளைத் தமிழ் அமைவதை அரங்க-சீனிவாசனின் 'மனித தெய்வம் காந்தி காதை' காட்டு கிறது. பருவத்திற்கொரு பாடலாக காந்தியின் பிள்ளைப் பருவம் இதில் பாடப்பெற்றுள்ளது.

சாதி, சமய இனமொழி வேறுபாடின்றி பிள்ளைப்பருவம் அனைவருக்கும் ஒன்றே ஆகையால் பிள்ளைத்தமிழ் நூல்கள் இசுலாம், கிறித்துவம் ஆகிய சமயங்களிலும் தோன்றியுள்ளன.

நோக்கம்

பிள்ளைத் தமிழின் நோக்கம் பற்றி ஆராயுங்கால் கள்ள மில்லா குழவிக்கு தலைமை கொடுத்தல் ஏன்? தலைமைக்குரிய வரை குழவி ஆக்கல் ஏன்? பிள்ளைப் பாசமா? தாய்மை உணர்வா? பேதையான பிள்ளை பதில் மொழி பேசாது என்பதினாலா? பிள்ளையின் பிறப்பு முதல் பாடினால் பாடு பொருளின் பெருமையை பலபடக்கூற பகுதியுண்டு என்ப தினாலா? பாடுபொருளான பாட்டுடைத்தலைவனை பிள்ளை யாக்கிப் புகழ்தல் மட்டுமே நோக்கமா? தலைவனுக்கேற்ப

நோக்கம் வேறுபடுமா? படைப்போனுக்கு ஏற்ப நோக்கம் வேறுபடுமா? தனிமனித நோக்கமும், பிள்ளைத் தமிழிலக்கிய நோக்கமும் வேறுவேறா? எனப்பலவாறான வினாக்கள் எழுந்து நம்மை சிந்திக்க வைக்கின்றன.

பல்வேறு வகையான பிள்ளைத்தமிழ் இலக்கியங்களைப் பார்க்கும் காலத்து இப்படைப்பின் நோக்கங்களும்: புலனாவதைக்காணலாம்.

தாய்-சேய் உறவின் சிறப்பை-அன்பின் அடிப்படையை எடுத்துக்காட்டுதல்:

காலத்திற்கேற்ப, இலக்கியத்திற்கேற்ப பாடுபொருட்கள் வேறுபட்டு அசைந்தாலும், பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் நோக்கமும் பயனும் வேறுபடாமல் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை அடியொற்றியே அமைகின்றன.

பாட்டுடைத் தலைவனையோ, தலைவியையோ குழந்தையாக பாவித்து அவர்களுக்கு ஏற்றத் தருவது என்ற நிலையில் கவிபாடும் தான் தாயாகவும் பெற்றவளாகவும் எண்ணி, தலைவன் அல்லது தலைவி குழந்தையாக இருக்கும் நிலையில் இருவருக்கிடையே உள்ள நெருக்கத்தைக் காட்டுவதாகவும், பிள்ளைப்பருவ நில்லகளை சிறப்பித்துக் காட்டுவதாகவும், அமைக்கப்பெறுகின்றன பிள்ளைக்கவிகள். இந்நிலைமல் தாய் தன் ஆருயிர்க்குழவியைப் பார்க்குந்தோறும் தழுவி மகிழ்ந்து தன்னிழப்பு நிலை அடைகின்றாள். தெய்வத்தையே குழந்தையாக்கினும், குழந்தைக்குரிய இயல்புகளைக் காட்டுமிடத்து தாய் — சேய் உறவின் சிறப்பையும், அன்பின் அடிப்படையையும் அனைத்துபிள்ளைத் தமிழ் நூல்களிலும் காணமுடிகிறது.

இங்கு ஒரு தாய் தனது குழந்தையின் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் கூற்றாக,

> **வாரா திருந்தால் இனி நான் உன்**
> **வடிவேல் விழிக்கு மை எழுதேன்**
> **மதிவாள் நுதற்குத் திலகமிடேன்**
> **மணியால் இழைத்த பணிபுனையேன்**
> **பேராதரத்தி னொடு பழக்கம்**
> **பேசேன் சிறிதும் முகம்பாரேன்**

பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன்
    பிரியமுடன் ஒக்கலையில் வைத்துத்
தேரார் வீதி வளங்காட்கேன்
    செய்ய கனிவாய் முத்தமிடேன்
திகழு மணித்தொட்டிலில் ஏற்றித்
    திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
    தவழும் குழந்தாய்! வருகவே![15]

என்று ஆசிரியர் படைத்துக் காட்டுகிறார். இதில் அழகிய சொக்கநாதப் புலவர் ஒரு தாய் — சேயின் உறவின் சிறப்பை அன்பினால் பிணைத்துக் காட்டியிருப்பது படிக்குந்தொறும் இன்பம் பயப்பது. இந்நிலையை பல்வேறு பிள்ளைத் தமிழ் நூல்களிலும் காணமுடிகிறது.

2. பாட்டுடைத் தலைவனின் புகழ்பாடுதல்

தாய் — சேய் அன்பினை அடிப்படையாகக் கொண்டு பாட்டுடைத் தலைவனை புகழ்தலே இவ்விலக்கியத்தின் பெரு நோக்காக அமைந்திருக்கக் காணலாம்.

சிற்றறிவும் சிறுதொழிலும் மும்மலக்கட்டுமுடைய ஆன்மாவாகிய நானெங்கே! பெருமாட்டியின் பெருமை எங்கே? திருவருள் உள் நின்றுணர்த்தப் பெருமாட்டி மலையரையன் மகளாகத் தோன்றிய தோடன்றி வலைச் சேரியிலும் அவதரிக்க வில்லையா? ஆதலால் எளியேனும் அவளைப் போற்றிப் புகழலாம். பிள்ளைக் கவிபுனையலாம் என்ற எண்ணம் தோன்றியதாகவும், அம்மையின் இளம்பருவ விளையாட்டை நோக்கி, திருவுருவினிடத்தில் ஆசைகனிய தன்னைத் தாதியாகப் பாவித்துக்கொண்டு அம்மையைப் புகழ்கின்றேன்.[16] என்றும் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் தோற்றத்திற்குரிய நோக்கத்தை சிவஞான முனிவர் குறிப்பிடுகிறார். எனவே தாய்மை நிலையில் நின்று பாட்டுடைத் தலைவர்களைப் புகழ்தலே படைப்போரின் தனிமனித நோக்கமாகவும் தெரிகிறது.

சமயச்சார்புடைய பிள்ளைத்தமிழ் நூல்களில் பெரும் பான்மையும் பாட்டுடைத் தலைவனைப் புகழ்தலே பெரு நோக்கமாகக் காணலாம்.

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் பாடிய மார்க்க சகாய தேவர் அம்புலியை முருகனோடு விளையாட அழைக்கும் பொழுது

நீல ஊணினர்கள் ஆவைநீ இவனும்
நீல ஊணினர் கண் ஆனவன்
நேமியங்குவடு சூழ்வைநீ இவனும்
நேமியங் குவடு சூழ்பவன்
ஏல நீஅரிய மான்உளாய் இவனும்
என்றும் ஓர் அரிய மான் உளான்
இருளும் மாசினை ஒழிப்பை நீ இவனும்
இருளும் மாசினைஒ ழிப்பவன்
ஓல மாமலயில் எழுவைநீ இவனும்
ஒப்பிலா மலையில் எழுபவன்
உனக்கு இவ்வாறு நிகர் ஆதலால் இவன்
உனக்கு லாவிஅழையா நின்றான்
ஆலும் மாமயிலன் ஆடுதற்கு அமுத
அம்புலி! வருக வருகவே [17]

என்று புகந்து பாடுகிறார். இதில் முருகன் சிவபெருமானின் கண்ணான பிள்ளை என்னும், சக்கரவாள மலையைச் சுற்றி வருபவன் என்றும், வள்ளியாகிய மானை உடையவன், அறியாமையாகிய இருட்குற்றத்தை விலக்குபவன், மலையில் தோன்றுபவன் என்றும் புகழ்ந்து அம்புலியின் செயல்களோடும் ஒப்பிட்டுப் புகழ்ந்து பாடுகிறார்.

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலும் குமரகுருபரர் அம்மையை அபிடேகவல்லி(1) அங்கயற்கண்ணமுது(23), மலையத்துவசன் வளர்த்த பசுங்கிளி(31) தமிழொடு பிறந்த பழமதுரையில் வளர்ந்த கொடி(33), செழியர் கோமகள் (51) என பலவாறு புகழ்ந்து பாடுகிறார்.

அனைத்துப் பிள்ளைத்தமிழ் நூல்களிலும் பாட்டுடைத் தலைவனைப் புகழ்தலே அடிப்படை நோக்கமாக அமைவதைக்காண முடிகின்றது.

3. பாட்டுடைத் தலைவனின் அருமை பெருமைகளை உணர்த்துதல்

தொண்ணூற்றாறு பிரபந்தம் எனும் வரையரைப் பட்டிய லிலிருந்து முன்னூறுக்கும் மேற்பட்டவனாகப் பிரபந்தங்கள் பல்கிய போதும் பெரும்பான்மையன தலைவன் புகழையோ (மானிட ஆண்/பெண்), இறைப் புகழையோ நோக்கமாகக் கொண்டு அமைந்தவற்றுள் 18 பிள்ளைத்தமிழ் இலக்கியம் முதன்மையான இடத்தை வகிக்கின்றதாகக் கொள்ளலாம்.

பாட்டைத் தலைவனையோ, தலைவியையோ புகழந்துபாடும் பாடல்கள் அவர்களின் அருமை, பெருமைகளை உணர்த்துவன வாகவே படைத்தல் இயல்பு.

தீதுபதியாத கைலாயத் தளிக்குமுன்
திகழ்மணிக் கோபுரத்துட்
திருவாய்தல் வைகி அவ்வழியாற் றொழாதேகு
திசை முகனை அருகழைத்து அங்கு
ஏதுபுரிவாய் எளவினாவப் படைப்பேன் யான்
என்ன மறை வருங்கொல்
என்ன வரும் என இருக்கு ஓதுகஎன
ஓதுவான் இயையமுற் குடிலை யோத
ஓதுகுடிலைப் பொருன் உரைத்துப்பின் உரை என
ஒருங்கவன் மயங்கநோக்கி
ஒள்ளிதழ் அதுக்குபு நடுத்தலை புடைப்ப
மிகக் கூறிப்புறச் சிவந்த
தாதுமலி கைத்தளிரகத்தும் சிவப்ப ஒரு
சப்பாணி கொட்டியருளே!

எனவரும் திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழில் பிரம னுக்கு எதிராக முருகன் உலகம் படைத்தையும், பிரணவத் திற்கு பொருள்தெரியாத நிலையில் முருகன் பிரம்மன் தலையில் குட்டி பொருள் உணர்த்திய வரலாற்றையும் கூறி முருகனின் பெருமைகளைக் காட்டுகிறார் ஆசிரியர்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் பற்றிப் பாடும் பிள்ளைத் தமிழ் நூல்களில் அவர்களாற்றிய அருஞ்செயல் களும் கூறப்படுகின்றன.

சிவனடியார்களின் பசியை நீக்கிய சிவஞான தேசிகரை 'தீப்பசியை மாற்றிப் பெருஞ்சீர் பெறுதற்கு வல்லாய்'[19] என சிவப்பிரகாசர் போற்றுகிறார்.

4 தலைவனின் ஊர்ச்சிறப்பை உணர்த்துதல்

தலைவனைக் குழந்தையாக்கிப் பாடும் காலத்து தலைவனின் சிறப்பையும், பெருமைகளையும், புகழையும், அவன் வாழும் ஊரையும், நாட்டையும் புகழ்ந்து பேசுதல் அனைவருக்கும் இயல்பு. இந்நிலையில் இவ்விலக்கியங்கள் தலைவனின் ஊர்ச்சிறப்பையும் உணர்த்துகின்றன. சேக்கிழாரை முன்னிறுத்தி பிள்ளைக்கவி இயற்றிய மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்

சோறு மணக்கும் மடங்க ளெல்லாம்
தூய்மை மணக்கும் சிந்தை யெல்லாம்
சுவண மணக்கும் ஆடை யெல்லாம்
தொங்கல் மணக்கும் தோள்க ளெல்லாம்
சேறு மணக்கும் கழனி யெல்லாம்
செல்வம் மணக்கும் மாட மெல்லாம்
தென்றல் மணக்கும் மேடை யெல்லாம்
தெய்வம் மணக்கும் செய்யு ளெல்லாம்
நீறு மணக்கும் நெற்றி யெல்லாம்
நெய்யே மணக்கும் கறிக ளெல்லாம்
நெருப்பு மணக்கும் குண்ட மெல்லாம்
நேயம் மணக்கும் வீதி யெல்லாம்
சாறு மணக்கும் குன்றத் தூர்த்[20]

என்று சேக்கிழார் வாழ்ந்த குன்றத்தூரையும் காட்டி, வேளாளர் வாழும் வளஞ்சான்ற பதிகள் இன்னின்ன வகையில் சிறந்துள்ளன, அதைப்பற்றி நீ கவலையின்றி உறங்குவாயாக என்று பாடியுள்ளமையால் சேக்கிழார் வாழ்ந்த குன்றத்தூரைப் புகழ்ந்து சிறப்பிக்கும் ஆசிரியரின் நோக்கத்தை அறிய வாய்ப்பேற்படுகின்றது.

5. புராணமரபுச் செய்திகளை விளக்குதல்

புராணக் கருத்துக்களை புலவர்கள் இலக்கியங்களை படைத்துக்காட்டுவதால் இறைவனுக்கும் மானிடருக்கும் தொடர் புண்டாக்கி, இறைவன் உயிர்களுக்காகச் செய்த உதவிகளை நினைவூட்டி, நம்மையும் அவ்வழியுலியக்கி அருளுக்குக் கொள் கலமாக்கத் துணை புரிகின்றனர். தான் புகழவந்த தலைவனைப் பாடுங் காலத்து அவர்களின் அற்புதச் செயல்களையும் போற்றிப் பாடுதல் அனைத்து பிள்ளைத்தமிழ் நூல்களிலும் காணப் படுகிறது. இந்நிலையில் தலைவனின் பல அரிய வரலாற்றுச் செய்திகளையும், புராண மரபுச் செய்திகளையும் விளக்குதல் ஆசிரியரின் நோக்கமாகவும் இடம் பெறுகின்றன. இவை இறைவன் அல்லது இறைவியை மையமாகக் கொண்டு பாடப் பட்ட பக்தி இலக்கியமாகத் திகழும் பல பிள்ளைத் தமிழ் நூல்களில் மிகுதியாகக் காணமுடிகிறது.

கற்புக்கரசியாகிய அநசூயையிடம் சென்ற அயன். அரி, அரன் என்னும் இம்முத்தேவர்களையும் அவள் தன் கற் பொழுக்கத்தால் குழந்தைகளாக்கியச் செய்திகளை செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழும், தடாதை பிராட்டியார் திக்கு விசயம் செய்கையில் தேவர்படைகளுடன் அமராடிய செய்தி களை குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும் காட்டுகின்றன.

பிரமன்பிரணவப் பொருளறியாது சிறைப்பட்டது, கண்ணன் ஆயர்பாடியில் வெண்ணெய் திருடி கட்டுண்டது, தக்கன்வேள்வி, திருமால் கஜேந்திரனை உய்யக் கொண்டது இவற்றை முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழும், சம்பந்தர் பூம்பாவை என்னும் பெண்ணின் எலும்பைப் பெண்ணாக்கி உயிர் கொடுத்த வரலாற் றையும், சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்த வரலாற்றையும் சேக்கிழார் பிள்ளைத் தமிழிலும் காணலாம்.

திருமுருகாற்றுப்படை பிறந்த வரலாற்றை திருச் செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் தெரிவிக்கின்றது.

திருக்கச்சிக் குமரகோட்டத்து முருகப்பெருமான் பிள்ளைத் தமிழின் சிறுதேர்ப் பருவத்தில் கந்த புராணத்தில் யுத்த காண்டத்தில் வரும் செய்திகளனைத்தும் கூறப்பெறுகின்றன. அதற்கு இடைக்காலத்தில் தோன்றிய பல பிள்ளைத்தமிழ் நூல்கள் சான்றாகின்றன.

சமயநோக்கம்

சமயத்தைப் பரப்பும் நோக்கத்தில் பிள்ளைத்தமிழ் பெரும் பங்கு வகிக்கின்றது, அதற்கு இடைக்காலத்தில் தோன்றிய பல பிள்ளைத்தமிழ் நூல்கள் சான்றாகின்றன. இவ்வகையில், இந்து, கிறித்துவம், இசுலாமியம் ஆகிய முப்பெரும் சமயக் கருத்துக்களை விளக்கும் நோக்குடன் பல பிள்ளைத்தமிழ்கள் தோன்றிஉள்ளன.

இந்து சமயம்

இந்து சமய பிள்ளைத்தமிழின் பல பாடல்கள் துதிப் பாடலாகவும் அமைந்திருக்கின்றன. அவ்வாறான பாடல்கள் கற்பவர் மனத்தைக் கனிய வைத்து கடவுள் நெறிக்கு ஈடு படுத்தி, அருள் நெறியை அடைவிப்பன. ஆதலால் இதன் வாயிலாக சித்தாந்தச் செந்நெறியையும், சமயச் சடங்கு களையும் விளக்குவதே ஆசிரியர் குறிக்கோள்[21] என்ற கூற்றும் நோக்கத் தக்கது.

நாரதர் மலை மாரியம்மன் பிள்ளைத் தமிழின் முன்னுரை யில் க. மு. சுந்தர கணேசன் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள நாரதர் மலையில் அமர்ந்திருக்கும் மாரியம்மனுக்கு பிள்ளைத் தமிழ் என்ற பாமாலைச் சூட்டி எங்களை பக்திக்கடலில் திளைக்க வைத்துள்ளார். என்று குறிப்பிடுவதால் சமயத்தை வளர்க்கும் நோக்குடனும் இந்துசமய பிள்ளைத் தமிழ் நூல்கள் எழுதப்பட்டமை அறியலாம்.

ஐந்து வயதளவும் வாய் பேசாதிருந்த குமரகுருபரர் அம்பிகையின் அருளால் மீனாட்சி அம்மை மீது பிள்ளைத் தமிழ் பாடியமை இந்து சமயத்தின் தனித்தன்மையையும் காட்டுவ தாக அமைந்திருக்கின்றது.

கிறித்துவ பிள்ளைத்தமிழ்

சரித்திர காலத்தில் குழந்தைக்குப் பெருமை அளித்து, குழந்தையைக் கடவுளுக்கு ஒப்பாகக் காட்டி, அக்குழந்தையை வழிபட்டது கிறித்துவ மதம். இன்றும் மேரி அன்னையுடன் யேசுக் குழந்தையைக் கோவிலில் காண்கிறோம். எனவே கிறித்துவ சமயத்திலும் கடவுளைக் குழந்தையாகக் காணும் மரபு இருந்துள்ளமை தெரிய வருகின்றது.

நீங்கள் மனம் திரும்பிக் குழந்தைகளைப் போல ஆகா விட்டால் விண்ணரசில் நுழைய முடியாது'[22] என்று இம்மதம் கூறுவதால் குழந்தைப் பருவம் குற்றமற்ற பருவம் என்பதையே வெளிப்படுத்துகிறது. வேதநாயரைக் குழந்தையாகக் கொண்டு பவுல் இராமகிருட்டிணனன் ஒரு பருவத்திற்கு 1 பாடல் வீதம் 'வேதநாயகர் பிள்ளைத்தமிழ்' பாடியுள்ளார். ஏசுவின் தாயான மரியன்னையைக் குழந்தையாகக் கொண்டு தாமஸ்ய 'வேளை மரியன்னை பிள்ளைத் தமிழ்' பாடியுள்ளார். இவை தவிர அம்புலிப்பருவ தியானமாலை, பிள்ளைக்கவி என்ற பெயரிலும் இச்சமய பிள்ளைத் தமிழ் நூல்கள் எழுதப்பட்டுள் ளமை தெரிகிறது.

ஏசுநாதரின் வாழ்வையும் கொள்கைகளையும் சுட்டும் முறையில் ஏசுநாதன் பிள்ளைத் தமிழ் படைக்கப்பட்டுள்ளது. இதில் காப்பு தெய்வங்களாக பரமபிதா, பரிசுத்தாவி, மரியாள், சூசை முனிவன், சுவக்கீன் மாமுனிவன், கன்னிமரி தாய், சகரியா முனி, எலிசபத்தம்மா. காவல் தூதர், வானோர் இவர்களை அமைத்துப் பாடுகிறார் ஆசிரியர் குற்றாலம்.

கன்னத் தறைந்த கயவனையும்
கருத்தால் எண்ணி நேசித்து
பின்னும் கன்னம் காட்டியவன்
பேதைத் தன்மை மாற்றிடவே
தன்னைச் சான்றாய்க் காட்டிய சீர்
தலைவா![23]

என்று ஏசுநாதரையும் அவர் கருத்தினையும் நூலில் வெளிப் படுத்துகிறார் ஆசிரியர். தமிழ்ப் பற்றுமிக்க வீரமாமுனிவர் தமிழுக்கு உழைத்தமையையும் அதன் மூலம் அவரால் கிறித்துவச் சமயம் தமிழுக்கு செய்த தொண்டினையும் விளக்கும் நோக்கில் பண்ணை சண்முகம் அவர்களால் வீரமா முனிவர் பிள்ளைத்தமிழ் பாடப்பட்டுள்ளது. இதுவே இந் நூலின் பெருநோக்காக அமைகிறது. இதன்வழி தமிழின் பெருமையுடன் வீரமாமுனிவர் பெருமையும் மிகத் தெளிவாக அறியலாம். இந்நூலில் இயற்கை அன்னை, ஞாயிறு, திங்கள், வளன், மரியன்னை, **இயேசு, தொல்காப்பியர், திருவள்ளுவர், புத்தன்,** நபிகள் என்று காப்புக்கடவுளாக இவர்களை ஆசிரியர் வைத்துப் பாடியிருப்பதால் ஆசிரியரின் சமயப் பொதுமையை உணர்த்தும் நோக்கத்தினையும் அறியலாம்.

இசுலாமிய சமயம்

தெய்வத்தைப் பிள்ளையாக பாவித்துப் பாடுவது இஸ்லா மியக் கொள்கைக்கு முரண்பட்டது.[24] ஆனால் சான்றோர்களை யும் ஞானிகளையும் பிள்ளையாகப் பாவித்துப் பாடப்பட்ட இஸ் லாமிய பிள்ளைத்தமிழ் நூல்கள் முப்பதுக்கும் மேற்பட்டுள்ளன. பிள்ளைத் தமிழ்நூல்களில் பெரும்பாலும் காப்புப் பருவத்தில் பல தெய்வங்கள் புகழப்பட்டு, பாட்டுடைத்தலைவர் மீது அருள் புரியுமாறு வேண்டுவது மரபு. செய்யது அனபியா சாகிபு இயற்றிய ''நபிநாயகம் பிள்ளைத் தமிழில் இவ்விலக்கணம் பின்பற்றப்படவில்லை. அல்லாஹ் ''ஒருவனே'' என இஸ்லா மியக் கொள்கையே இவ்வேறுபாட்டிற்குக் காரணம். ஆகவே- இந்நூல் அல்லாஹ் ஒருவனையே புகழ்ந்து அவனது அருளையே நாடுகின்றது.[25] என்கிறார்.

இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களில் மாலைக்கு அடுத்த நிலையைப் பெற்றிருப்பது பிள்ளைத்தமிழ் இலக்கியங்களே.

தத்துவக்கருத்துக்களைக் கூறுதல்

சமயமும் தத்துவமும் இணைந்த ஒன்று. அறங்களுக்கு அடிப்படையாக அமையும் தத்துவம் இறை இலக்கியங்களில் இடம்பெறுதல் உண்டு.

சிவப்பிரகாசர் இயற்றிய சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் பல சைவ சித்தாந்தக் கருத்துகள் பொதிந் துள்ளன. இவர் வீர சைவ சமய ஞானாசிரியராதலின் அவர் உணர்த்திய வீர சைவ சடுத்தல், சித்தாந்த நூற்பொருளை விளக்கியும் தம் நூலைப் படைக்கின்றார்.

அந்தந்த சமயத்தார் இயற்றும் வழிபாடுகளெல்லாம் இறுதியில் சிவபெருமானையே வந்து சேருகின்றன என்பதை சிவஞானசித்தியார்,

யாதொரு தெய்வங்கண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்

என்று கூறும். இதனையே முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் குமரகுருபரரும்,

''பரிசு வீட்டின் பயன்துய்க்கும்
உள்ளக் கருத்தால் பிறிதொன்றை
உண்மைப் பொருளென் துள்ளவுந்தம்
உணர்விற் றெங்வம் கடைக்கூட்ட
உறுதி கிடைத்த படிபோலும்[26]

என்றும் இறைவன் அருவுருவானவன் என்ற நிலையையும் குறிப்பிடுகிறார்.

உயிர்கள் ஐம்புலப் பற்றுக்களையும், அவற்றின் வழியாக வரும் பிறப்பினையும் கடக்க, இறைவன் துணையாக இருக்கிறான் என்பதை

'பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர்
பற்றாக நிற்கும் முதல்வா![27] என பகழிக்கூத்தர் தத்துவக் கருத்தைக் கூறுகிறார்.

இறைவன் அண்டங்கள் எல்லாம் அணுவாக, அணுக்களெல்லாம் அண்டங்களாகப் பெரிதாகவும் சிறிதாகவும் விளங்குகின்றான் என்பதையும், இறைவன் உயிர்களுக்கு உடலாகவும், வேறாகவும், ஒன்றாக, ஒன்றாகவும் நின்று அருள் சுரக்கின்றான் என்பதையும், இறைவன் இப்படியன், இவ் வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக்காட்டொணாத் தன்மை வாய்ந்தவன் என்பதையும் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் காட்டுகிறது.

குறிப்பிட்ட இயக்கத்தின் கோட்பாடுகளை விளக்கும் நோக்கம்:-

குறிப்பிட்ட சமயத்தையோ குறிப்பிட்ட தலைவனையோ மையமாகக் கொண்டு பாடப்பெறும் பிள்ளைத்தமிழ் நூல்களில் அவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வலியுறுத்திப் பாடுதல் இயல்பு. எனவே அவர்களின் படைப்பு நோக்கமாகவும் அவை இடம் பெறுகின்றன.

சீர் திருத்தச் சமுதாயத்தின் தலைமைப் பங்கேற்ற பெரியாரைப் பற்றி பிள்ளைத்தமிழ் வருங்கால் அவரின் சுய மரியாதை இயக்கத்தின் கொள்கைகள் பல அமைத்துப் பாடுதல் நூலுக்கும், கவிஞனுக்கும் தேவையாகின்றன.

பெண்ணடிமை தீர்தல், கடவுள் இன்மை, யாவரும் ஓர் இனம், யாவரும் ஓர் குலம், சமதர்மம், சமத்துவம், சுயமரியாதை, சுதந்திரம், என்ற பெரியாரின் புரட்சிக் கோட்பாடுகளை இந்நூல் சுட்டுகின்றது. மேலும் சுயமரியாதை இயக்கத்தின் தனித்தன்மைகளையும், அது செல்லும் வழிகளையும், பகுத்தறிவு வாதிகளின் கொள்கைகளையும், சுயமரியாதைக் கொள்கைகளையும், பெரியாரின் புகழ் பொன்மொழிகளையும் அடிப்படையாகக் கொண்டு அவரை பிள்ளையாக்கிப் போற்றிப் பாடுவதும் திராவிடக் கோட்பாடுகளை வலியுறுத்துவதுமே இந்நூலில் ஆசிரியரின் தலையாய நோக்கமாகத் தெரிகிறது.

ஆசிரியரின் புலமை திறத்தை வெளிக்காட்டுதல்

ஆசிரியன் புலமைத்திறத்தை வெளிக்காட்ட பிள்ளைத் தமிழ் இலக்கியம் ஒரு சிறந்த கருவியாக அமையப்பெற்றது. தான் கூறவரும் தலைமைச் செய்திக்கு அழகூட்டுவதற்குப் பல பாவகைகள், பல்வகை சந்தம், சொல்லாட்சிகள், உவமை நலம், அணிநலம், போன்றவை கவிஞனுக்கு தன் புலமைத் திறத்தை உலகிற்கு உணர்த்த பெரும் துணையாக அமைகின்றன. நூலுக்கு அழகூட்ட இவை உதவிபுரிவதை பல பிள்ளைத் தமிழ் நூல்களில் காணமுடிகிறது.

திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் செங்கீரைப் பருவத்தில் தாதியர் குழந்தையை முகமசைத்து ஆடுக என்று வேண்டிக் கொள்ளும் பாடலை படிப்பவர்களையும், படிக்கக் கேட்பவர்களையும் ஆடச் செய்கிறார். படைத்துள்ளார்.

பாத சிதங்கை புலம்பு சிலம்பு
பதிந்து பொதிந்தாடப்
பால்வளையிரு சுடராகை குயிற்றிய
பால்சுடர் மணியாடக்

காதள அங்கயல் மோது நறுங்குமிழ்
கதுவிய முத்தாடக்
ககனத்திடை பொலிமின்னலின் மின்னிய
கனவிரி சிகையாடத்

தாதவிழ் நறுமென் குமுதத் தமுதொடு
தழைகுறு நகையாடத்
தழைகுறு மரகத நிகழல் விரிமேனித
தண்ணெனு மொளியாட
ஆதவ னொளியென் என்னுட் பொலிபவள்
ஆடுக செங்கீரை
அத்திவனத்தமர் அத்தர் இடத்தவள்
ஆடுக செங்கீரை[28]

என்பதே அது. இது போல இடவமைதிக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்க ஓசை இனிமையை பல பிள்ளைத்தமிழ் நூல்களில் பல இடங்களில் காணமுடிகிறது.

பல்வகை புதிய சந்தங்களையும், சொல்லாட்சிகளையும் பெரியார் பிள்ளைத்தமிழில் காணலாம். ஒரே சொற்றொடர் வந்து வேறு பொருளை அளிக்கும் சொல்லணிகளாகிய மடக்கணிகளை அமைத்துப் பாடியுள்ளதைத் திருநெல்வேலி காந்திமதியம்மை பிள்ளைத் தமிழிலும் காணலாம்.

தமிழின் சிறப்பைக் காட்டும் நோக்கம்

தமிழ் மொழியின் சிறப்பைத் தலைமையாகக் கொண்டு பிள்ளைத்தமிழைப் பாடும் குமரகுருபரர் 'தமிழ்' என்ற சொல்லை பன்முறையும் கையாளுகிறார். மதுரித்து உவட்டெழுமுத்தமிழ் (4), தெள்ளித் தெளிக்கும் தமிழ்க்கடல் (9), பண் உலாம் வடி தமிழ் (14) தெளிதமிழ் (21), தென்னந் தமிழ் (23), முதுசொற்புலவர் தெளிந்த பசுந்தமிழ் (31) நிறைந்தமுத்த துறைத்தீந்தமிழ் (61), மும்மைத் தமிழ் (68) என பல இடங்களிலும் சுட்டி தமிழின் சிறப்பையும் காட்டுகிறார்.

அருமைத் தமிழ் வளர்த்த அயல்நாட்டு ஆன்றோரும் தலை சிறந்து விளங்கிய வீரமாமுனிவரைப் பற்றிய பிள்ளைத் தமிழில்,

தரணியெலாம் தேடுவான்போல் **தனிமையானா** படைத் திட்டான் தித்திக்கும் நுன்மொழியாம் தெலுங்கோடு வட மொழியும் தேர்ந்து கற்றும்

செந்தெமிழைக்கற்றவொரு சுவைதன்னைஅவைகளிடைத்
தெரிந்தா னல்லன்

என வீரமாமுனிவரின் தமிழ்ப்பற்றைக் காட்டுவதால் தமிழின் சிறப்பை உணர்த்தும் நோக்கு தெரிகிறது. சமய காழ்ப்பின்றி

இந்து சமய புராண இதிகாசச் செய்திகளையும் இந்நூலில் சுட்டுகிறார் ஆசிரியர். தேவர்கள் கடலைக் கடைந்தபோது உமைபாகன் நஞ்சுண்ட செய்தி இந்நூலில் காட்டுவதால் ஆசிரியர் தமிழின் சிறப்பை காட்டும் நோக்கம் தெரிகிறது.

கனிதமிழின் உயர்வுக்காக நாளெல்லாம் சமயமொடு கலந்துரைத்தான் [29]

என்றவரி அதனைப் புலப்படுத்தும்.

ஆசிரியர் பெயரில் அவர்தம் நூலின் சிறப்பை எடுத்துக் கூறும் நோக்கம் :-

உலகில், வாழும் நெறியினை வகுத்தளித்த வள்ளுவரை குழந்தையாக்கி அவர்தம் நூலின் சிறப்பினை எடுத்துக்கூறும் நோக்கில் பாடப்பட்டது திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ். பல பிள்ளைத்தமிழ் படித்த அறிவோடு, திருக்குறளில் ஆழ்ந்த பயிற்சியும், திருவள்ளுவரிடம் ஆழ்ந்த பக்தியுமே இந்நூல் உருப் பெற்ற நோக்கமாகக் குறிப்பிடுகிறார் திருவாசகமணி.

இதுபோன்றே இராமகாதையின் அடிப்படைக் கூறு களையும், கொள்கைகளையும் எடுத்துக் காட்டும் நோக்கில் கம்பன் பிள்ளைத்தமிழும், சேக்கிழார் நூலின் சிறப்பைக் காட்டும் நோக்கில் கம்பன் பிள்ளைத்தமிழும் அமைக்கப் பட்டுள்ளன.

பிள்ளைத் தமிழில் பிள்ளைகளின் அருமைகூறல் :

கடவுளை நாம் அறியோம். கடவுள் தன்மை அறிவிய லுக்குப் புறம்பானது. அக்கடவுளைக் குழந்தையோடு இணைப்பது நாம் அறியாததைக் குழந்தை உரிய காலத்தில் அறியும். நாம் செய்ய இயலாததைக் குழந்தை உரிய காலத் தில் செய்யும். மக்கள் குலம் தலைமுறைக்குத் தலைமுறை உயரும் என்ற உறுதியான நம்பிக்கை குழந்தையைப் போற்றும் போது எதிர்காலத்தைப் போற்றுவதாகவும் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் அமைகின்றன.[30]

குழந்தையின் உண்மைச் செயல்களை வைத்துப்பாடும் தனிமனித நோக்கத்தைக் கொண்டு நாரா-நாச்சியப்பன் எழுதிய பிள்ளைத்தமிழ் பாடப்பட்டுள்ளது.

எண்ணி எண்ணித் தவமிருந்தே
இன்பக் கனவு பலகண்டே
வண்ணச் சிலையாய்ப் பெற்றடுத்த
வைர மணியே தாலேலோ
உண்ணும் சோறும் உனக்காக
உயிரும் வாழ்வும் உனக்காக
கண்ணின் மணியே தாலேலோ

என்று பிள்ளைகளின் அருமையைப் பாடுகிறார் அவர்.

குழவி பல ஈன்றிடினும் அன்னைக்கு மேலுமொரு
குழவிவரின் அதையேற்றுக்
குலவிநிதம் பரிவோடு காத்துவரல் இயற்கையெனக்
குவலயத்தோர் கண்ட உண்மை.
அழகு மிகு தமிழன்னை குழவி பல ஈன்றிட்டாள்
ஆயினும் நல்லறிவுற்ற
அருங்குழவி வரினேற்றே அதையும் நல்லன்போடும்
அருளோடும் காத்துவந்தாள்[31] (சப். 3)

என வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழில் பிள்ளையின் அருமையை கூறுகிறார் ஆசிரியர்.

இந்நூலின் முற்கால-இடைக்கால-தற்கால நோக்கங்கள் :

கண்ணனை குழவியாக்கி சிறப்பும் பெருமையும் தோன்ற பாடி மகிழ்ந்தார் பெரியாழ்வார், இது தோற்ற கால பிள்ளைத்தமிழின் நோக்காகக் காணலாம்.

அதனை அடுத்து அரசனையும், மக்களில் மாண்புற்றோர் களையும் பிள்ளையாக்கி பெருமை கூறுதல் நோக்காக அமையவும், பக்தி இயக்க காலமாதலால் சமயத்தை பரப்பும் நோக்கமும் இடைக்காலத்தில் இவ்விலக்கியத்தில் கையாளப் பட்டமை தெரிகிறது.

காந்தி மகான் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட காந்தி பிள்ளைத் தமிழில் அத்தலைவரின் மிகுபெருமை பேசப்படுகிறது. சமயத் தொடர்பான பிள்ளைத் தமிழ்களைக் காட்டிலும் காந்தி பிள்ளைத்தமிழ் கம்பன் பிள்ளைத்தமிழ், பெரியார்

பிள்ளைத்தமிழ், மா. பொ. சி. பிள்ளைத்தமிழ் போன்ற தலைவர் பெயர்களில் எழுந்த இந்த பிள்ளைத் தமிழ்களில் எளிய சொற்களை அமைத்துப் பாடியிருப்பது பிற்கால தமிழ் இலக்கிய வழக்கினை ஒட்டி அமைகிறது. 12-ம் நூற்றாண்டு முதல் 18-ம் நூற்றாண்டுவரை எழுந்த நூல்களில் மிகவும் கடின சொற்களும், அரும்பத உரைகளும் இருப்பதைக் கண்ட பிற்காலப் புலவர்கள் தமது நூல்களில் எளிய நடையை பின் பற்றலாயினர். தமிழ் மொழியில் எளியநடை, இனிய சந்தம், கருத்துக்களை அனைவரும் தெளிவாக உணர்த்தும் பாரதியின் நோக்கோடு காந்தி பிள்ளைத்தமிழை ஆசிரியர் இந்நூலைப் புனைந்திருப்பது மொழியில் புரட்சி நோக்கம் எனலாம்.

காப்பிய அமைப்புள்ளும் பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தை இணைத்தலை காந்தி மகான் கதையில் காணலாம். இது இன்றைய புதிய உத்தி நோக்கமாகவும் பயனாகவும் கொள்ளலாம்.

புதியன புகுத்தும் தனிமனித நோக்கம்

பாடும் புலவனின் புலமைக்கு ஏற்ப பிள்ளைத்தமிழ் இலக்கிய பாடல்களை அமைத்துக் காட்டுதலை பெரியார் பிள்ளைத் தமிழ் நமக்குக் காட்டுகிறது.

'பிள்ளைக்கவி தெய்வங்காக்க' எனப்பாடும் முறை நீக்கிக் காப்புப் பருவத்தில் புதிய முறையில் 'காப்பு மாலை' பாடியது போல, பெரியார் பிள்ளைத்தமிழ் இரண்டாம் பகுதியில் 'வகுப் பொடு தொல் விருத்தம் முற்றுவித்தல் நூலின் முறை! என்ற படி, வகுப்பு என்னும் சந்த விருத்தம் (வண்ணம்) ஆசிரிய விருத்தம் என்ற பாவகையிலும் பாடியிருப்பதோடு பிள்ளைத் தமிழில் இதுவரை பாடப்பெறாத அகவல், திருப்புகழ்ச் சந்தம், கட்டளைக்கலிப்பா, பஃறொடை வெண்பா, தாழிசைக் கொச்சகக் கலிப்பா முதலிய பாடல் வகைகளையும் கொண்டு இப்பிள்ளைத்தமிழ் பாடப்பெற்றிருப்பது. புதுமை நெறியாகும்.

கடைசி 3 பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத் தமிழில். முறையே சிறுபறை, சிற்றில், சிறுதேர்ப் பருவங்களாகப் பாடுவது பாட்டியல் முறை. இப்பாட்டியல் இலக்கண நூல், பகுத்தறிவோடு பொருந்தாத நூல். ஆதலின் சிறுவர் மன இயல்புக்கு ஏற்ப, இந்நூலாசிரியர் கடைசி 3 பருவங்களையும் முறைமாற்றிச் சிற்றில், சிறுபறை, சிறு தேர்ப் பருவங்களாக அமைத்துக் கொண்டு பாடியுள்ளதும் ஒரு புதுமையாகும்.[32]

எனவே புதியது படைத்ததும் தற்கால ஆசிரியரின் நோக்கம் காணலாம்.

வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நோக்கம் :

இறைவனின் அருள்பெற்று வாழ்ந்த சம்பந்தர், அப்பர் மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகியவர்களைப் பற்றிய பிள்ளைத் தமிழ்கள் அவர்களின் அற்புத வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றினை பின்பற்றியே தற்கால நிலையிலும் காந்தி, அண்ணா, மா. பொ. சி. போன்ற வர்களின் வாழ்வியலைச் சுட்டுவதாகவும் பிள்ளைத் தமிழ்கள் படைக்கக்காணலாம்.

பயன் :

நோக்கமும் பயனும் தொடர்புடையன. நோக்கமே பயனாகலாம். பயனே நோக்கமாகவும் அமையலாம். பாடலா சிரியனுக்கு பிள்ளைத்தமிழை பக்தி இலக்கியமாக்கியமை பற்றித் தன்னிறைவு கிடைப்பது பயனாகலாம். மானிடத் தலைவனைப் பாடும்போது அவனளிக்கும் பரிசு, சிறப்பு, பாராட்டு, மகிழ்வு, இருவரிடையே உள்ள நெருக்கம் பயனீறைவளிக்கலாம். போட்டியாகவோ, புலமை வெளிப்படுத்தவோ கருத்து மறுப்புகளோ பாடப்பட்டதாயின் அந்நிறைவே பயனாம்.[33] இவையே பிள்ளைத்தமிழ் இலக்கிய வகைக்கும் பொருந்தும்.

எனினும் இவ்விலக்கியம் இம்மைப்பயன், மறுமைப்பயன், படைப்போன் பயன், படிப்போன் பயன், தற்காலப் பயன் என்ற முறையிலும் எல்லா இலக்கியத்திற்கும் பொதுவாக நோக்கக் கூடிய சமய, சமுதாய, வரலாற்று, இலக்கிய, தத்துவப்பயன் களையும் பொதுவாகக் கொண்டிருக்கக் காணலாம்,

இம்மைப் பயன் :

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள், அன்புச் சுவை செறிந்த கருத்தாழமும், கற்பனை ஊற்றும், இலக்கண நுட்பமும், சித்தாந்தத் தெளிவும், இறையுணர்ச்சியும் ஒருங்கமைந்தவை. திருவருள் பெறும் இம்மைப் பயனை நல்குபவை. ஐந்து வயதளவும் வாய் பேசாதிருந்த குமரகுருபரர் பிறகு சீர் பேசும் வாயால் பிள்ளைக்கவி பாடியதால், அதைக்கேட்ட அம்பிகையே

குழந்தை வடிவில் தோன்றியதாகக் காட்டுவதால் இவ்விலக்கியத்தின் பயனை உணரலாம்.

திருநெல்வேலி காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் 'தனிப் பொன் கமலத் தடம்தோய்ந்து, அம்மை மஞ்சட் காப்புப் பருகில் பழி, துயரம், ரோகம் முதலிய எல்லாம் ஒழியும்[34] என்று கூறுவதால் இந்நூலால் கிடைக்கக் கூடிய இம்மைப் பயன் தெரிகிறது.

படைப்போன் பயன்

வைணவராகிய பகழிக் கூத்தர் தனது தீராத வயிற்று நோயை திருச்செந்தூர் முருகன் மீது பிள்ளைத் தமிழ் பாடி தீர்த்துக்கொண்டார் என்பது நூலை படைப்போருக்குக் கிட்டும் பயனையும் தெரிவிக்கிறது. இந்நூலாசிரியர் தமக்கு ஏற்பட்ட வயிற்றுவலியை முருகன் தீர்த்தருளியதைக் குறிப்பாக சிலவிடங்களில் காட்டிச் செல்கிறார்.

'அடியவர் கொடுவினை அதன்பட நடமிடும்
அழகிய சரணம் அளித்த வரத்தனை[35]

என்பதும்,

எனைவழி யடிமை படைத்திடு நட்பனை'

என்பதும்,

'ஆவித்துணையே வழியடிமை அடியேம்'[36]

என்பதும்,

கரப்பன் அழிக்கத் தொடங்கில் எங்கள்
கவலை எவரோ டினியிதைப் பேர்ம்[37]

என்பதும்,

ஆராமை கூறும் அடி யவர்பழ வினைக் குறும்பு
அறவே உருட்டி[38]

என்பதும் ஆசிரியர் தம்மைக் குறித்தே பாடியிருப்பதால் நூலின் படைப்போர் அடையும் பயனை தெளிவாக அறிய முடிகிறது. இத்துடன் சமயத்தை பரப்பிய பயனும் சமயத்திற்கு ஆற்றிய தொண்டும் பயனாக படைப்போனுக்கு அமைகின்றன.

படிப்போர் பயன்

ஆண்டாள் பிள்ளைத் தமிழில் இந்நூற்பயனாக இறுதியில் இடம் பெறும் பாடல்,

> மல்லிநாட் டினுள்வல்லி புத்தூர் மடந்தையை
> வழுத்துபிள் ளைக்கவியையே
> படிப்பார் அதன்பொருள் வடிப்பார் இவ்வுலகில்
> பாலித்த செல்வம் எல்லாம்
> பாரித்த படிஎய்தி எய்துவார் நித்தரொடு
> பழகும் ஒரு பேரின்பமே[39]

என்று இந்நூலைப் படிப்பவர்கள் செல்வம் அனைத்தும் பெற்று வாழ்வர் என்று கூறுகின்றது.

> எம்பிரான் இனிய பிள்ளைத்
> திருநாமம் எழுதுவார் கற்பார் படிப்பார்
> செகம்பொது அறப்புரந்து
> தேவாதி தேவரும் பரவ சாயுச்சியச்
> சிவபதத் தெய்துவாரே'[40]

என்று திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் நூலை எழுதுவார், கற்பார், படிப்பார் அடையும் பயன்களாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

தற்காலப் பயன்

'நம் வள்ளுவர் தம் கற்பனையில் கண்ட மனிதப் பிறவியே காந்தியடிகளாக உருத்தாங்கி வந்தது. வாழ்ந்தது. வாழ்கிறது. அடிகளின் வாழ்வே திருக்குறள் எனக் கூறின் அது மிகையாது. காந்தியடிகளின் வாழ்வு மக்களால் மறக்கப்படாத மறக்கக் கூடாத, புனித வாழ்வு. மலர்கின்ற மலர்கின்ற மலர்களெல்லாம் இறைவனின் மதிமுடியில் ஏறி அமர்வதில்லை. இறைவனின் சிரத்தை அழகு படுத்திய மணமலர் காந்தியடிகள். நாம் நாள்தோறும் காணுகின்ற எளிய மலரல்ல. பல ஆண்டுகளுக்கு ஒருமுறையே மலர்கின்ற குறிஞ்சி மலர். அத்தகைய புனித மலரை என்றும் மறவாது, தற்கால, எதிர்கால இளஞ் சிறுவர்களும் தங்கள் மனங்களாகிய மலர்களில் வைத்துப்

போற்றித் தொழ இந்நூல் பயன்படவேண்டும் என்பது என் அவா[41] என்று காந்தி பிள்ளைத்தமிழின் ஆசிரியர், தி.இளமுருகு சுட்டுவதால் அந்நூலுக்குக் கிடைக்கக் கூடிய தற்காலப் பயன் விளங்குகிறது.

பிரபந்த நிலையில் மட்டுமின்றி புதுக் கவிதையிலும், திரைப் படத்துறையிலும் பிள்ளைத்தமிழ் பரவி வருகிறது. இக்காலத் தும் நிலைத்து நின்று புகழ்பரப்பக் கூடிய இலக்கிய வகையில் குறிப்பிட்ட முதலிடத்தைப் பெறுவன பிள்ளைத் தமிழ் இலக் கியங்களே. பிள்ளைத்தமிழ்ப் பாடுகிறேன்—ஒரு பிள்ளைக்காகப் பாடுகிறேன்' என்றும் திரைப்படத் துறையிலும் பிள்ளைத் தமிழின் தற்காலப் பயனென்பதுடன் பிள்ளைத் தமிழிலக் கியத்தின் தாக்கத்தால் விளைந்த பயனெனவும் கூறலாம்.

வாழ்த்துதல் பயன்:

அன்பு நிறை தாயுள்ளத்தால் இறைவனைக் கட்டியாள நினைத்தவர்கள் அவனைக் குழந்தையாக்கிப் பாடியுள்ளனர். இறைவனையும், பெரியோரையும் பிள்ளைகளாக்கிப் பாடு வதால் அவர்களுக்கு யாதொரு பெருமையோ சிறப்போ இல்லை. 'நாம் வாழப் பிறரை வாழ்த்தி வாழ வைக்க வேண்டும்' என்ற உயரிய கோட்பாட்டின்படி அவர்களைப் பிள்ளைகளாக்கி, உளம் குளிரக் கண்டு, தாய்மை அன்பு பொங்க நாம் பாடுவதால் அன்புள்ளத்தார் பெறும் பயனை நாமும் பெறுவோம் என்பதும் இந்நூலின் பயனாகக் கொள்ளலாம்.

வரலாற்றை அறிதல் பயன்

தமிழிலக்கியங்களிலே வரலாற்றுக்குத் துணை புரியும் நூல்கள் சிலவே. அந்நிலையில் குலோத்துங்கச் சோழன் பிள்ளைத் தமிழ் இராசாதிராசன், இராசராசன், இரண்டாம் இராசேந்திரன் போன்றோர்கள் செய்த பெரும் போர்களையும் அவர்களோடு குலோத்துங்கச்சோழனுக்கமைந்த உறவு முறை களையும் தெளிவாகக் காட்டுவதால்[42] குலோத்துங்கச் சோழனின் வரலாற்றை அறிய துணை செய்தலும் இந்நூலின் பயனாம்.

எக்காலத்தும் பயன்

பிள்ளைப் பருவம் களங்கமற்ற நல்லெண்ணத்தையும் அவ்வெண்ணத்தின் வழியே களங்கமற்ற தூய அன்பையும் விளைப்பதாய்த் திகழ்வதால் அவை தம்மைப்பெற விரும்புவோர் பிள்ளைத் தமிழ்ப் பாட்டுக்களில் உள்ளம் இடையறாது பழகுதலுக்கும் எக்காலத்தும் இந்நூல்கள் உதவுதல்பயனாம்.[43]

வாழும் மக்கள் தம் உள்ளத்தைப் பயன்படுத்தவும், இன்புறுத்தவும் புலவர் பெருமக்கள் இப்பிள்ளைத் தமிழ் இலக்கியத்தினால் தரும் பயனாகவும் கொள்ளலாம்.

குழவிப்பருவம் மாசற்ற நல்லெண்ணங்களையும், அவ்வெண்ணங்களின் வாயிலாகக் களங்கமற்ற தூய அன்பையும் பெற்றுத் திகழ்தலால் அவ்வெண்ணம், அன்பு ஆகியன பெற விரும்புபவரும் வெளியிட விரும்புபவரும் இடையறா இன்பத்தில் திளைக்க விரும்புபவரும் பிள்ளைத்தமிழ்ப் பாட்டுக்களில் மனம் ஒன்றிப் பழகினால் எக்காலத்தும் கிட்டும் என்பதும் இவ்விலக்கியத்தின் பயனாம்.[44]

தாய்சேய் அன்புநிலை என்பது என்றும் நெருக்கமான உறவு கொண்டது. மாற்றக் கூடியதும். மாறுபடக்கூடியது மல்ல. குழந்தைப் பருவ நிலையின் அடிப்படையில் கருத்துகளை கூறுவது . சாதி, மத, நாடு, இன வேறுபாடு அற்ற நிலையில் இயற்கையாக இருக்கக் கூடியது. நாயகன், நாயகி பாவத்தைக் காட்டிலும் தன்னலமற்ற நிலையில் தாயன்பு சிறந்தது என்பதை இவ்விலக்கியம் காட்டுவதும் பயனாம்.

ஒவ்வொரு இலக்கியத்தையும் அக்காலக் கட்டத்தில் எழக் கூடிய கொள்கைகளை இயைபுபடுத்திப் பாடுதல் பயனாம்.

இத்துடன் தமிழில்—பிரபந்த மரபில் அழகிய இனிய பாடல்கள் சந்தத்துடன் அமைய சிறந்ததொரு இலக்கிய வகையும் வடிவும் கிடைக்கப்பெற்றது பயனாம்.

இறைவன் அல்லது தலைவனின் அருமை, பெருமைகளோடு, அவனின் புகழையும், தனித்தன்மைகளையும் அறியப் பெறுவது பயனாம்.

குறிப்பிட்ட சமயத்தின் அல்லது இயக்கத்தின் கொள்கைகள் கோட்பாடுகள் மக்களிடம் சேருவதும் பயனாம்.

குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் உளவியல் கூறுகளை அனைவரும் உணர்வதால் அன்புடைமை ஏற்படுவதோடு இறைவன் அல்லது தலைவனின் அருள்பெறுவதும் பயனாம். இதோடு பலரின் பாராட்டுதல்களையும் பெறுவதும் பயனாம்.

சாதி, சமய இன வேறுபாடற்ற ஒரு நிலையில் இதே வகையான நூல்களை இன்னும் படைக்கத் தூண்டுவதும் இந்நூலின் தனித்த பயனாம்.

நிறைவுரை

பலரும் போற்றுதலுக்குரிய இறைவன் அல்லது தலைவனின் புகழ்பாடும் நோக்கில்—அவனிடம் தனக்குள்ள நெருக்கத்தைக் காட்டும் நோக்கில் புலவர்கள் இயற்றும் இப்பிள்ளைத்தமிழ் தமிழிலக்கிய வரலாற்றில் தனித்தொரு இடம் பெற்றுள்ளது. இலக்கிய வகையிலும் வடிவிலும் நிறைவு பெற்ற இக்கவிகள் படிப்போர்க்கு இன்பம் பயப்பன. தாய் அன்பையே நிலைக்களனாகக் கொண்ட இப்பிள்ளைக் கவிகளை பெண்பாற் புலவர்கள் எவரும் பாடாதது சிந்தித்தற்குரியது. சிறந்த உளவியலடிப்படையிலமைந்த பிள்ளைத் தமிழ் இலக்கியங்களின் மரபுகளைக் காப்பாற்றி மேலும் பல புதிய நூல்களைப் பதிப்பிப்பதும், படைப்பதும், போற்றுவதும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு மேலும் பயனுடையதாகும்

குறிப்புகள்

1. தமிழ் லெக்சிகன் — சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. 1982. தொகுதி-5 பக். 2712
2. மேற்படி—பக். 2713
3. கலைக்களஞ்சியம்—தொகுதி-7 ப. 369
4. திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் முன்னுரை—ப.7
5. தமிழிலக்கிய வகையும் வடிவும்—ச.வே.சுப்பிரமணியன். ப. 397
6. தொல்காப்பியம்—புறத். சூ. 29

7. தொல்காப்பியம் நச்சர் உரை—புறத். சூ. 29

8. புறப்பொருள் வெண்பாமாலை—238

9. திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்—(பதி, ச.வே.) சிவகாமி,முன்னுரை. ப. 2

10. உளவியல் நோக்கில் பிள்ளைக்கவிகள் வே. இரா. மாதவன், 22.10.84 வெள்ளிக்கிழமை கருத்தரங்கு கட்டுரை ப. 2

11. பெரியார் பிள்ளைத்தமிழ்—மா. வண்ணா தேவராசன். ப. 52.

12. பன்னிபாட்டியல் நூற்பா—101

13. தமிழ் இலக்கிய வகையும் வடிவும் ச.வே.சுப்பிரமணியன் ப. 399

14. மேற்படி—ப. 402

15. திருநெல்வேலி காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ். அழகிய சொக்கநாதப்புலவர் பாடல் 55.

16. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் — இரண்டாவது மாநாடு-ப.2

17. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்—மார்க்க சகாய தேவர்—பாடல் 62.

18. தூது இலக்கியம் — நோக்கமும் பயனும் — டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் 6-2-1985 ப. 7

19. சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ் — சிவப் பிரகாசர்- பா. 22

20. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடல் 26

21. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் — இரண்டாவது மாநாடு—ப. 4

22. இக்காலக் கிறிஸ்துவ தமிழ் இலக்கியம் — இர. ஆரோக்கியசாமி பக். 91

23. ஏசுநாதன் பிள்ளைத் தமிழ், குற்றாலம் பாடல் 19

24. கௌது மு. ஹியித்தீன் பிள்ளைத்தமிழ்— ப.7

25. இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள்—மு. சாயபு மரக்காயர் தமிழ் இலக்கியக் கொள்கை — 8. பக். 318

26. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் -குமரகுருபரர் - பாடல் 57

27. திருச்செந்தூர் '' -பகழிக்கூத்தர் பாடல் -39

28. திருவாவடுதுறை அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்-மீனாட்சி சுந்தரம் பிள்ளை- பாடல் 13

29. வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழ்— மண்ணை சண்முகம்-பக். 65

30. ஆண்டாள் பிள்ளைத்தமிழ்-முன்னுரை

31. வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழ் - சப்பாணிப் பருவம்-பாடல் 3

32, பெரியார் பிள்ளைத்தமிழ் - மா. வண்ணா தேவராசன் ப. 51

33. நோக்கமும் பயனும் - தூது இலக்கியம் - இலக்கியக் கொள்கை கருத்தரங்குக் கட்டுரை-6-2-1985 ப. 17

34. திருநெல்வேலி காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் அழகிய சொக்கநாதர் ப. 67

35. திருச்செந்செந்தூர் பிள்ளைத்தமிழ். பகழிக் கூத்தர். பாடல்--

36. ,, ,, பாடல்—92

37. ,, ,, பாடல்—93

38. ,, ,, பாடல்—95

39. ஆண்டாள் பிள்ளைத்தமிழ்- பாடல் 101

40. திருச் செந்தூர் பிள்ளைத்தமிழ்-பாடல்-2

41. காந்தி பிள்ளைத்தமிழ் - தி. இளமுருகு-பக்.20

42. கலைக்களஞ்சியம் - தொகுதி-7 ப. 371

43. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ். ப. 7

44. பிள்ளைத்தமிழ் கொத்து -இரண்டாவது மாநாடு-அணிந்துரை.

பயன்பட்டவை

1. இக்கால கிறிஸ்துவ தமிழ் இலக்கியம்-இர. ஆரோக்கிய சாமி-கிறிஸ்தவ இலக்கிய சங்கம்—சென்னை 1983

2. இலக்கணத் தொகை யாப்புப் பட்டியல்-டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்-தமிழ்ப் பதிப்பகம், சென்னை—1978

3. இலக்கிய ஆய்வுச் சிந்தனைகள், இரா. அரங்கசாமி, அன்பு இல்லம், கும்பகோணம்.

4. கலைக் களஞ்சியம்—தொகுதி-7 தமிழ் வளர்ச்சிக் கழகம்-1959

5. சிற்றிலக்கியச் செல்வங்கள்—ந. வீ. செயராமன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம். 1967

6. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்-இரண்டாவது மாநாடு. கழக வெளியீடு 1959

7. தமிழ் லெக்சிகன்—தொகுதி 3 சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை—1982

8. தமிழிலக்கியக் கொள்கை—8 இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் மு. சாயபு மரைக்காயர்
(பதி) டாக்டர் ச.வே.சுப்பிரமணியன்-கே. பகவதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

9. தமிழிலக்கிய வகையும் வடிவம்-டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம். சென்னை—1984

10. திராவிட மொழி இலக்கியங்கள்-டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்—சென்னை 113, 1983

11. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்—திருவாய்மொழி-பெரியாழ்வார்

12. பன்னிரு பாட்டியல்—கழக வெளியீடு.

13. பாட்டியலும் இலக்கிய வகைகளும்—ந. வீ. செயராமன் மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981

14. பிள்ளைத் தமிழ் கொத்து—சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலக வெளியீடு—1956

15. பிள்ளைத் தமிழ் கொத்து—கழக வெளியீடு.

கட்டுரை :

1. உளவியல் நோக்கில் பிள்ளைக் கவிகள்—வே.இரா. மாத வன்—வெள்ளிக்கிழமை கருத்தரங்குக் கட்டுரை—உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113. 12-10-1984.

2. நோக்கமும் பயனும்—தூது இலக்கியம்—டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், இலக்கியக் கொள்கை—6-2-1985 கருத் தரங்குக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்—சென்னை—113

அச்சான பிள்ளைத் தமிழ் நூல்கள்

1. அகிலாண்டவம்மை பிள்ளைத்தமிழ், திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தி. சபாபதி பிள்ளை ப. 42, 1982

2. அண்ணா பிள்ளைத்தமிழ், புலவர் பொன்மாரி, புலவர் பண்ணை மதுரை, பக். 101, 1972

3. அபிராமி பிள்ளைத்தமிழ், ஸ்ரீதேவி கருமாரிதாசர், சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், சென்னை, பக். 66, 1977

4. அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் பக். 24,

5. அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனம், பக். 92, 1961

6. அருணகிரிநாதர் பிள்ளைத்தமிழ், ஸ்ரீதேவி கருமாரிதாசர், சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், சென்னை, பக். 50, 1976

7. அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ், சென்னை கீழ்த் திசைச் சுவடி நூலகம், 1956

8. அருள்மிகு கொளஞ்சியப்பர் பிள்ளைத்தமிழ், தி. செ. முருகதாச சுவாமிகள், கொளஞ்சியப்பர் திருக்கோயில், பக். 86, 1976.

9. அழகர் பிள்ளைத்தமிழ், மதுரைத் தமிழ்ச் சங்கம் பக். 72, 1919

10. அளகாபுரி உமையாம்பிகை பிள்ளைத்தமிழ், சி. தியாக ராச செட்டி, தஞ்சை சுப்பிரமணிய ஐயர் பக். 50 பிரமாதி

11. ஆண்டாள் பிள்ளைத்தமிழ், (பதி) வரதராஜு நாயுடு, தாசநாயக்கன் பாளையம் பக். 70, 1904

12. ஆதிசங்கரர் பிள்ளைத்தமிழ், ஸ்ரீதேவி கருமாரிதாசர். சுவாமி நடேசனார் நிகேதனம், சென்னை—1, 40, 1975

13. ஆதிபுரி வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ், கனகசபை தம்பிரான், ஊ. புஷ்பரத செட்டியார் பக். 40, 1871

14. ஆய்க்குடி முருகன், சீவ ராமலிங்கம் பிள்ளை, தென்காசி மீனாட்சி பிரஸ், பக். 54, 1936

15. இராகவர் பிள்ளைத்தமிழ், குற்றாலம் குழந்தை முதலியார், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம்' 1956

16. இராமலிங்க சுவாமிகள், சுந்தரர், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1959

17. இராமாநுஜர் பிள்ளைத்தமிழ், ஸ்ரீதேவி கருமாரிதாசர், தம்புசெட்டித் தெரு, சென்னை பக். 68, 1977

18. உமையாம்பிகை, ஆதியாகராச செட்டியார், தஞ்சை சுப்பிரமணிய தேசிகர், பக். 50, பிரமாதி,

19. உலகம்மை பிள்ளைத்தமிழ், ஆ. நமச்சிவாய கவிராயர்,

20. ஏசுநாதர், பிள்ளைத்தமிழ், இ. குற்றாலம், கவிமணி இல்லம், நாகர் கோவில், பக். 78, 1965

21. கச்சிக் குமரகோட்டக் கடவுள் பிள்ளைத்தமிழ், வேங்கட சுப்புப்பிள்ளை தேவகோட்டை இராமநாதஞ் செட்டியார் பக். 45, 1895

22. கண்ணன் பிள்ளைத்தமிழ், பெரியாழ்வார், கழக வெளியீடு, ப 28, 1973

23. கதிர்காமம் பிள்ளைத்தமிழ், கருணாலய பாண்டியப் புலவர், கொழும்பு ராபர்ட் பிரஸ் பக். 133, 1937.

24. கம்பன் பிள்ளைத்தமிழ், நா. கனகராஜ ஐயர், கம்பன் கழகம், காரைக்குடி, பக் 72

25. காஞ்சி காமாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், இரா. குப்புஸ்வாமி, ராஜேஸ்வரி அச்சகம் மன்னார்குடி, பக் 108, 1959

26. காந்தியண்ணல் பிள்ளைத்தமிழ், தி. இளமுருகு, கோவை காந்தி மன்றம், பக் 20, 1964

27. காந்தியண்ணல் பிள்ளைத்தமிழ், ராய. சொக்கலிங்கம், காரைக்குடி, பக் 71

28. காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ், ஸ்ரீதேவி கருமாரி தாசர், ஸ்ரீகாளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானம், சென்னை—1, பக் 55, 1975

29. காலை முருகன் பிள்ளைத்தமிழ், கலைவாணன், கலை வாணன் பதிப்பகம், பக் 80, 1969.

30. குமரமலை குமரேசர் பிள்ளைத்தமிழ் பக் 80

31. குமரமலை பிள்ளைத்தமிழ், வீரபத்திரக் கவிராயர், நா. கதிரேசன் செட்டியார் பக் 16, 1909.

32. குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ், மு. கோ. இராமன், நண்பர்கள் அச்சகம், சென்னை—18, பக் 24, 1972

33. குலேத்துங்கன் பிள்ளைத்தமிழ், ஒட்டக்கூத்தர், தஞ்சை சரஸ்வதி மகால், பக் 153, 1974

34. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சிவஞான சுவாமிகள், ஊ. புஷ்பரத செட்டி, பக். 62, துன்முகி

35. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சிவஞான சுவாமிகள், வெ. கை. சி. நா. கழகம், பக். 87, 1927

36. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சிவஞான சுவாமிகள், மதுரைத் தமிழ்ச் சங்கம், பக். 69, 1921

37. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சிவஞான சுவாமிகள், கழக வெளியீடு, 1981

38. கொங்குக்குமரி பிள்ளைத்தமிழ், செங்கைப் பொதுவன், காந்தி பதிப்பகம், மோகனூர், பக். 93, 1969

39. கொடயிடையம்மை பிள்ளைத்தமிழ், செங்கைப் பொதுவன், தண்டையார் பேட்டை க.வ., திரு.வேங்கட நாயுடு, பக். 50, 1888

40. கோமதியம்மை பிள்ளைத்தமிழ், புளியங்குடி முத்து வீரக் கவிராயர், திருவாவடுதுறை வெளியீடு பக். 167, 1971

41. கௌது முஹீய்யித்தீன் பிள்ளைத்தமிழ், மு. மு. ஹம்மது தாஹா, சிங்கைப் பதிப்பகம், பக். 112, 1983

42. சங்கர நாராயணர் கோயிற் கோமதியம்பிகை பிள்ளைத் தமிழ், முத்து வீரக்கவிராயர், வெ. மீனாட்சி சுந்தரர் நாச்சியார் பதிப்பு, பக். 422, நந்தன

43. சிதம்பர சிவகாமியம்மன் பிள்ளைத்தமிழ், பக். 48

44. சிவஞானபாலைய தேசிகர் பிள்ளைத் தமிழ், சிவப்பிரகாச சுவாமிகள், ஜி. குமாரசாமி ஐயர், பக். 201, 1968

45. சிவப்பிரகாசர் பிள்ளைத்தமிழ், ஆ.அப்பாவையர், அ.க. சிவசிதம்பரபிள்ளை அ. க. சிவசிதம்பரம்பிள்ளை பண்ருட்டி பக். 22, சோபகிரு

46. சிவமலை பிள்ளைத்தமிழ் பக். 10, 1960

47. சிவானந்தன் பிள்ளைத்தமிழ்; சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1956

48. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிள்ளைத்தமிழ், பா. வேலு தேசிகர், வி .வி. வி. சி. ஆர். முருகேச முதலியார், பக். 26, 1916

49. சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக் கோவை பிள்ளைத் தமிழ், காஞ்சி சிதம்பர முதலியார், திருவாவடுதுறை ஆதினம், பக். 92, 1955.

50. சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ், கவிராஜ பண்டா ரத்தையர், கே. எஸ். சங்கர நாராயணன் பிள்ளை, பக். 45

51. சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், வன்னியப்பா பாவலர், களக்காடு ஆ. மீனாட்சி நாதபிள்ளை, பக். 30, 1888

52. சுவாமி இராமதாஸர் பிள்ளைத்தமிழ், ஸ்ரீதேவி கருமாரி தாசர், சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், பக். 52, 1976

53. செங்கழுநீர் விநாயகம் பிள்ளைத்தமிழ், சிவஞானசுவாமி கள், ஊ. புஷ்பரத செட்டியார், பக். 47, 1871

54. செங்குந்தர் பிள்ளைத்தமிழ், ஞானப்பிரகாச சுவாமிகள், இந்து தியாலாஜிகல் அச்சகம், சென்னை, பக். 50, 1891.

55. செங்கோட்டுவேலர் பிள்ளைத்தமிழ், வி.வி.சி.ஆர். முருகேச முதலியார், பக். 60, 1958

56. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, உ. வே. சா. நூல் நிலையம், பக். 120, 1962

57. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார், கந்தபெருமாள் தேவத்தானம், திருப்போரூர், பக். 800, 1964.

58. சேக்கிழார் பிள்ளைத் தமிழ், மீனாட்சிசுந்தரம்பிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார், அடிகளாசிரியர், கந்த பெருமாள் தேவத்தானம் திருப்போரூர், திருவாவடுதுறை ஆதீனம், பக். 295, 1967

59. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, அடிகளாசிரியர், மகாதேவ முதலியார், சென்னை கார்டியன் அச்சக்கூடம், பக். 77, 1913

60. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அடிகளாசியர், சதாசிவ செட்டியார், வைச. சித்' நூல், கழகம் பக். 130, 1913 1925

61. சேக்கிழார் பிள்யைத்தமிழ், மீனாட்சி சுந்தரம்பிள்ளை அடிகளாசிரியர், மாயூரம் நமச்சிவாயம் பிள்ளை, பக். 48, பிலவ

62. சேசுநாதர் பிள்ளைத்தமிழ், சாமிநாத பிள்ளை, தஞ்சை அருளப்ப முதலியார், பக். 30, 1864

63. சேதுபர்வதவர்த்தினியம்மை பிள்ளைத் தமிழ், மு. ரா. அருணாசலக்கவிராயர், மதுரை விவேகபானு பிரஸ், பக். 52, 1906

64. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், அந்தககவி வீரராகவ முதலியார், கல்குளம் குப்புசாமி முதலியார், பக் 80

65. சேயூர் முருகன் பிள்ளத்தமிழ், அந்தககவி வீரராகவ முதலியார், திருவாவடுதுறை ஆதீனம், பக் 95, 1958

66. சௌந்தரிய நாயகி பிள்ளைத்தமிழ், வீரகேசர சுப்பய்ய ஞானதேசிகேந்திர சுவாமிகள், சிக்கல் வீரமெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள், பக் 70, 1926

67. ஞானசம்ப சுவாமிகள் பிள்ளைத்தமிழ், ராம. சொ. சொக்கலிங்க செட்டியார், தேவகோட்டை மீனலோசனி பிரஸ்,

68. ஞானசம்பசுவாமிகள் பிள்ளைத்தமிழ் கலாரத் அச்சுக் கூடம், பக் 15, 1887

69. ஞான சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ், கு. ஆ. அரங்கநாதனார், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சேலம், பக் 74, 1977

70. தட்சணாமூர்த்தி பிள்ளைத்தமிழ், அரு. சோமசுந்தரன், பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, பக் 100, 1978

71. தரங்கை வேலாயுதசாமி பிள்ளைத் தமிழ், தஞ்சை சரஸ்வதி மகால், பக். 56.

72. திருக்கச்சக் குமர கோட்டத்து முருகப்பெருமான் பிள்ளைத் தமிழ், த. வைத்தியநாதப் பிள்ளை, குமார வேல் நிலையம், சென்னை, பக். 102,1981.

73. திருக்கலசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், மாதவச்சிவஞான முனிவர், கழக வெளியீடு, பக். 49, 1927.

74. திருக்கலசைச்செங்கழு நீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், மாதவச் சிவஞான முனிவர், பொன்னுசாமி தேவர், பக். 22, ருதிரோற்

75. திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ், (பதிப்) ச. சிவசாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக். 135, 1980.

76. திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், மதுரை சபாாதி முதலியார், படகரை, வி. ராமபத்திராயுடு நாயுடு, பக்.71, 1896.

77. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர், புதுப். பாக்கம் முருகேச முதலியார், பக் 12. 1885

78. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர், புன்னை வனநாதமுதலியார், கழக வெளியீடு, பக். 87, 1977

79. திருசசெந்தூர் பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர், இராய வேலூர் குமாரசுவாமி ஐயர், பக்.42, 1885

80. திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ், மாசிலாமணி தேசிக சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம், பக். 116, 1953.

81. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிவ், ராம. சொ. சொக்க லிங்க செட்டியார், தேவகோட்டை, மீனாலோசனி, 1912

82. திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ். நா. கனகராஜ கவிராயர், திருவாவடுதுறை ஆதீனம், பக். 39, 1953

83. திருத்தணிகை முருகன் பிள்ளைத்தமிழ். ஈ. வே. வேங்கட சுப்ரமண்யம், குமாரதைதுவமர் திருக்கைத் திருப்புகழ்ச் சங்கம், பக். 61, 1964

84. திருத்தணிகை முருகன் பிள்ளைத் தமிழ், ஸ்ரீகந்தப்ப முனிவர், ஸ்ரீ குமார தேவர் மடம், பக். 81, 1977

85. திருநந்தித்தேவர் பிள்ளைத்தமிழ், அப்பாவையரவர்கள்' பண்ருட்டி முத்துவேலாயுதம் பிள்ளை, பக். 20, விசுவாச

86. திருப்பெருந்துறை சிவயோகி நாயகி பிள்ளைத்தமிழ், தஞ்சை சரஸ்வதி மஹால், பக் 54, 1950.

87. திருமயிலை பிள்ளைத்தமிழ். மதஙணவ்தையப தாண்டவராயப் புலவர், சென்னை கீழ்த்திசை நூலகம், பக். 162, 1953.

88. திருமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ், செங்கோட்டை கவிராஜ பண்டாரத்ளதயர், தென்காசி இராமானுஜம் பிரஸ் பக். 38, 1919.

89. திருமலை முருகன் பிள்ளைத் தமிழ், கவிராச பண்டாரத்தயர், கழக வெளியீடு, பக். 77, 1929.

90. திருமாலிருஞ்சோலை மலை அழகர் பிள்ளைத்தமிழ், பக். 74

92. திருமுதுகுன்றம் பெரியநாயகி பிள்ளைத்தமிழ்' ஸ்ரீசொக்கலிங்க சிவப்பிரகாச பண்டாரசந்நிதிகள், குமார தேவர் மடம், பக். 64, 1979.

93. திருவருணை உண்ணாமுலையம்மை பிள்ளைத்தமிழ், சோணாசல பாரதியார் ஆர். எஸ். நடராசன், சென்னை, பக். 82, 1967.

94. திருவல்லிக்கேணிப் பெருமான் பிள்ளைத்தமிழ் பிள்ளைமையின்பம் பிள்ளைத்தமிழ், டி. என். ராஜ கோபாலன், காம்பா. பப்ளிஷிங் கம்பெனி,

95. திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ், கே. எம். பாலசுப்ர மணியம், திருவாசக மணி, திருச்சி. பக். 142, 1968.

96. திருவாரூர் சத்திய ஞான பண்டாரம், பக். 60.

97. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ், மார்க்க சகாய தேவர், கழக வெளியீடு, பக். 85, 1944.

98. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், மார்க்க சகாய தேவர், கலாரத் நாகர அச்சுக் கூடம் பக். 15, 1887.

99. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ், மார்க்க சகாய தேவர், புஷ்பரதசெட்டி, பக் 40. 1869.

100. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், மார்க்க சகாய தேவர், ஆற்காடு முத்தியாலு நாயகர், பக்.10, ரக்தாக்ஷி

101. திருவிலஞ்சி குமாரசாமி பிள்ளைத்தமிழ், மார்க் பக். 34

102. திருவீழி மிழலை அழகிய மாமுலையம்மை பிள்ளைத் தமிழ், காழி ஞானதேசிகர், சா. மு. ராம. ராமசாமி செட்டியார் கொத்த மங்கலம், பக். 76, 1939.

103. திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திரிசிரபுரம் தியாகராச செட்டி பக். 50, விக்கிரமம்

104. திருவெண்ணெய் நல்லூர் வைகுந்த நாதர் பிள்ளைத் தமிழ், திருமேனிக் கவிராயர், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், பக். 1959

105. திரு வைகுந்த நாதன் பிள்ளைத்தமிழ், உ.வே.மு. இராக வையங்கார், வெ. நா. ஸ்ரீநிவாசய்யங்கார் பக்.59, 1933

106. தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், பக் 60, 1923

107. தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1956.

108. தேவகோட்டை முருகன் பிள்ளைத்தமிழ், தண்டபாணி சுவாமிகள், கௌமாரசபை வெளியீடு, 1955

109. நாகலிங்க தேசிகர்., பிள்ளைத்தமிழ், ஆ. அருணாசலக் கவிராயர், வாணிவிலாசம் பிரஸ், திருநெல்வேலி,பக் 46, 1898

110. நாகை நீலாயதாட்சியம்மை பிள்ளைத்தமிழ், ஆ.கிருஷ்ண சாமி உபாத்தியார்,செ ன்னை, இராமலிங்கம்பிள்ளை, பக். 56, 1882

111. நாரதர்மமலை மாரியம்மன் பிள்ளைத்தமிழ், க. மு. சுந்தரகணேசன், எழில்மலர்ப்பதிப்பகம், பக் 67 1972.

112. நால்வர் பிள்ளைத் தமிழ், கவுணியன் பதிப்பகம், நால்வர் பிள்ளைத்தமிழ், ராம. சொ. சொக்கலிங்க செட்டியார் சிதம்பரம் குஞ்சித சரணம், பிரபவ.

113. பச்சைநாயகி பிள்ளைத்தமிழ், ஆ கந்தசாமி சுவாமிகள், கௌமாரமடாலயம், கோவை, பக் 96, 1974

114. பத்திராசலம் இராமச்சந்திரன் பிள்ளைத் தமிழ் கந்தசாமி அடிகள், கழக வெளியீடு, 1977

115. த. பழமுதிர்சோலை மலை முருகன் பிள்ளைத்தமிழ், ரா. குப்புஸ்வாமி குமாரததுவமர் திருக்கைத் திருப்புகழ்ச் சங்கம்,பக் 61, 1964

116. பழனிப்பிள்ளைத் தமிழ், சின்னப்ப நாயக்கர், செந்தமிழ்ப் பிரசுரம், பக், 22, 1932

117. பாகப்பிரியம்மை பிள்ளைத்தமிழ், சின்னப்ப நாயக்கர் சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1956

118. பாம்பன் சுவாமிகள் பிள்ளைத் தமிழ், ஸ்ரீதேவி கருமாரி தாசர், சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், பக். 58, 1976

119. புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழ், சென்னை கீழ்த் திசைச்சுவடி நூலகம், 1959

120. புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத் தமிழ், முத்துக்குமரர்' சென்னைக் கீழ்த்திசைச்சுவடி நூலகம், 1956

121. பெரியநாயகியம்மன் பிள்ளைத்ததழ். சொக்கலிங்க சிவப் பிரகாச சுவாமிகள், பக் 40

பெரிய நாயகியம்மன் பிள்ளைத் தமிழ், சொக்கலிங்க சிவப்பிரகாச சுவாமிகள், பூவை. கலியாணசுந்தர முதலியார், பக். 48 1889

122, பெரியார் பிள்ளைத் தமிழ் — மாவண்ணா தேவராசன், பாரதி நிலையம், சென்னை, பக் 224, 1983.

பெரியார் பிள்ளைத் தமிழ் மாவண்ணா தேவராசன், பாரதிநிலையம், சென்னை—224—1983

123. பெரியார் பிள்ளைத்தமிழ், பதுமாவதியம்மாள் புத்தக நிலையம், இராயவரம், பக் 102

124. பெரியாழ்வார் பாடிய பிள்ளைத்தமிழ், ராம்குமாரி பப்ளிகேஷன்ஸ், பக். 200, 1976

125. பெருங்கருணையம்மை பிள்ளைத்தமிழ், சி. கே. சுப்பிரமணிய முதலியார் கோவை தமிழ்ச்சங்கம் பக். 99, 1926

126. மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1959

127. மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திரிசிரபுரம் தியாகராசசெட்டியார் பக்.27, விபவ

128. மங்களேசுவரி பிள்ளைத்தமிழ், திரு. கா. சுப்பிரமணிய ஐயர், பக். 62, 1956

129. மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1959

130; மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், குமரகுருபர சுவாமிகள், பக். 114

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமாகுருபர சுவாமிகள், வே. புஷ்பரத செட்டி, 1911

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், குமரகுருபரத் சுவாமிகள், மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், பக்72, 1920

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமரகுருபர சுவாமிகள், மதுரை கிருஷ்ணபிள்ளை. பக். 68, 1927.

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமரகுருபர சுவாமிகள் புஷ்பரதசெட்டி, பக் 49, 1871

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், குமரகுருபர சுவாமிகள், திருத்தணிகை, பக்.

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமரகுருபர சுவாமிகள், சரவணப் பெருமாளையர்.

131. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், குமரகுருபர சுவாமிகள், திருப்பனந்தாள் காசிமடம், 1952.

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், பக். 151யுவ

132. மயின்மலை பிள்ளைத் தமிழ், சிந்நயச் செட்டியார், புஷ்பரதச் செட்டியார் கலாரத்தாகரம் அச்சகம், பக். 50, 1883.

133. மயூர கிரிநாதன் பேரில் பிள்ளைத்தமிழ், சுப்பிரமணிய பாரதிகள், பாதரக்குடி. சொக்கலிங்கம் பிள்ளை, பக். 75, 1877

134. மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ், அரு. சோமசுந்தரன், பொன்முடி பதிப்பகம், காரைக்குடி

135. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், குமரகுருபர சுவாமிகள், புஷ்பரத செட்டியார் பக். 54, 1891

136. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், குமரகுருபர சுவாமிகள், அருணாசல தேசிகர் பதிப்பு, பக். 122, 1836

முத்துக்குமாரசுவாமிகள் பிள்ளைத்தமிழ், குமரகுருபர சுவாமிகள், இராமசாமி நாயுடு குமாரசாமி நாயுடு சன்ஸ் பக். 138, 1945.

முத்து வீரப்ப சுவாமி பிள்ளைத்தமிழ், சென்னைக்கீழ்த் திசைச் சுவடி நூலகம், 1959

137. முருகப்ப தேவர் பிள்ளைத்தமிழ், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1959.

138. முருகன் பிள்ளைத் தமிழ் புதுவியல் செல்லப்பன், வாலண்டரி அசோஷியேஷன் 1981

139. யோசிகாத்தையர் பிள்ளைத்தமிழ், சென்னைக் கீழ்த் திசைச்சுவடி நூலகம் 1959

140. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பிள்ளைத்தமிழ், முருகதாச சுவாமிகள், திருவாமாத்தூர் திருக்கோயில் பக். 95 1977

141. வயிரசுவாமி பிள்ளைத்தமிழ், நரசிங்கம் பிள்ளை, புதூர் முத்தமிழாகர, அச்சுக் கூடம் பக். 19

142. வயிரவன் கோயில் வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ், சேந்தன்குடி வி.நடராச கவிராயர், சென்னை கலாரத் நாகரம் அச்சகம், பக் 70, 1894.

143. வள்ளற்பெருமான் பிள்ளைத்தமிழ் மா. க. காமாட்சி நாதன், மாடக்குளம். பக். 88, 1970

144 வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழ், புலவர் பண்ணை சண்முகம், தமிழ் இலக்கியக் கழகம் பக். 100 1976

145. வேங்கடேசுவரன் பிள்ளைத் தமிழ், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம் 1959

146. வைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம் 1959.

147. க்ஷேத்திரக்கோவை பிள்ளைத் தமிழ், சிதம்பர முனிவர், சாது அச்சுக்கூடம். இராயப்பேட்டை, பக். 56.

சுவடி வடிவிலுள்ள பிள்ளைத் தமிழ் நூல்கள் :

1. அனுமார் பிள்ளைத்தமிழ்—அருணாசலக்கவிராயர்,

2. ஆயலூர் சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்—சுப்பிரமணிய சுவாமிகள்

3. ஆழ்வார் பிள்ளைக்கவி

4. கமலாலையம்மன் பிள்ளைத்தமிழ்

5. குழைக்காதன் பிள்ளைத்தமிழ் — திருமேனிக்கவிராயர்

6. குறுங்கடி அழகிய நம்பி பிள்ளைத்தமிழ்—இரத்தினக் கவிராயர்

7. சத்தியஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ்
8. சிவகாமசுந்தரி பிள்ளைத்தமிழ்
9. சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்
10. சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ்
11. சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்
12. சேர்வைக்காரர் பிள்ளைத்தமிழ்
13. சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ்
14. சொரூபானந்தர் பிள்ளைத் தமிழ்
15. திருத்தவத்துறைப் பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ்
16. திருவாஞ்சியம்மன் மங்கள நாயகி பிள்ளைத்தமிழ்—சிவ ராமப் பிள்ளை
17. திருவேங்கட பூபன் பிள்ளைத் தமிழ்
18. பதரிவன முருகன் பிள்ளைத்தமிழ்
19. பழனிப்பிள்ளைத்தமிழ்
20. முத்துக்கருப்பண்ணன் பிள்ளைத்தமிழ்
21. வில்லைப்பிள்ளைத்தமிழ்—அருணாசலக்கவி
22. வீரவேலாயுதசுவாமி பிள்ளைத்தமிழ்

பெயரளவில் அறியப்படுபவை

1. அம்புலிப்பருவ தியான மாலை — மு. நல்லசுவாமி
2. அரியக்குடிஅலர்மேல் மங்கை பிள்ளைத்தமிழ்—வேலாமூர் கிருட்டிணமாச்சாரியார்
3. ஆண்டியப்ப பிள்ளை பிள்ளைத்தமிழ்—முகவூர் மீனாட்சி சுந்தரகவிராயர்
4. அதிபுரி வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ்—கனகசபை தம்பிரான்
5. ஆயிஷா நாயகி பிள்ளைத்தமிழ் — கா. மு. உரீப்ஷரீப்

6. இராமநந்தர் — பிள்ளைத்தமிழ் — கந்தசாமி அடிகள்

7. உண்ணாமுலையம்மை பிள்ளைத்தமிழ் — சோணாசல பாரதியார்

8. கடம்பர் கோயில் பிள்ளைத்தமிழ்— வீரசைவ கனகசபை கவிராயர்

9. கம்பை பிள்ளைத்தமிழ்—சோணாசல பாரதியர்

10. கமலாம்பிகை பிள்ளைத்தமிழ் -

11. கன்னிமரி — பிள்ளைத்தமிழ் — தம்பிரான் தோழன் பிள்ளை

12. காங்கேயன் பிள்ளைத்தமிழ் — கொடிக்கொண்டான் பெரியான் ஆதிச்சதேவர்

13. குருந்தமலை முருகன் பிள்ளைத் தமிழ் — கந்தசாமி அடிகள்

14. குற்றாலப்பிள்ளைத்தமிழ் — திரிகூடராசப்பக் கவிராயர்

15. கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் - செய்குதம்பிப் பாவலர்

16. கோட்டி மாதவன் பிள்ளைத்தமிழ் — பீமகவிப்புலவர்

17. சாந்தலிங்கர் பிள்ளைத்தமிழ் - கந்தசாமி அடிகள்

18. சாலிஹு வலியுல்லாஹ்பேரில் திருச்சந்தப் பிள்ளைத்தமிழ் செய்கு முகம்மது காதிலு மீறாலெப்பை

19. சாஹுல் ஹமீது ஆண்டவர் பிள்ளைத்தமிழ் — பஸீர் அப்பா நாயகம்.

20. சிரவை முருகன் பிள்ளைத்தமிழ். கந்தசாமி அடிகள்

21. சிவபுரம் மீனாம்பிகை பிள்ளைத்தமிழ் - பீமகவிப்புலவர்

22. சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ் - சாமிநாதபிள்ளை

23. சென்னை ஞானப்பிரகாசர் பிள்ளைத்தமிழ் - சென்னை சென்னையர் காவலன்

24. செந்நெற்கொடி சண்முகநாதன் பிள்ளைத்தமிழ், பீம கவிப்புலவர்

25. செப்பறை பிள்ளைத்தமிழ், சுப்பிரமணிய கவிராயர்

26. செய்குதாவுது வலியுல்லா பிள்ளைத்தமிழ் - நயினா முகம்மது பாவாப்புலவர்

27. செய்யது முக்மது புகாரி பிள்ளைத் தமிழ் - காலங் குடியிருப்பு மீரான் புலவர்

28. செயங் கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ் —முத்தப்பச் செட்டியார்

29. சென்னை முருகன் பிள்ளைத்தமிழ்-தண்டபாணி அடிகள்

30. சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ்-கச்சியப்ப முனிவர்

31. சேதுபர்வத வர்த்தனி பிள்ளைத்தமிழ் - அருணாசலக் கவிராயர்

32. சொரூபானந்தர் பிள்ளைத் தமிழ் - தத்துவராயர்

33. சோமசுந்தரமூர்த்தி விநாயர் பிள்ளைத்தமிழ்-சக்திவேலு

34. ஞானப்பிள்ளைத் தமிழ் - ஞானியார் சாகிபு

35. திருக்குடந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் - காஞ்சி சபாபதி முதலியார்

36. திருச்சந்தப் பிள்ளைத்தமிழ் அ. பி. அ. அப்துல் காதிறு

37. திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ்-சிதம்பரசுவாமிகள்

38. தேவநாயகியம்மன் பிள்ளைத்தமிழ் - முகலூர் கந்தசாமிக் கவிராயர்

39. தைக்கா சாஹிபுவலியுல்லாஹ் பிள்ளைத் தமிழ் -அருள் வாக்கி அப்துல் காதிர் புலவர்

40. நக்ஹுசொலி ஆண்டவர் பிள்ளைத் தமிழ் - பிச்சை இபுராகீம் புலவர்

41. நபிநாயகம் பிள்ளைத்தமிழ்-நாஞ்சில் ஹா

42. நபிநாயகம் பிள்ளைத்தமிழ் - தொண்டி பீர்முகம்மது புலவர்

43. நபிநாயகம் பிள்ளைத்தமிழ் - செய்து அபிய்யாசாகிப் புலவர்

44. நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ்-இளையான்குடி காதர்கனி

45. நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ்-இளையான் சண்முகம்

46. நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ்-செய்கு மீரான்புலவர்

47. நல்லூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் - அப்புக்குட்டி ஐயர்

48. நவநீதக் கிருட்டிணன் பிள்ளைத்தமிழ் - அண்ணாமலை ரெட்டியார்

49. நாகூர்ப் பிள்ளைத்தமிழ்-ஷாஹுல் ஹமீதுப்புலவர்

50. ,, பிள்ளைத்தமிழ் பிச்சை இபுராகீம் புலவர்

51. ,, ,, ஆரிபு நாவலர்

52. ,, மீரான் சாகிபு ஆண்டவர் பிள்ளைத்தமிழ்- பாட்சாபுலவர்

53. ,, ஷாஹுல் ஹமீது நாயகம் பிள்ளைத்தமிழ்- செய்கு பஷீர் அப்பா

54. பத்திராசலம் இராமர் பிள்ளைத்தமிழ்-கந்தசாமி அடிகள்

55. பாத்திமா நாயகி பிள்ளைத்தமிழ்-மீரான்சாகிப்புலவர்

56. பாளையம் கே.சி. எம். பிள்ளைத்தமிழ்-நாஞ்சில் ஆரிது

57. பிரம்ம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ் - மீனாட்சி சுந்தரம்பிள்ளை

58. பிள்ளைக்கவி -பிரான்சிசுப் பிள்ளை

59. புதுவை பிள்ளைத்தமிழ் - தண்டபாணி அடிகள்

60. பெருமணலூர் திருநீற்றம்மை பிள்ளைத்தமிழ் - மீனாட்சி சுந்தரம் பிள்ளை

61. பெருமானார் பிள்ளைத்தமிழ் - மு.காஜா முகையதீன்

62. மணத்தட்டை பிள்ளையார் பிள்ளைத்தமிழ் - வீரசைவ கனகசபை கவிராயர்

63. மாணிக்கவாசகர் பிள்ளைத் தமிழ் - சொக்கலிங்க ஐயர்

64. மீரான் சாஹிபு பிள்ளைத்தமிழ் - இளையான்குடி பாட்சாப் புலவர்

65. முகையதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் - செய்யது முகிப்பித்தீன் கவிராஜர்

66. ,, ,, சவ்வாது புலவர்

67. ,, காரணப் பிள்ளைத்தமிழ்

அப்துல் காதிறுப்புலவர்

68. யவனாம்பிகை பிள்ளைத்தமிழ் - பலராம ஐயர்

69. வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ் - நடராச கவிராயர்

70. வள்ளிநாயகி பிள்ளைத்தமிழ் - தண்டபாணி அடிகள்

71. வேதநாயகர் பிள்ளைத்தமிழ்-பவுல் இராம கிருட்டிணன்

72. ஹுல் நாயகர் பிள்ளைத்தமிழ் - மீரான்சாகிபு புலவர்

73. ஜயலானியா யிள்ளைத்தமிழ் — —

புறப்பொருள்

அன்னி தாமசு

இலக்கு - இலக்கியம்

இலக்கியம், தனக்கென ஒரு 'இலக்கு' உடையது; ஒரு இலக்கை நோக்கிச் செல்வது: எது 'இலக்கு' என உணர்த்துவது ... இலக்கியம் என்ற சொல்லமைப்பால் — பெயரமைப்பாலேயே இத்தகு நிலைகள் பெறப்படக் கூடும் எனத் தோன்றுகிறது. இவ்வாறு, காரணப் பெயர்ப் பொருத்தம் கொண்டால், களமும் கருவியுமான இலக்கியமும், எத்தன்மைத்து என்பது வெளிப்படப் புலப்படுகின்றது. 'இலக்'காக, குறிக்கோளாக, ஒரு அல்லது பல பொருண்மைகளைக் கொண்டு இயல்வது, இயம்புவது இலக்கியம் எனலாம்.

> **''இலக்கியம் என்ற சொல்லை, இலக்கு + இயம் என்று பிரிப்பதாக இருந்தால்... இலக்கு—விளக்கம், நோக்கம், கொள்கை, குறிக்கோள் எனப்பொருள் கொண்டு, இயம்—ஒலிப்பது, கூறுவது, வெளிப்படுத்துவது எனப் பொருள் கொள்ளின், நம் குறிக்கோள்களையும் கொள்கைகளையும் இயம்புவது-விளக்குவது இலக்கியம் என்று கொள்ளலாம்''**
>
> *(தமிழ் இலக்கியக் கொள்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1975, தொகுதி—1, ப. 4.)*

இவ் இலக்கு, அல்லது குறிக்கோள், நோக்கமும் பயனுமாக இணைகின்றது.

நோக்கம்-பயன்

பொருள் : இச்சொற்கள் தமக்கெனப் பல பொருள் கொண்டு அமைகின்றன.[1] நோக்கம் என்பதன் ஒரு பொருளாகத் தரப்படும் கருத்து என்பது, ஏதேனும் ஒன்றைக் கருதுதல் என்ற

நிலையில் இலக்கியத்தின் நோக்க நிலையைக் குறிக்கின்றது எனலாம். பயன், பயம், பலன் என்ற நிலையில் பயன்பாடு, விளைவு என்பனவற்றைச் சுட்டக் கூடும்.

சொல் : இவ் இரு சொற்களும் தொல்காப்பியம் முதலே ஆட்சி பெற்று விளங்குகின்றன.[2] ஆயின் 'நோக்கம்' ஓரிடத்து மட்டும் அருகி வர, 'பயன்' பயிற்சி காட்டுகின்றது; அன்றியும் பயம் என்பதும் ஆளப்படுகிறது, தொல்காப்பியத்தில், பயன் என்பது ஒரு செய்யுளுறுப்பாகக் காட்டப்படுமிடத்து, நோக்கு என்பதும் பிறிதொரு உறுப்பாக அமைக்கப்படுவதும் இங்குச் சுட்டத்தக்கது; நோக்கம் என்பதிலும், நோக்கு எனும் சொல் பயிற்சி கொண்டுள்ளது.[3]

விளக்கம் : செய்யுளுக்கு உறுப்பான நோக்கும் பயனும், இலக்கியத்திற்கும் கூறாக இணையத் தக்கன எனலாம். தொல் காப்பியமும் உரையாசிரியரும் இவற்றிற்குத் தரும் விளக்கம் இவ்வெண்ணத்தை ஏற்படுத்துகின்றன. அன்றியும், நோக்கம், பயன் என்ற நிலையில் இவற்றைச் சார்த்தி, இணைத்து நோக்கவும் இடனளிக்கின்றன.

நோக்கு : இளம்பூரணம், பாடுபொருளின் ஒருமுக நிலை, பன்முகநிலை போன்றவற்றைக் கருத உதவுகின்றது:[4] இலக்கியப் பொருள் அல்லது கருத்து ஒரே நோக்கம் அல்லது பலநோக்கம் கொண்டமையலாம் போலும் என்ற எண்ணம் இதனை நோக்க எழுகின்றது. பேராசிரியம், 'நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே' என்பதனை, கேட்டார் மறித்து நோக்கிப் **பயன்கொள்ளுங் கருவியை** நோக்குதற் காரணம் என்றார்[5] என விளக்குவதால், நோக்கு, பயன் கொள்வதற்கு ஏதுவானது என்பது புலப்படுகின்றது. **'நோக்கிப் பயன்கொள்ளுதல்'** எனவும் தொடர்ந்து மொழிகின்றார். நச்சினார்க்கினியர் இன்னும் ஒரு படி மேற்சென்று, 'நோக்குதல்— **பயன்கோடல்** எனவும், 'கேட்டோர் மீண்டு **நோக்கிப் பயன் கோடலையுடையவாகச்** செய்யும் கருவியை, நோக்கு என்று பெயர் கூறப்படும்' எனவும் விளக்குகிறார்.[6] எனவே, பயன் என்ற முடிபுக்கு, இலக்கியத் தில்—செய்யுளில், காரணமாக-கருவியாக அமைவது நோக்கு என்பது புலப்படும்.

பயன்: பயன் எனும் உறுப்பின் விளக்கமும் உரைகளும், இலக்கியப் பயன் பற்றிய கோட்பாடு தொல்காப்பியத்தில் தெளி வாக அமைந்தமையைக் காட்டும்.

இதுநனி பயக்கும் இதன்மா றென்னுந்
தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே

(தொல்.பொருள். 504)

பயன் வெளிப்படாது தொக்கி நிற்கும் என்பது இங்குத் தெரிகின்றது. இளம்பூரணத்தை[7] நோக்க, அகப்பாடலில், தோழி தலைவனிடம், வழி ஏதம்,அலர், இற்செறிப்பு போன்றன வற்றைக் கூறும்போது, வரைந்துகோடல் எனும் பயன் உள்ளு றுத்தப்பட்டு அமைப்பதைக் கருதுவதாகத் தெரிகின்றது. அன்றியும், அறம் உணர்த்தும்போது 'இது நன்று' என்பதால் 'அதனைச் செய்க' எனும் கருத்து தொக்கு பயனாக அமைந் ததும் இதில் தெரிகின்றது. அகத்திற்கும், அறத்திற்கும் மட்டு மன்றி, புறத்திற்கும் இவ்வுறுப்புப் பொருந்தும் எனப் பேராசிரி யமும் நச்சினார்க்கினியமும் வலியுறுத்தும்[8]. அத்துடன், பயன் என்பது எத்துணை இன்றியமையாத கூறு என்பதும் தொல் காப்பிய உரையாசிரியர் வழி விளங்கும். பயன் இல்லாத (து) இலக்கியம் இல்லை (அல்ல) என்பது முடிந்த கொள்கை.

இவ்வகையினால் யாதானுமொரு செய்யுளாயினும்
பயன்படக் கூறல்
வேண்டு மென்பது கருதிப் பயனென ஒரு பொருள்
கூறினார்

(இளம்பூரணம்)

இவவா றெல்லாப் பாட்டும் பயனுறுப்பாக வன்றி
வாரா வென்க

(பேராசிரியம்)

இங்ஙனம் பயனுறுப்பாகவே செய்யுள் வருமா றுணர்க

(நச்சினார்க்கினியம்)[9]

தொல்காப்பியச் செய்யுளியலுக்குப் புறம்பேயும். 'பயன்' பற்றிய எண்ணம் பரவலாக அமைகின்றது. உவமையின் நால் வகை அடிப்படையுள் ஒன்றாகப் பயன் சுட்டப்படுகின்றது.[10] பாடாண்திணை தரும் ஆற்றுப்படை விளக்கத்தில் செல்வோர் பெறக்கூடிய, எதிர்பார்த்தற்குரிய 'பயன்' குறிக்கப்படுகின்றது[11] கற்பு வாழ்வின் மேம்பட்ட பயனாக, அறவழி நிற்றல், வீட்டின்பம் பெறல் என்பன தரப்படுகின்றன.[12] 'பொருட்பயன்' பற்றி, அறத்தின் நீங்கியன செய்யலாகாது எனும் அறிவுரை

காணப்படுகின்றது.[13] அகப்பாடலின் பரத்தை கூற்றும், வாயில் கள் கூற்றும் தலைவியைச் சுட்டாவிடின் பயனற்றன எனும் கோட்பாடு வழங்கப்படுகின்றது.[14] இவற்றினின்றும்கூட இலக்கியச் சார்புடன் பயன் பற்றிய சில எண்ணங்கள் அமைந்தமை தெளிகின்றது. மேலும், இலக்கியம் மட்டுமன்றி இலக்கணமும் பயனுடையது எனும் எண்ணம், மரபியலின் சூத்திர விளக்கத்தில் அமைகின்றது; 'பல் வகையானும் பயன் தெரிபுடையது சூத்திரத் தியல்' பாகக் குறிக்கப்படுகின்றது.[15]

சில எண்ணங்கள்: இலக்கியத்தின் நோக்கமும் பயனும் பற்றிப் பல எண்ணங்கள் எழலாம், ஆயினும் அவை இன்னும் தெளிவுபட வேண்டியன எனத் தோன்றுகின்றது. நோக்கம் என்றால் என்ன? எதற்காக எழுதுகிறேன்—ஏன்எழுதுகிறேன் என்ற கேள்விகளின் பதில் இதற்கு விடையாகுமா? இலக்கியப் படையாளியின் எதிர்பார்ப்புத்தான் நோக்கமா? எழுதுபவனின் நோக்கமும், எழுதப்பட்ட இலக்கியத்தின் நோக்கமும் ஒன்றா, வேறா, தொடர்பு (இணைவு) உடையதா? நோக்கமும் பயனும் ஒன்றா வேறா? எது பயன்? நோக்கமும் பயனும் எந்நிலையில் தொடர்புறுகின்றன அல்லது எந்த நிலையில் விலகி வேறுபடு கின்றன? நோக்கம், பயனில் நிறைவேறுகின்றது எனச் சொல்ல லாமா? நோக்கத்தில் ஒன்று பயன்பாடு, அல்லது பயன்படுவதே நோக்கம், அல்லது நோக்கமே பயன்பாடுதான் எனலாமா? நோக்கம் எழுதுவோனைச் சார்ந்தது எனவும் பயன் பெறு வோனைச் சார்ந்தது எனவும் கூறலாமா? அல்லது இரண்டும் இருவருக்கும் உண்டா? நோக்கமும் பயனும் தற்சார்பினவா தற்சார்பற்றனவா? இலக்கியத்திற்கு, இலக்கியப் பயன் மட்டுமே காண வெண்டுமா, வேறு பயனும் கருதலாமா? இலக்கியப் பயன் முருகியலா (Aesthetics)? கலை கலைக்காகவே எனவும் கலை வாழ்க்கைக்காகவே என்பதும் நோக்கம்—பயன் என்ற நிலையில் கருதக் கூடியனவா? நோக்கமும் பயனும் காண கணிக்க உதவியாக அமைவன எவை;நோக்கத்தை வெளிப்படை யாகக் கூறலும் அல்லது மறைத்து, குறிப்பாக மொழிதலும் காணப்படக் கூடுமா? இதனால், நோக்கத்தில் மேற்போக்கான நிலையும் (Surface level), ஆழ், புதை நிலையும் (Deep level) அமைதல் ஏற்புடையதா?

எழுவாயும் பயனிலையும் போல் ஒன்றிலொன்று இன்றி யமையாது இணைந்தவை, நோக்கமும் பயனும் எனலாம்.

நோக்கமில்லாப் பாடல் அல்லது பயன் கருதாப் பாடல் இருக்க முடியாது எனத் தோன்றுகின்றது. ஆயின், நோக்கம் இருந்தும் பயன் நிகழாமல் இருக்கலாம்; எதிர்பாராத பயனும் ஏற்படலாம். அறிவித்தல் நோக்கமென்றால், அறிதல் பயன்; அறிவுரை கூறல் நோக்கமென்றால் அதன்படி நடத்தல் பயன்; சீர்திருத்தம் நோக்கமென்றால் திருந்துதல் பயன்; வழிகாட்டுதல் நோக்கமென்றால் பின்பற்றுதல் பயன்; நெறிப்படுத்துதல் நோக்கமென்றால் நெறிநிற்றல் பயன். குறிக்கோளிலக்கிய நிலை இங்குக் கருதப்படல் கூடும்.

நோக்கமும் பயனும் பற்றிய குறிப்புகள்—செய்திகள் பாடலுள்ளும், புறத்தும் பெறப்படக் கூடும், கவிஞனின் நோக்கம் நிறைவேறினால் அது பயன், உடன் காலத்தும் அது நிறைவேறக் கூடும்! உடனடியாகவன்றி, தொடர்ந்த காலத்து அல்லது பிற்காலத்தும் அது நிறைவேறக் கூடும். கவிமணியின் மருமக்கள் வழி மான்மியம் இங்குக் கருதப்படலாம்.

நோக்கமும் பயனும் பாடுபொருளுக்குத் தக வேறுபடலாம்; பாடுவோனுக்குத் தகவும், கற்போனுக் கேற்பவும், இடத்திற் கேற்பவும் காலத்திற்கேற்பவும்கூட மாறுபடவும், வேறுபடவும் வகைப்பட்டு அமையவும் இயலும் எனலாம். ஒரு நோக்கம் அல்லது பல நோக்கம் அமையலாம் என்பதற்கேற்ப ஒரு பயனோ பல பயனோ பெறப்படக் கூடும்,

படைப்போன், தன் எண்ணத்தை வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்டு இலக்கியம் இயற்றலாம்; தன் அனுபவத்தைக் கூறல், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் எனும் வடிகால் நிலையும் இலக்கியம் கொள்ளலாம்; கருத்தைச் சொல்லல் அல்லது நிகழ்ச்சியைப் பேசுதல் என்பதுமாகலாம்; ஏதேனும் செய்ய வேண்டும் எனும் ஆர்வம், அல்லது படைப்பு உந்துதலின் புலப்பாடும் ஆக்கத்தைத் தரலாம்.[16] இலக்கியம் எழுதற்குரிய காரணம் இங்கு நோக்கமாகிறது. இலக்கிய ஆக்கங்களையே அடிப்படையாகக் காணின் மூன்று நோக்கங்கள் வெளிப்படுவதாகக் கூறுவர்.[17] அவை, ஏதோ ஒன்றைக் கூற வேண்டும்—ஒரு நிகழ்ச்சியை, பொருளை, மனிதனை வருணிக்க வேண்டும் எனும் நோக்கம், ஏதோ ஒன்றை விளக்க வேண்டும் எனும் நோக்கம்; உணர்வெழுப்ப வேண்டும் எனும் நோக்கம் என்பன. இலக்கியத்தைப் பெறுவோனின் கோணத்திலிருந்து கணிக்கப்படலாக இவை அமைகின்றன.

'அறிதல்', இலக்கியத்தின் அடிப்படைப் பயனாகும்; வாழ்க்கையிலிருந்து, சமுதாயத்திலிருந்து பெற்ற பல எண்ணங்களை ஆசிரியன் இலக்கியத்தில் வழங்குகிறான்; அதனைப் பெற்றுத் தம் வாழ்வைச் செவ்வைப்படுத்த சமுதாயம் பயன்கொள்கின்றது[18] என்பர்.

> படைப்போனின் நோக்கம், பயில்வோனிடம் நிறைவேறும்போது, அவ்விலக்கியம் பயனுடையதாகின்றது. பொதுவாக, எல்லா இலக்கிய ஆக்கங்களும் ஏதேனும் ஒரு நோக்கத்துடனேயே படைக்கப்படுகின்றன. இப்படைப்பாசிரியனின் நோக்கத்திற் கேற்பவும் இலக்கிய இயல்பு மாறுபட்டு அமைகின்றது. அறமுணர்த்தலும், அறிவுறுத்தலும் சீர்திருத்த நோக்கமும் பல படைப்புகளிலும் அடிநாதமாக அமைகின்றன. இன்புறுத்தலும், வழிப்படுத்தலும், கருத்தை உணர்த்தலும், உணர்வைத் தூண்டலும், அறிவைப் பெருக்கலும் இலக்கியப் பொதுப்பயன்களாகும். ஆசிரியனின் நோக்கமும், கற்போனின் பயனும் நாணயத்தின் இரு பக்கங்களாக இலக்கியத்தில் பொருந்தி அதன் இயல்புக் கூறாக அமைகின்றன. (தமிழ் இலக்கியக் கொள்கை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1980, தொகுதி—5, ப. 4.)

எனும் கருத்தும் இங்கு நினைவுக்கூரத் தக்கது.

உரை மரபிலும், இலக்கண மரபிலும், நூலின் நால்வகைப் பயன் பற்றிய எண்ணம் உண்டு. (நூலின்) நால்வகைப் பயனாக 'அறம் பொருள் இன்பம் வீடு என்பன' என்பது யாப்பருங்கல விருத்தி.[19] நன்னூலும், 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' (10) எனக் கூறுகின்றது. இப்பயன்களைக் கற்போர் பெறுவர் என்பது, 'அற முதலாகிய நான்கினையும் **ஓதினோரடைதல்** நூலான் வரும் பயன்' என்ற உரையால் விளங்கும்.[20]

இலக்கியக் கொள்கையில் நோக்கமும் பயனும்

இலக்கியக் கொள்கை பற்றிய ஆய்வில், நோக்கமும் பயனும் பற்றிய எண்ணங்கள் எவ்விடத்துறும்? இலக்கியக் கொள்கையைத் தெளிந்துகொள்ள எந்நிலையில், எந்த அளவு, நோக்கமும் பயனும் பற்றிய ஆய்வு உதவும்? போன்ற கேள்விகள் சிந்திக்கத் தக்கன.

இலக்கியத்தைப் பற்றிய கல்வியில், அதன் நோக்கமும் பயனும் பற்றிய கல்வி இன்றியமையாத கூறாக இணைகின்றது. நோக்கமின்றி இலக்கியம் தோன்றாதென்ற காரணத்தால், இலக்கியக் கல்வியின் தொடக்கமே நோக்க ஆய்வுடன் ஆரம்பிக்கின்றது எனத் தோன்றுகிறது. அன்றியும், பயன் பற்றிய கல்வியும் இத்தகையதே, எழுதுபவன் தன்னிறைவுக்காகவே எழுதுகிறான் எனவும் தன்நெஞ்சு நிறையுணர்வுகளுக்கு வடிகால் தரவே எழுதுகிறான் எனவும் வேறு பயன் கருதினானிலன் எனவும் சிலர் கூறலாம். எனினும், அதுவே பயனாக, பயனின் ஒரு நிலையாக அமைவதும் குறிப்பிடத் தக்கது. இந்த நிலையில் தற்பயன் எனவும், பெறுவோர்-பயன் எனவும் சார்த்திக்காணக் கூடுவதால், இலக்கியத் தகுதியை நிர்ணயிக்கவும் இயலும். அந்நிலையில் பயன்பற்றிய கல்வியும் தேவையாகின்றது.

இலக்கியக் கொள்கைகளைக் காணப் பொருள், வடிவம், வெளியீடு ஆகியன களனாகி உதவுகின்றன. இக்கொள்கைகளின் தன்மை, நிலை ஆகியவற்றைக் கணிக்க, நோக்கம், பயன் என்பனவற்றைச் சார்த்திக் காணல் தேவையாகின்றது. ஒரு குறிப்பிட்ட பொருளைத் தேர்ந்ததன் நோக்கம் யாது, குறிப்பிட்ட வடிவத்தைக் கொண்ட நோக்கம் என்ன, குறிப்பிட்ட வெளியீட்டை — வெளியீடுகளைக் கைக்கொண்டதன் நோக்கம் எது, அந்நோக்கங்கள் இலக்கிய வெற்றிக்கு எந்நிலையில் உதவின, அத்தகு சேர்க்கையால் இலக்கியம் பெற்ற சிறப்பு என்னென்ன? இன்ன பொருளால் இன்ன அல்லது இன்னின்ன பயன் எனக்காணல், அதேபோல் இன்ன வடிவால் பெற்றது இன்னது எனக் கூறல், இன்ன வெளியீட்டால் விளைந்தது இவையிவை எனக் கணித்தல் என இதனை விரிக்கலாம்.

இலக்கியம் தோன்றிய காலச் சூழில், இயற்றியவனின் தனிச் சூழல், இலக்கியம் எழுந்த களன், தூண்டுதலாக எது அமைந்தது என்பன இலக்கியத்தை நன்றாக உணரவும் இலக்கியக் கொள்கையை அறியவும் உதவுகின்றன என்ற நிலையில், நோக்கம் இன்றியமையாக் கூறாகின்றது. இலக்கியம் சமுதாயத்திற்குப் பயன்படுதல் தேவை என்ற கோட்பாட்டை வலியுறுத்த, உடன் கால சமுதாயத்தில்-தனிமனிதனில் அதன் தாக்கமும், இடமும், விளைவும் காணல் என்ற நிலையில் பயனும் இன்றியமையாததாகின்றது.

> குறிப்பிட்ட ஒரு இலக்கியம் ஏன் தோன்றியது என எண்ணி அது முகிழ்த்த சூழலோடு இணைத்து ஆயும் போது, அவ் இலக்கியத்தின் நோக்கமும், குறிக்கோளும், தேவையும் நன்கு விளங்குகின்றன. நூல் எழுந்த சூழலுக்கேற்ப அதன் இயல்பும் பயனும் வேறுபட்டு அமைகின்றன
>
> (தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-5, ப. 5)

எனும் கருத்து இங்கு எண்ணற்பாலது.

இலக்கியக் கொள்கைகள் பற்றி ஆய்ந்த மேனாட்டறிஞரான வாரனும், வெல்லக்கும், நோக்கமும் (Intention) பயனும் (Use) பற்றியும், இலக்கியச் செயற்பாடு பற்றியும் (Function of Literature) இலக்கியத் தகுதி நிர்ணயம் (Evaluation of Literature) பற்றியும் மொழிவது கருத்தில் கொள்ளத் தக்கது.[21]

ஆசிரியனின் நோக்கம் என்ன என்று பின்னிட்டுப் பார்த்துத் துணிவது, இலக்கிய வரலாற்றின் மைப் பணி என்ற கோட்பாடு நிலவுகின்றது. இலக்கியத் திறனாய்வாளனும் இலக்கியச் சுவைஞனும்கூட ஆசிரியனின் நோக்கை அறிய முயல்வர். எனினும், உடன் காலத்தவரிடையே அந்நோக்கம் பெற்ற வெற்றி, அப்படைப்பு பெற்ற செல்வாக்கு என்பதுடன் அதன் பொருள் அமைந்துவிடுவதில்லை: காலந்தோறும் அது பெறும் இடம் கருதப்பட வேண்டியதாகும். ஆசிரியனின் நோக்கமே உண்மையான இலக்கியம் எனவும், அதன் நகலே படைப்பாக உருவாகின்றது எனவும், அதனால் நம் கையில் கிடைக்கின்ற படைப்புக்கு அப்பாலும் ஆசிரியனின் நோக்கம் செல்லலாம் எனவும் கருதுவர். இடைக்காலக் கலைஞனுக்கு அறமும் பக்தியுமே நோக்கமாக இருந்திருக்கலாம்; ஆயின் இந் நோக்கத் திற்கும் படைப்புக்கும் அதிக இடைவெளியும் காணப்படக் கூடும் எனவே நோக்கம் பற்றிய ஆய்வு, முழுப் பொருண்மையைத் துணிந்து கொள்வதற்கு, புரிந்து கொள்வதற்கு ஓராற்றால் மட்டும் வழிவகுக்கும் எனல் போதரும். மேலும், இலக்கிய வகை எனும் எண்ணத்திலும் நோக்கம் உட்படக் கூடும். ஒரு புது இலக்கிய வகை தோற்றுவித்தவனின் நோக்கம், அதனைத் தொடர்ந்து கைக் கொண்டவரின் நோக்கம் என இது விரியும்.

இலக்கியத்தின் தன்மை (Nature)செயற்பாடு, தகுதி என்பன இணைவுடன் கருதப்பட வேண்டியன. ஒரு பொருள் எதற்காகச் செய்யப்பட்டதோ அந்தத் தன்மையை ஒட்டி அதன் பயனும்

அமையும். எதைச் செய்யக் கூடுமோ, எதைச் செய்ய வேண்டுமோ, அத்தன்மை புலப்பட அமைதல் வேண்டும். ஹொரேசின் கருத்தினை அடிப்படையாக்கி, இலக்கியத்தின் இருவகைத் தன்மையை, இன்பம்-பயன்பாடு, பொழுது போக்கு-கருத்தேற்றம், கலைத்தன்மை-பிரச்சாரம், கலையே முடிந்த முடிபாதல்- கலை சமுதாய பழக்க வழக்கப் பண்பாட்டுப் பந்த மாதல் எனப் பெயர்த்துக் கூறுவர்.

எந்த இலக்கியத்திற்கும், அது தோன்றிய காலத்தில் ஒரு பயனுண்டு. அப்பயன் முடிந்த பின், காலக் கழிவு போன்றவற்றால் அதற்கொரு-துணைப்பயன் தோன்றக் கூடும். கவிதை இன்பம் தரவேண்டுமென்றால், அது அறிவுறுத்தாமல் (Instruction) இருக்க முடியாது; அதுபோலவே கவிதை பிரச்சாரமாகு மென்றால், அது மனித உணர்வுகளைத் தொட்டுப் பேசாம லிருக்கலாகாது. இன்பம் தருதல் என்றால் சலிப்பு ஏற்படுத் தாமை, கடமையாகாமை, அதுவே பயனாதல் என்பன கருதப் படும்; பயன்படுதல் என்ற நிலையில், ஆழ்ந்த கவனம் வேண்டப் படுதல், வீணான பொழுது கழிவின்மை போன்றன கருதப்படு கின்றன.

வரலாற்றாளனுக்கு இலக்கியம் ஒரு சமுதாயப் பத்திரமா கின்றது (Social Document). செயல்முறை வாழ்க்கையில், இலக்கியம், பயணம், அயல்நாடுகளில் தங்குதல், நேரடி அனு பவம், பிறர் வாழ்வு, போன்றவற்றிற்குப் பதிலான இடத்தைப் பெறக் கூடும். கவிதை அறிவை, ஒரு வகையான, அறிவை (A kind of knowledge) வழங்குகிறது; எனவே அது அறிவின் ஒரு வடிவ (A form of knowledge) மாகின்றது. கலை, உண்மை யைப் பற்றிய கண்டுபிடிப்பு அல்லது உண்மைக்குள் ஆழ்ந்த பார்வை எனும் கருத்து ஒரு பாலாக, அது உண்மையின் பிரச் சாரமே எனவும், எழுதுபவன் உண்மையின் கண்டுபிடிப்பாள னாகவன்றி அதன் விநியோகிப்பைத் தூண்டுபவனாக அமை கின்றான் எனவும், பிற கருத்துகளும் உள. பொறுப்புணர்ச்சி யுடைய எல்லா கலைப் படைப்பாளியும் பிரச்சாரம் செய்வோ ராகவே அமைகின்றனர் என்பர். பிரச்சாரம் என்பது, வாழ்வு பற்றியத் தனது எண்ணங்களைக் கற்போர் பகிர்ந்து பெறும் வண்ணம் பாதிப்பு ஏற்படுத்த, படைப்போன் முழுவுணர்வுடனும் அன்றியும் கொள்ளும் முயற்சியாகும்.

இலக்கியத்தின் செயற்பாடு, படைப்போனுக்கும், கற்போ னுக்கும் உணர்வு வடிகாலாக அமைதலே எனும் எண்ணம் பரவலாகக் காணப்படுகின்றது. அதற்கு மாறாக, உணர்வழுத்

தத்தை. நீக்கவன்றி, உணர்ச்சியைத் தூண்டுவதே அதன் வேலை எனவும் கருதுதல் உண்டு. சில இலக்கியங்கள் முன் வகையிலும், சில பின் வகையிலும் அமையலாம்; அல்லது பெறுவோரின் மனவியல்புக்கேற்ப, இருவகையும் கணிக்கப்படலாம்.

அறிதல், தொழிற்படுதல் என்ற இரண்டிற்கும் இடைப் பட்டதாக முருகியல் இன்பப் பயன்பாடு அமைகின்றது. இலக்கியச் செயற்பாட்டின் இம் முந்நிலைகளில் முருகியல் பயன் பற்றிய விரிந்த எண்ணங்கள் உள. செயற்பட வேண்டாத நோக்கம், தூய இலக்கியநிலை, அக்கறையில்லாது அனுபவித்தல் என்பன இலக்கியத்தைப் பெறுவோனிடம் அமைகின்றன என்பர். முருகியல் அனுபவம் எண்ணியெண்ணிச் சுவைத்தலாக அமைகின்றது. முருகியல் தகுதி பற்றியே ஒரு இலக்கியத்தில் மீண்டும் மீண்டும் அணுகும்போது புதுமைகள், புது விளக்கங்கள், அழகுகள் காணமுடிகின்றது. ஒரே மனிதனுக்கன்றியும், ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு கலைஞர் கூட்டத்திற்கும் இது மெல்லக் கிடைக்கின்றது. இந்நிலையில், முருகியல் தகுதி, அப்படைப்பில் இருக்கிறதா, படிப்போனிடம் இருக்கிறதா அன்றி படைப்பும் படைப்போனும் தொடர்புறும் நிலையில் இருக்கிறதா என்பதும் நினைக்கப்படுகின்றது. இலக்கியத்தின் முருகியல் நிலை பற்றி மிகுதியாக நினைத்தாலும் அதற்கென ஒரு சமுதாயப் பயன்பாடு இருக்கிறதென்பது மறுக்க முடியாததாகும்.

வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற எதுவும், மனித வாழ்க்கை உலகம் இருக்கும் வரைப் பயன்படக் கூடியதே எனலாம். நிலையான மனித உணர்வுகள், உண்மைகள், காலந்தோறும் காணப்படும் செய்திகள் என்பனவற்றின் நீங்கா ஏடுகளாக அமைகின்றன. இயக்க இலக்கியமாக எழுந்து, அந்நோக்க நிறைவேறுதலாக இயக்கம் தோற்றுவித்து உடன் காலத்துப் பயன் மிகக் கொண்டவை, பிற்காலத்து இயக்கப் பயனின்றி இலக்கியப் பயனுடன் அமைகின்றன. இந்நிலையில், இலக்கியக் கொள்கை பற்றிய கல்வியியல் நோக்கத்தைவிட, பயனுக்கு மிகுதியான இடம் அளிக்கப்படல் ஏற்புடையது எனலாம்.

புறப்பொருள் இலக்கியத்தின் நோக்கமும் பயனும்

இலக்கியத்தின் நோக்கமும் பயனும் அறிதற்கெளியன வல்ல. பன்முகமும் பல பரிணாமமும் உடையன; காண்போர்க்கேற்ப பல்நிலை தோற்றுவன; தேவைக்கும், கருத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப பயன் வேறுபாடு கொள்ளக் கூடியன;

படைப்போனின் நோக்கம் இலக்கியத்தில் விளங்கியது என்றா லும், நடப்பில் நிறைவேறியதா என்பது ஐயத்திற்கிடமின்றித் தெளிவுபடாமலிருக்கக் கூடும். உண்மையான நோக்கம் எது, உள்நோக்கு வேறு உளதா போன்றனவும் வெளிப்படாது மயக்கம் தரலாம்.

நோக்கமும் பயனும் பற்றிய கல்வி தனிநூல் வாரியாக அமையக் கூடும்; பொருள் வாரியாக அமைலாம்; இலக்கிய வகை வாரியாகவும் அமையலாம். அல்லது ஒரு குறிப்பிட்ட கால (சூழல்) இலக்கியங்கள், ஓராசிரியனின் படைப்புகள், தனித்துச் சுட்டத் தக்க ஓரியல்பின் இலக்கியங்கள் (சான்று; சமய இலக் கியங்கள்) என்பது போன்றும் களன் அமைத்துக் காணப்படலாம். எனினும் ஒவ்வொரு களவிலும், ஒரு அல்லது ஒரே நோக்கம் அமையும் எனவோ ஒரே பயன் விளைந்தது எனவோ கருதுதல் முடியாது,

பொருளடிப்படையில் பகுத்துக் கொண்டு காணும்போதும் சிக்கல் ஏற்படலாம். பொருள் ஒன்றாக விருப்பினும் பொருட் கூறுகள் பலப்பலவாகலாம்; ஒரே பொருட் கூறும் பல்விதமாகத் தரப்படக் கூடும்; ஒரு பொருள்—பொருட்கூறு பல நோக்கத்திற் காகக் கையாளப்படலாம். ஒரே நோக்கம் பல பொருளில் வெளிப்பட வாய்ப்பமையலாம் என்பதால், குறிப்பிட்ட ஒரு பொருளையும் ஒரு நோக்கத்தையும் தொடர்புபடுத்திக் கொண்டே செல்ல முடியும் என்பதில்லை. அதுபோலவே, ஒரே பொருளால் ஒன்று அல்லது பல பயன் அமையலாம்; பயன் எதிர்பார்க்கப்பட்டபோதும் ஏற்படாது—நிறை—வேறாது அமைந்திருக்கலாம். பொது நோக்கம், பொதுப் பயன் என ஓரளவு பொதுமையுடன் காண்பதுடன், சிறப்பு நிலையும் கருதப்பட வேண்டியதாகும்.

புறப்பொருள்

புறப்பொருளின்,புறப்பொருள் இலக்கியங்களின் நோக்கமும் பயனும் பற்றிச் சிந்திக்கப் புகும்-பொழுதும் பல எண்ணங்கள் எழுகின்றன. புறப்பொருளின் நோக்கம், புறப்பொருள் இலக்கி யத்தின் நோக்கம் என வேறுபடுத்திக் கருத வேண்டுமா? இலக்கி யத்திற்குக் கூறும் பொதுவான நோக்கங்களும் பயனும், புறத் திற்கும் ஏற்புடையனவா? அன்றி புறத்திற்கே உரிய சிறப்பான நோக்கம், பயன் எவை? புறம்பாடப்பட்ட காலத்தின் நோக்க மும் பயனும் என்ன? இடைக்காலத்தில், தற்காலத்தில்

அவற்றைக் கருதிக் கொள்ளும் நிலை யாது? அதாவது, தொகுக் கப்பட்ட காலத்தின் நோக்கமும், உரையாசிரியர்கள் காலத்தில் பெற்ற பயன், அச்சில் வெளிவருமுன் உள்ள பயன் நிலை, அச்சேறிப் பரப்படைந்தபின் உள்ள நிலை போன்றன. நோக்கமும் பயனும் காணும் வாய்ப்பாகத் திணையடிப்படையே கொள்வதா? துறையடிப்படையையா? புறம்—புறப்புறம்—அகப் புறம் என்பதையா? அல்லது பொருட்கூறு போன்ற வேறே தேனும் அடிப்படையையா? மன்னனைப் பாடிய பாடலுக்கும் (வேத்தியல் ?), மன்னனல்லாதோரைப் பாடிய பாடலுக்கும் (பொதுவியல்?) வெவ்வேறு நிலையில்—நோக்கமும் பயனும் அமையக் கூடுமா? புலவர் பாடும்போதும், மன்னன் புலவனாகும் போதும், பெண், புலவராகும்போதும், நோக்கமும் பயனும் வேறுபடக் கூடுமா? ஒவ்வொரு காலத்தின் புறப்பாடலுக்கும் வெவ்வேறு நோக்கம், பயன் அமைதல் இயல்பா? உதிரிச் செய் யுட்களாக தனிப்பாடலாக அமையும்போதும், நெடும் பாடலாக அமையும்போதும், தொடர்ப்பாடலாக அமையும்போதும், தொகை நிலையிலும் வெவ்வேறு நோக்கமும் பயனும் காணப் படலாமா?

புறநானூறும் பதிற்றுப்பத்தும்

சங்கப் புறப் பாடல்களில், முழுப் புறப்பாடல் நூல்களாக அமைவன பதிற்றுப்பத்தும் புறநானூறும்.[22] இவை புறம் என்ற பொருள்நிலையில் ஒப்புமை காட்டினும், தொகை நிலையால் ஒப்புமை கொள்ளினும், தோன்றிய நோக்கால் சிறிது வேறு படுவன. ஒரு தலைவன் மீது பத்துப்பாடல் பாடுதல் என்பதும், அனைத்தும் ஓரின மன்னரைப் போற்றுதல் என்பதும் பதிற்றுப் பத்தின் நிலை. இதனால் ஒரு திட்டமிட்ட கட்டமைப்பு புலப் படுகின்றது; அன்றியும் நான்காம் பத்தின் அந்தாதி நிலை, பாடல்கள் முறைமாறலாகாது எனும் எச்சரிக்கை நோக்கைப் பயனாகக் கொண்டது எனலாம்.

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றின் நோக்கமும் பயனும் காண, பாடல்களுடன் பிறவும் உதவுகின்றன. புறநானூற்றின் திணை—துறை குறிப்புகளும், கொளுவும், பதிற் றுப்பத்தின் பதிகங்களும், துறைக் குறிப்புகளும் இந்நிலையில் குறிப்பிடத் தக்கன. இவை பாடலாசிரியரால் அன்றித் தொகுக் கப்பட்டோராலும், அல்லது தொடர்ந்த காலத்தோராலும் குறித்து வைகக்கப்பட்டிருக்கலாம். பாடலின் சூழலை, தன்மையை. தலைமையை விளக்கப் புக்க இவற்றிற்கும்

பாடலுக்குமிடையே சிறிது காலக் கழிவு தென்படுதல் உண்டு. பரிசில் கடாநிலையாக அமையும் பாடலும், கொளுவில் மன்னன் இறப்புச் சூழலை அடிப்படையாகக் கொள்வது இவ் எண்ணத்தை தருகின்றது.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் பரிசில்
நீட்டித்தானை ஆவூர் மூலங்கிழார் பாடியது *(196)*

சோழன் குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன் பரிசில்
நீட்டித்தானைக் கோனாட்டு எறிச்சிலூர்மாடலன் மதுரை குமரனார் பாடியது *(197)*

பாடல் தலைவன் மட்டுமன்றிப் பாடலாசிரியனும் இவ் இறப்புக் சூழலுடன் தரப்படல் இவ் எண்ணத்தை வலியுறுத்தும்.

சிறுகுடிகிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய
கிள்ளி வளவன் பாடியது *(173)*

கடலுண் மாய்ந்த இளம் பெரு வழுதி பாட்டு *(182)*

வரலாறு, அல்லது என்ன நிகழ்ந்தது என்பது இத்துணைத் தெளிவாகத் தெரிவதனால், ஒரு மனிதனின் வாழ்க்கை மறக்கப் படுமுன்பே, அதாவது குறைந்த கால இடைவெளிக்குள்ளேயே கொளு எழுதப்பட்டது எனலாம். இக் கொளு, அல்லது பதிகத் தின் நோக்கம் தெளிவு வழங்குதல், மயக்கம் தவிர்த்தல், தேவை யான விளக்கம் கூறல் என்பதாகும். பாடலைச் சரியாகப் புரிந்து கொள்ளும் பயன் இதனால் ஏற்படுகின்றது. அன்றியும் தலை வனையும் புலவரையும் இன்னார் எனச் சுட்டுதல் (Identify) இருண்மையிலிருந்து (Obscurity) பாடலை வெளிச்சத்துக்குக் கொணர்தல் என்பனவுமாகி, ஓரளவேனும் தெளிவான வரலாற்றுப் பயன் கொள்கின்றது. பதிற்றுப்பத்தின் பதிகங்கள் தரும் பாடற்பெயர்கள், அந்தாதியால் முறை மாறாச் செவ்வி கொண்ட நாலாம் பத்து மட்டுமன்றி,பிற பத்தும் அவ்வாறமைய உதவுகின்றன.[23]

புறப்பொருளின் பெரும்பான்மை நோக்கம், போர்ச்-செய்தி களைக் கூறுதல் எனவும், தலைவன் புகழைப் பாடாணாகத்

தருதல் எனவும், தொல்காப்பியப் புறத்திணையியல் வழி விளங்கும். ஐந்து திணைகள் போரின் பல் நிலைகளுக்கும் ஒரு திணை நிலையாமைக்கும், ஒன்று பாடாணுக்கும் அளிக்கப்பட்ட இந் நிலையினின்று சிறிது வேறுபட்டு, புறப்பொருள் வெண்பா மாலை எட்டு போர்த்திணைகளும், பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணைகளும், கொண்டு, நோக்க வேறுபாடு காட்டுகின்றது. எனினும் புகழ் பேசுதல் எனும் பொதுமைப் பயன் பொருந்துகின்றது.

புறநானூறும், பதிற்றுப் பத்தும் தரும் புறப் பாடல்களைக் காணின் நோக்க வேறுபாடு புலப்படும். பதிற்றுப்பத்து, புகழை-சிறப்பை மொழிதல் என்ற ஒரு நோக்குடன் செல்ல, புறநானூறு 'கொடார் பழித்தலை'யும் கொள்கிறது. முன்னது (சேர) மன்னரையே புகழும் நோக்குடனமையை, பின்னது மன்னரை மட்டுமன்றிப் பிறரையும் குறித்து அமைகின்றது. இழந்துபோன இரு பாடலும் கடவுள் வாழ்த்தும் தவிர, புறநானூற்றின் 397 பாடலுள், 138 பாடல் மன்னரையும், 141 பாடல் குறுநிலத் தலைவரையும் பாட, பிற 118 பாடலும் மன்னரைப் பாடாமை சுட்டத் தக்கது.[24] போரைப் பாடுதலும் மன்னனைப் பாடுதலும் மட்டுமே புறப்பொருளின் நோக்கமல்ல என்பது இதனால் புலனாகும். அன்றியும், 'இன்னாரை இன்னார் பாடியது' எனும் புறத்தின் பொதுநிலை இம் மூன்றாம் வகையில் பொருந்தாது; இன்னொருவனைப் பாடுவதோ, புகழ்வதோ நோக்கமன்றி, தன்னை—தன்னுணர்வை தன் நிலையை, தற்சார்புடையன வற்றை, நிகழ்வை விளக்கு முகமாக இவை எழுந்துள்ளன போலும். இதனால் பரிசில் எனும் பொருட்பயனோ, தகுதி பெறுதல் (Recognition) போன்ற பிறவோ கருதப்பட்டில என லாம். வஞ்சினக் காஞ்சி ((71-73), நீண்மொழி (287), நெடு மொழி (298), முதுமொழிக் காஞ்சி (74), பொருண்மொழிக் காஞ்சி (75, 182, 183, 185-193, 195, 214), பெருங் காஞ்சி (194, 357, 365), முதுபாலை (254-256), பார்ப்பன வாகை (305), வல்லாண் முல்லை (313, 314, 316,325), ஏறாண் முல்லை (86, 296) உண்டாட்டு (257, 258, 262, 269, 297), தானைநிலை (276), மகட்பாற் காஞ்சி (333-354, 356). மறக் காஞ்சி (357), ஆனந்தப் பையுள் (246), தாபதநிலை (248, 249, 250), நூழிலாட்டு (309, 310), தாபதவாகை (251,252) மனையறம் துறவறம் (358). களிற்றுடனிலை (307), செரு மலைதல் அல்லது பிள்ளைப் பெயர்ச்சி (259), செருவிடை வீழ்தல் (271, 272), குதிரை மறம் (273, 299, 302-304),

எருமை மறம் (274, 275), உவகைக் கலுழ்ச்சி (277, 278, 295), மூதின் முல்லை (279, 288, 300, 308, 312, 326. 335), பேய்க் காஞ்சி அல்லது தொடாக் காஞ்சி (281), பாண்பாட்டு (260, 283, 284, 311), சால்பு முல்லை (285), வேத்தியல் (286, 91), குடிநிலை உரைத்தல் (290), பெருஞ் சோற்றுநிலை (292), பூக்கோட் காஞ்சி (293), தானைமறம் (294, 300, 301) போன்ற துறைப் பாடல் பல இதனை உணர்த்தும்.[25]

புறப்பாடல்கள் பல பரிசில் நோக்குடையன; பரிசில், பரிசில் கடாநிலை, பரிசில் விடை, பரிசிற்றுறை, பரிசிற்றுறைப் பாடாண் பாட்டு, கடைநிலை, கடைநிலைவிடை, (ஆற்றுப்படை) போன்ற துறைகளே இதனை விளக்கப் போதுமானது.[26] பயன் பெறுவதே நோக்கமாக இவை பாடப்படுகின்றன எனலாம். எனினும் எல்லாப் பாடலும் இந்நோக்கினவல்ல என்பதும் தெளிவாம். புறப் பாடல்கள் அல்லது வீரப் பாடல்கள் புகழ் நிலையின, கையறு நிலையின என இருவகைப்படும் என்பர்; இவற்றுள் புகழ்நிலையின, தலைவனின் முன்னிலையில், அவனைச் சிறப்பிக்கும் நோக்கில் எழுகின்றன.[27] இங்குப் பரிசிலுக்கு வாய்ப்புண்டு. ஆயின் கையறு நிலையில் இத்தகு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இறந்தவனின் பெருமையும், தன்னிழப்பும் கூறும் நோக்கமும், உணர்வு வடிகாலாகும் பயனுமே அமைவதாகத் தென்படுகின்றது.

அன்றியும் மன்னனைப் பற்றிய புலவனின் கையறுநிலையின்றிப் பிற கையறு நிலைகளும் அமைந்து இவ் எண்ணத்தை வலியுறுத்துகின்றன. இதுபற்றிப் போலும் கையறு நிலைத் துறை பொதுவியலில் மட்டுமின்றிப் பிற திணையிலும் வருகின்றது. தொல்காப்பியம் காஞ்சித் திணையில் கையறுநிலைத் துறையை இணைக்க, புறநானூறு, கரந்தை (260, 261, 263-265, 270)யிலும் வழங்குகின்றது. மன்னன் அல்லது புரவலனிழப்பு—இறப்பு மட்டுமன்றி வேறு பல இழப்பும், மனத் துன்பமும் கையாறுக்குக் காரணமாகலாம் என்பதனை, சேரமான் பெருஞ்சேரலாதன் புறப்புண் நாணி வடக்கிருந்தபோது கழாஅத் தலையார் கையற்றுரைத்தது (65), தந்தையை இழந்த பாரி மகளிர் கூற்று (112), கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த சூழலின் பல பாடல்கள் (217-223), வடக்கிருந்த கபிலரின் பாடல் (236), இளமை நீங்கி முதுமைவந்துற்றுழி, தொடித் தலை விழுத்தண்டினார் பாடியது (243), மனைவியை இழந்த மன்னன் பாடியது (245), நடுகல் நிலையைக் கூறியது (260, 261, 263-65), போர்க்களத்துப் பட்ட சிறுவனைக் கண்டோர்,

தாய்க்குக் கூறியது (270) என்பன காட்டுகின்றன. கழிந்ததற்கு இரங்கல் எனவும் மீட்டுப் பெறுதற்கரிய பேரிழப்பு கையாறுக்குத் களனளிக்கின்றது எனவும், இழப்பைக் கூறலின் நோக்குடன் இவை அமைகின்றன.

மெய்க் கீர்த்திகள் போன்று, புறப்பாடல்கள் பல, மன்னன் செயலைப் புகழ்ந்து பேசும் நோக்குடையன.[28] கையறு நிலை எனும் சூழற் சார்புடைய 'உத்தி' வாயிலாக இது புலப்படல் போலவே பிற உத்தி நிலைகளும் கொள்ளலாம். ஆற்றுப்படை அவற்றுளொன்று; ஆற்றுப்படுத்தல் என்பது நோக்கம் எனக் கூறினால் அது முழுவுண்மையாகாது; புகழ்தல் எனும் உள் நோக்குத் தெளிவாக வெளிப்படுகின்றது. பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படையும் விறலியாற்றுப்படையும் மட்டும் காணப் பட, புலவராற்றுப் படையும் புறநானூற்றில் காணப்படு கின்றது[29] அன்னச் சேவலைக் கோப்பெருஞ் சோழனிடம் போகும்படிக் கூறும் பிசிராந்தையாரின் பாடலும் (67), இயன் மொழி வாழ்த்து நோக்கம் கொண்ட உத்திநிலை காட்டுகின்றது. முன்னிலைப் பரவலில் இத்தகு உத்திநிலை வாராமையும், படர்க்கைப் பரவலில் வருதலும் சுட்டத் தக்கது. ஞாயிற்றை முன்னிலைப்படுத்திப் பூவை நிலையாக அமையும் கபிலர் பாட லும் (8) இத்தகையது.

பரிசில் சூழல் பாடல்களும் இயன்மொழி போன்று புகழ்தல் நோக்கினவே, இவற்றில், காரணமும் காரியமுமாகப் புகழும் நோக்கும் பரிசில் பயனும் இணைகின்றன போலும். பொருட்பயனே நோக்கம் எனவும் புகழ்தல் உத்தி எனவும் கருது தற்கும் வாய்ப்புண்டு. துறையும், கொளுவுமட்டுமன்றிப் பாடலடிகளும் புலவனின் பரிசில் விருப்பை, வேண்டுதலை, எதிர்பார்ப்பைக் காட்டுகின்றன. இவை வெளிப்பட்டும் அன்றிக் குறிப்பாகவும் தென்படுவதுண்டு. பெரும்பாலும், பதிற்றுப் பத்தின் பாடல்கள், 'உன்னைக் காண வந்தேன்' என்பதையே புலவனின் வெளிப்படை நோக்கமாகக் காட்டுகின்றன. தன் வருகையின் நோக்கம் எது எனக் கூறப் பாடலைப் பயன்படுத்து தல் இது.

ஈங்குக் காணுகு வந்தனென் யானே (88,39)

இரந்தோர் வாழ நல்கி, இரப்போர்க்கு
ஈதல் தண்டா மா சிதறு இருக்கை
கண்டனென் செல்கு வந்தனென் (76. 7-9)

நின், நாள் மகிழ் இருக்கை இனிது கண்டிகுமே (65.13)

வள்ளியை என்றலின் காண்கு வந்திசினே *(54-1)*

வசைஇல் நெடுந்தகை காண்கு வந்திசினே *(41-16)*

நின், வளம் வீங்கு பெருக்கம் இனிது கண்டிகுமே
(24-17)

எனினும், 'வளம்', 'வள்ளியை', 'ஈதல்' போன்றன குறிப்பாகப் பரிசில் வேட்கையைப் புலப்படுத்தலும் தெரிகின்றது. இது உள் நோக்குப் போலும். பதிகங்கள் பதிற்றுப் பத்துப் புலவர் பெற்ற பரிசில்களை விரித்தலும் இங்கு இணைத்து நினைவு கூரத் தக்கது. வெளிப்படையாகப் பரிசில் நோக்கம் தரப்படல் புறநானூற்றின்கண் வெளிப்படும். போர்க்களச் சூழலில் பரிசில் வேண்டலை மறக்களவழி, மறக்கள வேள்வி காட்டுகின்றன.

பாடி வந்திசின் பெரும......
வேழ முகவை நல்குமதி...... *(369-22-27)*

பாடி வந்தது எல்லாம்......நின்
அரவு உறழ் ஆரம் முகக்குவம் எளவே *(368-16-18)*

வரை மருள் முகவைக்கு வந்தனென் பெரும *(370-21)*

இயன்மொழி, கடைநிலை போன்ற பிற துறைகளிலும் இப் பாங்கு உண்டு.

வீறு சால் நன் கலம் நல்குமதி பெரும *(389-15)*

அகன்றுமடி கலிங்கம் உடீஇ, செல்வமும்
கேடு இன்று நல்குமதி பெரும...... *(398-18-19)*

பொருட்பயன் மட்டுமே புலவன் கருதினானிலன் என்பதைப் பேகன் கண்ணகி மீண்டும் இணைந்து வாழ்தலையே பரிசிலாக விரும்பிய புலவர் கூற்றுப் புலப்படுத்தும்.

இஃது யாம் இரத்த பரிசில் அஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே *(145-8-10)*

பரிசில் நல்குவை ஆயின் குரிசில்......
வண்பரி நெடுந்தேர் பூண்க நின்மாவே *(146-5-11)*

......அரிவை......கூந்தல்......

புதுமலர் கஞல இன்று பெயரின்

அதுமன் எம் பரிசில் ஆவியர் கோவே (147-5-9)

அன்றியும், பரிசிலாகப் பொன்னும், பொருளும். நாடும், குன்றும் பெற்ற பயனுடன் 'வீடுபேறும்' பெற்ற நிலையமைந் ததைப் பதிற்றுப்பத்து காட்டும்.

'பாடிப் பெற்ற பரிசில்' 'நீர் வேண்டியது கொண்மின், என'

'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்' என,

''பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு, ஒன்பது பெரு வேள்வி

வேட்பிக்க, பத்தாம் பெரு வேள்வியில் பார்ப்பானையும்

பார்ப்பனியையும் காணாராயினார்''

(மூன்றாம் பத்து, பதிகம்)

பாடலின் உடனடிப் பயனாக வன்றி, தொடர்ந்த செயற் பாட்டுப் பயனாக இதனைக் கருதுதல் கூடும்.

புகழ்தலால் பரிசில் பயன் என்பது ஏற்புடைத்தாயினும் பல பாடல்கள் இகழ்தலும், இடித்துரைத்தலும், தடுத்தலும், அறி வுறுத்தலுமாக அமைந்து, 'பொருளு'க்கு அப்பாற்பட்ட நோக்கமும் பயனும் கொள்கின்றன. மன்னன் புலவரை விரும் பியதன் நோக்கம் செவிகுளிரப் புகழப்படல் மட்டுமன்றி, செவி கைப்ப, அறமருந்தாகச் செவியுறை பெறுதலுமாம் என்பது புலப்படும். மன்னன் அறிவுடைப் புலவரை இப்பாங்கில் விரும்பிப் பொருந்தியதை தமிழ் போன்று உலக எண்ணமும் காட்டும்[30].

நாற்பாவுக்கும் உரிய 'வாழ்த்தியல்' பொருண்மையைத் தொல்காப்பியச் செய்யுளியல் சுட்டும்போது, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து என்பனவற்றுடன் செவி யறிவுறா உவையும் தரும்; இளம்பூரணர் 'செவியுறை வாழ்த்து' (பொருள். 462) என இதனையும் வாழ்த்தாக்குவதால், கடிந்து கூறும்போது, நோக்கம் அல்லது பயன், வாழத்துதலாக

அமைகின்றது எனலாம். செவியறிவுறூஉப் பாடல் சில, வாழ்த்தியல் எனவும் துறைக் குறிப்புப் பெறுகின்றன.[31] மன்னன் மனம் மாற வேண்டுமெனும் எதிர்பார்ப்பு, செவ்வி-தகுதி யறிதல் வேண்டும் என்னும் தொலைநோக்கு, பரிசில் மறுக்கும் போதும் கூட அமைகின்றது எனலாம். ஏற்கெனவே சுட்டியது போன்று பதிற்றுப்பத்து, புறநானூற்றிலிருந்து மாறுபட்டு, இத்தகு பழித்தல்-அறிவுரை கூறல் சூழலை, நோக்காகவோ பயனாகவோ துறை நிலையில் கொண்டிலது[32].

புறநானூற்றின் செவியறிவுறூஉப் பாடல்கள், போற்றார்ப் பொறுத்தல், இரவலரைப் புரத்தல், குழந்தைபோல அனைவரையும் ஓம்புதல், நடுநிலைமை கைக்கொள்ளுதல், குடிபுறந்தருதல், இன்சொல்லனாதல், அறநெறியில் அரசாளுதல், நெறி அறிந்து வரி விதித்தல் போன்ற அறிவுரைகளை அறவுரைகளை மன்னனுக்கு அளிக்கும் நோக்கின. அரசனை நன்னெறிப்படுத்தும் நோக்கினவாக, நல்வழியில் செயற்படுத்தும் நோக்கமுடையனவாக வேறு துறையின் பாடல்களும் அமைகின்றன. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் முற்றியிருந்த போது, அவன் செயல் 'நாணுத்தகவுடைத்து' (36) என ஆலத்தூர் கிழார் எடுத்துக் காட்டுகின்றார் (வஞ்சி - துணைவஞ்சி), சோழன் நலங்கிள்ளி ஆவூரும், உறையூரும் முற்றியிருக்க, அவன் குடியினனான நெடுங்கிள்ளி அடைத்திருக்கக் கோவூர் கிழார் பாடியன (44-வாகை-அரசவாகை 45), முறையே, 'நாணுத்தகவுடைத்து' என இடித்துக் கூறியும், போர் நிறுத்தக் குறிப்பாக வேண்டியும் அமைகின்றன. இவரே, மன்னன், பகைவனின் சிறாரைக் கொல்ல நினைத்த போதும், அயல்நாட்டுப் புலவனை ஒற்றனைக் கொல்ல முயன்றபோதும் தடுத்து, பாடி உய்விக்கின்றார் (46-47), அதியமானின் தூதாக தொண்டைமானுழைச் சென்ற ஔவையின் பாடல் (95), போரைத் தடுக்கும் பயன் பெற்றிருக்கக் கூடும் (வாள் மங்கலம்). கோப்பெருஞ்சோழன், தன்-மக்கள் மீதே பகைகொண்டு போருக்குச் சென்ற போது பிசிராந்தையார் இடைப்புக்குப் பயனில் போரைத் தடுக்கின்றார் (213). இவற்றை-நோக்கும்போது, நல்லரசியலில் புலவனின் இடமும் இன்றியமையாமையும் புலப்படுகின்றது. புறப்பாடல்களின் அரசியல் நோக்கமும் பயனுமாக இவற்றிலிருந்து, தூது, சமாதான உடன்படிக்கை, போர்நிறுத்தம், தீயவை செய்தலிலிருந்து அரசனைத் தடுத்தல் என்பனவற்றைச் சுட்டலாம்.

''தம்மைப் புரக்கும் புரவலராயினும், தீது மொழிந்த விடத்தும் தீமை செய்த விடத்தும் சீறித் திருத்தும் இயல்பையும், பயனின்றி மேற்கொள்ளும் போர்களைத் தடுக்கத் தம்முயிரையும் பொருட்படுத்தாது முயலும் பெருந்தன்மையையும், தாம் செய்யாத தவற்றிற்குப் பலியிடப்படும்நிலையில் உள்ள சிறுவரையும், புலவரையும் காப்பாற்ற அரசனுடன் வாதிடும் துணிவையும் எண்ணிப் பார்க்குமிடத்துச் சங்க காலப் புலவர்கள் அறிவுறுத்துவதை அறமுரைப்பதைத் தம் கடமையாகக் கருதினர் என அறிகிறோம். எனவே, ''கலை கலைக்காகவே'' என்ற கொள்கை சங்க இலக்கியக் கொள்கையாகக் காணப்படவில்லை, கவிதை மகிழ்ச்சியூட்டுவதோடு அமையாது மக்களை நன்னெறிப்படுத்தவும் வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துவதாக இப்பாடல்களிலிருந்து அறிகிறோம்'' (தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1, ப. 53)

எனும் கருத்து பொருத்தம் கொள்கின்றது.

ஒரு குறிப்பிட்ட சூழலில் புலவன் தலையிட்டதால் பெற்ற பயன் என்ற நிலையில், உடன்காலப் பயன் நிலை அல்லது தற்காலிகப் பயன் நிலை இவற்றில் பொருந்துகின்றது எனலாம். அன்றிப் பல பாடல்கள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாக, பொது உண்மைகளை உரைப்பனவாக நிலைத்த அறங்களைக் கூறும் நோக்கினவாக அமைகின்றன; இவற்றையும் அறவுரைகள், வாழ்வியல் தத்துவம் (Philosophy) கூறும் பாடல்கள் எனலாம். இவற்றில் அறிவுப்பயன் கருதப்படலாம்.[33] முதுமொழிக்காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி போன்ற துறைகளும் பிறவும் இத்தகு கருத்துக்கு இடனளிக்கின்றன. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (18); புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி எய்துப (27); மாய்தலும் பிறத்தலும் உண்மை (27); எண் பேரெச்சம் (28); செல்வம், அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும் (28); செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் (34); தம்மைப் பிழைத்தோர்க்குப் பொறுக்கும் செம்மல் (43); தலைநாள் போன்ற விருப்பினராக இருத்தல் (101); தமர் தற் தப்பின் அது நோன்றல்லலும் பிறர் கையறவுதான் நாணுதலும் (157); எல்லோர்க்கும் கொடுமதி (163); மன்னா உலகத்து மன்னுதல்

குறித்தோர் தம் புகழ்நிறீஇத் தாம் மாய்ந்தனரே (165); புகழ் எனின் உயிரும்கொடுக்குவர்(182): கற்றல் நன்றே (183); மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம் (186); எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லது நிலம் (187); மக்கள் இல்லோர்க்கு வாழ்நாள் பயனற்றது (188); செல்வத்துப் பயனே ஈதல் (189); உண்பது நாழி உடுப்பவை இரண்டு (189); புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளம் (190); ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் (191); யாதும் ஊரே யாவரும் கேளிர் (192); நன்னெறியில் ஒழுகி உய்ய உலகவாழ்வு தடை (193); இன்னாது அம்ம இவ்வுலகம் (194); நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் (195); ஈ என இரத்தல் இழிந்தன்று... கொள்ளேன் என்றல் உயர்ந்தன்று (204); ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே... களிறு எறிந்து, பெயர்தல் காளைக்குக் கடனே (312); மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் (314) எனப் புறநானூறு தருவது பல. மன்னனைப் பாடியவிடத்தும், மன்னன் புலவனாகப் பாடியவிடத்தும் இவை மிக்கு அமைந்தன. முன் சுட்டிய, 'இன்னாரை இன்னார் பாடியது' எனும் அமைப்பு இல்லாப் பாடல் பகுதியில் இத்தகு பொது உண்மைகள் கூறும் நோக்கம் பெரும்பாலும் இணைந்திலது. பதிற்றுப்பத்தும் பெரும் பான்மை இந்நிலையினதாயினும், ஒரு சில குறிப்புகள் கிடைக் கின்றன. நண்ணார் தேஎத்தும் பொய்ப்பு அறியலனே(20);

சினனே காமம் கழி கண்ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும் (22)

பிறர்க்கு என வாழ்த்தி (39)

வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு (74)

போன்றன இந்நிலையில் குறிப்பிடத் தக்கன. உணர்வுகளை, விருப்பங்களை, அனுபவங்களை வெளியிடுவதுடன், உயர்ந்த எண்ணங்களைக் கூறுவதும் புலமையோர் நோக்கமாக இருந்ததை இவையுணர்த்தும். அன்றியும் மன்னனை வாழ்த்தும் சூழலில், இடையில் உண்மைகளைப் பெய்து அறிவூட்டுவதால் உட்பொதிந்து தரும் பாங்கு, பல பாடலில் பொருந்து கின்றது; புகழ்தலும் அறிவுறுத்தலும் இங்கு இணை நோக்கா கின்றன எனலாம்.

புகழ்தல் நோக்கம், வீரத்தைப் புகழ்தல் எனவும் கொடையைப் புகழ்தல் எனவும் இருவகைப்பட்டு அமைகின்றது, பரிசில் துணைநோக்கமாகி, புலவனுக்குப் பரிசில் பயன் விளை யினும், கேட்போனான மன்னனுக்கு மகிழ்வு எனும் பயன் இயைகின்றது; உடன் கேட்போருக்கும்-அவை-தம் தலைவனின் சிறப்பு பாராட்டப்படலால் இன்ப நிறைவு அளித்திருக்கக் கூடும். அன்றியும், 'நும்கோயாரென வினவின்' (212) எனவும் 'இவன் யார் என்குவை ஆயின்' (13) எனவும் கேள்வி—பதிலாக அமையும் அறிமுகச் சூழல், தனிப்பயன் காட்டுவதும் சுட்டற் குரியது. மேலும் புலவனால் பாராட்டப்படல், மன்னனுக்குப் பெருமை தருவது எனும் அக்காலக் கோட்பாட்டை இன்றும் உணர்த்தும் பயன் இப்பாடல்கள் பெறுகின்றன.

புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்
.... புலவர்
பாடுதுறை முற்றிய கொற்றவேந்தே (21)

உரையும் பாட்டும் உடையோர் சிலரே
....
புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப, தம் செய்வினை முடித்து (27)

எம்கோன் வளவன் வாழ்க என்றுநின்
பீடுகெழு நோன்தாள் பாடேன் ஆயின்
படுபுஅறியலனே பல்கதிர்ச் செல்வன் (34)

புலவன் மட்டுமன்றி, மன்னனும் இதனை உணர்ந்தமையை அவன் வஞ்சினம் வழி உணரலாம்.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை (72)

பண்டைத் தமிழ்ப் பேரரசரின் வாழ்வியலும், அரசியலும், மக்கள் நிலையும் பற்றிய அறிவுக்கு உதவும் பயன் நிலை, புறப் பாடல்களால் இன்றளவும் அமைவதும் குறிப்பிடத் தக்கது.[34]

வீரப்பாடல்கள் ஓர் இடத்துக்கும் காலத்துக்கும் மட்டும் உரியனவாகவன்றி எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் இயல்பாகப் பொருந்தி மனிதனின் உள்ளத் தேவையை நிறைவு செய்கின்றது, எனும் எண்ணம் இங்கு நினைக்கத் தக்கது.[35] பதிற்றுப்பத்திலும் (69/80), புறநானூற்றிலும் (139/394), பெரும்பான்மைப் பாடல்கள் பாடாணாக அமைகின்றன.[36] பாடாண்டினை தவிரப் பிற திணையின் பாடல்கள் பலவும்கூட பாடாண் போன்று தலைவனைப் புகழ்தல் நோக்கின என்பதும் இங்குக் கருதத் தக்கது. எனினும் பதிற்றுப்பத்தின் பாடல்கள், திட்டமிட்ட நோக்குடன் நினைந்து எழுதப்பட்டன போன்ற தோற்றம் அளிக்க, புறநானூற்றின் பாடல்கள் பலவும் பெரும்பான்மை சூழல் தாக்கம் கொண்டு, உடனடி எழுந்த ''ஆசுகவித் தன்மை''யுடைய தனிப் பாடல் நிலையினவாகத் தோன்றுகின்றன (Spontaneous). துன்பமாயினும் இன்பமாயினும் அதனால் தாக்கப்படும்போது—தொடப்படும்போது, உடனடியாக அமையும் மனவெழுச்சியின் மறைத்தலில்லாப் புலப்பாடாக இவை அமைகின்றன. இதனால்தான் போலும் சங்கப் பாடல்கள், ஓர் அறிஞர் அவையின் தேர்வுக்கும் பார்வைக்கும் அளிக்கப்படும் நோக்கத்துடன் படைக்கப்படவில்லை என்பர்.[37] புறநானூற்றின் கொளுக்கள் பல் சூழலை உணர உதவுகின்றன. பாடலின் நோக்கம் சூழற் சார்புடையது எனும் உண்மை இங்குப் புலப்படும். மோசிகீரனார் மன்னன் கவரி வீசப் பாடியது (50), தாமப்பல்கண்ணன் பாடல் (43),

அவனை (அதியமான் நெடுமான் அஞ்சி) அவர் நெல்லிப்பழம் பெற்றுப் பாடியது (ஔவையார்) *(91)*

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது *(163)*

கல்லாகியும் இடம் கொடுத்த கோப்பெருஞ் சோழனை வடக்கிருந்த பொத்தியார் பாடியது *(223)*

போன்று பல, தனிமனிதச் சூழற் சார்பு காட்டுகின்றன. பயன் பெறப்பாடல் என்ற பரிசில் நிலைக்கு மாறாக, பெற்ற பயனை, அல்லது பயன் பெற்ற பின்பு பாடுதல் எனும் நோக்க நிலையும் சூழல் அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கும் இணைகின்றன.

பரிசில் நீட்டித்தவிடத்தும், சிறிது கொடுத்தபோதும், காணாது கொடுத்தபோதும், புலவன் விருப்பை நிறைவேற்றாத சூழலிலும் எழுந்த பல பாடலும் இங்குச் சுட்டத் தக்கன.[38] புலவர் தாம் நினைந்தது எது, நடந்தது எது எனத் தெளிவாகக் கூறும் நோக்கினராக இங்கு அமைகின்றார். இத்தகு சூழலில் புலவன் பயன் பெற்றிலன் எனினும், செய்தி மன்னனைச் சீர்திருத்தும் பயன் பெற்றிருக்கக் கூடும். புலவனின் ஆற்றாமை வெளிப்படும் வண்ணம், இத்தகு ஒரு சூழலில் இரு பாடல் எழுந்திருக்கலாம் என்பதை, 'சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை பரிசில் நீட்டித்தானைப் பெருங்குன்றூர்க் கிழார் பாடியது' (210, 211) காட்டலாம்.

ஒரே சூழலில் பல புலவரும் பாடி புறப்பாடலும் இயக்க நோக்கம் கொண்டதைக் கண்ணகி — பேகன் வாழ்க்கைச் சிக்கல் தொடர்பான பாடல்கள் காட்டுகின்றன (143-147). பெருந்திணை புறத்தில் இடம் பெறும் நிலையும் இது. சூழலுக்கு அழுத்தம் மிகுவிக்கும் நோக்கு இங்குப் பெறப்படுகின்றது. அரசியல் வாழ்வில் மட்டுமன்றி மன்னனின் இல்வாழ்விலும் புலவருக்கிருந்த செல்வாக்கு இங்குப் பயன்படுகின்றது. விளைவு பற்றிய குறிப்புகள் கிடைக்காததால் பயன் நிலை தெளிவுபடாத போதும், கவிதைக்கலை வாழ்க்கைக்குப் பயன்பட்ட பாங்கு பெறப்படுகின்றது. விதவை நிலையும் (248-250) மனைவியை இழந்தமன்னன் மனப்பான்மையும் (245), கணவன் இழப்பால் உயிர் நீக்கத் துணிந்த பெருங்கோப் பெண்டின் கூற்றும் (246) தனிமனித வாழ்வுச் சிக்கல் பாடுபொருளைத் தந்த நோக்கைக் காட்டுகின்றன. பதிற்றுப்பத்தின் பல பாடல்கள், மன்னன் தேவியுடன் இன்புற்று வாழ்க எனும் தனி வாழ்க்கை, நோக்கம் காட்டுகின்றன (16,19,50,52,68,81,88).

தொல்காப்பியம் அகத்திணையில் உட்படுத்திய பெருந்திணை புறத்திற்கு ஆயதைப் பாடல்கள் காட்டி, கொள்கை வேறுபாட்டையும் காலத்தில் நோக்கமாறுபாட்டையும் காட்டுகின்றன. கைக்கிளைத்திணையின் புறநானூற்றுச் செய்யுட்களும் இங்கு இணைத்துக் கருதத் தக்கன. தொல்காப்பியம் அகத்திணையிலும், புறத்திணையின் பாடாணிலும் கைக்கிளையைத் தர, புறநானூறு அதனைப் புறத்திணையாக்கிப் பழிச்சுதல் துறையில், சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளியை, பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியமையைப் புலப்படுத்துகின்றது (83-85). புறத்தில் அகம் கலக்கும் வாய்ப்பு இது பிற்கால முத்தொள்ளாயிரப் பாடல்

போன்றவற்றிற்கு வழிகாட்டிய பயன் நிலை இங்கு அமைந்தது போலும். தற்சார்பினவாக அமையும் பொதுநிலையுடைய புறப்பாடல், இங்குத் தற்சார்பற்ற நிலைபெற்று அகம்போன்ற தன்மை பெறுகின்றது.

மகட்பாற்காஞ்சியும் மகண் மறுத்தலும் பெண் காரணமாகப் போரேற்படுதலைக் காட்டுவதைப் புறத்தில் அகம் எனலாமா என்பது ஐயமே. நிகழும் செயலை விளக்கும் வீரப் பாடல் தன்மை இவற்றில் இணைகின்றது.[39] மகட்பாற் காஞ்சிப் பாடல்கள் (336-56) அகத்தின் பெயர் சுட்டாத் தன்மையும், புலவர் கூற்று, தற்சாற்பற்ற நிலையும் பெற்று அமைதல் சிந்திக்கத் தக்கது. அன்றியும் அகப்பாடலில் உவமை வழியும் பிறவும், நேரடியாகவன்றியும் புறம் இணைய வாய்ப் பளிக்கும் நோக்குப்[40] போன்ற ஒரு நோக்கநிலை இங்கு உண்டாகக் கூடியமையும் சுட்டத் தக்கது. 'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே' ((பொருள். 76) எனும் தொல்காப்பிய நூற்பாவும் இவண் கருதத்தக்கது.

புறத்தில் பெண்ணுக்கு இடம் அளிக்கப்படும் சூழல் பிறவும் உள. வீரத்தாயின் மனநிலையைப் புலப்படுத்தும் நோக்கில் இவை இணைகின்றன. குறிக்கோள் நோக்க நிலையாகவும் (Idealism) இவற்றைக் கருதலாம். மன்னனையும் போர்க்களத் தில் ஆற்றல் காட்டும் வீரனையும் மட்டுமன்றி வீரனின் தாயையும், மனைவியையும் சார்த்திப் பாடும் புறப்பொருள் நோக்கமாகும் இது. பதிற்றுப்பத்து, 'வயிறு மாசுஇலீஇயர் அவன் ஈன்ற தாயே' (20) என இமையவரம்பன் நெடுஞ்சேர லாதனின் தாயாகிய வெளியன் வேண்மாள் நல்லினியைப் புகழ்தலும் இங்கு எண்ணத் தக்கது. புறநானூறு மூதின் முல்லையில், போர்க்களத்தில் களிறை வீழ்த்தி மீளும் தன்மை யின் காளையைப் பெறுதலைக் கடமையாகக் கொண்ட தாயைக் காட்டும் (312), தந்தையும் கணவனும் போரில் இறப்பவும் துணிந்து ஒரே மகனைக் களத்திற்கு அனுப்பும் தாயையும் காட்டும் (279); சிறுவன்போரில் காட்டிய வீரம் கண்டு ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தாயைக் காட்டும் (276-278)

அந்தணனின் சிறப்புரைத்தல் (பார்ப்பனவாகை 166, 305) புலவரின் சிறப்புரைத்தல் என்பனவும் அருகியும், பாடலிடை விரவியும் வந்து பிற நோக்குகள் அமைவதைக் காட்டுகின்றன.

செறுத்த செய்யுட் செய் செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன் (53)

பொய்யா நாவின் கபிலன் (174)

புகழ்ந்த செய்யுட் கழாஅத்தலை...... (202)

பொத்து இல் நண்பின் பொத்தி (212)

பிசிரோன் என்ப என் உயிர் ஓம்புநேல (215)

பாராட்டும் நோக்கமும் அதனால் ஊக்கம் வழங்கும் பயனும், மன்னன் அல்லாதோர் வாழ்த்தப்படும் - புகழப்படும் சூழலில் அமைதல் கூடும். மன்னனே தன் பாடலால் இத்தகு ஊக்கம் அளிக்கக் கூடும் என்பதனை, 'சிறுகுடி கிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பாடியது' (173) காட்டலாம். சிறிய நிலத் தலைவனைப் பேரரசன் பாடும் சூழல் மிக அருகியது. 'குடிநிலை உரைத்தல்' துறையில் ஔவையார் மன்னன் முன்னிலையில் ஒரு வீரனைப் புகழ்தலும் தனிப்பட்ட பாராட்டு நோக்கினதாகும் எனலாம்.

செய்தி கூறுதல் எனும் தன்மையும் இவற்றில் பொருந்துவதால் அத்தகு நோக்கமும் கருதப்படலாம். பசிப்பிணி மருத்துவன் பண்ணன் எனவும், இவனது முன் தலைமுறையினர் மன்னனுக்குப் பெருந் துணையாயினர் எனவும் அறிவிக்கும். அறிமுகப் படுத்தும் நிலை இது. அன்றியும், அறியாத செய்தியொன்றைக் கூறி எச்சரித்தல் அருகிக் காணப்படுகின்றது. 'நேற்று நீ கொன்றவனின் தம்பி, பழிவாங்க, உன்னைத் தேடுகிறான்' (300) என அமையும் பாடலொன்று இவ் எண்ணத்தை எழுப்புகின்றது.

போர்க் களத்தைப் பாடுதல் வழி, வீரப் புலப்பாட்டு நோக்கம் புறப் பாடலில் பொருந்துகின்றது. அன்றியும் போர்க் களத்தை ஏர்க்களமாகக் காட்டும்போது, உழவனின் முதன்மை அதற்கு அளிக்கப்படல் நோக்கமாகலாம். உணவு போன்று, மறம் விரும்பி வேண்டப்பட்ட கால வெளிப்பாடு இங்கு அமைகின்றது. ஏர்க்கள உருவகம் (369, 373) எனும் துறைநிலை, 'வில்லேர் உழவின் நின் நல்இசை' (371) எனும் தொடர் போன்றன. போர்க்காலம், அறுவடைக் காலம் போன்று பொருள் பெறுபவர்க்கு உவப்பத் தரும் சூழலைக் காட்டுகின்றது

என்பர்.[41] அன்றியும், போர்க்களமும் பரிசிலும் தொடர்புறு தலைப் புறப்பாடல்கள் பல காட்டுவதும் இங்கு எண்ணத் தக்கது.[42]

அகப்பாடல்களில் மிகுதியாக இடம்பெற்ற இயற்கை, புறப் பாடல்களிலும் இடம்பெறுகின்றது. ஆயின் முன் வகையில் உள்ளுறை எனும் ஆழ்நோக்கும் பயனும் கருதிக் கொண்டவளவு புறப்பாடலில் இயற்கை இன்றியமையாததா என்பது சிந்திக்கத் தக்கது. பொருட் கூறாகவும் வெளியீட்டுக் கூறாகவும் இயற்கை இணைவதில் இருவேறு நோக்கமும் காணப்படக் கூடும். பாடப் படும் தலைமகளான மன்னனின் நாட்டுவளம் தேவைக் கூறாகி இணைகின்றது (நாடென்ப நாடா வளத்தன, குறள், 739). பாரியின் பறம்பு, மூவேந்தரால் முற்றுகையிடப்பட்ட போதும், அதைத் தாங்கும் வண்ணம், 'உழவர் உழாதன நான்கு பயன் உடை'யதாகக் காட்டப்படல் (109) சூழல் விளக்கம் கொள் கின்றது. இவ்வாறன்றிப் பகை மன்னனின் நாட்டு வளம் பேசப்படும் சூழல், மன்னனின் போராற்றலையும், போருக்கு முந்தைய நாட்டு வளன் போரால் அழிவுண்டதை முரணிக் காட்டியும் பொருண்மைக்கு வன்மை சேர்க்கின்றது. நாட்டு வருணனைப் பகுதிகளும் இத்தகு நோக்கநிலை கொள்கின்றன.

இனியே,

கலி கெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரை மூதாளர் நாய் இடக் குழிந்த
வல்லின் நல் அகம் நிறைய, பல்பொறிக்
கான வாரணம் ஈனும்
காடு ஆகி விளியும் நாடு உடையோரே (52)

பதிற்றுப் பத்து, மன்னனின் வெற்றிச் சிறப்புத் தருமிடம் பல வற்றிலும் பகை நாட்டின் இத்தகு முன்பின் நிலை வருணனையை அமைக்கும் (13, 15, 23, 25, 26, 27, 29, 30). இயற்கையே- பாடலின் தோற்றத்துக் காரணம் ஆகுதல்[43] இங்கு இல்லை யெனினும், உவமையாகியும், பின்புலம் வழங்கியும், மன்னன் வீரம் காட்டியும் வருகின்றன எனலாம்.[44]

அழிவுபற்றிய சித்திரங்களும் நிலையாமை எண்ணங்களும் பலவிடங்களில் வருகின்றபோதும், புலவனின் நோக்கு அவநம்

பிக்கை வயப்பட்டோ சோர்வு மனப்பான்மை கொண்டோ (Pessimism) அமைந்தது என்பதற்கில்லை; இன்னின்ன நிலையாதது, எனவே காலம் உள்ளபோதே நன்மை வயப்பட வேண்டும் எனும் பாங்கே புலப்படுவதாகத் தோன்றுகின்றது. "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத்தாம் மாய்ந்தனரே" (169) எனும் பயன் விளக்கமாகப் பெருங்காஞ்சிப்பாடல் பல அமைதல் சுட்டத் தக்கது, புலவனின் பரிசிற் பயன் நோக்கும் இதனுடன் இணைதல் உண்டு (360, 361).

காடு முன்னினரே நாடு கொண்டோரும்
நினக்கும் வருதல் வைகல் அற்றே
வசையும் நிற்கும் இசையும் நிற்கும்
... ... இரவலர்க்கு அருகாது
கொள் என விடுவை ஆயின், வெள்ளென
ஆண்டு நீ பெயர்ந்த பின்னும்
ஈண்டு நீடுவிளங்கும் நீ எய்திய புகழே (359)

அருகித் துறவு பூண வேண்டுதலும் உண்டு (363) இறப்புன்மை உணர்ந்தும் 'மறுமை'ச் சிந்தனையின்றி 'உலோகாயத' (Materialism) எண்ணம் கொண்டமைதலும் அருகிக் காணப்படுகின்றது

மைவிடை இரும் போத்து செந்தீச் சேர்த்தி
காயம் கனிந்த கண் அகண் கொழுங் குறை
நறவு உண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டும் தின்றும் இரப்போர்க்கு ஈய்ந்தும்
மகிழ்கம் [45] வம்மோ, மறப்போரோயே
அரிய ஆகலும் உரிய பெரும......
தாழிய பெருங்காடு எய்றிய ஞான்றே (364)

கவிதையின் பயன்களுளொன்றான உண்மையை உணர்த்துதல் (Intuit reality) இங்கு இணைவதாகத் கொள்ளலாம்.[46]

மன்னனின் கொடைமடம் சுட்டப்படுமிடத்துப் பழித்தல் போல் புகழ்தல் கூற்றுமுறை புலவனால் கைக்கொள்ளப்படுதலின் நோக்கம் தெற்றெனப் புலப்பட்டிலது (12, 107).

அதுபோன்றே பறம்பு முற்றிருந்த வேந்தரிடம் பேசும் கபிலரின் எள்ளல் தொனியும் (109-111) எக்காரணம் பற்றியது என்பது வெளிப்பட்டிலது. எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கம், இத்தகு அங்கதத் தன்மையுடன் அமைந்துள்ளது போலும்.

உணர்வு வெளியீட்டுச் சூழலுக்குக் 'கேட்குந போலவும் கிளக்குந போலவும்' (பொ. 2; செ. 200) கேளாதவற்றையும் பேசாதவற்றையும் முன்னிலையாக்கும் பாங்கு, அகம்போன்றே புறத்திலும் அமைதல் சித்திக்கத் தக்கது. மலையை முன்னிலை யாக்கல் (113), நொச்சியிடம் பேசுதல் (272), முல்லையை விளித்தல் (242), ஞாயிற்றைக் கூப்பிடுதல் (374), இறந்தவனை முன்னிலைப் படுத்துதல் (236), கூற்றத்தை விளித்தல் (230) எனப்பெரும்பாலும் துயர வெளியீட்டு நோக்கில் இணை கின்றன.

புகழ்தலை நோக்கமாகவுடைய பாடல்கள் (Panegyric) பெரும்பாலும் உடன்காலத்தெழுதல் இயல்பு என்பது பொது எண்ணம். பதிற்றுப்பத்தின் இந்நிலையைக் கருதிக் கூறுவர்.[47] ஆயின் கையறு நிலையில், பழைய நினைவுகளில் ஊறுவது அமைவதும் அவை புகழ் நோக்கினவாதலும் கருதப்படல் கூடும். பாரி மகளிரின் கூற்றுத் தரும் பறம்பின் முன் நிலை (114,115) வடக்கிருந்த கோப்பெருஞ்சோழன், பொத்தியாரை மகன் பிறந்தபின் வருக என்றதை அவர் நினைதல் (222), புரவலன் இறந்தமை அறியாது வந்த இரவலர்க் குழுவைக் கண்ட புலவர் அவன் நடுகல்லாயினமை நினைதல் (264) என இது விரியும். தீநிமித்தம் கண்டு, மன்னன் இறப்பான் என அஞ்சிய புலவர், அவ்வாறே மன்னன் இறப்ப, முன் நிகழ்வை நினைந்து பாடுதலும் (229) காணப்படுகிறது.

வீரப்பாடல்களை, வீரயுகப்பாடல்களைப் பற்றிப் பேசும் போது, அவை மனிதரின் வீரதீரச் செயல்களைக் குறித்து அமையினும், பெரும்பாலும் மீமானுட இயல்பினரைக் காட்டியும் மீவியற்கைத் தன்மை அல்லது ஆற்றலுடையிறைவரின் தொடர்புடையவரைக் காட்டியும் அமையும் என்பர்.[48] ஆயின் சங்கப்பாடல்களின் 'வீர'ப் பொருளினவான புறப்பாடல் கள் மிகைக் கற்பனைகட்கு இடமளிக்காது பெரும்பாலும் இயல்பு சார்ந்தே அமைகின்றன.[49] 'வாழ்த்தியல்' பொருண்மை வருமிடத்து, மன்னன் நீடுவாழ்தல் விருப்பின் வெளியீட்டில் மிகை விரவுதலுண்டு.[50]

அயிரை நெடுவரைபோல
தொலையா தாக நீ வாழும் நாளே (பதிற்.70)

நின்நாள் திங்கள் அனைய ஆக திங்கள்
யாண்டு ஓரனைய ஆக யாண்டே
ஊழி அனைய ஆக ஊழி
வெள்ள வரம்பின ஆக... (பதிற். 80)

எம்கோ வாழிய குடுமி...
நல்நீர்ப் பஃறுளி மணலிலும் பலவே (புறம். 9)

நடுக்கின்றி நிலியரோ அத்தை...
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே (புறம்.2)

அருகி, சோழன் நலங்கிள்ளியின் தானைப்பெருக்கை ஆலத்தூர்க் கிழார் 'தலையோர் நுங்கின் தீம்சேறு மிசைய......' (225) எனத் தருவது போன்ற மிகையமையினும் இறைச்சார்பு புலப்பட்டிலது. ஒரு கால, ஒரு பொருள் இலக்கியத்தின் முழு அமைப்பிலும் இழையோடிய நோக்க நிலையாகும் இது.

உவகை (Enjoyment) உயர்வு (Enlightenment) என இலக்கியப் பயனைப் பகுக்கும்.[51] கோணத்தில் காணின், புறப் பாடல்கள் இரு நிலையிலும் சான்றளிக்கின்றன. எனினும் இன்பநோக்கோ, முருகியல் நோக்கோ முடிந்த முடிபாக இவை ஆக்கப்பட்டில. அறிவித்தல், அறிவுறுத்தல் என்பன முன்னிற் கின்றன.[52] நேரடியாகவும், பிறிதொன்றின் மேல் வைத்தும் பிறவும் இவை தரப்படுகின்றன.

காலமும் பயனும்

இலக்கியத்தின் நோக்கம் படைத்தவனையும், சூழலையும், எழுந்த காலத்தையும், சமுதாய - தனிமனிதத் தேவைகளையும் ஒட்டியமைந்திருக்கலாமெனினும், பயன் காலந்தோறும் மாறு படக் கூடியது. தோன்றிய நோக்கம் நிறைவேறியதுடன் பயன் முடிந்து விடுவதில்லை யாகையால் இலக்கியம் அழியாது காலந் தோறும் தொடர்கிறது; பாதுகாக்கப்படுகிறது. காலத்தின் மாற்றத்தால், பயன்படு பொருளொன்று அருங்காட்சியகப் (Musuem) பொருளாகலாம். புறப்பாடல்களின் நிலையும் இது தானா என்பதனை நினைக்கலாம்.

இலக்கியச் செல்வமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள புறப் பாடல்கள், தொடர்ந்து வந்த இலக்கியங்களை, இலக்கிய வகைகளை, இலக்கியக் காலங்களைப் பாதித்திருக்கக் கூடும். முன்னோர் சொல்லும் பொருளும் பொன்னே போல் போற்றும் முறையில், இவற்றின் தொடர்கள் பல பிற்கால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து தொடர்கள், சேர இலக்கிய மானதால்போலும் இளங்கோவின் சிலம்பில் தோய்வு கொண் டுள்ளன.[53] 'புள்ளூறு புன்கண் தீர்த்த' (37. 5) எனும் புற நானூற்றுத் தொடர் இளங்கோவிடமும் இணைந்தது. அன்றியும் பாரதியின் 'அக்கினிக் குஞ்சு'ம், கம்பனின் 'கற்பின் கனலி'யும் கொண்ட முன்னோடி போல, புறநானூற்றின் மகட்பாற் காஞ்சிப் பாடலடிகள் அமைகின்றன.

வை எயிற்று
அரி மதர் மழைக்கண் அம்மா அரிவை
மரம் படு சிறுதீப் போல
அணங்கு ஆயினள் தான் பிறந்த ஊர்க்கே (349)

என, சிலம்பு, சேரமன்னனிடம் சென்ற பராசரனையும், சமய காலம் சிவபிரானின் திருமுகப்பாசுரத்துடன் சேரனிடம் சென்ற இறையடியாரையும் தருதல் பதிற்றுப்பத்தின் தொடர்ச்சி போலும்.

தொடர்ந்த கால இலக்கியங்களை மட்டுமன்றி, இலக்கணங் களையும் புறப்பாடல்கள் அவற்றின் திணை, துறைப் பகுப்புகள் பாதித்திருக்கக் கூடும் என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலை காட்டலாம். அன்றியுந் தொல்காப்பிய உரையாசிரியரும், இலக்கிய உரையாசிரியர்களும் எடுத்துக்காட்டு வழங்கும் வண்ணம் சங்கப் புறப்பாடல்களை இடைக்காலத்தில் பயன் கொண்டுள்ளனர்.

வாகையின் களவழி (தொல். பதிற். 36) களவழி நாற் பதாகக் கீழ்க்கணக்கில் வந்ததைத் தொடர்ந்து, முத்தொள் ளாயிரம், புறத்திரட்டு போன்றனவே புறப்பாடலுக்குக் கால்வழி அமைக்கினும், புறம், அறம் - பொருள் எனவும், இறைவனைப் பாடுதல் எனவும், அகத்துடன் விரவிச் சிற்றிலக் கியம் சிலவற்றை ஆக்குதல் எனவும் இடைக்காலத்தில் நிலவியது எனலாம். எனினும், பெருவேந்தர் தலைமை

கொள்ளும் தனிப்பாடல் நிலையும் சேரன், சோழன், பாண்டியன் எனப்பாடல் மிகுதி காட்டும் பாங்கும்.[54] தொடரப்படாமை அரசியல் சூழல் மாற்றத்தைக் காண்பிக்கின்றது.

பழங்கால வரலாற்றின் சிறப்புமிக்க கொள்கலனாக இன்றளவும், இன்னும் பலகாலமும் பயன்படும் வல்லமையுடன் புறப்பாடல்கள் அமைகின்றன. புலவன் தன் இன வரலாற்றாளனாகவும், மரபுச் செல்வத்தின் பாதுகாவலனாகவும், அதன் திறனாய்வாளனும் சட்டமியற்றுபவனும், அதன் வழிகாட்டியும் தீர்க்கதரிசியுமாகவும் ஒருவேளையில் அமைகின்றான்.[55] இந்நிலையில் புறப்பாடல்களும் மக்களால் மக்களைப் பற்றி மக்களுக்காக உருவாகிய சிறந்த வாழ்வியல் ஏடாகும்.[56] தமிழரின் பழம் பெருமையைக் காணவும், அதனால் தமிழரின் பண்பாட்டை, நாகரிகத்தைச் சான்றாதாரத்துடன் உலகுக்குத் தெரியப்படுத்தவும், இன்றும் ஏற்புடைய நிலைத்த உண்மைகளை - அறங்களை அறிந்து கொள்ளவும் இவை பயன் கொள்ளப்படுகின்றன. இன்று சுவைப்போன் பெறும் பயன்தான் அன்றைய அவையோர் (Audience) பெற்றனரா என்பது கேள்விக்குரியது. எனினும், அன்று பாடினோனும், பாடப்பட்ட தலைவனும் அல்லது கேட்ட ஒருவனும்—தவிரப் பிற பல உடனிருந்தோரும் பாடலைக் கேட்டிருக்கலாம் என்பதால், துணைப்பயன் கருதக்கூடும். செய்தியைப் பெறுதல், எண்ணத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்றன.

தொகு நிலை

தொல்காப்பியம் போன்றே சங்கப் புறப்பாடல்களும், நோக்(கு)கம், பயன் எனும் சொல் ஆளுகையை அளிக்கின்றன.[57] ஆயினும் இவற்றிற்கு முறையே பார்வை, இயற்கையின் விளைபயன் எனும் பொருண்மைகளே அமைவதாகத் தோன்றுகிறது. எனினும், ஒரு பொருளைப் பற்றிய கவிஞனின் பார்வைக் கோணம் நோக்கமாகிப் பாடலில் வெளிப்படுகிறது என்ற இயைபு கருதப்படச் கூடும். பயன், பயம் என்பன, 'செல்வத்துப் பயனே ஈதல்' (புறம். 189. 7) எனவும் 'மழையினும் பெரும் பயம் பொழிதி' (பதிற். 64.18) எனவும் பொருட்பயன் சார்பு காட்டல், புரவலனின் கொடை-இரவலனின் பரிசில் வாழ்வுடன் இயைபு படுத்த வல்லது.

'புறத்திணை நன்னாகனார்' எனத் திணையால் சிறப்பிக்கப் பெற்ற புலவர் புறநானூற்றில் அமைவது (176, 376, 379, 384)

சிந்தனைக்குரியது. பாலை பாடிய பெருங்கடுங்கோ போன்று அகத் திணையால் பெயர் பெற்றவர் சிலர் உளரெனினும் புறத்தில் அந்நிலை பெருகவில்லை.

திணைவாரியாக, துறைவாரியாகப் பகுத்து நோக்கமும் பயனும் காணுதல் புறப்பாடல்களில் இயலுமெனினும், பொருண் மயக்கமும் (Over lapping) ஒரே பொருட்கூறு பல துறைகளிலும் இணைதலும் காணப்படலால் சிக்கல் எழக் கூடும்.

பிரச்சாரமும், எதிர்ப்புத் தெரிவித்தலும் நோக்கமாக இலக்கியம் பெருகிவளரும் காலத்திற்கு முந்திய பாங்கினதாகப் புறப்பொருட்பாடல்கள் அமைவதாகத் தெரிகின்றது.

குறிப்புகள்

1. நோக்கம் : 1. Eye கண், 2. Eyesight, look, gaze, glance, view, பார்வை, 3. Aspects of a planet, கிரக நோக்கு, 4. Appearance, expres-sion, cast of countenance, தோற்றம் 5. Height, elevation, உயர்ச்சி, 6. Beauty, attractiveness, அழகு, 7. Watch, காவல், 8. Design, **object, intention, aim, motiv** கருத்து, 9. Sence, intelligence, அறிவு, 10. Attention, observation, கவனம், 11. Desire, விருப்பம். 12. Indication, sign, குறிப்பு

பயன்1 : 1. See பயம் 1, 1.2, 2. Meaning, Sig-nification, சொற்பொருள், 3. Wealth செல்வம், 4. See பயம் 1, 3, 5. Width, breadth extent, அகலம். 6. Juice சாறு.

பயம்1 : 1. Profit, gain, advantage, பலன், 2. Fruit of one's action, வினைப்பலன், 8. Fruit, பழம், 4. Sweetness, Pleasant ness, இன்பம். 5. King's revenue, அரசிறை. 6. Nature, தன்மை,

பயன்படுதல் : To be of use or service, பிரயோசனப் படுதல். தமிழ் லெக்சிகன்; தொகுதி-4, பக். 2370, 2486, 2487.

2. நோக்கம்: தொல். சொல். 94.1. இரண்டன் மருங்கி னோக்க னோக்க/மவ்

பயன் : ,, ,, 113.3 இன்னதற்கு இது பயனாக வென்று

,, ,, 307.1 பயப்பே பயனாம்

,, பொருள். 88.6 சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்

,, ,, 190.4 சிறந்தது பயிற்றல் இறந்தத பயனே

,, ,, 214.1 அறக் கழிவுடையன பொருட்பயன் வரினே

,, ,, 272.1 வினை பயன் மெய் உரு என்ற நான்கே

,, ,, 310.7 பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ

,, ,, 499.2 கிழத்தியைச்சுட்டாக் கிளப்புப் பயனிலவே

,, ,, 504.2 தொகு நிலைக் கிளவி பயன் எனப்படுமே

,, ,, 646.7 பல்வகையானும் பயன் தெரிபுடையது

பயம் : '' சொல். 324 1 பழுது பயமின்றே

'' பொருள் 144.31 பயங்கெழு துணை யணைப் புல்லிப்/ புல்லாது

'' '' 296.2 வினையினும் பயத் தினும் உருவினும் / உறுப் பினும்

Index des mots de la Litterature tamoule ancienne, Institute Francais D' Indologie, Pondicherry, 1970.

3. தொல். பொருள். 221.5 நோக்கொடு வந்த இடையடு பொருளினும்

'' '' 283.2 என்ன உறழத் தகைய நோக்கொடு

'' '' 310.4 நோக்கே பாவே அளவியல் எனாஅ

'' '' 409.2 நோக்குதற் காரணம் நோக் கெனப் படுமே

மேற்படி நூல், ப. 939.

4. ...யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை. ... அஃது ஒரு நோக்காக ஓடுதலும், பல நோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்று வகைப்படும்.
—தொல்காப்பியம் — பொருளதிகாரம் — இளம் பூரணம், கழகம், 1969, ப. 471.

5. —தொல்காப்பியம் —பொருளதிகாரம் — பேராசிரியம், கழகம், 1969, பக். 279. 282.

6. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, கழகம், 1969, பக். 3, 129.

7. யாதானும் ஒரு பொருளைக் கூறியவழி இதன் பின்பு மிதனைப் பயக்குமெனை விரித்துக் கூறாது முற்கூறிய சொல்லினானே தொகுத்துக் கூறுதல் பயனெனப்படும் என்றவாறு. ''சூரல் பம்பிய... நீவர லாறே'' இதனாற் பயன்வரைந்துகோடல் வேண்டும் என்பது ''ஒன்றாக. நன்று'' குறள். (323), இதனாற் பயன், நன்மை வேண்டுவோர் இவ்வாறு செய்தல் வேண்டுமென்றல்
—இளம்பூரணம், ப. 536.

8. இது மிகவும் பயக்கும் இதனானெனத் தொகுத்துச் சொல்லப்படும் பொருள் பயன் என்னும் உறுப்பாம். ''மாறாக்காதலர் ...யான் வாழு மாறே'' என்னும் பாட்டு, தோழியைத் தூது விடுவாளாதற் பயன்பட வந்தது... இவை புறத்திற்கும் ஒக்கும்.
—பேராசிரியம், ப. 411.

9. இளம் பூரணம், ப. 537, பேராசிரியம், ப. 411, நச்சினார்க்கினியம், ப. 249.

10. வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம் (272)

உவமப் போலி ஐந்தென மொழிப
தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்த வென்ப (295, 296)

11. ...கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சிஉறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்... (88)

12. காமஞ் சான்ற கடைக் கோட் காலை
ஏமஞ் சான்ற மக்கமொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (190)
சிறந்தது பயிற்றலாவது— அறத்தின் மேல் மனநிகழ்ச்சி
(இளம்பூரணம்)
சிறந்தது — அறம்பொருள் இன்பத்திற் சிறந்த வீட்டின்பம் (நச்சினார்க்கினியம்), (தொல்காப்பியம் பொருளதிகாரம் —நச்சினார்க்கினியம், கழகம், 1975, ப. 275)

13. தொல். பொருள்.214.

14. பரத்தை வாயில் என விரு வீற்றுங்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே (499)

15. தொல். பொருள் 646.

16. Men write for all sorts of reasons, sometimes for more than one at a time. They may write because they are excited, or because they are board; because they are happy. or because they are wretched; because they want to express themselves, or because they want to ezpress themselves, or because theY want something done-or simply for the mysterious reason that they want to create something.

—Modern Prose Style, Bonamy Dobree, OUP, 2nd, 1968, PP. 7-8.

17. But if we take their works at their face declaration, men write on the whole with three various purposes, or so we may infer from the effect upon ourselves.

They want to tell us something, to describe an action (to tell us what happened), to describe a thing (something they have seen), or to describe a person (some one they know, or whom, they have invented)...Or they may want to explain something to you, to tell you why or how a thing happens (science), or to examine something (criticism), or to persuade you to think as they do ... Or, thirdly, they may simply want to arouse your emotions, to make you feel gay, mournful, angry—we need not complete the catalogue ... Ibid. p. 8.

18. Of what 'use' is poetry? The question of course is as old as Plato, and perhaps older. As if giving a comprehensive answer, but with Konku Velir's Perunkatai in mind, Mahamahopadhyaya U. V. Swaminatha Aiyar formulates a single breathless sentence that may be translated as follows: "That the worship of God is praise worthy...the worth of those who have renounced all belongings and cares; about all this, and more too, one may grow wise by reading this work (Perunkatai‡)". This surely is an encyclopaedic inventory of the varieties of the possible beneficial impact of literature on society. But the point worth remembering is that it is from the seething ocean of every day experience that the poet churns out these needed lessons, which in turn help to clarify, purify and enrich our lives.

—K. R. Srinivasa Iyengar, Literature and Society. Literary Heritage of the Tamils, IITS, 1981, pp. 4-6.

‡ —தெய்வ வழிபாடு சிறந்த தென்பதும்...துறந்தோர் பெருமையும் பிறவும் இந் நூலால் நன்கு அறியலாகும்.

—பெருங்கதை, உ.வே.சா. 4ஆம், 1968 பக். xxv-xxvi.

19, யாப்பருங்கல விருத்தி, கழகம், ப. 426.

20. நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும்' உ.வே.சா. 4-ஆம், 1953, ப. 11.

21. Theory of Literature, Rene wellek and Austin warren, Penguin Books, Re., 1978.

22 இவையே இங்கு ஆய்வுக்குட்படுகின்றன.

23. நினைவாற்றலுக்கு அந்தாதி உதவி, மனனம் செய்ய வாய்ப்பாக அமைதல் ஒருபாலாக, சுவடியில்—எழுதுதலில் முறை மாறாமைக்கு இடனளிக்கின்றது எனல் பொருந்தலாம். பாடலின் பெயர்கள் பதிற்றுப்பத்தில் பதிகம் வழி இத்தகு வாய்ப்பளிக்கின்றன. பாடலின் முதற்குறிப்புகள் யாப்பருங்கலக் காரிகை போன்றவற்றில் தரப்படலும் இங்கு நினைக்கத் தக்கது. அன்றியும் திவ்வியப் பிரபந்தப் பதிப்புகள் பதிகங்களுக்கும் தொகுதிகளுக்கும் பாடல் முதற் சொற்களையும் தொடர்ந்து வரும் பகுதியின் தொடக்கத்தையும் இணைத்து ஒரு தொடராகக் தருதலும் கருதத் தக்கது,

24. ... (a) 138 Poems praising 42 kings, belonging to three dynasties (b) 141 poems in praise of 48 chieftains, most of whom ruled over small principalities, including perhaps a few tribal areas scattered all over the land, (c) 121‡ poems whose heroes are unknown. owing mainly to various lacunnae in the manuscripts, defective colophons, and the fragmentary nature of poems.

—Tamil Heroic Poetry, K. Kailasapathy, Oxford, 1968, p. 16, 17.

‡ —கடவுள் வாழ்த்தும் (1), இழந்துபோன-இருபாடலும் (267, 268) நீங்க 118 என அமையும்.

25. ... Unknown and unidentified, the supreme valour and heroism of these warriors provides a singular insight into heroie society and life ... they are the more primitive type of heroic songs which draw their heroes from any class and express communal interest as of family, locality clan or tribe. This is in contrast to the more advanced type which draws its

heroes almost wholly from the princely class and in which communal interest is wanting.

—Ibid, pp. 23-26.

26. பரிசில்—புறநானூறு, 163,

பரிசில் கடாநிலை — புறநானூறு 11, 101, 136, 139, 158—160, 164, 169, 196—199, 209—211, 266.

பரிசில்துறை - '' — 126, 135, 137, 148, 154, 161, 168, 200—208, 379.

பரிசில்விடை - '' — 140, 152, 162, 165, 397, 399.

பரிசில் துறைப் பாடாண்பாட்டு — பதிற்றுப்பத்து 19, 65.

கடைநிலை — புறநானூறு 127, 382-384, 391.396, 398.

கடைநிலைவிடை — '' 397.

27. Both panegyric lament celebrate an individunl's fame at some special crisis and in so doing endorse a heroic out look.

—Heroic Poetry, C. M. Bowra, Macmillan, 1978, p. 9.

28. The first concern of heroic poetry is to tell of action. Panegyric honours the great man in his presence for something that he has done, and is usualiy composed soon after the event.

—Ibid., p. 48 and 9.

29. பாணாற்றுப்படை — புறநானூறு 68-70, 138, 141, 155, 180.

பதிற்றுப்பத்து 67.

புலவராற்றுப் படை—புறநானூறு 48, 49, 141.

விறலியாற்றுப்படை— '' 64, 103, 105, 133.

30. Certain poets, as Simonides and Pindar, had so prevailed with Hiero the First, that of a tyrant they made him a just king; where Plato could do so little with Dionysius, that he himse lf of a

philosopher was made a slave.
— A Defence of poetry, Sir Philip Sidney, (ed.) J. A. Van Dorsen, Oxford, 1966, P. 58.

31. செவியறிவுறூஉ — புறநானூறு 2, 3, 5, 6, 35, 40, 55, 184
வாழ்த்தியல் — ,, 2, 3, 6, 13, 91, 158, 367, 375, 377, 385-387.

32. **அறவுரை :** புலவர்கள் அரசரைநோக்கிப் பல வேளைகளில் அறிவுறுத்தியிருக்கிறார்கள். பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பார்த்துப் பாலைக் கௌதமனார் கோபம், காமம், அளவிறந்த கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், கழிபேரன்பு, அழிக்கும் மனப்பான்மை, கொடுமை ஆகிய இவை தவிர்க்கத் தக்கன எனக் கூறுகிறார்... (3, 2:1-4) பிறர் பிறரை நலியாமல், வேற்றுப் பொருளை வெஃகாமல், மனைவியைப் பிரியாமல், உள்ள பொருளை பகுத்துண்டு வாழ்தல் வேண்டும்...

—பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள், கழகம் 1966, ப. 14 எனதுறை நிலையின்றி அமைதல் கூடும்.

33. **இலக்கியத்தின் பயன் :** இலக்கியம் மக்களுக்கு அறிவு கொளுத்துகின்றது என்பதனை விளக்கப் புறத்தில் பல செய்யுட்கள் உள. பொருண்மொழிக் காஞ்சி என்ற துறையில் நரிவெரூஉத் தலையார் பாடின பாட் (டு) மக்களுக்கு... ஒரு சிறந்த அறிவுரையாக விளங்குகிறது...ஒருவன் தன் வாழ்க்கையில் இதனை மறத்தலாகாது. மக்கள் இயற்கையன்னையின் எழில் நலத்தைக் கண்டுகளிப்பதற்கும் இல்லறம் நடத்திப் பின்னர் நிலையாமையுணர்ந்து மெய்யுணர்ச்சி பெறுதற்கும் இலக்கியம்... பயன்படுகிறது... ஒரு சில புலவர் இல்லறத்திலும் துறவறமே சிறந்தது எனக் கூறியுள்ளனர். தவத்தின் மாட்சியினை வான்மீகியார் என்ற புலவர் சிறப்பித்துப் பாடியது நோக்கத் தக்கது... எனவே மக்கள் மெய்யுணர்வு பெறுதற்கு வாயிலாக உள்ளது இலக்கியமாகும் என்பது போதரும்.

—புறநானூற்றுச் சொற்பொழிவுகள், கழகம், 1966, பக். 97, 98 99.

34. Puram songs are poetry of Heroism. Not only heroism but they deal with politics, kingship. philanthrophy and social life of the people and philosophy also... Now the Puram poems are the main sourse to write the political and social history of Tamilnadu; and to deduce the culture and civilisation of the Tamils in their varioues aspects.

—Literary Heritage of the Tamils, P. 22.

35. Heroic poetry still exists in many parts of the world and has existed in many others, because it answers a real need of the human spirit.

—Heroic poetry p. 3.

36. See: Tradition and Talent in Cankam poetry, Rm. Periya Karuppan, Madurai Publishing House, Madurai, 1976, p. 323.

37. Tha literary **motive** behind this production was by no means the composition of a perfect work of art to stand the Scutiny of a conclave of critics at top. — Tamil Heroic Poetry, P. 3

38. *இருங்கோவேள் பாரிமகளிரைக் கொள்ளானாக கபிலர் பாடியது (202); கடிய நெடுவேட்டுவன் பரிசில் நீட்டித்தானைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது. (205); வெளிமான் துஞ்சிய பின் அவன் தம்பி இளவெளிமானை 'பரிசில் கொடு' என, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது, பெருஞ்சித்திரனார் பாடியது (207); அதியமான் நெடுமான் அஞ்சி பெருஞ்சித்திரனாரைக் காணாது, 'இது கொண்டு செல்க' என்று அவன் பரிசில் கொடுப்பக் கொள்ளாது, அவர் சொல்லியது (208)*

39. The first concern of heroic poetry is to tell of action.—Heroic Poetry, P. 96.

40. As the same time, several Kings and chieftains find a place in them (love poems). They are not infrequently mentioned in lengthy 'h storical' allusions by way of elaborate similes.

—Tamil Heroic Poetry, p. 7.

41. இக்கருத்தை வழங்கியவர், டாக்டர் ச. வே. சுப்பிர மணியன்.

42. பதிற்றுப்பத்து —42, 46, 47, 61, 64, 66, 80.
புறநானூறு — 368, 370, 372, 318-320, 338.

43. Nature often sures as a source or startihg point for poetry.

—The uses of poetry, Agnes Stein' Holt Rinehart and winston, Inc., New York, 1975, p. 187.

44. See : (1) Landscape and poetry, Xavier S. Than Nayagam, Asia publishing House, Bombay, 1966.

45. விவிலியத்தில், ''ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி **புசித்துக் குடித்துப் பூரிப்பாயிரு**'' (லூக்கா 12. 19) என மதிகேடன் கூறியது. இங்கு இணைத்து நினைக்கத்தக்கது.

46. The Uses, of Poetry, pp. 213–254.

47. Furthers the out look of that text (Patirruppattu) is panegyric which is meaningful only when the poet is a contemporary of the king or kings.

—The Dating of sangam Literature V.I.Subramanian, proceedings of the 3rd International Conference Seminar, Paris, 1970, **Pub**. Institut Francais D' Indologie, Pondicherry, 1973, PP. 83-84.

48. Heroic Literature has certaion well defined characteriestics. It deals with human beings who transcend ordinary man by their skill strength and courage... some times these heroes possess supernatural powers and often they are helped or hindered by supernatural beings, or do battle with monsters and demons...

—Encyclopaedia Britannica, Vol. II, P. 438.

49. பாடற் பொருளும் பாடலும் பயிலும் மக்களும் அவர் தம் நிகழ்ச்சிகளும் கற்பித்துக் கொள்ளப்பட்டனவல்ல... போர், வெற்றி, வீரம், கொடை பற்றிய பொருளில் சற்று உயர்வு நவிற்சி தோன்றப் பாடுதலன்றி முழுதும் கற்பித்துப் பாடியதாகப் புறப்பாடல்களிலிருந்து நமக்குத் தோன்றவில்லை. சமுதாய வாழ்க்கை நடைமுறைகளை ஒட்டியே இவை அமைந்துள்ளன.
—தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி—1, ப. 34.

50. Though they (benediction) are very realistic, they contain some fanciful descriptions.
—Tradition and Talent in Cankam poetry, P. 210

51. இலக்கிய இயல் அ ஆ, ந. சஞ்சீவி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1974, ப. 18.

52. சங்ககாலக் கவிதைகளை மேற்போக்காக நோக்கினும் அவை ஒவ்வொன்றும் ஒரு செய்தியை அறிவுறுத்துவதாகவோ, கேட்போரை அறநெறிப்படுத்துவதாகவோ அமைந்துள்ளதைக் காணலாம். நேர்முகமாக அறிவு கொளுத்தும்/அறமுணர்த்தும் பாடல்களும் உள்ளன. அங்கதம், குறிப்பு முதலிய வகையாலும் கருப்பொருள் வாயிலாகவும் உணர்த்தும் பாடல்களும் உள்ளன. இத்தகைய அறிவுரைக்குப் அறவுரைக்குப் புறப் பாடல்களே மிகுதியும் வாய்ப்பளிக்கின்றன.
—தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1, ப. 52.

53. பார்க்க : பதிற்றுப்பத்து, உ. வே. சா. பதிப்பு, (1949) குறிப்புரை, அடிக்குறிப்பு முதலியன.

54. பதிற்றுப்பத்தின் 80 பாடலுடன் புறநானூற்றின் 27 பாடல் சேரரைப் பாடின; புறநானூற்றின் 74 பாடல் சோழரையும் 37 பாடல் பாண்டியரையும் பாடின.
—Tamil Heroic poetry, p. 17.

55. His poetry, then, was basically the articulation of the conscience and consciousness of his race, of his people... The poet is at once the historian of his race, the persever of his quintessential heritage, its critic and law-maker, its prophet and path finder.
—Literary Heritage of the Tamil, p. 3.

56. Puram poetry, which is the reliable document of the ancient history of the Tamils ...Poetry of this age is essentially a human document by, fcr and of the human beings.

—தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி-1 ப.xxiv.

57. Indexe des mots de la litterature tamoule ancienne Vol. III, P. 937, 938, 968, 969.

பயன்பட்டவை

1. பதிற்றுப் பத்து (பதி.) எஸ். ராஜம், மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957.

2. புறநானூறு ''

3. புறப்பொருள் வெண்பாமாலை, (பதி. உ. வே. சாமிநாதையர், ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1963.

4. An Introduction to the Study of Literature, W. H, Hudson, George G. Harrap & Co., Ltd., London, 1970.

5. Aristotle on the Art of Poetry, (Tr. Ingeam Bywatter Oxford 1967.

6. Tamil Heroic poems, G.U. Pope, Kazhakam, 1973.

7. The Growth of Literature, Vol. I. H. M. Chadwick and Nora K. Chadwick, Cambridge, 1968.

பெருங்கதை, சீவகசிந்தாமணி

ர. விஜயலட்சுமி

தமிழில் காப்பியங்கள் எனப் பகுக்கப்படும் இலக்கிய வகையின் வளர்ச்சியில் இரு நிலைகளில் எழுந்தவை கொங்குவேளிரின் பெருங்கதையும், திருத்தக்கதேவரின் சீவக சிந்தாமணியும். இவற்றுள் பெருங்கதை எழுதப்பட்ட காலம் எதுவெனத் திடமாக நிர்ணயிக்கப் போதுமான ஆதாரங்கள் இன்றைய நிலையில் கிடைக்கவில்லை. கிடைத்த ஆதாரங்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியைச் சுட்டுகின்றன.[1] சீவக சிந்தாமணி (சிந்தாமணி) கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கும், கி. பி. 9-ஆம் நூற்றாண்டிற்குமிடைப்பட்ட ஒரு காலப் பகுதியில் எழுதப் பட்டிருக்க வேண்டும்.[2] இந்த இரு நூல்களும் எழுதப்படுவதற்கு முன்னரே தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காப்பியங்களும் (தொடர் நிலைச் செய்யுட்களும்) சங்க மருவிய கால நூல்களும், சங்கப் பாடல்களும் தோன்றிவிட்டன.

இவ்விதம் தமிழ் இலக்கிய வரலாற்றின் இடைக்காலப் பகுதியில் எழுந்த இவ்விலக்கியங்கள் எழுந்த நோக்கத்தையும், அவற்றால் விளைந்த பயனையும் நோக்குவதற்கு, இவற்றிற்கு முற்பட்ட இலக்கியங்களின் பண்பு பற்றிய அறிவு வேண்டியுள்ளது. ஏனெனில் எந்தப் பெரிய எழுத்தாளனும் தனித்தியங்கும் பண்புடையோனல்லன். அவன் தான் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்ட காலத்து எழுத்தாளனுடனும், தன் சமகால எழுத்தாளனுடனும், தொடர்புடையவனாக விளங்கி, அவன் படைக்கும் இலக்கியத்தினூடாக, அதைப் படிப்போரையும், அவனுக்கு முன்வந்த எழுத்தாளருடனும் சமகால எழுத்தாளருடனும் தொடர்பு கொள்ளச் செய்கிறான். இவ்வித அநுபவத்தால், அவன் நூலைப் படிப்போர் பல்வேறு காலப் பகுதிகளூடாகக் கடந்து வந்த ஒரு இலக்சிய மரபைச் சுவைக்கும் வாய்ப்புப் பெறுகிறார்கள். இத்தகைய இலக்கிய மரபுகளின் அறிவுடன், இலக்கியம் படைத்தோன் வாழ்ந்த கால

வரலாற்று அறிவும், அவன் இலக்கியம் எழுந்த நோக்கத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் ஏனெனில் ஒரு இலக்கிய ஆசிரியனின் மனோநிலை; அவன் வாழ்ந்த சுற்றுப் புறச் சூழல்கள்; அவன் தொடர்பு கொண்டிருந்த மக்கள்; அவர்களுக்கும் அவனுக்குமிடையே நடந்த உரையாடல்கள்; அவனது ஆவல்கள், அவன்பட்ட இடர்ப்பாடுகள், வெற்றிகள் தோல்விகள்; அவனுடைய மேதகு எண்ணங்கள்; அவற்றை வெளிப்படுத்துவதில் அவன் கையாண்ட முறைகள் முதலிய அனைத்துமே அவன் நூல் படைக்கப்பட்ட நோக்கத்தினைச் செம்மையாகப் புரிந்துகொள்ள உதவும். பாரதி போன்ற ஓர் புலவனின் படைப்புக்கள், எழுந்த நோக்கத்தினைப் புரிந்துகொள்ள நமக்குக் கிடைத்துள்ள விபரமான குறிப்புகள் அளவு, கொங்குவேள் படைப்பான பெருங்கதையினைப் பற்றியோ, திருத்தக்க தேவர் படைப்பான சிந்தாமணியினைப் பற்றியோ கிடைக்கவில்லை. இவ் ஆசிரியர்களைப் பற்றி அறிய அவர்கள் இலக்கியங்கள் மாத்திரமே நமக்குக் கிடைக்கின்ற படியால், இவை எழுந்த காலப் பகுதியில் எழுந்த ஏனைய இந்திய இலக்கியங்களின் ஒப்பீட்டறிவும் வேண்டப்படுகின்றது. உலகின் உயர்ந்த அறிவுகளெல்லாம் ஒப்பீட்டினால்தான் பெறப்பட்டுள்ளன. ஏன் அவை பெருமளவு ஒப்பீட்டில் தான் தங்கியுமுள்ளன எனலாம். ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுந்த இலக்கியங்கள், அவை எழுதப்பட்ட மொழிகள் வேறுபட்டிருந்தாலும், அவை கூறும் பண்பாட்டளவில் பொதுப் பண்புகள் பல கொண்டமைந்திருக்கும். அந்தப் பண்பாட்டு ஒற்றுமையின் மேல், ஒவ்வொரு இலக்கியமும் தமக்குரிய சிறப்பான வேறுபாடுகளைக் கொண்டிருக்கும்.

தமிழில் எழுந்த இடைக்கால இலக்கியங்கள் பல அவற்றின் தன்மையில், ஏனைய இந்திய இலக்கியங்களுடன் தொடர்புடையனவாகவே இருக்கின்றன. பெருங்கதை, சீவகசிந்தாமணி இரண்டும் எழுவதற்கு முன்னரே, சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரு காப்பியங்களும் எழுதப்பட்டுவிட்டன. இவற்றிற்கு உருவிலும், ஓரளவு பொருளிலும் முன்னோடிகள் சங்க இலக்கியங்களிலுள்ள பத்துப் பாட்டுத் தொகுதியிலுள்ள நீண்ட நெடும்பாடல்கள். இக்காம்பியங்கள் இரண்டும் தமிழ்நாட்டு மக்களிடையே வழங்கிய கதைகளை அடிப்படையாகக் கொண்டெழுதப்பட்டவை. நூல்வடிவில் இவை முழு உருவில் கிடைப்பதுடன் இவை எழுந்த நோக்கமும் இந்நூல்களிலேயே குறிப்பிடப்படுகின்றது.

அரசியல் பிழைத்தோர்க்கறங் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்து-வந்தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாக
நாட்டுதும் யாமோர்பாட்டுடைச் செய்யுள்[3]

எனச் சிலப்பதிகாரம் எழுந்த நோக்கத்தை அதன் ஆசிரியரான இளங்கோவடிகள் தன் நூலின் பதிகத்தில் தெளிவாகக் கூறுகின்றார். இதுபோலவே பௌத்தக் காப்பியமான மணிமேகலை ஆசிரியரும் தன் நூலின் நோக்கம் மணிமேகலை துறவை வற்புறுத்துவதே என்பதை,

வளங்கெழுகூலவாணிகன் சாத்தன்
மாவண்டமிழ்த்திற மணிமேகலைதுற
வாறைம் பாட்டினுள்ளறிப வைத்தனனென்[4]

என்று இந்நூலின் பதிகத்தின் மேற்கூறிய அடிகளில் கூறிச் செல்கிறார்.

மணிமேகலையின் கதை தமிழ்நாட்டுக் கதையே என்பர் ஆய்வாளர்கள். மணிமேகலா தெய்வம் பற்றிய பௌத்த ஜாதகக் கதைகள்[5] தமிழ்நாட்டுச் சூழலிலேயே இடம்பெறுவதாலும் இது பெறப்படுகிறது. இந்த ஜாதகக் கதைகளின் தெய்வமான மணிமேகலா தெய்வம் பற்றிய கதைகள் முதலில் தமிழ்நாட்டு நகரங்களான, புகார், காஞ்சி ஆகிய இடங்களில் உருவாகிப் பின்னர்தான் ஜாதகத் தொகுதிகளில் சேர்க்கப் பட்டன என்பர் ஜாதகக் கதைகளைப்பற்றி ஆய்ந்த ஆய்வாளர் சில்வன் லெவி[5] என்பார்.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும், தமிழ்நாட்டுக் கதைகளைத் தம் காப்பியப் பொருளாகக் கொண்டாலும், அவற்றை எடுத்துக் கூறும்போது, கேட்போர் ஆவலைத்தூண்டி, மிகைப் படுத்துவதற்காகத் தாம் வாழ்ந்த நாட்டினின்றும் எட்டியுள்ள நாடுகளையும் நிலைக்களனாகக் கொண்டு அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் எழுதிச் செல்கின்றனர். சிலப்பதிகார ஆசிரியர் புகார், மதுரை, வஞ்சி என்ற மூன்று நகரங்களிலும் தன் கதையைப் பரக்கவிட்டு நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. அக்காலச் சூழ்நிலையில் சமயத்துறவிகள், அரச குடும்பத்தோர், அரசு அலுவலர்கள் போன்றோர்

தவிர பொதுமக்கள் பலருக்குத் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகட்கும் பயணம் செய்வது எளிதானதோர் செயலல்ல. சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டும், தமிழ்நாட்டின் சிறப்பான பகுதிகள் எல்லாவற்றையும் பற்றி அழகுறக் கூறிச் செல்வதால் அவை மக்கள் மனதைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அன்றைய தமிழ்நாடு பல்தொழில்களிலும் சிறந்து, வாணிகத்தில் ஓங்கி, சமயத்துறையில் வளர்ச்சி பெற்றிருந்தமையால் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மக்கள் தமிழ் நாட்டிற்கு ஈர்க்கப்பட்டனர். சோழமன்னனுக்கு, அளிக்கப் பட்ட

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப்பந்தரும்
மகதநன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்தனுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற்றோரணவாயிலும்
....[6]

பற்றி சிலப்பதிகாரம் நமக்கு அறிவிக்கிறது.

இங்கு வச்சிரநாடு, மகதநாடு, அவந்திநாடு, என்ற மூன்று நாடுகளும் அடுத்தடுத்து வைத்துக் கூறப்படுவது நோக்கற்குரியது. இதுபோலவே மணிமேகலையிலும்,

மகதவினைஞரும் மராட்டக்கம்மரும்
அவந்தி கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடுகூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை[7]

யினை சாத்தனார் நம் மனக்கண் முன்பு நிறுத்துகிறார்.

சிலப்பதிகார ஆசிரியரின் காப்பியப் பகுப்பினை அடியொற்றியே பெருங்கதை ஆசிரியரும் தன்காப்பியத்தை உஞ்சைக் காண்டம், இலாவணகாண்டம், மகதகாண்டம், வத்தவ காண்டம் நரவாணகாண்டம் எனப் பகுத்துள்ளார். பெருங்கதை முழுவடிவில் இன்று கைக்குக் கிட்டாதபடியால் நூல் எழுந்த நோக்கைப் பற்றி ஆசிரியர் வாயிலாக அறிந்துகொள்ள முடியவில்லை. உதயணன் கதையைத் தன் கதைப் பொருளாய்த்

தேர்ந்தெடுத்த காரணத்தைப் புரிந்துகொள்ள இக்கதை இந்திய மக்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருந்தது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். வடமொழிக் கவிஞனான காளிதாசன் ''உதயணன் கதைகள் உச்சயினி நகரமக்களைப் பெரிதும் இன்புறுத்தின'' எனத் தன் மேகதூதத்தில் கூறுவதும், பாசன் தன் நாடகங்கள் பலவற்றின் கதைப் பொருளாய் இக் கதைகைக் கொள்வதும், இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். ஏனைய நாடுகளில் புகழ் மிக்கிருந்ததுபோல, தமிழ்நாட்டு மக்களையும் உதயணன் கதைகள் பெரிதும் கவர்ந்தன என்பது தமிழ் நூல்களில் இக்கதைகள் எடுத்துக்காட்டாகும். ஏனைய நாடுகளில் புகழ்மிக்கிருந்ததுபோல, தமிழ்நாட்டு மக்களையும் உதயணன் கதைகள் பெரிதும் கவர்ந்தன என்பது தமிழ் நூல்களில் இக்கதைகள் எடுத்தாளப் பட்டிருப்பதிலிருந்து தெரிகின்றது, மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார்,

> **கொடிக் கோசம்பிக் கோமகனாகிய**
> **வடித் தேர்த்தானை வத்தவன் தன்னை**
> **வஞ்சஞ் செய்துழி வாள்தலை விடஇய**
> **உஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்**
> **உருவுக்கு ஒவ்வா உறுநோய் கண்டு**
> **பரிவுறு மாக்களின் தாம்பரி வெய்தி......**[8]

என்ற அடிகளில் துறவுகொண்ட மணிமேகலையைப் பார்த்த மக்கள் மனத்துயரை, வத்தவமன்னன் உதயணன் பிரச்சோதனனால் சிறைப்படுத்தப்பட்டுச் சென்றபோது உச்சயினியில் நலிந்த தோற்றமொடு தோன்றிய யூகியினைக் கண்டு வருந்திய மக்களது துயருடன் ஒப்பிடுகின்றார்.

திருமங்கை ஆழ்வார் தன் சிறிய திருமடலில், காலில் விலங்கு பூட்டி அழைத்துச் செல்லப்பட்ட உதயணன் பின்னால் உச்சயினித் தெருவீதியில் ஓடிய வாசவதத்தையினை மக்கள் ஏளனம் செய்ததை பின்வரும் அடிகளில் கூறுகின்றார்.

> **வாரார் வனமுலை வாசவதத்தை யென்**
> **றாரானும் சொல்லப் படுவாளவ ளுந்தன்**
> **பேராயமெல்லாம் ஒழியப் பெருந் தெருவே**
> **தாரார் தடந்தோட் தளைக்காவலன் பின்போனாள்**
> **ஊதாட் இகழ்ந்திடப் பட்டாளே**[9]

இன்னும் உதயணன் மைத்தனான நரவாணதத்தருடன், வேகவதியின் மூத்தோன் விண்ணில் சண்டையிட, அதுகண்ட வேகவதி நரவாணதத்தனுக்காகத் தன் தமையனுடன் போரிட்ட செய்தியையும் திருமங்கை ஆழ்வார் தன் பெரிய திருமடலில் கூறிச் செல்கிறார்.[10] இவ்வாறு தமிழ்நாட்டிலும் நன்கறியப்பட்ட கதையாக விளங்கிய உதயணன் கதையைக் கொங்குவேளிர். இளங்கோ அடிகள் காட்டிய வழியில் தன் காப்பியப் பொருளாகக் கொண்டு இலக்கியம் வடிப்பதை நோக்காகக் கொண்டார்.

இந்திய மக்களிடையே பெரும்புகழ் பெற்றிருந்த கதைகளின் தலைவனாம் உதயணன், கற்பனையில் எழுந்த ஓர் பாத்திரமல்ல. இந்துப் புராணங்களும், சமண சூத்திரங்களும், பௌத்தக் கதைகளும், ஏனைய இலக்கியச் சான்றுகளும் இவனை ஓர் வரலாற்று வீரனாகவே சித்தரிக்கின்றன. அத்தினாபுரத்திலிருந்து வத்தவநாட்டிலுள்ள கௌசாம்பிக்கு புலம்பெயர்ந்த குருவமிசத் தலைவனான உதயணன் புத்தர், மகாவீரர் இவர்களது சமகாலத்தவன், லிச்சவி மன்னனான சேடகனின் பெண்வழிப் பேரன், உதயணன் பிறந்தபோது வத்தவநாடு, பாஞ்சால மன்னன் ஆருணியினதும், உச்சயினியைத் தலைநகராகக் கொண்ட அவந்தி மன்னன் பிரச்சோதனனினதும் அரசியற் பகைக்குட்பட்டிருந்தது. அதே நேரத்தில், மகத நாட்டில், பிம்பிசாரன், அஜாதசத்துரு, போன்றோர் வழி வந்த அரசன் தருசகன், ஆட்சி செய்து கொண்டிருந்தான். உதயணன் வாழ்க்கை வரலாறு, அக்கால மன்னரின் கூட்டு அரசியல் முயற்சிகளை எடுத்தியம்புவதாயமைகின்றது. உதயணனின் இளமைக்கால நண்பனும் பிற்காலத்தில் அவன் மந்திரியுமான யௌகந்தராயணனின் (யூகி) வற்றாத மதி வன்மையும், அரசியல் தந்திரங்களும் வரலாற்றுப் புகழ்மிக்கவை. இன் நண்பனான உதயணனை எதிர்த்த பாஞ்சால மன்னனின் எதிர்ப்பைச் சமாளிகக, வட நாட்டிலாண்ட பல மன்னர்களின் ஆதரவை இவன் தன் திறன்மிகு அரசியல் மதிவன்மையால் தேடிக் கொள்கிறான். உதயணனுக்கு வாசவதத்தை என்ற அவந்திநாட்டு இளவரசியையும், பத்மாவதி என்ற மகதநாட்டு இளவரசியையும் மணம் புரிந்து வைத்தற்கு ஒரு காரணம், இந்நாட்டு மன்னனின் அரசியல் ஆதரவு பெறுவதற்காக ஆகலாம்.

இத்தகைய ஒரு கதையைக் கொங்குவேளிர் தேர்ந்ததன் காரணம், இக்கதை மக்கள் மனங்கவரும் முறையில் எடுத்துரைக்

கப்பட்டிருப்பதுடன், அரசநீதி, ஆள்திறன் பற்றிய கோட்பாடுகள் அக்கால அரசியல் பின்னணியில் விளங்குவதாக அமைவதனாலுமாகும். பெருங்கதையிலிருந்து நாம் அறியும் செய்திகள் பல மற்ற நூல்களிலிருந்து நம்மால் அறியமுடியாதவைகளாகும். உதயணின் தனிப்பட்ட வாழ்க்கையும், அரசியல் உயர்வுகளும் மட்டுமன்றி அவன் சமய வாழ்க்கையும், பெருங்கதையீற் கூறப்பட்டிருக்கலா மென்பதை, பெருங்கதையை அடியொற்றிச் செல்லும், உதயண குமார காவியம் சுட்டி நிற்கின்றது. இதில் நரவாகணதத்தனின் பிறப்பு வளர்ப்பைக் கூறும் காண்டமாகிய நரவாகண காண்டத்திற்கு அடுத்ததாகத் துறவுக் காண்ட மொன்றமைந்துள்ளது. இங்கு உதயணன் உலகியல் வாழ்வு துறந்து துறவுமேற் கொண்டமை கூறப்படுகின்றது. பெருங்கதையில் இவ்வித அமைப்பிருந்தால் கொங்குவேளிருக்கு அறம், பொருளின்பம், வீடு என்ற நான்குமே கூறும் நோக்கமு மிருந்திருக்கலாம் என்று கொள்வதில் தவறில்லை.

திருத்தக்கதேவர் சிந்தாமணியை எழுதியதன் நோக்கம் கொங்குவேளிரினது நோக்கத்தினின்றும் முற்றும் வேறானது. சமணர்கள் கூறும் அறுபத்து மூன்று சலாகா புருடர்களில் அடங்கும் ஒன்பது காமதேவர்களில் ஒருவரான சீவகனின் கதையைக் காவிய வடிவில் அமைப்பதே அவரது நோக்கம் என்பது சிந்தாமணிப் பதிகத்தின் முதற்பாடலான,

> **மீனேறுயர்த்த கொடிவேந்தனை வென்றபொற்பிற்**
> **றானேறனையானுளன் சீவகசாமி யென்பான்**
> **வானேற நீண்ட புகழான் சரிதம்மிதன்னைத்**
> **தேனூற நின்று தெருண்டாரவை செப்பலுற்றேன்**[11]

என்ற பாடலிலிருந்து புலனாகிறது. வரலாற்று மன்னனான உதயணன்போலன்றி, சீவகன் சமணப் புராணக் கதாநாயகனாவான். கதாநாயகனான சீவகன் வாழ்வின் சிறப்பையும் ஈற்றில் அவன் வீடு பேறு எய்துவதையும் எடுத்தியம்புவதே புலவரின் அடிப்படை நோக்காகும்.

சீவகன் கதையை எடுத்துக்கூறும் இந்நூலின் நூற்பகுப்பு முறையும் உற்று நோக்கற்குரியது. நூலின் ஒவ்வொரு பகுதியும் இலம்பகம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இலம்பகம் என்ற சொல் (Prakrit lambhaka / lamvaka / lambha; Sanskrit-labha), 'பேறு' என்பதைக் குறிக்கும் சம்ஸ்கிருத 'லாப' என்ற சொல்லின் பாகத உருவத்தினூடாகப் பெறப்பட்டதாகும்.

ஒவ்வொரு இலம்பகமும் கதாநாயகன் அடைந்த பேற்றைக் குறிக்கிறது. அது பெண்ணாகவோ, மண்ணாகவோ, நுண்ணறிவாகவோ இருக்கலாம். இத்தன்மையைச் சீவகன் கல்வி கற்றப் பகுதியை **நாமகள் இலம்பகம்** எனவும், பல்வேறு மங்கையரை மணந்த பகுதிகளை அப்பெண்கள் பெயர் கொண்டும், தன் பரம்பரை வழிவந்த அரியணை ஏறிய பகுதியை **மண்மகள் இலம்பகம்** எனவும், துறவூண்டு வீடு பேறெய்தியதை **முக்தி இலம்பகம்** எனவும் அழைப்பதில் நாம் காணமுடிகிறது. இதன் காரணமாக **மண நூல்** எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்நூல் எழுந்த நோக்கமும், பௌத்த நூலான மணிமேகலை எழுந்த நோக்கமும் மதம் பரப்பல் என்ற மட்டில் ஒன்றேயாயினும், இவையிரண்டும் உரைக்கும் திறன்களில் வேறுபடுகின்றன. பௌத்த கொள்கைகளையும், தத்துவங்களையுமே பெருமளவில் எடுத்துக்காட்டி கதைப் பண்பு குறைந்த நிலையில் நூலைப் படைத்திருக்கின்றார் மணிமேகலை ஆசிரியர். அதே நேரத்தில் சீவகசிந்தாமணி, ஆசிரியர் நற்குண வீரனாக சீவகனைச் சித்தரித்து, அவன் பகைவனாம் கட்டியங்காரனுடன் அவனை அவ்வப்போது மோதவிட்டு, பல்வேறு பெண்களை அவன் திறன் வெளிப்பாட்டினால் மணக்கவைத்து, அவன் ஈற்றில் அரசுரிமை பெற்றதும், துறவை நாடுவதாகக் கூறுகின்றார். நிகழ்ச்சிகளின் மாற்றத்திற்கேற்ப படிப்போரைப் பல்வேறு சுவின்மிகு நாடுகட்கும் அழைத்துச் செல்வது படிப்போர்க்கு மேலும் சுவையையும் ஆர்வத்தையும் அளிப்பதாகும்.

இத்தகைய தன்மையை இன்று நம் கைக்கெட்டாத, பைசாச மொழியில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகின்ற பிருகத் கதையிலும் காணமுடிகின்றது. பிருகத் கதையின் (கி. பி. 2) வட மொழி தழுவல்களில் ஒன்றான பிருகத்கதா சுலோக சங்கிரகத்திலும், பிராகிருத ஜைன நூலான வசுதேவஹிண்டி என்ற நூலிலும், இவ்விதம் தலைவன் பல பெண்களை மணப்பதையும், அவை கந்தர்வதத்தை **இலம்பகம்** (லாபம், லம்பம்), பிரியதர்சனா இலம்பகம் என்று பெண்கள் பெயரால் அழைக்கப்படுவதையும் காணலாம். சீவக சிந்தாமணியில் எடுத்தாளப்படும் பல கதைகள் இந்நூல்களிலும் காணப்படுகின்றன. எடுகோளாக, சீவகசிந்தாமணியிலுள்ள கந்தர்வதத்தை கதை, பிருகத்கதைத் தழுவல்களான பிருகத்கதாமஞ்சரி, பிருகத்கதாசுலோக

சங்கிரகம், கதாசரித்சாகரம், பிற்கால ஜைன புராணங்களான ஜின் சேனரின் ஹரிவம்சபுராணம், குணபத்திரரின் உத்தர புராணம் போன்ற நூல்களில் பல்வேறு கதைகளில் ஒன்றாகப் பின்னப்பட்டுள்ளது.

வசுதேவஹிண்டி என்ற ஜைனக் கதை இலக்கியம் பிற்கால ஜைன ஆசிரியர்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்திருக்கின்றது.[12] இந்நூலில் உள்ள கதைகள் பல பிற்கால ஜைனக் கதை இலக்கியம் படைத்த ஆசிரியர்களால் தம் நூல்களில் கையாளப்பட்டுள்ளன. இத்தகைய நூல்களுடன் ஜைன ஆசிரியரான திருத்தக்கதேவருக்கும் குறிப்பிடத் தக்க அளவு பயிற்சி இருந்திருக்க வேண்டும். சம்ஸ்கிருதம், பாகதம் முதலிய மொழிகளில் முன்னரே கையாளப்பட்ட இந்த கதை கூறும் திறனைத் தமிழிலும் கையாண்டு ஒரு இலக்கியம் படைக்க திருத்தக்கதேவர் முயன்றிருக்கிறார் என்பதைச் சிந்தாமணி வாயிலாக உணர முடிகின்றது. இவ்விதம் பல பெண்களை மணம் செய்வதும், உலகியல் வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுப்பதும், ஜைன ஒழுக்க நெறிக்கு ஒவ்வாததன்றோ என்ற கேள்வி பலரிடை எழக்கூடிய ஓர் பொதுவான வினாவாகும். இதற்கு விடையளிப்பதாகவும், இத்தகைய இலக்கிய அமைப்பின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவும், வசுதேவஹிண்டியின் மத்தியம காண்டத்தை எழுதிய தர்மசேனகணி மகத்தர என்ற ஜைன ஆசிரியரின் பின்வரும் விளக்கம் அமைகின்றது.[13]

''மக்களிடை பரவியிருந்த கதைகளான நகுஷன், நளன், துத்துமாரன், நிகஷன், புரூரவன், மந்ததன், இராமன், இரமணன், ஜனமேயன், கோரவன், பந்துசுதன், நரவாகணதத்தன் ஆகியோர் கதைகளைக் கேட்பதிலேயே ஆர்வம் காட்டுகின்ற மக்களுக்கு சமயத் தொடர்பான கதைகளைக் கேட்பதற்கு ஆவல் அதிகம் இருக்காது. எனவே சமயத் தொடர்பான செய்திகளை, மருத்துவர் கசப்பு மருந்தை இனிப்பு மூடிய வில்லைகளாக்கித் தன் நோயாளிக்குக் கொடுப்பதுபோல், காதல் கதைகளூடாகக் கொடுத்து அவர்களுக்கு நன்நெறி புகட்ட வேண்டும்''.

ஜைனர்களுக்கும் பௌத்தர்களுக்கும் கதைகூறும் திறனைப் பொறுத்தமட்டில் ஒரு வேறுபாடு உண்டு. ஹர்டல் (Hertal) கூறுவதுபோல்[14] பௌத்தர்கள் புத்தரின் முற்பிறப்பு வாழ்க்கையுடன் தொடர்புடையதாகவே தம் கதைகளைப் பின்னிச் செல்வர். இதனால் நேராக புத்தரே அறவுரை கூறுவது

போன்று ஓர்-உணர்வை ஏற்படுத்துவர். ஜைனர்கள் முக்கிய கதையை இடை இடையே அறவுரைக் கருத்துக்களின் இடையீடின்றி வளர்த்துச் சென்று, கதை முடிவில் நன்நெறி பற்றிக் கூறுவர்,

மணிமேகலையும் சிந்தாமணியும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டுகள். சிந்தாமணியில் சீவகனின் கதை, ஏனைய துணைக் கதைகளுடன் அழகுறப் பின்னப்பட்டு, ஒரு குறிப்பிட்ட அற நெறியினை அடிநாதமாக ஓடவிடப்பட்டு நடத்திச் செல்லப்படுகின்றது. கதை ஓட்டத்திற்குத் தடையின்றிச் சமயக் குறிப்புகள் இழையோட விடப்பட்டுள்ளன. முற்றிலும் ஓர் காதல் காவியம் போல் நடத்திச் செல்லப்படுகின்ற சிந்தாமணி ஈற்றில்தான் ஒரு இலம்பகம் முழுவதிலும் துறவின் மாண்பைப் போற்றுகின்றது. இவ்விதம் கதையை வளர்த்துச் செல்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு, ஜைனர்கள் பெரும்பாலும் சமண வணிக இனத்தவர்கள். பொருளீட்டுவதிலும் இன்ப நுகர்விலுமே பெரும்பகுதி நேரத்தைச் செலவிடும் இவர்கள் வாழ்வின் கடைசி காலத்தில்தான் துறவைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள். இவை பற்றியெல்லாம் நன்கறிந்தே திருத்தக்கதேவர் சீவகன் கதையைக் கூறுவதைத் தன் நூலின் நோக்காகக் கொண்டார். இத் நோக்கத்தை நிறைவேற்றுவதில் சுவைமிக்க பலவித இலக்கியந் திறன்களைக் கையாண்டார்.

பயன்கள்

பெருங்கதையும் சிந்தாமணியும் தமிழில் எழுந்ததால் ஏற்பட்ட பயன்கள் எத்தகையவை? பயன்கள் எனும்போது அவை சமகாலத்திலும், தமக்குப் பிற்பட்ட காலத்திலும் எழுந்த இலக்கியங்கள் மீதும், பொதுவாகச் சமுதாயத்திலுள்ள மக்கள் மீதும் செலுத்திய தாக்கம், மனதில் மேலெழுகின்றது. இந் நூல்களால் தமிழ் இலக்கிய வளர்ச்சியேற்பட்ட புதிய எண்ணங்கள், எடுத்தாள் நுணுக்கங்கள், நோக்குகள், உரைதிறன்கள், வடிவ வார்ப்புகள் என்பன இவற்றால் விளைந்த பயன்களெனலாம். இது தவிர இந்நூலைப் படிப்பதால் அடையக்கூடிய ஏற்றங்கள் என மக்கள் மனதில் நிலைநாட்டப்பட்ட நம்பிக்கைகள் ஒரு நாட்டு வரலாற்றை அறியக் கிடைக்கும் குறிப்புகள், அந்நாட்டுப் பண்பாட்டு வளர்ச்சிபற்றி எடுத்துக் கூறும் பகுதிகள், சமயநிலையில் இந்நூல் மக்கட்கு உதவும் தன்மைகள் முதலியன சமுதாயத்தில் ஏற்பட்ட பயன்களை எடுத்துக் காட்டும்.

இந்நூல்களால் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட தாக்கங்களை முதலில் நோக்குவோம். பெருங்கதையைப் படிப்போர் மனதில் முதலில் பதியக்கூடிய தன்மை, அங்கு கதைக்கு ஆசிரியர் அளித்துள்ள இன்றியமையாத் தன்மையாகும். பெருங்கதை, அதற்கு முன் தமிழில் எழுந்த பத்துப்பாட்டு நெடும்பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன வார்க்கப்பட்டுள்ள ஆசிரியப்பா யாப்பிலேயே எழுதப்பட்டிருப்பதுடன், சிலப்பதிகாரத்தின் நூற்பகுப்பையும் பின்பற்றி, காண்டம், காதை எனப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நிலை மாறி, காவியங்களில் ஒரு புது அமைப்பு முறையை அறிமுகம் செய்து வைத்த சிறப்பு, சீவக சிந்தாமணிக்குண்டு. தன் காலத்திற்கு முன்னரே காளிதாசன், பாரவி, மாகன் போன்ற வடமொழி ஆசிரியர்களால் கையாளப்பட்டு ஓரளவு வெற்றியும் கண்ட பெருங்காப்பியம் என்ற இலக்கிய வார்ப்பை தமிழில் முதன் முதலில் கையாண்டுள்ளார். இந்த இலக்கிய வடிவத்துள் தான் எடுத்துக்கொண்ட கதைப் பொருளைப் பல்வேறு விருத்தப் பாக்களால் எடுத்தியம்பினார். தண்டியாசிரியர் பெருங்காப்பியத்திற்கு வகுத்த இலக்கணங்கள், வழுவாது முறைப்படி அமைக்கப்பட்ட இந்நூல் இவருக்குப் பின் வந்த இலக்கிய ஆசிரியர்கள் பலரையும் கவர்ந்தது. அதன் விளைவாக இந்த வகைப் பெருங்காப்பிய அமைப்பு தொடர்ந்து தமிழில் தோன்றலாயிற்று. இவ்வமைப்பின் வளர்ச்சியுற்ற சிறந்த நிலையை இராமவதாரம் எனும் கம்பராமாயணத்தில் நாம் காண்கிறோம். பெருங்கதைவரை எழுந்த காப்பியங்களில் கூறுபொருளைப் படிப்போர்க்குச் சுவைபட அளிக்கவும், தெளிவுற விளக்கவும் எளிமையான இலக்கிய அணிகள்தான் பயன்படுத்தப்பட்டன. இந்நிலை சிந்தாமணியுடன் மாற்றமுற்று தண்டியாசிரியர் கூறும் பல்வேறு அணிகளும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. நன்னெறியின் பலனாம் முத்தியை அடையும் முயற்சிகள், பல சிலேடை அணிகள் மூலம் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. பொதுவில் பெருங்கதை, சிந்தாமணி இரண்டுமே பயில்வோருக்கு, இந்திய நாட்டு மக்களிடை, இடர்ப்பாடு, கட்டுப்பாடு எதுவுமின்றி உலவிவந்த ஒரு நிறைவினையும் இன்ப உணர்வினையும் அளிக்கின்றன.

சிந்தாமணியின் ஆசிரியர் தமிழின் இலக்கிய மரபுகளையும் வடமொழி இலக்கிய மரபுகளையும் ஒருங்கு குழைத்து அளிக்கும் ஓர் புது இலக்கிய மரபைத் தொடங்கி வைத்தார். இன்னும் பிற மொழி இலக்கியங்களில் தான் படித்துச் சுவைத்த பாடல்களை தமிழில் அழகுற வடித்துத் தருவதையும் நோக்கலாம். எடுகோளாக, காளிதாசன் மேகதூதம் என்ற தனது தூது

இலக்கியத்தில், இந்திரனின் அழகாபுரியை வருணிக்கும்போது, காதலர்கள் இன்ப விளையாட்டைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறான்;

nivibandhocchvasitasithilam yatra bimbadharanam
ksaumam ragad anibhrtakaresv aksipatsu priyesu
arcis tungan abhimukham api prapya ratnapradipan
hrimudhanam bhavati viphalaprerana curnamustih[15]

''கொவ்வை இதழுடை 'மாதர்' தம் காதலர் ஆடையைப் பற்றி இழுக்க நாணம் தாங்காது பக்கத்திலிருந்த வாசனைப் பொடியை அள்ளி விளக்காக ஒளிவீசும் இரத்தினக் கற்கள் மீது வீசுகிறார்கள்''.

இங்கு எப்போதும் ஒளி வீசும் இரத்தினக் கற்கள் ஒளிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அதை மறந்து நாணம் மிகு வாசனைப் பொடி மூலம் அதை அணைக்க முயல்கின்றனர் மாதர்.

இதே கருத்தை ஏமாங்கத நாட்டை வருணிக்கும் சிந்தாமணி ஆசிரியர் பின்வருமாறு எடுத்தாளுகின்றார்

கற்சுணஞ் செய்த தோண் மைந்தர் காதலால்
நற்சுணப் பட்டுடை பற்ற நாணினார்
பொற் சுணத்தால் விளக்கவிப்பப் பொங்கிய
பொற் சுணம் புறம்பணைதவழும் பொற்பிற்றே

இதுபோலவே சிந்தாமணியின் இலக்கியச் சிறப்புக் கண்டு அதை ஒற்றி வடமொழியிலும் நூல்கள் எழலாயின. இவற்றுள் குறிப்பிடத் தக்கன. வாதீபசிம்மனின் கத்தியசிந்தாமணியும், க்ஷத்திர சூடாமணியும், ஹரிச்சந்திரனின் ஜீவாந்தரச் சம்புவுமாகும் இவ்விதம் தமிழ் இலக்கிய மரபினை ஒற்றி தமிழ்-நூல்களை வடமொழியிலும் மொழி பெயர்ப்பதால் இந்திய இலக்கியங்களில் ஒரு புது இலக்கிய மரபே உருவாயது. பழந்தமிழ் இலக்கியங்களை நன்கு பயின்ற திருத்தக்கதேவர் தன் நூலிலுள்ள வருணனைப் பகுதிகளில், தமிழிலக்கியத்திற்கே உரித்தான ஐவகை நிலப்பாகுபாடுகளையும், அவற்றின் உரி, கருப்பொருள்களையும் தவறாது கையாளுகின்றார். இவ்வித மரபுகளை வடமொழி நூல்களிலும் இப்பகுதிகளின்

வருணனையில் கையாளப் பட்டுள்ள தன்மை குறிப்பிடத் தக்கதாகும். எடுகோளாக பின்வரும் பாலைக்கலி அடிகளில் கலைமான் ஒன்று, இனிய நிழலில்லாத காட்டில் வெம்மை தாங்காது வருந்துகின்ற தன் மடப்பத்தையுடைய பிணைக்கு தான்நின்று தன் நிழலைக் கொடுத்து உயிரை அளிக்கும் என்று கூறப்படுகிறது.

....

இன்னிழலின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலை[16]

இதே எண்ணம் சிந்தாமணியில் சீவகனுக்கு, காட்டுவழி பற்றிக் கூறும் தேவன் கூற்றில் கையாளப்பட்டுள்ளது.

கலையின் பிணைகன்றிடுமென்று கசிந்
திலையின் நிழலவ்வ யினின்மையினான்
நிலையின் னிழறானது நின்று கொடுத்
துலையும் வெயினின்றுருகும்...[17]

இங்கு, காட்டின் வெம்மையும், கலைமான் தன் பிணைக்கு நிழலளித்து நிற்பதுவும் கூறப்படுகின்றது. சீவகசிந்தாமணியை ஒட்டி எழுதப்பட்ட கத்தியச்சிந்தாமணியும் இக்கருத்தை ஒட்டியே வருணனையை அமைப்பதைக் காணலாம்.

... nitsesaparnaksayanirvisesavitapini
... karenutapaharanakrte nijakayacchayaprada-
yidantini...[18]

(இலையில்லா மரம் நிறைந்த இடத்திலே... பெண்யானை வெம்மை நீக்கத் தன் உடல் நிழலைக் கொடுத்தளிக்கும் ஆண் யானை...)

இத்தகைய சங்கப்பாடற் கருத்துக்கள் பல சிந்தாமணி யூடாக கத்தியச் சிந்தாமணி, க்ஷத்திரச் சூடாமணி, ஜீவாந்தரச் சம்பு போன்ற நூல்களுக்குச் சென்றுள்ளன, தென்னாட்டிலெழுந்த ஜீவகன் கதைகள்[19] பல இத்தகைய பண்புடையவனாய் விளங்குவதற்குச் சீவகசிந்தாமணியே காரணம் எனலாம்.

இலக்கியத்தில் மட்டுமன்றி மக்களின் சமுதாய வாழ்விலும் பெருங்கதை, சிந்தாமணி, செல்வாக்குச் செலுத்தி நின்றிருக்கின்றன. பெருங்கதையின் சில பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று உண்மைகள், இந்திய வரலாற்றின் செம்மைக்கு உதவுகின்றன. குறிப்பாகச் சங்கமன்னர் உடைந்தது, வருடகாரனின் தந்திரங்கள், உதயணனுக்கும் ஆருணிக்கும் நிகழ்ந்த போர் முதலியன இந்தியவரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவையாகும்.[20]

சிந்தாமணி, பொதுவில் அக்கால மக்களிடை பெரும் செல்வாக்கைச் செலுத்தி நின்றது எனாலம். இந்து மதத்தவர் கூட இந்நூலைக் கற்றனர் என்பதற்குச் சேக்கிழார் புராணத்தில் சேக்கிழார் அனபாய குலோத்துங்க சோழனை, சிந்தாமணியைப் படித்து அதனை உண்மையென்று நம்பிப் பொழுதைப் போக்காது, இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி அளிக்கும் சிவ கதையைக் கேட்குமாறு கூறியதைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.[21]

வளவனுங் குண்மடண் புரட்டுத் திருட்டுச்சிந்தா
மணிக்கதையை மெய்யென்று வரிசைகூர
உளமகிழ்ந்து பலபடப் பாராட்டிக் கேட்க
உபயகுல மணிவிளக்காஞ் சேக்கிழார்கண்
டிளவரசன்றனை நோக்கிச் சமணர் பொய்நூல்
இது மறுமைக்கா காதிம்மைக்கு மற்றே
வளமருவுகின்ற சிவகதை யிம்மைக்கும்
மறுமைக்குமுறுதியென வளவன் கேட்டு

அவ கதையாய்ப்பயனற்ற கதைகயீதாகில்
அம்மையுமிமையுமுறுதி பயக்கத்தக்க
சிவகதையேததுகற்ற திறமைப் பேரார்
சீவக சிந்தாமணி போலிடையில் வந்த
நவகதையோ புராதனமோ மூன்னூலுண்டோ
நானிலத்துச் சொன்னவராவர் கேட்ட பேரார்
தவகதையோ தவம் பண்ணிப் பேறுபெற்ற
தனிக்கதையோ வடைவு பொறச் சாற்றுமென்றான்

இன்று கூட சமண மதத்தினர் சிந்தாமணியை ஒரு நல்ல சமய நெறி புகட்டும் நூலாக ஏற்றுவதும், அதைப் பயில்வதும் சிந்தாமணி எழுந்ததால் விளைத்த பயன்களில் சிறப்பான ஒன்றாகும்.

இந்நூல்களின் சிறப்பு நோக்கி, பிற்காலக்காப்பிய ஆசிரியர்களும். உரையாசிரியர்களும் இவற்றைத் தம் நூல்களில் அடிக்கடி மேற்கோள் காட்டிச் செல்கின்றனர்.

குறிப்புகள்

1. R. Vijayalakshmi **A Study of the Perunkatei** (Madras, International Institute of Tamil studies, 1981), P.6.ff.

2. R. Vijalakshmi, **A Stndy of the Chintamani** (Ahmedabad; L. D. Series 82: 1981), P.42

3. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, எட்டாம் பதிப்பு (சென்னை, 1968), வரிகள் 55-60

4. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, (சென்னை, 1898), பதிகம், வரிகள் 96-98.

5. The Jataka Stories of the Buddha's former Births, translated in to English by W. H. O. Rouse, ed. by E. B. Cowell, Vol. IV (Cambridge, 1901), Story No. 442.

   Mahajana Jataka Translated into English by Tawsein Ko (Rangoon, 1888) Story No. 539.

6. Sylvan Levy, Manimekalai, A Divinity of the sea, The Indian Historical Quarterly Vol. VI (December, 1930), No. 4 pp. 614 ff.

7. சிலப்பதிகாரம், 1:5:99-104.

8. மணிமேகலை, 19:107-109.

9. மணிமேகலை, 15:61-66.

10. திருமங்கை ஆழ்வார், சிறிய திருமடல், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், 2-ஆம் பதிப்பு சென்னை, மயிலை மாதவதாசன் பதிப்பு, 1092), ப. 549, வரிகள் 66-71.

11. மேற்படி. பெரிய திருமடல், ப. 551, வரிகள் 52-54.

12. திருத்தக்கதேவர், சிந்தாமணி, 6-ஆம் பதிப்பு (சென்னை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1957) பதிகம், பாடல்-1.

13. J. C. Jain, The Importance of Vasudevahindi, Lecture delivered under the auspices of the Sudesien Institute der Universitat Heidlberg, Abteilung fur Indologie in July 1973.

14. Ibid

15. J. Hertel, on the literature of the Svetambaras of Gujarat, (Leipziz 1972).

16. Kalidasa, **Meghaduta**, edited by Kale, (Bombay,1916), Uttaramegha, V. 7.

17. திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி, உ.. வே. சாமிநாதையர் பதிப்பு, ஏழாம் பதிப்பு, (சென்னை, 1969), பாடல் 91.

18. **கலித்தொகை** (சென்னை, கழகப் பதிப்பு, 1967) பாடல். 11.

19. சீவகசிந்தாமணி, பாடல் 1188.

20. Gadyacintamani, Edited by pt. Pannalal Jain, Varanasi 1968, 1:6 p.4.

21. R. Vijalakshmy, A study of the Civakacinthmany, p.1.FN.1.

22. R. Vijiyalakshmy, A study of the perunkatai, p.p. 37-55.

23. சேக்கிழார், திருத்தொண்டர் மாக்கதை, சேக்கிழார் நாயனார் புராணம், (சென்னை, கழகப்பதிப்பு, 1970), பாடல்கள் 21, 22.

பயன்பட்டவை

1. உதயணகுமார காவியம், உ. வே. சாமிநாதைய்யர் பதிப்பு, சென்னை, 1935.

2. கலித்தொகை, கழகப் பதிப்பு, 7-ஆம் பதிப்பு, சென்னை. 1967.

3. சிலப்பதிகாரம், இளங்கோ அடிகள், உ. வே. சாமிநாதைய்யர் பதிப்பு சென்னை, 1898.

4. சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர், உ. வே. சாமிநாதைய்யர் பதிப்பு, 6ஆம் பதிப்பு, சென்னை, 1957.

5. திருத்தொண்டர் மாக்கதை, சேக்கிழார், கழகப் பதிப்பு சென்னை, 1970.

6. பெருங்கதை, கொங்குவேளிர், உ.வே. சாமிநாதைய்யர் பதிப்பு, 4ஆம் பதிப்பு, சென்னை, 1968.

7. மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்.

1. Adaval Nity, The Story of King Udayana as gleaned from Sanskrit, pali and prakrit sources, Chowkeamba sanskrit Studies, Vol. Lxxiv, Varanasi 1970.

2. Cunningham, A., The Ancient Geography of India 1, The Buddist period, Varanasi, 1963.

3. Jain J.C. Inportance of Vasudevhindi, Lecture delivered under the auspices of the Sudesien Institute dər Uuiversitat Heidelberg, Abteilung for Indologie in July 1978.

4. Levy Sylvan Manimekalay, A Divinity of the sea, the Indian Historical Quarterly, Vol VI, December, 1930 No 4 pp 614 ff

5. Nelson Donal, Brhatkatha studies: The Tamil version of the Brhatkatha, Indo Iranian Journal, Vol 22, Holland, 1980, pp. 221-235.

6 Vijayalakshmy R The Tamil Perunkatai and its relationship to the Brhatkatha. 1. The Viricikai Episode, Indo-Iranian Journal, Holland, 1981.

7 —— A Study of the Civakacintamani, Ahmedabad, L. D. Series No. 82. 1981.

முதலிரு காப்பியங்கள்

கரு. நாகராசன்

முதற்காப்பியங்களின் தோற்றம்

அன்னைத் தமிழை அலங்கரிக்கின்ற காப்பிய அணிகலன்கள் பலவகைப்படும். அக்காப்பியங்களின் அமைப்பின் அடிப்படையில், பெருங்காப்பியம் எனவும், சிறுகாப்பியம் எனவும் பொதுவாக அவற்றைப் பகுத்துக் கூறுவர். அக்காப்பியங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதைத் தமிழ் இலக்கண நூலாரும், வடமொழி இலக்கண நூலாரும் தத்தம் நிலைகளுக்கேற்ப வரையறுத்துக் கூறியுள்ளனர். இலக்கண நூலாரின் வரையறைகளை அப்படியே ஏற்றுப் பெருங்காப்பியங்கள் அமைந்துள்ளன என்று கூறமுடியாதெனினும், பெரும்பாலான அடிப்படைக் கோட்பாடுகள் அமைவுடையனவாகவே காணப்படுகின்றன.

பெருங்காப்பியங்கள் என்ற வரையறைக்குட்பட்ட இலக்கியங்கள், தமிழ் மொழியில், இன்று பலவாகத் காணப்படினும், முதன் முதலில் தோன்றிய பெருமை சிலப்பதிகாரத்திற்கும், அதனையடுத்துத் தோன்றிய சிறப்பு மணிமேகலைக்கும் உண்டு. காலத்தாலும் கதையமைப்பாலும் இவ்விரு காப்பியங்களுக்கும் உள்ள தொடர்பு கருதி, ‘முதற்காப்பியங்கள்’ எனவும், ‘இரட்டைக் காப்பியங்கள்’ எனவும் இவற்றை இணைத்துப் பேசுவர் ஆராய்ச்சியாளர்.

தொடக்க காலத்தில், தனிப்பாடல்களைப் போன்று தன் உணர்ச்சிப் பாடல்களாகவே தமிழில் பாடப்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை அவ்வாறே அமைந்துள்ளன. ஏதேனும் ஒரு கருத்து, ஒரு நிகழ்ச்சி பற்றியே அப்பாடல்கள் விரித்துக் கூறும். காலப் போக்கில் அந்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களே தொடர்நிலைச் செய்யுள்கள் தோன்றக் காரணமாகின்றன. ‘‘ஒரு கருத்து, ஒரு நிகழ்ச்சி அல்லது ஓர் உணர்வு என அமைந்த பாடல் பொருண்மை, தன் சிறு எல்லைகளை விட்டு வளர்ந்தபோது தொடர்நிலைச் செய்யுள் வகை தோற்றம் கொண்டது,’’[1]

ஒரு பொருள் பற்றிப் பல பாடல்களில் விரித்துக் கூறும் பாங்கும், சொல் தொடரான அந்தாதியமைப்பு முறையும் சங்க இலக்கியங்களிலேயே காணப்படுவதால், அக்காலத்தையே தொடர்நிலைச் செய்யுளின் தோற்ற காலமாகவும் கருதலாம் என்றும் கூறப்படுகிறது.[2] எனினும் கருத்து இயைபுடன் கதைத் தொடர்ச்சியும் அமையுமாறு தோன்றிய தொடர்நிலைச் செய்யுள்களே பெருங்காப்பியம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அந்த அமைப்பிற்கேற்பத் தோன்றிய முதற் காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாகும்.

தனி மனிதனைப் பற்றிய ஒரு கருத்தை அல்லது அவன் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிப் பாடுவதே படைப்பாளனின் நோக்கமாக அமைந்தபோது தனிப்பாடல்கள் வடிவில் பல சங்க இலக்கியப் பாடல்கள் தோன்றின. தனி மனிதனை மட்டுமன்றி அவனோடு தொடர்புடைய சமுதாயப் பின்னணிகளையும் அடிப்படையாகக் கொண்டு, அவன் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் விரித்துக் கூறுவது படைப்பாளனின் நோக்கமாக வளர்ந்தபோது தொடர்நிலைச் செய்யுள்களாகப் பெருங்காப்பியங்கள் மலரத் தொடங்கின. படைப்பாளனின் நோக்கத்திற்கேற்பவே பயன்கள் அமைகின்றன.

சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து முதற் காப்பியங்கள் தோன்றியுள்ளமையால், சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை அமைந்துள்ள ஆசிரிய யாப்பினாலேயே இவ்விலக்கியங்களும் அமைந்துள்ளன. சமயக் கருத்துகள் சங்க இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன. ஆனால் பிற சமயக் கருத்துகளைச் சாடும் தீவிரப் போக்கு அவ்விலக்கியங்களில் காணப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் பல்வேறு சமயக் கருத்துகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனால் தனிப்பட்ட சமய விருப்பு, வெறுப்புகளை அதில் காணமுடியவில்லை. மணிமேகலையிலோ அதற்கு மாறுப்பட்ட நிலையைக் காணமுடிகிறது. சமயப் பிரச்சார, எதிர்ப்பிரச்சார நிலைகளை மணிமேகலையில் மிகுதியாகக் காணமுடிவதால் பிறமொழிச் சொற்களையும், புத்த சமயச் சொற்களையும் இக்காப்பியத்தில் மிகுதியாகக் காண முடிகிறது.[3] சில காதைகளில் ஆசிரியப்பாவின் நடையும்கூடப் பிற்காலத்தில் பாடப்பட்டதுபோல எளிமையாக அமைந்துள்ளது. நூலாசிரியரின் சமயநோக்கமே பிற மொழிச் சொல் கலப்பிற்கும் எளிமைக்கும் காரணம் எனலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை-பெயர்க்காரணம்

சிலப்பதிகாரம் என்ற பெயரை நூலுக்குத் தாம் ஏன் சூட்டினார் என்பதை இளங்கோவடிகளே நூலின் பாயிரத்தில் தெளிவுபடுத்துகிறார்.

சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரான்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்[4]

என்பது அவர் தரும் விளக்கம். சிலம்பு காரணமாகவே சிலப்பதிகாரம் தோன்றியுள்ளது. ஆனால் நூற்பெயராக அமையுமளவிற்கு இன்றியமையாமையுடைய சிலம்பு யாருடையது என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சூழ்வினை என்பதற்கு, 'சூழ்ந்த சிற்பத் தொழில்' என்று உரை காணும் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர், அப்படிப்பட்ட சிலம்பாகக் கண்ணகியின் சிலம்பையே கருதுகிறார். அறிஞர்கள் பலரும் அரும்பத உரையாசிரியரின் கருத்தையே ஏற்றுப் போற்றியுள்ளனர்.

கண்ணகியின் சிலம்பை முதலாகக் கொண்டு பொருளீட்டி, இழந்த செல்வத்தை மீண்டும் பெறலாம் என்று எண்ணிக் கோவலன் மனைவியுடன் மதுரை சென்றதாலும், அங்கு அச் சிலம்பை விற்கச் சென்றவிடத்துப் பொற்கொல்லனின் சூழ்ச்சிக்கு ஆளாகி மடிவதாலும், தனது பிறிதோர் சிலம்பின் மூலம் தன் கணவன் கள்வனல்லன் என்று பாண்டிய மன்னனிடம் கண்ணகி வழக்குரைத்து வெல்வதாலும் கண்ணகியின் சிலம்பே நூற்பெயருக்குக் காரணமாக அமைந்தது என்று வலியுறுத்தப் படுகிறது,[5] பொதுவாகக் கூறப்படும் இக்காரணங்களை மறுத்து, கோப்பெருந்தேவியின் சிலம்பே நூற்பெயருக்குக் காரணமாக அமைந்தது என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

"கோப்பெருந்தேவின் சிலம்புக்கள்வன் என்று கண்ணகி கேள்வன் கொலைப்பட்ட காரணத்தாற்றான், செழியனுக்கு அரசியற் பிழைப்பும், கண்ணகிக்கு உயர்ந்தோர் ஏத்தும், கோவலனுக்கு ஊழ்வினையூட்டும் நேர்ந்தன"[6] என்று கூறப்படுகிறது. முப்பெரும் உண்மைகளை உணர்த்த விரும்பிய இளங்கோவடிகள் அவற்றை உணர்த்துவதற்குக் கருவியாகச் சிலம்பு அமைந்துள்ளது என்று கூறுவார். இளங்கோவின் கூற்றை ஆழ்ந்து நோக்கும் போது இங்குக் கூறப்பட்டவாறு

கோப்பெருந்தேவியின் சிலம்புதான் நூற்பெயருக்குக் காரண மாக அமைந்திருக்குமோ என்று ஐயுற வேண்டியுள்ளது. ஏனெனில் முப்பெரும் உண்மைகளும் புலப்படக் காரணமாக அமைந்திருந்தது கோப்பெருந்தேவியின் சிலம்பே என்பது இங்குத் தெளிவு படுத்தப்படுகிறது.

பாண்டிய மன்னனுக்குச் சிக்கலைத் தோற்றுவித்தது கோப் பெருந்தேவியின் சிலம்பேயாகும். அச்சிக்கல் தீர்வதற்குத் துணைசெய்தது கண்ணகியின் சிலம்பு. சிக்கலைத் தோற்று வித்த சிலம்பே நூற்பெயருக்குக் காரணமாக அமைந்தது என்று கருத வாய்ப்பு உண்டு. காப்பியத் தலைவி கண்ணகி என்பதால் அவளின் காற்சிலம்பே நூற்பெயருக்குக் காரணமாக அமைந் திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. நூலின் பெயரள விலும்கூடக் கண்ணகிக்கு ஏற்றம் தரவேண்டுமென்பது இளங் கோவடிகளின் எண்ணமாக இருந்திருப்பின், மணிமேகலை என்று நேடியாகச் சாத்தனார் பெயர் சூட்டியது போன்றே-கண்ணகி யின் பெயரையும் காப்பியத்திற்குச் சூட்டியிருப்பார். இவ்வாறு செய்யாமையும் கோப்பெருந்தேவியின் சிலம்பே நூற்பெயருக் குக் காரணமாக அமைந்துள்ளது என்ற எண்ணத்திற்கு வலிமை யூட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியத்தின் பெயரமைப்பில் எவ்விதச் சிக்கலும் எழுவதற்கு வாய்ப்பு இல்லை, காப்பியத் தலைவியின் பெயரையே நூற்பெயராக அமைத்துள்ளார் ஆசிரியர். ஆனால், அன்றைய நிலையில் சமுதாயத்தால் வெறுக்கப்பட்ட ஓர் இனத் தில் பிறந்தவளை காப்பியத் தலைவியாக்கியது சாத்தனார் செய்து காட்டிய மாபெரும் புரட்சி எனலாம்.

''பிணியெனக் கருதப்பட்ட பிரிவினரைக் காப்பியநாயகராக உயர்த்துவது எளிய செயலன்று: மரபை மாற்றிய வலிய செய லாகும். எனவே, சாத்தனார் கணிகை மகளைக் காப்பியத் தலைவியாக்கியது புரட்சியன்றோ?''[7]

பெண்ணின் பெருமையை இளங்கோவடிகளும் பேசியுள் ளார். ஆனால் கணிகை மகளைக் காப்பியத் தலைவியாக்கிய துடன், அவள் பெயரையே நூலுக்கும் சூட்டியுள்ளதில் சாத்தனாரின் புரட்சியுள்ளத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. நூலின் பெயர்க் காரணமே ஆசிரியரின் நோக்கத்தை நன்கு புலப்படுத்துகிறது.

நோக்கமும் பயனும்

நோக்கங்களுக் கேற்பவே பயன்கள் அமைகின்றன. ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப''[8] என்ற திருக்குறளில், 'எண்ணிய' என்பது நோக்கத்தையும், 'எய்துப' என்பது நோக்கத்தினால் விளையும் பயன்களையும் உணர்த்தும். இப்பொது விதி சில நேரங்களில் பொருந்தாமல் போய்விடுவதும் உண்டு. நல்லவர்களின் நோக்கம் நிறைவேறாமல் போவதும், தீயவர்களின் நோக்கம் உரிய பயனைத் தருவதும் உலகியல் நிலையில் காணக் கூடியவையாகும். 'அறவோர்க்கு அளித்து அந்தணர் ஓம்பி' வாழவேண்டுமென்பது கண்ணகியின் நோக்கம். அந்நோக்கம் உரிய பயனை விளைவிக்கவில்லை என்பதையே உணர்கிறோம். இது போன்று பலரது நன்நோக்கங்கள் நிறைவேறாமல் போய்விட்டதை முதற் காப்பியங்கள் இரண்டிலுமே காண முடிகிறது. அவ்வாறு நிறைவேறாமல் போனமைக்குரிய காரணத்தை நேரடியாக உணர்த்த முடியாமல் போகும் போது 'முற்பிறவியின் வினைப் பயன்' என்று பிறிதோர் காரணத்தைக் காட்டும் முறையினைத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் காண முடிகிறது. இப்பிறவியில் எவருக்கும், எவ்விதத் தீங்கும் செய்யாததுடன், பலருக்குப் பேருதவி செய்த 'கருணை மறவ'னான கோவலனின் துன்பங்களுக்குக் காரணத்தைக் காண முற்பட்ட மாடலன்,

> **''இம்மை செய்தன யானறி நல்வினை;**
> **உம்மைப் பயன்கொல்...''**[9]

என்று, முற்பிறவிப் பயனாக இருக்கக் கூடும் என்ற ஐயத்துடன் அமைகிறான். எனவே, நோக்கங்கள் என்ற நிலையில் இலக்கிய மாந்தர்களின் இப்பிறவி நோக்கங்களைய உணர முடிகிறது. ஆனால் பயன்கள் என்று பார்க்கும்போது, இப்பிறவியில் செய்த வினைகளின் பயன்களுடன், முற்பிறவியின் வினைப் பயன்களையும் சேர்த்து உணரமுடிகிறது. இந்த அடிப்படைக் கோட்பாடு முதற்காப்பிய ஆசிரியர்கள் இருவரிடமும் அமைந்துள்ளதைப் பல்வேறு பாத்திரங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

முதற்காப்பிய ஆசிரியர்கள், தாங்கள் காப்பியம் படைத்ததற்கான அடிப்படை நோக்கங்களையும், பாத்திரங்களின் மூலம் இச்சமுதாயத்திற்கு உணர்த்த விரும்பிய உன்னத நோக்கங்களையும் ஆங்காங்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். சில இடங்களில் நோக்கத்திற்கான பயன்களையும் ஆங்காங்கு உணர்த்தி

யுள்ளார்கள்; பல இடங்களில் படிப்பவர்களே பயன்களை உய்த்துணருமாறும் விட்டுள்ளார்கள்.

கதைத் தொடர்பு மட்டுமன்றி, பல்வேறு கருத்துகளின் அடிப்படையிலும் முதற்காப்பியங்கள் இரண்டும் நெருங்கிய தொடர்புடையனவாக அமைந்துள்ளன. அவ்விரு காப்பியங் களும் உணர்த்தும் நோக்கங்கள் சில பொதுக் கூறுபாடுகளின் அடிப்படையில் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

காப்பியம் படைத்த நோக்கம் - சிலப்பதிகாரம்

ஒவ்வொரு படைப்பாளனுக்கும் அப்படைப்பை உருவாக்கு வதற்கென்று சில இன்றியமையாத நோக்கங்கள் இருக்க வேண்டும். சிலர் அந் நோக்கங்களை வெளிப்படையாகவே கூறிவிடுவர்; சிலர் படிப்பவர் உணர்ந்து கொள்ளச் செய்து விடுவர். முதல்நிலைக்குச் சிலப்பதிகாரமும், இரண்டாம் நிலைக்கு மணிமேகலையும் சான்றுகளாக அமைகின்றன.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்[10]

ஆகிய முப்பெரும் உண்மைகளை உணர்த்துவதையே தம் நோக்க மாக இளங்கோவடிகள் எடுத்துக் காட்டுகின்றார். நோக்கங் களுடன் பயன்களையும் சேர்த்தே கூறிவிடுகிறார் ஆசிரியர். அரசியல் பிழைத்தால் அறம் கூற்றாகும்; உரைசால் பத்தினியாக விளங்கினால் உயர்ந்தோர் ஏத்துவர்; ஒருவரது முற்பிறவி வினைப் பயன் இப்பிறவியில் உரிய பயனைத் தரும் என்பது அவரது விளக்கம். எதைச் செய்தால் எது பயனாகும் என்று உணர்த்துவதன்மூலம், நற்பயன்கள் விளைய வேண்டுமானால் நோக்கம் உயர்ந்தனவாக அமைய வேண்டும் என்று உணர்த்து கிறார் இளங்கோவடிகள்.

இளங்கோவடிகள் உணர்த்திய நோக்கங்களேயன்றி வேறு சில நோக்கங்களையும் அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். தத்தம் நுண்மாண் நுழைபுலத்திற்கேற்ப வெவ்வேறு நோக்கங் களை அறிஞர்கள் எடுத்துக்காட்ட முற்படினும், அந்நோக்கங் களை அவர்கள் காட்டுவதற்குக் காரணமாக அமைந்தவர் இளங்கோவடிகளே என்பது உணர்தற்குரியது.

''...எனவே, கண்ணகி கடவுள் தன்மை எய்தியதைச் சிறப்பிப்பதே அவர் நூல் எழுதியதன் நோக்கமாய் இருத்தல் வேண்டும்.''[11]

''அழிவில்லாத இன்பத்தை எய்த முயல வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்து, வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அடிகள் சிலப்பதிகாரத்தை அருளினார்''[12] என்ற இரு காரணங்கள் ஒரு அறிஞரால் உணர்த்தப்படுகின்றன.

சமய நோக்குடன் சிலப்பதிகாரத்தை நோக்குபவர்களுக்கு இளங்கோவின் உள்ளம் மேற்கண்டவாறு புலப்படுகிறது. கண்ணகி கடவுள் தன்மை எய்தியதைச் சிறப்பிப்பதும், அழிவில்லாத இன்பத்தைப் பெறுமாறு அனைவரையும் தூண்டுவதும் உயர்ந்த நோக்கங்களேயாம். ஆனால் அதற்காக மட்டுமே அடிகள் காப்பியத்தை அருளினார் என்று கூற முடியாது. அவற்றினும் இன்றியமையாத சில நோக்கங்களை மனித சமுதாய மேம்பாட்டிற்கென்று அவர் வலியுறுத்த விரும்பினார் என்பதையும் உணர வேண்டும். ''மாந்தர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை விடவும் எவ்வாறு வாழவேண்டும் என்பதிலேயே இளங்கோவடிகள் நாட்டங் கொண்டிருக்க வேண்டும்''[13] எனவே, தம் காப்பிய மாந்தர்கள் அடைந்த பெருமை, சிறுமைகளைக் காரண காரியங்களுடன் எடுத்துக் காட்டுவதுடன் அமைந்து விடாது, உயர்ந்த நோக்கமுடைய வாழ்வு எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனையும் ஆங்காங்கு வலியுறுத்திச் செல்கிறார் இளங்கோவடிகள்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்' என்ற உண்மையைப் பாண்டியன் நெடுஞ்செழியன் வாயிலாக உணர்த்திய அடிகள், 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்' என்ற உயரிய நோக்கம் காப்பியத் தலைவியின் மூலம் வெற்றி பெறச் செய்துள்ளார்.

கவுந்தியடிகளின் மூலமாக ஜைனசமயக் கருத்துகளை இளங்கோவடிகள் விரித்துக் கூறுவதால், இளங்கோவடிகளின் சமயமும் அதுவே என்று உரைப்போரும் உளர். ஜைனசமயக் கோட்பாடுகளையே நேரடியாகவும், மறைமுகமாகவும் பாத்திரங்களின் வாயிலாக அடிகள் உணர்த்தியுள்ளார் என்ற எண்ணம் பலராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

''இம்மையில் வாழ்க்கை இல்லை; மறுமைக்கு வேண்டுவ தனைத் தேடுவதே. நாம் செய்யத் தக்கது என்றும், நம் வாழ்வை இயக்குவது நமக்கு வேறாகப் புறத்தே சிலர் காண முயலும் கடவுளன்று; நம் உயிரோடு ஒட்டி வரும் ஊழே என்றும், நம் பாவ புண்ணியங்களுக்கேற்ப நம் ஊழ் அமையு மென்றும், அதனைத் தெளிந்து வாழ்வதே வாழ்வு என்றும் கூறப்படுகின்ற ஜைனசமயக் கோட்பாடுகளே இளங்கோவடி களால் விளக்கப்படுகின்றன''[14] இக்கருத்தே, ஜைனசமயக் கோட்பாடுகளை விளக்குவதற்காகவே அடிகள் சிலப்பதி காரத்தை அருளினார் என்று எண்ணத் தூண்டுகிறது.

இக்கருத்தும் இப்படியே ஏற்றுக் கொள்ளத்-தக்கதாக அமை யாது. ஏனெனில். பல்வேறு சமயக் கடவுளர் பெயர்களையும் பக்திச் சுவை தோன்றக் குறிப்பிட்ட அடிகள், 'நம் வாழ்வை இயக்குவது நமக்கு வேறாகப் புறத்தே சிலர் காண முயலும் கடவுளன்று' என்ற கருத்துடையவராக இருப்பார் என்று எதிர் பார்க்க முடியாது. மேலும், கடவுள் மறுப்புக் கொள்கை யுடையவராக அடிகள் இருந்திருப்பாரெனின்,

தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்[15]

என்று மாடலன் வாயிலாக உலக மாந்தர்க்கு வேண்டுகோள் விடுத்திருக்கமாட்டார்.

மகளிரை இழிவு படுத்துவது ஜைனசமயம் என்ற கருத்தும் உண்டு. ''பெண் பிறவியில் ஓர் ஆன்மா கைவல்ய ஞானத்தைப் பெற முடியாது; ஒழுங்காகத் தன் கடமைகளைச் செய்து வந்தால் மீண்டும் ஆண் பிறவி எடுத்தே அது மோட்சமடையும் என்பர்''[16] ஆனால். ஜைனத் துறவியான கவுந்தியடிகள் கண்ணகியின் மிகுபெரும் சிறப்பியல்புகளைக் கண்டு வியந்து,

கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்[17]

என்று பாராட்டச் செய்துள்ளார் இளங்கோவடிகள். மனித நிலையிலேயே தெய்வத்தைக் காணும் மனப்பாங்கு அமையப் பெற்றவர் இளங்கோவடிகள் என்பது, ஜைனத் துறவியின் வாயிலாகவே 'உரைசால் பத்தினி'யைத் தெய்வமாகப் போற்றச் செய்திருப்பதன் மூலம் புலப்படுகிறது.

பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் மழைவளம் பொய்க்காது; மண்வளம் குன்றாது; மன்னனின் செங்கோலாட்சியும் சிதையாது[18] என்றெல்லாம் கவுந்தியடிகள் வாயிலாகவே கூறச் செய்திருப்பது, வையத்துள் வாழ்வாங்கு வாழும் ஒரு ஆடவனோ, அல்லது பெண்ணோ உயர்ந்தோரால் போற்றி வணங்கப்படுவர் என்ற அடிகளது உயர்ந்த நோக்கத்தையே தெளிவுபடுத்துகிறது.

இக்கருத்துக்களை நோக்கும்போது, கண்ணகி கடவுள் தன்மை எய்தியதைச் சிறப்பிக்கவே அடிகள் நூலை அருளினார் என்பது அத்துணைப் பொருத்தமாக அமைவில்லை. மனித நிலையிலேயே கடவுள் நிலையிலும் உயர்ந்தவளாக மதிக்கப்படுகிறாள் கண்ணகி. அவ்வாறு மதிக்கப்படுவதற்குக் காரணம் அவளிடம் அமைந்திருந்த கற்பெனும் திண்மையாகும் என்பது அடிகள் காட்டும் காரணம்.

ஊழின் ஆற்றலை மிகுதியாக வலியுறுத்தியவர் இளங்கோவடிகள். ஊழின் ஆற்றலையுணர்ந்து, மறுமைக்கு வேண்டிய ஆயுத்தங்களைச் செய்வதே இவ்வுலக வாழ்க்கையின் நோக்கம் என்று அவர் கருதியுள்ளார்.

இம்மை செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல்......[19]
வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகி[20]
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென்[21]
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்து[22]

என்பன போன்ற பல இடங்களில் ஊழ்வினையின் வலிமையை உணர்த்தியுள்ளார் அடிகள். மேலும், பொதுநிலையில் மாடலன், கவுந்தி, சாரணர்கள் முதலியோர், வினையின் ஆற்றலையே பெரிதாக எடுத்துக் கூறுகின்றனர். இப் பிறவியில் செய்யும் வினைக்கேற்பவே மறுபிறவி அமையும் என்பதை

செய்வினை வழித்தாய் உயிர்செலும் என்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை......[23]

என்று ஐயமின்றி மாடலன் வாயிலாக அறிவுறுத்துகிறார் அடிகள்.

இதுகாறும், ஆசிரியர் கூற்றாகச் சில அடிப்படை உண்மைகளும், ஆராய்ச்சியாளர்களின் சிந்தனைத் திறன்களுக்கேற்ப எடுத்துக்காட்டப்பட்ட சில கருத்துகளும் அடிகள் சிலப்பதிகாரம் படைத்தற்கான நோக்கங்களாகக் காட்டப்பட்டன. இவைகளேயன்றி இன்னும் பல நோக்கங்களையும் எடுத்துக் காட்டுவோர் உளர்.

''காப்பிய நோக்கம் வெறும் கதை கூறுதல் அன்று; சில உண்மைகளை மட்டும் உணர்வது மன்று; ஓரிரு எண்ணங்களை வலியுறுத்துவது மட்டுமன்று; கவிஞரின் பலவகையான மன வெளிப்பாடுகளைத் தாங்குவது; மனத்தில் பொங்கியெழும் சிந்தனைச் சுழற்சிகள் தங்குவது; ஆய்வும் அறிவும் பொருந்துவது''[24] என்ற முடிபே சிலப்பதிகாரம் படைக்கப்பட்ட நோக்கத்தைத் தெளிவுபடுத்தும்.

மணிமேகலை

சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்கும் கதைத் தொடர்பு இருப்பது போலவே கருத்துத் தொடர்புகளும் உண்டு. சிலப்பதிகாரம் உணர்த்தும் முப்பெரும் உண்மைகளையும் மணிமேகலையிலும் காணமுடிகிறது.

அரசியல் பிழைத்தால் அறம் கூற்றாகும் நிலையை இளங்கோவடிகள் காட்டுகிறார். மன்னன் செய்யும் தவறு அவன் உயிர்க்கு இறுதி பயக்கும் என்ற உண்மையைப் பாண்டியனின் முடிவின் மூலம் உணர்ந்து கூறினார் அடிகள். அவ்வுண்மையை இன்னும் சிறிது ஆழமாக நோக்கினார் சாத்தனார். அவன் செய்யும் தவறு அவனை மட்டும் மாய்ப்பதில்லை; விண்மீன்களையும் நிலைபிறழச் செய்கின்றது, அதன் விளைவால் வானம் பொய்க்கின்றது. வானம் பொய்க்குமேல் உலகில் மனித உயிர்களே வாழ முடியாது என்று, அரசியல் பிழைப்பால் அந்நாடே அழியும் பேராபத்தை எடுத்துக் காட்டுகிறார் சாத்தனார்.

> **கோள்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;**
> **கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும்;**
> **மாரி வறங் கூரின் மன்னுயிர் இல்லை;**
> **மன்னுயிர் எல்லாம் மன்னாள் வேந்தன்**
> **தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்**[25]

என்பது சாத்தனார் வாக்கு. மன்னனை உயிராகவும் மக்களை உடலாகவும் எண்ணினார் சங்கப்புலவர்.[26] அவ்விதியைத் தலை கீழாய் மாற்றி, மக்களை உயிராகவும் மன்னனை உடலாகவும் மாற்றிய முதல் புரட்சியாளர் சாத்தனாரேயாவார். ஒரு மன்னன் அரசியல் நெறியில் பிழைப்பானெனின் அவன் உயிரை விடவேண்டியநிலை உருவாகும் என்பதை, இளங்கோவடிகளைப் போன்று நேரடியாக உணர்த்தாமல், அம்மன்னனின் உயிராகிய மக்களெல்லாம் மாய்வர்; உயிர் போய்விட்டால் பின்பு அவனுக்கு ஏது வாழ்வு என்று மறைமுகமாக உணர்த்தியிருப்பது சாத்த னாரின் சிறப்பைப் புலப்படுத்தும்.

''ஆள்பவர் கலக்குற மயங்கிய நல்நாடு''[27] எவ்வாறு ஒழுக்கக் கேடுகளுக்கு உறைவிடமாக அமையும் என்பதை விரி வாக எடுத்துக் காட்டுகிறார் சாத்தனார். அரசியல் பிழைப்ப தால் மக்கள் வாழ்வும் கெடுகிறது; வானமும் மழைதர மறுக் கிறது என்று காரண காரியங்களுடன் விரித்துக் கூறும் சாத்தனார், இளங்கோவடிகளின் கருத்தை வலியுறுத்துவதுடன் தெளிவுறுத்தவும் செய்கிறார் என்று கூறலாம்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தும் நிலையை எடுத்துக் காட்டினார் இளங்கோவடிகள். உயர்ந்தோரால் போற்றப்படும் பத்தினிப் பெண்டிர் தன்மைகளைத் தெளிவு படுத்துகிறார் சாத்தனார்.

நிறையின் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோன் அல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்[28]

என்பது பத்தினிப் பெண்டிர்க்குச் சாத்தனார் தரும் விளக்கம். ''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்''[29] என்ற வள்ளுவர் வாய்மொழி சாத்தனார் பாடலில் விளக்கம் பெற்றுள்ளது.

மண்திணி ஞாலத்து மழைவளம் தரும்
பெண்டிராயின் பிறர்நெஞ்சு புகாஅர்[30]

என்று கூறும் சாத்தனார், கவுந்தியடிகள் வாயிலாக இளங்கோவடிகள் கூறிய கருத்தை அப்படியே ஏற்றுப் போற்றி யுள்ளார். அரசியல் பிழைப்பதால் 'மாரி வறங் கூரும்' என்று கூறிய சாத்தனார். 'மழை வளம் தரும் பெண்டிர்' என்று

கூறுவதன் மூலம் உரைசால் பத்தினிகள் உள்ள நாட்டில் அவர்களுக்காகவேனும் மழை பொழியும் என்று அவர்களது சிறப்பைப் புலப்படுத்துகிறார்.

நல்ல குடும்பத்தில் பிறந்து, நல்ல சூழ்நிலையில் வளர்ந்து உரைசால் பத்தினியாக விளங்கிய கண்ணகி எவ்வாறு உயர்ந்தோர் புகழும் நிலையை அடைந்தாள் என்பதை இளங்கோவடிகள் காட்டினார். ஆனால்.

பத்தினிப் பெண்டிர் அல்லேம்; பலர்தம்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே[31]

என்று பிரகடனம் செய்யும் சித்ராபதியின் மகள் வயிற்றுப் பெண்ணாகிய மணிமேகலையை உரைசால் பத்தினியாக்கி, உயர்ந்தோர் தொழவும் செய்தார் சாத்தனார். இளங்கோவடிகளின் நோக்கம் இங்கு பெருவெற்றி பெறுவதை உணர முடிகிறது.

இளங்கோவடிகளைப் போன்று சாத்தனாரும் ஊழின் வலிமையை உணர்ந்து உணர்த்தியுள்ளார். ஒரு பிறவியில் செய்யப்படும் நல்வினை, தீவினைகளுக்கேற்பவே மறு பிறவி அமைகிறது என்பது சாத்தனாரிடம் வேரூன்றி விட்ட கோட்பாடாகும். பல்வேறு கிளைக் கதைகளைத் தம் காப்பியத்தில் இடம்பெறச் செய்துள்ளதின் நோக்கமே ஊழின் பெரு வலியை உணர்த்துவான் வேண்டியேயாம்.

'செய்வினை வழித்தாய் உயிர் செலும்' என்பது இளங்கோவடிகள் முடிபு. அம்முடிபை அப்படியே ஏற்று வலியுறுத்துகிறார் சாத்தனார்.

ஐயம் உண்டோ ஆருயிர் போனால்
செய்வினை மருங்கின் சென்று பிறப் பெய்தும்[32]

என்பது சாத்தனார் வாக்கு. உயிர்மட்டுமா வினைப்பயனுக் கேற்பச் சென்று சேர்கிறது? மனித உடம்பும் கூட வினைப் பயனாய் வருவது; வினைகளின் விளைவாக அமைவது என்று வினையின் ஆற்றலை மேலும் விளக்குகிறார் சாத்தனார்.

வினையின் வந்தது; வினைக்கு விளை வாயது;
புனைவன நீங்கில் புலால் புறத் திடுவது[33]

என்று தெளிவுபடுத்துகிறார் அவர்.

இளங்கோவடிகள் கூறியது போன்று இவ்வுண்மைகளை உணர்த்துவதெல்லாம் தமது நோக்கமாகச் சாத்தனார் குறிப்பிடவில்லை. எனினும் பல நிலைகளிலும் அடிகளிடம் நெருங்கிய தொடர்புடையவராகச் சாத்தனார் விளங்கிய காரணத்தாலும், கதை தொடர்ச்சியாலும் இவ்வுண்மைகளை இவரும் எடுத்துக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இளங்கோவடிகளைக் காட்டிலும் சாத்தனாரே இவ்வுண்மைகளைப் பெரிதும் வலியுறுத்தியிருப்பதால் மணிமேகலை படைக்கப்பட்டதற்கான நோக்கங்களாக இவைகளையும் கருதலாம்.

நோக்கங்களுக்கான காரணங்கள்

இவ்விரு காப்பியப் படைப்பாளர்களும் முப்பெரும் உண்மைகளைப் பெரிதும் வலியுறுத்தியமைக்குச் சில காரணங்களும் காட்டப்படுகின்றன. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்று அறிஞர் தெ. பொ. மீ. போன்றவர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் சமூகவியல் அடிப்படையில் பார்க்கும்போது வணிக வர்க்கத்தினரின் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்தில் இவ்விரு காப்பியங்களும் தோன்றியுள்ளமை புலப்படும். ''வணிக வர்க்கத்தினரின் கையோங்கிய காலப்பகுதியிலேயே மண்ணாள் வேந்தன் மீது குற்றம் சுமத்தி வெற்றியும் காணும் மனத்துணிவு ஏற்படும்''[34] என்ற கருத்து சிந்தனைக்குரியது.

மன்னனை முதலாகக் கொண்டு அவன் மூலமாகத் தமது வர்க்கச் செயல்பாட்டை நடத்துவரேனும், மன்னனைக் கட்டுப்படுத்தவும் கண்டிக்கவும் தயங்க மாட்டார் என்பதை இருநூல்களும் காட்டும். கருங்கக் கூறுவதாயின் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்' என்னும் கோஷத்திற்குப் பின்னால் வணிகரின் வலிய கரங்களைக் காணலாம்''[35] இவ்வடிப்படையில் நோக்கினால், பாண்டியன் அவையில் கண்ணகி எழுப்பிய போர்க்குரல், வணிக வர்க்கத்தின் உரிமைக் குரலாகவே கருதப்படுகிறது. கண்ணகியை இளங்கோவடிகள் போற்றிப் பாராட்டியிருப்பது, வணிக வர்க்கத்துப் பெண்ணினத்துக்குத் தரப்பட்ட பாராட்டென்றே எண்ணத்தோன்றுகிறது. சாத்தனார் வணிக வர்க்கத்தைச் சேர்ந்தவரென்பதால்

இளங்கோவடிகளின் இக்கருத்துக்களை விரும்பி வரவேற்று வலியுறுத்தியுள்ளார் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

"கூலவாணிகன் சாத்தனார், தம் சாதியினராகிய வணிக மரபினர் யாவரையும் உயர்ந்த நிலையில் வைத்துக் கதை அமைக்கின்றார். அவர் காப்பியத்தில் உள்ள வணிக மாதர் கற்புக்கரசியராகவும், சிறந்த குணம் உடையவராகவும் திகழ் கின்றனர். பிற சாதி மாதர்களிற் பலர் கற்புநெறி வழுவியவ ராகவும், கணவரால் கைவிடப்பட்டவராகவும் அமை கின்றனர்[36] என்ற கருத்து முற்கூறிய கருத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

இரு நூலாசிரியர்களும் ஊழின் வலிமையைப் பெரிதும் வலியுறுத்துவது ஏன் என்பதற்கும் காரணம் காட்டப்படு கின்றது. "போட்டி மயமான வர்த்தக உலகத்தில் வெற்றி தோல்விகள் தனிப்பட்டவரின் செயல்களையோ திறமையையோ பொறுத்தவையல்ல; அவனுடைய சக்திக்கு அப்பாலுள்ள சூழ் நிலைகளைப் பொறுத்துள்ளது என்னும் பௌதிக உண்மை தான் ஊழ்வினை என்னும் மதக்கோட்பாடாக வெளியிடப் படுகிறது... வர்த்தகத் துறையிலிருந்து தோன்றிய இவ் உண்மையை வாழ்க்கை முழுவதற்கும் பொருந்துமாறு அமைத்து விளக்குங் கூறுவதே சிலம்பு கூறும் செய்தியாகும்"[37] மணி மேலைக்கும் இவ்விளக்கம் பொருந்தும்,

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். முதற்காப்பியங்கள் தோன்றிய காலத்தில் வணிக வர்க்கம் செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அவ்வர்க்கத்தினரின் சில கோட்பாடுகள் காப்பியங்களில் இடம்பெற்றிருந் திருக்கலாம். அப்படியேயிருப்பினும், வணிக வர்க்கக் காப்பி யங்களின் மனிதகுல மேம்பாட்டிற்காகக் கூறப்படும் பொது வான நோக்கங்களைப் போற்றி வரவேற்பதே அறிவுடையார் கடனாகும்.

பசிப்பிணி மாற்றும் பரந்த நோக்கம்

இளங்கோவடிகள் உணர்த்திய நோக்கங்களையெல்லாம் சாத்தனார் உணர்த்தியிருப்பதுடன், அடிகள் உணர்த்தாத உயர்ந்த நோக்கமொன்றையும் இவர் உணர்த்தியுள்ளார். அதுவே மக்கட் சமுதாயத்தைப் பிடித்து வருத்திக் கொண்டி

ருந்த பசிப்பிணி என்னும் கொடிய பிணியை மாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமாகும்.

செல்வச் சீரழிவு, தார்மீக வீழ்ச்சி, அரசியல் நெறி பிழைத்தல் போன்ற சில சீர்கேடுகளை இளங்கோவடிகளும் கண்டார். ஆனால் அக்குறைபாடுகள் நேர்வதற்கெல்லாம் முதற்காரணமாக இருப்பது ஊழ்வினையே என்று அவர் அமைதிகாண முயன்றுள்ளார். ஆனால் ஊழின் ஆற்றலைச் சாத்தனாரும் உணர்ந்தவராயினும் அடிகளைப் போன்று அமைதிகாண இவர் விரும்பவில்லை. சமூகச் சீர்கேடுகளைக் கண்டு காணாதவர்போல் ஒதுங்கி நிற்க விரும்பாத சாத்தனார் அவற்றைத் தம் காப்பியத்தில் எடுத்துக்காட்டித் தீர்வு காணவும் முற்பட்டுள்ளார்.

பொருளாதார முரண்பாட்டின் காரணமாக நாட்டிலே பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. வரிசெலுத்த முடியாதவர்கள் சிறையில் வடுகின்றனர்;[38] பசியுறும் ஆருயிர் மக்கள் பலராவர்.[39] இவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பினார் சாத்தனார். சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றும் தார்மீக மறுவாழ்வுப் பணிக்கு வழிகோலிய அவர், பசிப்பிணி மாற்றும் உயர்ந்த நோக்குடன் மணிமேகலையை அப்பணியில் ஈடுபடுத்தினார்.

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே[40]

என்று புரட்சிப்பண் பாடினார் சாத்தனார்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்[41]

என்று இருபதாம் நூற்றாண்டுக் கவிஞன் எழுப்பிய புரட்சிக் குரல் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சாத்தனாரால் எழுப்பப் பட்டதே என்பதை உணர்ந்து வியப்படைகிறோம்.

வறியவர்களின் வறுமையைப் போக்குவதற்காகப் பொருள் கொடுப்பதே ஈகை எனப்படுவதாகும்; மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும்[42] என்று ஈகைக்கு இலக்கணம் கூறினார் திருவள்ளுவர். இதே கருத்தை பசிப்பிணி மாற்றும் பணிக்கும் பொருந்துமாறு கூறுகிறார் சாத்தனார்

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்;
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை [43]

உண்மை நெறியில் வாழ விரும்புவோர், பசித்துயரால் ஆற்றாது தவிப்பவர்களின் துன்பத்தைத் துடைப்பவர்களே யாவர் என்று வரையறுத்துக் கூறுகிறார் சாத்தனார். ஆற்றாது தவிப்போரின் அரும்பசி களையாமல் எஞ்சிய அறப்பணி புரிபவர்களெல்லாம் 'அறவிலை பகர்வோர்'களே என்ற சாத்தனாரின் புரட்சிக் குரலில்,

இம்மை செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்[44]

என்ற சங்கப் புலவனின் நேரிய அறஉணர்வு பிரதிபலிப்பதை உணர முடிகிறது. எனினும், பசிப்பிணி மாற்றுவது ஒன்றே பயன் கருதாது செய்யப்படும் அறப்பணி என்ற கருத்தை வெளிப்படையாக முதலில் முழங்கியவர் சாத்தனாரேயாவர்.

பசிப்பிணியை மாற்றும் பணியில் மணிமேகலையை ஈடுபடுத்திய சாத்தனார், அப்பிணி எத்துணைக் கொடியது என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.[45] 'பசிப்பிணி என்னும் பாவி'யைச் சமுதாயத்திலிருந்து அகற்றவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் சாத்தனாருக்கு அமைந்திருந்ததால்தான் மணிமேகலையை ஓர் அறச் செல்வியாகக் காணமுடிகிறது

''...ஆயினும், அதன் முதன்மையான நோக்கம், 'மக்கள் அனைவரும் பட்டினியின்றி வயிறார உண்டு வாழ வேண்டும். ஏனைய உயிர்களும் உணவுண்டு இனிது வாழவேண்டும்; வறுமையற்ற சமிதாயத்திலேதான் மனிதத் தன்மை நிலைத்து நிற்கும்; பசிப்பிணி என்னும் பாவி ஆட்சி புரியும் சமுதாயத்தில் ஒழுக்கம் நிலைத்திருக்காது; இன்பத்திற்கு இடமில்லை; மகிழ்ச்சிக்கு வாழ்வில்லை. சாந்தி, சமாதானம் ஒழியும், ஆதலால், எல்லா உயிர்களும் பட்டினிக்கு ஆளாகாமல் காப்பதே அறிஞர்கடமை; ஆட்சியின் பொறுப்பு''
''இவ்வுண்மைகளையே எடுத்துக்காட்டுகிறது மணிமேகலை''[46]

மணிமேகலைக் காப்பியம் படைக்கப்பட்டதற்கான நோக்கங்கள் பலவாக இருப்பினும் சாத்தனாரின் சமுதாயப்

பார்வையையும் புரட்சி உள்ளத்தையும் அடையாளம் காட்டும் உயர்ந்த, பரந்த நோக்கம் ஆற்றாமாக்கள் அரும்பசிகளைய எண்ணியதேயாம்.

சாத்தனாரின் சமய நோக்கம்

இளங்கோவடிகளும் பல்வேறு சமயக் கருத்துகளைத் தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். கவுந்தியடிகள் என்ற பாத்திரத்தின் மூலம் ஜைனசமயக் கருத்துக்களை அவர் விரிவாகக் கூறியிருப்பது கொண்டு இளங்கோவடிகளையும் ஜைன சமயத்தவராகக் கருதுவோர் உண்டு. எனினும், எந்தச் சமயத்தின் மீதும் விருப்போ, வெறுப்போ வெளிப்படுத்தாமல் நடுநிலையுடன் காப்பியத்தை நடத்திச் சென்றிருப்பது அவரது பண்பட்ட உள்ளத் தன்மையை உணர்த்துகிறது. ஆனால், அதற்கு மாறுபட்ட நிலையைச் சாத்தனாரிடம் காண முடிகிறது.

பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பரப்புவதற்காகவே அவர் மணிமேகலைக் காப்பியத்தைப் படைத்துள்ளார். பசிப்பிணி மாற்றும் பணியைச் செய்யுமாறு மணிமேகலையை அவர் தூண்டியதன் நோக்கம், வயிறார உண்டபின் அவனிடம் பௌத்த சமயக் கோட்பாடுகளைக் கூறிப் பின்பற்றச் செய்ய வேண்டும் என்பதுவே யாம். சமயத்தின் பேரிலாவது பசிப்பிணி மாற்ற முற்பட்ட அவரது பணியை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. அன்று அவர் செய்து காட்டிய முறையைப் பின்பற்றிய காரணத்தால்தான் இன்று கிறித்துவ சமயம் இம் மண்ணில் வேரூன்றியுள்ளது என்பது வரலாறு உணர்த்தும் உண்மை.

எந்தச் சமயம் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக, சமுதாயத்தின் துயர்களைத் துடைக்க முற்படுவதாக அமைகிறதோ அதுவே நிலைத்து வாழும். அந்தத் தன்மையை இழந்துவிட்ட சமயம் சமுதாயத்தாலும் புறக்கணிக்கப்படும். நமது மண்ணில் சில சமயங்கள் இன்று வளர்ச்சி பெற்று வருவதற்கும், வளர்ந்த நிலையிலிருந்த சில சமயங்கள் இன்று மக்களால் புறக்கணிக்கப்படுவதற்கும் மேற்கூறிய காரணமே பொருந்தும்.

எப்படிச் சமயத்தை வளர்ப்பது என்பதை எடுத்துக் காட்டியவர் சாத்தனார். ஆனால் அவர் காட்டிய வழியைப் பின்பற்ற மறந்ததாலோ என்னவோ பௌத்த சமயத்தின் வளர்ச்சி இங்குத் தடைப்பட்டுவிட்டது. ஆனால் மணிமேகலைக் காப்பியத்தின் பயன், மற்ற சமயங்களின் வளர்ச்சிக்குப் பயன்பட்டுள்ளது.

பௌத்த சமயக் கோட்பாடுகளே நூலில் பலவிடங்களில் எடுத்துக் காட்டியிருப்பதுடன் சில காதைகளையே சமயப் பிரச்சாரப் பகுதிகளாக மாற்றியுள்ளார் சாத்தனார்,[47] சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஆகியன சமயப் பிரச்சாரம் நிறைந்துள்ள காதைகள்.

சிலப்பதிகாரத்தின் மூலம் பல்வேறு கலை நுணுக்கங்களையும் அறிந்து கொள்வது போன்று, மணிமேகலையின் மூலம் தமிழ் நாட்டில் அன்றிருந்த பல்வேறு சமயக் கோட்பாடுகளையும் நன்கு உணர முடிகிறது. ''தமிழில் பல் சமயக் கோட்பாடுகளை வரிசையாக எடுத்துக் காட்டும் முதல் நூல் மணிமேகலையேயாகும்.''[48]

புத்தபிரானின் பெருமைகளையும்,[49] புத்த சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளான நான்குவகை வாய்மைகளையும், ஐந்து வகை ஒழுக்கங்களையும்[50] சாந்தனார் எடுத்துக் காட்டியிருப்பது அவரது சமயப்பற்றையும் கடமையையும் உணர்த்துவதாகக் கொள்ளலாம், ஆனால்,

''பல்வேறு சமயப் படிற்றுரை''[51] என்று பிற சமயக் கோட்பாடுகளைக் குறைவாக மதிப்பிடும் போதுதான் அவரது சமயப் பற்றின் தீவிரவாதம் தெரிய வருகிறது, பிற சமயங்களைக் கடுமையாக விமர்சிப்பதும் தமது சமயத்தின் வளர்ச்சிப் பணியாகும் என்று அவர் எண்ணியிருப்பதுபோல் ஐயுற வேண்டியுள்ளது.

பிற சமயங்களில் சேர்ந்து பல்வேறு அல்லல்களுக்கு ஆளானவர்கள் இறுதியில் பௌத்த சமயத்தில் சேர்ந்த பிறகே உய்வடைந்தனர் என்பதைப் பல கிளைக் கதைகளின் மூலம் உணர்த்துகிறார் சாத்தனார். புத்தபிரான் அருளால் மட்டுமே பிறவி நீங்கப் பெறுவர் என்பதை உறுதியாக வலியுறுத்துகிறார் அவர்.

கோவலனைக் காப்பியத் தலைவனாகப் படைத்த இளங்கோவடிகள் அவன் எச்சமயத்தினன் என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் சாத்தனாரோ, கோவலனுக்கு ஒன்பது தலைமுறைக்கு முன்னோனாய கோவலன் முதல் யாவரும் பௌத்த சமயமே[52] என்று உறுதிப்படுத்த முற்படுகிறார். கோவலனும் கண்ணகியும் அப்போது பௌத்த சமயத்தைச் சார்ந்திருக்கவில்லை என்பது சாத்தனாருக்குத் தெரியும். அது

அவருக்குப் பெரும் மனக்குறையாகவே இருந்திருக்க வேண்டும், அதனால், பின்வரும் பிறவிகளில் அவர்கள் பௌத்த சமயத்தவ ராய்ப் பிறந்து இறுதியில் புத்த பகவான் அருளால் பிறவி நீங்கப் பெறுவர்.[53] என்று ஆறுதலடைகிறார்.

பசிப்பிணி என்னும் பாவியை உலகிலிருந்தே ஒழிக்க வேண் டும் என்று சூளுரைத்தபோது சாத்தனாரின் பரந்த நோக்கம் புலப்பட்டது. பௌத்த சமயப் பிரச்சாரகராகக் குறுகிய வட் டத்திற்குள் அவரைக் காணும்போது அவரது நோக்கமும் குறுகிவிடுவதை உணர முடிகிறது.

பொதுவான நோக்கங்கள்

இருகாப்பியங்களும் தோன்றியதற்கான அடிப்படை நோக் கங்கள் இதுவரை எடுத்துக் காட்டப்பட்டன. காப்பிய ஆசிரி யரே வெளிப்படையாக எடுத்துக் காட்டிய நோக்கங்களும், காப்பியத்தின் மூலம் இன்றியமையாதன என மறைமுகமாக உணர்த்திய நோக்கங்களும் இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றுள் அடங்கும். இவற்றைச் சிறப்பான நோக்கங்களாகக் கூறலாம். இவைகளேயன்றி வேறு சில பொதுவான நோக்கங்களையும் முதற்காப்பியங்கள் மூலம் உணரமுடிகிறது. இரு காப்பியங் களுக்கும் பொருந்துமாறு அமைந்துள்ள அப்பொது நோக்கங் களில் சில இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

1. தனிமனித, இல்வாழ்வின் நோக்கம்

மனிதகுல மேம்பாட்டிற்கென்று சில உயர்ந்த குறிக்கோள் களை உணர்த்திய முதற்காப்பிய ஆசிரியர்கள் தனிமனித, இல் வாழ்க்கையினர் ஏற்றுப் போற்ற வேண்டிய இன்றியமையாத சில நோக்கங்கவையும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இவ்வுலகில் வாழும் அனைவரும் அறம் செய்ய வேண்டும்; பயன்-கருதாத அறப்பணியாற்ற வேண்டும் என்பதை இரு நூலாசிரியர்களும் வலியுறுத்துகின்றனர். இல்வாழ்வின் இன்றி யமையாத நோக்கங்களைக் காப்பியத் தலைவியின் மூலமாக உணர்த்துகிறார் இளங்கோவடிகள்.

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
அறவோர் எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்......[54]

இல்வாழ்வோரின் நோக்கங்களாகும் என்று வலியுறுத்தப்படுகிறது. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக இல்வாழ்வோர் இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் தமிழர் பண்பாட்டை எடுத்துக்காட்டும். அறத்தின் இன்றியமையாமை, முறையாக வாழ்வோரை வாழ்விக்கும் அறம், முறை தவறுவோர்க்குக் கூற்றாகும் நிலை ஆகியனவற்றை அடிகள் விரித்துக் கூறுகிறார். இதே நிலையைச் சாத்தனாரிடம் காண முடிகிறது. பொதுவாக 'அறம் செய்க' என்று கூறாமல், செய்ய வேண்டிய அறம் எது என்பதை வரையறுத்துக் கூறுகிறார் அவர்,

> **அறமெனப் படுவது யாதுயெனக் கேட்பின்**
> **மறவா திதுகேள்; மன்உயிர்க் கெல்லாம்**
> **உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
> **கண்டதில்!'** [55]

என்பது சாத்தனார் வாக்கு. உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றும் அடிப்படைத் தேவைகள் என்று இன்றைய குடியாட்சி வல்லுநர்கள் கூறுவர். இம்மூன்றையும் மனித உயிர்கள் பெறச் செய்வதே உண்மையான அறம் என்று அன்றே உணர்த்திய சாத்தனாரின் சமுதாய நோக்கை உணர்ந்து வியக்கிறோம்.

> **மனத்துக்கண் மாசில னாதல் அனைத்துறன்** [56]

என்று வள்ளுவர் வரையறுத்ததுபோல் அறத்தின் இலக்கணத்தைச் சாத்தனாரும் வரையறுத்துள்ளார். 'மாசிலனாதல்' என்று பொதுவாகக் கூறினார், திருவள்ளுவர்: ஒருவன் மாசிலனாக வேண்டுமெனில் உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றும் அவனுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று, குறளுக்கு விளக்கம் கூறியுள்ளார் சாத்தனார். இவ்வறம் மன்பதையிலுள்ள மாந்தர் அனைவரும் புரிவதற்குரியதேயாம்.

பிறருக்குக் கொடுப்பது மட்டும் அறமாகாது; எண்ணளவில் தூய பண்புடையராய் வாழ்வதும் அறவோராவதற்குரிய அடிப்படைத் தகுதியாகும் என்பதே இருநூலாசிரியர்களும் வலியுறுத்தி உள்ளனர்.

> **கள்ளும் களவும் காமமும் பொய்யும்**
> **வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழியின்** [57]

என்பது இளங்கோவடிகள் கட்டளை.

கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவுமென்று உரவோர் துறந்தவை[58]

என்பது சாத்தனார் கருத்து. இருகாப்பிய ஆசிரியர்களும் ஒத்த கருத்துக்களையே உணர்த்தியிருப்பது எண்ணுதற்குரியது.

முற்ற உணர்ந்தவர் என்பவர் யார்? வாழ்பவர் என்று குறிப்பிடத் தக்கவர் யார்? செல்லும் உலகுபற்றி அறிந்தவர் எவர்? உண்மைப் பொருளை உணர்ந்தவர் யாவர்? இந்நான்கு வினாக்களுக்கும் சாத்தனார் தரும் விடைகள் இம்மனிதகுல மேம்பாட்டில் அவருக்கிருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டுகின்றன.

கற்ற கல்வி அன்றால் காரிகை;
செற்றம் செறுத்தோர் முற்ற உணர்ந்தோர்;
மல்லல்மா ஞாலத்து வாழ்வோர் என்போர்
அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர்
திருந்தேர் எல்வளை, செல்உலகு அறிந்தோர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்!
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக் கெல்லாம் அன்பு ஒழியார்[59]

எல்லா விளக்கங்களும் துன்பம் துடைக்கும் தூயதொண்டினையே வலியுறுத்துவதை உணரமுடிகிறது. இளங்கோவடிகளும் காப்பியத்தின் இறுதிக் காதையில் தமது கூற்றாகவே பல உண்மைகளை உணர்த்தியுள்ளார். அவையாவும் காப்பியத்தின் பயன்களாகக் கருதத் தக்கனவே. காப்பியத்தில் ஏற்பட்ட அவல முடிவுகளுக்கு ஆளாகாமல் காத்துக் கொள்ளுமாறு மற்றவர்க்கு அறிவுறுத்தும் விதத்தில் அவரது கருத்துகள் அமைந்துள்ளன. எனினும், மொத்தத்தில் அவரது தக்க உணர்வுகளையே அவற்றில் காணமுடிகிறது. காப்பியத்தை முடிப்பதற்கு முன்பாக,

செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்[60]

என்று பொதுவாகக் கூறுகிறார். எந்தத் துணையை, எப்படித் தேடுவது என்பதை ஆய்ந்து முடிவு செய்யும் பொறுப்பைப் பிறர்க்கு விட்டுவிடுகிறார் அடிகள். ஆனால் சாத்தனாரோ. 'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்' அனைவரும் 'செல் உலகு அறிந்தோர்' என்று, இளங்கோவடிகள் கூறாது விட்ட விளக்கத்தைக் கூறுகிறார்.

மனித உயிர் அடைய வேண்டிய பயன்களைப் பற்றியே இளங்கோவடிகள் பெரிதும் சிந்தித்துள்ளார். ஆனால் சாத்த னாரோ பயன்களைப் பற்றி மிகுதியாகக் கவலைப்படாமல் உயர்ந்த நோக்கங்களை உணர்த்துவது பற்றியே சிந்தித்துள்ளார்.

2. துறவியர் நோக்கம்

இளமை நில்லாமை, யாக்கை நிலையாமை போல்வன வற்றை இருகாப்பிய ஆசிரியர்களுமே எடுத்துக் காட்டியுள்ளனர். உறங்குவதும், விழிப்பதும் போன்று பிறவியானது மாறி மாறி வரக்கூடியது என்று சாத்தனார் கூறுகிறார். இளங்கோவடி களும் அதே கருத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். அதனால், துறவு நெறி நின்று பிறரை வாழ்விக்கத் தொண்டாற்ற வேண்டு வது அவசியம் என்பதை இருவருமே உணர்த்தியுள்ளனர்.

நற்றிறம் புரிந்தோர் பொற்படி எய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை[61]

என்று உணர்த்தும் இளங்கோவடிகள் வாழ்வின் நோக்கங்களை யும் அதனால் பெறும் பயன்களையும் எடுத்துக் காட்டுகிறார். ஆசைகளுக்கு ஆட்பட்டால் மீண்டும் பிறக்க நேரிடும் என்று எச்சரிக்கும் அடிகள் துறவு நெறிநின்று தொண்டாற்றுவதையே 'நற்றிறம்' என்று போற்றுகின்றயர். மறப்பயன் விளைவிப் பதைக் காட்டிலும் துறவுநெறி நின்று அறப்பயன் விளைவிப்பதே பிறவிப் பிணி நீங்கத் துணை செய்யும் என்பது அடிகள் கருத்து மறக்கள வேள்வி செய்த சேரன் செங்குட்டுவனின் செயலைக் கண்டித்து அறக்கள வேள்வி செய்யத் தூண்டும்[62] மாடல மறை யோனின் வாய்மொழி வாயிலாகவும் துறவியரின் தூய நோக்கத் தைத் தெளிவுபடுத்துகிறார் அடிகள்.

இல்லறத்தைப் போன்றே துறவறமும் இன்றியமையாத ஓர் நெறி என உணர்ந்து அடிகள் துறவறத்தை வலியுறுத்திய தாகத் தெரியவில்லை. இவ்வுலக வாழ்வை இன்ப வாழ்வாக அவர் எண்ணவில்லை என்றே கருதப்படுகிறது. இவ்வுலக வாழ்வை வெறுக்கும் நோக்குடனேயே துறவறத்தை அவர்

வலியுறுத்தியுள்ளார். ''இவ்வுலகில் வாழ்வு என்பது மறுமைக்குரிய முயற்சியாக அமைய வேண்டுவதே; தன்னளவில் 'இன்ப வாழ்வு' என்று இம்மை வாழ்க்கையைக கூற முடியாது என்னும் கருத்தே இளங்கோவடிகளிடம் இருந்ததாகத் தோன்று கிறது.''[63]

இளங்கோவடிகளைப் போன்றே வாழ்வின் நோக்கங்களைப் பற்றியும் பயன்களைப் பற்றியும் சாத்தனாரும் தெளிவுபடுத்தி யுள்ளார். பெருபாலும் அடிகளின் அறவுரைகளையே சாத்தனாரும் வலியுறுத்தியுள்ளார்.

பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைதலும்
அல்லது செய்தோர் அருநரகு அடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்[64]

என்பது சாத்தனார் வாக்கு. நல்லுலகு அடைய வேண்டு மெனில் நல்லறம் செய்ய வேண்டுமென்று கூறும் சாத்தனார் நல்லறம் எது வென்பதையும் வரையறுத்துக் கூறியுள்ளார். அவர் கருத்துப்படி துன்பப்படும் உயிர்களுக்கு உண்டி, உடை, உறையுள் ஆகியன கொடுத்து உதவும் 'நல்லறம்' செய்யாத வர்கள் 'அல்லது' செய்பவர்களே யாவர். அத்தகையோரே அருநரகு அடைபவர்களாவர். அத்தகைய தீய பண்புகளைத் துறப்பதையே துறவாகக் கருதுகிறார் சாத்தனார்.

பௌத்த மதக் கருத்துகளைப் பரப்புவதற்காக மணி மேகலை துறவுக்கோலம் பூண்டாலும், அவள் வெறும் மதப் பிரச்சாரம் மட்டுமே செய்து கொண்டிருக்கவில்லை. மன்பதை யின் துயர் துடைக்கும் பணிகளையே மிகுதியாகச் செய் துள்ளாள். இவ்வகையில் கவுந்தியடிகளையும், மாடலமறை யோனையும் விஞ்சி நிற்பதுடன் துறவறத்தின் நோக்கமே தொண்டு செய்வதுதான் என்ற இலக்கணத்தையே படைக் கிறாள் இலட்சியப் பெண்மணி மணிமேகலை.

இவ்வுலக வாழ்வில் பிடிப்பு இல்லாததால் இல்லறத்தார் களையும் கூட இறுதியில் துறவு நெறிக்கு ஆற்றுப்படுத்தி ஆறுதல்

காண்கிறார் இளங்கோவடிகள். இவ்வுலக வாழ்வைப் போற்றியதால் துறவு நெறியில் நின்ற மணிமேகலை இல்லறத்தார்களுக்கும் தொண்டு செய்ய வைத்து இன்பம் காண்கிறார் சாத்தனார்.

3. ஆட்சியாளர் நோக்கம்

முதற்காப்பியங்கள் இரண்டும் குடிமக்கள் காப்பியங்களாக இருந்தாலும், அக்குடிமக்கள் வாழ்ந்த நாட்டின் ஆட்சியாளரிடம் அமைய வேண்டிய நோக்கங்களைப் பற்றியும் அக்காப்பியங்கள் குறிப்பிடுகின்றன.

பொதுநிலையில் இவ்வுலக வாழ்வை இன்ப வாழ்வாகக் கருதாத இளங்கோவடிகள் நாடாளும் அரசனாக இருப்பதும் கூடத் துன்பமானதென்ற உணர்வையே ஊட்டுகிறார்.

> **மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்**
> **துன்ப மலலது தொழுதக வில்லென**[65]

என்று அவர் கூறுவதன் நோக்கம், நாட்டில் ஏற்படும் எல்லாக் குறைகளுக்கும் அரசனே பொறுப்பாளியாகிறான் என்பதை உணர்த்துவதாகும். இது சேரன் செங்குட்டுவனுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட அனுபவம் அல்ல. நாடாளும் அனைவர்க்கும் ஏற்படக்கூடிய பொது அனுபவம். அதற்காக நாடாள்வதே பெருமைக்குரியதல்ல என்பது போன்ற பொது நியதியை அடிகள் தோற்றுவிப்பது நம்பிக்கைக் குறைவை உண்டாக்குகிறது. இல்லறத்தார்களையெல்லாம் துறவறம் காணச் செய்தது போன்று வீரத்தால் மறக்கள வேள்வி செய்த சேர மன்னனை அறக்கள வேள்வி செய்யுமாறு மாடலன் தூண்டுவது ஆட்சியாளர் நோக்கமே அதுதானா என்று எண்ணத் தோன்றுகிறது.

அரசன் தவறு செய்யும்போதும் அறங்கூறவையத்தில் ஒரு திறம்பற்றும் போதும் நவை நீருகுக்கும் பாவை மன்றம்[66] இருந்ததாகக் கூறுவது, அறம் பிறழாது நீதியுடன் ஆட்சி நடத்துவதே ஆட்சியாளர் நோக்கம் என்பதை உணரச் செய்கிறது.

சிறந்த ஆட்சி எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் தீய ஆட்சியில் ஒழுக்கமும் பண்பாடும் எவ்வாறு கெடும் என்பதையும் சாத்தனார் தம் காப்பியத்தில் சான்றுகளின் மூலம் எடுத்துக் காட்டுகிறார். மன்னவன் ஆட்சி நிலை பிறழுமென்றால் மழை வளமும் பொய்க்கும் என்று கூறும் சாத்தனார், மாதவர்களின் நோன்பும், பெண்களின் கற்பும்கூட மன்னவன் ஆட்சி சரியில்லையென்றால் நிலைத்திருக்க மாட்டாது என்று எச்சரிக்கிறார்.

மாதவர் நோன்பும் மடவாள் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றாம்[67]

என்ற அவர் வாக்கு, ஆட்சியாளர் நோக்கம் அரச நீதிகளைக் கவனிப்பது மட்டுமன்று! இல்லறத்தார், துறவறத்தார் ஆகிய அனைவரையும் பேணிப் பாதுகாப்பதுமாகும் என்பதை உணர்த்துகிறது.

சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றிய மணிமேகலை. வரி வாங்குவது மட்டுமே ஆட்சியாளர் நோக்கமாக இருத்தல் கூடாது! வறுமைக் காலத்தில் மக்களைப் பேணிப் பாதுகாப்பதும் ஆட்சியாளர் நோக்கமாகும் என்பதை எடுத்துக் காட்டுகிறாள். நாட்டு மக்கள் உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் குறைவின்றிப் பெறச் செய்வதும் ஆட்சியாளர் நோக்கமாகும் என்று மணிமேலை வலியுறுத்துகிறது. ஆட்சியாளர் தங்கள் கடமையைச் செய்ய மறந்தபோது அதைக் கண்டு கண்ணீர் வடித்து நிற்கும் பாவையாக இல்லாமல், தானே அப்பணியைச் செய்து முடிக்கும் புரட்சிப் பூவையாக மணிமேகலையைப் படைத்துள்ளார் சாத்தானார்.

ஆள்பவரைப் பொறுத்தே மக்கள் வாழ்வு அமைவதால் ஆட்சியாளர் உயர்ந்த நோக்கங்கள் உடையவராக இருத்தல் வேண்டும் என்று உணர்த்துகிறார் சாத்தனார். நாடாள்பவர் நாட்டு மக்களின் நலன் கருதி உழைத்தால் மட்டும் போதாது; தன் உயிர் உய்வடைவான் வேண்டி வேள்விகள் முதலியன செய்ய வேண்டுவதும் அவர்கள் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்றும் எடுத்துக்காட்டுகிறார் இளங்கோவடிகள்.

சாத்தனாரிடம் காணமுடியாத தமிழ்ப்பற்றை இளங்கோவடிகளிடம் காண முடிகிறது. வடபுலத்து அரசர் தமிழ்

வேந்தர்களை இகழ்ந்து பேசினர் என்பதற்காக, அவர்களை வென்று இமயத்தில் கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்த சேரன் செங்குட்டுவனின் வீர வரலாற்றை அவர் விளக்கும் முறை அவரது மொழிப்பற்றை முரசறைகிறது. கனகவிசயரை வென்று கண்ணகிக்குக் கல்லெடுப்பதற்காக சேரனின் சேனை செல்கிறது. ஆனால்,

அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனச்
சீற்றம் கொண்டிச் சேனை செல்வது[68]

என்று அடிகள் கூறுவது, அவரது தமிழ்ப் பற்றைக் காட்டுவதுடன், தாய்மொழியைப் போற்றி வளர்ப்பது ஆட்சியாளரின் தலையாய நோக்கம் என்பதையும் உணர்த்துகிறது.

4. சமுதாய சீர்திருத்த நோக்கம்

முதற்காப்பியங்கள் தோன்றிய காலத்தில் பல முரண்பாடுகளும், வர்க்க பேதங்களும் சமுதாயத்தில் நிலவி இருந்துள்ளதையுணர முடிகிறது. வணிக வர்க்கம் செல்வாக்குப் பெற்றகாலமாக அது இருந்ததுடன் பிற வர்க்கத்தினரிடையிலும் பேதங்கள் நிலவியிருந்த நிலையினை அக்காப்பியங்களில் காணமுடிகிறது

பால்வேறு தெரிந்த நால்வேறு தெரு[69]
நால்வகை வருணத்து அடங்காக் கம்பலை[70]

போன்ற பல இடங்களில் வருண பேதங்களின் நிலையைச் சுட்டிக் காட்டுகிறார் இளங்கோடிகள். இதே நிலையை மணிமேகலையிலும் காணமுடிகிறது. உயிருடன் வாழும்போது மட்டுமல்ல, இறந்தபின் புதைக்கப்படும் இடுகாட்டிலும்கூட ' நால்வேறு வருணப் பால்வேறு காட்டி[71] இடுகாடுகள் வெவ்வேறாக அமைந்திருந்தன என்று குறிப்பிடுகிறார் சாத்தனார். வாழ்வினில் காணாத சமரசத்தை இறந்த பின் புதைக்கப்படும் இடுகாட்டில் காண்பதாகக் கவிஞர்கள் கூறுவர். ஆனால் அங்கும் அது இல்லாத நிலையைச் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

சாதிப் பாகுபாடுகள் இருந்த நிலையை இருவரும் எடுத்துக் காட்டினாலும், அப்பாகுபாடு வளர்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் வைதீகப் பிராமணர்களே என்பதைச் சாத்தனார் துணிந்து சுட்டிக் காட்டுகிறார். ஆபுத்திரனின் பிறப்பைப்

பற்றி அந்தணர்கள் பழித்துக் கூறியபோது அவன் தரும் பதில் சாத்தனாரின் சாதி எதிர்ப்புப் பிரச்சாரமாக அமைகிறது. திலோத்தமை என்ற கணிகையின் மூலமாகப் பிரமனுக்குப் பிறந்தவர்கள்தானே வசிட்டர், அகத்தியர் என்னும் அந்தணர்கள் என்று ஆபுத்திரன் கேட்கும் கேள்வி[72] முள்ளை முள்ளால் எடுக்கும் முயற்சியாகப்படுகிறது. அந்தணர்கள் எழுதிவைத்த ஆகமங்களைக் கொண்டே அவர்களைச் சாடும் இம்முறையைத் தான் இருபதாம் நூற்றாண்டிற் பெரியார் ஈ. வே. ரா. செய்துள்ளார். மணிமேகலைக் காப்பியத்தின் பயன் என்று இதனைக் குறிப்பிடலாம்.

இவ்வகையில் இளங்கோவடிகள் சாத்தனாருக்கு மாறுபட்டுக் காணப்படுகிறார். 'அறவோர்க்கு அளிப்பதுடன் அந்தணர் ஓம்பலும்' இல்லறத்தார் கடனென்று எடுத்துக் காட்டுகிறார். 'நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை மாமறை முதல்வன் என்று நீண்ட அடைமொழிகளை மாடல மறையோனுக்கு வழங்கிச் சிறப்பிப்பதுடன் அவன் விருப்பப்படி வேள்வி செய்வதற்குத் தமிழ் மன்னனை உடன்பட வைக்கிறார். மாமுது பார்ப்பான் மறைவலம் காட்ட' நடந்த கோவலன் கண்ணகி குடும்ப வாழ்வு என்ன ஆனது என்பதை உணர்ந்தும் கூட 'அறக்கள வேள்வி' செய்யுமாறு அரசனைப் பணிக்கச் செய்கிறார்.

சமுதாயப் பணி செய்வதற்காக மணிமேகலையை ஈடுபடுத்தியதால் சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகளை யுணரும் வாய்ப்பு சாத்தனாருக்குக் கிட்டியது. அதனால் அம் முரண்பாடுகளுக்கான மூல காரணங்களையும், போக்கும் வழிகளையும் பற்றி அவர் சிந்தித்துள்ளார். இளங்கோவடிகளுக்கு அவ்வாய்ப்புக் கிட்டாததால் சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றி அவர் அதிகமாகச் சிந்திக்கவில்லையோ என்று எண்ண வேண்டி உள்ளது.

அன்றைய சமுதாய அமைப்பில் 'கணிகையர்' என்ற ஒரு பிரிவினர் இருந்ததற்குக் காரணமே செல்வச் செருக்குடைய ஆடவர்கள்தான் என்பதை உணரமுடிகிறது. அத்தகைய ஆடவர்கள் தாம் மனம் மாறுபடும்போது முன்னர் தம்மால் விரும்பப்பட்ட பெண்களை இழித்தும் பழித்தும் பேசியுள்ளனர் என்பதை இரு காப்பியங்களாலும் உணர முடிகிறது.

ஆடல் மகளே யாதலின் ஆயிழை
பாடுபெற் றவைப் பைந்தொடி தனக்கு[73]

என்று மாதவியைப் பழித்துக் கூறுகிறான் கோவலன்.

கற்புத் தானிலள்; நல்தவ உயர்விலள்;
வருணக் காப்பிலள்; பொருள்விலை யாட்டி[74]

என்று மணிமேகலையை இகழ்ந்து பேசுகிறான் உதயகுமாரன். கோவலனால் முன்னர்ப் பழிக்கப்பட்ட மாதவியை பின்பு அவனே புகழ்ந்து போற்றச் செய்கிறார் இளங்கோவடிகள். உதயகுமாரனால் இகழ்ந்து பேசப்பட்ட கணிகை மணிமேகலையைக் காப்பியத் தலைவியாக்கி உலகமே புகழ்ந்து போற்றச் செய்கிறார் சாத்தனார்.

இளங்கோவடிகள், சமுதாய வரம்புகளுக்குட்பட்டுப் பெண்ணின் பெருமையைப் பேசினார். ஆனால் சாத்தனாரோ, பெண்ணினத்தின் பெருமையை உயர்த்துவதற்காக சமுதாய மரபுகளையும் மீறிப் புதிய சீர்த்திருத்தமே செய்துள்ளார் என்று கூறலாம். இவ்வாறு பல நிலைகளில் முதற்காப்பிய ஆசிரியர்கள் பல சமுதாய சீர்திருத்தங்களைச் செய்துள்ளமை அவர்களது உயர்ந்த நோக்கங்களை எடுத்துக் காட்டுகின்றன.

அமைப்பு முறையில் ஆசிரியர் நோக்கம்

சமுதாய மேம்பாட்டிற்கான பல்வேறு உயர்ந்த நோக்கங்களை முதற் காப்பிய ஆசிரியர் இருவரும் நூலில் எடுத்துக் காட்டியிருப்பது போன்று, நூலின் அமைப்பு, பாத்திரப்படைப்பு, உலகியலிறந்த நிகழ்ச்சிகளை எடுத்தாண்ட முறை போன்றவற்றின் மூலமாகவும் சில சிறந்த நோக்கங்களை உணர்த்தியுள்ளார்கள். அவைகளைத் தனித்தனியாக விரித்துக் கூறின் தனிக் கட்டுரையளவு பெருகுமென்பதால் சுருக்கமாக இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

இரு நூலாசிரியர்களுமே முப்பது காதைகளில் காப்பியங்களை முடித்துள்ளார்கள். இளங்கோவடிகள்-அன்றைய மூன்று தமிழக வேந்தரையும் இணைக்கும் நோக்கில் மூவரசின் நகரங்களையும் காப்பிய நிகழ்வுக் களங்களாக்கிக் காண்டங்களுக்குப் பெயரிட்டுள்ளார்[75]. இவ்வமைப்பு முறையில் அவரது ஒருமைப்பாட்டு நோக்கம் புலப்படுகிறது.

மணிமேகலையில் காண்டப் பிரிவுகளைக் காண முடியவில்லை. சிலப்பதிகாரத்தை மூன்று வேந்தர்களது நாட்டிலும் நிகழ்வதாலும் இளங்கோவடிகளே ஓர் அரச குடும்பத்தில் பிறந்தவர் என்பதாலும் மூவேந்தர்களுக்குள் ஒருமைப்பாட்டு

உணர்வைத் தோற்றுவிக்க முற்பட்டிருக்கலாம். சாத்தனாரின் முக்கிய நோக்கம் சமயப் பிரச்சாரம் என்பதால் அது போன்ற எண்ணம் இவரிடம் காணப்படவில்லை.

இரு காப்பியங்களிலுமே பல்வேறு கிளைக் கதைகள் இடம் பெற்றுள்ளன. சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவே அக் கிளைக்கதைகளை ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதை உணர முடிகிறது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள கிளைக் கதைகளில் பெரும்பாலன கோவலன். கண்ணகியின் உயர்ந்த பண்பு நலன் களையும், கொடைச் சிறப்பையும் எடுத்துக் காட்டவே பயன் படுத்தப்பட்டுள்ளன. வேறு சில கதைகளும்கூட அவர்கள் வாழ் வுடன் தொடர்புடையதாகவும், அவர்களுக்கு உய்மையை உணர்த்துவதாகவுமே அமைந்துள்ளன. இளங்கோவடிகளின் தெளிவான நோக்கத்தை இக்கிளைக் கதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் மணிமேகலையில் அதிக மான கிளைக்கதைகள் காணப்படுகின்றன. அக்கிளைக் கதை களில் பல பௌத்த சமயத்தின் சிறப்புகளை உணர்த்துகின்றன. சில கதைகள் ஊழின் ஆற்றலையும, முற்பிறவி வினைப்பயன் மறுபிறவியில் செயல்வடிவம் பெறுவதையும் வலியுறுத்து கின்றன. கற்பின் சிறப்பையும், கணவனைத் தொழ மறந்து தெய்வத்தைத் தொழுததால் ஏற்பட்ட இடரையும், மனைவி இல்லாமல் செய்யும் தருமத்தால் பயனில்லை என்ற படிப்பினை யையும்; இளமையும்,செல்வமும் நிலையற்றவை என்ற உண்மை யையும், வேள்வியில் உயிர்ப்பலி கூடாது;[76] 'புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்'[77] போன்ற நீதிகளையும், அந்தந்த மக்கள் பேசும் மொழியைப் பயில்வதால் அவர்களின் அன்பைப் பெற முடியும் என்ற உயர்ந்த கோட்பாட்டினையும் கிளைக்கதை களால் உணர்த்துகிறார் சாத்தனார். இவ்வகையில் இவர் கிளைக் கதைகளைப் பயன்படுத்தும் நோக்கம் இளங்கோவடி களின் நோக்கத்திலின்றும் வேறுபட்டிருப்பதை உணரமுடிகிறது.

உலகியலிறந்த நிகழ்ச்சிகளை இருகாப்பிய ஆசிரியர்களுமே பயன்படுத்தியுள்ளனர். சிலம்பில், பாசண்டச் சாத்தான், காய் கதிர்ச் செல்வன், மதுராபதித் தெய்வம் முதலிய தெய்வப் பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. பொய்ச் சாட்சி சொல்பவர் களைப் புடைத்து உண்ணும் சதுக்கப்பூதம், பாவை மன்றம் முதலான ஐவகை மன்றங்கள் முதலியனவும் குறிப்பிடப்படு

கின்றன. ஆனால் அவை யாவும் காப்பிய நிகழ்ச்சிகளை அடக்கியாளாமல் தக்க இடங்களில் இருளைப் போக்கும் விளக்குகள் போலத் தோன்றுகின்றன.

மணிமேகலையில், மணிமேகலா தெய்வம், தீவதிலகை, கந்திற்பாவை, சிந்தாதேவி போன்றோருடன் இந்திரன் போன்ற தேவர்களும் வந்து செல்கின்றனர். இவர்கள் நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்து காப்பியக் கதையை வளர்ப்பதில் பெரும்பங்கு கொள்கின்றனர். உலகியலிறந்த நிகழ்ச்சிகளை, சில உண்மைகளை விளக்குவதற்காக இளங்கோவடிகளும், கதைப் போக்கிற்குத் துணையாகச் சாத்தனாரும் கையாண்டிருக்கும் நோக்கம் புலப்படுகிறது.

முதற்காப்பிய ஆசிரியர் இருவரும் காப்பியங்களில் இடம் பெறும் பாத்திரங்களைப் படைத்திருக்கும் முறையிலும், அப் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் விதத்திலும்கூட அவர்களின் சிறப்பான நோக்கங்களை உணர்ந்துகொள்ள முடிகிறது.

போதிலார் திருவின் புகழுடை வடிவாகவும், தீதிலா வடமீனின் திறம் இவள் திறமாகவும் ஆசிரியர் கண்ணகியை அறிமுகப்படுத்துகிறார். ''காப்பிய நோக்கல்களில் ஒன்றாகப் பத்தினியைத் தெய்வமாக்குதல் அமைந்ததால் அதற்குத் தோற்றுவாயாக, காப்பியத் தலைவியைப் போதிலார் திருவாக அறிமுகப்படுத்துகிறார் கவிஞர்''[78] என்று கண்ணகி அறிமுகத்தின் நோக்கம் விளக்கப்படுகிறது.

''......கோவலனைப் பற்றி அறிமுகப்படுத்தும்போது, அவனுடைய பண்பைப்பற்றி, கண்ணகியைக் குறித்தாற் போலச் சிறப்பாக ஏதும் கூறாமல், அவனுடைய அழகையும் புகழையுமே பாராட்டிக் கூறுகின்றார். ஆடவர்கள் அவனைப் பாராட்டினர் என்று கூறாமல், பெண்டிர் அவனைப் பாராட்டிப் புகழ்ந்தனர் என்கிறார்''[79] என்று கூறுவது கோவலனைப்பற்றி இளங்கோவடிகள் கொண்டிருந்த நோக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

''காப்பியத்தில் சில வாழ்வியல் உண்மைகளைக் கூறவும், நல்லறத்தை உணர்த்தவும், மக்களுக்கு நம்பிக்கையூட்டவும், நல்லறிவைத் தரவும், கதை நிகழ்ச்சிகள் முன் நடந்தவற்றைத் தேவைப்படும்போது பின் தரவும் சில வேளைகளில் காப்பிய ஆசிரியராக நின்று அவர் எண்ணங்களை வெளியிடவும் மாடலன் படைக்கப்படுகிறான்.[80]

ஜைன சமயக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டுவதற்காகவே கவுந்தியடிகளைப் படைத்துள்ளார் இளங்கோவடிகள். இது போன்ற அறிமுக நோக்கத்தை மணிமேகலையிலும் காண முடிகிறது. மாதவியின் மகளாக இருந்தும்கூட மணிமேகலையை அறிமுகப்படுத்தும்போது கண்ணகியின் மகள் என்றே சாத்தனார் அறிமுகப்படுத்துகிறார்.

காவலன் பேரூர்க் கனைஎரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை[81]

என்று அவர் கூறுவதன் நோக்கம், கணிகையர் குலத்தில் பிறந்தாலும் மாபெரும் பத்தினியாக மணிமேகலையும் விளங்கப் போகிறாள் என்பதைக் குறிப்பால் உணர்த்துவது கருதியேயாம்.

காப்பிய அமைப்பில், இளங்கோவடிகளின் பல்வேறு நோக்கங்களும் பயன்களும் 'இளங்கோவின் இலக்கிய உத்திகளில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அதுபோல் சாத்தனாரின் இலக்கிய உத்திகளும் எடுத்துக் காட்டப்படவேண்டும்.

பயன்கள்

முதற்காப்பிய ஆசிரியர்கள் இருவரும் உயர்ந்த நோக்கங்கள் பலவற்றைத் தம் காப்பியங்களில் உணர்த்திச் சென்றுள்ளார்கள். அவர்கள் உணர்த்திய நோக்கங்கள் அனைத்தும் உரிய பயன்களை விளைவிக்க வேண்டும் என்றே அவர்கள் எண்ணியிருப்பர். உன்னத நோக்கங்கள் சில உரிய பயன்களை விளைவித்துள்ளன என்பது நோக்கங்களைப் பற்றிக் குறிப்பிட்ட இடங்களிலேயே இக்கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பொதுநிலையில், இக்காப்பியங்களால் பெறப்படும் பயன்களில் இன்றியமையாதன சிலவற்றை இங்குக் காணலாம்.

''திருக்குறள் நாற்பொருள் பயப்பன என்றால், இதனையும் நாற்பொருள் பயப்பதாகக் கூறலாம். புகார்க் காண்டம் இன்பத்தையும், மதுரைக் காண்டம் பொருள் நிமித்த காரணமாகிய அரச நீதியையும், வஞ்சிக் காண்டம் செங்குட்டுவனுக்கு அறத்தை வலியுறுத்துவதோடு அது வீடுபேற்றிற்குரிய வாயிலாதலையும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்''[82] என்று சிலப்பதிகாரம் நாற்பொருள் பயக்கும் நிலை உணர்த்தப்படுகிறது

''மணிமேகலைக் காப்பியம் வீடுபற்றிக் கூறுவது. சிலப்பதிகாரம் அறம், பொருள், இன்பம் என முப்பொருள் பற்றியது.

எனவே சிலம்புடன் மேகலையும் சேர்ந்ததாலேயே நாற்பொருள் பயக்கும் நெறி ஏற்படுகின்றது''[83] என்ற பிறிதோர் கருத்தும் கூறப்படுகிறது. மொத்தத்தில். முதற்காப்பியங்கள் இரண்டும் நாற்பொருள் பயக்கின்றன என்பது தெளிவாகிறது.

கண்ணகியின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவள் எவ்வாறு சாதாரண நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்தாள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அவளைப்போல் மற்றவரும் உயரமுடியும், என்ற உணர்வை அவள் வாழ்வின் பயனாகப் பெறலாம். இன்றும் இம்மண்ணில் கற்புநெறி போற்றப்படுகிற தென்றால், நமது பண்பாடு அதற்கு மூலகாரணமாக இருந் தாலும் இளங்கோவின் கண்ணகியைப் படித்த பயனும் காரணம் என்று கூறலாம்.

வழக்குரைத்த கண்ணகியின் பாதிப்பு மகாகவி பாரதிக்கு ஏற்பட்டதால் தான் அவன் படைத்த பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலியை ஓர் புரட்சிப் பெண்ணாகக் காட்ட முடிந்தது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்று அவன் கூறியதே, சிலப்பதிகாரத்தினால் அவன் பெற்ற பயனைக் குறிக்கும்.

குறிக்கோளிலாமையினால் துன்பத்திற்கு ஆளாகிய கோவலன் வாழ்வும், குறிக்கோளுடன் வாழ்ந்ததால் கண்ணகி யுடன் ஒப்பக் கருதுமளவிற்கு உயர்ந்து நின்ற மாதவியின் மாண் பும், நீதிக்காக உயிர்நீத்த நெடுஞ்செழியனின் பெருமையும், கணவனுடன் உயிர்நீத்த கற்புக்கரசி கோப்பெருந்தேவியின் சிறப்பும், தமிழ்மானமும் தமிழர் மானமும் காத்த சேரன் செங்குட்டுவனின் வீர வரலாறும் இன்னும் நம் நெஞ்சில் நீங்காது நிலைத்திருப்பனவாகும். சிலப்பதிகாரத்தால் பெற்ற பெரும்பயன்கள் என்று இவற்றைக் கூறலாம்.

சாத்தனாரின் சமய நோக்கம் இம்மண்ணில் பெரும் பயனை விளைவித்தது என்று கூறமுடியாது. ஆனால் மணிமேகலை மூலமாக அவர் செய்ய முற்பட்ட அறப்பணிகள் இம்மண்ணில் பிற்காலத்தில் பல அற நிறுவனங்கள் தோன்று வதற்குப் பயன்பட்டுள்ளன. கணிகையர் குலத்தில் பிறந்து, கற்புக்கரசியாகத் திகழ்ந்து ஓய்வின்றித் தொண்டாற்றிய மணி மேகலையை. இன்று சமயப் பணியும் சமுதாயப் பணியும் செய் வதற்காகத் துறவு மேற்கொண்டுள்ள கிறித்துவ சகோதரிகளின் தூய வடிவங்களில் காண்கிறோம். மணிமேகலை உணர்த்திய

சில நோக்கங்களால் கிறித்துவ சமயம் இம்மண்ணில் கால் கொண்டுள்லது என்பது இக்கட்டுரையில் முன்னரும் குறிப்பிடப் பட்டது.

அந்தந்தப் பகுதி மக்களின் மொழியைப் படிப்டதன் மூலமே அவர்களின் அன்பைப் பெறமுடியும் என்று சாதுவன் மூலம் சாத்தனார் உணர்த்திய நோக்கத்தை உணர்ந்து, வீரமாமுனிவர் போப்பையர் போன்றோர் பின்பற்றியதால் கிறித்துவ சமயம் பெற்ற பயன் மணிமேகலைக் காப்பியத்தின் பயன் என்று கருத வாய்ப்பு உண்டு. சாத்தனார் அன்று தொடங்கிய சாதி ஒழிப்புப் பிரச்சாரமே பிற்காலத்தில் பகுத்தறிவு இயக்கங்களின் பணியாகப் பரிணமித்தது என்று கூறலாம். சமயக் கருத்து களைப் பரப்புவதில் சாத்தனார் காட்டிய தீவிரவாதம் தவிர, எஞ்சிய நிலைகளில் அவர் உணர்த்திய ஒப்பற்ற உண்மைகளும் அறங்களும் இச்சமுதாய மேம்பாட்டிற்குப் பெரும் பயனை விளைவித்துள்ளது என்று துணிந்து கூறலாம்.

நிறைவுரை

படித்துச் சுவைப்பதற்காக மட்டுமே பயன்படக்கூடிய இலக் கியங்கள் சிறந்த இலக்கியங்களாகப் போற்றப்படமாட்டா. சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படக் கூடிய உயர்ந்த நோக்கங் களை உணர்த்தும் இலக்கியங்களே என்றும் நிலைத்து நிற்கும் தகுதியைப் பெறுகின்றன. அத்தகைய தகுதிமிக்க தமிழ் இலக்கியங்களில் முதற்காப்பியங்கள் சிறப்பிடத்தைப் பெறு கின்றன. காலத்தால் முந்தித் தோன்றிய காரணத்தால் மட்டு மின்றி கருத்தாலும் முதற்காப்பியங்களாகவேசிலம்பும். மேகலை யும் திகழ்கின்றன.

தாம் ஓர் அரச குடும்பத்தில் பிறந்ததாலும், வளமாக வாழ்ந்தவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறியதாலும் சமுதாயப் பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் கண்டு கூறும் வாய்ப்பு இளங்கோவடிகளுக்குக் கிட்டவில்லை. ஆனால், ஆற்றா மாக்கள் அரும்பசி களையும் பணியில் மணிமேகலையை ஈடுபடுத்திய சாத்தனாருக்கு அல்லல்படும் மக்களைப் பற்றிக் கூறும் வாய்ப்புக் கிட்டியதால் அவர் நூலில் பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளைக் காணமுடிகிறது. அரசியல் புரட்சிக்கு இளங்கோவடிகள் அடிக்கல் நாட்டினாரென்றால், சமுதாயப் புரட்சியை சாத்தனார் தொடங்கி வைத்தார் என்று கூறலாம்.

குறிப்புகள்

1. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப. 45.
2. மேற்படி.
3. தமிழ்த்துறை ஆசிரியர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மணிமேகலைச் சிந்தனைகள், ப. 46.
4. சிலப்பதிகாரம், பதிகம், 58-60.
5. மா. ரா. இளங்கோவன், கலையும் வாழ்வும், பக். 9, 10.
6. டாக்டர் வ. சுப. மாணிக்கம், எந்தச் சிலம்பு, ப. 18.
7. டாக்டர் கொ. இலட்சுமணசாமி, சிலப்பதிகாரம், மணி மேகலை, காப்பிய மரபு, ப. 273.
8. திருக்குறள், வினைத்திட்பம், குறள். 668.
9. சிலப்பதிகாரம், 15:91,92.
10. சிலப்பதிகாரம், பதிகம், 55-57.
11. மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகார ரசனை, ப. 2.
12. மேற்படி, ப. 66.
13. டாக்டர் ப. அருணாசலம், சிலப்பதிகாரச் சிந்தனை, ப. 32.
14. மேற்படி, ப. 399.
15. சிலப்பதிகாரம், 30 : 187.
16. Jaina Ethics, P. 234, டாக்டர் ப. அருணாசலம். சிப்பதிகாரச் சிந்தனை, ப. 373.
17. சிலப்பதிகாரம், 15 : 143, 144.
18. — " — , 15 : 145-147.
19. — " — , 15 : 91, 92,
20. — " — , 16 : 148, 149.
21. — " — , 16 : 216, 217.

22. — " — , 20 : 59, 60.

23. — " — , 28 : 167, 168.

24. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், ப. 167.

25. மணிமேகலை, 7 : 8 - 12.

26. புறநானூறு, 186 : 1.

27. மணிமேகலை, 23 : 104.

28. மணிமேகலை, 18 : 100-102.

29. திருக்குறள், வாழ்க்கைத் துணைநலம், குறள். 55.

30. மணிமேகலை, 22 : 45, 46.

31. — " — , 18 : 15, 16.

32. — " — , 6 : 158, 159.

33. — " — , 4 : 113-120.

34. கலாநிதி க. கைலாபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 145.

35. மேற்படி, ப. 144.

36. கி.வா. ஜகந்நாதன், தமிழ்க் காப்பியங்கள், ப. 264.

37. கலாநிதி க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 143.

38. மணிமேகலை, 19 : 161.

39. — " — , 19 : 45.

40. — " — , 11 : 95, 96.

41. பாரதியார் கவிதைகள், பல்கலைப் பாடல்கள், முரசு 30.

42. திருக்குறள், ஈகை, குறள். 221.

43. மணிமேகலை, 11 : 92-94.

44. புறநானூறு, 134 : 1, 2.

45. மணிமேகலை, 11 ; 76-80.
46. சாமி, சிதம்பரனார், மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, ப, 11.
47. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மணிமேகலைச் சிந்தனைகள், ப. 81.
48. மேற்படி, ப. 94.
49. மணிமேகலை, 5 : 71-79.
50. மேற்படி, 2 : 64-67.
51. — " —, 21 : 101
52. — " —, 23 : 123-133.
53. — " —, 26 : 53-59.
54. சிலப்பதிகாரம், 16 : 71-73.
55. மணிமேகலை, 25 : 228-231.
56, திருக்குறள், அறன்வலியுறுத்தல், குறள். 34.
57. சிலப்பதிகாரம், 30 : 197, 198.
58. மணிமேகலை, 24 : 77, 78.
59. மணிமேகலை, 23 103-110.
60. சிலப்பதிகாரம், 30 : 201.
61. சிலப்பதிகாரம், 30 : 136-140.
62. சிலப்பதிகாரம், 28 : 129-132.
63. டாக்டர் ப. அருணாசலம், சிலப்பதிகாரச் சிந்தனை, ப. 356.
64. மணிமேகலை, 16 : 86-90.
65. சிலப்பதிகாரம், 25 : 103, 104.
66. சிலப்பதிகாரம், 5 : 135-138.
67. மணிமேகலை, 22, : 208, 209.
68. சிலப்பதிகாரம், 26 : 161, 162.
69. சிலப்பதிகாரம், 22 : 110.
70. சிலப்பதிகாரம், 6 : 165.
71. மணிமேகலை, 6 : 54-57.
72. மணிமேகலை, 13 : 94-101.
73. சிலப்பதிகாரம், 8 : 109, 110.
74. மணிமேகலை, 5 : 86, 87.
75. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், ப. 12.

76. மணிமேகலை, 13 : 51-56.

77. மணிமேகலை, 22 : 137.

78. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், ப. 36.

79. மா. ரா. இளங்கோவன், கலையும் வாழ்வும், ப. 69.

80. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், மாந்தர் சிறப்பு, மாடலன், பக். 96, 97.

81. மணிமேகலை, 2 : 54, 55.

82. டாக்டர் ப. அருணாசலம், சிலப்பதிகாரச் சிந்தனை, ப. 17.

83. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மணிமேகலைச் சிந்தனைகள், ப. 103.

பயன்பட்டவை

1. சிலப்பதிகாரம், ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை, கழக வெளியீடு, 1942.
2. மணிமேகலை, டாக்டர் உ. வே. சா. அரும்பதவுரையும் பதிப்பும், ஆறாம் பதிப்பு, 1965.
3. திருக்குறள், கழக வெளியீடு, 1982.
4. புறநானூறு, டாக்டர் உ.வே.சா. பதிப்பு, உ. வே. சா. நூல் நிலையம், சென்னை-41, 1971.
5. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம் பிரஸ், 63, பிராட்வே, சென்னை-1, 1982.
6. டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், தமிழ் இலக்கிய வகையும் வடிவும், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-96, 1984.
7. டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், இளங்கோவின் இலக்கிய உத்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1984.
8. டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், மாந்தர் சிறப்பு, தமிழ்ப் பதிப்பகம், 1978.

9. டாக்டர் வ. சுப. மாணிக்கம், எந்தச் சிலம்பு, பாரி நிலையம், சென்னை, 1964.

10. டாக்டர் கொ. இலட்சுமணசாமி, ,சிப்பதிகாரம் - மணி மேகலை—காப்பிய மரபு' அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1977.

11. டாக்டர் ப. அருணாசலம், சிலப்பதிகாரச் சிந்தனை, தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5, 1971.

12. மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகார ரசனை, இலக்கியப் பதிப்பகம். காரைக்குடி, 1948.

13. மா. ரா. இளங்கோவன், கலையும் வாழ்வும், இளங் கோவன் பதிப்பகம், அண்ணாமலைபுரம், சென்னை-28, 1957.

14. கலாநிதி, க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, 24, உனிசு அலி சாகிப் தெரு, சென்னை-2. 1978.

15. கி. வா. ஜகந்நாதன், தமிழ்க் காப்பியங்கள், அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18, 1955.

16. சாமி. சிதம்பரனார், மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, இலக்கிய நிலையம், 9, சவுராஸ்டிரா நகர், சென்னை-94, 1975.

17. கா. அப்பாதுரை, சிலம்பு வழங்கும் செல்வம், அருணோ தயம், சென்னை-14, 1958,

18. தமிழ்த்துறை ஆசிரியர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மணிமேகலைச் சிந்தனைகள், 1979.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை-600113

புதிய வெளியீடுகள்

1.	Mysticism of Love in Saiva Tirumurais	... 50 00
2.	தொல்காப்பியம்—பொருள்—களவியல்	... 85 00
3.	The Contributions of the Tamils to Indian Culture	
	Vol. 1. Language & Literature	... 18 00
	Vol. 2 Art & Architecture	... 30 00
	Vol. 3 Socio Cultural Aspects	... 90 00
	Vol. 4 Religion & Philosophy	... 80 00
4.	எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-1	... 47 00
5.	எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2	... 30 00
6.	சிவகிரி குமர சதகம்	... 39 00
7.	புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை	... 27 00
8.	தேரையர் அந்தாதி	... 33 00
9.	குசலவர் சுவாமி கதை	... 36 00
10.	குணவாகடம்	... 40 00
11.	தோட்டுக்காரி கதை	... 28 00
12.	சங்கத்தமிழரின் மனிதநேயமணி நெறிகள்	... 24 00
13.	உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு	... 35 00
14.	Selected Poems of Bharadhidasan Translation—Tamil—English	... 60 00
15.	,, ,, ,, —Tamil—Malayalam	... 60 00
16.	,, ,, ,, —Tamil—Kannada	... 60 00
17.	,, ,, ,, —Tamil—Telugu	... 60 00
18.	பாரெல்லாம் பரந்த தமிழர்	... 25 00
19.	காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ.யும்	... 18 00
20.	Chieftains of the Sangam Age	... 20 00
21.	A Comparative Study of Tamil and Japanese	... 15 00
22.	தமிழும் பிற துறைகளும்	... 35 00
23.	பெண்ணியம்	... 25 00
24.	விலங்கியலும் தமிழியலும்	... 10 00
25.	தமிழும் தெலுங்கும்	... 15 00
26.	தமிழ் ஆய்வுக் களங்கள்	... 70 00
27.	வ. உ. சி.யும் தமிழும்	... 18 00
28.	தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புக்கள்	... 14 00
29.	புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்	... 20 00
30.	கனகாபிஷேக மாலை—திறனாய்வு	... 16 00
31.	இருபதின் கவிதைகளில் சமூக நீதிக்கோட்பாடு	... 20 00
32.	பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்	... 60 00
33.	தொல்காப்பியம்—பொருள்—பொருளியல்	... 32 00
34.	திருமுறை இலக்கியம்	... 50 00
35.	இலக்கியத்தின் நோக்கமும் பயனும் தொகுதி 1	... 65 00